
கலைஞரின்
கடிதங்கள்



21

13.10.1991 - முதல்
25.02.1992 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 21

13.10.1991 - 25.02.1992

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
தினமணி அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1807. பூனை, குட்டியைக் கவ்வுகிறது; எலியைக் குதறுகிறது!	13-10-1991	23
1808. குலக்கேடு தடுத்திடக் குறுக்கே நிற்போம்!	15-10-1991	34
1809. உண்மையான நிலை உறுதியானது!	16-10-1991	41
1810. வீழ்த்திட முனைவோரின் வீண் கனவு!	17-10-1991	46
1811. மதவாத சனாதனத்திற்கு மடை திறப்பதோ?	20-10-1991	52
1812. வேதக்கல்லூரி வேண்டவே வேண்டாம்!	22-10-1991	60
1813. இவரை இப்போது மன்னித்து விடலாம்!	24-10-1991	65
1814. விபூஷணர்களுக்கு விளங்குமா?	25-10-1991	69
1815. விழி! எழு! வெற்றி கொள்!	26-10-1991	75
1816. அக்டோபர் 28ம் நவம்பர் முதல் நாளும்!	27-10-1991	78
1817. மதவாத சனாதன ஆபத்தைத் தடுப்போம்!	29-10-1991	83
1818. இப்படியும் துக்ளக் சேட்டைகளா?	31-10-1991	87

1819. ஆதாரங்களுடன் ஆயத்தமாவோம்!	01-11-1991	92
1820. புதிய தேசபக்தத் திலகங்கள் புரிந்து கொள்ளட்டும்!	03-11-1991	98
1821. மரங்களில் மறைந்து - மறைந்து - மறைந்து	05-11-1991	103
1822. ஜனநாயக நாடுகளின் கடமை என்ன?	07-11-1991	109
1823. உண்மை என்ன? உணர்ந்து கொள்ளட்டும்!	08-11-1991	113
1824. ஊருக்கு விளக்குவதே உனது பணியாகட்டும்!	09-11-1991	120
1825. உறுதி மாறாமல் - கொள்கை குலையாமல்!	10-11-1991	123
1826. மக்கள் மன்றம் எழுப்பும் கேள்வி!	12-11-1991	128
1827. அடுத்து, அடுக்களையில் நடக்கலாம்!	15-11-1991	132
1828. விகடனுக்கும், கல்கிக்கும் ஒரு விளக்கம் !	16-11-1991	136
1829. மனச்சாட்சி, தண்டனை வழங்கத் தவறாது!	19-11-1991	144
1830. ஒய்யாரக் கொண்டையாம்! தாழம்பூவாம்!	20-11-1991	151
1831. ஒரு கல்லில் இரண்டு மாங்கனிகள்!	21-11-1991	155
1832. கவனத்திற்கு இரு கருத்துகள்!	22-11-1991	160
1833. ஜனநாயகவாதிகளின் சிந்தனைக்கு!	24-11-1991	165

1834. தமிழகத்தின் நியாயத்தை மறுக்காதீர்!	25-11-1991	170
1835. மூன்று நாட்களும் முழங்கட்டும் முரசங்கள்!	28-11-1991	173
1836. மாற்றமில்லை! மாற்றம் இல்லவே இல்லை!	29-11-1991	178
1837. அதுவரையில் பொய்கள் பூமி ஆளட்டும்!	30-11-1991	183
1838. முதற்கட்டப் போராட்டம் முழு வெற்றி!	01-12-1991	189
1839. சந்திக்காமல் இருக்க முடியுமா?	03-12-1991	193
1840. இந்து தர்மம் இடம் கொடுக்குமா?	06-12-1991	197
1841. அறிவுரைகளும் அலட்சியமும்!	09-12-1991	205
1842. இதோ ஒப்புதல் வாக்குமூலம்!	13-12-1991	210
1843. நெடுமாறன் தீட்டிய நீட்டோலை!	14-12-1991	217
1844. மதுரைக் காஞ்சி - மதுரையில் காஞ்சி!	18-12-1991	222
1845. திரும்பிப் பார் - முன்னேறு!	20-12-1991	226
1846. காவல் துறையும் - கடமை உணர்வும்!	26-12-1991	231
1847. கர்நாடகத் தமிழரைக் காத்திட அணிவகுப்போம்!	28-12-1991	236

1848. இனியும் உறங்கிடுவோரை விழிப்புறச் செய்திடுக!	30-12-1991	239
1849. ஆளுநர் மாநாடும், அறிவுரைகளும்!	31-12-1991	242
1850. தானாடாவிடினும் தன் தசையாடுமன்றோ!	01-01-1992	246
1851. புதிய செய்தி புரியவைக்கும் உண்மை!	02-01-1992	251
1852. இதய ஒலி, இன்னும் எட்டவில்லையோ?	03-01-1992	257
1853. கர்நாடகத்தின் கனிவான சிந்தனைக்கு!	07-01-1992	262
1854. சங்கநாதம் செய்யும் நாள் ஜனவரி 25 ஆம் நாள்!	08-01-1992	266
1855. பொதுமக்கள் பாதுகாப்பு என்ன ஆவது?	09-01-1992	269
1856. விழுப்புரம் பேச்சும் விளக்க வேண்டிய விபரங்களும்!	10-01-1992	273
1857. கல்வி நீரோடையில் முதலைகள்!	11-01-1992	277
1858. கேட்டது கிடைக்கவில்லை - முன்பு கிடைத்ததும் கிட்டவில்லை!	12-01-1992	282
1859. மார்க்சிஸ்டு கட்சியின் கவனத்திற்கு!	13-01-1992	285
1860. மும்முனைப் போராட்டம் வெற்றி பெற!	14-01-1992	291
1861. கர்நாடகத் தமிழரைக் காத்திட கறுப்புக் கொடி ஊர்வலம்!	17-01-1992	297

1862. நிதியமைச்சர் - பதில் அளிப்பாரா?	18-01-1992	301
1863. அரசு விழாவில் அடாவடிப் பேச்சா?	19-01-1992	306
1864. நினைவூட்டிக் கொண்டே இரு!	21-01-1992	311
1865. கடமையை உணர்த்தவே கறுப்புக் கொடி ஊர்வலம்!	22-01-1992	315
1866. வெறிப் போக்கு வேண்டவே வேண்டாம்!	25-01-1992	320
1867. ஜனவரி 27 - அறப்போர் ஆர்ப்பாட்டம்!	26-01-1992	323
1868. வெள்ளம் போல் தமிழர் கூட்டம்!	29-01-1992	326
1869. தொடரும் துன்பங்களுக்கு யார் பொறுப்பு?	30-01-1992	329
1870. அண்ணாவின் ''நீதிதேவன் மயக்கம்''!	31-01-1992	333
1871. அரிசி விலையும் அரசியல் சட்டமும்!	01-02-1992	341
1872. தடாவை எதிர்த்து தடந்தோள் உயர்த்து!	02-02-1992	347
1873. அண்ணன் நினைவு நாளில் அன்பான வேண்டுகோள்!	03-02-1992	350
1874. தயக்கமின்றி தயாராகிக் கொள்வோம்!	05-02-1992	355
1875. ஒதியமிலார் அல்ல; உன் வீரம்!	06-02-1992	359
1876. தன்னை வெல்வான், தரணியை வெல்வான்!	07-02-1992	363
1877. வீர வணக்கம் செலுத்துவோம்!	09-02-1992	369

1878. பொன்விழா ஆண்டு; பூரித்துப் போகிறேன்!	13-02-1992	373
1879. வழக்கம் போல் வழங்கிடுக வழக்கு நிதி! கழக நிதி!	15-02-1992	380
1880. மகாமகமும் மயான காண்டமும்!	20-02-1992	384
1881. நீதி விசாரணை வலியுறுத்தி நடக்கட்டும் கூட்டங்கள்!	21-02-1992	390
1882. சல்லாத் துணிக்குள் ஊழல் சாம்ராஜ்யம்!	25-02-1992	395

1807. பூனை, குட்டியைக் கவ்வுகிறது; எலியைக் குதறுகிறது!

உடன்பிறப்பே!

உண்மை எது? என்று சுட்டிக்காட்டுவது மட்டுமே இந்தக் கட்டுரையின் நோக்கம் என்ற குறிப்புரையுடன் அக்டோபர் 11-ஆம் நாள் சென்னை தினமணி அண்ணா சொன்னது என்ன? என்ற பெருந்தலைப்பில் பிராமணியமும் பிராமணர்களும் எனும் பொருள் பற்றிச் சில கருத்துகளை வெளியிட்டிருக்கிறது. ஆசிரியர் குறிப்புப் பகுதியில் இன்னொரு முக்கியமான கேள்வியும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

திராவிட இயக்கங்கள் பிராமணர் என்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களை எதிர்த்து வருகின்றனவா? அல்லது சில கொள்கைகள், மரபுகள், கருத்துகள் ஆகியவற்றின் வடிவமாகக் கூறப்படும் பிராமணியத்தை எதிர்த்து வருகின்றனவா?

தினமணி, தனது கட்டுரைக்கான காரணத்தை விளக்கிட எழுப்பியுள்ள இந்தக் கேள்விக்கான பதில் மிகச் சுலபமானது.

பிராமணர்களை எதிர்க்கிறார்களா?

பிராமணியத்தை எதிர்க்கிறார்களா?

இந்தக் கேள்விகளுக்கிடையே உள்ள வேறுபாடு ஒரு மெல்லிய இழை அளவானதுதான்!

வெள்ளையனை எதிர்ப்பது என்பதற்கும் - வெள்ளைக்கார ஆதிக்கத்தை எதிர்ப்பது என்பதற்கும் வேறுபாடு உண்டல்லவா? அதே வேறுபாடுதான் - பார்ப்பனரை எதிர்ப்பது என்பதற்கும், பார்ப்பனியத்தை எதிர்ப்பது என்பதற்கும் இடையே உள்ளதாகும்!

வெள்ளையர் என்ற இனமின்றி, வெள்ளையர் ஆதிக்கமோ - ஏகாதிபத்தியமோ இல்லை! அதேபோலப் பார்ப்பனர் இன்றிப் பார்ப்பனியமில்லை!

வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்தில்தான் வெள்ளையனே வெளியேறு! என முழங்கப்பட்டதே தவிர, தனிப்பட்ட வெள்ளைக்கார துரையிடத்திலோ - தனிப்பட்ட வெள்ளைக்கார விஞ்ஞானியிடத்திலோ, வெள்ளைக்காரனான ஒரு சாதாரண மனிதனிடத்திலோ வெறுப்பு கொள்வது - விரோதம் காட்டுவது - என்பது வெள்ளையனே வெளியேறு என்ற முழக்கத்திற்குப் பொருளாகாது!

இருந்தபோதிலும், வெள்ளைக்கார இனத்தினனை வைத்துத்தான் வெள்ளை ஆதிக்கத்தை அடையாளம் காட்டி, அந்த ஆதிக்கம் அகற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது!

அந்த ஆதிக்கத்தின் கீழ் பணியாற்றிய இந்திய அதிகாரிகள் - சிப்பந்திகள் - காவலர்கள் எல்லோரையும் சேர்த்துத்தான் வெள்ளை ஏகாதிபத்தியம் என அழைத்தோம்! அப்படி அழைத்த காரணத்தால் இந்தியர்களும் வெள்ளைக்காரர் ஆகிவிட்டனர் என்று பொருளல்ல!

அதேபோலத்தான் சில கொள்கைகள், மரபுகள், கருத்துகள், செயல்கள் ஆகியவற்றைப் பார்ப்பனிய முறையில் ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கிற பார்ப்பனரல்லாதார் - பார்ப்பனர் ஆகிவிட்டனர் என்று கூறிட இயலாது!

தினமணி கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ள பல்வேறு சான்றுகள் - பெரியார் அவர்களின் பேச்சு, எழுத்திலிருந்தும், அண்ணா அவர்களின் பேச்சு, எழுத்திலிருந்தும், என்னுடைய பேச்சு, எழுத்திலிருந்தும் எடுத்துக்காட்டப்பட்டவைகளை நான் மறுத்திடவில்லை! பெரியாரோ, அண்ணாவோ, அவர்கள் வழிநின்று நானோ, பார்ப்பனியத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர, தனிப்பட்ட பார்ப்பனர்களை அல்ல என்பதையும் தினமணிக் கட்டுரை முத்தாய்ப்பாகப் பொறித்துள்ளது!

> ஜஸ்டிஸ் காலம் தொட்டே திராவிட இயக்கங்கள், பிராமணியத்தைத்தான் எதிர்த்து வந்துள்ளன என்றும், தனிப்பட்ட பிராமணர்களை அவை எதிர்க்கவில்லை என்பதும் வரலாறு தெரிவிக்கும் செய்தி.
>
> எனத் தினமணி குறிப்பிடுவதை அப்படியே ஒப்புக் கொள்கிறேன்.

இந்த உண்மை தெரிந்திருந்தும் - இதனை நீதிக்கட்சித் தலைவர்களும், திராவிட இயக்கத் தலைவர்களும் பலமுறை எடுத்துச் சொல்லியிருந்தும், எங்களை அன்றுதொட்டு இன்று வரையில் வகுப்புத் துவேஷிகள் என்றும் - வகுப்புவாதிகள் என்றும் பட்டம் சூட்டி அழைத்தீர்களே! அழைக்கிறீர்களே - என்ன காரணம்?

"மக்களுக்குள் பேதாபேதம் கூடாது - அனைவரும் சமமாகப் பழக வேண்டும் என்ற தத்துவத்தை ஒட்டி, பார்ப்பனர்கள் தம் ஆணவத்தை விட்டுவிட வேண்டும் - மூட நம்பிக்கையை விட்டுவிட வேண்டும் என்றெல்லாம் சமுதாய நன்மை கருதி நான் கூறி வருவதை இந்துவும், மித்திரனும் பார்ப்பனர்களைத் துவேஷிப்பதாகத் திரித்துக்கூறி, மித்ரபேதம் செய்து வருமானால் அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?"

இந்த வாசகம் தந்தை பெரியார் பொன்மொழிகள் என்ற நூலில் காணப் படுவதாகும். இந்த நூலின் முதல் பதிப்பு 1949-ல் தடை செய்யப்பட்டது. வகுப்புத் துவேஷம் எனக் கூறப்பட்டு!

பிறகு பெரியார் நூற்றாண்டு விழாவின் போது, 1979-ல் தடை நீக்கப் பெற்று விடுதலை வெளியீடாக 1987-ல் ஐந்தாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இந்த நூலிலேயே மற்றொரு பொன்மொழி:-

என்னை ஒரு பார்ப்பனத் துவேஷி என்று பார்ப்பனப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. நான் எந்தப் பார்ப்பானுக்கும் விரோதியல்ல. பார்ப்பனியத்துக்குத்தான் விரோதி. பார்ப்பான் ஒழிய வேண்டுமென்று கூறுபவனல்ல. பார்ப்பனியம் ஒழிய வேண்டுமென்றுதான் கூறி வருபவன். ஒரு பார்ப்பானும் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முயற்சிப்பதில்லை.

இதுவும் பெரியாரின் பொன்மொழிதான்!

பெரியார், மேலும் சொல்வதாக அந்த நூலில் மற்றொரு பொன்மொழி:-

பார்ப்பனர்கள் எங்களை இழிவுபடுத்தக் கூடாது. எங்களின் உழைப்பை உறிஞ்சி வாழக்கூடாது. எங்களைவிட மேலானவர்கள், சகலபோக போக்கியங் களுக்கும் உரியவர்கள் என்று நினைத்துக்

கொள்ளக்கூடாது. பிறவியினால் உயர்வுதாழ்வு கற்பிக்கக் கூடாது - சாதி பேதம் கூடாது என்றுதான் கூறுகிறோம். இது எப்படிக் குற்றமாகும்?

இப்படிச் சொன்ன பெரியார் அவர்களை, அண்ணா அவர்களை, எங்களை - நேற்றுவரையில் வகுப்புவாதிகள் - துவேஷப் பிரச்சாரகர்கள் என்று கூறிவிட்டு, இன்று நியாயம் உரைக்க வந்துள்ள மர்மம்தான் எனக்குப் புரியவில்லை!

தி.மு.க.வினரிடம் பிராமண துவேஷம் எப்போதும் இருந்ததில்லை என்று 1957-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக அறிவித்தார்.

எனக் குறிப்பிடுகிறார், தினமணி கட்டுரையாளர். அண்ணாவின் அந்தத் தெளிவான விளக்கத்திற்குப் பிறகாவது தி.மு.க.வினர் வகுப்பு துவேஷிகள் அல்லர் என்று பார்ப்பன ஏடுகள் கூறியதுண்டா? பார்ப்பனர்கள் ஏற்றுக் கொண்டதுண்டா?

விதிவிலக்காகச் சில பார்ப்பன நண்பர்கள், நம்முடன் பாசமுடன் பழகலாம் - அவர்களில் சிலர் முற்போக்குச் சிந்தனையாளர்களாக, முப்புரி நூலையே தமது உடலில் இருந்து அகற்றி விட்டவர்களாகக் கூட இருக்கலாம்!

ஆனால் - பெரும்பாலோர்? அவர்கள் நீதிக் கட்சி காலந்தொட்டு - நம்மை நாட்டுக்கு அடையாளம் காட்டுவது தேசத்துரோகி - வகுப்புத் துவேஷி - வகுப்புவாதி என்றுதானே!

அண்ணாவைப் பற்றி கட்டுரையாளர் குறிப்பிடும் அதே 1957-ஆம் ஆண்டில்தான், மதுரையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் அண்ணா பின்வருமாறு மேலும் தெளிவு படுத்துகிறார்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் சமநீதி காணும் நோக்குடன் அன்று துவக்கப்பட்டதே தவிர, அது பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையில் வெறுத்ததில்லை. அவர்களைத் தனிப்பட்ட முறையில் வெறுக்க வேண்டிய அவசியமும் இல்லை. பார்ப்பனர்களுக்கு என்றிருக்கிற உரிய பங்கைத் தந்து, பார்ப்பனரல்லாதாருக்கு என்றுள்ள உரிய பங்கு, பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்க வேண்டும் என்ற நீதியை அடிப்படையாகக் கொண்டதால்தான் நீதிக்கட்சி என்ற பெயரே அமைந்தது.

அண்ணாவின் கருத்துப்படி, பார்ப்பனரல்லாதார் தமக்குரிய நியாயமான பங்கினை - கல்வியில், வேலை வாய்ப்புகளில் அப்போது கேட்டபோதும் சரி! இப்போது கேட்கும்போதும் சரி! வரிந்து கட்டிக் கொண்டு அன்றைக்கு எதிர்த்தவர்களும் - இன்றைக்கு எதிர்ப்பவர்களும் பார்ப்பன சமுதாயத்தினர் அல்லது அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் அல்லது அவர்கள் நடத்துகிற ஏடுகள் என்கிறபோது - அதனை எதிர்த்துக் குரல் எழுப்பினால் அது துவேஷப் பிரச்சாரம் எனத் தூற்றப்பட்டதும், தூற்றப்படுவதும் எந்தவகை நியாயம்?

அன்றொரு நாள் ஆற்காடு இராமசாமி முதலியார் அவர்கள் சொன்னதாக நினைவு!

வெள்ளைக்காரனிடத்திலே பார்ப்பனர்கள் உத்தியோகத்திலே பங்கு கேட்டால் அது தேசாபிமானம்! பார்ப்பனரல்லாத மக்களாகிய நாம், நமக்குரிய பங்கினை வேலை வாய்ப்புகளில், கல்வியில் கேட்டால் அது வகுப்புவாதம்!

அன்று அவர் கூறிய அதே நிலைதானே இன்றளவும் நீடிக்கிறது!

இடஒதுக்கீடுக் கொள்கையில் நமது கழகம் உறுதியாக இருக்கிறது என்பதாலும் - சிறப்பாக மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்துகிற அரசியல் கட்சியாக இருக்கிறது என்பதாலும் - இவைகளையே காரணமாகக் காட்டி 1989 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்களிக்காதீர் என பிராமண சமூகத்திற்கு வேண்டுகோள் விடுத்து பிராமணப் பிரமுகர்கள் பலர் கையெழுத்திட்ட விளம்பர அறிக்கைகள் ஏடுகளில் வெளியிடப்பட்டபோது, தினமணி கட்டுரையாளர் தமிழகத்தில் தானே இருந்திருக்கக் கூடும்!

இப்போது வந்துள்ள ஜெயலலிதா ஆட்சி அமைந்திட அக்கிரகாரங்கள் அனைத்தும் தேர்தல் பாசறைகளாக மாறிக்கொள்ளவில்லையா? தமிழ்நாடு பிராமணர் சங்கம் பிரச்சாரம் நடத்தவில்லையா? சங்கராச்சாரியார் பெயரில் சுற்றறிக்கைகள் விடப்படவில்லையா? காஞ்சி மடத்திலிருந்து மாநிலம் முழுதும் தகவல்கள் தரப்படவில்லையா? ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சந்தேகமேயில்லை! இது நமது பிராமணாள் ஆட்சி! இதில் நமது சமூகம் தந்திரமாக பல சலுகைகளைப் பெற

வேண்டும் என்று தமிழ்நாடு பிராமண சங்கத் தலைவர் அறிக்கை விடவில்லையா?

நான் எழுப்பிய சில கேள்விகளுக்கு இன்னமும் பதில் அளிக்காமல் - பிராமண எதிர்ப்பா? பிராமணிய எதிர்ப்பா? என்று கட்டுரை மட்டும் தீட்டிப் பயன் என்ன?

மண்டல் கமிஷன் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம் என வலியுறுத்தும் தி.மு.க.வுக்கு வாக்களிக்காதே என வேண்டுகோள் விடுத்த பிராமணப் பிரமுகர்கள், இன்று மண்டல் கமிஷனில் 50 சதவீதம் பிற்பட்டோருக்கு வேண்டும் என சட்டப்பேரவையில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றும்போது வாய் மூடி மௌனம் காப்பது ஏன்?

50 சதவீதம் என ஜெயலலிதா சொல்வது ஒரு நாடகம் - ஏமாற்று வித்தை என்பது தெரிந்த காரணத்தினால்தானே!

அப்படியானால் ஜெயலலிதா, மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு மறைமுகமான எதிர்ப்பாளர் என்பது உண்மையாகி விடுகிறதல்லவா?

அவர் மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு ஆதரவாளராக இருந்தால் - வி.பி.சிங் ஆட்சி நிறைவேற்ற முன்வந்த 27 சதவீதத்திற்குள்ளேயே பொருளாதார அடிப்படையை நரசிம்மராவ் ஆட்சி நுழைக்கக் கூடாது என்று ஒரு வாசகத்தையும் அந்த தீர்மானத்தில் இணைத்திருக்கலாம் அல்லவா?

கழுத்துக்கே கத்தி வந்தது போல் 27 சதவீதத்திலேயே - அதற்குள்ளேயே பொருளாதார நீதி என்ற ஆபத்தை நுழைக்கும் போது, அதை விட்டு விட்டு - தலைக்குக் குல்லாய் தேவை என்பது போல 50 சதவீதம் தேவை எனத் தீர்மானம் போடுவது வேதனையான வேடிக்கை அல்லவா? ஏமாற்றுக் கூத்து அல்லவா? இதனைப் பார்ப்பனியம் என்பதா? பார்ப்பனத் திருவிளையாடல் என்பதா? கட்டுரையாளர்தான் அந்த மெல்லிய நூலிழை வேறுபாட்டுக்குள் புகுந்து விளக்கிடவேண்டும்.

பார்ப்பனர் எதிர்க்கட்சியில் இருந்தாலும் - ஆளுங்கட்சியில் அமர்ந்தாலும், நடவாததை நடந்ததாகக் கற்பித்தும் - நடந்ததை அப்படியே மறைத்தும் பிரச்சாரம் செய்யப்படுகிறதே. அப்போது இந்த சூத்திர இனம் தனது சூடு சொரணையைப் பற்றித் தன் உடலை, தானே கிள்ளிப் பார்த்துக் கொள்வது கூடக் குற்றமா?

ஒரு முதலமைச்சர் பட்ஜெட் படிக்க எழும்போது படிக்காதே! படிக்காதே! என்று குறுக்கீடு செய்வது அவை மரபா?

இன்றுள்ள சபாநாயகரோ, முதல்வரோ, அவை முன்னவரோ - அப்படி ஒரு மரபை ஏற்பரோ?

1989 மார்ச் 25-ஆம் நாள் நான் நிதிநிலை அறிக்கை படிக்கும் போது - அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒருசேர எழுந்து நின்று கூக்குரல் எழுப்பியது - அ.தி.மு.க. உறுப்பினரை தூண்டிவிட்டு என் கையிலிருந்த பட்ஜெட் புத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்தது - என் முகத்திலே குத்தி மூக்குக் கண்ணாடியை உடைத்தது - இத்தனையும் சிறிய செய்திகளாகி அன்றைய எதிர்க்கட்சி தலைவர் ஜெயலலிதாவைப் பற்றி நடக்காத செய்திகள் தானே அன்று முதல் இன்று வரை பார்ப்பன ஏடுகள் பலவற்றில் பெரிதுபடுத்தப்பட்டன! பெரிதுபடுத்தப்படுகின்றன! இது பார்ப்பனர் செயலா? பார்ப்பனியச் செயலா?

இந்த மெல்லிய நூலிழை வேறுபாட்டுக்குள் தினமணிக் கட்டுரையாளர்தான் நுழைந்து விளக்கம் வழங்க வேண்டும்.

பாப்பாத்தி என்று ஜெயலலிதா அவர்களை நாம் சொல்வதாக இப்போது புதிய கயிறு திரிக்கப்படுகிறது! நண்பர் சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதா தன்னை பாப்பாத்தி எனச் சொல்லிக் கொள்ளவில்லை என்கிறார். நாம்தான் பாப்பாத்தி விளையாட்டை ஆரம்பித்திருக்கிறோம் என்று குமுதம் எழுதுகிறது. ஏன், இப்படி ஒரு பொய்யைத் திட்டமிட்டுச் சொல்கிறார்கள்?

கடப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிடுவது என்பதுபோல, உள்ளத்திலிருந்த பெருமிதம் வெளியே வந்து விட்டது - இப்போது அதனால் ஏற்பட்ட விளைவைச் சமாளிக்க இதுபோன்ற பொய்கள் தேவைப்படுகின்றன!

சட்டப் பேரவையில் அத்தனை உறுப்பினர்களுக்கு மத்தியில் சொன்னது - எல்லாப் பத்திரிகைகளிலும் அட்சரம் பிசகாமல் வெளிவந்தது என்ன?

நான் பாப்பாத்திதான்!
என்னை யாரும் அசைக்க முடியாது!

இப்படி ஜெயலலிதா கம்பீரமாகவும் - கனத்த சாரீரமெடுத்தும் - கர்ச்சனை செய்ததை, கழகத்தின் மீது பழியைப் போட்டு மறைத்து,

திசை திருப்பி, அம்மையாரைக் காப்பாற்ற அக்கிரகாரத்தினர் சிலர் புறப்பட்டுள்ளார்களே - இங்கேதான் பார்ப்பனர் என்பதற்கும் பார்ப்பனியம் என்பதற்குமுள்ள வேறுபாடு மெல்லிய இழையாக நெளிகிறது! இந்த இழைக்குள் நுழைந்து, தினமணிக் கட்டுரையாளர் விளக்கமளித்திட வேண்டும்!

இன்னொரு சான்று! அண்ணா பிறந்த செங்கை மாவட்டத்துக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டுவதுதான் பொருத்தம் - காமராசர் பிறந்த விருதுநகர், காமராசர் மாவட்டம் ஆனது போல, பெரியார் பிறந்த ஈரோடு, பெரியார் மாவட்ட தலைநகர் ஆனது போல - அண்ணா பிறந்த காஞ்சிபுரம் அண்ணா மாவட்ட தலைநகராக வேண்டும் என்றோம்! காஞ்சி மடத்தின் கட்டளையை ஏற்று நமது கோரிக்கையை மறுத்த எம்.ஜி.ஆர். அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்தார்!

1989ல் கழகம் ஆட்சிக்கு வந்த நிலையில் செங்கற்பட்டு மாவட்டத்தை செங்கை அண்ணா மாவட்டம் என்றும், திண்டுக்கல்லை திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் என்றும் பெயர் சூட்டி அறிவித்தோம்.

அப்போது இந்து முன்னணித் தலைவர்கள் என்ன சொன்னார்கள் - பார்ப்பனர் நிறைந்த பாரதீய ஜனதா என்ன சொன்னது?

காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் ஒரு தேசத் துரோகி - அவர் பெயரை திண்டுக்கல் மாவட்டத்துக்கு மட்டுமல்ல, எந்த மாவட்டத்துக்கும் வைக்கக்கூடாது என்று ஏடுகளில் அறிக்கைகள் விடுத்தனர்.

கழக அரசு, அவர்களின் அறிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. இப்போது ஜெயலலிதா ஆட்சியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் என மாற்றப்பட்டு, தஞ்சையின் ஒரு பகுதிக்கு நாகையைத் தலைநகராகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் எனப் பெயர் சூட்டப்படுகிறது.

காயிதே மில்லத் தேசத் துரோகி - அவர் பெயரை எந்தவொரு மாவட்டத்துக்கும் வைக்கக் கூடாது - எதிர்ப்போம்! என்று கழக ஆட்சியின் போது கர்ச்சித்த இந்து முன்னணிப் பார்ப்பனர்களும், பாரதீய ஜனதா பார்ப்பனர்களும் இப்போது எங்கே போனார்கள்?

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரே ஒரு பெரிய ஷேத்திரம்தான்! பழனி! ஆனால் கீழத் தஞ்சையில், மயிலாடுதுறையில் மயூரநாதர், சீர்காழியில் ஞானசம்பந்தர், வைத்தீஸ்வரன் கோயிலில் வைத்தியநாதர், ஆரூரில் தியாகேசர் மற்றும் மும்மூர்த்திகள், எட்டுக்குடி முருகன், சிக்கல் சிங்காரவேலன், நாகையில் நீலாயதாட்சி அம்மன், மன்னையில் ராஜகோபால சுவாமி என நூற்றுக்கணக்கான பெரிய ஆலயங்களும் - தர்மபுரம், திருவவாடுதுறை எனும் சமய மடங்களும் உண்டு. இந்தப் பகுதிக்குக் காயிதே மில்லத் பெயரை வைக்கும் போது - இந்து முன்னணியும் பாரதீய ஜனதாவும் மௌனமாக இருப்பானேன்! இனஉணர்வு தானே!

(என்னதான் இந்த ஆட்சியில் பெயரை மாற்றினாலும் - காயிதே மில்லத்துக்குத் தொடர்புடைய திண்டுக்கல் பகுதியைத்தான் நாம் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் என அழைத்துக் கொண்டிருப்போம். இதற்கு முன்மாதிரியாக ஏற்கனவே திண்டுக்கல் காயிதே மில்லத் - மாவட்டத்தை அ.தி.மு.க.வினரும், காங்கிரசாரும் அந்தப் பெயரில் அழைத்ததுமில்லை - அவ்வாறு அவர்கள் கட்சியிச் செய்திகளை விளம்பரப்படுத்தியதுமில்லை என்பது ஆதாரப்பூர்வமான செய்தி.)

வேதாகம சாஸ்திர கல்லூரி - அறநிலையத் துறையை மாய்க்க ஆலய வாரியம் - ஆலய நிதி வசூல் - இவற்றை இருகையேந்தி அவர்கள் வரவேற்கலாம். நாம் வரவேற்க முடியுமா? எதிர்த்தால் வகுப்பு துவேஷமா? விதண்டாவாதமா?

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த நூறு நாட்களில் சட்டப் பேரவையிலேயே ஜனநாயகத்தைப் புறக்கணிக்கும் செயல்கள் எத்தனை! மாநிலத்தில் துப்பாக்கிச் சூடுகள் எத்தனை! பழி வாங்கும் வழக்குகள் எத்தனை! எத்தனை!

பார்ப்பன நண்பர்களால் நடத்தப்படும் நடுநிலை ஏடுகளில் அவை குறித்துக் கண்டனங்கள் உண்டா?

சேலத்தில் நடைபெற்றுள்ள விஷ சாராய சாவு நிகழ்ச்சி சாதாரணமானதா? 50 பேர் வரையில் செத்திருக்கின்றனர்! செய்திகளை வெளியிட வேண்டாமென பத்திரிகைகளுக்கு மிரட்டல்! இந்தக் கொடுமைக்குக் காரணமான ஆளுங்கட்சி விஷ

சாராய மன்னன் சேலத்திலே நடத்துகிற ஆர்ப்பாட்டம் தாங்க முடியவில்லை.

மத்திய அரசு அமைச்சர் சிதம்பரம் தாக்கப்பட்டது, கார் நொறுக்கப்பட்டது - அவை குறித்து ஜெயலலிதாவின் முரண்பாடான மூன்று பொய் அறிக்கைகள்!

இவைகளில் ஒரு துளியளவு கழக ஆட்சியில் நடைபெற்றிருந்தால், கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு - பேனாக்களை போர் வாட்களாக்கிப் புறப்பட்டிருப்பார்களே. ஆனால் அவர்கள், அண்ணாவின் உவமையைப் போல - பூனை தனது குட்டியைக் கவ்வுவது போல அல்லவா, விமர்சிக்கிறார்கள் இப்போது!

நாமாக இருந்தால், எலியைப் பூனை குதறுவது போல அல்லவா குதறியிருப்பார்கள்! அவர்கள் மீதுள்ள இனப்பற்றும் - நம்மீதுள்ள இனப் பகையும்தானே இந்த வித்தியாசத்துக்குக் காரணம்!

இலங்கைப் போராளிகள் மீது வன்முறையை தடுக்க எத்தனையோ நடவடிக்கைகள் எடுத்தோம் - நூற்றுக்கணக்கான போராளிகளைத் தனி முகாம்களில் வைத்தோம் - பலரை தேசப் பாதுகாப்பு சட்டப்படிச் சிறையில் பூட்டினோம் - ஒரு சிலர் தப்பியிருக்கலாம். டெல்லித் தலைநகரிலேயே அயல்நாட்டு தூதரக அதிகாரிகள் கொல்லப்படவில்லையா? அயல் நாட்டு தூதர்கள் கடத்தப்படவில்லையா?

கடந்த 7 வருடங்களுக்கு முன்பு டெல்லியில் இங்கிலாந்து தூதரக அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

1982-ஆம் ஆண்டு ஜூன் 4-ந்தேதி குவைத் தூதர் முஸ்தபா அல் மர்சோக் என்பவர் தெற்கு டெல்லியில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த வழக்கில் குற்றவாளிகள் இதுவரை கைதாகவில்லை. அவரை கொன்ற ஜோர்டான் நாட்டு மாணவர்கள் தப்பி விட்டனர்.

1983-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ந்தேதி முகமது அல்கொர்ரே என்ற ஜோர்டான் தூதர் சுடப்பட்டார்.

1982-ஆம் ஆண்டு நவம்பர் 19-ந்தேதி ரஷிய தூதர் மீது குண்டு வீச்சு நடந்தது. ஆனால் அவர் உயிர் தப்பினார்.

1983-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ந்தேதி அமெரிக்கா தூதரகம் மீது ராக்கெட் வீச்சு நடந்தது. பின்னர் பிரான்ஸ் நாட்டு விமான கம்பெனி மீதும், ஈராக் நாட்டு விமான கம்பெனி மீதும் குண்டு வீச்சு நடந்தன. 1984-ஆம் ஆண்டு நவம்பர் 27-ந்தேதி இங்கிலாந்து தூதரக அதிகாரி நோரில் பெர்சி சுட்டுக் கொல்லப்பட்டார்.

1985-ஆம் ஆண்டு மார்ச் 21-ந்தேதி ரஷிய தூதரக பொருளாதார ஆலோசகர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 1988-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ந்தேதி செக்கோஸ்லோவாகியா நாட்டு தூதர் கடத்தப்பட்டார். அவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை - இப்போது ருமேனியா தூதர்!

டெல்லித் தலைநகரில் சட்டம் ஒழுங்கு வாழ்கிறதா? வாழ்ந்ததா?

அண்டையில் உள்ள ஆந்திர மாநில நிலை என்ன? நாலைந்து மாவட்டங்கள் நக்ஸலைட்டுகளின் நிர்வாகத்தில்! அங்கே சட்டம் ஒழுங்கு வாழ்கிறதா?

மத்திய அரசின் பிரதமர்களான ராஜீவ், வி.பி. சிங், சந்திரசேகர் ஆகியோர் கருத்துப்படி இலங்கைப் போராளிகளிடம் நடந்துகொண்ட தி.மு.க. ஆட்சியை கவர்னர் அறிக்கை தர மறுத்தும்கூட, ஒரு நொடியில் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் கையெழுத்திட்டுக் கலைத்தார் என்றால்;

இப்போதுதான் தினமணிக் கட்டுரையாளருக்கு பெரிய நெருக்கடி -

பிராமணரா? பிராமணியமா?

என்ற கேள்விக்கிடையே உள்ள வேறுபாடு எனும் மெல்லிய இழைக்குள்ளே அவர் புகுந்துகொண்டு விளங்க வைக்க வேண்டியவராக இருக்கிறார்.

அன்புடன்,

மு. க.

(13-10-1991)

1808. குலக்கேடு தடுத்திடக் குறுக்கே நிற்போம்!

உடன்பிறப்பே!

பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது என்ற பெரியார் வார்த்தை பலித்து விட்டது. ஆம்! இதுவரையில் தனது தாசர்களையும், தாசானுதாசர்களையும் மட்டுமே களத்திற்கு அனுப்பி, அவர்களை விட்டு நம்மைத் தாக்கிடச் செய்த தந்திரத்தை செய்து கொண்டிருந்த ஆரிய மாயை இப்போது தன்னையே போரில் ஈடுபடுத்திக் கொள்ளப் புறப்பட்டு விட்டது!

"நடப்பது நம்மவா ஆட்சி!"

இந்த எக்களிப்பு மிக்க பேச்சு, தொழிற்கூடத்து குளிர்பதன அறைகளில் - உல்லாசப் பொழுதுபோக்கிற்கான மாலைவேளைச் சீட்டாட்ட அரங்குகளில் - விருந்துகளில் - கேளிக்கை நிகழ்ச்சிகளில் - விமானப் பயணங்களில் - ஒலிக்கத் தொடங்கியுள்ள காலமல்லவா?

"அசைக்க முடியாது எம்மை!
நாம் யார் தெரியுமா?"

என்ற அறைகூவல் சூத்திரர் நிரம்பிய அவையில் முழங்கிடும் நேரமல்லவா?

அதனால்தான் மிகத் துணிச்சலுடன் அவாள் தமது பேனாக்களைத் தீட்டிக் கொண்டு - கிளம்பி விட்டனர்!

வீடணர்கள், சுக்ரீவர்கள், மீர்ஜாபர்கள், எட்டப்பர்கள் இருக்கும்வரையில் என்ன பயம் நமக்கு என்ற தைரியத்திற்கு, மேலும் வலிவும், உரமும், தெய்வீக (?) வரமும் கிடைத்தது போல ஆட்சியின் உச்சாணிக் கொம்பிலேயே அமர்ந்து விட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு - சமஸ்கிருத மொழிக்கு சாமரம் வீசியவாறு, அதன் அருமை பெருமைகளை அடுக்கிக்

காட்டிக் கொண்டு - பொன்னும் மணியும் மின்னும் வைரமும் வைத்திழைத்த பல்லக்கில் அந்த சவத்தை நிமிர்த்தி உட்கார வைத்து, பாரீர் இவரின் கம்பீரத்தை! கேளீர் இவரின் முழக்கத்தை! இவர் இப்போது பல்லக்கிலிருந்து இறங்கி வாளெடுத்தால் பகை மிரண்டோடும் - பதினான்னு உலகும் நடுங்கும்! எனப் பறைசாற்றிக் கொண்டு பவனி வருகின்றனர்!

என்செய்வது! வேதாகம சாஸ்திரக் கல்லூரியொன்று ஒரு கோடி ரூபாய் செலவில் அமையுமென்ற அறிவிப்பு வரும்போது, சமஸ்கிருதத்திற்குத் தமிழ் மண்ணில் ஆதிக்கம் செலுத்துகிற திருவிழா தொடங்கிவிடும் என அவர்கள் எண்ணுவது இயற்கைதானே!

வடமொழியின் இரவலே தொல்காப்பியம் என்கிற அளவுக்கு எழுதும் வலிமையை இந்தக் காலத்திலும், அவர்தம் எழுதுகோல்கள் பெறுகின்றன என்றால், எதிர்ப்போர் யாருமிருக்க மாட்டார்! இருப்பினும், அவர்களை எமது எடுபிடிகளாக்கிட இயலும்! என்ற நம்பிக்கையன்றோ, அவர்தம் ஆணவத்திற்குக் காரணம்!

அவர்களின் திசை திருப்பும் போக்கினைக் கண்டித்தும் - நச்சுக் கருத்துகளை அரிய விளக்கங்கள் தந்து நையப்புடைத்தும்; நமது பேராசிரியர் அவர்களும், முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களும் முரசொலியில் கட்டுரைகள் தீட்டுகின்றனர்.

அதற்கிடையே தினமணி நாளிதழில் இன்று மீண்டும் ஒரு கட்டுரை; நம்மை வலிய வம்புக்கிழுப்பதற்காகவே!

ஆரிய திராவிடப் பிரச்சினையைச் சில தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எழுப்பிக் கொண்டிருப்பது டான்குயோட்டை நினைவூட்டுகிறது. கடந்து போன பொற்காலத்திய கதாநாயகனாகத் தன்னை நினைத்துக்கொண்டு காற்றாடி இயந்திரங்களை எதிரிகளாக பாவித்து அவற்றுடன் போரிடுவதுதான் டான்குயோட்டின் பொழுதுபோக்கு

இவ்வாறு கேலி செய்கிறார் தினமணிக் கட்டுரையாளர் நம்மை!

யார் யாரைக் கேலி செய்வது என்பது கிடையாதா?

ஆண்டுதோறும் சுப்பிரமணியக் கடவுள் சூரசம்ஹாரம் செய்கிறார் என்று, சூரனின் உடல் போன்ற ஒரு பெரிய

பொம்மையின் கழுத்தில் - கஜமுகாசூரன் என்று யானையின் தலையை வைத்து வேலால் குத்தி வீழ்த்திவிட்டு, பிறகு அதே கழுத்தில் சிங்கமுகாசூரன் என்று சிங்கத்தின் தலையை வைத்து அதையும் சுப்பிரமணியர் வேலால் குத்தி வீழ்த்திவிட்டு, இறுதியாக மூத்த சூரனின் தலையை வைத்து அதையும் வேலால் குத்தி வீழ்த்திவிட்டு - கந்தர் சஷ்டி கொண்டாடுகிறவர்கள் - என்றைக்கோ நடந்த ஆரிய திராவிடப் போராட்ட நிகழ்ச்சியை, இன்றைக்கும் பொம்மைகளை அசுரர்களாகப் (திராவிடர்களாக) பாவித்து உற்சவம் நடத்துவார்களாம்! உண்மையிலேயே நாம் எழுப்புகிற பிரச்சினை காற்றாடி இயந்திரத்தை எதிரியாகப் பாவித்துப் போரிடும் பொழுது போக்குக் கதை என்பார்களாம்!

இராமலீலா என்ற பெயரால் இராவணனை, கும்பகருணனை, மேகநாதனை பெரும் உயரத்திற்குச் சிலைகளாகச் செய்து, அந்தச் சிலைகளை இன்றைக்கும் எதிரிகளாகப் பாவித்து - அவற்றைக் கொளுத்தி சாம்பலாக்கிடும் நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் படம் பிடித்துக் காட்டி ரசிக்கிறார்களே - அது, காற்றாடி இயந்திரத்தை எதிரியாகப் பாவித்துப் போரிடும் பொழுதுபோக்கு அல்லவாம்! அந்த ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரத்துடன் ஒட்டிக் கொண்டுள்ளதை வெட்டி எறிய முனைந்திடும் நமது பிரச்சாரம் டான்குயோட்டை நினைவுபடுத்தும் பொழுதுபோக்காம்! ஏளனம் புரிகிறார் தினமணியார்!

இன்றும் பார்க்கலாமே! எத்தனையோ கோயில்களில்! எல்லாக் கால பூசையும் முடிந்த பிறகு, அம்மனையும், அப்பனையும் தனி அறையில் வைத்துக் கதவைப் பூட்டிக்கொண்டு - இருவரும் பள்ளியறை இன்பம் அனுபவிப்பதாகக் கூறி, தூப தீப நைவேத்யங்களைக் காட்டிவிட்டு - மறுநாள் காலையில் பள்ளியறைக் கதவைத் திறந்து, இரு சிலைகளையும் தனித்தனியே பிரித்துக்கொண்டு போய் வைக்கிறார்களே - இது பாவித்துக் கொண்டு செய்கிற காரியமல்லவா?

> இந்தக் கலாச்சாரத்தைத் தமிழகத்தில் நுழைய விட்டவர்கள் யார்?
>
> தமிழன், தனக்குத்தானே விதித்துக் கொண்டுவிட்ட கலாச்சாரத் தனிமை, வீழ்ச்சியாக அமைந்துவிட்டது.
>
> என்கிறார் தினமணிக் கட்டுரையாளர்.

இல்லை! ஒருக்காலும் இல்லை! தமிழன் தனது கலாச்சாரத்தை மறந்துவிட்ட காரணத்தினால்தான் - ஆரியக் கலாச்சாரப் படையெடுப்பினால்தான், வீழ்ச்சியுற்றான்! அவன், தனது கலாச்சாரத்தை உணர்ந்து அதனையொட்டி வாழ்ந்திருப்பானேயானால், வீழ்ச்சியெனும் ஒரு நிலை அவனைத் தொட்டுக்கூடப் பார்த்திருக்காது!

மாக்ஸ் முல்லர் எனும் ஜெர்மனியர் கூறி விட்டாராம்! ஆரியம் - திராவிடம் என்பது மொழிவழி வரையறையே தவிர, இனம் பற்றியதல்ல என்று - அதைக் காட்டிக் கட்டுரையாளர் குதிக்கிறார்.

இதோ அந்த மாக்ஸ் முல்லரைப் பற்றிக் குறிப்பிட்டு, ஆரிய மாயை நூலில் அண்ணா எழுதுவதைக் கொஞ்சம் படிப்போம்.

ஆரியக் கலாச்சாரம் வேறு! திராவிடர் கலாச்சாரம் வேறு! என்பது பற்றி, ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகவே கூறியுள்ளனர். ஜெர்மன் ஆராய்ச்சியாளர்களே, முதலில் ஆரிய நாகரிகம், மொழி, கலை ஆகியவற்றினை வானளாவப் புகழ்ந்தனர். மாக்ஸ் முல்லர் எனும் ஜெர்மானியர் இப்பணியில் ஈடுபட்டபோது, இங்கு அக்ரகாரம் ஆனந்தக் கூத்தாடிற்று! வேதம், ஸ்மிருதி என்பவைகளுக்கு, மேனாட்டார் எவ்வளவு மதிப்பு தருகின்றனர் பாரீர்! எமது புகழ் எங்கும் பரவிடக் கேளீர்!! என்று பேசினர். பூரித்தனர். ஆபிடியூபா போல, ஆரிய இனத்தின் இயல்பினைக் கடிந்து கூறாமல், புகழ்ந்து பேசிய ஜெர்மன் ஆராய்ச்சியாளர்களின் புல்லறிவினைப் பொசுக்கப் புதிய ஆராய்ச்சியாளர் தோன்றலாயினர். இந்தியாவிலேயே முதன் முதல் நாகரிகத்தைப் புகுத்தியவர்கள் ஆரியர்தான் என்ற பொய்யுரை ஒழியக் காலம் பிடித்தது. ஆரியத்தின் துணையின்றி, மிகப் பழங்காலந் தொட்டு, இங்கே வளமான ஓர் நாகரிகம் ஓங்கியிருந்த உண்மையை, உலகம் உணர நாட்களாயின. பண்டைத் தமிழரின் வாழ்வு பாழ்பட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும், ஆரியத்தின் கூட்டுறவால் நேரிட்ட அவதிதான் எனும் உண்மையை, உலகு முதலிலே தெரிந்து கொள்ளவில்லை. இந்தியாவை ஆரியவர்த்தமென்று கூறியும், இந்திய நாகரிகத்தையே ஆரிய நாகரிகம் என்று மொழிந்தும் உலகு கிடந்தது.

பேராசிரியர் சர்.ஜான்மார்ஷல் திராவிடப் பண்புகளை ஆராய்ந்தறிந்து கூறிய போதுதான், மேனாட்டாரின் கண்களிலிருந்த கறையும், கருத்திலிருந்த மாசும் நீங்கிற்று. பிறகு ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்திற்று என்ற ஆராய்ச்சி வரலாயிற்று. இயற்கை இன்பத்தை நுகர்ந்து, வீரத்தை வணங்கி, அறத்தை ஒப்பி வாழ்ந்த திராவிடரிடையே, கட்டுக் கதைகளைப் புகுத்தி கோழைத்தனத்தை வளர்த்தவர் ஆரியரே என்பதும், ஆரியக் கோட்பாடுகள் புகாமுன்னம் திராவிடர் அறிவுத் துறையிலேயே ஆர்வங் கொண்டிருந்தார்களே யல்லாமல், கண்ணுக்குப் புலனாகாததும், கருத்துக்கு எட்டாததும், வாதத்திற்குக் கட்டுப்படாததும், பிரத்யட்சம் பிரமாணத்துக்கு ஒத்துவராததுமான கொள்கைகளிலே மூழ்கிக் கிடக்கவில்லை என்பதும், பிறகு ஆராய்ச்சியாளர்களால் விளக்கப்பட்டது. ஆனால் இவை யாவும், பிரேத விசாரணையாக கருதப்பட்டதேயல்லாமல், வீழ்ச்சியுற்ற இனத்திற்குத் திருப்பள்ளி எழுச்சியாக உபயோகிக்கப்படவில்லை. சாதாரணக் கல்வியும், பொது அறிவும் அதிகம் பரவாத திராவிடச் சமுதாயத்திடையே, புதிய ஆராய்ச்சி முடிவுகள் பரவ வழி இல்லாமற் போய் விட்டது. ஆகவேதான், ஆரியம் அழிவைத் தருவது, திராவிடம் தீரரை வளர்ப்பது என்ற நற்கருத்து இன்றும் நம் இனத்தவரிடையே புகவில்லை.

கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களும், ஆராய்ச்சி வசதி நிறைந்தவர்களுமாவது இந்தத் துறையிலே சற்று உழைப்பார்களானால், திராவிட இனம் உய்ய வழி உண்டு. இல்லையேல், உலகிலே பல இனங்கள் பாழ்பட்டு மறைந்து போனது போல, ஓர் காலத்தில் உலகம் புகழ வாழ்ந்த திராவிட இனமும் அழிந்தே போகும்! எந்த இனம் தனது பண்பை இழந்து, பண்டைய பெருமையை மறந்து எதிரியிடம் அடைக்கலம் புகுந்து விடுகிறதோ, அந்த இனம் அழிவுக் குழிக்கு அவசர அவசரமாக நடக்கிறது என்றுதான் பொருள்.

அண்ணா அவர்கள் இந்தக் கருத்துகளை ஆதாரங்களின்றி எழுதிடவில்லை. ஆதாரங்கள் பலவற்றை அள்ளிக் கொட்டித் தீட்டியதுதான் ஆரிய மாயை நூல்!

உடன்பிறப்பே, இப்போது எண்ணிப் பார்! அந்தக் கலாச்சாரத்திலிருந்து நாம் வேறுபட்டவர்கள் என்பதும், புகுத்தப்பட்ட அந்தக் கலாச்சாரத்தைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ய வேண்டுமென்பதும் நமக்கு முன்னேயுள்ள அவசரமும் அவசியமுமான பணியல்லவா?

எப்படியாவது சமஸ்கிருதப் படையெடுப்பை நடத்தி வென்றிட, தினமணிக் கட்டுரையாளர் யார் யாரையோ சாட்சிக்கு அழைக்கிறார்! எவை எவைகளையோ சான்று காட்டுகிறார் –

“ஒரு குறிப்பிட்ட சாதியை
ஒரு குறிப்பிட்ட இனத்தோடும்
ஒரு குறிப்பிட்ட மொழியோடும்
பிணைத்துக் கூறுவது வரலாற்றுப் பிசகு”

என சினம் கொப்பளிக்கக் கூறும் தினமணிக் கட்டுரையாளர் – திராவிடர் என்ற இனத்தையோ – திராவிடக் கலாச்சாரத்தையோ ஏற்றிட மறுக்கிறார். ஒரு சாதியை இனத்துடன் பிணைக்காதே என்கிறார். குறிப்பிட்ட மொழியுடன் அதாவது, சமஸ்கிருதத்துடன் அந்த சாதியைப் பிணைக்காதே என்கிறார்! புரிகிறது சூது!

சமஸ்கிருத அர்ச்சனைதான் சாமிக்குப் புரியும் – தமிழ் அர்ச்சனை கூடாது. அது ஆகமத்துக்கு விரோதம் – ஆண்டவனுக்கு விரோதம் என்று கொக்கரிப்பார்கள்! ஒரு குறிப்பிட்ட உயர் சாதியினர், அதாவது சமஸ்கிருதம் சஞ்சரிக்கும் நாவினர் மட்டுமே, ஆண்டவனைப் பூசை செய்ய அருகதையுடையோர் – ஏனையோர்க்கு அனுமதி கிடையாது என உச்சநீதி மன்றம் வரையில் சென்று வழக்காடுவார்கள் – ஆனால் நம்மை பார்த்து அறிவுரை கூறுவார்கள். குறிப்பிட்ட ஒரு சாதியை குறிப்பிட்ட ஒரு இனத்தோடும் குறிப்பிட்ட ஒரு மொழியோடும் பிணைத்துக் கூறுவது வரலாற்றுப் பிசகு என்று!

சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! ஏற்றிப் போற்றுங்கள்! ஏழடுக்கு உப்பரிகையில் அமர்த்திக் களியுங்கள்! ஆல வட்டம் சுழற்றுங்கள்! ஆனந்தப் பள்ளு பாடுங்கள்!

என்று நம்மை அழைக்கிறார்கள்! ஆம், தமிழர்களை அழைக்கிறார்கள்! மறைமலை அடிகளாரையும், மனோன்மணீயம் சுந்தரனாரையும் தாண்டி வந்து சமஸ்கிருத மொழிக்கு நடை பாவாடை விரிக்கச் சொல்லுகிறார்கள்! பசுமலை பாரதியைப்

புறக்கணித்து விட்டு, சமஸ்கிருதத்தைத் தமிழகத்தில் பரப்பச் சொல்கிறார்கள்! பாவாணரை, பன்மொழிப் புலவரை, பாவேந்தராம் புரட்சிக் கவிஞரை - ஏறெடுத்துப் பாராதே! இனிய மொழி சமஸ்கிருதத்தை ஏற்றிடு! போற்றிடு! என இச்சகம் பேசி அழைக்கிறார்கள்!

இதோ தினமணிக் கட்டுரையாளரின் மொத்தக் கருத்துக்கும் விடையளிப்பது போல, பி.டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் எழுதிய இந்திய சரித்திரத்தில் காணப்படும் குறிப்பே அமைந்துள்ளது.

> "ஆரியம் பரவுவதற்கு முன்பு இந்தியாவில் நான்கு வருண பேதங்கள் கிடையா. மண விஷயத்தில் ஆரியர்களின் யக்ஞ முறை அனுஷ்டிக்கப்படவில்லை. வடஇந்திய பாஷைகள், கொஞ்சம் கொஞ்சமாக சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கினாலும் கூட, தென்னிந்தியா, சமஸ்கிருதத்திற்கு அடிமைப் படவில்லை."

இப்போது அவாளுக்குள்ள கவலையெல்லாம், இந்த இனத்தை நமது கலாச்சாரத்தின் பிடிக்குள் வைத்து ஆட்டிப் படைக்கிறோம் - நமது ஆட்சி ஆதிக்கமும் வந்தாகிவிட்டது - இனி இவாளின் மொழியையும், அந்த மொழியினால் ஏற்படும் ஓரளவு உணர்வினையும் தீர்த்துக் கட்டிவிட்டால், சமஸ்கிருத சாம்ராஜ்யம் உருவானது என்ற நிம்மதியுடன் ஆனந்தப் பெருமூச்சு விடலாமென எண்ணியிருக்கும்போது - கலை, இலக்கியம், வரலாறு, பண்பாடு, இனம், மொழி, உணர்வு என இந்தக் கழகத்துக்காரன் குறுக்கே நிற்கிறானே என்பதுதான்!

"குறுக்கே நிற்போம்; நமது
குருதி பாய்ந்திடினும்
குலை அறுபடினும் - தமிழ்க்
குலத்திற்கு வரும் கேடுகளைத்
தடுத்துத் தகர்த்திட
குறுக்கே நிற்போம்! இது உறுதி!

அன்புடன்,

மு. க.

(15-10-1991)

1809. உண்மையான நிலை உறுதியானது!

உடன்பிறப்பே!

அண்மையில் தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரை குறித்த தீர்மானத்தை நமது கழகம் வரவேற்றுப் பாராட்டவில்லை என்பது பற்றியும் - அதற்கு மாறாக அந்தத் தீர்மானம் ஒரு ஏமாற்று வித்தை! கண் துடைப்பு! என நாம் விமர்சித்தது பற்றியும் சிலருக்குக் கவலை! ஒருவிதமான ஆதங்கம்!

வி.பி.சிங் ஆட்சியில் கொண்டு வந்தது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் 27 சதவிகிதம்தானே - இதோ ஜெயலலிதா 50 சதவிகிதம் வேண்டுமென்று தீர்மானமே போட்டுவிட்டாரே! என்று களிப்படையும் அவர்களுக்கு உண்மை தெரியாமல் இல்லை!

முதலில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த ஜெயலலிதாவுக்கு இடஒதுக்கீடு விஷயத்தில் அடிப்படையான கொள்கை என்ன என்பதை மறந்து விட முடியுமா? மறந்து விடலாமா?

பொருளாதார அடிப்படையில்தான் இடஒதுக்கீடுகள் அமைய வேண்டும். இதுவே எம்.ஜி.ஆரின் கருத்து. எங்கள் கட்சியின் கொள்கையும் அதுவேதான்!

என்பதாக, இதே ஜெயலலிதா அவர்கள் வி.பி.சிங் அவர்கள் மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற முன்வந்தபோது பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தாரா இல்லையா?

மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதில் ஜனதா தளம், தி.மு.க., தெலுங்கு தேசம், அசாம் கணபரிசத், காங்கிரஸ் (எஸ்) ஆகிய கட்சிகளைக் கொண்ட தேசிய முன்னணி அரசு

தீவிரமாக நடவடிக்கை எடுத்த காரணத்தினால் தானே அந்த ஆட்சியைக் கவிழ்க்க ஆதிக்க சக்திகள் முன்வந்தன!

அப்போது ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெரியார், அண்ணா இருவரின் உயிர்க் கொள்கைகளில் ஒன்றான இடஒதுக்கீட்டுக் கொள்கையை காத்திடும் நோக்குடன் - வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்து வாக்களித்தார்களா? இல்லையே! எதிர்த்து வாக்களித்தல்லவா ஆட்சியைக் கவிழ்த்தார்கள்!

இடஒதுக்கீடுக் கொள்கை சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் வகுக்கப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கையே இல்லாத இவர்கள், பொருளாதார அடிப்படையிலேதான் அமைய வேண்டுமெனத் திட்டவட்டமாகக் கூறிய இவர்கள், ஒன்பதாயிர ரூபாய் என வருமான உச்ச வரம்பு கட்டி ஆணை பிறப்பித்து ஒருமுறை தமிழ் நாட்டில் சூடுபட்டுக்கொண்ட இவர்கள், இப்போது திடீரென 50 சதவீத இடஒதுக்கீடு - அதுவும் சமூக, கல்வி அடிப்படையில் மட்டுமே என்று தீர்மானம் கொண்டு வருவது இருதய சுத்தியோடு செய்யப்பட்ட காரியம் என்று நாம் நம்பத் தயாராக இல்லை!

முக்கியமாக இப்போது, மண்டல் கமிஷன் பரிந்துரையின் நிலை என்ன என்பதைக் கவனிக்க வேண்டாமா?

மத்திய அரசு அலுவலகங்களில், பொது நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு என்ற மண்டல் பரிந்துரை நடைமுறைக்கு வரும் என்று தேசிய முன்னணி அரசு அறிவித்தது!

அதை எதிர்த்துக் கிளர்ச்சிகள்!

ஆட்சிக் கவிழ்ப்பு!

பதவியைத் தியாகம் செய்த வி.பி.சிங் அவர்களை தி.மு.கழகம் வரவேற்றுப் பாராட்டி சென்னை முதல் குமரி வரையில் வாழ்த்துக் கூட்டம் நடத்தியது என்ற கோபத்தில் - இங்கே கழக அரசும் கலைப்பு!

மண்டல் கமிஷன் 27 சதவீத ஒதுக்கீடு - உச்சநீதி மன்றத்துக்குச் சென்றது!

அதாவது, சமூக அடிப்படையில், கல்வி அடிப்படையில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்வது செல்லுமா? செல்லாதா? - இந்த வினாக் குறியுடன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு!

நரசிம்மராவ் பிரதமராகிறார்! உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசின் கருத்து கேட்கப்படுகிறது! மத்திய அரசு நேரடியாகப் பதில் சொல்லவில்லை! குழப்புகிறது! வேண்டுமென்றே குழப்புகிறது! 27 சதவீதத்திற்குள்ளேயே பொருளாதார அடிப்படையை நுழைத்து, பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு என்று கூறிக் குழப்புகிறது! இந்த 27 அன்னியில், தனியாக ஒரு பத்து சதவீதம், முன்னேறிய சமூகங்களின் ஏழைகளுக்கு என்றும் மத்திய அரசு கூறுகிறது!

ஏற்கனவே மத்திய அரசு இடஒதுக்கீட்டில் 22.5 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு என இருக்கிறது!

அந்த 22.5 சதவிகிதம் போக மீதமுள்ள 77.5 சதவிகிதத்தில்தான் பங்கீடு செய்யப்பட வேண்டும். அதில் 27 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கு என ஒதுக்கி விட்டால், பொதுத் தொகுப்புக்கு 50.5 சதவிகிதம் மிஞ்சுகிறது. மண்டல் பரிந்துரையின் அளவு இதுதான்! அந்த 50.5 சதவிகிதத்தில் முன்னேறிய வகுப்பினரில் ஏழைகளுக்கு 10 சதவீதமென நிர்ணயிக்கும் மத்திய அரசு, அத்துடன் நில்லாமல், மண்டல் பரிந்துரையான 27 சதவீதத்திலும் பிற்படுத்தப்பட்டோருக்கு வருமான வரம்பு எனும் பொருளாதார அடிப்படையைப் புகுத்துவோம் என்கிறது!

வி.பி.சிங் ஆட்சி கொண்டுவந்த சமூக - கல்வி அடிப்படை இடஒதுக்கீடு 27 சதவீதம் குறித்துத்தான் இங்கு வழக்கே இருக்கிறது! இப்போது மத்திய அரசு கொண்டுவரும் பொருளாதார அடிப்படையும் இணைந்த இடஒதுக்கீடு - தனிப்பிரச்சினை. எனவே, புதிதாக ஒன்பது நீதிபதிகள் கொண்ட மன்றம் விசாரித்து முடிவு கூறும் என உச்ச நீதிமன்றம் அறிவித்து விட்டது!

இத்தகையக் காலகட்டத்தில்தான், தமிழகச் சட்டப் பேரவையில் மண்டல் தீர்மானம் வருகிறது. தீர்மானம் எப்படி அமைந்திடல் வேண்டும் -

மண்டல் பரிந்துரையின்படியுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டுக்குள் பொருளாதார அடிப்படையைப்

புகுத்திட முனைந்துள்ள மத்திய அரசு, அந்தக் கருத்தை கைவிட்டு - இந்த 27 சதவீதமும் முற்றிலும் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் அமைந்திடுமாறு நடைமுறைப்படுத்த முன்வர வேண்டுமென இந்தப் பேரவை மத்திய அரசை வலியுறுத்துகிறது.

என்றல்லவா தீர்மானம் அமைந்திருக்க வேண்டும்!

அய்யோ! நாங்கள் 50 கேட்கிறோம். இவன் வேண்டாம் என்கிறானே! என்று கூச்சல் போட்டுப் பயனில்லை!

அஞ்சு கொடுத்தால்கூட - அதற்குள் பொருளாதார ரீதியென்று நுழைக்காமல், அது முழுதும் சமூக ரீதியாக - கல்வி ரீதியாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என ஒழுங்காகக் கொடுக்கப்பட வேண்டும்!

ஐம்பது கொடுப்பதும் அல்லது தாழ்த்தப்பட்ட பழங்குடிமக்களுக்கு முன்பே ஒதுக்கப்பட்ட 22.5 சதவீதம் போக மீதமுள்ள 77.5 சதவீதத்தையுமே பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கவேண்டுமெனக் கேட்டு அதனை மத்திய அரசு கொடுப்பதும் வேறு விஷயம்!

இப்பொழுது நடைபெறுவது முதல் கட்ட முயற்சி! மண்டல் பரிந்துரைத்த 27 சதவீதமாவது, சமூக ரீதியாக, கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டுமென விழைகிற முதற்கட்ட முயற்சி! முன்னேறியதாகக் கருதப்படும் சமூகங்களில் உள்ள ஏழைகளைப் புறக்கணித்து விட முடியாது! அதேபோலப் பொதுத் தொகுப்பையும் அறவே நிராகரித்து விட முடியாது! கூடாது!

முதல்கட்டமாக மத்திய அரசு மற்றும் மத்திய பொதுத்துறைப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம் என்ற அளவுக்குள், கட்டுச்சோற்று மூட்டையில் பெருச்சாளியையும் வைத்துக் கட்டுவது போல், பொருளாதார ரீதி என்பதையும் நுழைக்கிறார்களே - அதனைத் தமிழகச் சட்டப் பேரவையின் தீர்மானம் எதிர்த்திட வேண்டாமா?

27 சதவீதத்துக்குள் பொருளாதார ரீதி என்பதை நுழைக்காதீர் எனத் தமிழகத்தில் தி.மு.க. எச்சரிக்கிறது! தி.க. எச்சரிக்கிறது! பா.ம.க. எச்சரிக்கிறது!

இந்த எச்சரிக்கை, ஜெயலலிதா முன்மொழிந்த தீர்மானத்தில் இடம் பெறாமல் இருக்கும்போது, சமூக ரீதியில் கல்வி ரீதியில் 50 சதவீதம் என்று கோரியுள்ளதில் அந்த எச்சரிக்கை அடங்கியிருக்கிறது எனத் தலையைச் சுற்றி வளைத்து மூக்கைத் தொட நாம் தயாராக இல்லை!

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக இயக்கங்கள் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றன - 27 சதவீதப் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்குள் பொருளாதார அடிப்படை கூடாது என்று!

இது முதல் கட்டம்! இதற்கு மாறாக, நான் முதல் கட்டத்தை விட்டுவிட்டு இரண்டாவது கட்டத்திற்குப் போகிறேன். அதுதான் 50 சதவீதம் என்றால் - இங்கேதான் நமக்கு ஐயம் எழுகிறது! அ.தி.மு.க. அரசின் இடஒதுக்கீடு தீர்மானத்தில் அவர்களுக்கே விசுவாசம் இல்லை என்ற உண்மையான நிலையும் உறுதியாகிறது.

அன்புடன்,

மு. க.

(16-10-1991)

1810. வீழ்த்திட முனைவோரின் வீண் கனவு!

உடன்பிறப்பே!

இந்திரா காந்தியை ஆதரித்தீர்களே! அவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவரில்லையா?

ராஜாஜியின் தலைமையிலிருந்த சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்தீர்களே! அவர் பிராமணரில்லையா?

கிரிக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தீர்களே! அவர் பிராமணரில்லையா?

ஆர். வெங்கட்ராமனை தென்சென்னையில் ஆதரித்தீர்களே! அவர் பிராமணரில்லையா?

இப்படி துக்ளக் நம்மைப் பார்த்துக் கேட்பது போல கேலிச் சித்திரம் வரைகிறது.

தினமணிக் கட்டுரையாளர் ஒருவர், பிராமணரும் பிராமணியமும் என்ற தலைப்பில் 1957 தேர்தலில் காஞ்சிபுரத்தில் பெரியார் அவர்கள் டாக்டர் சீனிவாசன் என்ற பிராமணரை ஆதரிக்கவில்லையா? மாவூர் சர்மா என்ற பிராமணரை ஆதரித்துப் பெரியார் மாணவர் பிரச்சார முகாம் நடத்தவில்லையா?

என்பன போன்ற சில கேள்விகளை அவர் பங்கிற்குக் கேட்டிருக்கிறார்.

இந்தக் கேள்விகளைக் கேட்ட இருவருமே எந்த ஆதங்கத்தை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

இப்போது மட்டும் ஆரியம் - திராவிடம், பிராமண ஆதிக்கம் - என்றெல்லாம் பேசுகிறீர்களே! நியாயம்தானா? என்று அவர்கள் கேட்கிறார்கள் - அவ்வளவுதான்!

தினமணிக் கட்டுரையாளர் (அக்.11) எழுதியுள்ள அந்தக் கட்டுரையின் இரு பகுதிகளை இப்போது நினைவுபடுத்துவது பொருத்தமென்று கருதுகிறேன்.

1. நான் பிராமணர்களை எதிர்க்கவில்லை. பிராமணியத்தை மட்டுமே எதிர்க்கிறேன் என்று 1957 தேர்தல் பிரச்சாரத்தின் போது பெரியார், காஞ்சிபுரத்தில் கூறினார்.

2. 1958-ல் ராயப்பேட்டை லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் பேசும்போது, தமிழ் நாட்டில் உள்ள வகுப்பு கிலேசங்களைப் போக்குவதற்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு வழி வகுத்துக் கொள்ளலாம். இவ்வளவு துவேஷத்திற்குப் பிறகு, நம்மாலே ஒன்றுபட முடியுமா என்று சந்தேகப்படத் தேவையில்லை என அண்ணா குறிப்பிட்டார்.

கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு செய்திகளையும், அந்த செய்திகளுக்குப் பின்னால் இருக்கிற நல்லெண்ண உணர்வுகளையும் சிந்தித்து, அதன்படிச் செயல்படத்தவறி விட்டவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

தேர்தல் பிரச்சாரத்தில் மட்டுமல்ல. பெரியார் அவர்கள் – நான் எந்த பார்ப்பானுக்கும் விரோதியல்ல, பார்ப்பனியத்துக்குத்தான் விரோதி. பார்ப்பான் ஒழிய வேண்டுமென்று கூறவில்லை. பார்ப்பனியம் ஒழிய வேண்டுமென்றுதான் கூறுகிறேன். பார்ப்பனர்கள் எங்களை இழிவுபடுத்தக் கூடாது. எங்கள் உழைப்பை உறிஞ்சி வாழக் கூடாது. எங்களைவிட மேலானவர்கள் சகல போக போக்கியங்களுக்கும் உரியவர்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது, என்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

என்றும் கூடப் பல நேரங்களில் விளக்கியிருக்கிறார். பெரியார் இப்படிக் கூறியதையொட்டியே அண்ணா அவர்களும் – தி.மு.கழகமும் தமிழ்நாட்டில் வகுப்புக் கிலேசத்தைப் போக்குவதற்குப் பார்ப்பனர்களுடன் சேர்ந்து ஒரு வழி வகுத்துக் கொள்ளலாம் என நம்பியது தவறில்லை அல்லவா?

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், தனிப்பட்ட பார்ப்பனரல்ல, நாம் எதிர்க்க வேண்டியது - பார்ப்பனியத்தைத்தான் என்ற முடிவுடன், இந்திரா காந்தியை, ராஜாஜியை, கிரியை, ஆர்.வெங்கட்ராமனைப் போன்றவர்களையெல்லாம் கூடத் தேர்தல்களில் ஆதரித்தோம்!

இப்படியொரு நிலையை எடுத்து, தி.மு.கழகம் சுமார் முப்பது ஆண்டுகாலம் பொறுமையாக இருந்து வகுப்புக் கிலேசங்களை அகற்றிட, ஒத்துப்போகும் அணுகுமுறையைக் கடைப்பிடித்தும்கூட - நமது அணுகுமுறையை ஏதோ அடிமைத்தனமான முறையென்று பார்ப்பனியம் கருதிக்கொண்டதே தவிர, அது, தன்னுடைய நச்சுத்தன்மையான பேத உணர்வை விட்டுவிடத் தயாராக இல்லை!

நம்மை அவதூறு கூறவும், எரிச்சல் மிகுதியால் அர்ச்சனை செய்யவும், நமது ஆட்சியை வீழ்த்தவும், மாட்சியை மாசுபடுத்த முயலவும் தவறவில்லை!

பிராமண வகுப்பினரை ஆதரிக்கவில்லையா? ஆம், ஆதரித்தோம்! இவ்வளவு துவேஷத்திற்கும் பிறகு - நம்மாலே ஒன்றுபட முடியுமா என சந்தேகப்படத் தேவையில்லை என்று அண்ணா கொண்டிருந்த நம்பிக்கையை அனைவரும் பெற்றிருந்தோம்! அந்த நம்பிக்கையைத் தொடர்ந்து நாசமாக்கியது யார் என்பதுதானே கேள்வி!

நூற்றுக்கு மூன்று பேராக உள்ளவர்கள், நூற்றுக்கு தொண்ணூற்றி ஏழு பேரைக் கொண்ட ஒரு பெரிய சமுதாயத்தின் பின்னடைவைச் சரி செய்து, அந்தச் சமுதாய மக்களையும் கைதூக்கி விடுவதற்கு என நீதிக்கட்சி காலம் தொட்டு இருந்து வருவதான இடஒதுக்கீடு கொள்கைக்கு இன்றுவரையில் எதிர்ப்பு காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அய்யாவின் கருத்தை - அண்ணாவின் அழைப்பை அவர்கள் உதாசீனப்படுத்தி விட்டார்கள் என்றுதானே பொருள்!

பார்ப்பனர்கள் எங்களை இழிவுபடுத்தக் கூடாது. எங்களைவிட மேலானவர்கள் என நினைத்துக் கொள்ளக் கூடாது.

என்ற பெரியாரின் கருத்துக்குச் சவால் விடும் முறையில்தானே - இன்று சபாநாயகர்களையே சபையில் காலில் விழச் செய்கிறார்கள்!

தங்களின் சாதி உயர்சாதிதான். எனவே, யாரும் என்னை அசைக்க முடியாது என்று பேசுகிறார்கள்!

வகுப்புக் கிலேசங்களைப் போக்குவதற்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து வழி வகுக்கலாம் என, லட்சுமிபுரம் யுவர் சங்க நிகழ்ச்சியில் அண்ணா விடுத்த அழைப்பைப் புறக்கணிப்பதற்கு அடையாளமாகத்தானே - தமிழ் அர்ச்சனையை எதிர்த்துக் கூச்சலிட்டார்கள்! அர்ச்சனை விதிமுறை தேர்ந்த அனைத்து சாதியினரும், ஆண்டவனைப் பூசை செய்யலாம் என்ற சட்டத்தையே சவாலுக்கு இழுத்தார்கள்! இன்று வேத ஆகம சாஸ்திரக் கல்லூரிக்கு ஒரு கோடி ரூபாய் என அறிவித்திருக்கிறார்கள்! மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேறாதிருக்க என்ன வழியுண்டோ அந்த வழியைத் திறமையாகக் கையாளுகிறார்கள்! 1924-ல் நீதிக்கட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட அறநிலையத் துறைச் சட்டத்தை மெல்லச் சாக விடுவதற்காகவே, ஆலய வாரியம் அமைக்கச் சொல்லி, அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்!

இந்த ஆட்சி வருவதற்கும், வந்துள்ள இந்த ஆட்சியை வலுப்படுத்துவதற்கும் காஞ்சி சங்கர மடம்தானே இன்னமும் மந்திராலோசனைக் கூடமாக இருந்து அரசியல் நடத்துகிறது! மறுக்க முடியுமா?

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக - ஒரு நீண்ட இடைவெளி கொடுத்துப் பார்த்தும், பயனில்லாத காரணத்தினால்தான் - அவர்களது வேதம், சாஸ்திரம், கலாச்சாரம், மொழி, இவைகளுக்கு அடங்கி ஒடுங்கி - அவற்றையே தெய்வீகமாக ஏற்றிப் போற்றி நமது இனம் அடிமை இனமாகவே இருப்பதற்கு இணங்கிட வேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோளாக இருப்பதும், அதிலிருந்து துளியளவு மாற்றமும் ஏற்படாதது மட்டுமல்ல - மேலும் துணிவுடன் நம்மீது ஆதிக்கம் செலுத்திட எல்லாவிதமான தந்திரோபாயங்களிலும் ஈடுபட்டிருப்பதால்தான் - சிறுத்தையின் உடம்பில் உள்ள புள்ளிகளை தண்ணீர் கொட்டி அழிக்க முடியாது என்ற முடிவுக்கு வரவேண்டியதாயிற்று!

ஆட்சியில் குந்திக் கொண்டோர் - அனைத்தையும் முந்திக்கொண்டு ஆலய நிதி வசூல் என்று ஆரம்பிக்கிறார்கள் என்றால் - மதச் சார்பற்ற நிலை என்பதிலிருந்து எவ்வளவு தொலைவு விலகிச் சென்று பார்ப்பனியத்தை வளர்த்திடப் பாடுபடுகிறார்கள் என்பது விளங்கவில்லையா?

இந்த கைங்கர்யத்தைப் பாராட்டிப் புகழ உத்திரபிரதேசத்து முதல்வர், ஆம்! பாரதீய ஜனதா கட்சியின் முதல்வர் தமிழ்நாட்டுக்கு வந்து போகிறார். அ.தி.மு.க. அரசு, ஆலய நிதி வசூல் செய்வது ஆரோக்கியமான செயல் என்று போற்றுகிறார்.

அவர் அயோத்தியில் மதச் சார்பற்ற நிலையைத் தகர்த்தெறிய - இந்து முஸ்லிம் யுத்தத்தைக் கிளப்பிவிட இராமர் கோயில் கட்ட, பாபர் மசூதியை அகற்ற வேண்டுமெனக் கொடி தூக்கியிருப்பவர்! அவர் ஆதரிக்கிறார் இங்கு ஆலய நிதி வசூல் செய்வதை! ஆபத்துகள் எந்த உருவங்களில் எல்லாம் வருகின்றன கவனித்தாயா? உடன்பிறப்பே!

இந்து முன்னணி

ஆர்.எஸ்.எஸ்.

பாரதீய ஜனதா

இந்த இயக்கங்கள் இங்கே வேரூன்றிடத் தெரிந்தோ
தெரியாமலோ காரியங்கள் நடைபெறுகின்றன!

அவைகள் மறைவாக நடைபெற வேண்டி,

தற்காலிகமாகப் பெரியார் பெயரும்

அண்ணா பெயரும் திரைகளாகத்

தொங்கவிடப் படுகின்றன!

ஒத்துப்போவோம் என அழைத்தார் அண்ணா!

அண்ணா வழி நின்றிடும்

தி.மு.க. அவ்வாறே எதிர்பார்த்தது!

ஒத்துப் போவதற்கான

ஒப்பந்தம் போடும் அழகு

எப்படியிருக்கிறதென்றால்,

உன் வீட்டிலிருந்து அவல்

கொண்டு வா - என் வீட்டிலிருந்து

உமி கொண்டு வருகிறேன்.

இரண்டையும் கலந்து இருவரும்

ஊதி ஊதி சாப்பிடுவோம் -

என்ற கெட்டிக்காரனின்

வார்த்தையாக இருக்கிறது! -

ஏன்! அதை நம்பிய ஏமாளியாகவும்

தமிழன் ஆகிவிட்டான்!

அந்த ஏமாற்றத்திலிருந்து விடுபடத்தான், தமிழனின் மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், வரலாறு இவற்றின் தனித்தன்மையைக் காத்திடத்தான் - முப்பது ஆண்டுகள் அவகாசம் கொடுத்துப் பார்த்தும்கூட பார்ப்பனியம் என்பது முருங்கைமரம் ஏறும் வேதாளமாகத்தான் இருக்கிறது - அதனை மாற்றிட இயலாது என்ற முடிவுடன் நமது இனத்தின் குரலை ஒலிக்கின்றோம் - இதனைத் திசை திருப்பி திராவிட இயக்கத்தை வீழ்த்திட முனைவோர் வீண்கனவு காண்கின்றனர். அவ்வளவுதான்!

அன்புடன்,

மு. க.

(17-10-1991)

1811. மதவாத சனாதனத்திற்கு மடை திறப்பதோ?

உடன்பிறப்பே!

நான் எழுதாதவைகளை எழுதியதாகவும், சொல்லாதவை களைச் சொல்லியதாகவும் கற்பித்துக்கொண்டு - அந்தக் கற்பனைக் கூற்றுக்கு பதில் சொல்வது போல் மக்கள் மத்தியில் பொய்களைப் பரப்பி - அதனால் ஏற்படும் தீய விளைவுகளைத் தீனியாகச் சுவைத்து, திருப்தியடையும் சிலர் உண்டு நாட்டில்!

அந்தச் சிலரில் ஒருவராக - அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகக் கூட இருப்பவர் ஜெயலலிதா என்பதை நீ அறிவாய்!

நான் பாப்பாத்தி! என்னை யாரும் அசைக்க முடியாது! என கர்ச்சனை செய்து சட்டப் பேரவையிலேயே அறைகூவல் விட்ட ஜெயலலிதா என்னைப் பார்த்து வகுப்புவாதி எனப் பேசியிருக்கிறார்.

டாக்டர் நாயருக்கு, தியாகராயருக்கு, நடேசனாருக்கு எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சூட்டப்பட்ட வகுப்புவாதி, தேசத் துரோகி என்ற இந்தப் பட்டங்கள், தந்தை பெரியாருக்கு - அறிஞர் அண்ணாவுக்கு அளிக்கப்பட்ட இந்தப் பட்டங்கள், அதே வட்டாரத்திலிருந்து இன்று எனக்கும் - நமது திராவிட இயக்கத்திற்கும் அளிக்கப்படுவதில் வியப்பேதும் இல்லை.

பெரியார் பக்குவப்படுத்திய இந்த மண்ணில் - அண்ணா வளப்படுத்திய இந்த பூமியில் - அவர்கள் நிழலில் வளர்ந்த சிலரின் வாயில் பதவித் துண்டுகளைத் திணித்து விட்டு, அவர்களைப் பேச முடியாதவர்களாக்கி விட்டு வேதத்திற்கும் புத்துயிர் அளிக்க வந்துள்ளேன் நான்! என்றும் - வேதாகம சாஸ்திரக் கல்லூரி அமைத்தே தீருவேன் என்றும் ஆட்சி பீடத்திலிருந்து

ஓர் அதிகாரக் குரல் கிளம்புமேயானால், அதைக் கண்டிக்காமல், எதிர்க்காமல், தடுத்து நிறுத்தாமல் கோழை போல - மோழை போல - தி.மு.கழகத்துக்காரன் இருக்க வேண்டுமென்று எண்ணுவதும், எதிர்பார்ப்பதும் பைத்தியக்காரத்தனத்தின் உச்சகட்டமாகத்தானே இருக்க வேண்டும்!

பிர்மாவின் முகத்தில் இருந்து பிராமணனும், தோளில் இருந்து க்ஷத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், பாதங்களிலிருந்து சூத்திரனும் பிறந்ததாகக் கூறி, வர்ணாஸ்ரம தர்மத்தை போதிக்கும் வேதத்தைப் புறக்கணிப்போம்! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென்ற வள்ளுவத்தை மட்டுமே நாங்கள் ஏற்போம்!

என முழங்கிய பெரியாரின் குரலை, அண்ணாவின் மொழியை நாடு நகரம் பட்டி தொட்டி யெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியனார் போன்றோர் - இன்று வேதங்களில் தெரியும் வெளிச்சங்களை, விரிவாக விளக்கி உபன்யாசிக்கப் போகிறார்களா? அய்யோ! பாவம்! அவர்களின் மனசாட்சி ஓலமிடுகிறது! என் செய்வது! பதவி, கோலமிடுகிறதே அவர்தம் வாழ்க்கையில்!

எதிர்ப்பு கடுமையாகக் கிளம்பியதும், உடனே ஜெயலலிதா, வேதாகம சாஸ்திரக் கல்லூரியில் தாழ்த்தப்பட்டோருக்கும் இடம் உண்டு. அவர்கள் ஆலயங்களில் அர்ச்சனை செய்ய வழி உண்டு. அய்யா, அண்ணா வழியில் இதனைக் கூறுகிறேன் என்றுரைத்து அய்யா - அண்ணா கொள்கையின் வழியையே பிடுங்க முனைந்து விட்டார்!

அய்யாவும், அண்ணாவும் பார்ப்பனரல்லாதாருக்கும் குறிப்பாகத் தாழ்த்தப் பட்டோருக்கும் வேதக் கல்லூரி வேண்டுமென்றா போராடிக் கொண்டிருந்தார்கள்! இல்லை! இல்லவே இல்லை! வேதத்தைக் கேட்கிற சூத்திரர்களின் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்கிற அந்த வேதங்களும், ஸ்மிருதிகளும் எமக்கு வேண்டாமே என்றுதான் கூறிக் கொண்டிருந்தார்கள்!

அர்ச்சனை செய்வதற்குரிய பயிற்சிகளைப் பெற்றோர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் - அவர்கள் அர்ச்சகராகலாம் என்று பெரியாரும் அண்ணாவும் சொன்னது, அதற்கேற்ப கழக

ஆட்சிக் காலத்தில் நான் சட்டம் கொண்டு வந்தது எல்லாமே, பிறப்பின் காரணமாகப் பறிக்கப்படும் உரிமைகளை மீட்க வேண்டும் - எல்லோருக்குமுள்ள சம உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, வேறல்ல!

அர்ச்சகர் சட்டம் மட்டுமல்ல, அர்ச்சனைகூட தமிழில் செய்யப்பட வேண்டும் என்ற ஆணையும் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்பட்டது!

ஆனால், அவற்றுக்கு எவ்வளவு எதிர்ப்பு! அர்ச்சகர் சட்டம், அதாவது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற கழக அரசின் சட்டம், உச்சநீதி மன்றத்தால் முடக்கிப் போடப்பட்டு விட்டது!

எனவே பார்ப்பனரல்லாதவர் - ஆதி திராவிடர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினர் வேதாகமம், சாஸ்திரம், ஸ்மிருதி எதனைக் கற்றாலும் கருவறைக்குள் நுழைய முடியாது! கடவுள் விக்கிரகத்துக்கு அர்ச்சனை செய்ய முடியாது!

கடவுளை அர்ச்சனை செய்யும் உரிமை, வகுப்பு வேறுபாடின்றி அர்ச்சனைப் பயிற்சி பெற்றோர் அனைவருக்கும் வேண்டும்.

அந்த அர்ச்சனை மொழி சமஸ்கிருதமாகத்தான் இருக்க வேண்டுமென்பதை ஏற்பதற்கில்லை. தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டு.

மனித உரிமை, மொழி உரிமை இவைதான் இதில் முக்கியமே தவிர, அர்ச்சகர் என்ற வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு என்பது முக்கியமல்ல!

அர்ச்சனை செய்யும் உரிமையே இல்லை என்று உச்சநீதி மன்றத்தில் சட்டம் முடக்கப்பட்டிருக்கும் போது - வேதக் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், ஏன் - மொத்தத்தில் பார்ப்பனரல்லாத மாணவர்கள் - பயிற்சி முடிந்து என்ன வேலை பார்ப்பார்கள்? பூனையைக் கட்டி மொட்டை அடிப்பார்களா?

என்னமோ, சந்திரனில் முதன்முதலாக மனிதனை நடக்கவிட்ட சாதனைபோல - ஆகா! நான் தாழ்த்தப்பட்டோருக்கும் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியில் இடஒதுக்கீடு செய்வேன் என்று கூறுவது, யாரை ஏமாற்ற?

அவாளையே காணுமாம்! பிள்ளை எத்தனை? என்ற கிராமியப் பழமொழி போல், அர்ச்சகராகும் உரிமையே கிடையாதாம் - ஆனால் அவர்களுக்கு வேதக் கல்லூரியில் பயிற்சி கொடுத்து கிழிக்கப் போகிறார்களாம்!

அப்படி அர்ச்சனை செய்யும் உரிமை கிடைத்தால் கூட - அந்தப் பயிற்சி பெற ஒரு கோடி ரூபாய் செலவில் வேதக் கல்லூரியா தேவை?

இப்போது கோயில்களில் அர்ச்சனை செய்பவர்கள் எல்லாம் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களா?

என்ன இது! வேதனையான வேடிக்கை! வேதத்திற்குக் கல்லூரி - பிறகு பல்கலைக் கழகம் - வள்ளுவரும், இளங்கோவடிகளும் பிறந்த இந்த மண்ணில் வால்மீகிக்கும், வியாசருக்கும் இடம் தந்து, படும் அவதி போதாதா? ரிக்வேதம் - யஜீர் வேதம் - சாம வேதம் - அதர்வண வேதம் என நாலு வேதத்திற்கும் மாடமாளிகை கூடகோபுரம் கட்டிக் கொடுத்து, தமிழன், தாழ்ந்து - தாழ்ந்து - தாழ்ந்து - தாழ்ந்தே போக வேண்டுமா?

இதோ! வேதங்கள் சொல்லுகின்றன! என்ற தலைப்பில் அண்மையில் விடுதலை இதழில் (10-10-91) ஒரு தொடர் கட்டுரை வந்துள்ளது.

> "வேதங்களைச் சொல்லிக் கொடுக்க வேதாகம கல்லூரியை ஒரு கோடி செலவில் அமைக்கப் போவதாக முதல்வர் அறிவித்துள்ளார். வேதங்கள் என்பவை என்ன சொல்லுகின்றன? எனக் கேட்டு, பின்வரும் சுலோகங்களின் தமிழ் மொழிபெயர்ப்பை விடுதலை வெளியிட்டுள்ளது."

அதன் முதல் கட்டுரையில் வந்துள்ள சுலோகங்கள் சில:-

> "பயங்கரத்தன்மை வாய்ந்த ஆரிய மன்னன் சிறப்பான வகையில் ஆயுதங்களை ஏந்திப் போரில் தனது எதிரிகளை முறியடித்து, கொஞ்சம் கொஞ்சமாக தாசர்களை அவன் கட்டுப்பாட்டுக்குக் கீழே கொண்டு வருகிறான்."

(ரிக் வேதம் - சுலோகம் 34 முதல் 36 வரை)

"தஸ்யூக்கள், நம்மை எல்லா பக்கங்களிலும் சூழ்ந்திருக் கிறார்கள். அவர்கள் யாகங்களைச் செய்வதில்லை. அவர்கள் கடவுளை நம்பாவதவர்கள். அவர்களது பழக்க வழக்கங்கள் நமக்கு முற்றிலும் மாறானவை. அவர்கள் மனிதர்களே அல்ல! ஓ! எதிரிகளை அழிக்கும் சக்தி வாய்ந்தவரே! அந்த தாசர் இனத்தையே அழியுங்கள்"

(ரிக் வேதம் - சுலோகம் 100 - பாட்டு 8)

"ஆண் ஓநாயோ அல்லது பெண் ஓநாயோ உன்னைத் தாக்காமல் இருக்கட்டும். என்னைக் கை விட்டு விடாதீர்கள். இதோ உனது பங்கு இங்கே இருக்கிறது. ஓ! ரம்மியமானவர்களே! இந்த பிரார்த்தனைப் பாட்டு உங்களுக்காக! இந்த இனிப்பு ரசங்கள் உங்களை மகிழ்விப்பதற்காக!"

(ரிக் வேதமண்டல்! அனுவாகா 24 சுலோ 4 பாட்டு 4)

உடன்பிறப்பே, தஸ்யூக்கள், தாசர்கள் என்ற சொற்கள் திராவிடர்களைக் குறிப்பதாகும் என வரலாற்று ஆசிரியர்கள் பலர் ஆய்ந்து எழுதியுள்ளார்கள். இனிப்பு ரசங்கள் என்பது மது வகைகளைக் குறிக்கும்.

இப்போது சொல்லட்டும்! ஆதி திராவிடரையும், மற்றவர்களையும் அனுமதிப்பதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த வேதங்களைப் பயின்றிட கல்லூரி தேவையா?

இந்தக் கல்லூரிக்குப் பதில், ஒவ்வொரு பெரிய கோயிலிலும் தொழில் கல்லூரிகளையோ - மருத்துவமனைகளையோ - கம்ப்யூட்டர் வகுப்புகளையோ தொடங்கலாமே!

ஜெயலலிதா மனதில் கருதியிருக்கும் அந்த வகுப்பாரே கூட இன்று அத்தகைய கல்லூரிகளுக்குத்தான் வருவார்களேயன்றி - வேதாகமக் கல்லூரிக்கா வந்து குவிவார்கள்?

கிறித்துவ சமயத்தார் படிப்பறிவு பரப்பும் பணிகளில் ஈடுபடுகிறார்கள். படித்தவர் தொகை கேரளத்தில் அதிகம் என்பதற்கு அந்தச் சமயத்தார் பணிக்கும் முக்கிய இடமுண்டு.

இராமகிருஷ்ண மடங்கள் கூட கல்விக் கூடங்களைத் திறம்பட நடத்துகின்றன.

ஆனால் ஜெயலலிதா செய்யும் காரியம், தமிழ்நாட்டு மக்களை பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வதற்காக அன்றி வேறென்ன?

பெரியார் அண்ணா கொள்கைகளைப் பரப்புவதாகச் சொல்லிக்கொண்டு, HINDU FUNDAMENTALISM என்கிற மதவாத சனாதனத்திற்குத் தமிழ் மக்களை அழைத்துச் செல்லும் மாயவலை விரிப்புத்தான் இது!

சுயமரியாதை இயக்க பூமியில் சனாதன விஷத்தைத் தூவி, தமிழ் நாட்டையும் ஒரு உத்திரப்பிரதேசமாக்க முனைந்திடும் செயலை, உத்திரப்பிரதேச முதல்வர் போன்றோர் பாராட்டலாம் - பெரியார் அண்ணா பாசறையில் வளர்ந்தோர் எப்படிப் பாராட்ட இயலும்?

ஒரு சோவியத் ஆராய்ச்சியாளர் கூற்று என்ன தெரியுமா?

கடந்த கால நினைவுகள் பிராமணர்களின் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் பிடித்து ஆட்டி, பாரதீய ஜனதா, விஸ்வ இந்து பரிட்சத் போன்ற இந்துமத வெறி அமைப்புகளில் கூட்டம் கூட்டமாகச் சேர வைத்திருக்கின்றன. அந்த இந்து அமைப்புகளுக்குக் கொள்கை வகுத்துக் கொடுப்பவர்கள் சாதியால் பிராமணர்கள் என்பது தற்செயலாக நடைபெற்ற விபத்தல்ல.

"It is the Brahmins" past memories which are haunting their children and grand children and making them flock to the Bharathiya Janata Party, the Vishwa Hindu Parishad and other Hindu chauvinistic organisations. It is not an accident that the ideologues of all such Hindu organisations were Brahmins by caste."

- இவ்வாறு சோவியத் ஆய்வாளர் டாக்டர் யெவ்ஜெனியா யுர்லோவா (Dr. Yevgenia Yurlova) - என்பார் கூறியுள்ளார். அது 12-10-91 மெயின் ஸ்ட்ரீம் (Mainstream) ஏட்டில் வெளிவந்திருக்கும் கட்டுரையில் காணப்படுகிறது.

அந்த சோவியத் ஆராய்ச்சியாளரின் கருத்தின் அடிப்படையில் பார்த்தால் - மதவாத சனாதன ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டிலும்

பரப்புவதற்கு இந்த ஆட்சியின் செயல்கள் துணை போவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு - மத வெறியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணங்கொண்டோர் சும்மா இருக்க முடியுமா? எதிர்த்துத்தானே ஆக வேண்டும்!

"தமிழகக் கோயில்கள், கலாச்சார கேந்திரங்கள் - அவற்றைக் காப்பாற்றவே ஆலய நிதி சேர்க்கிறேன்"

- என்கிறார் ஜெயலலிதா!

கலை, கலாச்சாரத்தை எப்படிப் பேணிப் பாதுகாக்கிறார்கள் என்பதற்கு சில நாட்களுக்கு முன்பு திருவாரூர் கோயிலில் பாதுகாப்பாக இருந்த தொன்மை வாய்ந்த கடவுள் சிலைகளுக்கு ஏற்பட்டுள்ள கதி என்ன என்பதே போதுமான சான்றல்லவா? இதைவிடக் கொடுமை வேறு என்ன இருக்க முடியும்? விலை மதிப்பில்லாத அந்தக் கலைக்கருவூலம் நாசமாகப் போயிருக்கிறதே! எவ்வளவு சேதம்? எவ்வளவு பாழ்! யாருமே மூச்சு விடவில்லையே! ஏன்?

ஆலயப் புனருத்தாரணமாம்! புதிதாகக் கண்டுபிடித்து விட்டார்களாம்!

அண்ணா காலத்தில் ஆலயங்கள் புதுப்பிக்கப்படவில்லையா?

அண்ணாவுக்குப் பிறகு எனது காலத்தில் மொத்தம் ஒன்பது ஆண்டுக் காலத்தில் ஆலயத் திருப்பணிகள், குடமுழுக்குகள் நடைபெறவில்லையா? தேர்கள் ஓடவில்லையா? தெப்பங்கள் மிதக்கவில்லையா?

ஏன், எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் ஆலயத் திருப்பணிகள் நின்றா போயின? இல்லையே!

எதையாவது சொல்ல வேண்டும் - எதையாவது கெடுத்து வைக்க வேண்டும் - என்று செயல்பட்டால் அதைத் தட்டிக் கேட்கவே கூடாதா?

மதுரை ஆலயத் திருப்பணிக் குழுவுக்கு திரு.பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் 75 பேர் - அதில் ஐந்து பேர்தான் தி.மு.க.வினர் - மற்றவர்கள் பொதுவானவர்கள் - கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட

குழு என்பதற்காக அந்தக் குழுவைக் கலைத்து விட்டதில் ஒரு மகிழ்ச்சியா?

ஆலயங்களை நிர்வகிக்க - அறப்பணிகள் நிறைவேற - அறங்காவல் துறை போதாதென்று கூறி, நீதிக்கட்சி காலத்தில் சட்டமியற்றப்பட்டுத் தோன்றிய அந்தத் துறையை ஒழித்துக் கட்ட, ஆலய வாரியம் - புதிய அமைப்பு - அதற்கு முதலமைச்சரே தலைவர்!

யாரை திருப்திப்படுத்த இந்த காரியங்கள்
நடைபெறுகின்றன?

எதையோ நினைத்துக்கொண்டு, எதையோ
செய்யப்போக - இறுதியாக அது,
மதவாத சனாதனத்திற்கு மடை திறந்த
கதையாகத்தான் முடியப் போகிறது!

இந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்துவது
நல்லதல்ல, நாட்டுக்கு!

அன்புடன்,

மு. க.

(20-10-1991)

1812. வேதக்கல்லூரி வேண்டவே வேண்டாம்!

உடன்பிறப்பே!

தந்தை பெரியார் மறைந்தபோது அரசு மரியாதையுடன் அவர் உடலை அடக்கம் செய்ய இயலாது என்றும், அவர் அரசுத் துறையில் எந்தப் பதவியிலும் இருந்தவர் அல்ல என்றும் அதிகாரவர்க்கத்தினர் என்னிடம் குறுக்கே நின்று வாதாடினர். அப்படியானால், காந்தியடிகளுக்கு அரசு மரியாதையுடன் எரியூட்டல் நடைபெற்றதே எப்படி? என்று கேட்டேன். இப்படியொரு கேள்வியை எதிர்பாராத அதிகாரிகள் திகைத்துப் போய் என்னிடம் பவ்யமாக அச்சுறுத்திப் பார்த்தனர். இதனால் டெல்லி கோபித்துக்கொண்டு ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாதே என்றுதான் அஞ்சுகிறோம் என்றனர். கழக ஆட்சியைக் கலைப்பதற்கு பெரியாருக்கு அரசு மரியாதையுடன் இறுதிக்கடன் நிறைவேற்றுவதுதான் ஒரு காரணம் ஆகும் எனில், அதற்காக எங்களைவிடப் பெருமை அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது என விடை அளித்துவிட்டு, தந்தை பெரியார் அவர்களின் உடலை அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று - அரசு மரியாதையுடன் அடக்கமும் செய்தோம்.

அந்தக் கால கட்டத்தில் பெரியார் அவர்களின் மறைவையொட்டி நான் கூறியதுதான், தந்தை பெரியாரின் நெஞ்சில் உள்ள முள்ளை அகற்றாமல் அவரைப் புதைத்திருக்கிறோம் என்ற கருத்தமைந்த வாசகமாகும்.

பெரியார் மறைவதற்கு முன்பு அவர் நடத்துவதாக அறிவித்திருந்த போராட்டம், அனைத்து சாதியினரும் ஆலயங்களில் அர்ச்சகராக வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக என்பதை நாடு நன்கறியும்.

ஏற்கனவே கழக ஆட்சியில், அதற்கெனக் கொண்டுவரப்பட்ட அர்ச்சகர் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் முடக்கப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டில் கழக அரசு கொண்டுவந்த அந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறி, அனைத்து வகுப்பினருக்கும் அந்த அர்ச்சனை செய்யும் உரிமை வரவேண்டுமானால், அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். கழக அரசு அதற்கென எடுத்த முயற்சிகளை அன்றிருந்த மத்திய அரசுகள் செயல்படுத்திட முன்வரவில்லை.

தேசிய முன்னணி அரசு ஆட்சிக் காலத்தில் அப்படி ஒரு அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வருகிற அளவுக்கு, அந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெறுகிற நிலைமையில் பெரும்பான்மை இல்லை.

பெரியாரின் நெஞ்சில் உள்ள முள் என்பதற்கு ஒரு சிறு விளக்கம் இப்போது தேவைப்படுவதாகவே நான் உணருகிறேன்.

அனைத்து சாதியினரும் ஆதி திராவிடர் உட்பட ஆலயங்களில் அர்ச்சனை செய்யும் உரிமையைப் பெற வேண்டும். ஆலயக் கருவறைக்குள் நுழையும் உரிமை வேண்டும், என்பது தான் பெரியாரின் போராட்டத்திற்கான கோரிக்கை!

அது நிறைவேற முடியாத நிலையில், அவர் காலமாகி விட்டதால்தான் கோரிக்கை நிறைவேறவில்லையே என்ற ஆதங்கம் அவர் நெஞ்சில் முள்ளாகக் குத்திக்கொண்டிருக்கிறது என நான் வேதனையுடன் அப்போது குறிப்பிட்டேன்.

> "அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை வேண்டும் என்பதுதான் பெரியாரின் கோரிக்கையே தவிர - அவர்களுக்கு வேதக் கல்லூரியில் இடஒதுக்கீடு வேண்டும் என்பது கோரிக்கை அல்ல!"

எனவே பெரியார் நெஞ்சில் உள்ள முள்ளை என்னால் எடுக்க முடியாமல் போனது போலவும் - இப்போது ஜெயலலிதா அந்த முள்ளை எடுத்து விட்டு வரலாறு படைத்துவிட்டார் என்பதைப் போலவும் - ஏடுகள் பல பெருந்தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது!

அரசு சார்புடைய எந்தக் கல்லூரியென்றாலும், அதில் 30 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், 18 சதவீதம் ஆதி திராவிடருக்கும், ஒரு சதவீதம் மலைவாழ் பழங்குடியினருக்கும், எஞ்சியுள்ள

31 சதவீதம் பொதுத் தொகுப்புக்கும் என 1989-ல் கழக ஆட்சியின்போது இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட இடஒதுக் கீட்டின்படி ஆதி திராவிடருக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் தந்தே ஆக வேண்டும்.

இதை ஜெயலலிதா அறிவிக்காவிட்டாலும் இதுதான் நடைமுறை! அரசு ஆணை!

என்னமோ ஜெயலலிதா ஆதி திராவிடர்களுக்கு வேதாகமக் கல்லூரியில் இடம் ஒதுக்கியதின் மூலம், வேதக் கல்லூரிக்கு தி.மு.க. காட்டிவரும் எதிர்ப்பை முறியடித்து விட்டதாக இந்து போன்ற ஏடுகள் எக்காளமிடக் கூடும்!

ஆனால் உண்மை என்ன? வேதக்கல்லூரியில் இடம்கிடைத்து, படித்து, பட்டம் பெற்றாலுங்கூட பார்ப்பனரல்லாத ஒரு மாணவனுக்கு அர்ச்சனை செய்யும் உரிமை உண்டா என்றால் இல்லை!

இதை நான் சொல்வதை விட எம்.ஜி.ஆர். காலத்தில் அமைக்கப்பட்ட தமிழ் நாட்டுக் கோயில் அர்ச்சகர் நியமன முறை பற்றி ஆராயும் வல்லுநர் குழுவின் தலைவர் ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அந்தக் குழுவின் அறிக்கையாக என்ன குறிப்பிடுகிறார் என்பதை அந்த அறிக்கையின் 48-ஆம் பக்கத்தில் படித்துணர்வது நல்லது. அது என்ன? இதோ அந்த விபரம்:-

தேவையான தகுதிகள் இருக்குமாயின், இந்துக்களில் எல்லாப் பிரிவினரையும் இந்துப் பொதுக் கோயில்களில் அர்ச்சகர் பதவியில் நியமிக்கலாம் என்ற இந்தக் குழுவின் பிரேரணை செல்லத்தக்கதென்று உச்சநீதி மன்றத்தார் ஏற்றுக் கொள்வார்கள் என்று எந்த அளவு உறுதியோடும் எதிர்பார்த்துச் சொல்ல முடியாது. ஆதலால் அறநிலையத் துறையினர்,

இந்தக் குழுவின் பிரேரணையை
உடனடியாகச் செயல்படுத்தத்
தொடங்குவது
ஆபத்தானது என்று
நான் நினைக்கிறேன்.

ஏனெனில், இந்துக்களில் எல்லாப் பிரிவினருக்கும் அர்ச்சகர் பதவியில் இடங்கொடுக்கலாம் என்பதை உச்சநீதி மன்றத்தார் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லி நிராகரித்து விடக்கூடும்.

ஆகவே, இந்தக் குழுவின் சிபாரிசுகளைச் செயலுக்குக் கொண்டு வருவதற்கு முன், அரசியல் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து கொள்வது பொருத்தமாயிருக்கும்.

அதாவது, குழுவின் சிபாரிசுகளை செயலுக்குக் கொண்டு வருவதற்கு முன், அரசியல் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்தால்தான் இந்துக்களில் எல்லாப் பிரிவினருக்கும் அர்ச்சகர் பதவியில் இடம் கொடுக்க முடியும் என நீதிபதி மகராஜன் குழு தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளது.

நீச்சல் கற்றுத் தருகிறேன். ஆனால், நீ தண்ணீரில் இறங்கவே கூடாது என்றால் - நீச்சல் கற்றிட எந்தப் பைத்தியக்காரனாவது முன்வருவானா?

அப்படித்தான் நீ என்னதான் வேதக் கல்லூரியில் படித்தாலும் அர்ச்சகராக முடியாது என்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு நெடுங்கதவாக நின்று தடுத்துக் கொண்டிருக்கிறதே!

வேதக் கல்லூரியே வேண்டாம் என்கிறோம். வேதத்தின் விகாரங்கள் விபரமாகத் தெரிந்த காரணத்தினால்!

அந்தக் கல்லூரியில் அரிஜனங்களுக்கும் இடம் தருகிறேன் என்றால், அது யாரை ஏமாற்ற?

அர்ச்சகராவதற்கு அந்தப் பதவிக்குரிய படிப்பு போதும் - கல்லூரி தேவையில்லை - இப்போதுள்ள அர்ச்சகர்கள் யாரும் அவ்விதம் கல்லூரிகளில் கற்றுத் தேர்ந்தவர்கள் அல்லர்.

போகட்டும்! அந்தக் கல்லூரியிலேயே பட்டம் பெறினும், அவன் பார்ப்பன மாணவன் இல்லையேல் அர்ச்சகராகும் உரிமை கிடையாது இப்போது!

கிடப்பது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மணையில் வை! என்பது போல பஸ் கட்டண உயர்வு, மின்கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்சினைகள் மக்களை வாட்டும் போது - இப்போதென்ன வேதக் கல்லூரி வேண்டிக் கிடக்கிறது!

மக்கள் பிரச்சினைகளை திசை திருப்ப மதவாத சனாதனத்தைப் பெரும் பூதமாக உருவெடுக்கச் செய்யும் உருப்படாத முயற்சியைத் தவிர, வேறென்ன?

உரிமை வேண்டும் எல்லா வகுப்பினரும் அர்ச்சகராகலாம் என்பதற்கு!

உயர்வு தாழ்வு கற்பிக்கும் வேதத்திற்கு கல்லூரி வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

வேதக் கல்லூரி வேண்டுமென்று பெரியார் தனது இறுதிப் பேருரையை தியாகராய நகரில் ஆற்றவில்லை!

உடன்பிறப்பே, நேற்றும் இன்றும் நான் எழுதியுள்ள கடிதங்களை மக்களிடம் எடுத்து விளக்க வேண்டியது உன் பணியாக இருக்கட்டும்.

அன்புடன்,

மு. க.

(22-10-1991)

1813. இவரை இப்போது மன்னித்து விடலாம்!

உடன்பிறப்பே!

எம்.ஜி.ஆர். மீது நூறு குற்றச்சாட்டுகளைக் கொண்டுபோய்க் கவர்னரிடம் கொடுக்க மாபெரும் (?) ஊர்வலம் நடத்திய ஒருவர் - புதிய கட்சியைத் தொடங்கி, தன்னை அண்ணாவைப் போல பாவித்து ஆள் உயர சுவரொட்டிகளை நாடு முழுதும் ஒட்டிக் களித்து - தேர்தலில் போட்டியிட்டு எல்லா இடங்களிலும் டெபாசிட்டைப் பறிகொடுத்து, பிறகு உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிட அன்பகத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தி இடஒதுக்கீடு ஒப்பந்தத்தில் கையெழுத்துமிட்டு விட்டு, இடங்கள் போதவில்லை என்று கடைசியாகக் கூறி, அந்த அணியிலிருந்தும் கழன்று கொண்டு - பின்னர் திண்டாடித் தெருவில் நின்று, எம்.ஜி.ஆரிடம் மன்னிப்பு கேட்டு அவரிடம் ஒட்டிக்கொண்டு - இறுதியாக ஜெயலலிதாவின் காலடியில் தூசாக இருந்தால் போதுமென்று வரம்பெற்று, தற்காலிகம் அமைச்சராக இருக்கும் ஒருவர் - மீண்டும் காவேரிப் பிரச்சினையை எழுப்பி - அந்தப் பிரச்சினையில் கருணாநிதிதான் துரோகம் செய்து விட்டார் என்று தினத்தந்தி பத்திரிகையில் கன்னாபின்னா என்று ஓர் உளறல் அறிக்கையை அளித்துள்ளார். தஞ்சையில் பிறந்த இவர்தான்; 1974-ஆம் ஆண்டுடன் காவேரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று பலமுறை அறிவித்து - அந்தப் பத்திரிகைக் குறிப்புகளுக்கு தி.மு.க. சார்பிலும், தி.மு.க. அரசின் சார்பிலும் மறுப்புகள் வழங்கப்பட்ட வரலாறு ஆதாரப்பூர்வமானவைகளாகும். ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்ற உண்மைக்கு மாறான வாதம் கர்நாடக அரசின் பிடிவாதமாக நீண்ட நாட்களாக இருந்து வரும்போது, அதே வரட்டு வாதத்தை இந்த தஞ்சை மாவட்டக்காரர் எடுத்து வைத்தது மட்டுமல்ல - கடந்த ஆண்டு இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்களைச் சந்திக்க

தமிழக அனைத்துக் கட்சியினர் டெல்லி சென்றபோது - திடீரென தி.மு.க.வுடன் வரமாட்டோம் என்று டெல்லி விமான நிலையத்தில் கூறிவிட்டு, காங்கிரசாரை அழைத்துக்கொண்டு வி.பி.சிங்கிடம் சென்று கொடுத்த மகஜரில்கூட காவேரி ஒப்பந்தம் 1974-ஆம் ஆண்டுடன் முடிந்துவிட்டது என்றே எழுதிக் கொடுத்தவர்களும் இதே அ.தி.மு.க.வினர்தான்!

காவேரிப் பிரச்சினையில் தமிழகத்தை எப்படிக் காட்டிக் கொடுத்துவிட்டீர்கள் என்று அந்த மகஜரை நான் சட்டப்பேரவையிலேயே படித்துக் காட்டியபோது, காங்கிரஸ் நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார், இப்படித் தவறாக மகஜர் எழுதியிருப்பது தெரியாமலே காங்கிரஸ் கையெழுத்துப் போட்டு விட்டது என்று!

காவேரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் வேண்டுமென்று அப்போது தொடரப்பட்ட வழக்கை வாபஸ் பெற்றது குறித்து - கீறல் விழுந்த பழைய கிராமபோன் தட்டினைப் போல அ.தி.மு.க.வினர் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். வழக்கு போடுவது குறித்து யோசிப்பதற்கும் அனைத்துக்கட்சிக் கூட்டம் கூட்டப்பெற்றது. வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டால் மாநிலங்களுக்கிடையே தலையிட்டுப் பேச வசதியாக இருக்கும் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சொன்னது குறித்தும் யோசிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பெற்று, அந்தக் கூட்டத்தில்தான் வழக்கு வாபஸ் பெறுவதற்கான முடிவும் எடுக்கப்பட்டது. வாபஸ் பெற்றாலுங்கூட, எப்போது வேண்டுமானாலும் அதே வழக்கை மீண்டும் தொடரலாம் என்ற நிபந்தனையுடன்தான் வாபஸ் பெறப்பட்டது. இந்த உண்மை தெரிந்திருந்தும் தனது உளறல் அறிக்கை மூலம் ஊரை ஏமாற்ற முனைகிறவர்களைப் பற்றி மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். பத்தாண்டு காலத்திற்கு மேல் ஆட்சி செலுத்தினாரே! அப்போது அந்த வழக்கை மீண்டும் அவர் தொடர்ந்திருக்கலாமே! இதற்கு இந்த அபத்த அறிக்கையாளரின் பதில் என்னவோ?

எம்.ஜி.ஆர். நடுவர் மன்றம் கேட்டபோது நானும், தி.மு.க.வும் அதை எதிர்த்ததாகவும் கூறி இந்த மனிதர், பொய்யிலே புழுத்த புழுவாக நெளிந்துள்ளார்!

சட்டப்பேரவையில் நான் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்தபோது - முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களே கூறியிருக்கிறார். காவேரிப் பிரச்சினையில் தி.மு.க. ஆட்சிக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் ஒரே விதமான அணுகுமுறைகள் என்று!

தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் முடிவுக்கு வரும் கட்டத்தில் - இங்கே தி.மு.க. அரசு அவசர அவசரமாக எடுத்த நடவடிக்கைகள் - பேரவையில் விரைந்து நிறைவேற்றிய தீர்மானம் - ஆட்சி வாயிலாக மத்திய அரசுக்கு அளித்த வற்புறுத்தல் - இவற்றின் காரணமாகத்தான் நடுவர் மன்றம் வந்தது என்பதை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த தஞ்சை விவசாயிகளே பாராட்டு விழா நடத்தி அறிவித்துக் கழக அரசுக்கு நன்றி கூறியதை - மந்தமதியினர் சிலர், மக்கள் மனதிலிருந்து மறைத்துவிட முடியாது!

தஞ்சை மாவட்டத்தில் ஏதோ காவேரி வழக்கிற்காக வசூல் நடந்ததாம் - அதற்குக் கணக்கு வழக்கு இல்லையாம்! அறிக்கைக்காரர் ஓர் அவதூறுக் குற்றச்சாட்டை அவிழ்த்து விட்டுள்ளார்! கட்டாய வசூல் நடத்தப்பட்டதாகவும் கதைக்கிறார்! இவருக்குப் பழக்கம், காயிதே மில்லத் மாவட்டப் பேரைச் சொல்லி - தஞ்சை மாவட்ட விவசாயிகளையும், வியாபாரிகளையும் கசக்கிப் பிழிந்து, வந்ததில் பாதியை வாயில் போட்டுக் கொண்டவர் அல்லவா? அதனால் பதவி நிலைக்குமா என்ற பயம் வந்து; அதைத் தக்க வைத்துக்கொள்ள இந்த அறிக்கை தாக்குதலை நடத்துகிறார்! தன்பழக்கம், பிறருக்கும் இருக்கும் என்ற நினைப்பு போலும்!

அவருடைய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளபடியே கர்நாடக மாநில ஜனதா தள தலைவர்கள் - பொம்மை, ஹெக்டே போன்றவர்கள், முதல்வர் வீரேந்திர பட்டீல் ஆகியோர் நடுவர் மன்றம் கூடாது என வி.பி.சிங்கிடம் வாதாடியும் கூட, அதையும் மீறி வி.பி.சிங் ஆட்சியில் நடுவர் மன்றம் அமைத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றால், கழக அரசு அதற்காக எவ்வளவு வலிவாக வாதாடியிருக்கிறது என்று சாதாரண அறிவு படைத்தவன் கூடப் புரிந்து கொள்வானல்லவா?

நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின்படி, தமிழகத்திற்குக் கர்நாடகம் தரவேண்டிய தண்ணீருக்காக

இப்போதுள்ள மத்திய காங்கிரஸ் அரசிடம் போர்க்குரல் கொடுத்து இங்குள்ள அரசு வற்புறுத்துவதை விட்டுவிட்டு, கர்நாடகத்தின் பக்கமே சாய்காலாக இருக்கிற மத்திய அரசுக்கு தனது ஆதரவை நாடாளுமன்றத்தில் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கும் தனது கையாலாகாத்தனத்தை மறைப்பதற்காக, கழகத்தின் மீதும், என் மீதும் துரோகக் குற்றம் சுமத்துகிறது!

அதிலும் குறிப்பாக, இந்த அறிக்கை விட்ட நபர் இருக்கிறாரே! அவர் துரோகத்தைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு - அவரே ஒருமுறை கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்துக் கொள்வது நல்லது!

அரசியல் படிக்கட்டுகளில் பலமுறை வழுக்கி விழுந்து எழுந்துள்ள இவர், தனது பதவியைப் பற்றிக்கொள்ள இந்த அறிக்கை விட்டுள்ளார் என்பதற்காக, பாவம் - இவரை இப்போது மன்னித்துவிடலாம்.

அன்புடன்,

மு. க.

(24-10-1991)

1814. விபூஷணர்களுக்கு விளங்குமா?

உடன்பிறப்பே!

தானே நேர்நின்று எதிர்ப்புச் சலசலப்பு காட்டினால் போதாதென்று பார்ப்பனியம், பார்ப்பனரல்லாத எட்டப்பர்களைப் பிடித்து நம் மீது பாயவிடுகிற காட்சியைப் பார்த்தாயா?

இன்று மட்டும் தானா அது? ஆரியர் திராவிடர் இடையே நடந்த போர்தான் இராமாயணம் என பண்டித நேரு அவர்களாலும், விவேகாநந்தராலும் சுட்டிக் காட்டப்பட்ட இராமர் காதையில் இராவணனின் தம்பியே இனத்தைக் காட்டிக் கொடுத்தான் என்பதைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிக் காட்டியிருக்கிறாரே!

“தென்திசையைப் பார்க்கின்றேன்
என் சொல்வேன் என்றேன்
சிந்தையெலாம் தோள் களெல்லாம்
பூரிக்குதடடா!
அன்றந்த லங்கையினை ஆண்ட
மறத்தமிழன்
ஐயிரண்டு திசை முகத்தும்தன் புகழை
வைத்தோன்!
குன்றெடுக்கும் நெடுந்தோளான்
கொடை கொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம்!
என் தமிழர் முதாதை!
என்தமிழர் பெரு மான்

இராவணன் காண்! அவன் நாமம்
இவ்வுலகம் அறியும்!
வஞ்சக விபூஷணனின் அண்ண
னென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு
மாபழிக்கே அஞ்சும் நெஞ்சகனை .....

எதற்கும் அஞ்சாத இணையற்ற வீரன்! ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டாத தீரன்! நால்வகைப் படைசூழினும், அவற்றைத் தன் கால் வலிமை ஒன்றினாலேயே போர்க்களத்தில் புழுதியாக்கும் சிங்கஏறு! அந்த அஞ்சா நெஞ்சன் எதற்கு அஞ்சுகிறான் என்று பாவேந்தர் பகருகிறார் கேட்டனையா?

வஞ்சக விபூஷணனின் அண்ணன் என்று
தன்னை வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே
அஞ்சுகின்றானாம்!

கவிஞர், தென் திசையைப் பார்க்கிறார்! சிந்தை மகிழ்கின்றார்! அவர்தம் தோள்கள் பூரிக்கின்றன! ஐயிரண்டு திசை முகத்தும் புகழ் பொறித்த அந்தக் குன்றெடுக்கும் நெடுந் தோளான், எப்போது குன்றிப் போகிறானாம்?

வஞ்சக விபூஷணனின் அண்ணன் என்று உலகத்தார்
சொல்லும் போது கூனிக் குறுகிப் போகிறானாம்!

அந்தத் தென்னிலங்கை வேந்தனைப்பற்றி - தென்னவன் காதை என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதை வரிகளில் சிலவற்றை இந்த நேரம் நினைத்துக் கொள்கிறேன்.

“குறுந்தாடி, குள்ளத்தாடி, நெடுந்தாடி, வெள்ளைத்தாடி,
இப்படிப் பல தாடியுடனே ....
புராண அங்காடி விரித்துப் புளிக்கும்
பழங்காடி சுவைத்துப்
போதை யேறிக் கூத்தாடும் பூசுரர்கள் கூட்டம்
மாசு, மரு அற்றிருந்த மண்டி லத்தின் ஓரம்
மாடுகளை, ஆடுகளை, மனிதர்களை வெட்டிப் பிண
மேடுகளை வேள்விக் கெனக்குவித்து வந்த வேளை”

இந்த வரிகள் காலத்தைக் குறிக்கின்றன! அந்தக் காலத்தில் இந்த ஆரிய முறை வேள்விகளை எதிர்த்து இராவணன் எழுகிறான். அவன் கோலோச்சிய பூமி குறிப்பிடப்படுகிறது -

"கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு
கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ்
மண்ணுக்குள் புகழ் தந்த பெருவீரன்
உருவில் சிங்கம், உள்ளத் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லை என வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான் - மலைத் தமிழன்!

இராமன் இலங்கையின் மீது படைகொண்டு வருகிறான். அப்போது இராவணன், தன் தம்பி விபூஷணனைப் போருக்குப் புறப்படச் சொல்கிறான். ஆனால் நடந்தது என்ன?

கடல் அலை மேல் எதிரிகளின் படைகள் வரக்கண்டு
உடன்பிறப்பே! விபூஷணா! உடன் கிளம்பு! என்றான்.
படைமடுக்கும் பாம்போடு விளையாட வேண்டாம்
கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிடுவாய்; அண்ணா
உடன் சென்று சரணடைவோம் வந்திடுக! என்றே மதுக்
குடங்காட்டும் ஆரியர்க்குப் புகழ்பாடி நின்றான் - தம்பி
குரங்காட்டம் கண்டுவிட்ட தென்னவனும் - கண்கள்
குளம் காட்ட குலங்கெடுக்க வந்தவனே!
கோடரியின் பிடியே! கொடிய உன் நாக்கை
அறுத்தெறியாமல் இருந்ததற்கு நன்றி சொல்லி
நடந்திடுக என நடந்தான் களம் நோக்கி ....!

உடன்பிறப்பே, நமது இனத்தில் விபூஷணர்களைக் காணும்போதெல்லாம் பாவேந்தரின் பாடலும் - அதன் தாக்கத்தால் நான் எழுதிய தென்னவன் காதையும் நினைவுக்கு வந்து என் இதயத்தைக் கனக்கச் செய்து விடுகிறது வாடிக்கை!

ஆரியராவது, திராவிடராவது - பார்ப்பனராவது, பார்ப்பனரல்லாதவராவது என்று அவாள் வாதிட்டால்கூட நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது! இவாளைத் தூண்டி விட்டல்லவா வாதிடச் செய்கிறார்கள்! இராமாயண காலத்திலிருந்து

இந்தக் காலம் வரையில் விபூஷணர்களும், சுக்ரீவர்களும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள் - வாணிபப் பொருளாக ஆகிக்கொண்டுதானிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுகள் தேவையா என்ன?

தி.மு.கழகத்திற்கு வாக்களிக்கக் கூடாது - அந்தக் கழகம் மண்டல் கமிஷன் பரிந்துரையை வலியுறுத்தும் கட்சி. எனவே, பிராமண சமூகத்தினர் ஒன்றுபட்டு நின்று தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என்று ஏடுகளில் விளம்பர அறிக்கை வெளியிட்டார்களே 1989 தேர்தலின்போது - இப்போது தினமணிக்குக் கிடைத்த விபூஷணர், அப்போது எங்கே போயிருந்தார்? ஆகா! தமிழ்நாட்டில் நூற்றுக்கு மூன்று பேராக இருக்கிற பிராமண சமூகத்தினராகிய நீங்கள் சாதியின் பெயரால் இப்படி அறிக்கை விடுவது நியாயமா? பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்சினையை நீங்களே எழுப்பலாமா? என்று கேட்க வாயிழந்து போனாரா? அப்போது இந்த விபூஷணரின் எதிர்பார்ப்பு வேறு! தி.மு.க. ஆட்சிக்கு வரும் - வந்தால் ஏதாவது வசதியான பதவி கிடைக்கும் என்று எண்ணிக் கிடந்த காலம் - ஆட்சிக்கு வந்த தி.மு.க., இந்த விபூஷணரை அப்போதே அடையாளம் கண்டு கொண்டிருந்ததால் எதுவும் அளிக்கவில்லை! காலம் பார்த்திருந்து இப்போது காய்ந்து விழுகிறார்.

பிராமணியம் பார்ப்பனரல்லாதாரிடமும் இருக்கிறது என்று அண்ணா சொன்னதை நினைவூட்டுகிறார்.

ஆம், இவர் ஒருவரே போதுமே சான்றுக்கு! அண்ணா சொன்னதை மெய்ப்பிக்கும் மனிதராக இவரே காட்சி தருகிறாரே!

1949ல் காரைக்குடியில் பெரியார் ஒரு கூட்டத்தில் சொன்னாராம். இதோ இருக்கிற இந்த சிவன் கோயிலுக்குள் எவன் ஒருவன் கர்ப்பக்கிருகம் வரை சென்று சாமியைத் தொடுகிறானோ, அவன் ஆரியக் கோட்பாட்டைக் காப்பாற்றும் மனிதனாக இருக்கிறான். ஓர் எல்லை வந்ததுமே வெளியே தயங்கி நிற்பவன் திராவிடன் என்று!

ஆரியர் யார்? திராவிடர் யார்? என அடையாளம் காட்ட முடியுமா? என ஒருவர் கூட்டத்தில் கேட்ட கேள்விக்கு பெரியார் அளித்த பதிலாம் இது! தினமணிக் கட்டுரையாளர் எழுதியுள்ளார்.

சரி! இந்த நிகழ்ச்சி உண்மையாகவே இருக்கட்டும் - காரைக்குடியில் பெரியார் பேசி 42 ஆண்டுகளுக்குப் பிறகும், பெரிய கோயில்களில் அதுதானே நிலைமை! மாறிவிட்டதா? எல்லோரும் கர்ப்பக்கிரகம் வரை செல்லலாம் - உள்ளேயிருக்கும் சாமியைப் பூஜை செய்யலாம் - அனைத்து சாதியினர்க்கும் அர்ச்சகராகும் உரிமை உண்டு - தமிழ் அர்ச்சனையும் சாமிக்குப் புரியும் என்கிற அளவுக்கு நிலைமை மாறிவிட்டதா?

மாறாததற்கு எது காரணம்? பார்ப்பனியம் காரணம்! பார்ப்பனியம் எதிலிருந்து வருகிறது? பார்ப்பனர் சமூகத்திலிருந்து வருகிறது!

பார்ப்பனர் இல்லங்களில்தான் தூய தமிழ் பேசப்படுகிறதாம். தினமணியாருக்குக் கிடைத்த விபூஷணர் இவ்வாறு கதைக்கிறார். ஆமாம்! ஜலம் - தூத்தம் - திவ்யம் - நமஸ்காரம் - எல்லாம் தூய (?) தமிழ்ச்சொற்கள்தான்! அம்மான் சேய்தான் அம்மாஞ்சி ஆயிற்று என்கிறார். அகமுடையான் என்பதுதான் ஆம்படையான் ஆயிற்று என்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? நல்ல தமிழை அவர்கள் சிதைக்கிறார்கள் என்றுதானே தெரிகிறது! அத்தை அன்பர் என்பதுதான் அத்திம்பேர் ஆயிற்று என்கிறார். விபூஷணருக்கு குழப்பம்! அக்காளின் கணவனைத்தான் அத்திம்பேர் என அழைப்பார்கள். அத்தையின் அன்பர் என்று அசிங்கமாக அழைக்கமாட்டார்கள். அத்தைக்கு ஒரு கணவர் இருப்பாரேயல்லாமல், அன்பர் ஒருவர் இருந்தால் குடும்பத்தில் குமுறல் வராதா? தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் என்பார் நகைச்சுவைக்கு உதாரணங்கள் காட்டும்போது பார்ப்பனர் பேசும் தமிழையும் காட்டியுள்ளார் என்பதைத் தினமணியின் விபூஷணர் அறியமாட்டார் போலும்.

திருந்திக்கொள்ள வேண்டியவர்கள் யார் என்பது, இன்னும் விபூஷணர்களுக்கு விளங்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

நடப்பது பிராமணாள் ஆட்சி என்றும், நமக்குரியச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் - தமிழ்நாடு பிராமணர் சங்கம் பகிரங்க அறிக்கை விடுத்ததே - அது துவேஷ உணர்வைக் கிளப்புகிற செயல் என்று விலைபோயுள்ள விபூஷணர்களுக்கு தெரியாமல் போனது ஏன்?

நான் பாப்பாத்தி! என்னை யாரும் அசைக்க முடியாது! என்று சட்டப்பேரவை நடுவே அறைகூவல் விட்டுப் பேசியது, ஏடுகளில் அன்றே வெளிவந்ததே - அப்போது எந்த விபூஷணரும் இந்த வித்தாரம் பேசிட வரவில்லையே ஏன்?

வேதக் கல்லூரி - ஆலய நிதி - ஆலய வாரியம் இவைகள் எல்லாம் மதவாத சனாதனத்திற்குத் தமிழகத்தை இழுத்துச் சென்று உத்திர பிரதேசத்தைப்போல உபத்திரவத்துக்கு வழி வகுக்கும் என்பதை அறிவுரை கூற முன்வந்துள்ள விபூஷண ஆழ்வார்கள் உணர்ந்து கொள்ள வேண்டாமா?

அன்புடன்,

மு. க.

(25-10-1991)

1815. விழி! எழு! வெற்றி கொள்!

உடன்பிறப்பே!

அசிங்கப்படுத்தி அழித்து விடலாம் - மிரட்டி ஒடுக்கி விடலாம் - பழி வாங்கிப் பணிய வைத்து விடலாம் - சிறையில் பூட்டிச் சிதைத்து விடலாம் - சித்ரவதை செய்து சீரழித்து விடலாம் - வழக்குப் போட்டு வளைத்து விடலாம் - இப்படிப் பலவகை அச்சுறுத்தல் கணைகளை நீண்ட நெடுங்காலமாகவே தி.மு.கழகம் எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்கிறது என்பதை உலகமே அறியும்!

வானொலியைத் திறந்தால் - பத்திரிகையைப் புரட்டினால் - கழகத்தைப் பற்றிய அவதூறுகள், வழக்குகள், நாள்தோறும் செய்திகளாக வந்து கொண்டிருந்த எமர்ஜென்சி காலத்தையே சந்தித்ததுதான் இந்தக் கழகம்!

சிறைச் சாலைக்குள் பனிக்கட்டியில் படுக்க வைத்து கழகச் செயல்வீரர்களைப் பயமுறுத்தி, போலீசார் சொல்லும் பொய்ப் புகாரில் கையெழுத்துப் போடுமாறு நெருக்கினர். அந்த வீரர்கள் அசைந்து கொடுக்கவில்லை. நெட்டித் தள்ளினர். முட்டிக்கு முட்டிஅடித்தனர். சிறையில் எத்தகையக் கொடுமைகள் இழைக்கப்பட்டன என்ற விபரங்கள் அனைத்தும், பின்னர் நியமிக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் மூலம் வெளிப்படுத்தப்பட்டன! அந்தப் பழி வாங்கும் பாதகர்கள் சிலரை இயற்கையே தண்டித்து விட்டது. வேறு சிலரைப் பின்னர் வந்த அரசு தண்டித்தது.

நீதிபதி இஸ்மாயில் தலைமையில் கமிஷன் ஒன்று வரப்போகிறது - தன்னைக் கொடுமைப்படுத்தும் அதிகாரிக்கு அதன் வாயிலாகத் தண்டனை கிடைக்கப் போகிறது என்று தெரியாமலே - கழக மாவீரன், சிறைக் கொடுமைகளை, தாக்குதல்களைச் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டான். அப்படி ஒரு கமிஷனை எதிர்பார்க்காமலே அதிகாரிகளும்

தங்கள் இஷ்டத்துக்கும் வெறியாட்டம் போட்டனர்! விளைவை அனுபவித்தனர்!

கழக முன்னணியினர் நூற்றுக்கணக்கானோர், காராக் கிரகத்தில்!

அ°தன்னியில் என் காரை ஓட்டுகிறவர்கள் அடுக்கடுக்காக கைது! மிசா சிறை!

என் காரில் எனக்குத் துணையாக வரும் கழகச் செயல் வீரர் - அன்று மாலையே கைது! மிசாவில் தள்ளப்படுதல்!

என்னை ஒரு திருமணத்துக்கு அழைத்தால் அப்படி அழைத்தவர், திருமணம் முடிந்த மறுநாளே கைது! மிசா சிறை!

வெளியூர் செல்லும்போது எனக்கு வீட்டில் சாப்பாடு போட்டதற்காகப் பலர் கைது! மிசா பட்டத்துடன்!

என் வீடுகள், முரசொலி அலுவலகம், நண்பர்களின் இல்லங்கள் - விடிய விடியப் போலீஸ் சோதனை!

இத்தனையும் எமர்ஜென்சி காலத்தில் தாங்கிக் கொண்ட இந்தக் கழகத்துக்கு, மீண்டும் சோதனை! பழிவாங்கும் படலங்கள்! தொடரத் தொடங்கி விட்டதைக் காண்கிறேன்!

உடன்பிறப்பே, உன் போன்றோர் துணையுடன் அவற்றை எதிர்த்து நிற்கும் மனப்பக்குவம் எனக்கும் உண்டு! இந்தக் கழகத்திற்கும் உண்டு!

ஆணவ உணர்வுகள், தங்களின் ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள நமது கழகத்தின் மீது கடுமையாக மோதிக்கொள்ள முடிவு கட்டியிருப்பதை நான் உணராதவன் அல்ல!

சில்லறைச் சேட்டைகளால் - கழகத்திற்குச் சேதம் விளைத்து விடலாம் எனச் சிந்திப்போர், கழகம் கடந்து வந்துள்ள கல்லும், முள்ளும் நிறைந்த கடினமான பாதையை மறந்து விடக் கூடாது!

உண்மைக் குற்றவாளிகள், அகப்பட்ட அடுத்த கணம் விடுபடுகின்றனர்!

நிரபராதிகள் சிக்க வைக்கப்படுகின்றனர்!

இது என்ன நீதியோ? நியாயமோ? தெரியவில்லை!

காலம் கட்டாயம் தீர்ப்பு வழங்கும்!

களங்கப்படுத்தி இந்த இயக்கத்தைக் கலனாக்கி விடலாம் எனக் கருதியோர், தங்களைத் தாங்களே பெருங் கவலைக்கு உள்ளாக்கிக் கொண்டதை சரித்திரம் எழுதாமல் விட்டு விடவில்லை!

எனவே, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பழி வாங்கும் காரியங்கள் நமது பணிக்கு ஒருக்காலும் தொய்வை ஏற்படுத்தி விடாது!

“ஆறிலும் சாவுதான்

நூறிலும் சாவுதான்

ஆனது ஆகட்டுமே!”

என்று நெஞ்சை நிமிர்த்தி, இந்த இயக்கத்தில் இளமைக் காலத்தில் என்னை இணைத்துக் கொண்டவன்தான் நான்! என்னைப் போலவே ஆயிரம் ஆயிரம் பேர்! அந்த ஆயிரவரிடம் பயிற்சி பெற்ற இலட்சக்கணக்கான இலட்சிய உடன்பிறப்புகள்!

எனினும் உடன்பிறப்பே, நாம் தோல்வி கண்டுவிட்ட காரணத்தால் தூங்கும் புலி இது என இடருவர்!

எதையும் தாங்கும் இதயம், நமது அண்ணன் நமக்கு அளித்தது! இதை மறவாமல் விழி! எழு! வெற்றி கொள்! உனக்காக என்னையே இழக்க நான் என்றும் தயாராக இருக்கிறேன்!

அன்புடன்,

மு. க.

(26-10-1991)

1816. அக்டோபர் 28ம் நவம்பர் முதல் நாளும்!

உடன்பிறப்பே!

தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.கழகம், ஜனதா தளம் ஆகிய கட்சிகளும், தேசிய முன்னணிக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளும் கொண்ட தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பின் கூட்டம் அக்டோபர் 25 அன்று மாலை, சென்னை அண்ணா அறிவாலயம் தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்று சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாளேடுகள் வழக்கம்போல் இந்தச் செய்தியை மறைத்தும் - திரித்தும் - குறைத்தும் - ஓரங்கட்டியும் தங்களின் குணவிசேஷங்களைக் காட்டியுள்ளன.

எனவே நமது கழக அமைப்புகளும், தோழமைக் கட்சிகளின் அமைப்புகளும் உடனடியாகச் செயல்படுவதற்கு இக்கடிதம் தேவைப்படுமென்றும், பயன்படுமென்றும் கருதி இதனை எழுதுகிறேன்.

முதல் தீர்மானம் அக்டோபர் 28-ந் தேதியன்று நடத்த இருக்கும் தொடர் ஆர்ப்பாட்டம் பற்றியதாகும். வடமாநிலங்களிலும் - குறிப்பாகத் தமிழகத்தில் தொழிலாளர் பிரச்சினைகள் உருவாகிற நேரத்திலும் தர்ணா என்ற சொல் புழக்கத்திற்கு வருவதாகும். நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரக்கணக்கில் ஒரு குறிப்பிட்ட அலுவலகத்திற்கு முன் இடையூறின்றி அமர்ந்து காலை முதல் மாலை வரையில் தொடர் ஆர்ப்பாட்டம் நடத்துவது ஒரு அமைதியான போராட்ட முறையாகும். இது மறியல் போராட்டமும் அல்ல! உண்ணாவிரதப் போராட்டமும் அல்ல! காலையில் இந்தத் தொடர் ஆர்ப்பாட்டத்தைக் கட்சித் தலைவர்கள் தொடங்கி வைப்பார்கள். மாலையில் கட்சித் தலைவர்கள் முடித்து

வைப்பார்கள். இடையிலும் தொடர் ஆர்ப்பாட்டத்திற்கான காரணங்களைப் பொதுமக்களுக்கு வழங்கும் வாய்ப்பு உண்டு.

அக்டோபர் 28 - இந்தத் தொடர் ஆர்ப்பாட்டம் ஏன்? என்பதைத் தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது!

மதவாத சனாதனத்தை (Hindu Fundamendalism) நாட்டில் ஒரு விஷ வெள்ளமாகப் பாய விடுகிற செயலில் ஈடுபட்டுள்ள பாரதீய ஜனதா, இந்து முன்னணி, விசுவ இந்து பரிட்சத் போன்ற இயக்கங்கள் அயோத்திப் பிரச்சினையை மீண்டும் கிளப்பியுள்ளன. தேர்தல் நேரத்துக்கு அவர்களுக்குத் தேவைப்படுகிற இராமனை முன் நிறுத்தி - இப்போது அவர்களுக்கு உ.பி.யில் வசதியாக அமைந்துவிட்ட அரசையும் பயன்படுத்திக் கொண்டு, பாபர் மசூதி மீது கை வைக்கத் துணிந்துவிட்ட அவர்களது அடாவடித்தனம் தடுத்து நிறுத்தப்படா விட்டால் - இந்திய நாடு ஒரு காட்டுமிராண்டிக் காலத்துக்கு விரட்டப்படுகிறது என்ற குற்றத்திலிருந்து பொறுப்பில் இருப்போர் தப்ப முடியாது.

ஏதோ ஒரு வழியில் மதபேத மோதுதல்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான், பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டுக்காரர்கள் கூட, இந்தியாவில் பம்பாய்க்கோ, சென்னைக்கோ வருதல் கூடாது என அந்த மதவாத இயக்கத்தினர் அறிக்கைகள் விடுத்துள்ளனர். பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே நல்லுறவு காண வேண்டுமென்ற முயற்சிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, பாகிஸ்தானின் விளையாட்டு வீரர்கள் யாரும் இந்தியாவுக்கு வரக்கூடாது என இந்திய அரசு தடை ஏதும் விதிக்காத நிலையில் - இங்குள்ள மதவெறி இயக்கங்கள், இதுபோன்ற அறிக்கைகள் மூலம் இந்தியாவுக்குள் சகோதர உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கிடையே கசப்பு உணர்வையும், காழ்ப்பு உணர்ச்சியையும் -அதன் காரணமாக மதக் கலவரங்களையும் உருவாக்குகிற சதியில் ஈடுபடுகின்றன என்றே வெளிப்படையாகக் கூறவேண்டியுள்ளது.

மதச் சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்கிற ஒரு நாட்டில் - மத வெறியைக் கிளப்புகிற இத்தகைய தீச்செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு, மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் நிச்சயமாக உண்டு!

ஆனால் மாநில அரசுகள் இவற்றை வேடிக்கை பார்ப்பது மட்டுமல்ல! மறைமுகமாகவும் - நேரடியாகவும் உசுப்பியும் விடுகின்றன!

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் டெல்லியில் பிரதமரிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும்கூட - அயோத்திப் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு காட்டும் அலட்சியப் போக்கு நாட்டை எங்கு கொண்டு போய்விடுமோ? என்ற கவலையைப் பெருக்குவதாகவே உள்ளது.

எனவேதான், மத்திய அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையில் திடமானதொரு நடவடிக்கை எடுத்திட வேண்டுமென வலியுறுத்திட, சென்னையில் அக்டோபர் 28 காலை முதல் மாலை வரையில் தென்னக ரெயில்வே சென்ட்ரல் அலுவலகம் எதிரில் தொடர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட இருக்கிறது. தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பின் செயல்வீரர்களும், பொது மக்களும் கலந்துகொண்டு நமது உணர்வினை அமைதியான முறையில் காட்டிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதனையடுத்து நவம்பர் முதல் நாள் தமிழக முழுதும் - மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் உள்ள மாநில அரசு அலுவலகங்களின் முன்னால், தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்புக் கட்சிகளின் சார்பில் அறவழி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேருந்துக் கட்டணங்களை மிகத்தாறுமாறாக உயர்த்தி ஏழை, எளிய, சாமானிய மக்கள், நடுத்தர மக்கள் மீது பெரும் சுமையை ஏற்றி வைத்துள்ளது இந்த அரசு! ஏற்கனவே விலைவாசிகள் பயங்கரமாக ஏறி உச்சாணிக் கொம்பில் இருக்கின்றன! நூறு நாட்களில் விலையைக் குறைப்போம் - இது ராஜீவ் காந்தியின் வாக்குறுதி என்று தேர்தல் நேரத்தில் பசப்பியவர்கள், இன்று ராஜீவ் காந்திக்கு புனித நீராட்டு நடத்திவிட்டு - ராஜீவின் வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம் என்கிறார்கள்! முன்பு இருந்த விலைவாசியை மூன்று நான்கு மடங்காக உயர்த்தியுள்ளீர்களே! இதுதான் ராஜீவ் வழங்கிய வாக்குறுதியா? என்று கேட்டால் - பத்திரிகை விளம்பரங்களில் வரும் பளபளப்புப் படங்களைப் பார்த்து பரவசப்படு எனப் பதில் அளிக்கிறார்கள்!

பணம் படைத்த ஆம்னி பஸ் அதிபர்களுக்கு மூன்று மாதத்திற்கு இருக்கையொன்றுக்கு இரண்டாயிர ரூபாய் வரி என

ஆணையிட்டது கழக அரசு! அதிபர்கள் நீதிமன்றம் சென்றார்கள்! நீதிமன்றம் ஆயிரத்து ஐநூறு கட்டுக என அறிவித்தது! ஆனால் அ.தி.மு.க. ஏழைப் பங்காளர்களோ, அந்த ஆயிரத்து ஐநூறை வெறும் ஐநூறு ரூபாய் வரியாக மாற்றி, அதையும் முன்தேதியிட்டு ஆணை பிறப்பித்து - ஏற்கனவே அரசு வாங்கியிருந்த தொகையையும் அதிபர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள்.

அதில் கோடிக்கணக்கில் இழப்பை ஏற்றுக் கொண்டு - அது போன்ற இழப்புகளை சரிக்கட்ட பொதுமக்கள் தலையில் கை வைப்பது என்ன நியாயம்?

பஸ் கட்டண உயர்வை ரத்து செய்க என மக்களில் பெரும் பகுதியினரும் - மாணவர்களும் அமைதி வழியில்தான் கிளர்ச்சியில் இறங்கினர்.

எந்தப் பிரச்சினையிலும் - வேண்டுகோள் என்பது ஒரு கட்டம்! முதல் கட்டம்!

நேரடி முறையீடு என்பது மற்றொரு கட்டம்!

போராட்ட அறிவிப்பு என இன்னொரு கட்டம்! அதுவே கடைசி கட்டம்!

முடிந்துபோன இத்தனை கட்டங்களையும் அரசு அலட்சியப் படுத்திவிட்டது! எனவே தங்களின் கண்டனத்தையும், எதிர்ப்பையும் காட்டிக் கொள்ள பொது மக்களும் - மாணவர்களும் களத்தில் குதித்து விட்டனர் - அவர்களைத் தடி கொண்டு தாக்கியும், ஆயிரக் கணக்கானவர்களைச் சிறையில் அடைத்தும், தாக்குண்ட மாணவர்களுக்காக அனுதாபம் தெரிவித்து மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், அவர்கள் மீது அடக்கு முறைகளை, மிரட்டல்களை ஏவியும், அ.தி.மு.க. ஆட்சியினர் கொடுங்கோல் நடத்தும் இந்த ஆணவத்தை - வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க இனியும் இயலாது என்பதினால்தான் - தேசிய முன்னணியும் இடதுசாரிக் கட்சிகளும் முதல் கட்டப் போராட்டமாக மாநில முழுதும் நவம்பர் முதல் நாள் அமைதி வழி ஆர்ப்பாட்டக் களத்தில் இறங்கியுள்ளன.

உடன்பிறப்பே, உண்மை உழைப்புக்கும் - தியாகத்துக்கும் - நீதிக்கும் நேர்மைக்கும் - நிர்வாகத் திறனுக்கும் - நிதானப் போக்கிற்கும் - ஆதரவு தந்திருக்க வேண்டிய தமிழ் மக்கள்,

அரசியல் மோசடிக்காரர்கள் சுமத்திய வீண்பழியை நம்பி, தவறிப் போய்த் தடம் மாறி தவறுக்கு மேல் தவறு செய்து விட்டார்கள். எனவே, தமது தவறை அவர்களே உணரட்டுமே என இந்த நெஞ்சம் எண்ணியது கூட உண்டு!

ஆனால் இன்று, அந்த மக்கள் படும் வேதனை - ஏற்றிடும் அல்லல் - தாங்கிடும் அடி உதை - இவற்றினை எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

அதன் காரணமாகத்தான் தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே சென்னையில், அக்டோபர் 28ஆம் நாள் மதவெறிக்கு எதிரான தொடர் ஆர்ப்பாட்டம் வெற்றி பெறவும் - அமைதியாக நிறைவேறவும் - அம்மைதே போல் நவம்பர் முதல் நாள் தமிழ்நாட்டில் மாவட்ட, வட்டத் தலைநகர்களில் உள்ள மாநில அரசு அலுவலகங்களின் முன்னால்,

* பஸ் கட்டண உயர்வை ரத்து செய்க!
* பஸ் கட்டண உயர்வுக் கண்டனப் போராட்டத்தில் கைதானவர்களை விடுதலை செய்க!
* மாணவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறுக!

எனும் கருத்தமைந்த முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டங்கள் எழுச்சி மயமாக விளங்கிடவும் - அறவழியில் நடைபெறவும் கிளர்ந்தெழுக! என வேண்டுகிறேன். இடையில் நாட்கள் குறைவாகவே உள்ளன. எனினும் கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் அக்டோபர் 28 ஒரு நாள் சென்னையில் தொடர் ஆர்ப்பாட்டமும், நவம்பர் முதல் நாள் மாநில முழுதும் பஸ் கட்டண உயர்வு கண்டன ஆர்ப்பாட்டமும் எழுச்சிமயமாகும் வண்ணம் தமது செயல்திறன் காட்டிடுவர் என நம்புகிறேன்.

அன்புடன்,

மு. க.

(27-10-1991)

1817. மதவாத சனாதன ஆபத்தைத் தடுப்போம்!

உடன்பிறப்பே!

மதச் சார்பற்ற நிலைக்கு மாறாக இந்தியத் திருநாட்டை இந்துக்களின் ராஜ்யமாக - அதுவும், இந்து மத சனாதனவாதிகளின் ராஜ்யமாக ஆக்கிட வேண்டுமென்ற பிற்போக்குத்தனமும், ஆதிக்கச் சக்திகளின் ஆர்ப்பாட்டமும் மிரட்டி வரும் இந்தக் காலகட்டத்தை எதிர்த்துப் புறங்காணுமாறு செய்ய வேண்டிய கடமை உணர்வு, மனித நேய மனப்பான்மையும், முற்போக்குச் சிந்தனையுமுள்ள எல்லா இயக்கங்களுக்கும் இப்போது தேவை.

அதனால்தான் அரசியல் ஆதாயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவோம் என்று பாரதீய ஜனதா கட்சியினரும், விசுவ இந்து பரிட்சத் போன்ற மதவெறி இயக்கங்களும் ஆர்ப்பரிக்கின்றன.

இராமர் கோயிலை அயோத்தியில் மட்டுமல்ல, அசோகவனத்தில் கூட கட்டிவிட்டுப் போகட்டும்! அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

ஏற்கனவே அங்கு நானூறு ஆண்டுக்காலமாக இருக்கின்ற பாபர் மசூதியை அகற்றிவிட்டு அல்லது இடித்துவிட்டுத்தான் இராமருக்கு ஆலயம் எழுப்புவோம் என்றால், அதனால் ஏற்படும் கொந்தளிப்பு எவ்வளவு பயங்கரமான புயலாக உருவெடுக்கும் என்பது கூடவா தெரியாமல் போய்விடும்.

இந்த நாட்டில் ஐம்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒட்டிய வயிறும், உலர்ந்து வெடித்திடும் உதடுகளும் கொண்டோராய், நடமாடும் கோயில்கள் என்ற நாகரிகப் பெயருடன் நாளும் நலிந்து மெலிந்து நாசமாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வில் நம்பிக்கையூட்டும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுவதற்கான வழிவகைகளைக் காண்பதில் காலத்தின் பெரும்பகுதியைச் செலவிடுவோம். எஞ்சியிருக்கும் நேரத்தில்

இராமர் கோயில் கட்ட முனைவோம் என்கிற பெரும் உள்ளம் கிடையாது என்பது மட்டுமல்ல. முழு நேரத்தையும் இராமர் கோயில் பிரச்சினைக்கே ஒதுக்குவோம் எனச் சூளுரைத்து, அப்படிக் கோயில் கட்டும் இடத்தையும் குருக்ஷேத்திரமாக ஆக்குவோம்; எனும் வல்லடி வம்புக்குத் தாம்பூலம் வைப்பவர்களை என்ன சொல்லி வர்ணிப்பது?

அயோத்தி இராமர் கோயில் - பாபர் மசூதி பிரச்சினை என்பது; இந்துக்கள் - முஸ்லிம்கள் என இருவகுப்பாருக்கிடையே எழும் பிரச்சினையாக மட்டும் இருந்துவிடவில்லை. நாட்டின் அரசியல் சட்டத்தைப் பேணிப் பராமரிப்பதிலும், மதச் சார்பின்மையைப் பாதுகாப்பதிலும், அக்கறையுள்ள சக்திகளுக்கும், இந்த நாட்டில் மதச் சார்புள்ள அரசை நிலை நாட்டுவதில் ஆர்வமும், அக்கறையுமுள்ள சக்திகளுக்கும் இடையிலான பெரும் பிரச்சினையாகி விட்டிருக்கிறது என்பதை தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளதை இன்றுள்ள மத்திய காங்கிரஸ் அரசு, அலட்சியப்படுத்தி விடக்கூடாது. எனவே தான் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தின் அவசரக் கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டுமென்றும் கடந்த 26-ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளின் தொடர் ஆர்ப்பாட்டத்தில் (தர்ணா) வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

டெல்லி தொடர் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து இந்தியா முழுதுமுள்ள மாநிலத் தலைநகரங்களில் அக்டோபர் 28-ஆம் நாளன்று தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

மத்திய காங்கிரஸ் அரசு, இந்த விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டும் கூட, வழவழாத் தன்மையில்தான் மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது.

ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்று பயமுறுத்தியும்கூட, அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் திரு.வி.பி.சிங் அவர்கள், தனது ஆட்சி கவிழும் எனத் தெரிந்தும் அதற்காக அலட்டிக் கொள்ளாமல் - மதச் சார்பற்ற நிலையிலும், மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதிலும் விட்டுத் தர முடியாதெனக் கூறி, அத்வானி அவர்களைக் கைது செய்து இராமர் கோயில் ரத யாத்திரையைத் தடை செய்ய ஆணை பிறப்பித்ததை நாடு மறந்து விடவில்லை!

அத்தகைய திடசித்தம் இன்றுள்ள மத்திய அரசுக்கு அமைந்திட வேண்டும் என்பதுதான் தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் அழுத்தமான கருத்தாகும்.

வேடிக்கை என்னவென்றால், இந்த நாட்டில் வகுப்பு மோதலைத் தூண்டிவிட யார் காரணமாக இருக்கிறார்களோ, யாருடைய பேச்சும், எழுத்தும், செயலும் காரணமாக இருக்கிறதோ, அவர்கள் மற்றவர்களைப் பார்த்து வகுப்புவாதிகள் என்று குற்றம் சாட்டுவதுதான் பெரிய வேடிக்கை!

திருடியவன், திருடனை விரட்டுகிறவர்களோடு சேர்ந்துகொண்டு திருடனை விடாதே! பிடி! பிடி! என்று கூச்சலிட்டவாறு ஓடுவது போல, வகுப்பு வாதத்தின் ஆரம்ப கர்த்தாக்களாக இருப்போர் - வகுப்பு வாதத்தை முறியடிப்போரை வகுப்புவாதிகள் எனத் தூற்றுவது இங்கே வழக்கமான மோசடியாகி விட்டது.

உத்திரப் பிரதேசத்தில் தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் வகுப்பு மோதலைத் தூண்டி விடுகின்றன என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு ஈரோடு நகருக்கு வந்தபோது செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

வகுப்பு மோதலைத் தூண்டுபவர் யார்? என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவான விஷயம்!

அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்கு இடமா இல்லை? பாபர் மசூதி எனும் வரலாற்றுச் சின்னத்தை இடித்துவிட்டு அங்குதானா அந்தக் கோயிலைக் கட்ட வேண்டும்? ஆமாம்! பாபர் மசூதியை இடிப்பது முதல் வேலை - அடுத்த வேலைதான் இராமர் கோயில் கட்டுவது எனக் கூறுவது வகுப்பு மோதலை உருவாக்குகிற செயலா? அல்லது அதைத் தடுப்பது வகுப்பு மோதலை உருவாக்குகிற செயலா?

பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் நல்லுறவுக்கான பேச்சு வார்த்தைகள் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது - பாகிஸ்தான் விளையாட்டு வீரர்கள் யாரும் இந்தியாவுக்குள் வந்து விளையாடக் கூடாது என்று இந்திய அரசு தடை விதிக்கவில்லை - ஆனால், இங்குள்ள இந்துமதச் சனாதன இயக்கத்தினர் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவில் வந்து ஆடக் கூடாது எனக் கிளர்ச்சி செய்வதாக மிரட்டி, அவர்கள் இந்தியாவில் வந்து விளையாடவே தயங்கி, பயணத்தை ரத்து செய்து விட்டார்களே!

சில நாட்களுக்கு முன்புதானே இஸ்லாமிய நாட்டு நகரமான ஷார்ஜாவில் இந்திய கிரிக்கெட் வீரர்களும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களும் தொடர்ந்து போட்டிகளில் ஈடுபட்டு விளையாடியுள்ளனர்.

இதுபோன்ற சில்லறைச் சேட்டைகள் கூட - வகுப்புகளுக்கிடையே கசப்புக்கும், காழ்ப்புக்கும் - இறுதியாகக் கலவரத்துக்கும் வித்திடக் கூடிய வகுப்பு மோதலுக்கு வித்திடும் காரியமாக ஆகாதா?

ஈரோடு நகரில் செய்தியாளர்களிடம் பேசிய முரளி மனோகர் ஜோஷி அவர்கள், தமிழ்நாட்டில் வேத ஆகமக் கல்லூரி தொடங்கப்படுவதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

இது ஒன்றே போதும்! அந்தக் கல்லூரியை நாம் எதிர்ப்பதற்கு வேறு காரணம் கூற வேண்டிய அவசியமே இல்லை!

அண்மையில் உத்திரப் பிரதேச பாரதீய ஜனதா கட்சி முதல் அமைச்சர் சென்னைக்கு வந்து முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து ஆலயநிதி வசூல் செய்வதைப் போற்றிப் புகழ்ந்துவிட்டுச் சென்றுள்ளார்.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களும், முதல்வரும் பாராட்டுகிற அளவுக்கு - அவர்கள் விரும்புவது போன்ற மதவாத சனாதனத்திற்கு, தமிழ்நாட்டிலும் அரசின் சார்பில் ஆதரவு அரும்பிடத் தொடங்கியிருக்கிறது! வடக்கே ஓரிரு மாநிலங்களில் வேர்விட்டுத் தழைத்திடும் இந்த மதவாத சனாதன ஆபத்து - தமிழகம் உள்ளிட்ட இந்திய நாடு முழுவதும் பரவி, இந்துக்கள் ராஜ்யம் அமைத்திட ஆவேசங்கொண்டு திரிவோருக்குச் சாதகமாக ஆகிடாமல் தடுத்திடுவது மதச் சார்பற்ற மனித நேயப் பண்பாளர்களின் கடமை என்பதை சுட்டிக் காட்டுவதுடன், குறிப்பாகத் திராவிட இயக்கத்திற்குப் பெரும்பணி என்பதையும் கோடிட்டுக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(29-10-1991)

1818. இப்படியும் துக்ளக் சேட்டைகளா?

உடன்பிறப்பே!

குல்தீப் நய்யார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையில் சிக்கன நடவடிக்கைகளை வலியுறுத்தி வாய் கிழியப் பேசுகிற மத்திய, மாநில அரசுகள், தங்களின் அறிவுரைக்குப் புறம்பாக எந்த அளவுக்கு டம்பாச்சாரித்தனத்தில் முன்னேறியிருக்கின்றன என்பதற்குச் சில உதாரணங்களை அமைச்சர்கள் மட்டத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ராஜேஷ் பைலட் என்கிற மத்திய அமைச்சர் ஒருவர் தமது தனிச் செயலாளர் உட்பட நாற்பதுக்கு மேற்பட்டவர்களுடன் ஜெனிவாவுக்குச் சென்றுள்ளார். நிதியமைச்சர் மன்மோகன் சிங் இருபத்தி ஐந்து பேருடன் பாங்காக் சென்றார். பிரதமர் நரசிம்மராவ் அவர்கள், 747 போயிங் விமானத்தில் ஹராரேவுக்கு சென்றபோது, கூடவே இன்னொரு விமானமும் சென்றது. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடியப்போகும் சமயத்தில் மத்திய அமைச்சர்கள் பாதிப்பேர் அதிகாரபூர்வ பயணம் மேற்கொண்டு, வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். பிரதமருடன் பவனிவரும் கார்களின் எண்ணிக்கை குறையவில்லை. அரசு செலவுகளைக் குறைக்கும் அடிப்படையில் இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவோ இவர்கள் எல்லோரையும் மிஞ்சுகிற வகையில், ஆயிரம் கார்களுடன் பவனி போகிறார். ஆட்சியில் இருப்போர் முன் மாதிரியாக நடந்து கொண்டால்தான், அரசு எவ்வழியோ, குடிகளும் அவ்வழி என்று பலரும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்குவார்கள். இதற்கேற்ப ஆளும் வர்க்கத்தினர் நடந்து கொள்ளத் தவறினால் தொல்லைகள், துயரங்களில் இருந்து மீள்வதற்கே மக்களுக்கு வழியில்லை. இதுதான் இந்தியாவின் சோகம்.

என்று குல்தீப் நய்யாரின் கட்டுரை நிறைவு பெற்றிருக்கிறது. அவரது நீண்ட கட்டுரையில் இருவேறு கருத்துக்கு இடமில்லாமல்

நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு கவலை தெரிவிக்க வேண்டிய விஷம்தான் இது!

ஊருக்குக்குத்தான் உபதேசம் செய்தேன்! உனக்கும் எனக்கும் இல்லையடி! என்பது போலத்தான் மத்திய மாநில அரசுகளின் சிக்கன உபதேசம் இருந்து வருகிறது என்பதற்கு திரு. நய்யார் எடுத்துக் காட்டியுள்ள நிகழ்வுகள் குறைவானவைகளேயாகும்.

சில வாரங்களுக்கு முன்பு, எல்லாப் பத்திரிகைகளிலுமே அதிகாரப்பூர்வமான செய்தியொன்று படித்தது, உடன்பிறப்பே - உனக்கும், மற்றவர்களுக்கும் நினைவிருக்குமென்று கருதுகிறேன்.

மத்திய அமைச்சர்களாயிருப்பவர்கள், தேர்தல் நேரங்களில் தமது கட்சித் தேர்தல் பிரச்சாரங்களுக்குச் செல்லும்போது அரசு விமானங்களைப் பயன்படுத்தக்கூடாது என விதிமுறை மரபு இருக்கிறது. ஆனால், அவ்வாறு வகுக்கப்பட்ட அந்த முறையை மீறி, தேர்தல் பிரச்சாரத்திற்காக அரசு விமானங்களைப் பயன்படுத்தினால் அதற்குரியக் கட்டணத்தையாவது செலுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் மறைந்துவிட்ட ராஜீவ் காந்தி அவர்கள், பிரதமராக இருந்தபோது தேர்தல் பிரச்சாரத்திற்காக அரசு விமானங்களைப் பயன்படுத்தியது மாத்திரமல்ல. அதற்குரிய கட்டணத்தையும் செலுத்தவில்லை. அப்படிச் செலுத்தப்பட வேண்டிய தொகை நாலு கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று செய்தி வந்தது!

சொற்ப காலமே பிரதமராக இருந்த சந்திரசேகர் அவர்களும், தேர்தல் பிரச்சாரத்திற்காக அரசு விமானங்களைப் பயன்படுத்தியதற்காக, நாலு கோடி ரூபாய் செலுத்த வேண்டுமென்ற செய்தியும் தொடர்ந்து வந்தது!

இவை சிக்கனத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் மட்டுமல்ல. அரசுக்குரிய வசதி வாய்ப்புகளை, கட்சிப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் அதிகார துஷ்பிரயோகமும் ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியுமா? நாலும், நாலும் எட்டு கோடி ரூபாய் பாக்கி என்பதும், அந்த எட்டு கோடி ரூபாய் இன்னும் தரப்படாமல் இருப்பதும் எந்த வகை நியாயம் என்பதற்கான விளக்கத்தையாவது அந்தக் கட்சிகளின் தலைமைப் பீடங்கள் அளித்திட வேண்டாமா?

தமிழ்நாட்டில் நடைபெறும் ஆயிரம் கார் பவனியைப் பற்றியும் குல்தீப் நய்யார் குத்திக் காட்டியிருக்கிறார். ஆரவாரச் செய்திகள், ஆடம்பர விளம்பரங்கள், அறிக்கைகள், ஏட்டுச் சுரைக்காய் அறிவிப்புகள், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சுக்கள், அச்சுறுத்தல், பழிவாங்குதல் என்ற ரீதியில் இங்கே ஓர் அரசு நடைபெறுவது மட்டுமல்ல! பரந்த மனப்பான்மை - பெருந்தன்மை இவற்றுக்குத் துளியும் இடம் தராத வகையிலும் அதன் செயல்பாடுகள் விரிவடைகின்றன. வேடிக்கையும், விசித்திரமும் நிறைந்த அநாகரிகக் காரியமொன்று நடந்திருப்பதைச் சில ஏடுகள் மாவட்டங்களின் அளவில் வெளியிட்டிருந்தாலுங்கூட, அதுகுறித்து நானும் கேள்விப்பட்டேன். சிக்கன நடவடிக்கை எப்படி சீரழிகிறது - சிந்தனையில் எப்படியெல்லாம் சுளுக்கு ஏற்படுகிறது என்பதற்கும், பணம் பாழாவதும் - பதவியென்பது வெறியாவதும் - இப்படித்தான் என்பதற்கும் இந்தச் செய்தி ஒரு சான்று! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல!

ஆயிரம் கார் பவனியுடன் நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத் தொடக்கவிழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் புதிதாகக் கட்டி முடிக்கும் வரையில் தற்காலிகமாக, ஓர் வசதியான கட்டிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வைத்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின்படி, நாகையில் உள்ள ஒருவரின் கட்டிடம் ஏற்பாடு செய்யப்பட்டது. அவரும் தயக்கமின்றி ஒப்புதல் அளித்து விட்டார்.

நாகையில் ஏக ஆடம்பரமாக மாவட்டத் தொடக்க விழா நடந்து முடிந்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குத் தற்காலிகமாகப் பார்த்து முடிவு செய்த வசதி மிக்க அந்தக் கட்டிடத்தில் அலுவலகத்திற்குத் தேவையான எல்லா பொருள்களும் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டன. மேசைகள், நாற்காலிகள், பீரோக்கள், அலமாரிகள் எல்லாமே அந்தக் கட்டிடத்தில் வைத்து ஒழுங்குபடுத்தப்பட்டு விட்டன. புதிய மாவட்டத்தின் பெயர் தாங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் எனும் பலகையும் முகப்பில் பொருத்தப்பட்டாகி விட்டது.

இவ்வளவும் முடிந்த பிறகு திடீரென ஓர் உத்தரவு! அந்தக் கட்டிடத்திலிருந்து இரவோடு இரவாக எல்லாப் பொருள்களையும்

வெளியேற்றினர். வாயிலில் பொருத்தியிருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் என்ற பெயர்ப் பலகையையும் அகற்றினர். அவ்வளவு பெரிய கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த அத்தனை பொருள்களையும் எங்கே கொண்டு போய் வைப்பது? அதிகாரிகளில் பெரியவர்கள், சிறியவர்கள் அனைவருமே விதியே! என்று கூறிக் கொண்டு தவியாய்த் தவித்தனர்! பிறகு வேறு வழியில்லாமல் - அங்குள்ள பஞ்சாயத்து யூனியன் போன்ற பல்வேறு இடங்களை ஆக்ரமித்து - திசைக்கு ஒன்றாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை சிதற அடித்தனர்! புதிய மாவட்ட ஆட்சித்தலைவரின் இப்போதைய அலுவலகம், நாகையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுக்கான ஓட்டலில் உள்ள ஒரு அறைதான்!

வசதியான பெரிய கட்டிடம் தற்காலிகமாக கிடைத்தும்கூட - அதன் உரிமையாளர் மனம் ஒப்பி அதனைத் தந்திருந்தும்கூட - இந்தத் திடீர் உத்தரவுக்கும், தடால் நடவடிக்கைக்கும் காரணம் என்ன தெரியுமா?

Silly என்று ஆங்கிலத்தில் கூறப்படும் சொல் ஒன்றுதான் இதற்குப் பொருத்தமான சொல்லாக இருக்க முடியும்! அற்பத்தனம் என்பது அந்தச் சொல்லின் பொருள்!

வசதியாகக் கிடைத்த அலுவலகக்கட்டிடத்தை இரவோடு இரவாகக் காலி செய்ததற்கு வேறு காரணம் எதுவுமே இல்லை! அந்தக் கட்டிட உரிமையாளர் நான் முதலமைச்சராக இருந்த போது என்னை அழைத்து நாகையில் ஒரு விழா நடத்தினார் - அவர் எனக்கு நெருக்கமானவர் என்று யாரோ சொல்லப்போய், அதன் தொடர்பாக அந்தத் திடீர் உத்தரவு.

அவர் தி.மு.க. அல்ல! நீண்டகாலமாகவே கதராடை உடுத்தும் காங்கிரஸ் பற்றாளர்! நாகையிலும் சரி! தஞ்சை மாவட்டத்திலும் சரி - எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் நெருக்கமான நண்பராக இருக்கக்கூடியவர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குத் தற்காலிகமாகத் தன்னுடைய கட்டிடத்தை மாவட்ட அதிகாரிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கூட என்னிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். நானும்கூட அது தற்காலிக அலுவலகத்திற்குப் பொருத்தமான இடம்தான் என்று அவரிடம் கூறினேன்.

கொடுத்த இடத்தைக் காலி செய்து விட்டதால் கொடுத்தவருக்கு ஒன்றுமே இழப்பில்லை!

ஆட்சியாளர்களின் மனப்போக்கையும் - சில்லறைத்தனமான சிந்தனைகளால் சிக்கன நடவடிக்கை சிதைவுறுகிற நிலையையும் - இது போன்ற துக்ளக் சேட்டைகள் நாட்டு மக்களுக்கு, இன்றில்லாவிடினும் காலப் போக்கில் அறிவுறுத்தியே தீரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அன்புடன்,

மு. க.

(31-10-1991)

1819. ஆதாரங்களுடன் ஆயத்தமாவோம்!

உடன்பிறப்பே!

இலங்கையில் தமிழினம் அழிகிறது.
போரிடும் விடுதலைப் புலிகளுக்கு
தமிழர் தம் ஆதரவு தர வேண்டும்.

கருணாநிதி மௌனம் சாதிப்பது ஏன்?
வி.பி. சிங் பாராமுகமாய் இருப்பதேன்?

என்ன திடீரென இப்படி ஒரு வாசகம்? கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு? இந்த வாசகம் தமிழ்நாடு முழுதும் சுவரொட்டிகளாக ஒட்டப்பட்டது நினைவிருக்கிறதா? நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்பு, அதாவது 1990-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் - சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், நமது கழக ஆட்சியைக் கலைத்தார்களே அதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், ஜெயலலிதா தலைமையில் உள்ள அ.இ.அ.தி.மு.க. சார்பில் இந்த வாசகம் அமைந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இந்தச் செய்தி நமது ஆட்சியைக் கலைத்த சந்திரசேகருக்கும் தெரியும் - பாவம் தெரிந்து என்ன செய்ய? ஜெயலலிதா சொன்னார் - ராஜீவ் கட்டளையிட்டார் - ஆர்.வி. - கவர்னர் அறிக்கையைக் கூடக் கேட்காமல் கலைப்பு உத்தரவில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டார். சதி நிறைவேறி, சாய்க்கப்பட்டது கழக ஆட்சி!

என்ன காரணம் கூறப்பட்டுக் கலைக்கப்பட்டது? விடுதலைப் புலிகளுக்கு தி.மு.க. அரசு ஆதரவு - விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் தமிழ்நாடு வந்துவிட்டது - அவர்கள் மீது கழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, என வீண்பழி சுமத்தப்பட்டு ஆட்சி கலைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுவினர், யார் வன்முறையில் ஈடுபட்டாலும் அதனை கழக அரசு அனுமதிக்காது எனக் கண்டிப்பாக எச்சரித்து, போராளிகள் அனைவரையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தனித்தனி முகாம்களில் அவர்களை வைத்து, அவர்களிலும் கட்டுப்பாடற்று நடந்து கொண்ட விடுதலைப் புலிகளை தேசப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்தும், நூற்றுக்கு மேற்பட்டவர்களை வேலூர்ச் சிறையில் அடைத்தும் - வாகனங்கள், வயர்லஸ் கருவிகள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியும்; எத்தகையத் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற ஆதாரபூர்வமான விபரங்களை ஒரு வெள்ளை அறிக்கையாக தயாரித்து வழங்கி ஏடுகளிலே வெளியிட்டும் - தமிழ் ஈழத்தில் நிலையான அமைதி வேண்டும் என்பது நமது விருப்பம் எனினும் - அதற்காக இங்கே தமிழ் நாட்டுக்குள் போராளிகள் எவரும் வன்முறையில் ஈடுபடுவதைத் தடுத்தே தீருவோம் என்ற முடிவுடன் நடவடிக்கைகள் மேற்கொண்ட ஆட்சியைத்தான், தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள சந்திரசேகர் கலைத்தார் என்பது நாடறிந்த உண்மை.

கழகம் 1989-ல் ஆட்சிக்கு வந்தவுடன் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கலந்து பேசி, அவரது கருத்துப்படி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டதை - பிரதமராக வி.பி. சிங் பொறுப்பேற்றிருந்த போது அவரது கருத்துப்படி தமிழ் ஈழப் போராளிக் குழுக்களைச் சேர்ந்த அனைவருடனும் பேச்சு வார்த்து நடத்தியதை - சந்திரசேகர் பிரதமராக இருந்தபோது அவருடன் கலந்து பேசி, இலங்கைப் பிரச்சினையில் நடவடிக்கைகள் எடுத்ததையும் கழக அரசின் சார்பிலும், கழகச் சார்பிலும் பலமுறை நான் செய்தியாளர்களிடம் தெரிவித்து, அவை ஏடுகளில் விளக்கமாக வெளி வந்திருக்கின்றன.

கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளை அறவே ஒழித்து விட்டோம் என்று கவர்னர் பீஷ்ம நாராயண்சிங், நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் பேட்டி அளித்த அதே நாளில்தான் - ராஜீவ் காந்தி படுகொலைக்கு ஆளானார்! எட்டு முறை தி.மு.க. ஆட்சியில் தமிழகம் வந்து பத்திரமாகத் திரும்பி சென்ற ராஜீவ்காந்தியின் உயிரைக் காப்பாற்ற முடியாத கையாலாகாத ஆட்சியாக கவர்னர் ஆட்சி இருந்தது.

இதை நான் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பலரே கடுமையாக விமர்சித்ததை மறந்திருக்க முடியாது.

ராஜீவ் கொலைக்குப் பிறகும் கூட, அதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டில் எத்தனை வன்முறைச் சம்பவங்கள் - எத்தனை கொலைகள் - எத்தனை கள்ளத்தோணி செய்திகள் - எத்தனை கொலையா? தற்கொலையா? எனத் தெரியாத கொடுமையான நிகழ்ச்சிகள்!

இவைகள் இன்னமும் தொடர்கதையாகவே இருக்கும் நிலையில், பழியைத் தூக்கி யார் மீதாவது போட வேண்டுமென்று சதாகாலமும் சகுனித்தனத்தில் ஈடுபட்டிருப்போர் சிலர், இன்னமும் கூட விடாமல் தி.மு.கழகத்தின் மீது பாய்ச்சல் நடத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

கிருஷ்ணகுமார் என்று ஒரு மத்திய இணை அமைச்சர் - அவர் சென்னைக்கு வந்தார்! ஜெயலலிதாவை சந்தித்தார் - அம்மணியாரின் ஆணைப்படி, நம் மீது தேசத் துரோக அர்ச்சனை செய்து விட்டுப் போயிருக்கிறார்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோதுதான் விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமே ஏற்பட்டதாம்! கிருஷ்ணகுமாரின் குற்றச்சாட்டு இது!

1983-ல் விடுதலைப்புலிகள் தமிழகத்தைப் புகலிடமாக ஆக்கிக் கொள்ளவும் - முகாம்கள் முப்பதுக்கு மேல் அமைத்துக் கொள்ளவும் - ஆயுதப் பயிற்சிகள் பெறவும் ஆக்கமும், ஊக்கமும் அளித்தது இந்திரா காந்தி அல்லவா? அவருக்குப் பிறகு ராஜீவ்காந்தி அல்லவா?

மத்திய காங்கிரஸ் அரசின் ஒப்புதலுடன், முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., மாநில அரசின் சார்பாக விடுதலைப் புலிகளுக்கு ஒரே நாளில் நான்கு கோடி ரூபாய் வழங்கினாரே! அப்போதெல்லாம் இந்தக் கிருஷ்ணகுமார் என்பவர் எந்த நாட்டில் இருந்தார்? இந்த நாட்டில்தானே!

பத்மநாபா கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு கூட, ஜெயலலிதா பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், விடுதலைப் புலிகளை இந்திய அரசும், மாநிலத்தில் தி.மு.க. அரசும் நல்லமுறையில் ஆதரிக்கவில்லையென்று குறைபட்டுக் கொள்ளவில்லையா?

விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். செய்த உதவியுடன் ஒப்பிடும்போது, கருணாநிதி செய்திருப்பது மிகச் சொற்பமே என்று ஜெயலலிதா பேட்டி அளிக்கவில்லையா?

கடந்த தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பு, ஜெயலலிதா அளித்த பேட்டியில், பிரபாகரனுக்கு இலங்கையில் ஒரு தீங்கு என்றால், இங்கே தமிழகம் கொந்தளிக்கும் என்று கூறவில்லையா?

இந்திய அரசு, பங்களா தேஷுக்கு இராணுவத்தை அனுப்பியது போல, இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி தமிழ் ஈழம் கிடைக்க ஆவன செய்யலாம் என்று ஒரு யோசனையை ஜெயலலிதா பத்திரிகைப் பேட்டியில் வெளியிடவில்லையா?

விடுதலைப்புலிகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு தர வேண்டுமென்று அ.தி.மு.க. சார்பில் மாநில முழுதும் வண்ண வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்படவில்லையா?

இவ்வளவையும் தேதிவாரியாக - ஆதாரபூர்வமாக மீண்டுமொரு முறை எடுத்துக்காட்டி நிரூபிக்கத் தயார்!

வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேட்டி அளித்துவிட்டுப் போன கிருஷ்ணகுமார், அவரே அந்த ஆதாரங்களை, தனது துறையின் அதிகாரிகள் மூலம் சேகரித்து உணர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறாரா? அல்லது ஆங்கில ஏடுகளில் வந்துள்ள ஜெயலலிதாவின் அந்தப் பேட்டிகளைக் கத்தரித்து கழகத்தின் சார்பாக அவருக்கு அனுப்பி வைக்க வேண்டுமா? தூங்குபவரைத்தான் எழுப்ப முடியும்! தூங்குவது போல் நடிப்பவரை எப்படி எழுப்ப முடியும்?

ராஜீவ் காந்தி கொல்லப்படும் வரையில், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும் - அதி தீவிர ஆதரவாளராகத் தன்னைக் காட்டிக் கொண்டும் செயல்பட்ட ஜெயலலிதா, ராஜீவின் கொடுமையான, கொலை நிகழ்ச்சிக்குப் பிறகு - தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு தேர்தல் வெற்றிக்காக தி.மு.க. மீது வீண்பழி சுமத்தும் பணியில் காங்கிரசுடன் இணைந்து கொண்டது எவருக்கும் புரியாத சிதம்பர ரகசியமா, என்ன?

> "தி. மு. கழகத்தின் தேச விரோத நடவடிக்கைகளை அரசியல் பூர்வமாக சந்திக்க விரும்புகிறோம்"

என்று கிருஷ்ணகுமார் அறைகூல் விடுத்துள்ளார் செய்தியாளர்களிடம்!

நன்றாகச் சந்திக்கட்டும்! நாமும் தயாராகத்தான் இருக்கிறோம்! என்னமோ இந்ததேசம் என்பது கிருஷ்ணகுமார் போன்ற காங்கிரஸ்காரர்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டது போலவும் - காங்கிரசல்லாத கட்சிகளைச் சார்ந்தோர் தேசவிரோதிகள் என்பது போலவும் - பேசுவதற்கு இது ஒன்றும் இந்திரா காந்தி காலத்து எமர்ஜென்சி நேரமல்ல!

காந்தியடிகளைக் கொன்றவர்களுக்குத் துணை போனவர்கள்கூட, தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கக்கூடிய தேசத் தியாகிகளாகத் தோற்றம் காட்டும் அரசியல் மோசடிகளுக்குத் தலைவணங்கும் காங்கிரசின் தேச விசுவாசம் ஊர் அறியாததா? உலகு அறியாததா?

பிரதமர் இந்திரா காந்தியைச் சுட்டு வீழ்த்தியவனின் மனைவி, தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரான நாடய்யா இது!

அந்தப் பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று கிருஷ்ணகுமார் அவர்கள், தேசவிரோத நடவடிக்கையை அரசியல் பூர்வமாகச் சந்திப்பது தானே? ஏன் தயக்கம்? என்ன மயக்கம்?

காஷ்மீரம் சென்று தேசபக்தி கர்ச்சனை செய்ய முடியாதவர்கள், கழகத்தை மட்டும் ஊருக்கு இளைத்த பிள்ளையார் கோயில் ஆண்டியாகக் கருதிக்கொண்டு ஓங்காரக் கூச்சலிட ஓடோடி வருகிறார்களே! இது ஒரு வீரமா? தீரமா?

அசாம் மாநிலத்து உல்பாக்கள் என்றால் சலாம் போடுகிறார்கள்! ஆந்திரத்து நக்ஸலைட்டுகள் என்றால் அடிபணிகிறார்கள்!

இங்கு அமைதி வழியில் - அறவழியில் - அண்ணா வழியில் அரசியல் நடத்தும் நம்மீது எகிறிப் பாய்கிறார்கள்!

யாரைத் திருப்திப்படுத்த?

எவர் மகிழ?

என்ன பெற்றுக்கொண்டு?

என்பது விளங்குகிறது - ஆனால் அது விலாவாரியாக அம்பலத்திற்கு வராமல் போய்விடாது!

எனவே கிருஷ்ணகுமார் போன்றவர்கள், அமளிக்காடாக மாறிக்கொண்டு அண்மையில் கூட, ஐம்பது உயிர்களை

வெடிகுண்டு வன்முறைக்குப் பலிகொடுத்து - சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டு நிற்கிற உ.பி. போன்ற மாநிலங்களில் தேசபக்தியைப் பரப்பட்டும்! பஞ்சாப்பில் தேசியகீதம் பாடவே தடையாம்! அவமானம்! அந்த அவமானத்தைப் போக்கி தேசிய உணர்வை ஊட்டிட அங்கே எழுந்தருளட்டும்! காஷ்மீரில் நடுவீதியில் தேசியக்கொடி எரிக்கும் காட்சியை இந்திய நாட்டு ஏடுகள் அட்டைப்படத்தில் வெளியிட்டன. அங்கே சென்று இந்தக் காங்கிரஸ் வீரர் தேசபக்தியை இசைக்கட்டும்!

நாட்டுப்பற்று - மொழிப்பற்று - மனிதநேயப் பற்று - இவற்றை நமக்குச் சொல்லிக் கொடுக்க கிருஷ்ணகுமார்கள் தேவையில்லை!

சீன ஆக்ரமிப்பின் போதும், பாகிஸ்தான் போரின் போதும் - எதிர்க்கட்சியாக இருந்தும், ஆளுங்கட்சியாக இருந்தும் தி. மு. கழகம் கிளர்ந்தெழச் செய்த நாட்டுப்பற்று குறித்து பண்டித நேருவும் அறிவார்! பண்புடையோர் அனைவருமே அறிவர்!

உடன்பிறப்பே, நம்மை தேசவிரோத சக்தி என்று பிரச்சாரம் முடுக்கிவிடப் போகிறார்களாம். உடனடியாக, அந்த உபாயத்தை தொலைக்காட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது!

அந்த அவதூறுப் பிரச்சாரத்தை முறியடிக்க ஆதாரங்களுடன் - நமது கழகத்தினர் ஆயத்தமாகுக!

வீண் அபவாதத்தை எதிர்கொண்டு வீழ்த்திட - தமிழகத்தில் உள்ள ஜனநாயக சக்திகள் ஒன்று திரளும் என்பதை உணர்த்துவோம் அவர்களுக்கு!

அன்புடன்,

மு. க.

(01-11-1991)

1820. புதிய தேசபக்தத் திலகங்கள் புரிந்து கொள்ளட்டும்!

உடன் பிறப்பே,

நவம்பர் 2 - ஆம் நாள் டெல்லி தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை யென்று திடீரென முடிவெடுக்கவேண்டிய அவசியம் தி. மு. கழகத்திற்கு ஏன் ஏற்பட்டது என்பது விளக்கப்பட்டே மத்திய உள்துறை அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் தி. மு. க. கலந்து கொண்டிருக்கவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நல்லெண்ணத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அயோத்தியில் பாபர் மசூதி - இராமர் கோயில் பிரச்சினை அபாயகரமான சூழ்நிலையில் உருவாகிவரும் இந்தக் காலகட்டத்தில் தி. மு. கழகம், தனது கருத்துகளை எடுத்துக் கூறும் வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்று குறிப்பிட்டுள்ள உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் மத்திய இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் அவர்களின் தி. மு. க. பற்றிய பேட்டி, பொறுப்பற்ற முறையில் தரப்பட்ட ஒன்று எனச் சுட்டிக் காட்டியிருப்பதும் எனக்கும், கழகத்தினருக்கும் ஆறுதல் அளிக்கக்கூடியதாகும்.

பாபர் மசூதி - இராமர் கோயில் பிரச்சினையில் தி. மு. கழகத்தின் நிலை என்ன என்பது வெளிப்படையாக உலகறிந்த உண்மை! இந்தப் பிரச்சினையில் மதவாத சனாதனிகள் காட்டிய வெறியை எதிர்த்தும் - அந்த வெறிக்கு ஆதரவாகக் கொடி தூக்கிய பாரதீய ஜனதாவைப் புறக்கணித்தும் - தி. மு. க. வும் அங்கம் வகித்த தேசிய முன்னணி அரசு, தனது பதவியிழக்கத் தயாரானதை எண்ணிப் பார்த்தாலே அயோத்திப் பிரச்சினையால் மூண்டிட உள்ள

அமளியைத் தவிர்ப்பதில், தி. மு. கழகத்திற்கு அக்கறை எந்த அளவுக்கு உண்டு என்பதை அனைவரும் அறிவர்!

அவ்வாறு அறிந்துள்ள காரணத்தினால்தான் - தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, கிருஷ்ண குமாரின் பொறுப்பற்ற பேச்சை கண்டிக்கத் தவறாமல் - அதே நேரத்தில் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தில் கழகம் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்ற கருத்தையும் அறிக்கை வாயிலாகத் தெரிவித்திருக்கின்றது!

தொடர்ந்து தி. மு. கழகத்தை தேசவிரோத சக்தியென்றும் - தேசவிரோத சக்திகளுடன் தொடர்புபடுத்தியும் பொறுப்பான பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் குற்றம் சாட்டிக்கொண்டே வருவதையும், அதிலும் குறிப்பாக, டெல்லியில் தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தைக் கூட்டி, அதற்கு அழைப்புகளும் அனுப்பிவிட்டு - சென்னைக்கு வந்து ஒரு மத்திய அமைச்சர் தி. மு. க. தேச விரோத சக்தி என்று செய்தியாளர்களுக்கு பேட்டியளிப்பதும், இட்டுக்கட்டிய பொய்யுரைகளைக் கூறுவதும்; அதனை ஏடுகள் மட்டுமின்றி அரசின் பிரச்சார சாதனமான தொலைக்காட்சியில், பலமுறை பன்னிப்பன்னி விஸ்தாரமாகச் சொல்வதும் என்றால் - ஜனநாயக ரீதியில் வேறு எந்த வழியில் கழகத்தின் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ள முடியும்!

அவ்வாறு கண்டனத்தைத் தெரிவிக்கும் முதல் கட்டமாகத்தான் - டெல்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு கூட்டத்தைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று! இதுபோன்ற பிரச்சாரம் தி. மு. க. குறித்துத் தொடருமேயானால் ஜனநாயக அடிப்படையில் வேறு முறைகளைத் தேர்ந்தெடுத்து, தி.மு.க.வை தேசவிரோதிகள் என்று சமூக விரோதிகள் சிலர் நடத்தும் பிரச்சாரத்திற்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டிய கட்டாயமும் கழகத்திற்கு ஏற்படும்! அந்த அறப்போராட்டங்கள் இரண்டாவது, மூன்றாவது கட்டங்களாக இருக்கும்.

கிருஷ்ணகுமார் பங்கிற்கு தி. மு. க.வை தேசவிரோத சக்தியென்று கூறிவிட்டு போய்விட்டார். அடுத்து வந்த இணை அமைச்சர் சிதம்பரமோ, அவர் பங்குக்கு தேசியத் தலைவர்களைச் சந்திக்கக் கருணாநிதி பயப்படுகிறார் என்று ஒரு பேட்டி கொடுத்து விட்டார்.

என்னசெய்வது! இந்தத் தேசியத் தலைவர் சிதம்பரத்தின் நாட்டுப்பற்று - கட்சிப்பற்று -தேர்தல் பற்று - இவைகளைப் பற்றி இரண்டு மாதங்களுக்கு முன்புதான், இவரது கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அறிக்கை மேல் அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள்! அதையெல்லாம் படித்து ரசித்த மக்கள், அதற்குள் மறந்து போயிருப்பார்கள் என்று மாண்புமிகு சிதம்பரம் நினைத்திருக்கக் கூடும்! அதனால்தான் துள்ளிக் குதிப்பது போல் காட்டிக் கொண்டு - தேசியத் தலைவர்களைச் சந்திக்கக் கருணாநிதி பயப்படுகிறார் என்று வாசகத்தை அள்ளிப் பொழிந்திருக்கிறார்.

அடுத்து இங்குள்ள ஒரு அமைச்சர், கேடு கெட்ட பெண் என்று ஜெயலலிதாவை அர்ச்சித்து; இன்று கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கும் மானமனிதர் (?) - அவர் பேசியிருக்கிறார், கருணாநிதி ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்திற்குச் செல்லாமல் ஓடி ஒளிந்து விட்டார் என்று! பாவம்! என்னைப் பற்றி ஏதாவது சொல்லிப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே! அதற்கும் நான்தானே பயன்படுகிறேன்! மகிழ்ச்சி! நன்றி!

உடன்பிறப்பே, கடந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் இதே தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தை கழக அரசு முன்னின்று சென்னையில் நடத்தியதை உன் போன்றோர் மறந்திருக்க முடியாது. 1976-க்கு முன்பு கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு திறக்கப்பட்ட பத்து மாடிக் கட்டிடத்திற்கு, மீண்டும் 1989-ல் கழகம் ஆட்சிக்கு வந்தபோது நாமக்கல்லார் நூற்றாண்டு விழாவையொட்டி அந்த தேசியக் கவிஞர் பெயரால் நாமக்கல் கவிஞர் மாளிகை எனப் பெயர் சூட்டியதையும் - அந்தக் கட்டிடத்திலேயே தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தை நடத்த சிறப்பு ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்வதற்குக் கழக அரசு பல லட்ச ரூபாய் செலவிட்டதையும், கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் வெளிவந்த ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்!

பாபர் மசூதி - இராமர் கோயில் பிரச்சினையில் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வுகாண வேண்டுமெனவும் - பேச்சு வார்த்தையில் தீர்வுகாண இயலாவிடில், அது குறித்து நீதிமன்றம் அளிக்கக் கூடிய தீர்ப்பை அனைத்துத் தரப்பாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் கருத்தமைந்த தீர்மானம், கடந்த ஆண்டு

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18

சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தை பாரதீய ஜனதா கட்சி புறக்கணித்தது மட்டுமல்ல. ரதயாத்திரை என்ற பெயரால் ஒரு ரணகளத்தை உருவாக்கவும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

இவற்றை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அயோத்திப் பிரச்சினையை பெரிதுபடுத்தி, மதச் சார்பற்ற நிலைக்குப் படுகுழி தோண்டி, இந்து முஸ்லிம் யுத்தத்திற்கு வழி வகுக்கும் மதவெறிச் சேட்டைக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பதுதான் கழகத்தின் நிலை என்பதை எடுத்துக்காட்டவும் - இந்தியாவை இந்து ராஜ் என மாற்றுகிற எந்த முயற்சியையும் கழகம் எதிர்த்தே தீரும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குமேயாகும்!

தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளுடன் தி. மு. கழகம் இந்தப் பிரச்சினையில் தனது குரலை உரக்க எழுப்பி வருகிறது எனினும், மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு - ஒருமைப்பாடு என்பதை ஓர் உதட்டளவு மந்திரமாகவே கொண்டிருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்த வேண்டிய கட்டாயம் கழகத்திற்கு இப்போது ஏற்பட்டுவிட்டது!

இல்லையேல், இப்படியொரு முக்கியமான கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நேரத்தில், மத்திய இணை அமைச்சர் ஒருவர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் ஒரு கட்சியைக் குறித்து இவ்வளவு பெரிய அவதூறான குற்றச்சாட்டைக் கூறியிருப்பாரா?

அவர் என்ன அப்படிப் பேசிவிட்டார் எனக் கேட்பவர்களும் - அவர் அப்படியொன்றும் பேச வில்லை எனக் கதைப்பவர்களும் - அக்டோபர் 31-ஆம் நாள் தினமணி சென்னைப் பதிப்பு, மூன்றாம் பக்கத்தைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கட்டும்.

> "தி.மு. கழகத்தின் தேச விரோத நடவடிக்கைகளை அரசியல் பூர்வமாக சந்திக்க விரும்புகிறோம். இது குறித்து மக்களிடம் எடுத்துக் கூறுவோம். அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இது தொடர்பாக தீவிரப் பிரச்சார இயக்கம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சர் கிருஷ்ணகுமார் குறிப்பிட்டார்."

உடன்பிறப்பே, குறும்பு நிறைந்ததும் - குதர்க்கத்தனமானதும் - கொடுமையான குற்றச்சாட்டும் தன்மை வாய்ந்ததுமான - இந்தப் பேச்சைக் கழகம் கண்டிருக்கிறது என்பதைச் செயல்மூலம் காட்ட வேண்டும் அல்லவா? அதற்கான முதல் கட்டமாகத்தான் - மத்தியில் உள்ள சில அமைச்சர்கள் எவ்வளவு பொறுப்பற்றத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை பொறுப்புள்ளவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் முயற்சியாக, கழகம் நவம்பர் 2-ஆம் நாள் டெல்லிக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்ததே தவிர, வேறல்ல! இதனைப் புதிய தேசபக்தத் திலகங்கள் புரிந்து கொள்ளட்டும்!

அன்புள்ள,

மு. க.

(03-11-1991)

1821. மரங்களில் மறைந்து - மறைந்து - மறைந்து

உடன்பிறப்பே,

தமிழ்நாடு பிராமண சங்கத்தால் எழுந்த அரசியல் சர்ச்சை என்ற தலைப்பிட்டு, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதை என்னும் பழமொழியையும் நினைவுபடுத்தி,

* பார்ப்பன இளைஞர்கள் சிலம்பாட்டத்தில் பயிற்சி பெறும் ஒரு புகைப்படத்துடனும் -
* ஏராளமான பெண்மணிகள் கலந்து கொண்ட திருச்சி பிராமணர் சங்க மாநாட்டின் மாதர் அணி ஊர்வலத்தின் மற்றொரு புகைப்படத்துடனும் -

இந்தியா டுடே எனும் ஏடு எழுதியுள்ள கட்டுரையில், பூனைக்குட்டி வெளியே வந்து விட்டதை நாம் சொல்லாமலே - புரிந்து கொள்ளக் கூடிய சில முக்கிய விஷயங்கள் இருக்கின்றன.

முதலில் கட்டுரையாளரோ அல்லது அந்தப் பத்திரிக்கையாளரோ, தி. மு. கழகம் தனிப்பட்ட பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை என்பதையும், பார்ப்பனியத்தைத்தான் எதிர்க்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவேளை புரிந்துகொண்டதை மறைத்து விட்டு - வேண்டுமென்றே திட்டமிட்டு - உண்மைக்கு மாறான ஒரு கருத்தைச் சொல்ல நாம் பார்ப்பனர்களை எதிர்ப்பதாகக் கூறுகிறார்களோ என்னவோ?

> பார்ப்பனர்களுக்கு உரிய பங்கு எதுவோ, அதனை அவர்கள் பெற்றுக் கொள்ளவும் - பார்ப்பனரல்லாத மக்களுக்கு உரிய பங்கு எதுவோ, அது அவர்களுக்குக் கிடைத்திடவும்தான் நீதிக்கட்சி, சமநீதி நோக்குடன் தொடங்கப்பட்டது.

என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை மறவாமல் - இந்த இயக்கம் பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையில் வெறுக்க வில்லை என அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியதையும் மறவாமல்தான், இப்போதும் நமது கருத்துகளை எடுத்து வைக்கிறோம். செயல்பட்டு வருகிறோம்.

ஆனால், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் சிலர் அல்லது அவர்களால் உசுப்பிவிடப்பட்ட அந்தச் சமுதாயத்தைச் சேராத சிலர் - நம்மை வகுப்புவாதிகள் என்றும் - துவேஷிகள் என்றும் தூற்றிடத் தவறுவதில்லை.

அதனால்தான் ஒரு தன்மையை நாம் எதிர்க்கிறோம் என்பதற்கு மாறாக, நபர்களையே நாம் எதிர்க்கிறோம் என்ற தவறான கருத்து பரவ வழி ஏற்படுகிறது. இது நமது குற்றமல்ல! நம்மைத் துவேஷிகள் என்றும், வகுப்புவாதிகள் என்றும் எழுதியும் பேசியும் வருகிற அவர்களின் குற்றமேதான்!

1989 சட்டப்பேரவைத் தேர்தலின்போதே, பிராமண சமூகப் பிரமுகர்களான முக்கிய புள்ளிகள் பலபேர் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையாக பிராமண சமூகத்தினர் தி. மு. கழகத்திற்கு வாக்களிக்கக் கூடாது என்று பத்திரிகைகளில் வெளியிட்டார்களே. அதை நான் திருச்சி தி. மு. க. மாநாட்டில் குறிப்பிட்டு - யார் வகுப்பு வாதத்தைத் தூண்டுகிறார்கள் தெரிகிறதா? என்று கேட்டதை யாரும் மறந்திருக்க முடியாது! மறந்தது போல் வேண்டுமானால் நடிக்கலாம்!

அதனால்தான் இந்தியா டுடே கட்டுரையாளர், மிகுந்த ஆதங்கத்துடன் சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த பழமொழியைத் தனது கட்டுரையில் தலைப்புகளில் ஒன்றாக்கியிருக்கிறார்.

"இது நம்ம ஆட்சி என்று தமிழ் நாடு பிராமண சங்கம் (தாம்பராஸ்) ஜெயலலிதாவின் பிரவேசத்தைப் பற்றி பெருமை அடித்துக்கொண்டது"

என்றும் அந்தக் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

"பிராமணர்களுக்கானக் கல்லூரி ஆரம்பிக்கும் முயற்சி, இதுவரை வெற்றி பெறவில்லை. இப்போது ஜெயலலிதாவின் ஆட்சியில் வெற்றி பெறும் என்று நம்புகிறார்கள்."

இதுவும் இந்தியா டுடே கட்டுரையில் வந்துள்ள ஒரு நம்பிக்கை கலந்த சிறப்புக் குறிப்புதான்!

"பிறர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் பிராமணர் ஆட்சிதான் நடக்கிறது என்று தமது சங்கப் பத்திரிகையில் எழுதிய சங்கத்தின் தலைவர், இப்போது, அது ஒரு சந்தோஷத்தில் சொன்ன வார்த்தை என்கிறார்."

இதையும் அதே ஏட்டில் வந்துள்ள கட்டுரையில்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்! சந்தோஷத்தில்தான் குறிப்பிட்டிருக் கிறார்கள்! சந்தோஷத்திற்கான காரணத்திலேயே சர்வமும் அடங்கியிருக்கிறதே!

உடன்பிறப்பே, மண்டல் கமிஷனை ஆதரிக்கிற தி. மு. க.வை தோற்கடியுங்கள் என்று தேர்தல் பிரச்சாரம் செய்து அறிக்கையும் வெளியிட்ட இவர்கள், இப்போது மண்டல் கமிஷனை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றுகிற ஜெயலலிதாவை எதிர்த்து அறிக்கை விடாதது மட்டுமல்ல - மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி, பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதத்திற்கே சலசலப்புக் காட்டியவர்கள், இப்போது 50 சதவீதத் தீர்மானத்திற்கு எதிராக சல்லடம் கட்டாதது ஏன் தெரியுமா? எனக்கேட்டு - இவர்களுக்குத் தெரியும் ஜெயலலிதா அரசு கொண்டு வந்துள்ள 50 சதவீதம் என்ற தீர்மானம் ஊரை ஏமாற்ற என்பது - என்றும் விளக்கியிருந்தேன்.

மீண்டும் அதேதான்! ஆம்! பூனைக் குட்டி வெளிவந்து விட்டது என்பது போல -

தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர் அதைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதையும் - இந்தியா டுடே கட்டுரை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

இந்த (50 சதவீதம்) இட ஒதுக்கீடு தீர்மானம் ஒரு அரசியல் வியூகம்! தனது அரசியல் வாழ்வின் நீடிப்புக்காக ஜெயலலிதா செய்தது! நடைமுறையில் அந்த யோசனைக்கு ஏதும் அர்த்தமில்லை. அதனாலேயே மற்ற மாநில சட்டசபைகள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை என்று பிராமண சங்கத் தலைவர் கூறுகிறார்.

இப்போது புரிகிறதா? நடைமுறைக்கு வரப்போவதில்லை அந்தத் தீர்மானம்! அந்த நம்பிக்கையில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானம்! நடைமுறைக்கு வருவதென்றால், வி.பி. சிங் அறிவித்த 27 சதவீதம்தான் வரும்! அப்படி வந்தாலும் அந்த 27-க்குள்ளேயே பொருளாதார அடிப்படையும் புகுத்தி விட்டால் எல்லாமே தொலைந்துவிடும்! அதனால்தான் 27-க்குள் பொருளாதார அடிப்படையை நுழைக்க வேண்டாம் என்று ஜெயலலிதா அரசின் தீர்மானத்தில் வலியுறுத்தவில்லை! உடன்பிறப்பே, இவ்வளவு கணக்கையும் பிராமண சங்கத் தலைவர் கூட்டி, வகுத்து, பெருக்கி, கழித்துப் பார்த்த பிறகு தான்,

> இந்த (50 சதவீதம்) இட ஒதுக்கீடு தீர்மானம் ஓர் அரசியல் வியூகம்!

என்று கூறியிருக்கிறார்! ஆம்! இதுவும் ஒரு சந்தோஷத்தில் சொன்ன வார்த்தையாகத் தானிருக்கும்!

கடைசியாகக் கட்டுரையாளர் முடிக்கிறார் - அது, இதோ:-

> அரசியல் வியூகமோ சாமர்த்தியமோ, தன்னை ஒரு பாப்பாத்தி என்று சொல்லிக் கொள்வதில் ஜெயலலிதா கூச்சப்படாதது மட்டுமல்ல - திராவிட பாரம்பர்யத்தில் வந்த அரசியல் தலைவி என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, அப்படி வந்திருப்பது பரிணாம வளர்ச்சியின் அடையாளம் என்கிறார்.

இது கட்டுரையாளர் தீட்டியுள்ள வாசகம்!

ஜெயலலிதாவின் பேச்சில் உள்ள முரண்பாட்டைக் கட்டுரையாளர் எடுத்துக் காட்டுகிறாரா - அல்லது நம்மை எதிர்ப்பதற்காகக் கட்டுரையாளர், தன்னையே குழப்பிக் கொள்கிறாரா என்பது, அவரது கட்டுரையின் முத்தாய்ப்பான கடைசி வரிகளைப் படிக்கும்போது ஏற்படுகிற இயல்பான சந்தேகமாகும்.

ஜெயலலிதாவுக்கு, எதிராகத் தமிழ் மக்களை திருப்புவதற்கு, கருணாநிதி பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்திருப்பதும் - ஒட்டு மொத்த பிராமண சமூகத்தின் குரல் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் பிராமண சங்கம் அறிக்கைகள் விடுப்பதும், செத்துப்போன பூதத்தை உயிர்ப்பிக்கும் வேலை மட்டுமல்ல, அபாயகரமானதுங்கூட!

இவ்வாறு அந்தக் கட்டுரை முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாக்கியம் தவறாக இடம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. சொற்பிரயோகமும் சரியில்லை.

பார்ப்பனிய எதிர்ப்பு என்பதை பார்ப்பன எதிர்ப்பு என்று திரித்துக் கூறப்பட்டுள்ளது.

வாக்கிய அமைப்பில் உள்ள குதர்க்கம் யாது?

பிராமண சங்கத்தின் பெயரால் அறிக்கைகள் வெளியிட்டது - 1989லேயே சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை தோற்கடிக்க பிரச்சாரம் நடத்தியது - மண்டல் கமிஷன் பரிந்துரையை எதிர்த்துக் கிளர்ச்சிகளைத் தூண்டியது - கடுகை மலையாக்கிக் கழக ஆட்சியைக் கலைக்கக் கடுந்தவம் புரிந்தது - காஞ்சி மடத்து ஆதரவும், ஆசியும் கழக ஆட்சிக்கு விரோதமாக வழங்கப்பட்டது - சுருங்கச் சொன்னால் அது ஒரு அரசியல் பீடமாகவே ஆனது -

இவைகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளியும் - இவைகளில் பலவற்றை மறைத்தும், முடிவுரை கூறியிருப்பதுதான் குதர்க்கம் எனப்படும்!

எனவே பிராமணர் சங்க அறிக்கைகளும், அவைகளையொட்டிய பேச்சுகளும், எழுத்துக்களும், செயல்களும்தான் முதலில்!

அதற்குப் பிறகே நமது எதிர்ப்பு! அதுவும் தனிப்பட்டோரை வெறுத்து அல்ல! அது ஒரு தன்மையை வெறுத்து அந்த எதிர்ப்பு!

திராவிட நாகரிகம், கலை, இலக்கியம், வரலாறு, திராவிட இயக்க சமுதாய சீர்திருத்தங்கள், பகுத்தறிவுக் கோட்பாடுகள், இவற்றை இளைய தலைமுறை அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக - திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்! அதன் சார்பாக அஞ்சல் வழிக் கல்லூரி என்று அறிவித்தால், அதனைத் தடை செய்திட வேண்டும் - அதன் தலைவரைக் கைது செய்திட வேண்டும் - என்று பேரவையில் பேசுவதும், பேசச் செய்வதும் அது குறித்து பரிசிலிக்கப்படுமென்று அவையிலேயே முதலமைச்சர் பதில் கூறி அச்சுறுத்துவதும் - பொறுத்துக் கொள்ளக் கூடியதா?

காலம் காலமாகப் பேசப்பட்டு, இப்போதும் ஆய்வுகள், ஆராய்ச்சிகள் வாயிலாக அறுதியிட்டுக் கூறப்படுவதுமான, திராவிட நாகரிகம், பண்பாடுபற்றிக் கேலியும், கிண்டலும் செய்து சிலர் எழுதுவதும், பேசுவதும் சகித்துக் கொள்ளக் கூடியதா?

ஒரு விளைவுக்கு மறு விளைவு என்றைக்கும் உண்டு என்பதில்தான், அடக்கப்பட்டு ஆழத்தில் அமுக்கப்பட்டிருந்த சமுதாயம் எழுபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆர்த்தெழுந்தது!

மீண்டும் அந்தச் சமுதாயத்தை ஆதிக்க சக்திகளும், மதவாத சனாதன சக்திகளும் - வாலி மன்னனை வீழ்த்தியதுபோல வீழ்த்துவதற்கு, மறைந்து மறைந்து வருவதை உணராமல் ஏமாந்து போக முடியாது!

அப்படி மரமாகப் பயன்படுகிற ஒருவரைக் கொண்டு, கழகத்தைப் பற்றி அவர் கூறியுள்ள பல பொய்களுடன் ஒரு பொய்யாக - என் மகள் கனிமொழி இந்தி படித்ததாக ஒரு பொய்யை, மற்றொரு பத்திரிகையான ஜூனியர் விகடன் வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறது.

எனவேதான் மரங்களில் மறைந்து - மறைந்து - மறைந்து வரும் மாயையை எதிர்க்க வேண்டிய கட்டாயம் உருவாகிறது! அது கடமையுமாகிறது!

குறிப்பு :- கடந்த காலத்தில் இந்த வாரப் பத்திரிகை உரிமையாளர் மீது சபாநாயகர் நடவடிக்கை எடுத்தபோது அதனைக் கண்டித்து முதல் குரல் கொடுத்ததே நான்தான். இதிலிருந்தே நமக்குத் தனிப்பட்டவர்கள் மீது எந்த வித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. அந்தத் தன்மையின் மீதுதான் என்பது தெளிவாகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(05-11-1991)

1822. ஜனநாயக நாடுகளின் கடமை என்ன?

உடன் பிறப்பே,

சர்வாதிகாரிகள் பலரைச் சரித்திரம் சுட்டிக் காட்டியிருக்கிறது. இதோ ஒரு வித்தியாசமான சர்வாதிகாரியை மியான்மர் நாடு உலகிற்கு அடையாளம் காட்டுகிறது. மியான்மர் என்று முன்னாள் பர்மாவுக்குத்தான் பெயர். அங்கே இருபத்தேழு ஆண்டுகளுக்கு மேலாக இராணுவ ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இராணுவ ஜெனரல் நீவின் என்பாரின் கொடுமைகள் கோரநர்த்தனமாடுவதைச் சகித்துக் கொள்ள முடியாமல் மக்கள் குமுறிக் கொண்டிருந்தனர்.

அந்த மக்களுக்கு தலைமையேற்று இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்ட, தியாகத் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பெண்மணி புறப்பட்டார்.

பர்மா, வெள்ளைக்கார ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைவதற்காகப் போராடியவரும் - 1947-ஆம் வருடம் ஜூலை மாதம் 19 ஆம் தேதியன்று அமைச்சரவைக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது ஆறு அமைச்சர்களுடன் சுட்டுக் கொல்லப்பட்டவருமான அவுங்சான் என்பவரின் மகள்தான், அந்த வீராங்கனை!

அவள் பெயர் சூ கியி எனினும், அவுங்சான் சூ கியி என்றே அவள் அழைக்கப்பட்டாள். தேசிய ஜனநாயக இயக்கம் உருவாயிற்று, அந்த தியாகியின் புதல்வியின் தலைமையில்!

மியான்மரில் சர்வாதிகார ஆட்சிக்கு விடை கொடுத்து விட்டு, ஜனநாயக மலர்ச்சிக்கு வழி வகுப்போம் என்று சூகியி குரல் கொடுத்தபோது - அவள் பேச்சைக் கேட்க மக்கள் கூடிய இடங்களில் எல்லாம் இராணுவத்தின் அச்சுறுத்தல்! மிரட்டல்! அடக்குமுறை!

ஆனால் அனைத்தையும் மீறி அணையுடைத்து எழும் நீத்தம் போல் மியான்மர் நாட்டு மக்கள், அரிமாக்களென ஆர்த்தெழுந்து - இராணுவ ஆட்சிக்கு அறைகூவலாக நின்றனர்.

கைது செய்வது - காராக்கிரகத்தில் தள்ளுவது - கடுமையாக நடத்துவது - காட்டு மிராண்டித்தனமாகப் பழி வாங்குவது போன்ற முறைகளால், நீறுபூத்த நெருப்பாக இருக்கும் எதிர்ப்பு உணர்வுகளையும் - ஜனநாயக எழுச்சியையும் நசுக்கிவிடலாம் எனக் கணக்கிடும் சர்வாதிகாரத் தனத்தின் மொத்த உருவமான நீவின், தேசிய ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் இராண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்களைப் பல்வேறு குற்றங்கள் சுமத்தி சிறையில் அடைத்துவிட்டு, அவுங்சான் சூகியியையும் வீட்டுப் பாதுகாப்பில் வைத்தான்.

1989 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், வீட்டுச் சிறையில் வைக்கப்பட்ட அந்த தியாக வல்லிக்கு 1991 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே 1990 மே மாதம், ஜெனரல் நீவின், மியான்மர் நாட்டுத் தேர்தலை நடத்தினான். சிறைப் பறவைகளாகக் கிடக்கும் தேசிய ஜனநாயக இயக்கத்தினர், தேர்தலில் வெற்றி பெற முடியாது எனக் கணக்கிட்டு நீவின் நடத்திய அந்தத் தேர்தலில், இருபத்தேழு ஆண்டுக்கால இராணுவ ஆட்சியை பர்மிய மக்கள் முடித்து வைக்கும் ஆசையுடன் தேசிய ஜனநாயக இயக்கத்துக்குப் பெரும்பான்மையான ஆதரவை வழங்கினர்.

மிக விரைவில், ஜனநாயக முறைப்படி சூகியி தலைமையில் ஆட்சி அரும்பி, மலர்ந்து, மணம் வீசும் என எதிர்பார்த்துக் களித்திருந்த மக்கள் பெரும் ஏமாற்றத்துக்கு ஆளாயினர்.

தேர்தல் முடிந்து, சூகியி தலைமையிலான மக்கள் இயக்கம் வெற்றி பெற்றிருந்தும்கூட, ஓராண்டுக் காலமாகச் சிறைக் கதவு திறக்கப்படாமலே இருக்கிறது. ஜெனரல் நீவின் நடத்திய இராணுவ சர்வாதிகார ஆட்சியே தொடர்கிறது.

நோபல் பரிசை வாங்குவதற்குக்கூட சூகியி அனுமதிக்கப்படவில்லை. ஐ.நா. சபையின் மனித உரிமைக் குழு, சூகியியைச் சந்திப்பதற்காக மியான்மர் நாட்டுக்கு வந்தபோதுகூட, அதற்கு இராணுவ ஆட்சி அனுமதி தரவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சிக்குத் தடைச் சுவர் எழுப்பிவிட்டு, எதேச்சாதிகாரக் கொடுங்கோல் நடத்தும் நீவின் ஆட்சியை எதிர்த்து, சிறையில் இருந்தவாறே சூகியி உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

எட்டு நாட்களுக்கு மேலாகத் தொடரும் அந்த உண்ணா நோன்பினால், சூகியி உடல் மிகவும் நலிவுற்றிருப்பதாகச் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

உறவினர்களோ, நண்பர்களோ யாரும் அந்தப் பெண்மணியைப் பார்க்க இராணுவ ஆட்சி அனுமதிக்கவில்லை. வீட்டுச் சிறையிலிருக்கும் அந்த வீராங்கனையின் தொலைபேசிகளும் துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றன. அவளது கணவன்கூட செய்தியாளர்களிடம் தொடர்பு கொள்ளக்கூடாது என்று கட்டளை! சூகியிக்கு இரண்டு பிள்ளைகள்! அவர்களும் இராணுவத்தின் மிரட்டலுக்கும், கொடுமைக்கும் அஞ்சி நடுங்கித்தான் உயிர் வாழவேண்டியிருக்கிறது!

எங்குமில்லாத கேடாக, வெற்றிபெற்ற மக்களின் கட்சியிடம் முறைப்படி ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்காமல் - ஓராண்டுக்கு மேலாக ஜனநாயகத்தின் வெற்றியைக் கழுத்தைப் பிடித்து நெரித்துக் குற்றுயிராக்கிவிட்டு - பட்டாளத்துத் தலைமையின் பரிபாலனத்தை நடத்திக் கொண்டிருக்கும் இந்த பயங்கரவாதச் செயலைப் பலநாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போலவே, இந்தியாவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

உலக முழுதுமுள்ள ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளோர் அனைவரும் - மியான்மர் நாட்டில் நடக்கும் அக்கிரமத்தைக் கண்டித்தும், சிறைப் பறவையாக மட்டுமின்றி, உண்ணா நோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வாடிக் கொண்டிருக்கும் சூகியியை எண்ணிக் கலங்கியும் - என்ன நடக்குமோ என்று ஏங்கித் தவித்திடும் இந்த நேரத்தில், மக்களின் தீர்ப்புக்குப் பிறகு ஒரு நாட்டில் என்ன நடக்க வேண்டுமோ அது நடப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து அறிவித்து ஆவன செய்திட முன்வந்தால்தான், உலகில் உள்ள பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று எனப்படும் இந்திய நாடு, தனது கடமையைச் செய்ததாகப் பொருள்!

இல்லையேல், சர்வாதிகார இருளில் ஒரு ஜனநாயகப் புறா, எதேச்சாதிகாரக் கோட்டானுக்குப் பலியாகிவிடும்.

உடன்பிறப்பே, சூகியி வாழ்வின் சோகத்தை எண்ணி விழி சோர்ந்திடும் போது - அவளது வீரத்தையும், தியாகத்தையும் நினைத்துப் பார்த்துப் பெருமிதம் கொள்ள முடிகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(07-11-1991)

1823. உண்மை என்ன? உணர்ந்து கொள்ளட்டும்!

உடன்பிறப்பே,

இன்றையக் கடிதத்தில் முக்கியமான ஒரு விஷயத்திற்கு வருவதற்கு முன்பு, தொல்காப்பியம் தந்த தொல்காப்பியர் குறித்து எழுந்த பழங்கதையொன்றை உனக்குச் சொல்ல விரும்புகிறேன். எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியத்திலிருந்து பொருளதிகாரப் பகுதியை முழுமையாக இல்லாவிடினும், ஓரளவாவது எளிய நடையில் குறளோவியம் போல எழுத வேண்டுமெனப் பெரும் புலவர் வ.சு.ப. மாணிக்கம் அவர்கள், குறளோவியம் வெளியீட்டு விழாவில் எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்ததை மனத்திற் கொண்டு - தொல்காப்பியம் குறித்த பல்வேறு அறிஞர் பெருமக்களின் நூல்களைத் தொடர்ந்து படித்து வருகிறேன். விளக்க நூல்கள் - உரை நூல்கள் - ஆய்வு நூல்கள் இப்படிப் பல!

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியோர் அக்காலத்தில் இளம்பூரணர் - பேராசிரியர் - நச்சினார்க்கினியர் ஆகியோர் பண்டையுரையாசிரியப் பெருமக்கள் எனப் போற்றப்படுவர். அவ்வுரைகளை ஆய்வு செய்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்களால் எழுதப் பெற்று, 1970 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ள தொல்காப்பியம் - தமிழ் இலக்கிய வரலாறு எனும் அரிய ஆராய்ச்சி நூலைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு, இப்போது நான் மேற்கொண்டுள்ள முயற்சியின் காரணமாகக் கிட்டியது.

அந்த நூலில் குறிப்பிடப்படும் ஒரு கதையை - வெள்ளை வாரணனார் அவர்கள் பொய்க்கதை என்றே அடித்துக் கூறுகிறார் திட்டவட்டமாக!

தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியருக்கு முன்பே உரை எழுதியவர் பேராசிரியர் எனும் உரையாசிரியர்.

எனவே, அந்தப் பேராசிரியர் காலத்திலேயே கட்டிவிடப்பட்டு, புழக்கத்திற்கு வந்திருந்த அந்தப் பொய்க்கதையை உரையாசிரியர் பேராசிரியர் ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் - அந்தக் கதையின் பொய்மையை உணராத நிலையில், நச்சினார்க்கினியர் அக்கதையைத் தனது சிறப்புப்பாயிர உரையில் சேர்த்துள்ளார் என்றும், வெள்ளைவாரணனார் விளக்குகிறார் தனது ஆய்வு நூலில்!

வெள்ளைவாரணனார் அவர்கள் அருந்தமிழாற்றல் பெற்ற பெருமகன் என்பது மட்டுமல்ல! செந்தமிழ்ச் சீயம் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மாணவராகத் திகழ்ந்து, தொல்காப்பிய ஆராய்ச்சிக்குத் துணை நின்றவராக விளங்கி, பின்னர் பத்து ஆண்டுக்காலம் முயற்சி செய்து தொல்காப்பிய ஆராய்ச்சி நூலைத் திறம்பெற ஆக்கியவராவார்.

அந்த ஆராய்ச்சி நூலில் சுட்டிக் காட்டப்படும் தொல்காப்பியர் குறித்த கதையை, வெள்ளைவாரணனார் அவர்களின் கடுந்தமிழ் நடையில் கூறாமல் - எளிய நடையில் உனக்குத் தருகிறேன்.

முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒன்றாகச் சேர்ந்து மேருமலையில் போய் தங்கினார்கள். அந்தப் பாரம் தாங்காமல் மேருமலை தாழ்ந்தது. தராசுத் தட்டில் ஒரு தட்டு தாழ்ந்து மற்றொரு தட்டு உயர்வது போல வடதிசை தாழ்ந்து, தென்திசை உயர்ந்தது. அதுகண்டு அஞ்சிய தேவர்கள் இருதிசையையும் சமப்படுத்த வேண்டுமென்று அகத்திய முனிவரிடம் வேண்டினர். அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அகத்தியர், கங்கையிடம் சென்று காவிரியை வாங்கிக் கொண்டார். பிறகு யமதக்கினி முனிவரிடம் சென்று, அவர் மகன் திரணதூமாக்கினியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார். திரணதூமாக்கினியின் சகோதரன்தான் பரசுராமர். திரணதூமாக்கினி என்பது இயற்பெயர். தொல்காப்பியர் என்பது புனைப்பெயர். அந்தத் திரணதூமாக்கினியைப் பார்த்து அகத்தியர், நீ போய் குமரியாரை அழைத்து வருக! எனக் கட்டளையிட்டார். அப்படி அழைத்து வரும்போது ஒரு நிபந்தனையும் விதித்தார். அவளுக்கு முன்னும் பின்னும், நாலு கோல் நீளம் விலகி நின்று அழைத்து வரவேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

அவ்வாறே தொல்காப்பியர் என்ற திரணதூமாக்கினி, குமரியை அழைத்துக் கொண்டு பொதிய மலையில் தங்கியிருக்கும் அகத்தியரைக் காண வரும்பொழுது, வைகையாற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து விட்டது.

அந்தக் குமரியார் யார் என்பதை விளக்கிவிடுகிறேன். புலத்தியன் என்பவரின் சகோதரியான உலோபா முத்திரையார் என்பவருக்குத்தான் குமரியார் உலோபா முத்திரையார் எனப் பெயர்! அவளைத்தான் அகத்தியர் திருமணம் செய்துகொண்டு - பிறகு துவராபதிக்குச் சென்று அரசர்களையும், வேளிர் குடியினரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தென்திசையைச் சமப்படுத்த பொதிய மலைக்கு வந்து விட்டார். அதனால்தான் குமரியாரான உலோபாமுத்திரையை அழைத்து வரும் பொறுப்பு, திரணதூமாக்கினிக்கு அகத்தியரால் அளிக்கப்பட்டது.

அழைத்து வரும் வழியில் வைகை வெள்ளம் குறுக்கிட்டது. உலோபா முத்திரையை வெள்ளம் இழுத்துச் சென்றது. அவளைக் காப்பாற்ற வேண்டும்! என் செய்வது? முன்னும் பின்னும் நாலுகோல் நீளம் விலகியிருந்தல்லவா உடன் வரவேண்டுமென கட்டளை!

நிபந்தனையைப் பார்த்தால் உலோபா முத்திரை வெள்ளத்தில் அல்லவா போய்விட நேரிடும்! எனவே திரணதூமாக்கினியெனும் தொல்காப்பியர், ஒரு மூங்கிலை முறித்து அவளிடம் நீட்டி அதைப் பிடித்துக் கொண்டு தன்னுடன் வந்து கரையேறுமாறு செய்தார். ஆனால் அந்த மூங்கிற் கோல், நாலு கோல் நீளமில்லை. ஒரு கோல் அளவே குறுகியிருந்தது. நாலு கோல் அளவு விலகியிருந்து அழைத்து வரவேண்டுமென சொன்னதற்கு மாறாக, ஒரு கோல் அளவே விலகியிருந்து வந்ததால் அகத்தியர் ஆத்திரம் கொண்டு, இருவருக்கும் நற்கதியெனும் சுவர்க்கம் கிடைக்காது எனச் சாபமிட்டு விட்டார். ஒரு குற்றமும் செய்யாத எம்மைச் சபித்ததால் அகத்தியருக்கும் சுவர்க்கம் கிட்டாமல் போகட்டும் எனத் தொல்காப்பியர் எதிர்ச்சாபம் இட்டார். அதனால் வெகுண்ட அகத்தியர், அதங்கோட்டாசானைப் பார்த்து நீர் தொல்காப்பியன் செய்த நூலைக் கேளாதீர்! எனக் கூறினார். தொல்காப்பியரோ, தனது நூல் அரங்கேற்றத்துக்கு அதங்கோட்டாசானை அழைத்தார்.

அகத்தியர் கோபத்திற்கும் ஆளாகாமல் - தொல்காப்பியர் வேண்டுகோளையும் நிராகரிக்காமல் - அதங்கோட்டாசான் -

அரங்கேற்றத்துக்குச் சென்று, நூலில் சில குறைகளைக் கூறினார். அதற்குத் தொல்காப்பியர் தெளிவான விடை அளித்தார்.

உடன்பிறப்பே, இதுதான் கதை! இந்தக் கதையில் முக்கியமாக தொல்காப்பியருக்கு இயற்பெயர் திரணதூமாக்கினி என்பதாகும்! அவர் யமதக்கினி முனிவரின் மகன்! அதாவது பரசுராமரின் சகோதரர்! மொத்தத்தில் வடநாட்டில் பிறந்து வளர்ந்தவர் - தமிழ்நாட்டுக்காரர் அல்ல! அகத்தியரின் ஆணை கேட்டு நடக்கக் கூடியவர் - அகத்தியரின் கோபத்துக்கு ஆளானவர்!

இக்கதை குறித்து வெள்ளைவாரணனார் தமது நூலில் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

* இவ்வாறு ஒவ்வாக் கதைகளையும், முன்னோர் பெயரால் புது நூல்களையும் பிற்காலத்தில் தாமே படைத்துக்கொண்டு பொருந்தாக் கொள்கைகளைப் பரப்பித் திரிதலையே பொழுது போக்காகக் கொண்ட ஒரு சிலர், இடைக்காலத்தில் நம் தமிழகத்தில் தோன்றித் தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர் வரலாறுகளை யெல்லாம் நம்மனோர் உள்ளவாறு உணராதபடி குழப்பி விட்டார்கள்.

* இக்கதையினை நச்சினார்க்கினியர்க்கு முன்னுள்ள சான்றோரேயன்றிப் பின்வந்த சிவஞான முனிவர் முதலிய பெருமக்களும் மறுத்துரைத்துள்ளார்கள்... இப் பொய்க் கதையினை மெய்யெனக் கூறித் தமிழ்க்குடியில் பிறந்த தொல்காப்பியனாரைத் திரணதூமாக்கினி என ஆக்கித் தமிழக வரலாற்றில் புகை மூளச் செய்வது தகாது.

* தொல்காப்பியனார் வரலாற்றை உள்ளவாறு அறிவதற்கு அவரால் இயற்றப் பெற்ற தொல் காப்பியம் என்னும் முழு முதல் நூலும், அந்நூன்முகத்துக் காணப்படும் சிறப்புப் பாயிரமுமே சான்றாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குங்கால் - அகத்தியனார்க்கும், தொல்காப்பியனார்க்கும் யாதொரு தொடர்புமில்லை என்பது தெளிவாம்.

இவையும், இவைபோன்ற பல தெளிந்த ஆய்வு நூல்கள் அருந்தமிழ்ப் புலவர் பெருமக்களால் இயற்றப்பெற்று வெளிவந்துள்ளவையும் - தொல்காப்பியனார் யமதக்கினி

முனிவரின் புதல்வரல்ல, பரசுராமனின் சகோதரரல்ல, என்று திட்டவட்டமாகத் தெளிவு படுத்திய பிறகும் - தொல்காப்பியருக்கு இயற்பெயர் திரணதூமாக்கினிதான். அவர் பிராமணர்தான். அவர் இயற்றிய தொல்காப்பியம் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்தது தான் என்ற வாதங்களை அண்மைக் காலமாகச் சிலர் அடுக்கிப் பார்க்கிறார்களே, ஏன்?

பைந்தமிழ் கற்றுத் தெளிந்து, தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள பார்ப்பன அறிஞர்களை நாம் என்றைக்கும் மறுத்தது இல்லை!

திராவிட வித்யாபூஷணம் உ.வே. சாமிநாத அய்யராகட்டும் - பரிதி மாற் கலைஞராக உலவிய சூர்ய நாராயண சாஸ்திரியாகட்டும் - பாவேந்தர் போற்றும் பாரதியாகட்டும் - அண்ணா போற்றும் அக்ரகாரத்து அதிசய மனிதர் வ. ரா. ஆகட்டும். அவர்களை நாம் போற்றத் தவறியதில்லை! வ. ரா. குடும்பத்திற்கு கழக அரசு கடைசிவரை துணை நின்றது!

வள்ளுவர் படம் வரைந்த, மறைந்த வேணுகோபால சர்மா குடும்ப நிதியாக மூன்று லட்ச ரூபாய் பெருநிதி வழங்கியது, கழக அரசு!

அதற்காக திருவள்ளுவரைப் பிராமண குலத்து உதித்தவர் என்றும், தொல்காப்பியரும் அவ்வாறே என்றும் பொய்யுரைப்பதை எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்.

ஏன்? இந்தப் பொய்யுரைகள் தினமணி போன்ற ஏடுகளுடன் நில்லாமல் - தேவி போன்ற வார ஏடுகளிலும் இடம் பெறத் தொடங்கியுள்ளன என எண்ணிப் பார்த்தேன்.

காரணத்தை நான் சொல்லாமலே தேவி இதழில் பேட்டி அளித்துள்ள பிராமண சங்கத் தலைவரே தெளிவுபடுத்தி விட்டார்.

பிராமணர்களைத் தமிழரல்லாதவர் போல முத்திரை குத்த முனைவதுதான் கருணாநிதியின் இப்போதைய முயற்சி. திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் அதன் உருவாக்கம்தான். தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் பிராமணர்தானே!

இதுதான் பிராமண சங்கத்தலைவரின் பேட்டியில் முக்கியமான அம்சம்!

உடன்பிறப்பே, உனக்குக் காரணம் புரிந்து விட்டதல்லவா?

திராவிட நாகரிகம், கலை, இலக்கியம், வரலாறு, மொழி, இனம், இவை பற்றிய அறிவும் - பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற ஆக்கபூர்வமான சிந்தனையும் - இளைய தலைமுறையினர்க்கு உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காக, நாம் திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் - அஞ்சல் வழிக் கல்லூரி கண்டிருப்பதுதான் அந்த வட்டாரத்தினருக்கு - அதிலும் அந்தச் சங்கத் தலைவருக்கு ஆத்திரத்தை உருவாக்கியிருக்கிறது!

இல்லையேல், இந்த மன்றத்தை தடை செய்ய வேண்டும் என்று சட்டப்பேரவையில் பேசவும் - அது குறித்துப் பரிசீலிக்கப்படுமென முதல்வர் அச்சுறுத்தவுமான நிகழ்வுகள் எல்லாம் ஏற்பட்டிருக்குமா?

பார்ப்பனியத்தை விடுத்து, தமிழர்களாக மட்டுமல்ல - எல்லோருமே மனிதர்களாவோம் வாரீர்! என்று அழைப்பதுதான் தி. மு. கழகம்! இந்தக் கழகம் கண்ட அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தும் அதுதான்!

பழைய குப்பையைக் கிளறுகிறோம் - செத்துப் போன பூதத்தை எழுப்புகிறோம் - பிராமண எதிர்ப்பு அரசியலை நம்பிக் கெடப்போகிறோம் - என்றெல்லாம் சில பத்திரிகை ஆசிரியர்கள் எழுதுகிறார்களே! பேசுகிறார்களே! ஆதங்கப்படுகிறார்களே! அவர்களை நான் கேட்பதெல்லாம் இதுதான் :-

* ஒரு கோடி ரூபாயில் வேதாகம சாஸ்திரக் கல்லூரி தேவையா?
* ஆலய நிதி வசூல் தேவையா?
* அறநிலையத் துறைக்குப் போட்டியாக ஆலய வாரியம் எதற்காக?
* திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தைக் கரித்துக் கொட்டுவது ஏன்?
* வடமொழியிலிருந்தே தொல்காப்பியம் வந்தது எனும் வாதம் எமைப் புண்படுத்தாதோ?
* தொல்காப்பியர் பிராமணர் என்று சாதிப்பது எதற்காக?

இதுபோல் வலுவில் வளர்க்கப்படும் வம்புகளுக்கும், செய்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தால் - அது எப்படி தனிப்பட்ட முறையில் பார்ப்பன எதிர்ப்பு என்று ஆகும்?

பார்ப்பனியத்தைத்தானே அண்ணா எதிர்த்தார் என்று அவர்களே வாதம் செய்துவிட்டு, ஆம்! அதைத்தான் நாங்களும் எதிர்க்கிறோம்! என்று நாம் கூறும் போதுமட்டும் அது எப்படி பார்ப்பனர் எதிர்ப்பு என்று ஆகிவிடும்?

பார்ப்பனர்களிலும் அறிஞர்கள் உண்டு என்பதை மறுத்தது எவர்?

இருப்போர் போதாதென்று, திருவள்ளுவரையும், தொல்காப்பியரையும் அந்தப் பட்டியலில் சேர்ப்பது நியாயமா?

ஆன்றோர் - சான்றோர் - அறிஞர் பெருமக்கள் என்றால் அது பிராமணர்களாகவேதான் இருக்க வேண்டுமா?

இதிலேகூட எங்களுக்கு நியாயமான இட ஒதுக்கீடு கிடையாதா?

பிராமணர் எதிர்ப்பு அரசியல் நடத்துகிறோம் என்று நம்மீது ஆதாரமில்லாமல் அவதூறு கூறுவோர் - ஆற அமர சிந்தித்துப் பார்க்கட்டும்! உண்மை என்ன என்பதைப் பிறகாவது உணர்ந்து கொள்ளட்டும்!

அன்புள்ள,

மு. க.

(08-11-1991)

1824. ஊருக்கு விளக்குவதே உனது பணியாகட்டும்!

உடன் பிறப்பே,

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் காட்ட வேண்டிய அக்கறையை மறந்து ஜெயலலிதா ஆட்சி, யாரை எப்படிப் பழிவாங்கலாம் - எவரை அவமானப்படுத்தலாம் - யாருடைய மதிப்பைக் குறைக்கலாம் என்பதில் மிகுந்த ஆவேசத்துடன் செயல்பட்டு வருகிறது. எதையும் தாங்கும் இதயத்தை அண்ணா அவர்களிடம் பெற்றுச் செயல்படும் நம்மை, உயிரைப் பறிப்பேன் என்று மிரட்டிக் கூடப் பணிய வைக்க முடியாது என்கிற நமது கடந்த கால வரலாறு, இந்த அராஜக அரசுக்கு நினைவுக்கு வரத்தவறினால் அது, அவர்களின் ஆணவத்தால் விளையும் குற்றமே தவிர, நம் குற்றமல்ல!

நூறு நாள், இருநூறு நாள் என்று விழா எடுத்துக் கொண்டு - ஆயிரம் கார்பவனி நடாத்திக் கொண்டு - பதினைந்து நாட்களுக்குள் நாலு இடங்களில் தலைமை அலுவலகத்தை மாற்றிக் கொண்டு - துக்ளக் தோற்றான் போ! என்கிற அளவுக்கு தர்பார் செய்து கொண்டிருக்கும் இந்த ஆட்சியின் தலைவியாக இருக்கும் ஜெயலலிதா, தேர்தல் நேரத்தில் பேசியது என்ன? இன்று நடப்பது என்ன?

கருணாநிதி ஆட்சியில் ரேஷன் அரிசி அளவு குறைந்துவிட்டது பார்த்தீர்களா? நான் ஆட்சிக்கு வந்தால் ரேஷன் கடையில் அரிசி மழையாகப் பொழியும்.

இது தேர்தல் நேரத்தில் ஜெயலலிதாவின் வீராவேசப் பேச்சு!

ஆனால் இன்று நிலைமை என்ன? கழக ஆட்சியில் பனிரெண்டு கிலோ புழுங்கல் அரிசியும், எட்டு கிலோ பச்சரியுமாக இருபது கிலோ அரிசி தரப்பட்டது! அரிசி மழை பொழிய வைக்கிறேன் என்ற அம்மணியின் ஆட்சியில், எட்டு கிலோ அரிசி,

பட்டென்று போயிற்று! பனிரெண்டு கிலோ அரிசிதான் தர முடியும் என அறிவிப்பு வந்து விட்டது!

கழக ஆட்சியில் வெளிச்சந்தை அரிசி, கிலோ ஐந்து ரூபாய் ஆறு ரூபாய் என்று விற்ற போது - அய்யோ அரிசி விலை பத்து ரூபாய் ஆகிவிட்டதே என்று பம்மாத்து செய்து மக்களை ஏமாற்றிய ஜெயலலிதா, இன்று தன்னுடைய ஆட்சியில் வெளிச்சந்தையில் கிலோ அரிசி என்ன விலை என்று விசாரித்துப் பார்த்தாரா?

எட்டு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரையில், சென்னையில் வெளிச்சந்தை விலையாக இருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரிசி விலை மட்டுமா? அத்யாவசியப் பொருட்களின் விலை அனைத்துமே விண்வெளிக்கலம் ஏறி, வியர்வைத் துளிகளின் கரங்களுக்கு எட்டாத தொலைவில் எகிறிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன!

உணவுப் பண்டங்களின் விலை, உயிரை வாங்கிக் கொண்டிருக்கும்போது, தாறுமாறாக ஏற்றப்பட்ட பஸ் கட்டணங்களின் பாதிப்பு, பாட்டாளி மக்களையும், நடுத்தர மக்களையும் அவர் தம் இதய நாடிகளைத் துண்டிக்கும் அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

மிக மிகக் குறைந்த அளவு பஸ் கட்டண உயர்வு என்று கழக அரசு அறிவித்தபோது, ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதித்து, எதிர்ப்பு காட்டிக் கூச்சல் போட்டவர்கள் - எடுத்ததற்கெல்லாம் கழக அரசுக்கு எதிராகக் கொடும்பாவி கொளுத்தியவர்கள் - கறுப்புக் கொடி காட்டியவர்கள், இன்றைக்கு ஆட்சியில் அமர்ந்துள்ள ஜெயலலிதாவின் கட்சியினர் என்பதை நாடு மறந்து விடவில்லை!

ஆனால் அவர்கள் இன்று என்ன சொல்கிறார்கள்? நாட்டு மது என்கிற மலிவு மதுவை ஒழித்து விட்டார்களாம்! அதனால் நானூறு கோடி ரூபாய் நஷ்டமாம்!

அந்த நஷ்டத்தை மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு, மாநில அரசுக்குத் தருமேயானால், பஸ் கட்டண உயர்வை ரத்து செய்கிறோம் என்று வரிந்து கட்டிச் சவால் விடுகிறார்கள்!

மத்திய அரசைக் கேட்டுக் கொண்டா இவர்கள் இந்த முடிவு எடுத்தார்கள்?

இவர்கள் மலிவு விலை மதுவை ஒழித்த லட்சணம்தான் சந்தி சிரிக்கிறதே! ஆந்திரத்து பாக்கெட்டுகள் அமோகமாக வருகின்றன!

பாண்டிச்சேரி சரக்குகள் தாண்டிக் குதிக்கின்றன!

அவைகள் இல்லாவிடினும், இருக்கவே இருக்கிறது என்று, வேப்பம்பட்டை வேலம்பட்டை இல்லாமலே வைத்திருக்கும் கள்ளச்சாராயம் கடல் எனப் பெருகித் ததும்புகிறதே!

மலிவு விலை மதுவை ஒழித்தோம் என்று பெருமை பேசிக் கொள்ளலாமே தவிர, நடைமுறையில் கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தின் கொடி, மேலும் - மேலும் - உயர - உயரப் பறக்கத்தானே தொடங்கியிருக்கிறது!

விளக்கெண்ணெய் செலவுதான் மிச்சம்; பிள்ளை பிழைக்கவில்லை! என்று ஒரு பழமொழி உண்டு! அந்த நிலைதான் இப்போதுள்ள நிலை!

வெளிநாட்டு மது வகையறா களியாட்டம் போடுகிறது! கள்ளச் சாராயம் துள்ளிக் குதிக்கிறது! இடையே விஷச்சாராயம் விஷமம் செய்து உயிரைக் குடிக்கிறது!

தேர்தல் நேர வாக்குறுதிகளை நினைத்துப் பார்க்க நேரமில்லை அ.தி.மு.க. வினர்க்கு!

எந்த அதிகாரியை அடிக்கலாம், உதைக்கலாம் - யாரிடம் சுருட்டலாம் - எவரை வதைக்கலாம் - என்ன வந்தாலும், கண்துடைப்பாக நடவடிக்கை எடுத்துக் கடைசியில் காப்பாற்றுவதற்கு காவல் தெய்வம் இருக்கவே இருக்கிறது என்று, அடுக்கடுக்காக ஆளுங்கட்சியினரின் அடாவடித்தனங்கள் மிதமிஞ்சிப் போகின்றன!

நடந்து முடிந்த தேர்தலில் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பலியாகி அ.தி.மு.க.வை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திய மக்கள், அவர்கள் செய்துவிட்ட தவறை உணர்ந்து பார்க்கத் தொடங்கி விட்டார்கள்!

இதனைத் தொடர்ந்து ஊருக்கு விளக்குவது, உடன்பிறப்பே! உனது பணியாக இருக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

(09-11-1991)

1825. உறுதி மாறாமல் - கொள்கை குலையாமல்!

உடன்பிறப்பே,

தேசிய முன்னணியில் தி. மு. கழகமும் அங்கம் வகிக்க வேண்டுமென்று அந்த அமைப்பைத் தொடங்குவதற்கு முன்பு, முக்கிய தலைவர்கள் பலர் வலியுறுத்தியபோது, தி.மு. கழகத் தலைமை உடனடியாகத் தலைமைக்கழகக்குழு, நிர்வாகக் குழு, செயற்குழு ஆகிய குழுக்களைக் கூட்டி நீண்ட விவாதம் நடத்தி, கழகத்தின் தனித்தன்மையை எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்காத உறுதியோடும் - கழகம் கொண்டுள்ள இந்தித் திணிப்பு எதிர்ப்பு, மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சிக் கொள்கை, மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றும் கோரிக்கை ஆகியவற்றையும் தேசிய முன்னணி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இலட்சியப் பிடிப்பின் அழுத்தத்தோடும்தான் தேசிய முன்னணியில் ஓர் அங்கமாக இடம் பெற்று - தி. மு. கழகமே முன்னின்று தேசிய முன்னணி தொடக்க விழாப் பேரணியை சென்னை மாநகரில் சீரோடும், சிறப்போடும் நடத்தியது.

தேசிய முன்னணியில் தி. மு. கழகம் இடம் பெற்றதாலும் - தேசிய முன்னணி அரசிலும் இடம் பெற்றதாலும் - நமது கோரிக்கைகள் தமிழக மக்களின் நன்மைக்காகவும், இந்திய நாடு முழுமையுமுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் வெற்றிவாகை சூடியுள்ளன என்பதை நடுநிலையாளர் எவரும் மறுக்க முடியாது.

கழக அரசு கடந்த இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் எடுத்த அதிதீவிர முயற்சியாலும் - திரு. வி. பி. சிங் அவர்களின் நியாய உணர்வின் பாற்பட்ட நெஞ்சத்தினாலும் - காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைந்ததையும், மேலும் கழக

அரசு மேற்கொண்ட முயற்சியால், நடுவர் மன்றம் இடைக்கால நிவாரணம் அறிவித்ததையும் நன்றியுள்ள மக்கள் நினைவில் நிறுத்தவே செய்வர்.

அதைப்போலவே, பத்தாண்டு காலத்திற்கு மேலாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுமென அறிவித்த பிரதமர் வி.பி. சிங் அவர்கள், அதனைச் செயல்படுத்தத் தொடங்கியபோது, நாடாளுமன்ற மாநிலங்களவையில் உரையாற்றிய நேரத்தில் தந்தை பெரியாரையும், அண்ணாவையும், லோகியாவையும் நினைவு கூர்ந்து போற்றியதோடு - இந்த முயற்சியில் எனக்கு ஊக்கமும், உற்சாகமும் வழங்கிய தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நன்றியும் தெரிவிக்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேறுவதை நேரடியாக எதிர்க்கத் துணிவில்லாத காங்கிரசார், ராஜீவ் கோஸ்வாமி போன்ற மாணவர்களை வசப்படுத்தி, வசதிகள் செய்து கொடுத்து ரணகளக் கிளர்ச்சிகளை நடத்தினர். மண்டல் பரிந்துரை நிறைவேற்றமா? என மனம் குமுறிய பாரதீய ஜனதா, மற்றும் ஆதிக்க வெறி இயக்கங்கள் - மண்டலையும் எதிர்த்துக் கொண்டு மதச் சார்பற்ற தன்மைக்கு உலை வைக்க, இராமஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையையும் பூதாகாரமாக வளர்த்து இரத யாத்திரைக் கிளர்ச்சியில் ஈடுபட்டன.

எப்படியும் ஆட்சியில் இருந்தே ஆகவேண்டும் என எண்ணாத வி. பி. சிங் அவர்கள், இரதயாத்திரைக்குத் தடை விதிக்கச் செய்தார். எதிர் நடவடிக்கை எடுத்தார். ஆத்திரமுற்ற பாரதீய ஜனதா வி. பி. சிங்கின் ஆட்சிக்குத் தந்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டது.

இதுதான் சமயமென்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும், பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து கொண்டு - சந்திரசேகர் கூட்டத்தையும் துணைக்கு அழைத்துக் கொண்டு வி. பி. சிங் ஆட்சியைக் கவிழ்த்தனர்.

மதச்சார்பற்ற தன்மைக்கு அரணாகவும் - மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றும் படைக்கலனாகவும் - இருந்த வி. பி. சிங் அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்துக் களியாட்டம் போட்டனர் அன்று!

ஆனால் இன்று, அடடா! அவர்கள் பேசும் மதச் சார்பற்ற இதோபதேசம்தான் என்ன! மண்டல் கமிஷனுக்கு ஆதரவாக அடிக்கும் ஸ்டண்டுதான் என்ன! என்ன! என்ன!

கொண்ட கொள்கைக்காக ஆட்சியை தியாகம் செய்த வீரர் வி. பி. சிங் அவர்களை, ஆட்சியில் இருந்து கொண்டே தி. மு. கழகம் தமிழகத்திற்கு அழைத்து சிவப்புக் கம்பள வரவேற்பு வழங்கியது! சென்னை முதல் குமரிமுனை வரையில் கழகச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த எழுச்சி மிகு வரவேற்பில் நமது தோழமைக் கட்சித் தலைவர்களும் பங்கு கொண்டு அவரைப் பாராட்டினர்!

என் பதவி போனதும், என்னை விட்டுப் பலபேர் ஓடிவிட்டார்கள். ஆனால் தன்னுடைய பதவிக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தும், துணிவோடு என்னோடு இருப்பவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிதான் என்று அந்தப் பாராட்டு விழாக் கூட்டங்களில் திரு. வி. பி. சிங் குறிப்பிட்டதை, தமிழக மக்கள் அனைவருமே கேட்டிருக்கிறார்கள்.

முன்பொருமுறை, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்தமைக்காகவே 1976-ல் கழக ஆட்சி கலைக்கப்பட்டது போலவே - வி. பி. சிங் அவர்களை வரவேற்றுப் பாராட்டியதற்காகச் சந்திரசேகர் கோபமுற்றார்! அந்த திடீர் பிரதமரை மேலும் உசுப்பிவிடவும், அவரைவிட்டே கழக ஆட்சியைக் கலைக்கச் செய்யவும் - அவருக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் எடுத்த முயற்சி வென்றது!

ஏதேதோ இல்லாத காரணங்களைச் சொல்லி ஆட்சியைக் கலைத்தாலும் - சில காலத்திற்குப் பிறகு சந்திரசேகர் உண்மையைச் சொல்லி விட்டார். யார் யார் பிடிவாதத்தினால் கழக ஆட்சியைக் கலைத்தேன் என்று!

இப்போது நிலைமை என்ன? தேசிய முன்னணி ஆட்சி கவிழ்க்கப்பட்டது! கழக ஆட்சி கலைக்கப்பட்டது!

அங்கே மத்தியில் காங்கிரஸ் ஆட்சி!

இங்கே காங்கிரசின் துணையுடன் வென்ற அ.தி.மு.க. ஆட்சி!

இப்போது பாரதீய ஜனதாவின் தயவில்தான் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது! இனி எப்படியோ? தெரியாது!

இங்கேயுள்ள ஆட்சிக்கும், பாரதீய ஜனதாவின் பாராட்டும், ஆசியும் உண்டு! அது வெளிப்படையாகவே தெரிந்த விவகாரம்! மண்டல் கமிஷன் பரிந்துரை மத்திய காங்கிரஸ் அரசின் தந்திரத்தால் அந்தரத்திலே தொங்குகிறது!

மதச்சார்பற்ற அரசு என்ற கொள்கையும் நித்தமொரு கண்டம் என்ற நிலையில்தான் ஊசலாடிக் கொண்டிருக்கிறது!

தேசிய ஒருமைப்பாட்டு குழுவின் கூட்டம் நடந்தது டில்லியில்!

சுமுக முடிவு என்ற தலைப்புகளை ஏடுகள் வெளியிடத் தவறவில்லை!

நீதிமன்ற தீர்ப்பை உ. பி. முதல்வர் மீற மாட்டார் என்று செய்திகள் வந்தன!

ஆனால், அந்த முதல்வர் அங்கம் பெற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி என்ன அறிக்கை விடுத்துள்ளார்?

நீதிமன்ற தீர்ப்பை மீற மாட்டேன் என்று உ. பி. முதல்வர் கூறியுள்ளாரே தவிர, அதற்குக் கட்டுப்படுவேன் என்று கூறவில்லை என்பதாக பாரதீய ஜனதாத் தலைவர் தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தின் முடிவுக்கு எதிராக 48 மணி நேரத்திற்குள்ளாக அறிக்கை விட்டிருப்பதை - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளதாக செய்தி வந்திருக்கிறது.

எனவே, மண்டல் கமிஷன் பரிந்துரை நடைமுறைக்கு வராமல் பார்த்துக்கொள்வதிலும் - அதற்காக மத்திய காங்கிரஸ் அரசை மறைமுகமாக மிரட்டுவதிலும் - பாரதீய ஜனதா தீவிரமாக இருப்பது போலவே, மதச்சார்பற்ற நிலையைப் படுகுழியில் போட்டு மூடிவிட்டு, இந்து ராஜ் என்பதை நிலைநாட்டுவதற்கு அயோத்திப் பிரச்சினையை அக்கினியாஸ்திரமாகப் பயன்படுத்துவதிலும் தீவிரமாக இருக்கிறது!

பிரதமர் நரசிம்மராவ் என்ன செய்யப் போகிறார் என்பதே இந்திய நாட்டு அமைதியிலும் - பலகோடி பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திலும் அக்கறையுள்ளவர்களின் ஆவல்மிகுந்த கேள்வியாக இருக்கிறது இப்போது!

வி. பி. சிங் அவர்களைப் போல ஆட்சி பெரிதல்ல! கொண்ட கொள்கைதான் பெரிதெனக் குன்றென நிமிர்ந்து நிற்கப் போகிறாரா?

அல்லது வளைந்து கொடுத்து - பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்களின் முதுகுகளை ஆதிக்கக்காரர்கள் மேலும் வளைத்து ஒடிப்பதற்குத் துணைநிற்கப் போகிறாரா?

இந்தப் பிரச்சினைகளில் காங்கிரசின் உண்மை உருவம் என்ன?

நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும்!

இதில், தி.மு. கழகம் அன்றும் - இன்றும் - என்றும் உறுதி மாறாமலும், கொள்கை குலையாமலும் நிற்கிறது - நிற்கும் - என்பதற்கே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்!

ஏனெனில், இந்தப் பிரச்சினைகளில் நமது பணி ஏராளமாக இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(10-11-1991)

1826. மக்கள் மன்றம் எழுப்பும் கேள்வி!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சி அமைந்து ஆறுமாதம் முடியவில்லை. அதற்குள்ளாக ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், ஆளுங்கட்சியின் ஆதரவுக் கட்சி உறுப்பினர்களும் நடத்தும் அட்டகாசங்கள்! அப்பப்பா - சொல்லி மாளவில்லை!

புவனகிரியில் சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கு அதிகாரத் தோரணையில் அழைக்கப்பட்ட ஒரு அதிகாரி மிரட்டப்பட்டதும் - அதன் காரணமாக அலுவலர்களிடையே எழுந்த பதற்றமும் - பிறகு அது ஒருவழியாக மூடி மறைக்கப் பட்டதும், இந்த ஆட்சியின் துவஜாரோகணம் என்ற நிலையில் அமைந்த நிகழ்ச்சியாகும்.

நகர மக்களுக்கு அத்யாவசியமான குடி தண்ணீரைத் திருட்டுத்தனமாக ஓட்டலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்த மோசடியைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தமைக்காக - சீறிவிழுந்தார் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்! ஆளுங்கட்சியின் ஆதரவுக் கட்சிக்காரர்! தன்னைக் கேட்காமல் நடவடிக்கை எடுத்தது மட்டுமல்ல, தன் பேச்சைக்கேட்டு நடவடிக்கையை திரும்பப் பெறாத மாவட்ட ஆட்சித்தலைவரை மாற்றியே தீருவேன் என்று மார்தட்டிச் சபதமும் செய்தார்! அவர் செய்த சபதப்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அடுத்தநாளே அம்பேத்கர் மாவட்டத்திலிருந்து மாற்றப்பட்டார் என்பது செய்தி!

மதுராந்தகத்தில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர், தனது விருப்பம்போல் நடந்து கொள்ளவில்லையென்று பொறியாளர் ஒருவரைத் தாக்கிடவே - பொறியாளர்கள் அனைவரும் கிளர்ச்சியில் இறங்கினார்கள்! சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என்ற செய்திக்குப் பிறகு அந்தக் கிளர்ச்சி நிறுத்தப்பட்டது!

செங்கத்தில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் மகள் - பள்ளி மாணவி - செங்கம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு டெலிபோன் மூலமே உத்தரவு போட்டிருக்கிறார். சத்துணவு மையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சிலரை வேலை நீக்கம் செய்ய வேண்டும். சிலரை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும். இது அப்பாவின் உத்தரவு என்று கூறி இருக்கிறார், சிறிது நேரத்தில் சட்டமன்ற உறுப்பினரே பேசுகிறார். அதிகாரி - ஆகட்டும்! ஆவன செய்கிறேன் என்கிறார். எனினும் அன்று மாலையே ஒரு ஆளும்கட்சிக் கும்பல் - ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புகுந்து - அதிகாரியை அவமதித்து வாய்க்கு வந்தபடி ஏசியபடியே அலுவலகத்தின் மேசை நாற்காலிகளை அடித்து நொறுக்குகிறது.

ஊழியர்கள் கொந்தளித்து - சட்டமன்ற உறுப்பினரின் அராஜகப் போக்கை எதிர்த்து ஊர்வலம் நடத்துகிறார்கள். கூட்டம் நடத்துகிறார்கள். அங்கும் ஆளுங்கட்சியினர் வந்து காட்டுக் கூச்சலிட்டு குழப்பம் விளைவிக்கிறார்கள்.

மறுநாள் போலீசார் - செங்கம் நகர அ.தி.மு.க. செயலாளர், ஒன்றிய செயலாளர்கள் உட்பட 10 அ.தி.மு.க.வினரை கைது செய்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் 30க்கு மேற்பட்டவர்களுடன் காவல் நிலையத்துக்குச் சென்றார். உடனடியாக கைது செய்யப்பட்ட அ.தி.மு.க.வினரை விடுதலை செய் என்று ரகளை செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவரே அங்கு நேரில் ஆஜராகி - போலீசாரால் கைது செய்யப்பட்ட அ.தி.மு.க.வினரை விடுதலை செய்ய உதவி - சட்டமன்ற உறுப்பினரையும் சமாதானப்படுத்தி இருக்கிறார்.

விழுப்புரத்தில் அமைச்சர் ஒருவரும், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரும் அதிகாரிகளின் முன்னிலையிலேயே அழகு தமிழில் (?) அர்ச்சனை செய்து கொண்டார்கள் - அந்தப் பூசை முடிந்த பிறகு, தாக்குதல் தாசில்தார் மீது திரும்பியது! ஆத்திரமடைந்த அரசு அலுவலர்கள் வட்டாட்சி அலுவலகத்தின் முன்னே ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

திருச்சி நகரில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் தந்தையும், தம்பிகளும் ஒரு பெண்மணியின் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பொருட்களையெல்லாம் சூறையாடியிருக்கிறார்கள். இது அந்த மாவட்ட முழுதும் பரபரப்பான செய்தி!

இவற்றுக்கெல்லாம் ஜெயலலிதா நடவடிக்கை எதுவும் எடுக்கிறாரா என்றால் எடுக்கிறார்! ஆனால், அத்தனையும் கண்துடைப்பு நடவடிக்கையாகத் தானிருக்கிறது!

கைது செய்யப்பட்டவர்கள் என்று செய்தி வருகிறது! அடுத்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக அவர்கள் ஜாமீன் விடுதலை பெற முடிகிறது!

ஆளுங்கட்சிக்கும், ஆதரவுக் கட்சிக்கும் ஒருநீதி - எதிர்க்கட்சிக்கு ஒருநீதி என்ற அளவில்தான் நடவடிக்கைகள்!

காலாவதியாகி, செல்லரித்துப்போன வழக்குகளை எப்படியாவது புதுப்பித்து எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க வேண்டுமென்று, அதிலே காட்டுகிற ஆர்வமும், அக்கறையும் - ஆளுங்கட்சியினரின் அட்டகாசங்கள் ஊரறிய நாடறிய நடைபெற்றுங்கூட, அவற்றுக்கென எடுக்கப்படும் நடவடிக்கைகள் மட்டும் - அடிப்பதுபோல் அடிக்கிறேன்! நீ அழுவது போல் அழு! - என்ற ஏமாற்று நாடகமாக இருப்பானேன்?

கோவையில் சாராய சாம்ராஜ்ய மண்டலாதிபதியாகத் திகழ்ந்து பிடிபடுகிறார் ஒரு கோடீஸ்வரர்! ஏ, அப்பா - எத்தனை லாரிகள்! எத்தனை டாங்கர்கள்! எத்தனை ஜீப்புகள்! எத்தனை சாராயக் கிடங்குகள்! இவ்வளவையும் பிடித்த போலீஸ் அதிகாரி 24 மணி நேரத்தில் மாற்றப்பட்டு விடுகிறார் - பிடிபட்டவரும் ஓரிரு மணிகளுக்குள்ளாக ஜாமீனில் விடுதலையாகிறார்!

சேலத்தில் விஷ சாராயத்தில் 25 பேர் பலியாகக் காரணமாக இருந்த சாராயக் குறுநிலமன்னர் இவர்தான் என்று ஊரே பேசுகிறது! ஆனால், அவர் மன்னராகவே மனமோகன பவனிவந்து கொண்டிருக்கிறார். அவர் வாழும் பொன்னம்மாப் பேட்டை பக்கம் போலீஸ் நுழையவே முடியாது - நுழைய முயற்சித்ததாகவும் தெரியவில்லை.

என் செய்வது? இந்த ஆட்சியில் சட்டப் பேரவைக்கு எதிர்க்கட்சியினர் சென்று வருவதே - நித்யகண்டம் என்ற நிலைதானே இருக்கிறது! அத்துடன் அவையில் அவர்கள் பேசிவிட்டாலோ, தாழ்வாரத்தில் அல்லவா தடால் என்று தூக்கி எறியப் படுகிறார்கள்!

இப்படிப் பழிவாங்கும் படலத்தில் பரிசுகளைத் தட்டிப் பறித்து மகிழ்ச்சியில் திளைத்திடும் இந்த அரசு, மக்களின் அன்றாடப்

பிரச்சினைகள் எவ்வளவு அவலமாகி வருகின்றன என்பது பற்றித் துளியளவுக் கவலையாவது கொண்டதுண்டா?

ஆதரவுக் கட்சியான காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே, தனது தொகுதியில் பஸ் நிலையத்திலேயே பகிரங்கமாகக் கள்ளச் சாராயம் விற்பனையாகிறது என்று நிருபர்களிடம் கூறியுள்ளார். விலையுட்பட விவரித்திருக்கிறார். 180 மில்லி இருபது ரூபாயாம்! இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வருந்தியுமிருக்கிறார் அவர்! மத்திய அரசு தபால் கட்டணத்தை உயர்த்தியபோதுகூட, ஏழைகள் பயன்படுத்தும் கார்டு விலையை உயர்த்தவில்லை - ஆனால் மாநில அ.தி.மு.க. அரசு, பஸ் கட்டணத்தை ஏழைகள் சுமக்க முடியாத பளுவாக உயர்த்தியிருக்கிறது என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

பஸ் கட்டண உயர்வு மட்டுமா? மின் கட்டணத்தின் உயர்வு நூறு சதவிகிதமாக ஆக்கப்பட்டு அதற்குமேல் நாலு சதவிகித வரியும் விதிக்கப்பட்டு, நடுத்தர மக்கள் பெரும் வேதனைக்கு ஆளாகித் தவிக்கிறார்கள்! அத்யாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது! ரேஷன் கடைகளில் கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த 20 கிலோ அரிசி இப்போது 12 கிலோ என குறைக்கப்பட்டு, வெளிச்சந்தை அரிசி விலை கிலோவுக்கு பத்து ரூபாயையும் தாண்டி விட்டது!

மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அ.தி.மு.க. அரசு முனையப்போகிறதா? அல்லது வெறுப்பு உணர்வு, விரோதமனப்பான்மை, பழிவாங்கும் திருவிளையாடல் இவையே மன நிறைவானது என்று காலத்தைக் கடத்தப் போகிறதா?

இதுவே இன்று மக்கள் மன்றத்தில் பேருருவாக வளர்ந்து கொண்டிருக்கும் கேள்வி!

அன்புள்ள,

மு. க.

(12-11-1991)

1827. அடுத்து, அடுக்களையில் நடக்கலாம்!

உடன்பிறப்பே,

1976ல் கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு, தமிழக அரசு தலைமைச் செயலகத்திற்குத் துணைக் கட்டிடமாக, கோட்டைக்கு அருகில் பத்து மாடிக் கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழாவும் நடைபெற்றது.

1989ல் கழக ஆட்சி மீண்டும் மலர்ந்தபோது நாமக்கல் கவிஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, அந்தக் கட்டிடத்திற்கு நாமக்கல் கவிஞர் மாளிகை எனப் பெயர் சூட்டப்பட்டது.

1990ல் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டம் சென்னையில் நடத்துவதற்கு ஒப்புதல் பெற்று கழக அரசின் சார்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டபொழுது - நாமக்கல் கவிஞர் மாளிகையின் ஒரு அடுக்கில் சுமார் நூற்றி ஐம்பதுபேர் கலந்து கொள்வதற்கேற்ப வசதிகள் செய்ய வேண்டியிருந்தது. குளிர் பதனக்கூடம் - ஒலி பெருக்கி வசதி - கூடத்தையொட்டி விருந்துக் கூடம் - அதற்கும் குளிர்பதன வசதி - நவீன இருக்கைகள், மேசைகள் இப்படியாக அறுபது லட்ச ரூபாய் அளவுக்கு அந்த மண்டபம் சீர்பெற அமைந்திட திட்டம் தீட்டியபொழுது, அது ஒருநாள் மாநாட்டுக்காக மட்டுமின்றி, என்றைக்குமே நிரந்தரமாக அரசு நிகழ்ச்சிகள், அரசு சார்பில் அளிக்கப்படும் முக்கியமான விருந்துகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடுகள், தலைமைச் செயலக பல்துறை அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டங்கள் - நடைபெறுவதற்கும், அதன் தொடர்பான விருந்துகள் எதுவுமிருப்பின் அவற்றையும் அத்துடன் இணைந்துள்ள எழிலான விருந்துக் கூடத்தில் நடத்துவதற்கும் பயன்படும் வகையில் நல்ல முறையில் அமைக்கப்பட்டது.

ஆனால் அ.தி.மு.க. அரசு பதவியேற்றதுமே - முதலமைச்சர் அளித்த முக்கியமான விருந்து என்று, ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் நடந்ததே தவிர, பல லட்சம் செலவில் பாங்குற அமைக்கப்பட்ட நாமக்கல் கவிஞர் மாளிகையைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஏதோ ஒன்றிரண்டு அதிகாரிகள் கூட்டம் மட்டுமே அந்த மாளிகையில் நடைபெற்றது.

கழக ஆட்சியில் நிலையான பயன்தரும் வகையில் சகல வசதிகளுடன் அழகுற அமைக்கப்பட்ட அந்தக் கூடத்தில்தான் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்டக் காவல்துறை அதிகாரிகள் கூட்டம் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆனால் நடந்தது என்ன? மாவட்ட ஆட்சித் தலைவர்களையோ - காவல்துறை அதிகாரிகளையோ ஒரு சேரக் கூட்டி வைத்துப் பேசவில்லை!

முதல் நாள் பதினோரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்!

மறுநாள் பதினோரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்!

அழைத்துப் பேசிய இடம், முதல்வரின் இல்லம்!

வழக்கமாக முதல் நாள் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், காவல்துறை அதிகாரிகளையும் அழைத்து முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும், துறைகளின் செயலாளர்களும் கருத்துகளைப் பரிமாறி, விவாதித்து முடிவெடுக்கும் கூட்டங்கள் நடைபெறும்.

மறுநாள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மட்டுமே பங்கேற்று, பல்வேறு மக்கள் பிரச்சினைகள் - வளர்ச்சித் திட்டங்கள் - நல்வாழ்வுப் பணிகள் குறித்து விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஆனால் இப்போது அ.தி.மு.க. முதல்வர், தனது வீட்டிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தியுள்ளார்!

அதுவும் முதல்நாள் பாதி!

அடுத்த நாள் பாதி!

முதல்வரைத் தவிர அமைச்சரவைச் சகாக்கள் யாருமில்லை! இருந்துதான் என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்காக அவர்களைச் சீந்தாமல் விட்டிருக்கலாம்!

தலைமைச் செயலாளர் கூட இல்லாமல் என்ன விவாதம் நடத்திட முடியும்? எடுத்த முடிவுகள் பற்றி தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் தொடர்பு கொள்ள வேண்டிய தலைமைச் செயலாளரும் தள்ளி வைக்கப்பட்டிருப்பது ஏனோ?

ஒவ்வொரு துறையும், மாவட்டங்களில் எப்படிச் செயல்படுகின்றன - எப்படிச் செயல்பட வேண்டும்? என்பதை விவாதித்து நல்ல முடிவுக்கு வர - அந்தந்தத் துறைகளில் செயலாளர்கள் இருக்க வேண்டாமா?

எல்லாத்துறையும் முதல்வருக்கே அத்துபடி என்பதால் - முதல்வர், முதல்வரின் தனிச் செயலர், கலெக்டர்கள் அளவில் விவாதம் போதுமானது என நினைத்து விட்டார்கள் போலும்!

அப்படியாவது எல்லா கலெக்டர்களையும் ஒரே சமயம் பங்கேற்கச் செய்து விவாதித்திருந்தால் - திட்டங்களை ஒவ்வொரு மாவட்டமும் எப்படிச் செயல்படுத்துகின்றன என்பதை எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டு - ஒரு மாவட்டத்தினர் இன்னொரு மாவட்டத்தைப் பற்றி அறிந்து கொண்டிருக்க முடியும்!

அதுவுமின்றி,

இன்று பாதி!

நாளை பாதி!

என ஒரு நாடகம் - மந்திராலோசனைபோல மிக ரகசியமாக, போயர்ஸ் தோட்டத்து வீட்டுக்குள்ளேயே நடைபெற்றுள்ள விசித்திரத்தை என்னவென்று சொல்வது!

சில நாட்களுக்கு முன்பு, மாவட்ட வாரியாகக் கட்சிப் பிரமுகர்களை அழைத்து முதல்வர் விவாதித்தார்.

அதன் விளைவாக, கள்ளச்சாராயப் பேர்வழிகளைப் பிடிப்பதில் காவல்துறை இனி கெடுபிடி செய்யாது என உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுதிமொழி உடனடியாக அமலுக்கும் வந்து விட்டதால் அ.தி.மு.க. பிரமுகர்களிடம் அளவில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது!

இப்போது, மாவட்டங்களில் அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு இடையூறு ஏதுமின்றி ஆதாயப் பாதைகள் போட்டுத் தருமாறும் - ஒப்பந்தங்கள் - குத்தகைகள் - இவற்றில் சட்டம், விதிமுறைகளை நெருக்கிப் பிடிக்க வேண்டாமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கவே, வீட்டுக்குள்ளேயே கூட்டம்! அதுவும் பாதிப் பாதியாக! உயர் அதிகாரிகள் யாருமின்றி!

இந்த இரு பாதிப்பாதி கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது என்ன? எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மூச்! யாருக்கும் எந்தப் பத்திரிகைக்கும் தெரிவிக்கப்படவில்லை!

என்செய்வது? செங்கை அண்ணா மாவட்டம் காட்டாங்குளத்தூரில் தனியார் நடத்தும் சேவா ஆஸ்ரம விழா என்றால் கூட லட்சக் கணக்கான ரூபாய் செலவில் அரசாங்கத்தின் செய்தித்துறை இயக்குநர் அல்லவா ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுக்கிறார்.

குண்டோதரனுக்கும் (!) கடோற்கஜனுக்கும் (!) கிடைத்தது போல தீனி, விளம்பரத் தீனி ஏடுகளுக்குக் கிடைக்கும் போது - அவை ஜாடைமாடையாகத்தானே இருக்க வேண்டியிருக்கிறது!

இப்படியே போய்க்கொண்டிருந்தால் - கலெக்டர்கள் மாநாடு, பாதிப் பாதியாகக் கூட அல்ல - நாலில் ஒரு பகுதியாக நாலு நாளைக்கு, வீட்டுக் கூடத்தில் கூட அல்ல - அடுக்களையில் கூட நடக்கும்! கலெக்டர்கள், காய்கறி நறுக்கிக் கொண்டே கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளலாம் அல்லவா?

வாழ்க! தமிழ் நாட்டு நிர்வாக லட்சணம்!

வளர்க ! அ.தி.மு.க. அரசின் சிக்கனம்!

அன்புடன்,

மு. க.

(15-11-1991)

1828. விகடனுக்கும், கல்கிக்கும் ஒரு விளக்கம் !

உடன்பிறப்பே,

தமிழகத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உணவு அமைச்சர், கல்கி இதழிலும், ஆனந்த விகடன் இதழிலும் அளித்துள்ள பேட்டிகளில் உண்மைக்கு மாறாகத் தந்துள்ள செய்திகள் சிலவற்றுடன், முக்கியமாக வேலூரில் அவர் நடத்தும் இன்ஜினியரிங் கல்லூரியை வேண்டுமென்றே திட்டமிட்டு எவ்வித முகாந்தரமுமின்றி கழக ஆட்சியில் மூடுவதற்கு முயற்சி நடைபெற்றதாகக் கூறியிருக்கிறார். விகடன் ஒருபடி மேலே சென்று அந்தச் சுயநிதிக் கல்லூரியின் பெருமைகளை எல்லாம் கூடக் குறிப்பிட்டிருக்கிறது.

சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரால், மாணவர்களிடம் ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் ரூபாய் சுரண்டப்படுவதாகவும் - அவற்றில் பல கல்லூரிகள் போதுமான வசதிகள் அற்றதாகவும் இருப்பதை - குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் முதல், நடுநிலையாளர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் பலரும், கல்வியாளர்கள் பலரும், ஏடுகள் பலவும் எடுத்துக் காட்டியதை ஒட்டி கழக அரசு, அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. குழந்தைசாமி தலைமையில் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று, அத்தகைய கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அந்த அடிப்படையில் அரசு நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டு, அரசு அதிகாரத்தையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு துஷ்பிரயோகம் செய்த நிலையில் வேலூர் இன்ஜினியரிங் கல்லூரி செயல்பட்டு, மாணவர்களிடமும் பல்லாயிரக் கணக்கில் ரூபாய் வசூலித்து வந்ததை தடுக்குமுகத்தான் கழக அரசு, தனது கடமையைச் செய்தது.

அந்த நடவடிக்கை ஏன் என்பதற்கான விளக்கத்தை, கழக அரசு அப்போதே ஏடுகளின் வாயிலாக வெளியிட்டுள்ளது. அதில் சில பகுதிகளை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

வேலூர் பொறி இயல் கல்லூரி என்ற பெயருடன் சுயநிதிக் கல்லூரியொன்று தொடங்க அ.தி.மு.க. அரசிடம் அனுமதி கோரப்பட்டது. முத்தரசு குப்பம் கிராமத்தில் 79.2 ஏக்கர் நிலங்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனக்கூறி அனுமதி கேட்கப்பட்டது. ஒரு சுயநிதிப் பொறி இயல் கல்லூரி தொடங்க 75 ஏக்கர் நிலம் முதலில் இருக்க வேண்டுமென்பதால், ஆணை வெளியிடப்பட்ட நாளில் இருந்து 15 நாட்களுக்குள் நிலத்தை வாங்கி, அதற்கான கிரயப் பத்திரத்தையும், உரிமைப் பத்திரத்தையும் பரிசீலனைக்கு அரசுக்கு அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனையுடன் 1984-ல் அ.தி.மு.க. அரசு அனுமதி வழங்கியது.

ஆனால் அந்த கல்லூரி அறக்கட்டளை, உத்தேசிக்கப்பட்ட இடத்தின் நிலத்தை இதுவரை வாங்கவே இல்லை. அதற்கு மாறாக, சென்னை அலாய் மற்றும் ஸ்டெயின்லஸ் லிமிடெட் தொழில் நிறுவனங்களுக்காக காங்கேயநல்லூர், காட்பாடி கிராமங்களில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த சுமார் நூறு ஏக்கர் நிலத்தை கல்லூரி அமைக்கத் தருமாறு கோரப்பட்டது. முறைப்படி ஒப்படைப்பு பற்றி முடிவு எடுப்பதற்கு முன்பு, அந்தக் கல்லூரி அறக்கட்டளை அந்த நிலத்தில் பிரவேசிக்க அ.தி.மு.க. அரசு அனுமதி வழங்கியது.

அத்துடன் நில்லாமல் மேலும் காட்பாடி, காங்கேய நல்லூர் கிராமங்களில் உள்ள சுமார் ஐம்பது ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும் அந்தக் கல்லூரி நிறுவனம் ஆக்ரமிப்பு செய்துகொண்டு தமக்கே அந்நிலத்தையும் ஒப்படைப்பு செய்ய வேண்டுமெனக் கோரியது. ஆனால் அ.தி.மு.க. அரசில் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கோரிக்கையை ஏற்காமல், அந்த ஆக்ரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

புறம்போக்கு நிலங்களையும் இந்தக் கல்லூரி நிறுவனம் பயன்படுத்திக் கொண்டதால் பொது மக்களிடமிருந்தும் - ஓடைப் புறம்போக்கு மூலம் பாசன வசதி பெற்று வந்த விவசாயிகளிடமிருந்தும் - பல முறையீடுகள் அரசுக்கு வந்தன.

ஒரு தனியார் அறக்கட்டளை என்ற முறையில் அந்தக் கல்லூரி நிறுவனம், இத்தனை முறைகேடுகளுடன் மற்றொரு முறைகேடாக - அளவுக்கு அதிகமான நிலத்தை வைத்துக்கொள்ள நில உச்சவரம்பு விதிவிலக்கும் கோரிப் பெறவில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அந்த நிலங்களில் பிரவேசிக்க, அந்த நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட முறையற்ற அனுமதியை ரத்து செய்திட கழக அரசு முடிவெடுத்தது.

அந்தக் கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்படாமல் அதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் கழக அரசு எடுத்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான ரூபாய் கொட்டிக் கொடுக்காமல் பொறி இயல் கல்வி பயில, வேலூரிலேயே பெரியார் பொறி இயல் கல்லூரியும் மாணவர்கள் வசதிக்காக உடனடியாகத் தொடங்கப்பட்டது.

உடன்பிறப்பே, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் பல கோடி மதிப்புடையவை, தனியாருக்கு எப்படி வழங்கப்பட்டன என்பதையும், வழங்கப்படாமலேகூட தனியார் அந்த அரசுக்குரிய நிலங்களை எப்படி ஆக்ரமித்து கொண்டார்கள் என்பதையெல்லாம் சட்டப் பேரவையிலேயே பட்டியல் போட்டுக் காட்டி விளக்கியிருக்கிறேன். அவற்றில் சிலவற்றைக் குறித்தும், வேலூர் பொறி இயல் கல்லூரி விவகாரம் குறித்தும், 7.6.90 அன்று சென்னை பெரியார் திடலில் நான் பேசிய போது சுட்டிக்காட்டியதை உனக்கும், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். இதோ! பெரியார் திடலில் நான் பேசியது வருமாறு :-

பத்திரிகையில் என்னவெல்லாம் எழுதுகிறார்கள் என்பதைப் பற்றி இங்கே விளக்க விரும்புகிறேன். இரண்டு லட்சம் ரூபாய், மூன்று லட்சம் ரூபாய் கொடுத்து மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்குவதா? பொறியியல் கல்லூரியில் இடம் வாங்குவதா? என்றெல்லாம் கேட்டு அரசாங்கத்திற்கு ஒரு தர்ம சங்கடத்தை உண்டாக்குவதைப் போல எழுதுகின்றார்கள். அப்படி பணம் வாங்குபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் - எடுத்தபிறகு - ஏன் நடவடிக்கை எடுத்தோம் என்பதற்கு முக்கியத்துவம் தருவதில்லை - மாறாக அந்தக் கல்லூரிகளை நடத்துகின்ற அந்தப் பணக்காரச் சீமான்களுக்கு, முதலாளிகளுக்கு, கல்வித் துறையையே

வியாபாரமாக ஆக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு வக்காலத்து வாங்கி எழுதுகின்றார்கள். இதற்குப் பெயரா பத்திரிகா தர்மம்?

வேலூரிலே நடைபெற்ற சம்பவம் பற்றி உங்களுக்குத் தெரியும். நாங்கள் அந்தக் கல்லூரியின் அனுமதியை - அந்தக் கல்லூரியின் உரிமையை - அந்தக் கல்லூரி நடக்கக் கூடாது என்ற தடையை அரசின் சார்பிலே அங்கே இதுவரை விதிக்கவில்லை. ஆனால், கடந்த ஆட்சியில் கல்லூரிக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இடம், அரசாங்கம் இடம் - அது முறைகேடாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. முறைகேடாக எடுத்துக்கொள்ளப்பட்ட அல்லது தரப்பட்ட இடத்தை நாங்கள் திரும்ப எடுத்துக் கொள்கிறோம். அதிலே என்ன தவறு இருக்க முடியும்?

வேலூரில் பொறியியல் கல்லூரி நன்றாகக்கூட நடந்திருக்கலாம் - அதற்காக, அரசியல் தலையீடு செய்து அரசு நிலங்களை முறைகேடாக ஆக்ரமித்ததை எப்படி அனுமதிக்க முடியும்? விசுவநாதனின் கல்லூரி நிலங்களை மட்டுமல்ல, அதேபோல முறைகேடாகத் தனியாருக்கு தரப்பட்ட அரசு சொத்துகளையும், இடங்களையும், தனியார் ஆக்ரமித்த இடங்களையும் கழக அரசு மீட்பதற்காக எடுத்த முயற்சிகளுக்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன.

கடந்த கால ஆட்சியில், நாற்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள இடம் பல்லவா ஓட்டல் என்ற பெயரால் பழனி பெரியசாமிக்கு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு தரப்பட்டதா? இல்லையா? அந்த ஒன்றரைக் கோடி கூட அவர் பணமாகத் தர வேண்டியதில்லை. அதனை அரசாங்கத்தின் பங்குத் தொகையாக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதா? இல்லையா? அந்த நாற்பது கோடி ரூபாய் சொத்தை மீட்க தி.மு. கழக அரசு உதயமான பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இல்லையா?

அதிகாரிகள் குழுவின் மதிப்பீட்டின்படி, ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மாமல்லபுரம் அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா ஓட்டலை, நல்ல ஆதாயம் வந்து கொண்டிருந்த நிலையிலேயே மோகன்ராவ் தண்டமுடியுடன் இணைந்த கூட்டுத் துறைக்கு 56 லட்சம் ரூபாய்க்கு அ.தி.மு.க. அரசு ஒப்படைத்தது. இந்த 56 லட்சத்திலும் 52 லட்ச ரூபாயை

அரசு முதலீட்டுக்காகச் சரி செய்து கொண்டு, மீதமுள்ள 4 லட்சத்தை அந்த கூட்டுத் துறைக்கு கடனாக வழங்கியது. அதனை தி.மு.க. அரசு, மீண்டும் தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே திரும்பப் பெற ஆணை பிறப்பித்தது.

* இதே மோகன்ராவ் தண்டமுடிக்கு மாமல்லபுரம் சாலையில் முத்துக்காட்டில் 50 ஏக்கர் அரசு நிலம் 70 லட்ச ரூபாய்க்கு மேல் மதிப்புள்ளதை 6 லட்சம் ரூபாய்க்கு விலை வைத்து அ.தி.மு.க. அரசு கொடுத்திருந்ததையும் கழக அரசு ரத்து செய்து திரும்பப் பெற ஆணையிட்டது.

* வள்ளுவர் கோட்டத்துக்கருகே பூங்கா அமைக்க ஒதுக்கப்பட்டிருந்த 3 கோடி ரூபாய் மதிப்புள்ள 83 கிரவுண்டு நிலத்தை இதே மோகன்ராவ் தண்டமுடி கூட்டுத் துறையுடன் இணைந்து நடத்தும் ஓட்டலுக்கு வழங்க உத்திரவிடப்பட்டிருந்தது. இது போன்ற விவகாரங்களில் அமைச்சரவையிலே கலந்து பேசி முடிவெடுப்பதற்குப் பதிலாக எல்லாவற்றிலுமே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒப்புதல் பெறப்பட்டு காரியங்கள் நடைபெற்றுள்ளன. இந்த வள்ளுவர் கோட்ட இடமும் கழக அரசில் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மீட்கப்பட்டது.

* தேசிய நெடுஞ்சாலையிலேயே அரசாங்கத்தின் நிலம் இருநூறு ஏக்காவிற்கு மேல் ராமசாமி உடையார் அவர்களால் ஆக்ரமிப்பு செய்யப்பட்டு தனியார் மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டதே - அந்த மருத்துவக் கல்லூரியை அரசாங்கத்தின் சார்பிலே எடுத்தோமா? இல்லையா? அதைப் போலத்தான், வேலூரிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதற்குப் பத்திரிகையிலே எவ்வளவு பெரிய கூச்சல்.

இதோ என் கையில் இருப்பது ஒரு ஆங்கில மகஜர். அதோடு தமிழ் மகஜரையும் அனுப்பியிருக்கிறார். இந்த இரண்டு மகஜர்களையும் அனுப்பியவர் 1987-ஆம் ஆண்டு

அனுப்பியிருக்கிறார். யாருக்குத் தெரியுமா? தமிழ் மகஜரை, துணை ஆட்சியாளர், திருப்பத்தூர் வருவாய்க் கோட்டம், திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம். இவருடைய எல்லைக்குட்பட்டதுதான் அந்தக் கல்லூரி இருக்கும் இடம். ஆங்கில மகஜரை யாருக்கு அனுப்பியிருக்கிறார் தெரியுமா? திருமதி. எஸ். மாலதி ஐ.ஏ.எஸ்., வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

அனுப்பியது யார் தெரியுமா? ஜி. ரகுபதி எம்.எல்.ஏ. காட்பாடி தொகுதி, காட்பாடி. இவர் எந்தக் கட்சிக்காரர் தெரியுமா? அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர். 1987 ஆம் ஆண்டு, சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் 18.8.87 அன்று, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திருமதி. மாலதி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஆங்கிலத்திலும், துணை ஆட்சியாளருக்கு தமிழிலும் கடிதம் அனுப்பியிருக்கிறார். அந்த மனுவிலே என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

"Mr. G. Viswanathan. a former M.P., a fleet owner and a leading financier at Vellore is running an Engineering College titled "Vellore Engineering College" at Katpadi. In the guise of contributing to the growth of technical education in this educationally backward district, he has started this institution with her clear motive of commercialisation and is selling seats at the rate of Rs. 30,000 to 50,000 per seat. For establishing the said College he had obtained nearly 98.80 acres of land from the Government of Tamilnadu which is more than sufficient for this purpose. Out of this 98.80 acres of land only 2 acres is in effective utilisation constructed area. The rest of the land that is 96.8 acres remain unused and undeveloped."

இதன் தமிழாக்கம் வருமாறு :-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பஸ் உரிமையாளரும், வேலூரில் பிரபல லேவாதேவிக்காரராக விளங்குபவருமான திரு. ஜி. விஸ்வநாதன் காட்பாடியில் வேலூர் இன்ஜினியரிங் காலேஜ் என்ற பெயரில் ஒரு பொறியியல் கல்லூரியை நடத்தி வருகிறார். கல்வித் துறையில் பின்தங்கிய நிலையில்

இருந்துவரும் இந்த மாவட்டத்தில் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு, தெளிவான வியாபார நோக்கத்துடன் அவர் இந்த ஸ்தாபனத்தைத் தொடங்கி, மாணவர்களிடம் இடம் ஒன்றுக்கு ரூ. 30,000லிருந்து ரூ. 50,000 வரை, கல்லூரி சீட்டுகளை விலைக்கு விற்று வருகிறார். மேற்படி கல்லூரியை நிறுவுவதற்காக, தமிழக அரசிடமிருந்து அவர் கிட்டத்தட்ட 98.80 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருக்கிறார். இது, இந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு தேவைப்படுவதைவிட அதிகமாகும். இந்த 98.80 ஏக்கரில் 2 ஏக்கர் பரப்பில் மட்டுமே கட்டிடப் பகுதி உள்ளது. எஞ்சிய இடம், அதாவது 96.8 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாமலும், அபிவிருத்தி செய்யப்படாமலும் இருந்து வருகிறது.

என்று சொல்லிவிட்டு கடைசியாக அந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ. என்ன கோரிக்கை வைக்கிறார் தெரியுமா?

"In this regard I request you to invoke the land ceiling act and reject his application for the issue of patta in respect of this 59.96 acres and issue necessary orders to restore this part of land to the original land holders. I also pray that his occupation of the 41.92 acres belonging to the North Arcot District Ex-Service men Co-operative Timber Society be declared illegal and void:"

இதன் தமிழாக்கம் வருமாறு :-

இது சம்பந்தமாக, நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, 59.96 ஏக்கர் நிலத்துக்கு பட்டா வழங்கக் கோரி அவர் கொடுத்துள்ள மனுவை நிராகரிக்க வேண்டுமென்றும், நிலத்தின் இந்த பகுதி முதலில் யாரிடமிருந்ததோ அவர்களுக்கே மீட்டுத் தருவதற்கு வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளுகிறேன். தவிர, வட ஆற்காடு மாவட்ட முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவு மர விற்பனை சங்கத்துக்குச் சொந்தமான 41.92 ஏக்கரை அவர் சுவாதீனப்படுத்திக்

கொண்டிருப்பது சட்ட விரோதமானது, செல்லத் தக்கது அல்ல என்று அறிவிக்குமாறும் வேண்டுகிறேன்.

இந்த வேண்டுகோளைத்தான் - அவர் அ.தி.மு.க.வின் எம்.எல்.ஏ., என்றும் பார்க்காமல் - இந்த தி.மு.கழக ஆட்சியிலே அவருடைய வேண்டுகோளை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். இதிலே என்ன தவறு?

இதை உணர்ந்தும், உணராதவர்களைப் போலவும், பத்திரிகைகள் சில அது குறித்து செய்திகளைப் போடுவதும் - அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருவதும் - இதனால் எல்லாம் தி.மு.கழக ஆட்சிக்கு ஒரு குந்தகத்தை ஏற்படுத்தலாம் - என்று எண்ணுவதும் எவ்வளவு குறுகிய நோக்கம் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

உடன்பிறப்பே, விகடன், கல்கி போன்ற தரமான இதழ்களில் கழக அரசைப் பற்றி ஒரு அமைச்சரால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு வெளி வந்துள்ள காரணத்தால், இந்த விளக்கம் எழுதிடத் தேவைப்பட்டது.

இன்றுள்ள அரசின் முதல்வரும் இந்தக் கல்லூரி பற்றிய பழைய கோப்புகளையும், நடந்துள்ள முறைகேடுகளையும் தக்க அதிகாரிகள் வாயிலாகப் பெற்று உரிய நடவடிக்கை எடுத்திட இக்கடிதத்தில் கண்டுள்ள விபரங்கள் பயன்படுமென நம்புகிறேன். முதல்வர் என்ன செய்கிறார் என்று பார்ப்போம்.

அன்புடன்,

மு. க.

(16-11-1991)

1829. மனச்சாட்சி, தண்டனை வழங்கத் தவறாது!

உடன்பிறப்பே,

புனைந்துரைத்தல் - பொய் கூறுதல் - இல்லாத ஒன்றை இட்டுக் கட்டுதல் - நோக்கம் கற்பித்தல் - திட்டமிட்டு வேண்டுமென்றே பழி பரப்புதல் - ஜனநாயகத்தில் அனுமதிக்கப் பட்டுள்ள உரிமைகளைப் பறித்தல் - தடுத்தல் இந்தச் செயல்களை வெல்லப்பாகின் இனிப்பைப்போல் சுவைத்துக் கொண்டு பொல்லா வழக்குகளை, எதிர்க் கட்சிகளின் மேல் - குறிப்பாக நமது கழகத்தினர் மேல் தொடருவதில் ஒரு தனித்த ஆர்வம் இந்த அரசுக்கு!

இதனை ஆர்வம் என்றுகூட சொல்ல முடியாது! அடங்காத வெறி என்றே கூற வேண்டும்! அதுவே பொருத்தமான சொற்றொடர்!

1965 இந்தி எதிர்ப்புப் புரட்சி தமிழகத்தில் கொழுந்துவிட்டு எரிந்தபோது, திருப்பூரில் போலீஸ் அதிகாரிகள் இருவரை உயிரோடு கொளுத்திவிட்ட நிகழ்ச்சித் தொடர்பாக காங்கிரஸ் அரசு சிலர் மீது தொடுத்திருந்த கொலைவழக்கு 1967-ல் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் திரும்பப் பெறப்பட்டது. அப்போது காங்கிரசார் மிகக் கடுமையாக அதனை விமர்சித்தனர். போலீஸ் அதிகாரிகளைக் கொலை செய்தவர்கள் மீது போடப்பட்ட வழக்கு திரும்பப் பெறுவதா? எனச் சீறினர்! அதற்கு அண்ணா அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா?

உண்மையிலேயே போலீஸ் அதிகாரிகளைக் கொலை செய்தவர்கள் பிடிபட்டிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். அதற்காகச் சம்பந்தமேயில்லாத நிரபராதிகள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இதுதான் அண்ணா தந்த விளக்கம்! அந்த அண்ணாவின் பெயரைக் கட்சிக்குச் சூட்டிக் கொண்டுள்ள அரசு, தும்பை மலரினும் மென்மையான இதயம் படைத்த அந்த தூய தலைவனின் அணுகுமுறைகளுக்கு அருகே செல்ல வேண்டுமென்ற எண்ணம் கொள்ளாதது மட்டுமல்ல - அவரது அணுகுமுறைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் - ஆயிரம் பதினாயிரம் இலட்சம் மைல்களுக்கு அப்பால் விலகி நின்று அரசியல் பகை தீர்க்கவும், அச்சுறுத்தி அடக்கவும், ஆகாயமளாவு அடக்குமுறைகளை கட்டவிழ்த்துக் கொண்டிருக்கிறது.

வன்முறைச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும் - வன்முறையாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும் - இதில் இரண்டுவிதக் கருத்துக்கே இடமில்லை! அதற்காகத் தனது அரசியல் பகையைத் தீர்த்துக் கொள்ள நிரபராதிக் குடும்பங்களின் கண்களில் நீர்வீழ்ச்சி கொட்டிடச் செய்வது நியாயம் ஆகுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

வேண்டுமென்றே அவதூறு கூறுவோர், எழுதுவோர், பொய்யுரைப்போர்களை அலட்சியப்படுத்தி விடுவதும் உண்டு! அவைகள் அளவுக்கு மீறும்போது, தன்னிலை காத்திடுவதற்காக அத்தகையோர் மீது வழக்குப் போடுவதும் உண்டு! ஆட்சியில் இருப்போருக்கும் - பொறுப்பான இடத்தில் இருப்போருக்கும் - தனிப்பட்டவர்க்கும் இந்த உரிமை உண்டு! நீதிமன்றத்தில் எது உண்மை என்று நிரூபிக்க வழியும் உண்டு!

அதற்காக ஒரு கட்சியையோ, கட்சித் தலைமையையோ, ஆட்சியையோ, ஆட்சித் தலைமையையோ - அவைகளின் கொள்கைகள், செயல்பாடுகள், கருத்துகள் பற்றி விமர்சிக்க யாருக்கும் உரிமை கிடையாது எனத் தடுப்பது - தண்டித்திட முயலுவது - ஜனநாயக முறையில் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

* தி.மு. கழகத்தைப் பற்றி ஒரு செய்தியைப் பொய்யாகவோ - அல்லது திரித்தோ - திசை திருப்பியோ சொல்லும்போது அதை மறுத்துக் கருத்துக்கூற வாய்ப்பு இருப்பதால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது.

* அதற்கு மாறாகக் கழகத்தைக் களங்கப் படுத்திட, அல்லது கழகத்தினரைக் களங்கப் படுத்திட திட்டமிட்டு

ஆட்சியில் இருப்பவர்களோ அல்லது ஒருவரோ, ஒரு பத்திரிகையோ செய்தி வெளியிட்டால் அந்த அவதூறிலிருந்து காப்பாற்றிக்கொள்ள சட்டத்தின் உதவியை நாடி நீதிமன்றத்திற்குச் செல்ல வாய்ப்பு இருக்கிறது.

இந்த இரண்டுக்கும் தனித்தனியாக இரண்டு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுகிறேன்.

* ஒரு பழம்பெரும் நிருபர் ஜூனியர் விகடன் வார ஏட்டில் அவர் கடந்த காலத்தில் பழகிய அரசியல்வாதிகளைப் பற்றியும், சந்தித்த அரசியல் நிகழ்ச்சிகள் பற்றியும் தொடர்ந்து எழுதி வருகிறார். அவற்றில் சில உண்மைகளும் இருக்கின்றன. பல தவறான தகவல்களும் இருக்கின்றன. நண்பர் ஈ.வெ.கி. சம்பத்தைப் பற்றி நான் அளித்த பேட்டியினால்தான் சம்பத்துடன் அண்ணா நடத்திய சமரசப் பேச்சு முறிந்ததென்றும், அதற்காக அண்ணா என்னைக் கோபித்துக் கொண்டார் என்றும் இல்லாத கதையொன்றை அந்த வார இதழில் எழுதியிருக்கிறார். அண்ணா அவர்கள் திராவிடநாடு இதழில் எழுதிய எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தலைப்பில் மறுப்பு எழுதி - அதன் காரணமாக சம்பத்துக்குக் கழகத்தில் கசப்பு வளர்ந்தது. தி.மு.க. வரலாறு என்ற நூல் வெளியீட்டு விழாவில், அண்ணாவும், சம்பத்தும் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டு அந்த விழாவுக்கு அண்ணா போகாததால் சம்பத்துக்கு ஒரு காரணமாக அமைந்து காழ்ப்பு முற்றியது. வேலூரில் நடைபெற்ற செயற்குழுவில் எம்.ஜி.ஆரும், எஸ்.எஸ்.ஆரும் சம்பத்தைத் தாக்கியதாகப் பொய் சொல்லி ஒரு கிழிந்த சட்டையை ஊருக்கு ஊர் சம்பத் பொதுக்கூட்டங்களில் காட்டி வந்தார். இப்படி முற்றிப்போய் வெடித்த விவகாரம் அது! அனைத்தையும் மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு அந்த நிருபர் என்மீது பழிபோட்டுள்ளார். அது மட்டுமா? எமர்ஜன்சியை எதிர்த்து தி.மு.க. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானம்; பத்திரிகைத் தணிக்கை காரணமாக வெளியிட முடியாமல் போயிற்று

என்றும் அந்த நிருபர் ஒரு கடைந்தெடுத்த பொய்யை அந்த வார ஏட்டில் எழுதியுள்ளார். இதுவும் தவறான தகவல்!

1975 ஜூன் 27 நடைபெற்ற தி.மு.க. செயற்குழுவின் முழுமையான தீர்மானம் மறுநாள் ஜூன் 28 முரசொலியில் வெளிவந்துள்ளது.

தினமணியிலும் அன்று காலையே வெளிவந்துள்ளது. முதல் நாள் (ஜூன் 27) மாலையே மாலைமுரசு - அலை ஓசை போன்ற ஏடுகளிலும் அந்தத் தீர்மானம் வெளிவந்திருந்தது.

தீர்மானம் மட்டுமல்ல! இந்திராகாந்தி இட்லராகிறார் - என்று சித்தரிக்கும் கார்ட்டூன் ஒன்றும் (27.6.75) முரசொலியில் வெளிவந்தது. அந்தக் கார்ட்டூன் வெளிநாட்டு ஏடுகளில் கூட மறுபிரசுரம் செய்யப்பட்டது என்பதை நிருபர் மறந்து விட்டார் போலும்! இப்படிக் கழகத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் எல்லையற்ற கற்பனைக் கதைகளை அந்த நிருபர் எழுதிக்கொண்டிருக்கிறார் என்பதற்காக இப்படி மறுப்புக் கருத்துதான் நான் வெளியிட முடியும். 1975 ஜூன் மாதம் எமர்ஜன்சி பிரகடனம்! 1976 ஜனவரி இறுதியில்தான் ஆட்சி கலைக்கப்படுகிறது. எமர்ஜன்சி பிரகடனத்திற்குப் பிறகும் ஆறு ஏழு மாதங்கள் கழக ஆட்சி நடைபெற்ற காரணத்தால் - பத்திரிகை தணிக்கை முறை, தமிழ்நாட்டில் கடுமையாக இல்லை. ஓரளவே இருந்தது.

ஆட்சி கலைக்கப்பட்ட பிறகுதான் முரசொலி போன்ற ஏடுகளில் ஒவ்வொரு சிறிய செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்று வெளியிட முடிந்தது. ஏதோ குருட்டாம் போக்கில், ஞாபகத்தில் வந்த தவறான செய்திகளை உண்மைபோல ஆதாரமின்றி அவர் எழுதுகிறார் என்பதற்காக - அவதூறு வழக்கா அவர் மீது போடமுடியும்! எமர்ஜன்சியை எதிர்த்து தி.மு.க. நிறைவேற்றிய தீர்மானத்தை பிரதமர் இந்திராகாந்தி படித்துப் பார்த்து இவ்வளவுதானா? இதைவிடக் கடுமையாக இருக்குமென எதிர்பார்த்தேன்! என்று இவரிடம் கூறியது போல் எழுதியுள்ளார். அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெறச் சொல்லி டெல்லியிலிருந்து வந்த மிரட்டல்கள் எத்தனை! இறுதியாக ஆட்சி கலைக்கப்பட்டதற்கே அந்தத் தீர்மானத்தினால் இந்திராகாந்திக்கு

ஏற்பட்ட ஆத்திரமே காரணம்! என் செய்வது? எதையும் எழுதலாம் என்று எழுதுகிறார்கள். இப்படித் திரித்துச் செய்திகளைப் பரப்பும்போது அதற்கான மறுப்புகளைத் தெரிவிப்பதே அரசியல் முறை!

* இன்னொன்று; 1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது ஆந்திராவில் அரிசி வாங்கியதில் ஆறுகோடி ரூபாய் ஊழல் என்று என்மீதும், உணவு அமைச்சராக இருந்த நண்பர் வீராசாமி மீதும் ஜெயலலிதா ஒரு குற்றம் சுமத்தி அறிக்கை விடுத்தார். அது மறுக்கப்பட்ட பிறகும், அவர் அதையே திரும்பத் திரும்பக் கூறினார். எனவே அவர்மீது வழக்கு தொடரப்பட்டது. குற்றச்சாட்டை நிரூபிக்க ஜெயலலிதா நீதிமன்றத்திற்கு வருவதற்கு பதிலாக - ஆட்சி மாறியதும் அந்த வழக்கை அரசின் சார்பில் வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளையும் நான் குறிப்பிட்டதற்கு உனக்குக் காரணம் புரிந்திருக்கும் உடன்பிறப்பே!

கருத்தளவில் மாறுபட்ட செய்திகள் சொல்லப்படும்போது கருத்தளவில் மறுப்பதும் - வேண்டுமென்றே களங்கப்படுத்த அவதூறு கூறும்போது உண்மையை நிரூபிக்க நீதிமன்றத்தை நாடுவதும் - ஏற்கப்பட்டுள்ள முறைகள்தான் என்பதற்காகத்தான் இரண்டு எடுத்துக்காட்டுகளை விவரித்தேன்.

அதிகாரமிருப்பதால், அரசியல் பகையை எப்படியும் தீர்த்துக்கொள்ளலாமென்று ஆதாரமில்லாமல் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் செயல்கள், இந்த ஆட்சியில் அத்துமீறிப் போய்க்கொண்டிருக்கின்றன.

எந்தக் கட்சியிலும் மேல்மட்டத்தில் உள்ளவர்களைப் போல, அடுத்தடுத்த நிலையில் உள்ளவர்கள் அதே தரத்தில் பேசுவது அரிது என்பது அனைவரும் அறிந்த உண்மை!

கழகத்தைப் பொறுத்தவரையில், அடிக்கடி பேச்சாளர்கள் கூட்டத்தைக் கூட்டி மேடைப் பேச்சு எப்படி அமையவேண்டுமென அறிவுரை கூறப்பட்டு வருகிறது.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின், மேல்மட்டப் பேச்சாளர்கள் சிலர் பேசுவதைக் கேட்டவர்களுக்கு - கேட்பவர்களுக்கு, தி.மு.

கழகத்தின் பேச்சாளர்கள் சிலர் பேசுவது எவ்வளவோ தரமானது என்றே தீர்ப்பளிக்கத் தோன்றும்.

பேச்சில் காரமிருக்கலாம் - சாரமிருக்க வேண்டும்! கேலி, கிண்டல் இருக்கலாம். கண்ணியமிருக்க வேண்டும் - அரசியல் நையாண்டிகள் இருக்கலாம். ஆபாசம் இருக்கக் கூடாது! ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது! வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு கூறக் கூடாது! களங்கம் கற்பிக்கக் கூடாது.

அண்மையில் கூட சீதை - பாஞ்சாலி தலைப்பில் ஒரு அரசியல் பட்டிமன்றம் ஈரோடு நகரில் ஏற்பாடு செய்ததாகவும், அதனைப் போலீசார் அனுமதிக்க வில்லையென்றும் பெரியார் மாவட்டச் செயலாளர் கணேசமூர்த்தி எனக்குத் தொலைபேசி மூலம் செய்தி தெரிவித்தார். அந்தப் பட்டிமன்றம் அரசியல் ஆபாசத்திற்கு வழிவகுக்கக் கூடும் என நானும் அஞ்சியதால், அந்தப் பட்டிமன்றத்தை நீக்கிவிட்டு மற்ற நிகழ்ச்சிகளை நடத்துங்கள் என்று அறிவுரை கூறினேன்.

இத்துணை எச்சரிக்கையுடனும் - விழிப்புடனும் - அமைதியும் - அரசியல் நாகரிகமும் பேணிக் காத்திட கழக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்போது, தி.மு.க.வை அறவே அழித்தொழித்திட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டு இந்த அரசு செயல்படுவதை எப்படிக் கடுமையாகக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

நமது கழகப் பேச்சாளர் நண்பர் தீப்பொறி ஆறுமுகம் மதுரையில் திடீரென கைது செய்யப்பட்டு சாதி, மத, இன, மொழி துவேஷங்களைப் பரப்பியதாக வழக்கு தொடரப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். அது குறித்து நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கமும் விடுத்துள்ள அறிக்கைகளைக் கண்டிருப்பாய்!

மதச்சார்பற்ற நிலைக்காக வாதாடும் கழகம் மத துவேஷத்தைத் தூண்டுகிறதாம்!

இந்து முன்னணிப் பேச்சாளர்களின் துவேஷப் பேச்சுக்களை அனுமதிக்கும் அரசு, காயிதேமில்லத் அவர்களைத் தேசத்துரோகி எனப் பேசுவதை அனுமதிக்கும் அரசு -

மதச்சார்பற்ற நிலை வேண்டும்!
சாதி ஆணவம் கூடாது!
தமிழ் மொழியை சிறுமைப்படுத்தாதே!

என்ற அடிப்படையில் கருத்துகளைக் கூறும் தி.மு. கழகத்தின் மீது அடக்குமுறைக் கணைகளைப் பாயவிடுவது விந்தையான வேதனையல்லவா?

ஒரு நகைச்சுவைப் பேச்சாளருக்கு அஞ்சி நடுங்கி அவர் மீது மூன்று சட்டப்பிரிவுகளில் வழக்கு தொடுத்தது மட்டுமல்லாமல் - அவரைக் கைது செய்தும் சிறையிலும் அடைத்திருப்பது, ஜனநாயகத்தில் கேலிக்கூத்தான காரியமாகும்.

கைது செய்!
சிறையில் அடை!
பொய் வழக்குப் போடு!

பிறகுதானே நீதிமன்றம் - வழக்கறிஞர் வாதம் - உண்மையில் ஆதாரமுண்டா? இல்லையா? என்ற பிரச்சினை!

அதுவரையில் அரசியல் பகை தீர்த்திட கழகத்தினரைக் கொடுமைப்படுத்தினால் போதும், அதிலே ஒரு திருப்தி என்கிற அளவுக்கு - அரசினர் வஞ்சம் தீர்க்கும் வழியில் தொடர்ந்து பயணம் மேற்கொள்வார்களேயானால், அவர்தம் மனச்சாட்சியே அவர்கட்குத் தண்டனை வழங்கத் தவறாது!

அன்புடன்,

மு. க.

(19-11-1991)

1830. ஒய்யாரக் கொண்டையாம்! தாழம்பூவாம்!

உடன்பிறப்பே,

எதிரில் உள்ள ஒருவரைக் குற்றம் சாட்டி விரலை நீட்டும்போது, உன்னை நோக்கி மூன்று விரல்கள் நீட்டப்பட்டு இருக்கின்றன என்பதைக் கவனிக்கத் தவறிவிடாதே!

இப்படி ஒரு பொன்மொழி உண்டு.

"ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளே இருக்குமாம்; ஈரும் – பேனும்!"

இப்படி ஒரு பழமொழி உண்டு.

இவற்றுடன், குயிலுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கக் கோட்டானை நியமித்த கதைதான்! என்ற புது மொழியையும் இணைத்துக் கொண்டு, பின்வரும் செய்தியைப் படித்திடுக! இதோ அந்தச் செய்தி!

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் சரிவரச் செயல்படாததற்கு காரணம், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியின்போது கூட்டுறவுத் துறையே சீர்கெட்டுப்போனது என்று மாநிலக் கல்வி அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் சென்னிமலையில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் புகார் கூறினார்.

இப்படி ஏடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. சென்னை தினத்தந்தியில் இச்செய்தி வெளிவரவில்லை. காரணம் தினத்தந்தியின் நிறுவனர் ஆதித்தனார் அவர்கள், கழக ஆட்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் இருந்தார் என்பதை அந்த நிறுவனத்தினர் இப்போதாவது நினைத்துப் பார்த்திருப்பார்கள் அல்லவா? அதனால் அமைச்சர் கூறிய புகார் இதுவரையில் அந்த ஏட்டில் இடம்பெறவில்லை போலும்!

அதிருக்கட்டும்! புகார் கூறிய வீரப்பன் அவர்கள் அமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1977 முதல் 1998 வரையில் கூட்டுறவுத் துறையில் அந்த ஆட்சி புரிந்த சாதனை என்ன என்பதை மறந்துவிட்டாரா?

1976 ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி அமைந்தவுடன், கழக ஆட்சியில் தேர்தல் நடைபெற்று இயங்கிக்கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டு அதிகாரிகள் வசம் கூட்டுறவுச் சங்கங்கள் விடப்பட்டன. ஏற்கனவே அந்தச் சங்கங்களின் தலைவர்களாக இருந்தவர்கள் மீது டெலிபோன் பில்பாக்கி முப்பது ரூபாய் - பயணச் செலவு அதிகப்பற்று நாற்பத்தி மூன்று ரூபாய் - என்றெல்லாம் பொய் வழக்குகள் போடப்பட்டு அனைத்து வழக்குகளும் புஸ்வாணங்கள் ஆயின!

கழக ஆட்சியில் ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற தவறு உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் வேண்டியவர்களா, அல்லவா என்று கூடப் பார்க்காமல், இன்றுபோல் கண்துடைப்பாக அல்லாமல் - கடுமையான தண்டனைக்கும் உட்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் கற்பனையல்ல! ஆதாரபூர்வமானச் செய்திகளாகும்!

இப்படிக் கண்ணும் கருத்துமாகக் கழக ஆட்சியில் கவனமுடன் செயல்படுத்தப்பட்ட கூட்டுறவுத்துறை அமைப்புகள் அனைத்தையும் கலைத்தபிறகு - 1977ல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்கள் ஏறத்தாழ அவர் பொறுப்பில் இருந்த பத்தாண்டு காலத்தில் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த முன்வந்தது உண்டா?

இன்று கழக ஆட்சியின் கூட்டுறவுத்துறை மீது புகார் கூறும் அமைச்சர், அன்றைக்கும் அமைச்சராக இருந்தவர்தானே - அந்தத் தேர்தல்களை நடத்தி, கூட்டுறவுத் துறையின் அடிப்படை இலட்சியத்தைப் போற்றிட வேண்டுமென்று எம்.ஜி.ஆர். அவர்களிடம் வாதாடியது உண்டா? அல்லது அமைச்சரவைக் கூட்டத்திலாவது வலியுறுத்தியது உண்டா?

அந்தப் பத்தாண்டு காலமும் சட்டப் பேரவையில் எதிர்க்கட்சிகளாக இருந்தவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்துக என்று எம்.ஜி.ஆர். அரசை வலியுறுத்திப் பேசிய போதெல்லாம் அரசின் சார்பில் அளிக்கப்பட்ட பதில் என்ன?

கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்கான வகையில் சட்டத்திருத்தம் செய்து கொண்டிருக்கிறோம் - குழு அமைத்திருக்கிறோம் - குழு அளித்துள்ள பரிந்துரைகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் - இன்னும் ஓரிரு வாரங்களில் கூட்டுறவுச் சட்டங்கள், விதிமுறைகள் செம்மையாக வகுக்கப் பெற்று மிக விரைவில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்தி முடிப்போம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தனர்.

ஆனால், கூட்டுறவுத் தேர்தலை நடத்தாமலே எம்.ஜி.ஆர். ஆட்சி நிறைவுற்றது. பின்னர் கவர்னர் ஆட்சியில் ஒருமுறை தேர்தலை அறிவித்தனர். தேர்தலுக்கான (Notification) அறிவிக்கை தரப்பட்டது. உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனியாக அந்த அறிவிப்பு தருவது போன்ற முன்னேற்பாடுகளுக்காக கூட்டுறவுத் துறை சுமார் மூன்று கோடி ரூபாய் அளவுக்குச் செலவும் செய்துவிட்ட பிறகு; அறிவிக்கப்பட்ட கூட்டுறவுத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

கோவையைச் சேர்ந்த ஒரு கூட்டுறவுச் சங்கத்தினர் கூட்டுறவுத் தேர்தலை அரசு நடத்த வேண்டுமென்று கோரி உச்சநீதிமன்றத்துக்குச் சென்றனர். கூட்டுறவுத் தேர்தல்களை விரைவில் நடத்துமாறு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும் மறந்துவிட்ட செய்தியல்ல!

1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், கூட்டுறவுத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு - அதற்கான சட்டத்திருத்தங்களைப் பேரவையின் முன் வைத்து, அந்தத் திருத்தங்களை ஏகமனதாக நிறைவேற்றி - முதல் கட்டமாக ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தி முடித்தது. தேர்தல் நடைபெற்ற ஆரம்ப கூட்டுறவு சொசைட்டிகளின் எண்ணிக்கை இருபதாயிரத்தைத் தாண்டும். அந்தத் தேர்தலில் உரிய சதவிகிதம் பெண்களும், ஆதி திராவிடர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படாத இடங்களில் மட்டுமே அவர்கள் அவர்கள்? நியமிக்கப்படுவர்.

இந்த திருத்தத்தைப் பேரவையில் ஒருமனதாக ஏற்றுக்கொண்டே தேர்தலை நடத்தினோம் என்று கூட்டுறவு அமைச்சராக இருந்த பொன். முத்துராமலிங்கம் ஏற்கனவே தனது அறிக்கையொன்றில் விபரங்களுடனும் ஆதாரங்களுடனும் விளக்கியிருக்கிறார்.

1976-க்கு பின் கழக ஆட்சியில் இயங்கிய கூட்டுறவு சங்கங்கள் கலைக்கப்பட்ட பிறகு; அதிகாரிகள் பொறுப்பில் அந்த சங்கங்கள் வந்த பிறகு, தேர்தல் நடத்துவதில் பெரும் அகழ் போன்ற இடைவெளி விழுந்து - மீண்டும் 1989-ல் கழக ஆட்சி வந்தபிறகுதான் கூட்டுறவுத் தேர்தலே ஆரம்பமாகி நடைபெற்றது. ஆரம்பக் கட்டமாக 20,000க்கு மேற்பட்ட சங்கங்களின் தேர்தல் நடைபெற்று அடுத்தகட்டத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பு கழக ஆட்சியைக் கலைத்து விட்டு - 20,000 சங்கங்களின் தேர்தல்களையும் அ.தி.மு.க. அரசினர் முடக்கிப் போட்டு விட்டனர்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்கானச் சட்டத்தை 1983-ல் அ.தி.மு.க. அரசு உருவாக்கிவிட்டு - அதற்குரிய துணை விதிகளை உருவாக்காமலே சோம்பிக் கிடந்ததை சென்னிமலையில் புகார் கூறிய அமைச்சர் அறியார் போலும்!

அந்தத் துணை விதிகள் 1988-ல் கவர்னர் அலெக்சாண்டர் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதும் - ஐந்தாண்டு காலம் அ.தி.மு.க. ஆட்சியில் துணை விதிகளை உருவாக்கக்கூட அக்கறையற்ற நிலைமை இருந்தது என்பதும் - புகார் கூறியவரின் நினைவுக்கு வராதது ஆச்சரியமே!

அ.தி.மு.க. ஆட்சியில் அதிகாரிகள் கண்காணிப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தபோதுச் கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் எந்த அளவுக்கு எல்லை கடந்து விரிந்து பரந்து வளர்ந்தன என்பதை, மேலவையில் எல். கணேசன் அவர்கள் விரித்துரைத்ததை யெல்லாம் வீரப்பன் அவர்கள் கேட்டுக்கொண்டுதானே இருந்தார்.

இப்போது குயிலுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்க வருகிறேன் என்கிறாரே! வேடிக்கையாக இல்லையா?

ஈரும் பேனும் நிரம்பிய ஒய்யாரக் கொண்டையாக அல்லவா அ.தி.மு.க. ஆட்சியில், கூட்டுறவுத்துறை இருந்தது! மறந்து விட்டார்களா? மீண்டும் நினைவுபடுத்த வேண்டுமா?

என் செய்வது உடன்பிறப்பே! மல்லாந்து படுத்துக்கொண்டு எச்சில் உமிழ்கிறார்கள் மாண்புகள்!

அன்புடன்,

மு. க.

(20-11-1991)

1831. ஒரு கல்லில் இரண்டு மாங்கனிகள்!

உடன்பிறப்பே,

கட்சி அமைப்புகள் உருவாக்கப்படுவதிலும் - அவை இயங்குவதிலும் - அமைப்புகளுக்கான நிர்வாகிகள், உள்ளூர் கிளையிலிருந்து தொடங்கி - அடுத்தடுத்த மேலமைப்புகளிலும், மாவட்ட அமைப்புகள் - தலைமைச் செயற்குழு, பொதுக்குழு அமைப்புகள் வரையிலும் - தலைமை அமைப்பு ஈறாக அனைத்துமே, ஜனநாயக முறைப்படியான தேர்தலின் வாயிலாகவே இருந்திடல் வேண்டுமென்ற கொள்கையும், அதற்கான நடைமுறைகளும் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நமது கழகத்தில் தொய்வின்றிக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகும்.

நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட, ஆட்சியையே 1976 ஆம் ஆண்டு விலையாகக் கொடுத்திடத் துணிந்து செயல்பட்ட இயக்கம் தி.மு.கழகமென்று மார்தட்டிப் பேசும் உரிமையும், பெருமையும் நமக்கு உண்டு.

அந்த ஜனநாயகக் கோட்பாடு கட்சிக்குள்ளும் ஒழுங்குமுறை தவறாமல், செம்மையாக நடைபெறுவதற்கு - உறுப்பினர் சேர்ப்பது - சேர்ந்த உறுப்பினர்களுக்கு உரிய முறைப்படி உறுப்பினர் அட்டைகளை வழங்குவது - தலைமைக் கழகம் குறிப்பிடும் நாளில் முறையான உறுப்பினர்களைக் கொண்டு கிளைகளின் நிர்வாகிகளுக்கான தேர்தல் நடத்துவது என்பது கட்சிப்பொதுத் தேர்தல் பணியின் முதற்கட்டமாகும்.

அந்த முதற் கட்டப் பணிகள் இந்நேரம் முடிவுற்று - அடுத்த கட்டத் தேர்தல் பணிகளில் நாம் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் எதிர்பாராத இடையூறுகள் - அரசியல் சூழல்கள் - இவற்றின் காரணமாக தவிர்க்க இயலாத தாமதம் ஏற்பட்டு விட்டது.

இதனால் புதிய அமைப்புகள் - புதிய நிர்வாகிகள் - எல்லா மட்டங்களிலும் தேர்வு செய்யப்படாத நிலையும், சிறு தேக்கமும் ஏற்பட்டுள்ளதை மறைத்துப் பயனில்லை.

தேர்தல்களில் போட்டியிட்டு நிர்வாகப் பொறுப்புகளுக்கு வந்துவிடுவது மட்டுமே பெரிதல்ல. வந்த பிறகு அந்த நிர்வாகிகள் யாராயிருப்பினும், அவர்கள் ஆற்றியுள்ள பணியை அவர்களும் திரும்பிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்போரும் எண்ணிப் பார்த்து ஆர்வமும், அக்கறையும், ஆற்றலும், உழைக்கும் இயல்பும், உறுதியும் உள்ளவர்களை அந்தப் பொறுப்புகளில் அமர்த்திட வேண்டும்.

கடந்த காலத்தில் நடைபெற்ற நமது கட்சித் தேர்தல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிற்சில இடங்களில் விளைந்திட்ட முறைகேடுகள் கூட, இந்தத் தேர்தலில் விளைந்திடாமல் இருக்கவும் - மீறி விளைந்தால் தடுத்து நிறுத்தவும் - வழியிருக்கும் வண்ணம், தலைமை நிர்வாகக் குழுவில் பலமுறை ஆழமாக விவாதித்து - அதற்கேற்ப தலைமைக் கழகச் சார்பில் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பேரூர் கழகங்களின் தேர்தலும், ஒன்றிய - நகரக் கழகங்களுக்கான தேர்தலும் இந்த ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாளுக்குள் முடிவடைய வேண்டுமென்றும் - அதற்குத் தோதாக நவம்பர் 30-ஆம் நாளுக்குள் கிளைக் கழகத் தேர்தல்களை நடத்தி முடித்து விடவேண்டுமென்றும், 3.12.91க்கு மேல் காலந்தாழ்ந்து அனுப்பப்படுகிற தேர்தல் முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும், அந்த நாளுக்குள் கிடைக்கும் கிளைக் கழகத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டுதான் அடுத்த கட்டத் தேர்தல்களை ஆரம்பித்திடத் தலைமைக் கழகம் முடிவெடுத்துள்ளது என்றும் - கழகத் தலைவர் என்ற முறையில் நானும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் கலந்து பேசி, அமைப்புச் செயலாளர் வாயிலாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கண்டுள்ள விபரங்களை அறிந்து அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினரும் - அந்தக் குழுவினருடன் ஒத்துழைத்து மாவட்டச்

செயலாளர்களும், இப்போதே விரைந்து செயல்படுகிறார்கள் எனினும், இன்னும் வேகமாக முனைந்து செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1992 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களுக்குள்ளாக புதிய தலைமைச் செயற்குழுவும், புதிய தலைமைப் பொதுக்குழுவும் அமைந்து - புத்தெழுச்சியுடன் இன்றுள்ள எழுச்சியினும் பன்மடங்கு மேலாகப் பணியாற்றிட முன்வர வேண்டும் என்றும் அவாமிகக் கொண்டே இதனைக் குறிப்பிடுகிறேன்.

1992 ஜனவரி பிப்ரவரிதானே! அது அடுத்த ஆண்டுதானே என எண்ணிச் சோர்வாக இருந்திடலாகாது!

இப்படித்தான் திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக் கல்லூரி 1992-ஆம் ஆண்டு தொடங்குமென அறிவித்தது கண்டு - ஓ! அடுத்த ஆண்டு தானே! எனப் பலர் கருதி, அஞ்சல் வழிக் கல்லூரியில் சேருவதில் சற்று அசட்டையாக இருந்து விட்டனர்.

கல்லூரி முதல்வர் டாக்டர் திரு. நன்னன் அவர்கள், கல்லூரிப் பாடம் தொடங்கப்படுவதற்கும், அடுத்த ஆண்டான 1992 வருவதற்கும், இன்னும் இரண்டு மாதங்களே இருக்கின்றன என நினைவூட்டி அறிவித்த பிறகே - மகிழத்தக்க அளவுக்கு அஞ்சல் வழிக் கல்லூரியின் சேர்க்கை எண்ணிக்கை பெருகிடத் துவங்கியுள்ளது.

இந்த நேரத்தில் கட்சித் தேர்தல் பற்றிக் குறிப்பிடும்போது திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக்கல்லூரி குறித்தும் - அக்கல்லூரியில் உடன்பிறப்புகள், குறிப்பாகவும் சிறப்பாகவும் எதிர்காலத்துச் சிற்பிகளாம் இளையதலைமுறை உடன்பிறப்புகள் ஆர்வத்துடன் சேர்ந்து, ஓங்கி உயர்ந்து வளர்ந்து பெரியார் அவர்களாலும், அண்ணா அவர்களாலும் கட்டிக் காக்கப்பட்ட திராவிட இயக்க உணர்வு நம் காலத்தில் தேங்கி நின்று விட்டது என்றில்லாமல், ஆயிரங்காலத்துப் பயிராக இந்த மண்ணில் செழித்து, செம்மாந்து வளர்ந்திட திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக் கல்லூரி மாணவர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டு படித்திட முன்வர வேண்டும். பலர் முன்வந்துள்ளார்கள். பாராட்டுகிறேன்! இன்னும் பலர் வந்திட வேண்டும்.

வரும் ஜனவரி திங்களிலேயே இக் கல்லூரியில் சேர்ந்துள்ளவர்களுக்கு ஏழு பாடங்கள் அனுப்பப் பட இருக்கின்றன என்றும்; மேலும் தொடர்ந்து நடைபெற உள்ள பணிகளையும் கல்லூரி முதல்வர் நன்னன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

(1). திராவிட இயக்க வரலாறு, (2). சமூகநீதி, (3). 20-ஆம் நூற்றாண்டில் மாநில சுயாட்சி, (4). சுயமரியாதை இயக்கமும் பகுத்தறிவுக் கோட்பாடும், (5). மொழிப் பிரச்சினை, (6). திராவிட இனத்தின் தோற்றமும் ஏற்றமும், (7). மேடைப் பேச்சுக்கலை - இப்படி ஏழு பாடங்கள்! இந்த ஏழு பாடங்களில் ஏழாம்பாடம் விருப்ப பாடமே!

ஏழு பாடங்களும் தொகுக்கப்பெற்று, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாடமாகக் கல்லூரி நிர்வாகம் அனுப்பிவைக்கும். அதாவது மாதம் ஒரு பாடம்.

இப்படி ஏழு பாடங்களையும் தொகுத்து, மூன்று மாதங்களுக்கு மூன்று பாடம் அனுப்பிய பிறகு - நேர்முகத் தொடர் வகுப்பு, மாநிலத்தின் முக்கிய நகரங்கள் சிலவற்றில் நடத்தப்படும். ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது மூன்று நேர்முகத் தொடர் வகுப்புகள் நடத்தப்படும்.

ஒவ்வொரு மாதமும் பாடங்கள் அனுப்பப் பெற்றதும் - பாடங்களைப் படித்து, அவற்றில் எழுப்பப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை விடை பொறுப்புத்தாளில் (Response Sheet) எழுதி அஞ்சல் வழிக் கல்லூரி நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஓராண்டு முடிவுறும் போது, மாதந்தோறும் விடையெழுதித் தேர்வு பெற்றவர்களுக்கு பட்டயம் வழங்கும் விழா நிகழ்ச்சியில் பட்டயம் வழங்கப்படும்.

கட்சிப் பொறுப்புகளானாலும் - ஆட்சி மன்றப் பொறுப்புகளான உள்ளாட்சி, ஊராட்சித்தலைவர் - நகராட்சி உறுப்பினர் - நகராட்சித்தலைவர் - சட்டப்பேரவை உறுப்பினர் போன்ற எந்தப் பொறுப்புகளானாலும், அவர்களின் தகுதி, கட்சிக்கு ஆற்றிய பணி, ஏற்றுக்கொண்ட அடக்குமுறைகள் என்ற பட்டியலுடன், திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக்

கல்லூரியில் படித்தவர் - பட்டயம் பெற்றவர் என்ற தகுதியும் இணையும்போது, பொன் குடத்திற்குப் பொட்டும் இட்டது போல அமையும் அல்லவா? திராவிட இயக்கக் கொள்கைகளில் தெளிவும் உறுதியும் கொண்டவர்கள் என்பது, எதிர்காலத்தில் இந்த இயக்கமும் - இந்த இயக்கம் கட்டிக்காத்து வரும் உணர்வுகளும், கொள்கைகளும் கடலரிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்படுவதற்கு எழுப்பப்பெறும் கெட்டியான வலிவுமிக்க அரண்களாகவும் விளங்கிட உதவுமல்லவா?

இந்த மன்றம் செயல்படுவதை சட்டப்பேரவையிலேயே சிலரும், பத்திரிகையாளர்கள் சிலரும் எரிச்சலுடன் எதிர்ப்பதிலிருந்தே, இதன் முக்கியத்துவம் உன் போன்றவர்களுக்கு புரிந்திருக்க வேண்டும்.

எனவேதான் உடன்பிறப்பே! கட்சித் தேர்தலை விரைவுபடுத்திட - ஒழுங்குபடுத்திட வேண்டுமென்ற தலைமைக் கழகத்தின் கருத்தைக் கடிதமாகத் தீட்டிட எண்ணி எழுதுகோல் எடுத்த நான் - இந்தக் கட்சி உருவாக்கியுள்ள தி.மு.க. அறக்கட்டளையின் சார்பில் நடைபெறும் திராவிட மறுமலர்ச்சி மாமன்றத்தின் அஞ்சல் வழிக்கல்லூரியின் அவசியம் குறித்தும் - பணிமுறை குறித்தும் - விளக்கிட விழைந்து அதனையும் சேர்த்து எழுதியுள்ளேன்.

குறும்புத்தனமாக நீ என்னைப் பார்த்து, புன்னகையைத் தவழ விட்டவாறு, ஒரு கல்லில் இரண்டு மாங்கனியா? என மௌன மொழியில் கேட்பது காதில் விழுகிறது!

ஆம்! உன் இதயத்தின் மௌன மொழியை என் இதயச் செவிகள் கேட்கும் ஆற்றல் பெற்றவை அல்லவா?

அந்த ஆற்றல் நீ அளித்தது தானே! எனவே, மேலும் பல ஆற்றல்களை இந்த இயக்கம் பெற்றிட முனைந்து எழுந்திடு!

அன்புடன்,

மு. க.

(21-11-1991)

1832. கவனத்திற்கு இரு கருத்துகள்!

உடன்பிறப்பே,

திரைப்பட நீதிமன்றங்களில் மின்னல்போல எழுகின்ற திடீர்த் திருப்பம் ஒன்று, அண்மையில், மதுரையில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றதை ஏடுகளில் கண்டோம்.

கடைகளில், நாடகங்களில், திரைப்படங்களில் இத்தகைய திருப்பங்கள், அவற்றை உருவாக்கியவர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினால், வியந்து பாராட்டுவது இயல்பு!

ஆனால் மதுரையில், இராமநாதபுரம் செஷன்ஸ் நீதிமன்றத் திருப்பத்திற்கு யாருடைய திறமையையும் பாராட்டுவதற்கு இல்லையென்பது மாத்திரமல்ல! அந்தத் திருப்பத்திற்கு முன்னால் நடந்துள்ள காரியங்களுக்கு யார் யார் காரணமானவர்களோ, அவர்களைப் பற்றி எண்ணி வேதனைப்படவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காவல்துறை என்பது கடமையாற்றும் வீரர்களின் பாசறை - நெஞ்சில் நேர்மை எனும் கேடயம் தாங்கி, பாரபட்சமற்ற தன்மையெனும் படைக்கலனைப் பயன்படுத்தி - சமுதாயக் கேடுகள் போக்கவும் - நாடுகாக்கவும் - மனச்சாட்சியுடன் மக்களுக்கிடையே பணியாற்றும் தூய்மையாளர்களின் பாடி வீடு!

ஆம்! அப்படித்தான் அந்தத் துறை இருக்கவேண்டும். இயங்க வேண்டும். இயங்கவிடப்படவேண்டும். ஆனால் உலையில் போடப்பட்ட அரிசியோடு, ஒருசில கற்களும் கலந்து மறைந்து சோற்றுக்குள் ஒளிந்திருந்து பற்களைப் பதம் பார்ப்பது போல, காவல்துறையில் கடமையாற்றும் நல்லோர் பலருக்கு மத்தியில் பொல்லார் சிலரும் இடம் பெற்றுவிடுகின்றனர்.

அத்தகையோர் விளைத்திட்ட வினைகளில் ஒன்றுதான், இராமநாதபுரம் செஷன்ஸ் நீதிமன்றத்தின் திடீர் திருப்ப நிகழ்ச்சியின் பின்னணியாக அமைந்துவிட்டது எனக் கூறப்படுகிறது.

பாண்டியம்மாள் என்ற பெண்மணியை அவரது கணவர் வேலுச்சாமி, மகன் அர்ச்சுனன், மதுரைவீரன் ஆகிய மூவரும் கொலை செய்ததாக கடந்த பிப்ரவரி மாதம் அதாவது சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பு, போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அழுகிய நிலையில் கிடந்த ஒரு பெண்ணின் பிணத்தைப் பாண்டியம்மாள் பிணம்தான் எனக் கூறி, கைது செய்யப்பட்ட மூவர் மீதும் கொலை வழக்கு தொடரப்பட்டது என ஏடுகளில் செய்தி வந்தது. வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது திடீரென ஒருநாள் கொலையுண்டு இறந்துபோனதாகக் கூறப்பட்ட பாண்டியம்மாள் நீதிமன்றத்துக்கே வந்து, தான் உயிரோடு இருப்பதாகக் கூறினார் என்றும் பரபரப்பான செய்திகள் ஒன்றையொன்று முந்திக்கொண்டு ஏடுகளில் வந்தன.

இறந்து போனவர்களையோ - கொல்லப்பட்டவர்களையோ - முனிபுங்கவர்கள் கெண்டி ஜலம் தெளித்து எழுப்பிடவோ, அல்லது இடப வாகனத்தில் பார்வதி சமேதராகப் பரமசிவனோ, கருடவாகனத்தில் இலக்குமி சமேதராக திருமாலோ, ஆகாயத்தில் தோன்றி உயிர் தந்திடவோ முடியும் என்பதைக் கதையாகக் கட்டி, அதனைக் கண்ணையும் கருத்தையும் மூடிக் கொண்டு நம்புவதற்கு, இது புராண காலமல்ல!

நீதிமன்றத்துற்கு வந்தது உண்மையான பாண்டியம்மாள்தான் என்றால், நிச்சயம் அவர் கொல்லப்பட்டு பிணமாகிப் போய், பின்னர் பிழைத்து வந்தவராக இருக்கவே முடியாது.

சாகவில்லை நான் என்று சத்தியம் செய்கிற பெண்மணி, பாண்டியம்மாள் தானா என்பதைக் கண்டறிந்து நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க, அந்த ஊர்ப் பெரியவர்கள் சிலர் கூடி முடிவு செய்ய வேண்டுமென நீதிபதி அறிவித்து அவ்வாறு பதினோரு பேருக்குச் சம்மனும் அனுப்பப் பட்டிருக்கிறதாம். சம்பந்தப்பட்ட அந்த ஊரின் பெயர் விருதுநகருக்கு அருகேயுள்ள வாய்ப்பூட்டான்பட்டி என்றும் குறிப்பிடப்படுகிறது.

நல்ல பெயர்தான் ஊருக்கு வைத்துள்ள பெயர்! வாய்ப்பூட்டப்படாத நிலையில் அந்த ஊர்ப் பெரியவர்கள் உண்மையை உரைத்திடுவர் என எதிர்பார்க்கலாம்! உரைத்தால் தான் சிக்கல் தீரும்!

இதற்கிடையே தொடர்ந்து வந்துள்ள செய்திகளும், நிகழ்வுகளும் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், காணாமற் போயிருந்த பாண்டியம்மாளை அவரது கணவரும் மற்றும் இருவரும் கொலை செய்து விட்டார்கள் என்று போலீசார் வழக்கு ஜோடித்து விட்டதாகவும் - அது பொய் வழக்கு என்றும் - ஆனந்த விகடன் ஆசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்கள், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஹேபியஸ் கார்பஸ் மனுவில் குறிப்பிட்டுள்ளதாக இன்று ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தங்களால் கொல்லப்படாத பாண்டியம்மாளைத் தாங்கள் கொன்றதாக, கைது செய்யப்பட்ட மூவரும் வாக்குமூலம் கொடுத்தார்களா? அல்லது அவர்கள் வாய்மொழியாக வாக்கு மூலம் அளித்ததாகப் போலீசாரே எழுதிக் கொண்டார்களா? எந்த அடிப்படையில் இந்தக் கொலை வழக்கு தொடரப்பட்டது என்ற விபரங்கள் தெரியவில்லை.

அரசியல் காரணங்களுக்காக வேண்டாதவர் மீது பயங்கர வழக்குகள் தொடரப்படுவதற்கு எடுத்துக்காட்டாக, கழகச் சட்டமன்ற உறுப்பினர் மாயூரம் கிட்டப்பா வீட்டுத் தோட்டத்துச் சுவரோரம் ஒரு சிலையைப்போட்டு விட்டு அவரை சிலை திருடிய வழக்கில் அ.தி.மு.க. அரசு கைது செய்து, அவர் தன்மீது சுமத்தப்பட்ட களங்கத்தினால் மனநிம்மதி இழந்து, எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க.விலேயே சேர்ந்து - பிறகு அந்த வழக்கு கேட்பாரற்றுப் போய், களங்கம் வந்ததே என்ற கவலையில் அவரும் விரைவில் இறந்துபோய் - மலர்வளையம் வைத்து அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திட நான் மயிலாடுதுறைக்கு ஓடியதும், அவர் மறைவினால் நடந்த இடைத்தேர்தலில் கழகம் வென்றதும் கடந்த கால வரலாறு!

அரசியல் அல்லாமல், தனிப்பட்டவர் மீது வஞ்சம் தீர்க்கவோ - அல்லது வழக்கைக்கண்டு பிடிக்கவே இல்லை என்ற குற்றத்திலிருந்து போலீசார் தங்களைக் காத்துக் கொள்ளவோ,

சில நேரங்களில் தமது மனச்சாட்சியைக் கொன்று விடுகின்றனர்! அல்லது கொன்று விடுமாறு தூண்டப்படுகின்றனர்!

பாண்டியம்மாள் கொலை என்ற வழக்கு விவகாரத்தைப் பார்க்கும்போது - இது ஜோடனையாக இருந்தால்; எப்படியெல்லாம் பொய் வழக்கு ஜோடிக்க முடிகிறது என்பது சாதாரண மக்களுக்கும் எளிதாக விளங்கிடவே செய்யும்.

> உண்மையான குற்றவாளிகள் யாராயிருப்பினும், அவர்கள் சட்டத்தின் முன்னாலும், நீதியின் முன்னாலும் தப்பி விடக் கூடாது.
>
> அதேபோல் நிரபராதிகள் எவராயினும், அவர்களை வீணே சட்டமும், நீதியும் தண்டிக்க முயலுவதைத் தமது பொழுதுபோக்காக எண்ணி விடக்கூடாது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் நான், நண்பர் பாலசுப்பிரமணியம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை வரவேற்கிறேன்.

அப்பாவியான மூன்றுபேர் மீது போலீசார் பொய் வழக்குப் போட்டுள்ளனர். உயர்போலீஸ் அதிகாரிகள் இதுபற்றி முழுமையாக விசாரிக்க வேண்டும். இந்த வழக்கில் கைதாகியுள்ள மூவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும். சட்டவிரோதமாக அவர்களைப் பல மாதங்கள் சிறையில் அடைத்து வைத்திருந்ததற்காக, அவர்கள் மூவருக்கும் தலா மூன்று லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமென்று உயர்நீதி மன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிடவேண்டும். பொய் வழக்கு போட்ட போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீசாரின் இதுபோன்ற அத்துமீறிய செயல் மேலும் நடைபெறாமல் இருக்க, தமிழகத்தில் குற்றப் புலனாய்வு முறையையே முழுமையாக மாற்றி அமைத்திட ஒரு நீதி விசாரணை நடத்த உத்தரவிடவேண்டும்.

இவ்வாறு உயர்நீதிமன்றத்திடம் திரு. பாலசுப்பிரமணியம் கோரியுள்ளார். இந்த மனு குறித்து வெள்ளிக்கிழமைக்குள் பதில் தருமாறு உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளனர்.

* வேலியை எவரும் முறிக்கவும் கூடாது!

* அதற்காக, வேலியே பயிரை மேயவும் கூடாது!

சமுதாய நலன் பேணுவோருக்கும் - சமுதாயத்தின் முக்கிய அங்கமான காவல் துறைக்கும் கவனத்தில் இருக்க வேண்டியவை இந்த இரு கருத்துகளும்!

அன்புடன்,

மு. க.

(22-11-1991)

1833. ஜனநாயகவாதிகளின் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு இடைக் கால நிவாரணமாக 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்ற நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை மறுத்த கர்நாடக அரசு பிறப்பித்த அவசர சட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளித்துள்ளது. அந்தத் தீர்ப்பு கேட்டு மகிழ்ந்திருக்கும் நேரத்தில், இதோ இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் அளித்துள்ள மற்றொரு தீர்ப்பும் அனைவரது கவனத்தையும் ஈர்த்திடும் வண்ணம் வெளி வந்திருக்கிறது.

நடக்காத ஒரு கொலையை நடந்ததாகச் சொல்லி, ஏதோ ஒரு பிணத்தைக் காட்டி, அதுதான் பாண்டியம்மாள் பிணமென்றும், அவளைக் கொலை செய்தது அவளது கணவரும் மற்றும் இருவருமென்றும் அந்தக் குற்றத்தை அவர்களே ஒப்புக் கொண்டிருப்பதாகவும் கூறி போலீசார் வழக்கு தொடர்ந்திருப்பதையும், கொலையுண்டதாகக் கூறப்படும் பாண்டியம்மாள் கோர்ட்டுக்கே வந்துவிட்ட நிகழ்ச்சியையும் மையமாக வைத்து முரசொலியில் நான் எழுதியிருந்த கடிதத்தைப் படித்திருப்பாய்.

அந்த வழக்கில் இராமநாதபுரம் மாவட்டம் செஷன்ஸ் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு எல்லா ஏடுகளிலும் நேற்றும், இன்றும் வெளியாகியுள்ளது.

சட்டம் ஒரு இருட்டறை! அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! ஏழைகளால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடிவதில்லை!

எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதை எண்ணிப் பார்த்துக் கொள்கிறேன்.

வக்கீலின் வாதம் என்ற பிரகாசமான விளக்கை ஒருவேளை பெற முடியாவிட்டாலும், நீதிபதிகளின் உள்ளத்தில் ஒளியிருந்தால்

அவர்தம் தீர்ப்புகளிலும் ஒளி கிடைக்கும் என்பதை எடுத்துக் காட்டும் வண்ணம் அந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வேலுச்சாமி, அர்ச்சுனன், மருதவீரன் மூவரையும் விடுவிப்பதாக அறிவித்த அந்தத் தீர்ப்பில், நீதிபதி அவர்கள் அதனையொட்டி வழங்கியுள்ள கருத்துகள்தான் மிக முக்கியமானவை!

உயிருடன் இருக்கும் ஒரு பெண் கொலை செய்யப்பட்டுவிட்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது இருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஆனால் அந்தப் பெண்ணின் சகோதரரே, ஒரு பெண் பிணத்தின் போட்டோவைக் காட்டி அதுதான் பாண்டியம்மாள் என்று சொன்னதை வைத்து புலன் விசாரணை செய்து வழக்கு தொடரப்பட்டு உள்ளதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதோடு வேடிக்கை என்னவென்றால், எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதன்படி ஆயுதம் கைப்பற்றப்பட்டதாகவும் அரசு தரப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆனால் கொலை செய்யப்பட்டது பாண்டியம்மாள் அல்ல. யாரோ ஒரு பெண் வெட்டப்பட்டு இறந்து இருக்கிறாள் என்பது மட்டும் உண்மை என்று தெரிகிறது.

அந்தப் பெண் பிணத்தைப் பார்த்து கிராம நிர்வாகி அதிகாரி தகவல் கொடுத்து, அதன் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடத்தி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து இருக்கிறார்கள்.

புலன் விசாரணையின்போது ஒரு பெண் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாகவும், அவள் பெயர் விலாசம் தெரிந்தால் போலீசாரிடம் தகவல் கொடுக்கும்படியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

கொலையை நேரில் கண்ட சாட்சியம் இல்லை. சூழ்நிலை சாட்சியம் கோர்வையாக இல்லை. கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பெண் இப்போது உயிருடன் இருக்கிறாள். ஆகவே, போலீசார் கவனத்தோடு செயல்பட்டு புலன் விசாரணை நடத்தி இருந்தால், இந்த நிலை ஏற்பட்டு இருக்காது.

இந்தக் காலத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. போலீஸ் சித்திரவதைக்குப்

பயந்து செய்யாத குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிற சூழ்நிலையும் இருப்பதாகத் தெரிகிறது.

இப்போது இருக்கிற புலன் விசாரணை முறையில், சில மாற்றங்களைச் செய்தால்தான், சமுதாயத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும்.

சாட்சியை வைத்துத்தான் தீர்ப்பு கூறப்பட வேண்டியது இருக்கிறது. திறமையான ஒரு போலீஸ் அதிகாரி சாட்சிகளுக்குச் சொல்லிக் கொடுத்து நீதிமன்றம் நம்புகிற அளவில் சாட்சியத்தை வழங்கினால், அதை நீதிமன்றம் நம்பி செயல்பட வேண்டியது இருக்கிறது. ஆகவே, போலீஸ் அதிகாரியின் திறமையைப் பொறுத்து ஒருவர் தண்டிக்கப்படவும் அல்லது அவர் விடுதலை செய்யப்படவும் கூடும்.

இப்போதிருக்கிற புலன் விசாரணை முறையில், இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு சமுதாயம் தள்ளப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த ஒரு வழக்கை ஒரு முன் மாதிரியாகக் கொண்டு இதற்கு ஒரு பரிகாரம் தேடவேண்டும். இப்போது இருக்கும் புலன்விசாரணை முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

தாலுகா மட்டத்தில் உயர் அதிகாரிகள், மூத்த வக்கீல்கள், நல்ல ஆசிரியர்கள் கொண்ட ஒரு குழு அமைத்து கொலை போன்ற வழக்குகளின் புலன் விசாரணையை அவர்கள் முன்னிலையில்தான் நடத்த வேண்டும் என்று விதி ஏற்படுத்த வேண்டும்.

இதுபோன்ற பெரும்குற்றம் நடந்தால், அது பற்றிய புகாரை முதலில் தாசில்தாரிடமோ அல்லது கிராம நிர்வாக அதிகாரியிடமோதான் கொடுக்க வேண்டும். அவர்கள் அதனை சம்பந்தப்பட்ட போலீசாருக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

உடன்பிறப்பே, நீதிபதியே வேடிக்கை என்னவென்றால் என வேதனையுடன் குறிப்பிட்டு, எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதன்படி ஆயுதம் கைப்பற்றப்பட்டதாகவும் அரசு தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது, எனச் சுட்டிக் காட்டியுள்ளதோடு, இந்தக் காலத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. போலீஸ் சித்ரவதைக்குப் பயந்து செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்கிற சூழ்நிலையும் இருப்பதாகத் தெரிகிறது என்றும் கூறியுள்ளார் அந்தத் தீர்ப்பில்!

நடைமுறையில் இருந்து வருகிற கிரிமினல் சட்டங்களை வைத்துக்கொண்டே, மனச்சாட்சி பற்றிக் கவலைப்படாத போலீஸ் அதிகாரிகள் சிலர், காவல்துறை எனும் கடமை உணர்வும் - கண்ணியமும் கடைப்பிடிக்கும் முக்கியமான துறைக்குக் களங்கம் உண்டாக்கி விடுகிறார்கள் என்றால் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு மேலாக தீவிரமான தடா போன்ற சட்டங்களை எப்படியெல்லாம் பயன்படுத்திடக் கூடும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

எந்தத் தீவிரச் சட்டமாக இருப்பினும், உண்மையான குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்திடப் பயன்படுத்தப்படும் பொழுது; நீதி நிலை நிறுத்தப்படுகிறது! சமுதாயம் பலன் பெறுகிறது!

அதற்கு மாறாக, அரசியல் காழ்ப்புணர்வுகளைத் தீர்த்துக் கொள்ள அவற்றைத் தவறாகப் பிரயோகிக்கும் பொழுது, நீதி, நியாயம் அனைத்தும் சாகடிக்கப்படுகின்றன! சமுதாயம் பாழாக்கப்படுகிறது!

தி.மு. கழகத்தின் மீதும் - அரசினருக்குப் பிடிக்காதவர்கள் மீதும் சேறு வாரி வீசி, அதற்காகத் தீவிரச் சட்டங்களை இந்த அரசு துஷ் பிரயோகம் செய்வதைக் கண்டித்துத் தலைமைக் கழகச் சார்பில் அறிக்கை வெளியிட்டிருந்தேன்.

அந்த அறிக்கையை சில ஏடுகள் இருட்டடிப்பு செய்து விட்டன. 1988 முதல் 1991 ஏப்ரல் மாதம் இறுதி வாரம் வரையில், அதாவது ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு வரையில், விடுதலைப் புலிகளை மிக மிகத் தீவிரமாக ஆதரித்து ஜெயலலிதா விடுத்த அறிக்கைகள், பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகள், எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழாவில் ராஜீவ் முன்னிலையில் அவர் பேசிய விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பேச்சு அனைத்தையும் தேதி வாரியாகக் குறிப்பிட்டு, இவை உண்மையா? அல்லவா? எனக் கேட்டிருந்தேன்.

இந்த விபரங்கள் அனைத்தையும் இந்து போன்ற ஏடுகள் மறைத்துவிட்டு - ஏதோ நாலு வரி மறுப்புச் செய்தியாக என் அறிக்கையை வெளியிட்டுள்ளன. இதையெல்லாம் சுட்டிக் காட்டினால் கருணாநிதி, துருப்பிடித்த ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அரசியல் நடத்துகிறார் என்று விமர்சனம் செய்கிறார்கள் சிலர்! இப்போது புரிகிறதா உண்மை?

இன்று தமிழகத்தில் நடத்தப்படும் அடக்குமுறை தர்பாரில் எப்படியெல்லாம் அரசியல் எதிரிகளைப் பழிவாங்க வழக்குகள் தயாரிக்கப்படுகின்றன என்பதற்கு,

பாண்டியம்மாள் கொலை என்ற பெயரால் ஜோடிக்கப்பட்ட வழக்கு ஒன்றே சான்று!

மீண்டும் கூறுகிறேன்! நடைமுறையில் உள்ள கிரிமினல் சட்டத்தை வைத்துக் கொண்டே இத்தனை ரகளை!

தடா போன்ற பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் மட்டுமல்ல, தேசியப் பாதுகாப்புச் சட்டம் - குண்டர்கள் சட்டம் - இவையெல்லாம் போதாததற்கு, 1911 ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சிக் கால சட்டமான ராஜத் துரோகத் தடுப்புச் சட்டத்தையும் ஜெயலலிதா அரசு, இப்போது உயிர் கொடுத்து உலவ விட்டிருக்கிறது. இந்தச் சட்டப்படி வீட்டுக் கூடத்திலோ, தாழ்வாரத்திலோ அமர்ந்து இருப்பவர்களைக்கூட, ஆட்சிக்கு எதிராகச் சதியில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சாட்டி கைது செய்ய முடியும். இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதின் மூலம் எதிர்க்கட்சிகளை மிரட்டலாம் எனக் கருதிக் கொண்டிருக்கிறது போலும்!

உண்மையில் தனக்கெதிரான மக்கள் சக்தி, மெல்ல மெல்ல - ஆனால் உறுதியாகத் திரளுகிறது என்ற மிரட்சியினால்தான், 1911 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் ஆட்சியின் சுதந்திர உரிமை பறிப்பும், ஜனநாயக விரோதமுமான இந்தச் சட்டத்தை அ.தி.மு.க. ஆட்சி கொண்டு வந்துள்ளது என்பதே எனது கணிப்பு!

நடைமுறைச் சட்டங்களை வைத்து, அவற்றின் மூலம் துஷ்பிரயோக நடவடிக்கை போதாதென்று - தீவிரச் சட்டங்களைக் கொண்டு நாசகாரச் செயல்கள் - அத்துடன் ராஜத் துரோகத் தடுப்புச் சட்டம் வேறா?

தமிழ்நாடு என்ன, வெள்ளையராட்சிக் காலத்திற்கு வேகமாகத் திரும்புகிறதா?

ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையோர் சிந்திக்க வேண்டும்.

அன்புடன்,

மு. க.

(24-11-1991)

1834. தமிழகத்தின் நியாயத்தை மறுக்காதீர்!

உடன்பிறப்பே,

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று கூறுவதைவிட, கைக்கு எட்டியதைத் தட்டிப் பறிக்க முனைகிறார்கள் - அதைத் தடுத்து நிறுத்திட, உரியவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள் என்றுதான், காவிரிப் பிரச்சினையில் நடுவர்மன்ற இடைக்கால ஆணை - அதனை கெஜட்டில் வெளியிடாமல் மத்திய அரசு, உச்சநீதிமன்றத்தை நாடிய நிகழ்வு - இடைக்கால ஆணைக்குச் சாதகமாகவும், அதனை மறுத்து கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து அறிவித்துள்ள சூழ்நிலையில் கர்நாடக முதல்வர் அவர்கள் நடுவர் மன்ற இடைக்கால ஆணையை மத்திய அரசு கெஜட்டில் வெளியிட முடியாது எனக் கூறிக்கொண்டு, தனது தலைமையில் ஒரு குழுவினருடன் டெல்லிக்கு செல்வது - ஆகியவற்றையெல்லாம் பார்க்கும்போது சொல்லத் தோன்றுகிறது.

நடுவர்மன்றம் இடைக்கால ஆணை பிறப்பிக்கலாம் என்று ஏற்கனவே கழக அரசு உச்ச நீதிமன்றத்தை நாடி, உச்சநீதிமன்றமும் அதற்கேற்பத் தீர்ப்பு வழங்கி - அதனையொட்டி நடுவர் மன்றம்; இடைக்கால ஆணையாக 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டுமென அறிவித்தவுடன் - இந்த ஆணையை உடனடியாக மத்திய அரசு, கெஜட்டில் வெளியிட வேண்டுமென அ.தி.மு.க. அரசும், தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் விடுத்த வேண்டுகோளை மத்திய காங்கிரஸ் அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

தேவையில்லாமல் காலங் கடத்தப்பட்டது. தமிழகத்து மக்களின் நியாயத்தை உணர்வதை விட, கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் அரசுடன் ஒத்துப்போக வேண்டுமென்ற அரசியல் ரீதியான காரணமே மத்திய காங்கிரஸ் அரசின் தாமதத்திற்கும், தயக்கத்திற்கும் முக்கியமானதாக அமைந்தது.

அந்தத் தடங்கலையும் மீறி, எப்படியோ தமிழக மக்களுக்கு நியாயம் கிடைத்தது என்று மகிழத்தக்க வண்ணம் உச்ச நீதிமன்றம் கருத்து அறிவித்து விட்டது.

எனவே இனியாவது, மெத்தனமாக இல்லாமல், நடந்தவைகளை மறந்துவிட்டு நடக்க வேண்டியவைகளை மத்திய அரசு காலந்தாழ்த்தாமல் கவனிக்க வேண்டுமா? வேண்டாமா?

மத்திய இணை அமைச்சர் சிதம்பரம் அவர்கள் கூறியதாக இன்று ஏடுகளில் வந்துள்ள செய்தி :-

கர்நாடக அரசின் அவசரச் சட்டம் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று நடுவர் மன்ற ஆணையை கெஜட்டில் பிரசுரிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துபற்றி இணை அமைச்சர் சிதம்பரம் அவர்களைக் கேட்டதற்கு, இடைக்கால ஆணையை மத்திய அரசு விரைவில் கெஜட்டில் பிரசுரிக்கும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

இதைப் படிக்கும்போது, மத்திய அரசு அமைச்சர்களிலேயே ஒருவராக இருப்பவருக்கே திட்டவட்டமாகப் பதில் தெரிவிக்க முடியவில்லையே! ஏன்? என்ற திகைப்பே நமக்கு ஏற்படுகிறது.

நம்பப்படுகிறது!

எதிர்பார்க்கப்படுகிறது!

என்பனபோன்ற வாசகங்களை, மத்திய அரசு மட்டத்திலிருந்து சற்றுத் தொலைவிலிருப்போர் பயன்படுத்தினால் அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை.

அரசோச்சும் அமைச்சர்களின் வளையத்திற்குள்ளேயே இருக்கும் ஒருவர், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை - (உச்ச நீதிமன்றம் கருத்தினை வழங்கிய பிறகும்) கெஜட்டில் வெளியிடப்படுகிற பிரச்சினையை நம்பப்படுகிறது என்ற பட்டியலில் வைக்கலாமா?

கெஜட்டில் வெளியிடப்படும் என்று அறிவிக்கிற உறுதியான பட்டியலில் அல்லவா வைக்க வேண்டும்!

இருபது ஆண்டுகளுக்கு மேலாக பேச்சு வார்த்தைகள் நடத்தி - இருபத்தேழு தடவை மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் மட்டத்திலே, மத்திய அமைச்சர்கள் முன்னிலையிலே விவாதித்து

- எந்தப் பயனும் கிட்டாமல், தமிழகம் பாலையாகி விடக் கூடும் என்ற அச்சம் மிகுந்த நிலையில் ஏற்பட்டுள்ள இந்த நல்ல முடிவு, சீர்குலைந்து விடாமல் இருக்க மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை இனியும் நாள் நட்சத்திரம் பார்த்துக் கொண்டிருக்காமல் உடனடியாக அரசிதழில் வெளியிட வேண்டியதேயாகும்.

இந்த அறிவிப்பையும், இதனையொட்டி முறையாக எடுத்திடவேண்டிய உரிய நடவடிக்கைகளையும் மத்திய அரசு முனைந்து செயல்படுத்த வேண்டுமென்பதே தமிழ் நாட்டு மக்களின் ஒருமித்த குரலாகும்! இந்தக் குரலுக்கு மதிப்பளிக்குமா மத்திய அரசு?

அன்புடன்,

மு. க.

(25-11-1991)

1835. மூன்று நாட்களும் முழங்கட்டும் முரசங்கள்!

உடன்பிறப்பே,

வெடிப்புகள், சிதறல்கள், பிளவுகள் இப்படி என்னவெல்லாமோ ஏற்படப்போகின்றன என்று ஆரூடம் கணித்து விளம்பரம் செய்து, அதன் காரணமாக இரண்டொரு நாட்கள் தமது விற்பனையைப் பெருக்கிக்கொண்டு, அதற்காக நமது கழகத்திற்கு ஒரு நன்றி கூடச் சொல்லாத ஏடுகள் சிலவற்றுக்கும் - எரிச்சல் நெஞ்சங்கள் சிலவற்றுக்கும் பெருத்த ஏமாற்றத்தை அளித்து, வழக்கம்போல் பெருமித மிக்கக் கட்டுப்பாட்டுடனும், கடமை உணர்வுடனும் தலைமை நிர்வாகக் குழு அண்ணா அறிவாலயத்தில் உள்ள அலுவலகக் கூடத்தில் நடைபெற்று, மிக முக்கியமானத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

காவிரி நடுவர்மன்ற இடைக்கால ஆணையை அரசிதழில் (கெஜட்டில்) வெளியிடுவதில் வேண்டுமென்றே மத்திய அரசு காலங்கடத்தியதையும் - அடுத்து உச்ச நீதிமன்றம் அரசிதழில் வெளியிடுவதற்கு ஏற்ப சாதகமான கருத்துரை வழங்கியபிறகும் இதோ! அதோ! என்று காலம் கடத்தி வருவதையும் கண்டித்ததோடு - உடனடியாக மத்திய அரசு நடுவர்மன்ற இடைக்கால ஆணையை அரசிதழில் வெளியிட வேண்டுமென வற்புறுத்தியுள்ளது.

வெள்ளப்பாழ் குறித்து தெளிவான மதிப்பீடுகள் செய்து உரிய துயர்துடைப்புப் பணிகளை மாநில அரசு செய்யத் தவறிவிட்டதை சுட்டிக் காட்டியும், மத்திய அரசின் அமைச்சர்களாவது ஒருமுறைக்கு, இருமுறை ஹெலிகாப்டர்களில் சென்று வெள்ளப் பாதிப்பு பகுதிகளை பார்வையிட்டிருக்கும் போது, இங்குள்ள முதல்வருக்கு அத்தகைய அக்கறைகூட தவித்திடும் மக்கள் மீது ஏற்படவில்லையே என்பதைக் கண்டித்தும்,

ஆலைத் தொழிலாளர் பிரச்சினையில் அதிபர்களிடம் பொழிந்த அன்பை, தொழிலாளர்களிடம் சிறு தூறல் அளவுக்காவது

காட்டி, அவர்களையும் அழைத்து வைத்து ஒரு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தாமல், தீபாவளி போனஸ் பிரச்சினையில் முதலாளிகளுக்கே சாதகமாக நடந்து கொண்டதைக் கண்டித்தும்,

பக்கிங்காம் கர்னாடிக் ஆலை மூடப்பட்டுள்ள விவகாரத்தில் தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசின் தொழிலாளர் நல ஆணையாளர் செயல்பட்டிருப்பதைக் கண்டித்தும்,

பேருந்துக் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, அத்தியாவசியப்பண்டங்களின் விலைவாசி உயர்வு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒருகோடி ரூபாய் வீதம் சிறப்பு ஆக்கப் பணிகளுக்காக வழங்கப்படும் எனக் கூறிவிட்டு, அந்த அறிவிப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிட்ட நிலைமை, அரசுத்துறையில் நல்ல இலாபத்துடன் நடைபெறும் தொழில்களையும் மற்றும் பொதுத்துறைத் திட்டங்களையும் தனியார் வசம் ஒப்படைக்க நடைபெறும் இந்த அரசின் முதலாளித்துவ எடுபிடிப்போக்கு ஆகியவற்றைக் கண்டித்தும்,

நிறைவேற்றப்பட்டுள்ள நிர்வாகக் குழுவின் தீர்மானங்களை விளக்கியும், விரிவாக எடுத்துரைத்தும் என்றைக்கும், எந்த நிலையிலும் மக்கள் பிரச்சினைகளில் கழகத்திற்குள்ள ஈடுபாட்டினைக் கோடிட்டுக் காட்டும் வகையில், டிசம்பர் 6-7-8 ஆகிய மூன்று நாட்களும் மாநில முழுதும் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதெனத் தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன் மத்திய அரசின் புதிய தொழில் கொள்கை - மக்கள் விரோத தொழிலாளர் விரோத பொருளாதாரக் கொள்கைகள் - பண வீக்கம் - வரலாறு காணாத விலைவாசி உயர்வு - இவற்றைக் கண்டித்து 29.11.91 அன்று முற்போக்குத் தொழிற்சங்கங்கள் நடத்தும் வேலை நிறுத்தத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமெனவும் தலைமைக் கழக நிர்வாகக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உடன்பிறப்பே, இந்த நிர்வாகக் குழு மற்றொரு முக்கியமான தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளதை நீ அறிவாய்!

சட்டம் என்பது ஒரு கண்ணாடிக் குவளையைக் கையாளுவது போலக் கையாளப்படவேண்டியது. கையில் எச்சரிக்கையாகப் பிடித்திராமல் விட்டுவிட்டால், கண்ணாடிக்குவளை கீழே விழுந்து நொறுங்கிவிடும். எச்சரிக்கையாகப் பிடிக்கிறேன் என்று சொல்லி

எக்கச்சக்கமாகப் பலங்கொண்ட மட்டும் இறுக்கிப் பிடித்தால் கையிலேயே அந்தக் கண்ணாடிக் குவளை உடைந்து நொறுங்கி கைமுழுவதையும் காயமாக்கி, இரத்தம் கொட்டச் செய்துவிடும்.

இன்றுள்ள அ.தி.மு.க. அரசு, தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளை அடக்குகிறோம் என்ற பெயரால் - ராஜீவ் காந்தி அவர்களின் கொலை வழக்கில் சிக்காமல் போய்விட்டார்களே தனது அரசியல் எதிரிகள், தனிப்பட்ட எதிரிகள் என்ற ஆதங்கத்தில் நெஞ்சில் வஞ்சம் சுமந்து, மாநில அளவில் உள்ள காவல்துறைப்பிரிவைக் கொண்டு பத்மநாபா கொலை வழக்கு எதிரிகளைப் பிடிக்கிறோம் எனப் பசப்பிக்கொண்டு, அதற்குச் சற்றும் சம்பந்தமில்லாத அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அதிகாரிகள், வழக்கறிஞர்கள் என - எல்லோரையும் தடா சட்ட வளையத்திற்குள் மாட்டிவிட முனைந்து, ஒரு மினி எமர்ஜன்சி நிலைமையையே உருவாக்கியிருக்கிறது.

பத்மநாபா கொலை நடந்தபிறகும், விடுதலைப்புலிகளுக்காக வரிந்து கட்டிக்கொண்டு அவர்களுக்கு மத்திய மாநில அரசுகள் ஆதரவு தர வேண்டும் - புலிகள் சிங்கள அரசை எதிர்த்து நடத்தும் போர் மகத்தானது - எனவே விடுதலைப் புலிகளை ஆதரிப்பது தமிழ்நாட்டு மக்களின் கடமை, என்று தொடர்ந்து ஏடுகளுக்குப் பேட்டியளித்து வந்த ஜெயலலிதாவின் தலைமையில் இயங்கும் அரசின் காவல்துறைதான், அதுவும் அவரது நேரடிப் பொறுப்பில் உள்ள காவல் துறைதான் - இப்போது பத்மநாபா கொலை வழக்கு என்ற சாக்கில், கழகத்தின் மீது, கழகத்தினர் மீது, கட்சிகள் சிலவற்றின் மீது, தனக்குப் பிடிக்காத அதிகாரிகள் மீது பழி தீர்த்துக் கொள்ள முனைந்து தனது சுயரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

எந்தக் குற்றத்தையும் தடுப்பதற்கும் - நடந்து விட்ட குற்றங்களுக்குத் தொடர்புடையவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டிக்கச் செய்வதற்கும் ஏற்கனவே சட்டங்களும், சட்டப் பிரிவுகளும் இருக்கின்றன.

தடா சட்டம் என்பது அரசியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்படும் என எதிர்க்கட்சிகள் எச்சரித்தபோது - அப்படிப் பயன்படுத்தப் பட மாட்டாது என்ற உறுதிமொழியளிக்கப்பெற்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும்!

இதுவரையில் அது பயங்கரவாதிகள் மீதே பெரும்பாலும், குறிப்பாகப் பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது!

ஆனால் இங்கே இப்போது அ.தி.மு.க. ஆட்சியில், தடா சட்டத்தை மாநிலக் காவல் துறை தனிப் பிரிவிடம் ஒப்படைத்து - அவர்கள் யாரோ சில விடுதலைப்புலிகளைப் பிடிப்பது, அப்படிச் சிக்கியவர்களை மிரட்டியும், சித்ரவதை செய்தும் - அவர்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அவர்களே சொன்னதாக இந்த அரசுக்கு வேண்டாதவர்களைத் தடா சட்டத்தில் சிக்க வைப்பது என்ற ரீதியில் பத்மநாபா கொலை வழக்குப் புலன் விசாரணையும், நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன! சுருக்கமாகச் சொன்னால், பாண்டியம்மாள் கொலை வழக்கு ஜோடிக்கப்பட்ட பாணியில்!

நாளொன்றுக்குச் சராசரி நாற்பதுபேர் கொலை செய்யப் படுகிறார்கள் பஞ்சாப்பில்! தடா சட்டம் அங்கே இருந்தும்கூட, அந்த நிலை அங்கே வளருகிறதே தவிர குறைந்தபாடில்லை!

மாடு வெட்டும் கத்தியை மனிதனின் அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்துவது போல, ஏற்கனவே அறுவை சிகிச்சைக்கானக் கருவிகளாக - நடைமுறையில் குற்றவாளிகளைக் கூண்டிலேற்றிட கிரிமினல் சட்டங்கள் இருக்கும்போது, இங்கு மாடு வெட்டும் கத்தியாக தடா சட்டப் பிரயோகம்! அதுவும் மாட்டை மட்டும் வெட்டாமல், மனிதர்களையும் வெட்டுகிறது! ஆம்! அரசியல் காழ்ப்புணர்வுடன், பிடிக்காதவர்களையெல்லாம் பழிவாங்க அந்தச் சட்டம் இங்கே பயன்படுத்தப்படுகிறதே - அதை சுட்டிக்காட்டத்தான் இந்த உவமையைக் கையாண்டுள்ளேன்.

தீவிரம் என்ற பெயரால் பயங்கரவாதம் - கொள்கையில் அவ்வளவு பற்று என்ற பெயரால் வன்முறை - இவை என்றைக்குமே தி.மு.கழகத்திற்கு உடன்பாடானவையல்ல!

"வன்முறை இருபுறமும் கூர்மை உள்ள கத்தி!
அது பயன்படுத்தியவரையே திருப்பித் தாக்கும்."

என்று அண்ணாவின் அறிவுரையை ஏற்று அவர் கற்பித்த அமைதிவழி - அறவழியையே கடைப்பிடிக்கும் கழகம்,

"தமிழ்நாடு எந்தச் சூழ்நிலையிலும்
வன்முறைக் களமாகக்கூடாது -
என்பதில் ஆழ்ந்த அக்கறையுடையது!"

இந்தக் கழகம், தலைமை நிர்வாகக்குழுவில் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களின் அடிப்படையில்

மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தோழமைக் கட்சிகளுடனும் கலந்து பேசுவது என்ற முடிவையும் எடுத்துள்ளது.

அதற்கு முன்பு, கழக நிர்வாகக்குழு நிறைவேற்றியுள்ள கண்டனத் தீர்மானங்கள் விளக்கப் பொதுக்கூட்டம் என்ற தலைப்பில், கழக அமைப்புகளின் சார்பில் டிசம்பர் 6, 7, 8 ஆகிய நாட்களில் மாநில முழுதும் பரவலாகக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென நிர்வாகக் குழுவில் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிவித்துள்ளார்.

கூட்ட நிகழ்ச்சிகள், கலந்து கொள்வோர், கூட்டம் நடக்கும் ஊர்கள் பற்றிய விபரங்களைத் தலைமைக் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் தம்பி விடுதலை விரும்பி எம்.பி. அறிவித்திடுவார்.

நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை மையமாக வைத்துப் பேச வேண்டுமென்றும் - பேச்சில் கண்ணியம் உயிரோட்டமாக இருக்க வேண்டுமென்றும் - எத்தகைய கட்டுப்பாட்டு உணர்வும், கருத்துகளும் இடம்பெற வேண்டுமென்றும், நிர்வாகக் குழுவில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் - இவற்றை அமைப்புகளுக்கும், கழகப் பேச்சாளர்களுக்கும் எடுத்துரைத்து,

டிசம்பர் 6, 7, 8 நாட்களில் நடைபெறும் கூட்டங்கள் எல்லா வகையிலும் வெற்றிகரமாக அமைந்து, அடுத்து நாம், தோழமைக் கட்சிகளுடன் கலந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஊக்கம் தரக்கூடியவைகளாக இருந்திடவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இன்றே கூட்ட ஏற்பாடுகள் குறித்து அமைப்புகள் கூடிப்பேசிடுக! மூன்று நாட்களும் முழங்கட்டும் நமது முரசங்கள்!

அன்புடன்,

மு. க.

(28-11-1991)

1836. மாற்றமில்லை!
மாற்றம் இல்லவே இல்லை!

உடன்பிறப்பே,

இந்தச் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றி - மண்ணில் நெளியும் புழுவினினும் கேவலமாக மதிக்கப்பட்ட, நடத்தப்பட்ட, வாய்ப்புகள் பறிக்கப்பட்டு, வதைக்கப்பட்ட மக்களைக் கைதூக்கி விடுவதற்காக 75 ஆண்டுகளுக்கு முன்பு எந்தத் தியாகராயரும், நாயரும், நடேசனாரும் அடலேறுகளெனக் கர்சித்துக் கிளம்பினார்களோ, அவர்களை நினைவு கூர்ந்திடவும் - அவர்கள் உருவாக்கிய இயக்கத்தை, உலைக்களத்தில் தயாரிக்கப்பட்டப் போர் வாளாக ஆக்கிக் கையில் ஏந்தி, அறவழியில் வெஞ்சமர் புரிந்த வெண்தாடி வேந்தர் - வைக்கம் வீரர் - சுயமரியாதைச் சுடர்விளக்கு தந்தை பெரியார், அவர்தம் போர்க்குரலின் புதிய புறநானூறு - காஞ்சி தந்த நம் கலிங்கத்துப்பரணி - பேரறிஞர் அண்ணா, புரட்சி என்னும் சொல்லுக்குப் பொருள் விளங்காத் தமிழனே! சித்திரச் சோலைகளே! உமை நன்கு திருத்த இந்தப் பாரினிலே - எத்தனை தோழர்கள் ரத்தம் சிந்தினரோ உங்கள் வேரினிலே? என்று கேட்டேனே அந்த உருக்கத்தில் எழுவதுதானடா உலகப் புரட்சி! என முழங்கிய இந்த இயக்கத்தின் கவிதைக் கொடுமுடி பாரதிதாசன் ஆகியோர், ஆற்றிய பணியும், அமைத்த வழியும் இந்த மண்ணின் அடிமட்டத்து மனிதனை எவ்வாறு உரிமைக் குரல் எழுப்பி தலைநிமிர்ந்திடச் செய்தன என்பதை நாமும் எண்ணிப் பார்த்து, இளைய தலைமுறைக்கும் விளக்கிடுவதற்காகவும் - அனைத்து நாடுகளிலும் உள்ள அரசியல் ஆய்வாளர்களுக்கு அற்புதப் புதையலாகக் கிடைத்த ஒரு புதுமையான, ஆனால் மிகத் தேவையான ஒரு இயக்கத்தின் சரித்திரத்தைப் போற்றி, இந்த சரித்திரம் உருவாகிட உழைப்பும், ஆற்றலும் வழங்கியவர்கள்

அனைவருக்கும் வணக்கமும், நன்றியும் தெரிவித்திடுவதற்காகவும் - திராவிட இயக்கத்தின் 75-வது ஆண்டு பவளவிழா நிறைவு மாநாட்டினை, மதுரை மாநகரில் நடத்துவதெனத் தலைமைக் கழகம் முடிவுசெய்து டிசம்பர் 21, 22 சனி ஞாயிறு நாட்களில் செளந்தரபாண்டியன் நகர் - பி.டி. இராசன் பந்தல் - சிவகெங்கை இராமச்சந்திரன் அரங்கில் நடைபெறுமென அறிவித்து, அண்மையில் மறைந்து நம் அகத்தில் நிறைந்துள்ள தென்னரசு தோரணவாயில், அனைவரையும் வரவேற்குமென விளம்பரங்கள் செய்வித்து, மாநாட்டுக்கென அமைக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுவினர், தமது பணிகளையும் தொடங்கித் தொடர்ந்துவிட்ட நிலையில், மாநாடு நடத்துவதற்காக அனுமதிக்க வேண்டுமென முறைப்படி முன்கூட்டியே கோரப்பட்ட தமுக்கம் மைதானத்தைத் தருவதற்குத் தடையேதுமில்லையென வாய்மொழியாகவே பொறுப்புள்ள பதவிகளில் உள்ளோர் கூறிக்கொண்டே வந்து திடீரென, இன்றைக்கு மறுத்து விட்டனர் எனச் செய்தி வந்துள்ளது.

மாநாடு நடத்தினால் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் நடக்கலாமென்றும், அதனால் சட்டம் ஒழுங்கு கெடலாமென்றும், காவல்துறையினர் தரப்பில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதப்பட்டதாம். அந்தக் கடிதத்தின் நகல் மாநகராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு, அவர் மாநாடு நடத்திட அனுமதி மறுத்து விட்டாராம். இப்படி வந்துள்ளது செய்தி!

எத்தகைய போலியான காரணத்தைக் காட்டி, ஒரு மாபெரும் இயக்கத்தின் பவளவிழா மாநாட்டையே தடுத்திடும் கெடு நினைப்பு இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்க மாட்டார்களா?

அனுமதி மறுக்கப்படுவது - அதற்கோர் அர்த்தமில்லாத அபாண்டமான காரணம் கூறுவது - இவை அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறுவதல்ல. அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் ஆரம்பத்திலிருந்தே அனுமதி கிடைப்பதில் பிரச்சினை இல்லை என வாய்மொழியாகவே உறுதி அளித்து வந்துள்ளனர். ஆட்சியாளர்கள் தான் திடீரென இந்த முடிவைச் செய்துள்ளனர் என்பது தெளிவான உண்மையாகும்.

திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் தோற்றமெனத் தன்னைத்தானே வர்ணித்துக் கொண்டவர்களின் போலித்தனமும், ஏமாற்று வித்தையும், கலப்படமற்ற

பொய்மையும் நிரூபிக்கப்படுவதற்கு இந்த அனுமதி மறுப்பும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

விடுதலைப்புலிகளை அறவே ஒழித்து, அனைவரையும் விரட்டிவிட்டதாக நாள்தோறும் விளம்பரங்கள் - செய்திகள் தரப்படுகின்றன!

பிறகு எங்கிருந்து அவர்கள் மாநாட்டுக்குள் ஊடுருவப் போகிறார்கள்?

நமது கடல் எல்லையைத்தாண்டி, எங்கேயோ சென்று கொண்டிருக்கிற அவர்களது கப்பல்களைக் கூட, நமது கடற்படையினர் பிடிக்கிற அளவுக்கு கடற்கரைப் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக அன்றாடம் அறிவிக்கப்படுகிறது.

அதையும் மீறியா புலிகள் கடல்வழியாகத் தமிழ்நாட்டில் புகுந்து, மதுரை மாநாட்டுக்குள் ஊடுருவப் போகிறார்கள்?

மாநாட்டுக் கூட்டத்திற்குள் ஊடுருவிடக்கூடும் என்ற போலிவாதம் சரியானால், அவர்கள் தமிழகத்தில் நடைபெறுகிற எல்லாக் கூட்டங்களிலும்தானே ஊடுருவுவார்கள்! அப்படியானால் அமைச்சர்கள் கலந்து கொள்கிற கூட்டங்கள் உட்பட, எல்லாக் கூட்டங்களுமே விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டித் தடுக்கப்படுமா?

உடன்பிறப்பே! அரசியல் ரீதியாக இயங்குகிற உண்மையான திராவிட இயக்கம் இது என்பதால், அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்துக் கொண்டே, அண்ணா வளர்த்த இந்த இயக்கத்தை அதிகாரபலம் கொண்டும் - சூழ்ச்சித் திட்டம் வகுத்தும் - சூதுவலை பின்னியும் - பூண்டற்றுப் போகுமாறு செய்து விடலாமெனத் தாண்டிக் குதிக்கிறது இன்றைய ஆட்சி!

தொடங்கிய காலம் தொட்டே அடக்குமுறைகளை, எதிர்ப்புகளை, ஏச்சுக்களைத் தாங்கி தொய்வின்றி நடைபோடும் இயக்கம் இது!

அண்ணா தலைமையில் நாம் வழி நடத்தப்பட்ட போதே, ஆயிரமாயிரம் அடக்குமுறைகளைத் தாங்கியவர்கள் நாம்!

அண்ணா மறைவுக்குப் பிறகும், அவர் தந்த எதையும் தாங்கும் இதயம் கொண்டு, மிசாக் கொடுமைகளையே நமக்கேயுரிய மிடுக்குடன் ஏற்றுக்கொண்டவர்கள் நாம்!

நம்மை ஒழிக்க நினைப்போர் - ஒன்றை மட்டும் நினைவிற் கொள்ள வேண்டும்! இந்த இயக்கம் வளர்ந்த விதத்தை, ஏற்றுக்கொண்ட இன்னல்களை, இந்த இயக்கத்தை வீழ்த்த உருவாக்கப்பட்ட துரோகச் செயல்களை, சதிகளை, இந்த இயக்கத்தோடு இணைந்து வளர்ந்து நினைவில் வைத்திருக்கிற ஓரிருவர், இன்றைக்கு ஆளுங்கட்சியில் ஏதோ காரணங்களுக்காக ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களாவது நேரமும், வாய்ப்பும் தப்பித் தவறிக் கிடைத்தால் எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த இயக்கம் தொட்டில் பருவத்தில் இருந்தபோதே இதை வளர்க்கவும் பாதுகாக்கவும், ஒவ்வொரு நாளும் வீட்டில் வாய்க்கரிசி வாங்கிக் போட்டுக்கொண்டு கூட்டங்களில் பேசச் சென்றவர்கள்தான் ஆயிரம் ஆயிரம் பேர் இன்னமும், இந்த இயக்கம் காத்திடும் அரண்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையை!

அவர்கள் சாவு வந்து கொத்திடினும் அஞ்சமாட்டார்கள் என்கிறபோது, இந்த ஆட்சியாளரின் தடைகளுக்கும் தடாக்களுக்குமா அஞ்சி நடுங்கிப் பதுங்கி விடுவார்கள்?

எங்களை இழப்போம் - இந்த இயக்கத்தைக் காப்போம் எனும் சூளுரைதான் எமது சுவாச கோசங்களின் மூச்சுக் காற்றில் ஒவ்வொரு விநாடியும் - வெளிப்பட்டு ஒலி முழக்கம் செய்து கொண்டிருக்கிறது! இது வெற்று ஆரவாரமல்ல! எங்கள் கடந்த கால வரலாற்று முரசம்! இவ்வாறு சபதம் செய்து சாக்காட்டைப் பூக்காடகக் கருதிப் புகுந்திடும் வீரர் கோட்டம் இது! தீரர்களின் பாடி வீடு இது! இங்கு உலவிடுவோர் பெரியாரின் பிள்ளைகள், அண்ணாவின் தம்பிகள்!

அவர்கள் நடத்தும் மாநாட்டுக்கு அனுமதி இல்லையாம்! ஆர்ப்பரிக்கிறது அரசு!

நீதி கேட்போம்! ஆம்! கண்ணகி நீதிகேட்டு கண்களைக் கனலாக்கிக் கொண்டு மதுரையம்பதியையும் தணலாக்கிப் போட்டாளே! அந்த மதுரையம்பதியில் நமக்கு இழைக்கப்படும் அநீதிக்கு மாறாக நீதி கேட்போம்!

நீதிகேட்டு நாம் எழுப்பிடும் குரல், அறவழியில், அமைதிவழியில், அண்ணா வழியில் ஒலித்திடும் குரல்! மக்களாட்சியின் மாண்பு என்ன என்பதை அறிவுறுத்தும் குரல்! ஜனநாயகம் காத்திடும் குரல்!

எனவே முதலில், உரிய இடத்தில் நீதி கேட்போம்! அடுத்த கட்டம் குறித்து பிறகு சிந்தித்துச் செயல்படுவோம்!

ஜனநாயகம் பாதுகாக்கப்பட நம்மை நாமே வருத்திக்கொண்டோம் என்பதே நமது கடந்த கால வரலாறு! நிகழ் கால வரலாறும் - எதிர்கால வரலாறும் இந்த இயக்கத்தைப் பொருத்த வரையில், ஒரே மாதிரி வரலாறுதான்! இதில் மாற்றமில்லை! மாற்றம் இல்லவே இல்லை!

அன்புடன்,

மு. க.

(29-11-1991)

1837. அதுவரையில் பொய்கள் பூமி ஆளட்டும்!

உடன்பிறப்பே,

திட்டமிட்டுப் பொய் சொல்லுவதையே ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகும், தனது வாடிக்கையாகவும் - பிறவி எடுத்த பயனாகவும் ஜெயலலிதா கருதிக் கொண்டு செயல்படுகிறார்.

கடந்த காலத்தில் அவர் சொன்ன பொய்களுக்கெல்லாம் அவ்வப்போது ஆதாரங்களுடன் மறுப்பு தெரிவித்திருக்கிறோம். மறுப்பு தெரிவித்த பிறகு, கொஞ்ச நாள் பதில் அளிக்காமல் இருப்பார். அதற்குப் பிறகு மீண்டும் அதே பொய்யைச் சொல்வார்.

அந்த வரிசையில் 28.11.91 சென்னையில் நடைபெற்ற மூர்மார்க்கெட் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் இதோ இன்னொரு இணையற்ற பொய்! என்று அறைகூவல் விடுத்துச் சொல்லியுள்ளார். இரண்டு ஆண்டு காலக் கழக ஆட்சியில் விரைந்து கட்டி முடிக்கப்பட்ட மூர்மார்க்கெட் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கும் போதுதான் - இவ்வளவு விரைந்து பணியாற்றியுள்ளதே தி.மு.க. அரசு என்பதையும் மறந்துவிட்டு, மனச்சாட்சியையும் துறந்துவிட்டு - புதியதோர் பொய்யை, மெய் போல அந்த விழாவில் கொட்டித் தீர்த்துள்ளார்.

தினமணி 29.11.91 இதழில் வந்துள்ள அந்தச் செய்தியை அப்படியே தருகிறேன்.

> "அல்லிக்குளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய மூர்மார்க்கெட் கட்டிடத்தை வியாழக்கிழமையன்று மாலை திறந்து வைத்து முதலமைச்சர் பேசினார். சென்னை மாநகரின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக வகுக்கப்பட்ட தெலுங்கு கங்கைத் திட்டம், கடந்த இரண்டு ஆண்டுகளாகக்

கவனம் செலுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுக் கிடந்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்."

இப்படி ஒரு மலையளவுப் பொய்யை ஜெயலலிதா கூறியிருக்கிறார். எத்தனை பொய்கள் சொன்னால் என்ன? அவர் வாயிலிருந்து வருவது அண்டப்புளுகாயினும், ஆகாசப்புளுகாயினும் அவற்றை வேதவாக்கியங்களெனக் கொண்டு வெளியிடுவதற்கு ஏடுகள் ஏராளமாக இருக்கின்றன - அவற்றுக்கு விளம்பரங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. அதனால் அவர் கூறுவது சரிதானா, அல்லவா என்று ஆய்ந்தறிந்து பார்க்கவோ அல்லது முதல்வர் உரையாயிற்றே என்று வெளியிட்டுத் தீரவேண்டிய கடமையை ஆற்றிய பிறகாவது, அந்த ஏடுகள் அது குறித்து விசாரித்தறிந்து உண்மையை மக்களுக்குச் சொல்லவோ ஆர்வம் காட்டுவதில்லை!

அதற்கான காரணத்தை நாம் சொன்னால், கருணாநிதி பழைய துருப்பிடித்த ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு அலைகிறான் என்று வித்தகர்கள் விமர்சிக்கிறார்கள்!

தெலுங்கு கங்கை திட்டம் எப்போது பூர்வாங்கமாகத் தொடங்கப்பட்டது? ஆந்திர அரசுக்கும், தமிழக அரசுக்கும் எப்போது ஒப்பந்தம் ஏற்பட்டது? அ.தி.மு.க. அரசு அந்தத் திட்டம் செயல்பட எடுத்த நடவடிக்கை என்ன? 1989-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த கழக அரசு இரண்டு ஆண்டுக்காலத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற விரைந்து எடுத்த முயற்சிகள் என்ன?

இதுபற்றிய ஆதாரக் குறிப்புகள் சிலவற்றைத் தருகிறேன். இந்த ஆதாரக் குறிப்புகளைப் படித்த பிறகாவது, ஜெயலலிதாவுக்கு அவர் விழாவில் வெளியிட்ட செய்தி எவ்வளவு பொய்யானது என்பது புரியட்டும்!

புரியாமலா அவர் பேசியிருக்கிறார்? பொய்யென்று தெரிந்து, புரிந்துதான் திட்டமிட்டு தி.மு.க. ஆட்சி மீது குறை கூறுவதற்காகப் பேசியிருக்கிறார்.

சென்னைக்கு கிருஷ்ணா நதித் தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாகத் தமிழகத்தில் காங்கிரஸ் அரசாலும், கழக அரசாலும் வலியுறுத்தப்பட்டு - கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்று - 1976 ஆம் ஆண்டு கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு இந்திரா காந்தி அவர்கள், இரண்டொரு

வாரங்களுக்குப் பிறகு சென்னை கடற்கரையில் பேசியபோது, சென்னைக்குக் கிருஷ்ணா நதித் தண்ணீர் திட்டம் விரைவில் வரும் என்று உறுதி அளித்தார்.

அந்த உறுதிமொழியைத் தொடர்ந்து 1976 ஏப்ரல் 14 ஆம் நாள் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அந்த ஒப்பந்தத்தில் மத்திய பாசனத்துறை அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராமும், மராட்டிய மாநில பாசன அமைச்சரும், கர்நாடக மாநில பாசன அமைச்சரும், ஆந்திர மாநில பாசன அமைச்சரும், தமிழகத்தில் கவர்னர் ஆட்சி இருந்தபடியால், தமிழக கவர்னர் கே.கே. ஷாவும் கையெழுத்திட்டார்கள்.

அந்த ஒப்பந்தம் என்ன?

தமிழ்நாட்டுக்கு கிருஷ்ணா தண்ணீரை ஆந்திர மாநிலம் வசதிப்பட்ட இடத்திலிருந்து 15 டி.எம்.சி. தருவதற்கு மராட்டியம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் தலா 5 டி.எம்.சி. தண்ணீரைப் பங்காக வழங்கிடச் சம்மதிக்கின்றன என்பதே அந்த ஒப்பந்தமாகும். எனவே இது கவர்னர் கே.கே. ஷா ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தம்.

அதன்பிறகு 1977ல் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகு, அக்டோபர் 28ஆம் நாள் ஆந்திரம், மராட்டியம், கர்நாடகம், தமிழகம் ஆகிய நான்கு மாநில அதிகாரிகளும் கையெழுத்திட்ட மற்றொரு ஒப்பந்தப்படி, கிருஷ்ணா நதியிலிருந்து தரப்படும் தண்ணீர் அதாவது தெலுங்கு கங்கை திட்ட தண்ணீர் எவ்வழியாக கொண்டு வரப்படுவது, எந்த முறையில் கொண்டு வரப்படுவது, எந்தெந்தச் செலவினங்களை, எவ்வாறு ஆந்திர மாநிலமும், தமிழ் மாநிலமும் ஏற்பது என்பன போன்ற பூர்வாங்க விபரங்கள் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

அதன்பிறகு 1978 ஜூன் 15 அன்று ஆந்திர முதல்வர் அவர்களும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களும் கலந்து பேசி தெலுங்கு கங்கை திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஆய்வுப் பணிகள் முடிவுற்று 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் அனைத்து விபரங்களடங்கிய பணி தொடக்க ஒப்பந்தமொன்றை தமிழ்நாடு அரசும், ஆந்திர அரசும் செய்து

கொண்டன. அந்த ஒப்பந்தத்தில் முதலமைச்சர்களாக என்.டி.ஆர்., எம்.ஜி.ஆர். இருவரும் கையெழுத்திட்டனர்.

அதாவது பல ஆண்டு காலத் தமிழக அரசின் தெலுங்கு கங்கைத் திட்ட கோரிக்கை, 1976ல் அறிவிக்கப்பட்டு - அந்த ஆண்டில் முதல் ஒப்பந்தமாகி - அதன் பின்னர் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 1983ல் விவரமான ஒப்பந்தமாகக் கையெழுத்தாகிறது. செலவினங்கள், அதனை இரு மாநிலங்களும் எந்த முறையில் ஏற்பது, ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள் எவை எவை என, அந்த ஒப்பந்தத்தில் முறைகள் வகுக்கப்படுகின்றன.

ஆந்திர மாநிலம் தன்னுடைய மாநிலத்தில் தெலுங்கு கங்கை திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள செலவிட வேண்டிய தொகையும், தமிழக அரசு சென்னைக்கு தெலுங்கு கங்கையை எல்லை வரையில் கொண்டு வருவதற்கென ஆந்திர மாநிலத்திற்குத் தர வேண்டிய தொகையும் வரையறுக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டன.

அதன்படி 12.5.1983-ல் அரசு ஆணை 1016 எண்ணின்படி, முப்பது கோடி ரூபாய் அ.தி.மு.க. அரசு ஆந்திர மாநிலத்துக்கு அளித்துள்ளது.

பிறகு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 15.3.1985-இல், அரசு ஆணை 340-ன்படி, ஐந்து கோடி ரூபாய் அ.தி.மு.க. அரசு, ஆந்திர மாநிலத்துக்கு அளித்துள்ளது.

அடுத்து 27.6.1985-ல் அரசு ஆணை 1045 எண்ணின்படி, பனிரெண்டு கோடி ரூபாய் அளித்துள்ளது.

ஆக 1985 வரையில் மூன்று கட்டமாக அ.தி.மு.க. அரசு அளித்த மொத்தத் தொகை நாற்பத்தி ஏழு கோடி ரூபாய்தான்!

பின்னர் எந்த முன்னேற்றமும் இல்லை. திட்டத்தின் வளர்ச்சி குறித்து அ.தி.மு.க. அரசு கவலைப்பட்டதும் கிடையாது. ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் இந்தத் திட்டம் குறித்து தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை சந்திப்பதற்காக சென்னைக்கு வந்தும், சந்திக்க முடியாமலே திரும்பியதும் உண்டு.

சுருக்கமாகச் சொன்னால், 1989-ல் கழக ஆட்சி மீண்டும் அமைகிற வரையில், 1976-ல் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம் கிடப்பிலேதான் போடப்பட்டிருந்தது! 76-க்குப் பிறகு 7 வருடம் கிடப்பில்! அடுத்து 83-ல் ஒப்பந்தம்! அதன்படி 85 வரையில் 47 கோடி ரூபாய் அளித்ததுடன், தொடர்ந்து 1989 வரையில் 4 வருடம் கிடப்பில்!

கழக ஆட்சி அமைந்தவுடன் நானும், அமைச்சர்கள் வீராசாமி, துரைமுருகன், பொன்முடி மற்றும் அதிகாரிகள் ஐதராபாத் சென்று முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்களுடன் விவாதித்து, இடையில் ஏற்பட்ட பெரும் தாமதத்தின் காரணமாக திட்டத்திற்கான மறு மதிப்பீடு தயாரிப்பது அவசியமாகி, 89-90-ஆம் ஆண்டு விலை விகிதப்படி மொத்தம் 984 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டு அதில் தமிழ் நாட்டின் பங்காக 252 கோடி ரூபாய் என முடிவாயிற்று.

அதற்கேற்ப 24.6.1989-ல் அரசு ஆவண எண் 1241-ன் படி, முப்பது கோடி ரூபாயை கழக ஆட்சி, ஆந்திர மாநிலத்துக்கு அளித்து பணிகளைத் துரிதப்படுத்த வேண்டிக்கொண்டது.

பணிகளும் விரைவாக நடக்கத் தொடங்கின. வேலைகள் நடைபெற, நடைபெற அடுத்தடுத்து 20.3.1990-இல் அரசு ஆணை 631-ன் படி பதினைந்து கோடி ரூபாயும், 31.7.90-ல் அரசு ஆணை 1616-ன் படி பதினைந்து கோடி ரூபாயும் மொத்தம் அறுபது கோடி ரூபாய் ஆந்திர மாநிலத்துக்குக் கழக அரசில் அளித்ததோடு, 1991-ல் 45 கோடி ரூபாய் ஒதுக்கீடும் செய்துவிட்ட நிலையில்தான் ஆட்சி கலைக்கப்பட்டது.

அந்த இரண்டு ஆண்டு காலத்தில் திட்டத்தின் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பது குறித்து - நான் மீண்டும் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் ஐதராபாத் சென்று முதலமைச்சர் சென்னாரெட்டியுடன் கலந்து பேசி திட்டப் பணிகள் மேலும் விரைவுபடுத்தப்பட்டன.

ஆந்திர மாநில அதிகாரிகளும் சென்னைக்கு வந்து என்னுடன் விவாதித்து விட்டுச் சென்றனர்.

பொதுப்பணி அமைச்சராக இருந்த துரைமுருகனும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த பொன்முடியும் அதிகாரிகளுடன் மொத்தம் மூன்று முறை சென்று பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டு வந்தனர்.

ஒருமுறை அமைச்சர்கள் பத்திரிகை நிருபர்களை அழைத்துக்கொண்டு, சோம சீலாவிலிருந்து பூண்டி வரையில் நடைபெறும் பணிகளைக் காட்டினர்.

அந்தப் பயணம் முடிந்து வந்த நிருபர்கள் தெலுங்கு - கங்கை திட்டப் பணியின் வேகம் குறித்துப் பாராட்டி ஏடுகளில் அப்பொழுதே எழுதியுள்ளனர்.

உடன்பிறப்பே! இத்தனை உண்மைகளையும் மறைத்துவிட்டு - பந்தலில் இருந்த அதிகாரிகளும், பத்திரிகையாளர்களும் சிரிப்பதற்கு பயந்துகொண்டு நெளிந்ததைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் யாரும் அவ்வளவு தைரியமாக உண்மைகளைச் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் ஜெயலலிதா இப்படி ஒரு இமாலயப் பொய்யை எடுத்து வீசியிருக்கிறார்.

பொய் எது? மெய் எது? என்பதைத் தாமதமாகவாவது தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளாமலா போய் விடுவார்கள்! அதுவரையில் பொய்கள் இந்தப் பூமியை ஆளட்டும்!

அன்புடன்,

மு. க.

(30-11-1991)

1838. முதற்கட்டப் போராட்டம் முழு வெற்றி!

உடன்பிறப்பே,

மத்திய அரசு மேற்கொண்டுள்ள பொருளாதாரக் கொள்கை, தொழிற் கொள்கை, உலக வங்கியின் சர்வதேச நிதி நிறுவனத்தின் ஆணைகளுக்கிணங்க செயல்படத் தொடங்குவதை, ஆரம்பத்திலேயே கண்டித்துத் தடுத்து நிறுத்துவதற்காகவும்,

இந்திய ரூபாயின் மதிப்பைக் குறைத்தது - பொதுத்துறையினை, தனியார் துறைக்குத் தாரை வார்க்கத் திட்டமிடுவது - அந்நிய ஏகபோகப் பன்னாட்டுக் கொள்கைக்கு வழி திறந்துவிட்டது - போன்ற மக்கள் விரோத காரியங்களுக்கு எதிர்ப்பு காட்டுவதற்காகவும்,

கடுமையான பண வீக்கமும் அதைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் கிடைத்து வந்த மானிய உதவிகள் படிப்படியாக நீக்கப்படுகிற நிலையும் - வரி உயர்வுச் சுமை, கட்டண உயர்வுச் சுமை, பல மடங்கு அதிகரித்துள்ள விலைவாசி உயர்வுச் சுமை, இவற்றைத் தாங்க முடியாமல் தத்தளிக்கும் உழைப்போர் வர்க்கத்தின் பரிதாபத்தை எடுத்துக் காட்டிப் பரிகாரம் தேடவும்,

தொழிலாளர்கள் ஈடுபட்ட வேலை நிறுத்தம் நவம்பர் 29-ஆம் நாள் நடைபெற்றிருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள முற்போக்குத் தொழிற்சங்க இயக்கங்களின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கைகளில் - விளக்கங்களில் எவற்றிலுமே நவம்பர் 29 முழு அடைப்பு (பந்த்) என்று கூறப்படவே இல்லை.

இந்தப் பொது வேலை நிறுத்தம் வெற்றி பெற அனைத்துத் தொழிலாளர்களும், ஊழியர்களும், அலுவலர்களும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆனால் தொழிலாளர் விரோத மனப்பான்மை கொண்ட அரசின் இயந்திரங்கள் அனைத்தும் முடுக்கிவிடப்பட்டு, ரயில்கள்

ஓடும் - பஸ்கள் ஓடும் - மாமூல் வாழ்க்கைப் பாதிக்கப்படமாட்டாது என்று விளம்பரங்கள் செய்தன!

வேலை நிறுத்தம் என்பதால் பொது இழப்பு எவ்வளவு ஏற்படும் - மக்களுக்கு எவ்வளவு பாதிப்பு - என்றெல்லாம் கணக்கிட்டு, அரசின் பிரச்சாரக் கருவிகள் அலறின!

அரசாங்கமே முன்னின்று, வெறும் தொழிலாளர் வேலை நிறுத்தம் மட்டுமல்லாமல் - மொத்தமான முழு அடைப்பையே (பந்த்) பலமுறை நடத்தவில்லையா? அப்போதெல்லாம் இந்த இழப்புக் கணக்குகளை அரசினரும், அரசின் அதிகாரிகளும் சிந்தித்துப் பார்க்கவில்லையே! இப்போது மட்டும் துடித்துப் போகிறார்களே - எதற்காக?

அறிவிக்கப்பட்டது, தொழிற்சாலைகளில், பணிமனைகளில் தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் தங்கள் அதிருப்தியையும், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை, தொழில் கொள்கைக்கு எதிரான மறுப்புக் கருத்தையும், விலைவாசி ஏற்றக் கொடுமையால் விளையும் வேதனையின் வெளிப்பாட்டையும் உணர்த்துவார்கள் என்பதுதான்!

ஆனால் அரசும், அரசின் ஆதரவு ஏடுகளும், சில பிற்போக்குத் தொழிலாளர் அமைப்புகளும் - என்னவோ, நவம்பர் 29-ந் தேதி முழு அடைப்பு (பந்த்)ம், அத்துடன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும் நடத்தப்பட்டு - நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கப் போவதாக, தொழிற்சங்க இயக்கங்கள் அறிவித்துள்ளது போன்ற ஒரு கற்பனையை திட்டமிட்டுச் செய்துகொண்டு - பார்! பார்! அந்த பந்தை முறியடிக்கிறோம்! என்று முழங்கிய வண்ணமிருந்தார்கள்.

அதனால்தான் தொழிலாளர் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்று, அரசு வங்கிகளும், ஆலைகளும் அடைத்துக் கிடந்தன - எல்.ஐ.சி. இயங்கவில்லை - பேருந்துகளில், ரயில்களில் கூட்டமில்லை என்ற அளவுக்குச் செய்திகள் வந்த போதிலும்கூட, அரசின் சார்பில் விமானங்கள் பறந்தன, ரயில்கள் ஓடின, பஸ்கள் ஓடின என்று கூறி வேலை நிறுத்தம் தோல்வி, அரசுக்கு அமோக வெற்றி என ஆர்ப்பரிக்கிறார்கள்.

விமான நிலையங்கள் எவ்வாறு இயக்கப்பட்டன, பஸ்கள் எவ்வாறு ஓட்டப்பட்டன என்ற இரகசியம் அரசினருக்கே தெளிவாகத் தெரியும் போது - அதற்காக அரசுத்துறையினர்

எடுத்துக் கொண்ட சிரமத்தின் களைப்பு நீங்குவதற்குள்ளாகவே, வேலை நிறுத்தம் தோல்வி என்று வெற்றிச் சிரிப்பு சிரிக்கிறார்களே! அதைப் பார்த்தால்தான் வேதனையாக இருக்கிறது.

திராவிடர் கழகமானாலும் சரி! பின்னர் தி.மு. கழகம் எனும் அரசியல் இயக்கம் தோன்றிய பிறகும் சரி! திராவிட இயக்க சார்புடைய தொழிற்சங்கங்கள் மாநில அளவில் அமைப்பு ரீதியாக உருவாக்கப்படாத அந்தக் கால கட்டங்களில் தொழிலாளர்கள் நடத்துகிற போராட்டங்களில் அவற்றை எந்தக் கட்சியினர் நடத்துகின்றனர் என்று வேறுபாடு காட்டாமல் தொழிலாளர்களின் பக்கம் இருந்த பெருமை பெரியார் அவர்களுக்கும், அண்ணா அவர்களுக்கும் உரியது. காரணம், தொழிலாளர்களுக்கு எதிராக எழுகின்ற எந்தப் பிரச்சினையையும் தொழிலாளர்களின் முகாமில் நின்று தீர்த்து வைக்கவேண்டுமென்ற தெளிவான நோக்கம் இந்த இயக்கத்திற்கு உண்டு.

வியப்பு என்னவெனில், எங்கே தொழிலாளிக்குத் துன்பம் நேருகிறதோ அங்கெல்லாம் விரைந்து சென்று அவர்தம் துயர் துடைக்கும் போராட்டத்திற்கு ஆதரவு தந்த தலைவர் அறிஞர் அண்ணாவின் பெயரை, தமது கட்சிக்கும், கட்சியின் தொழிற்சங்கங்களுக்கும் வைத்திருப்போர், நவம்பர் 29-ந் தேதி நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல. அந்தப் போராட்டத்தை நசுக்க முனைந்தது, இப்போது வெற்றிக் கூச்சல் போடுகிறார்களே, அதுதான் விந்தையினும் விந்தை!

இது, ஏதாவது தவறான கோரிக்கைகளுக்காக நடைபெற்ற வேலை நிறுத்தமா?

பணவீக்கத்தால் ஏற்படும் பாதிப்பு! விலைவாசி விஷம் போல் ஏறும் கொடுமை! பொதுத்துறைகளைத் தனியார் துறைகளுக்கு வாரி வழங்கி தொழிலாளர் உரிமைகளையும், எதிர்காலத்தையும் அழித்தொழிக்கும் பயங்கர திட்டம்!

இவற்றைக் கண்டித்துத்தானே வேலை நிறுத்தம்! இதில் கலந்து கொள்ள மறுத்தவர்கள் - அல்லது கலந்து கொண்டவர்களைத் தடுத்தவர்கள் - விலைவாசி இன்னமும் விண்முட்ட ஏறட்டும் என்கிறார்களா?

பணவீக்கமா! பலே! பலே! இன்னும் பலமாக வீங்கட்டும் என்கிறார்களா?

பொருளாதாரக் கொள்கையும், தொழிற்கொள்கையும் உலக வங்கி நிதி நிறுவனத்தின் தாளத்திற்கேற்ப ஆடித் தடுமாறட்டும் என்கிறார்களா?

இனியும் ரூபாயின் மதிப்பு குறைவதே எமக்கு இனிப்பான சேதி என்கிறார்களா?

எப்படியோ, எல்லா வகையான பிற்போக்கு சக்திகளையும் மீறி - அரசினரின் அச்சுறுத்தல்களையும் மீறி - நூற்றுக்கணக்கான லெட்டர் பேட் தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ள மாட்டா எனத் தொலைக்காட்சி நாள்தோறும் பிரச்சாரம் செய்ததையும் மீறி, முற்போக்குத் தொழிற்சங்க இயக்கங்களின் சார்பில் தொழிலாளர் நலன் மற்றும் பொது மக்கள் நலனில் அக்கறை கொண்ட கட்சிகள் அனைத்தும் ஆதரவளித்து நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றி பெற்று விட்டது!

தொழிலாளர், அலுவலர் தொடங்கியுள்ள இந்த முதற்கட்டப் போரில் கலந்து கொண்டோர் அனைவருக்கும், அவர்தம் நல்லுணர்வைப் பாராட்டி - வாழ்த்துகள்!

தொழிலாளர் விரோத - மக்கள் விரோத சக்திகளாகவும், விலைவாசி உயர்வு, பண வீக்கம் போன்றவற்றின் விசுவாசிகளாகவும் அடையாளம் காட்டிக் கொண்டவர்களுக்கு அனுதாபங்கள்!

அன்புடன்,

மு. க.

(01-12-1991)

1839. சந்திக்காமல் இருக்க முடியுமா?

உடன்பிறப்பே,

எனக்கு எதிராக, இல்லாததையும், பொல்லாததையும் இணைத்து, இட்டுக் கட்டிய பொய்யுரைகளையும் நிறைத்து, தயாரிக்கப்பட்ட வாக்குமூலம் ஒன்று, தடா சட்டத்தில் சிக்க வைக்கப்பட்ட ஒருவரைக் கொண்டு திருச்சி நீதிமன்றத்தில் கொடுக்க வைக்கப்பட்டு - ரகசியமாக அளிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அந்த வாக்குமூலத்தை மாவட்டப் போலீஸ் அதிகாரியே பத்திரிகையாளர்களுக்கு வழங்கி, ஏடுகளிலும் வானொலி, தொலைக்காட்சியிலும் செய்தி வந்தவுடன் நீ எப்படித் துடித்துப் போனாய் என்பதறிந்து நான் நெகிழ்ந்து போனேன்.

நேரில் வந்து கண் கலங்கினாய் - தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாய் - அந்த வாக்குமூலத்தையொட்டி எனக்கு ஏதோ நேர்ந்து விட்டதோ, கைது செய்யப்பட்டுவிட்டேனோ என்றெல்லாம் நீ பதைத்திருக்கிறாய்! பரபரப்படைந்திருக்கிறாய்!

வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் நள்ளிரவிலும், விடியற்காலையிலும் நீ தொலைபேசியில் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது - சில நேரங்களில் நானே கூட உன்னுடன் பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது! அப்போது உன் இதயத்தின் துடிப்புகள் கூட என் காதில் கேட்டது! உன் குரல் தழுதழுத்ததை நான் உணர முடிந்ததால் என் நெஞ்சமும் சற்று கனத்துப்போனது எனினும், சமாளித்துக் கொண்டேன்.

சென்னையில் இருக்கும் உடன்பிறப்பு மட்டுமல்ல, தமிழகத்தின் சிற்றூர் பேரூர் நகரங்களிலும் உள்ள உடன்பிறப்பு மட்டுமல்ல, தொலைதூரத்தில் துபாய் போன்ற நாடுகளுக்குச்

சென்று பணிபுரிந்து பிழைத்துக்கொண்டிருக்கிறானே, அந்த உடன்பிறப்புக்குக் கூட ஏன் இத்தனை கவலை? கலக்கம்? கண்ணீர்? அங்கிருந்து நெடுந்தொலைவுத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்கு எவ்வளவு கட்டணமாகும் என்ற கணக்கைக் கூடப் பார்க்காமல் அத்தனை பேர் அத்தனை முறை பேசியிருக்கிறார்களே!

"என்ன இது? ஏன் இப்படி? நாங்கள் கேள்விப்பட்டது உண்மைதானா? நல்ல செய்தியாகச் சொல்லுங்கள்!"

பாசமும், நேசமும் பொங்கியெழும் உடன்பிறப்புகளின் குரல்கள் இவ்வாறு ஒலித்திடும் பொழுது, மலையளவு பளு என் மனத்தை அழுத்திக் கொண்டிருந்தாலும், அது மழையில் கரைந்த மணல் வீடு போல ஆகிவிடுகிறதே! சாதாரண மழையா? சகோதர பாசத்தின் உச்ச கட்டம் மையங்கொண்டு, அதன் விளைவாகப் புயலுடன் கலந்து பொழியும் அன்பு மழையல்லவா?

வாழ்க்கையில் வீசம் பகுதிக்கும் குறைவாக இன்பத்தையும், அமைதியையும் எஞ்சியுள்ள பகுதியனைத்தும் - நம்பிக்கை மோசத்தையும், மனக் கொந்தளிப்பையும் சந்திக்கும் நிலைக்கு ஆளாகி விட்டவனுக்கு - நன்றியெனும் சொல்லுக்குப் பொருள்புரியாச் சிலரின் நயவஞ்சகத்தை உணர்ந்து, இப்படியும் மனிதர்களா என வியந்து கொண்டிருப்பவனுக்கு - இன்றுமட்டுமல்ல, என்றைக்கும் உன்போன்ற உடன்பிறப்புகள்தான் ஆறுதல் வழங்கவும், ஆற்றல் அளிக்கவும், அச்சம் தவிர்க்கவும், அயராமல் ஏற்ற பணியைத் தொடரவும், உறுதுணையாக இருந்து வருகிறீர்கள்!

இது ஏதோ பதவியில் இருப்பதால், பவிஷுகள் மேவுவதால், உனக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள உறவு அல்லவே!

பதவிப் பொறுப்புகளையும் எட்டிப் பார்க்காத கால கட்டத்திலும் - வந்த பதவிகள் போன பின்னும் - இன்னும் சொல்லப் போனால், சோதனைகளும், வேதனைகளும், அடக்குமுறைகளும் சூழ்ந்துகொண்ட நேரங்களிலும் - சூழ்ந்துள்ள நேரத்திலும் - நீதான் என்னையும், இந்தக் கழகத்தையும் - சுற்றி எழுந்துள்ள அரணாக இருந்து பாதுகாத்திடுகிறாய்! அகழாக இருந்து பகை முடக்குகிறாய்!

உனக்கு ஏன் அவ்வளவு ஆர்வம்? அத்துணைத் துடிப்பு?

கழகம் உனக்கு அமைச்சர் பதவி அளித்ததா? எல்லா உடன்பிறப்புகளுக்கும் அமைச்சர் பதவி அளிக்க வழிவகை, விதிமுறை இல்லையே! நாடாளுமன்ற, சட்டமன்ற, நகர்மன்ற, ஊராட்சி மன்ற பதவிகளில் ஒன்றாவது கழகத்தில் உனக்குக் கிடைத்ததா? நான் குறிப்பிடும் இந்தப் பதவிகள், பொறுப்புகள் கழகத்தினர் பலருக்குக் கிடைத்தது - பலர் அதனைத் திறம்பட வகித்தனர் - சிலர் புறம் பேசி எங்கோ போயினர் - ஆனால் இவற்றில் எந்தப் பதவியும் பெறாத நீ, பெற நினையாத நீ, எத்தனை ஆயிரம் கல் தொலைவுக்கு அப்பால் இருந்துகொண்டு தொலைபேசியில் அழைத்து, அண்ணே எப்படியிருக்கீங்க? ஏதோ கேள்விப்பட்டோமே உண்மையா? நாங்கள் எப்போதும் உங்களோடு இருக்கிறோம், கவலைப் படாதிங்க! என்று கூறும் பொழுது என் மெய் சிலிர்க்கிறது!

குடும்ப பாசமெனும் அடித்தளத்தில் பெரியாரும், அண்ணாவும் அமைத்துத் தந்த நிலைகுலையாக் கொள்கைக் கோட்டமன்றோ இந்த இயக்கம்! அதனால்தான் நீண்ட நெடுஞ்சாலைகளுக்கு அப்பால், நூற்றுக்கணக்கான கல் தொலைவில் இருப்பினும் - நீள் கடல் தாண்டி ஆயிரக்கணக்கான கல் தொலைவில் இருப்பினும் - இங்கே தமிழகத்தில் கழகத்திற்கு வரும் சோதனைகள் குறித்துக் கவலையுறவும், தலைமைத் தொண்டனாகச் செயல்படும் என்மீது பாயும் கணைகள் குறித்து பதைப்புறவுமான உணர்வு, உடன்பிறப்பே உன் உதிரத்துடன் கலந்துவிட்டிருக்கிறது!

எங்கிருந்தெல்லாமோ பேசிய உன்னை, எங்கிருந்தெல்லாமோ பதற்றமுற்று அண்ணா அறிவாலயத்திற்கு ஆயிரமாயிரம் முறை தொடர்பு கொண்ட உன்னை, சென்னை முப்பெரு விழாவில் சந்தித்த பிறகு - இப்போது மீண்டும் சந்திக்க வேண்டுமென்ற ஆசை, இதயத்தில் அலை மோதுகிறது!

தடாக் கொடுமைகள் தாண்டவமாடும் நேரத்தில் - தடையொன்றை விதிக்கப்பட்டு, அது விலக்கிக்கொள்ளப்பட்ட நிலையில் - மதுரை மூதூரில் நடைபெறும் திராவிட இயக்கப் பவள விழா மாநாட்டில் என் அவா நிறைவேறுமல்லவா?

நான் உன்னையும், நீ என்னையும் சந்திக்காமல் இருக்க முடியுமா?

அப்படி வளர்க்கப்பட்ட இயக்கமா இது?

அன்புடன்,

மு. க.

(03-12-1991)

1840. இந்து தர்மம் இடம் கொடுக்குமா?

உடன்பிறப்பே,

"இந்து தர்மம்" என்பது பற்றியது இன்றைய கடிதம்!

என்ன! வர்ணாஸ்ரம தர்மத்தைப் பற்றி எழுதப் போகிறாயா? வேதங்கள் உருவாக்கிய பேதங்கள் குறித்து எழுதப்போகிறாயா? என்றெல்லாம் நீ ஐயப்பாடு எழுப்புவதற்குள் விடையளித்து விடுகிறேன். இந்துவின் பத்திரிகாதர்மம் பற்றித்தான் எழுதப்போகிறேன்.

மீண்டும் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த இரண்டாண்டு காலத்தில் இந்து நிறுவனத்தில் உட்கட்சித் தகராறு உருவாகி நிறுவனமே சிதறிவிடும் நிலையேற்பட்டபோது, அந்தக் குழுக்களுக்குள் ஒரு சமரசத்தை நிலைநாட்டிட நான் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டவன். அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, இந்து நிர்வாகத்திற்கும், அதன் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட பெரும் மோதலில் ஒரு நல்ல முடிவு காண்பதற்காக, அண்ணா அவர்கள் எனக்கும், நாவலருக்கும் ஆணையிட்டுத்தான் நாங்களிருவரும் அரும்பாடுபட்டு அந்தத் தகராறைத் தீர்த்து வைத்தோம். அப்போது அண்ணா சொன்னார், நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு நிறுவனம் - கழக ஆட்சியில் முடிவுற்று விடக்கூடாது என்பதற்காகவே இந்த முயற்சி என்பதாக! அதுவும் அமெரிக்காவிலிருந்தவாறு அண்ணா ஒவ்வொரு நாளும் எங்களுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையாகும் அது!

அப்போது நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் தகராறு! ஆனால் 1989-90ல் இந்து பத்திரிகை நிர்வாகத்திற்குள்ளேயே பெரும் தகராறு!

அன்று அண்ணா சொன்னதே என் நினைவுக்கு வந்தது. எத்தனை கருத்து மாறுபாடுகள் இருப்பினும், நீண்டகாலமாகத் தமிழ்நாட்டிலிருந்து இயங்கிவரும் நிறுவனமொன்று உடைந்து

நொறுங்கி விடக்கூடாது என்பதற்காக - அந்தக் குழுக்களுக்குள் சமரசம் காண இரு சாராரையும் நானே தனித்தனியாக அழைத்துப் பேசினேன். பிறகு, திரு. குகன் அவர்களை அந்தச் சமாதான முயற்சியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டேன். அதன் காரணமாக பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணப்பட்டு, அதுபற்றி 1990 செப்டம்பர் 10-ஆம் நாள் திரு. ஜி. கஸ்தூரி அவர்கள் கையெழுத்திட்டு எனக்கு அனுப்பிய கடிதம் இதோ:-

September 10, 1990

Dear Sir,

In response to your appeal conveyed through Mr. Guhan, we have discussed a basis for the settlement of the internal controversy in THE HINDU. This has to be vetted by our lawyers and we shall endeavour to conclude the formal arrangements as early as possible.

We greatly appreciate your interest and initiative in this matter and look forward to your continued goodwill.

Yours sincerely,

(G. Kasturi)

The Hon'ble,
Dr. M. Karunanidhi.
Chief Minister,
Government of Tamil Nadu,
Madras.

(இதன் தமிழாக்கம் வருமாறு)

செப்டம்பர் 10, 1990

அன்புள்ள ஐயா!

தாங்கள் திரு. குகன் அவர்கள் மூலமாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க, தி இந்து நிறுவனத்தில் ஏற்பட்ட நிர்வாகப் பிணக்குகள் குறித்து ஒரு உடன்பாடு காண்பதற்கான அடிப்படைகளை நாங்கள் கலந்து பேசினோம். இது விஷயம் குறித்து எங்கள் வழக்கறிஞர்கள் கலந்தாலோசித்து வருகிறார்கள். இதற்கு அடிப்படையான

ஏற்பாடுகளை செய்வதற்கான முடிவுகளை நாங்கள் கூடிய விரைவில் மேற்கொள்வோம்.

இந்த விஷயத்தில் தாங்கள் மேற்கொண்ட முன் முயற்சிகளையும், காட்டிய ஈடுபாட்டையும் நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். தங்களுடைய நல்லெண்ணம் தொடருமென எதிர்பார்க்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
(ஜி. கஸ்தூரி)

இவற்றையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் - இந்து பத்திரிகை தி.மு.க. ஆட்சியிலே, கட்சி நடவடிக்கைகளிலோ - குறைகளோ, குற்றங்களோ, இருந்தாலும் அவற்றைக் கண்டு கொள்ளக்கூடாது என்பதற்காக அல்ல!

என்னைப் பற்றிய விமர்சனங்களை வரவேற்பவன் நான்; அவைகள் தரமானவைகளாக இருந்தால்!

கேலிகிண்டல்களை ரசிப்பவன் நான். அவை நயமானவைகளாக இருந்தால்!

ஆனால் நடுநிலைப் பத்திரிகை எனச் சொல்லிக் கொள்கிற இந்து பத்திரிகை - போலீஸ் இலாகாவின் மறைமுகத் தூதனாக விளங்குவதும், அதிலும் எதிர்க்கட்சிகளை குறிப்பாக, தி.மு. கழகத்தைப் பற்றி போலீசார் தருகிற பொய்யுரைகளை வெளியிடுகிற ஏடாகத் திகழ்வதும் தொன்மை வாய்ந்த இந்து இதழின் தகுதிக்கு ஏற்றதல்ல!

நீதிமன்றத்தில் ரகசியமாக அளிக்கப்படுகிற வாக்குமூலத்தை டைப் செய்யலாம் என்கிறது இந்து!

வாக்குமூலம் அளித்தவரே அதைத் திருத்தலாம் என்கிறது இந்து!

ரகசியமாக அளிக்கப்பட்ட சில நொடிகளுக்குள்ளாகவே நாடு முழுதும் ஏடுகளில், வானொலியில், தொலைக்காட்சியில் அம்பலமாக்கப்படலாம் என்கிறது இந்து!

இத்தனை கருத்துகளையும் இந்து மூலம் வழங்குகிற அந்தப் போலீஸ் அதிகாரி யார் என்பதை மட்டும் வெளியிடாமல் மறைக்கிறது இந்து!

யாரோ சொன்னார் என்பதெல்லாம் இந்து என்ற மிகச் சிறந்த தரம் வாய்ந்த நடுநிலை ஏட்டுக்கு, மிக உயர்ந்த செய்தியாகி விடுகிறது!

இன்று டிசம்பர் 5-ஆம் நாள் வந்துள்ள இந்து இதழில் மற்றொரு செய்திக் கட்டுரை, சிறிய அளவில்!

அதில் இந்து எடுத்து வைக்கும் முக்கியமான வாதம் என்ன?

இலங்கைப் போராளிகள் மத்திய மாநில அரசுகள் தொடர்பு குறித்து 1983 முதல் உச்சநீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை அமைப்பதா? அல்லது 1989 - 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் விசாரணை வைப்பதா?

இதில் இந்துவின் வாதம், இரண்டு ஆண்டு கழக ஆட்சிக் காலத்து விசாரணைக்கும் மட்டுமே ஆதரவாக நிற்கிறது!

அதற்கு என்ன காரணமாம்? 1989க்கு முன்பு இருந்த மத்திய மாநில அரசுகள், விடுதலைப் புலிகளுக்கு முதலில் ஆதரவு காட்டினாலும் கூட, 1987ல் விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப்படைக்கும் இடையே மோதல் ஏற்பட்ட பிறகு, மத்திய மாநில அரசுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே இந்தியாவில் குறிப்பாக, தமிழகத்தில் செயல்பட்டனவாம்! இப்படி சொல்கிறது இந்துவின் கட்டுரை!

ஆனால் உண்மை என்ன?

* 4.10.1987ல்தான் விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப்படைக்கும் மோதுதல் உருவாகும் நிலை ஆரம்பமாகிறது.

* 7.10.87 அன்று மத்திய ஐ.பி. இயக்குநர், மாநில டி.ஜி.பி.க்கு அனுப்பிய செய்தியில் விடுதலைப்புலிகளின் வயர்லஸ்களைக் கைப்பற்றச் சொல்கிறார்.

* அதற்கு மாநில டி.ஜி.பி. அளித்த பதிலில் மாநில அரசு ஆணை கிடைத்ததும் அவ்வாறு செய்வதாகவும், அப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொண்டால் எத்தகைய விளைவுகள் ஏற்படுமென்றும் யாரையும் கைது செய்வது நல்லதல்ல என்றும் குறிப்பிடுகிறார்.

* 10.10.87ல் விடுதலைப்புலிகளுக்கும், இந்திய அமைதிப்படைக்கும் சண்டை தொடங்கிவிட்டதால், தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் வயர்லஸ்களை உடனடியாக கைப்பற்றும்படி மத்திய அரசு, மாநில டி.ஜி.பி.க்கு தெரிவிக்கிறது. மத்திய கேபினட் செயலாளர், மாநில தலைமைச் செயலாளருக்கும்; மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள், தமிழக ஆளுநருக்கும் இதே செய்தியைத் தெரிவித்ததோடு, மத்திய அரசின் அறிவுரை கேட்கப்படாவிட்டால் தவறாகக் கருத வாய்ப்பு ஏற்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

* அதன்பிறகே 11.10.87ல் விடுதலைப் புலிகளிடமிருந்து 7 வயர்லஸ் செட்டுகள் மட்டுமே கைப்பற்றப்படுகின்றன.

* 16.18.87 அன்று மத்திய கேபினட் செயலாளர், ஐ.பி. இயக்குநர், டி.ஜி.பி. ஆகியோர் கலந்து பேசி எடுத்த முடிவின்படி, விடுதலைப்புலிகளுடன் அதிகாரிகள் அளவில் தலைமைச் செயலாளரோ, டி.ஜி.பி.யோ, அல்லது புலனாய்வு டி.ஐ.ஜி.யோ தொடர்பு கொள்ளலாம் என வரையறுக்கப்படுகிறது.

* 17.10.87 காலையில் ஐ.பி. இயக்குநர் டி.ஜி.பி.க்கு தெரிவித்த செய்தியில் விடுதலைப்புலிகள் மீது திணிக்கப்பட்ட தடைகள் குறைக்கப்படலாம் என்றும், மாநில அரசின் அபிப்பிராயப்படி தடை விதித்தால் போதுமென்றும் குறிப்பிடுகிறார். அதன்படி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்ட கிட்டுவை சந்திக்க அனுமதி தரப்பட்டு, அப்படிச் செல்பவர்கள் சோதனையிட்டு அனுப்பப்படுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

* தமிழகத்திலிருந்து கொண்டு, ஆயுதங்களையும் பொருட்களையும் இலங்கைக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் போராளிகள்மீது மாநில நிர்வாகம் அனுதாபத்துடன் இருப்பதாகவும், நடவடிக்கை எடுப்பதிலும் மெத்தனமாக இருப்பதாகவும் 8.2.88-இல் மத்திய இராணுவ அதிகாரி ஒருவர் எழுதிய கடிதத்திற்கு டி.ஜி.பி. அனுப்பிய பதிலில் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார்.

* 12.2.88 இல் மத்திய உள்துறை அமைச்சகத்திலிருந்து வந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்து 15.2.88ல் டி.ஜி.பி. விபரமான பதில் ஒன்றை அனுப்புகிறார்.

* 3.5.88ல் பொதுத்துறை (Public) செயலாளர் புலனாய்வு ஐ.ஜி.க்கு எழுதிய கடிதத்தில் பாலசிங்கம் போன்ற விடுதலைப்புலிகளின் பெரிய தலைவர்கள் சுதந்திரமாக உலவிட அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கிட்டுக்கு தனியாக ஒரு தொலைபேசி வழங்கப்பட்டுள்ளதாகவும், விடுதலைப்புலிகள் சிறு சிறு துண்டு வெளியீடுகளைத் தமிழகத்தில் விநியோகிப்பதாகவும், ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் விடுதலைப்புலிகள் கடத்துகிறார்கள் என்பதாகவுமுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி அறிக்கை கோரப்படுகிறது.

* 5.5.88ல் புலனாய்வு ஐ.ஜி. அவர்கள் அளித்த விளக்கப்பதிலில், இலங்கைப் பிரச்சினையில் மாநில நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடப்படுகிறது. முக்கிய முடிவுகள் அனைத்தையும் மத்திய மாநில அரசுகளைக் கலந்தே எடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. விடுதலைப் புலிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் சயனைட் அருந்திடும் நிலைமை இருப்பதாகவும் - எனவே அதனால் ஏற்படும் அரசியல் நிலைமைகளையும், கருத்தில் கொள்ள வேண்டுமென்றும் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

* பிறகு 8.8.88ல் மதுரையில் 72 புலிகளும், சென்னை 70 புலிகளும் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். 11.9.88ல் கிட்டுவும் மற்றும் 14 பேரும் கைது செய்யப்படுகிறார்கள்.

* பிறகு ஒரு மாதம் கழித்து 9.10.88ல் அரசு ஆணையின்படி, சென்னை சிறையிலிருந்த கிட்டு உட்பட 85 புலிகளும், மதுரை சிறையிலிருந்த 72 புலிகளும் விடுதலை செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

அதாவது தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி, கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் 157 பேரும் விடுவிக்கப்பட்டு, இலங்கைக்கு விமான மூலம் அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

* 1987ல் அமைதிப்படைக்கும், புலிகளுக்கும் போர் தொடங்கிய பிறகு 1988 ஆம் ஆண்டு இறுதிவரையில் மத்திய, மாநில அரசுகள் விடுதலைப் புலிகள் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டன என்பதற்கு இவை சில சான்றுகளே!

* 1983 முதல் அவர்களை கொரில்லாப் போர் வீரர்களாக்கிடப் பயிற்சி தந்ததும், 31 பயிற்சி முகாம்கள் அமைத்துக் கொடுத்ததும், ஆயுதங்களும், நிதியும் வழங்கியதும் மத்திய, மாநில அரசுகள் என்பது மறந்துவிடக் கூடியவை அல்ல!

அப்போது தமிழ்நாட்டில் பெரும்பாலான அரசியல் கட்சிகளின் ஆதரவு அந்தப் போராளிகள் பக்கம் இருந்தது - அதன் காரணமாகவே மத்திய, மாநில அரசுகள் உதவின என்றும், 1987க்கு பிறகு அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் கூறும் வாதம் நான் எடுத்துவைத்துள்ள தேதி வாரியான சில சான்றுகளால் மட்டுமே தூளாகிறதா இல்லையா?

* 1989ல் பிரதமர் ராஜீவ், தமிழக முதல்வராகிய என்னை, விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சொன்னதற்கும் அவரே எழுதிய கடித ஆதாரமும் உண்டு!

பத்திரிகா தர்மம் படித்துள்ளதாகக் கருதப்படும் இந்து ஏடு, 1991 ஏப்ரல் 29ந் தேதியன்று கூட ஜெயலலிதா இதே இந்துவுக்கு அளித்த பேட்டியில் இந்திய ராணுவம் பாகிஸ்தானில் நுழைந்து பங்களாதேஷ் அமைத்திட உதவியது போல, இலங்கையிலும் தமிழர் பிரச்சினைக்காக அத்தகைய நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிப்பது தவறல்ல என்று குறிப்பட்டதை அதற்குள் மறந்து விட்டதா?

1988 முதல் 1991 ஏப்ரல் முடிய, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், அவர்களுக்கு மாநில கழக அரசு உதவி ஏதும்

செய்யவில்லையென்று குறைப்பட்டும், பிரபாகரனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் தமிழகம் கொந்தளிக்கும் என்றும் ஜெயலலிதா இந்து, எக்ஸ்பிரஸ், மற்றும் ஏடுகளுக்கு அளித்த பேட்டிகளை தேதிவாரியாக நான் ஆதாரத்துடன் எடுத்துச் சொன்னதை மட்டும், இந்த நேரத்தில் இந்து ஏன் பிரசுரிக்கவில்லை?

இந்து வெளியிட்டுள்ள கட்டுரையில் எழுப்பியுள்ள வாதம் அடிபட்டுப் போய்விடுமென்பதால்தானே, விடுதலைப்புலிகளை 1991 ஏப்ரல் முடிய ஜெயலலிதா ஆதரித்து வெளியிட்ட பேட்டிகள், பேச்சுகள் அனைத்தையும் இந்து மறைத்துள்ளது.

அதனால்தான் சொல்கிறேன். 1983 முதல் விசாரணை என்றால் அதற்குள் 1989, 1909 ஆகிய இரண்டு ஆண்டுகளும் அடங்கும்!

அதுதான் ஈழத்தமிழர் பிரச்சினையில், மத்திய, மாநில அரசுகளின் நடைமுறைகளைப் பற்றிய முழுமையான விசாரணையாகவும் இருக்க முடியும்.

இதனை ஏற்றுக் கொள்ளாதது இந்துவின் தர்மமாக இருக்கலாம் -

இந்தியாவின் தர்மமாக இருக்க முடியாது!

நன்றி எதுவும் காட்ட வேண்டாம் - நடு நிலையாக இருக்கட்டும் இந்து!

இந்துதர்மம் அதற்கு இடம் கொடுக்குமா?

அன்புடன்,

மு. க.

(06-12-1991)

1841. அறிவுரைகளும் அலட்சியமும்!

உடன்பிறப்பே,

சாதாரணமாக நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பயன்படுத்தி ஒரு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாமல் செயலிழந்து விட்ட நிலையில்தான், தடா போன்ற ஒரு பயங்கரவாதத் தடை சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் 1988ல் நடைபெற்ற தடா பற்றிய ஒரு வழக்கில் கூறியிருக்கிறது.

ஜனநாயகத்தை மதிக்கும் கட்சிகள் அனைத்துமே அமைப்புகளின் ரீதியாக மட்டுமன்றி, அவற்றின் தலைவர்களும் தமிழ் நாட்டில் தடா சட்டத்தைப் பயன்படுத்துவது என்பது அளவுக்கு மீறிய அடக்கு முறை என்று தெரிவிக்கும் கண்டனங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் ஆதாயத்திற்காகவும் - தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத தோல்வியை மறைப்பதற்காகவும் - கச்சத்தீவு, காவிரிப் பிரச்சினை போன்றவற்றில் பகிரங்கமாக விடுத்த அறைகூவல்கள் வெறும் வெற்று ஆரவாரமாகப் போய்விட்டதைத் திரை போட்டு மூடுவதற்காகவும் - ஒவ்வொரு நாளும் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தருவதற்கு மாறாக, தடா! தடா! கைது! கைது! வழக்கு! வழக்கு! விசாரணை! விசாரணை! என்ற கொட்டை எழுத்துத் தலைப்புகள் ஏடுகளின் முகப்புகளை ஆக்ரமித்துக் கொள்கிற வகையிலே இந்த அரசு, மிக மலிவானதும், மனிதாபிமான மற்றதுமான ராஜதந்திரத்தைக் கையாளுகிறது.

அதிமேதாவித்தனமாகச் செயல்படுவதாக எண்ணிக் கொண்டு, பிரச்சினைகளைக் குழப்புவதிலும், ஏற்பட்டுவிட்ட புண்ணை ஆற்றிட வழி தேடாமல் அதனைக் குரங்குப்

புண் ஆக்குவதிலும், இந்த மாநில அரசு இதே வேகத்தில் போய்க்கொண்டிருக்குமானால், மத்திய அரசும் இத்தகைய செயல்பாடுகளுக்குத் துணை போய்க் கொண்டிருக்குமானால் - தேவை யில்லாமல் நாமே தமிழகத்திற்குள் சிலபல அசம்பாவிதங்களுக்கு ஆரத்தி எடுத்து, ஆலவட்டம் சுழற்றி வரவேற்பு கொடுத்தது போல ஆகிவிடும். அப்படி எதுவும் ஆகக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேயே இதைக் குறிப்பிடுகிறேன்.

எண்பதுக்கு மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டில் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரே ஒருவருக்கு மட்டும் செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளிக்க அனுமதியும், வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமை வேறு எந்த தடாக் கைதிக்கும் இதுவரை தரப்பட்டதே இல்லை. காரணம் சொல்லத் தேவையில்லை. அந்த ஒருவரின் வாக்குமூலம் தான் சட்டப்பிரிவுகளுக்குப் புறம்பாக தட்டச்சு செய்து படிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த நொடியே - அகில இந்தியா முழுதும் ஏடுகளில், தொலைக்காட்சியில், வானொலியில் அந்த வாக்குமூலம் விரிவாக வெளியிடப்பட்டிருக்கிறது.

தடாவில் கைதானவர்களிடம் வாக்குமூலம் வாங்க எத்தகைய முறைகள் கையாளப்பட்டு, அரசினர் விரும்புகிற வாக்குமூலங்களைக் காவல்துறை அதிகாரிகள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் - அல்லது காவல்துறை அதிகாரிகள் சிலரே காருண்ய மிக்க (?) இந்த சர்க்காரின் கடாட்சம் கிடைக்க வேண்டுமென்பதற்காக எத்தகைய கொடூர முறைகளைக் கையாண்டு வாக்குமூலத்தைத் தங்கள் இஷ்டப்படி பெறுகிறார்கள் என்பதும் நாட்டுமக்களின் காதுகளுக்கு எட்டிக் கொண்டிருக்கிற உண்மைகளதான.

உடன்பிறப்பே, பாவேந்தர் சொன்னதுபோல் எனக்கில்லை கடவுள் கவலை! ஆனால் ஒரு கவலை! கடவுள் என்று ஒருவர் இருந்து, அவர் அக்கிரமக்காரர்களைத் தண்டித்தால் நன்றாக இருக்குமே என்பதுதான் அந்த கவலை! அதாவது கொடுமைகளையும், வாய்மையற்ற செயல்களையும், மனித நேயமே இல்லாமல் செய்யும் குரூரமான காரியங்களையும் செய்பவர்களைத் தண்டிக்க கடவுள் என்று ஒருவர் இருந்தால் நன்றாக இருக்குமே என நான் எண்ணுவதுண்டு.

1976 மிசாக் கொடுமையில் சென்னை சிறைச்சாலையில் அடிபட்டவர்கள், உதைபட்டவர்கள், சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் தி.மு.க.வினர், தி.க.வினர், பழைய காங்கிரஸ்காரர்கள், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினர் இப்படிப்பல அரசியல் பொது வாழ்வினர்! அவர்களில் ஒருவர் விடுதலையான பிறகு என்னிடம் சொன்னார், அண்ணே! கடவுள் இருக்கானா இல்லையோ, எங்களை சித்ரவதை பண்ணின சிறைச்சாலை அதிகாரிகளை இயற்கையே தண்டிச்சிட்டுது அண்ணே! ஒரு அதிகாரி எங்களை அடிக்கச் சொன்ன மறுநாளே அவர் மகனுக்குக் கால் போச்சு! இன்னொரு அதிகாரிக்கு ஒரு வாரத்துக்கெல்லாம் வாதம் பிடிச்சு இழுத்து கிட்டுது! மற்றொரு அதிகாரியின் மனைவி திடீர்னு மரணமடைஞ்சுட்டுது! இப்படியாக அந்த அதிகாரிகளுக்கு இயற்கையாகக் கிடைத்த தண்டனைகளை அவர் உணர்ச்சி பொங்கச் சொன்னார், தனது உடலில் இருந்த தழும்புகளைத் தடவிக்கொண்டே!

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மனிதநேயத்தை காற்றிலே பறக்க விட்டுவிட்டு - மக்களுக்குத் தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கும் அரசுக்கு, அதன் திசைதிருப்பும் முயற்சிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதாகக் கூறிக்கொண்டு அதிகார வெறியாட்டம் போடுகிற யாராயினும், அவர்கள் தங்களின் மனச்சாட்சிக்கு ஒருநாள் பதில் கூற வேண்டியவர்களே ஆவார்கள் என்பதற்காகத்தான்!

உண்மையான குற்றவாளிகள், கொலைகாரர்கள், பயங்கரவாதிகள் தண்டிக்கப்படவேண்டுமென்பதில் இருவேறு கருத்துகளுக்கே இடமில்லை. அதற்காக ஆனந்தவிகடன் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல தனிப்பட்ட குரோதங்களை, அரசியல் விரோதங்களைத் தீர்த்துக்கொள்ள எந்தப் பழியை வேண்டுமானாலும் யார் மீதாவது போட்டுவிட - கையில் கிடைத்தது ஒரு ஆயுதம் என்று தடாவைக் கண்டபடி பயன்படுத்துவது சகிக்க முடியாத செய்கை அல்லவா?

> “ஈழத் தமிழர்மீது கொண்ட அனுதாபத்தால், விடுதலைப்புலிகளுக்கு ஒரு காலகட்டத்தில் இங்கே ஆதரவு தராதவர்களே இல்லை எனலாம். ஆகவே புலிகளுக்கு ஒரு காலத்தில் தமிழகத்தில் புகலிடம் தரப்பட்டதும், படுகொலைகள் நடைபெற்றதும்

வெவ்வேறு விஷயங்கள். இரண்டையும் தனித்தனியே பிரித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும். இவ்விஷயத்தில் அரசியல் லாப வேட்டையாட நினைத்து செயல்பட்டால் கவனம்தான் சிதறும்”

இவ்வாறு விகடன் எச்சரித்திருக்கிறது.

“முன்னர் இருந்துவந்த தமிழக அரசுகளுக்கும் இலங்கைத் தமிழப் போராளிகளுக்கு மிடையிலிருந்துவந்த தொடர்புகளை அம்பலப்படுத்துவதில் ஜெயலலிதா அரசுக்கு உண்மையிலேயே தீவிர அக்கறை இருக்குமானால், இது பற்றி நீதி விசாரணைக்கு உத்தரவிட தயக்கம் இருக்கக் கூடாது. இத்தகைய தொடர்புகள் குறித்து நீதிவிசாரணை நடத்த வேண்டுமென திரு. கருணாநிதியும் கோரியுள்ளார். இந்த விஷயத்தில் தாமதம் காட்டினால், தனது எதிரியான தி.மு.க. மீது பழி தீர்த்துக்கொள்ளவே முதலமைச்சர் ஈடுபட்டுள்ளார் என்ற யூகத்தைத்தான் அது மேலும் வலுப்படுத்தும்.”

இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கம் தீட்டியுள்ளது.

“தமிழ்நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளுமே போட்டி போட்டுக்கொண்டு, பல்வேறு இலங்கைப் போராளிக் குழுக்களுடன் அனுதாபம் காட்ட முந்திக் கொண்டிருந்தன. ராஜீவ்காந்தி கொலைக்குப்பிறகு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மக்கள் கருத்து திரும்பியிருக்கிறது என்பது வேறுவிஷயம். அ.தி.மு.க. அரசு இந்த விவகாரத்தில் அரசியல் ஆதாயம் பெற விரும்புகிறது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் பல விஷயங்கள் நடந்துள்ளன. இன்னமும் தடா சட்டத்தின் கீழ் இருந்து வருபவரான முன்னாள் உள்துறை செயலாளர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்க அனுமதிக்கப்பட்டது அதில் ஒன்றாகும். கண்டனத்தையும், அரசியல் எதிர்ப்பையும் தாங்கிக் கொள்ளக்கூடிய பண்பை வளர்த்துக் கொள்வதில் ஜெயலலிதா கவனம் செலுத்தவில்லை”

இப்படி தலையங்கம் எழுதியுள்ளது டைம்ஸ் ஆப் இந்தியா ஏடு!

“தவறாகப் பயன்படுத்த அதிகப்படியான வாய்ப்புகள் கொண்டது தடா என்ற இந்தக் காட்டுமிராண்டிச் சட்டம். முன்பிருந்த அரசுகளின் ஆதரவுடன் இங்கு வேரூன்றிய விடுதலைப்புலிகளின் வளர்ச்சிக்கு உதவியதுபற்றி, முழு விசாரணை வேண்டுமெனக் கருணாநிதி கோருகிறார். அதை விடுத்து அ.தி.மு.க. அரசு, தனது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக உண்மைகளைத் திரித்துக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.”

இது இந்துஸ்தான் டைம்ஸ் தலையங்கத்தின் ஒருபகுதி!

“இந்திராகாந்தியின் காலத்திலிருந்து விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் மத்திய அரசுக்கு எந்த அளவு பங்கு இருந்தது என்று பார்க்கும்போது, இப்பிரச்சினையில் கருணாநிதியை மட்டும் தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது.”

இவ்வாறு இன்டிபென்டன்ட் ஏடு எழுதியுள்ளது.

எனவே சென்னையிலிருந்து வரும் ஏடுகள் மட்டுமல்ல, டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் இருந்து வரும் ஏடுகள் எழுதிக் காட்டுவதையும், ஜனநாயகத்தில் பற்றுக் கொண்டோர் வெளியிடும் கண்டனங்களையும் இங்குள்ள மாநில அரசு பொருட்படுத்தாமல் தடாவையே நம்பிச் செயல்படுமேயானால் - உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியதுபோல, இங்குள்ள சட்டங்களைக்கொண்டு அமைதியையும், ஒழுங்கையும் கட்டிக்காக்க முடியாமல் மாநில அரசு செயலிழந்துவிட்டது என்பதை, இந்த அரசே பறைசாற்றிக் கொள்வதாகத்தான் அர்த்தம்!

அன்புடன்,

மு. க.

(09-12-1991)

1842. இதோ ஒப்புதல் வாக்குமூலம்!

உடன்பிறப்பே,

விடுதலைப் புலிகளை நல்லவர்கள் என்று நினைத்து ஆதரவு கொடுத்தோம். ஆயுதங்கள் கொடுத்தோம். நிதி உதவி கோடிக்கணக்கில் செய்தோம். முகாம்கள் அமைத்துக் கொடுத்து ராணுவ அதிகாரிகளைக் கொண்டு பயிற்சிகள் வழங்கினோம். ஆனால் அவர்கள், இந்திய அமைதிப்படையுடன் 1987ல் மோதிக் கொண்ட பிறகு அவர்களை ஆதரிக்கவில்லை. அதன்பிறகு கருணாநிதியும், தி.மு.க.வும்தான் அவர்களை ஆதரித்தனர்.

என்ற ஒரு வாதத்தை எடுத்து வைப்பவர்களுக்கு, நிருபர்கள் பேட்டி மூலமும், அறிக்கை வாயிலாகவும், முரசொலி கடிதத்திலும் ஆதார பூர்வமானதும், விளக்கமானதுமான பதில்களை தேதி வாரியாக நான் அளித்துள்ளேன்.

* சுமார் 150க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படிக் கைது செய்யப்பட்டதும் - கிட்டு உட்பட அப்படிக் கைது செய்யப்பட்டு மதுரையிலும், சென்னையிலும் சிறைச்சாலைகளில் இருந்தவர்களை விடுதலை செய்து விமான மூலம் இலங்கையில் கொண்டு போய் விடப்பட்டதும் 1988ல்தான்; அதாவது இந்திய அரசுக்கும், புலிகளுக்குமிடையே மோதுதல் ஏற்பட்டபிறகுதான் என்று விளக்கியிருக்கிறேன்.

* 1988 பிப்ரவரி 22ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கும், மார்ச் முதல் தேதியன்று இந்து ஏட்டுக்கும் ஜெயலலிதா அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல், இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பது என்பது இயலாத காரியம் என்றும், புலிகளைச் சந்தித்து அண்மைக்காலத்தில் பலதடவை ஜெயலலிதாவே பேசியிருப்பதாகவும், அந்தச் சந்திப்பு மற்றும் பேச்சு வார்த்தைப்பற்றிய விபரங்களை வெளியிட

விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

* 1988 மார்ச் 21ல் நடத்திய நிருபர்கள் கூட்டத்தில், பிரபாகரனுக்கு இந்திய அமைதிப்படையினால் ஏதாவது தீங்கு ஏற்பட்டால், தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்படுமென்று ஜெயலலிதா எச்சரித்ததையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

உடன்பிறப்பே, 1989ல் தி.மு.கழகத்தில் ஆட்சி அமைகிறது. இந்திய அமைதிப்படைக்கும், புலிகளுக்கும் மோதுதல் ஏற்பட்டபிறகு அதாவது இரண்டு ஆண்டு கழித்து 1989ல் கூட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களை நான் தமிழக முதல்வர் என்ற முறையில் சந்தித்தபோது - விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்றே அவர் என்னுடன் விவாதித்தார்.

சகோதரயுத்தம் நிறுத்தப்படவேண்டும் - ஜனநாயக வழிக்குப் போராளிகள் திரும்ப வேண்டும் என்ற அடிப்படையில் பேசுவதாகத்தான் நான் பிரதமர் ராஜீவிடம் சொன்னேன். அது குறித்து ராஜீவுக்கும், முரசொலி மாறனுக்குமிடையே நடந்த கடிதப்போக்குவரத்தைக்கூட நிருபர்கள் கூட்டமொன்றில் படித்துக் காட்டியிருக்கிறேன்.

வி.பி.சிங், பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகும் - விடுதலைப் புலிகள், டெலோ, இ.பி.ஆர்.எல்.எப், ஈராஸ், ஈ.என்.டி.எல்.எப்., பிளாட் முதலிய எல்லாப் போராளிக்குழுக்களுடனும் தனித்தனியே நான் சந்தித்து, சகோதரயுத்தம் நிறுத்தப்படவும், ஜனநாயகப் பாதைக்குப் போராளிகள் அனைவரும் திரும்பவுமான நிலை ஏற்பட வேண்டுமென்ற மையக் கருத்துடன் பேச்சு நடத்தியபோது, குழுக்களுக்கிடையே கருத்துகள் ஒத்துப்போகாத காரணத்தால், அந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை.

அதன்பிறகு 1990 ஜூன் திங்களில், பத்மநாபாவும் அவர் தோழர்களுமாக சுமார் 15 பேர் கொல்லப்பட்டனர். அன்றைய தினம் டெல்லியிலிருந்த நான் அந்தச் செய்தி கேள்விப்பட்டவுடனேயே, அந்தக் கொலை நடத்தியது விடுதலைப்புலிகளாகத்தான் இருக்குமென்ற கருத்தை டெல்லி நிருபர்களிடத்திலே தெரிவித்தேன். கடும் கண்டனம் வெளியிட்டேன்.

அதன்பிறகு, இலங்கைத் தமிழ்ப்போராளிகள் எவராலும் தமிழகம் வன்முறைக் களமாவதை அனுமதிக்க முடியாது என அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு - விடுதலைப்புலிகள் மற்றும் போராளிகளின் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள், வயர்லஸ் கருவிகள், வாகனங்கள் கைப்பற்றப்பட்டு - பலர் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி கைதிகளாகவும் சிறை வைக்கப்பட்டனர்.

பத்மநாபா படுகொலைக்குப் பிறகு, இப்படிக் கடுமையான நடவடிக்கைகளைக் கழக அரசு எடுத்துக் கொண்டிருந்தபோதுதான், அதாவது கொலை நடந்த மூன்று மாதங்களுக்கு பிறகு (அக்டோபர் 3, 1990) ஜெயலலிதா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழுக்கு அளித்த பேட்டியில், கடந்த இரண்டு மாதங்களாக விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் எந்தப் புகாருக்கும் இடம் இல்லாத வகையில் நடந்து கொள்கிறார்கள் என்றும், அவர்கள் இலங்கை அரசை எதிர்த்து ஒரு மகத்தான யுத்தம் நடத்துகிறார்கள் என்றும், அவர்களின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றி! என்றும் கூறியிருந்ததையும் இன்றைக்கும் எக்ஸ்பிரஸ் ஏட்டைப் புரட்டிப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

* தொடர்ந்து அக்டோபர் 7ந் தேதி எம்.ஜி.ஆர். சிலை திறப்புவிழாவில், ராஜீவ்காந்தி முன்னிலையில் ஜெயலலிதா பேசும்போது, மாநில அரசு அதிகமான உதவிகளை விடுதலைப்புலிகளுக்குச் செய்ய வேண்டும் என்று கூறினார். ஏடுகளில் அந்தப் பேச்சும் வந்துள்ளது.

* 1991 ஏப்ரல் 29 ஜெயலலிதா இந்துவுக்கு அளித்த பேட்டியில், பங்களாதேஷ் அமைவதற்கு இந்தியப் படை உதவியது போல, இப்போது இலங்கைப் பிரச்சினையிலும் அப்படி யோசிப்பது தவறல்ல! என்று ஜெயலலிதா குறிப்பிட்டார்.

இந்தப் பேட்டிகளில் எல்லாம், எம்.ஜி.ஆர். அளவுக்கு, கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு உதவி ஏதும் செய்யவில்லை என்று குறைபட்டுக் கொண்டுமிருக்கிறார்.

இவற்றையெல்லாம் நான் மறுக்க முடியாத ஆதாரங்களுடன் எடுத்துவைத்த பிறகு - நீண்ட நாள் மௌனம் சாதித்து மழுப்பிவிட முடியாது எனப் புரிந்து கொண்டு அ.தி.மு.க. வட்டாரம், இப்போது பதில்சொல்லப் புறப்பட்டு எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக அறிக்கையொன்றின் மூலம் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

புலிகளுக்கு கருணாநிதி,
எம்.ஜி.ஆர். போல உதவி செய்யவில்லை.
அப்படிக் கருணாநிதி உதவி செய்ததற்கு
எந்த ஆதாரமும் இல்லை.

என (3.10.90) எக்ஸ்பிரஸ் இதழுக்குப் பேட்டி அளித்துவிட்டு, தி.மு.க. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு - உறவு - பரிவு - என்றெல்லாம் இப்பொழுது பேசுவது முரண்பாடல்லவா? என நாம் கேட்டவுடன், ஆட்சியின் சார்பாக அமைச்சர் என்ற நிலையிலும், அ.தி.மு.க. கட்சியின் சார்பாக அ.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் என்ற நிலையிலும் திரு. அரங்கநாயகம் அவர்கள் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இது அறிக்கையாக மட்டுமல்லாமல் ஒப்புதல் வாக்குமூலமாகவும் அமைந்துள்ளது. அறிக்கையில் காணப்படும் முக்கிய வாசகங்கள் வருமாறு :-

1. தமிழக மக்களின் ஆதரவையும், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். அரசும் மத்திய அரசும் கொடுத்த உதவிகளையும் பெருமளவு பயன்படுத்தித்தான் விடுதலைப்புலிகள், சிங்கள ராணுவத்தை எதிர்த்துப்போராடினர்.

2. வங்காள தேச விடுதலைப்போருக்கு ஆதரவு தந்ததற்கு இணையாக இலங்கைத் தமிழரின் வீரம் செறிந்த போராட்டத்திற்கு உதவியதாக நாம் கருதுகிறோம்.

3. விடுதலைப்புலிகளுக்குக் கருணாநிதி அரசும், வி.பி.சிங்கின் அரசும் போதுமான ஆதரவு தரவில்லை. அது தவறு என்று புரட்சித்தலைவி கூறியது உண்மைதான்.

4. புரட்சித்தலைவர், விடுதலைப்புலிகளுக்குப் போதுமான நிதியுதவி வழங்கினார். அதை வைத்துக் கொண்டு அவர்கள் தங்களது போராட்டத்தை நடத்தி வந்தனர்.

5. புரட்சித்தலைவர் மறைவுக்குப் பிறகு, புலிகளுக்கு தேவையான அளவு நிதி கிடைக்கவில்லை.

6. போர்க்களத்தில் நிற்கும் அவர்கள் நீதி நியாயங்களைப் பார்க்காமல் கள்ளக் கடத்தல் உட்பட எல்லா வித தப்பு

நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டியக் கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

7. பணத்துக்காக விடுதலைப்புலிகள் தவறு செய்திருந்தால் அதற்கு முழுக் காரணம், அவர்களுக்கு கருணாநிதி பண உதவி செய்யாததுதான்!

8. எனவே, விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தது பற்றி விசாரணை தேவையில்லை. கொலை, கொள்ளை, கள்ளக்கடத்தல், பயங்கரவாதிகளுக்கு பயிற்சி தந்தது ஆகியவை பற்றித்தான் விசாரணை தேவை.

இந்த எட்டு குறிப்புகளும் அரங்கநாயகம் அவர்களின் பெயரால் அ.தி.மு.க. தலைமை நிலையத்திலிருந்து வந்துள்ள அறிக்கையில் காணப்படும் பிரதான விஷயங்களாகும்.

ஒவ்வொன்றைப் பற்றியும் நான் விளக்கம் சொல்லாமலே, இது ஓர் ஒப்புதல் வாக்குமூலம் என்பது அனைவர்க்கும் தெளிவாகத் தெரியும். விடுதலைப் போராட்டத்திற்கு உதவினோம். கொலை, கொள்ளை போன்ற புலிகளின் செயல்களை ஆதரிக்கவில்லை என்பது அ.தி.மு.க.வின் கருத்து என்பது உண்மையானால், 1990 ஜூன் மாதம் பத்மநாபாவைக் கொலை செய்த விடுதலைப்புலிகளை, அடுத்த மூன்று மாதம் கழித்து அக்டோபர் மாதம் ஜெயலலிதா ஆதரித்து பேட்டி கொடுப்பானேன்? புலிகள் மீது இரண்டு மாதமாக புகார்கள் ஏதுமில்லை என்று அந்தப் பேட்டியில் கூறுவானேன்? புலிகள் இலட்சியவாதிகள் என்று அந்தப் பேட்டியில் புகழ்வானேன்?

மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல, நீதிமன்றத்திலும் விவாதிக்கப்பட வேண்டிய விவகாரமான பேட்டியல்லவா அந்த அக்டோபர் மாத பேட்டி?

"பணமில்லாத காரணத்தால், போர்க்களத்தில் நிற்போர் நீதி நியாயங்களைப் பாராமல் எல்லாவிதத் தப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டுவிட்டது" என்று, புலிகளின் தப்புகளுக்கு சப்பைக் கட்டு கட்டுபவர், கட்டாயத்தின் காரணமாக ஏற்பட்ட தவறுகள் என்று

தவறுகளை நியாயப்படுத்துபவர் - பிறகு ஏன் அதற்கு நீதிவிசாரணை வேண்டுமென்கிறார்?

ஓகோ! கருணாநிதி அவர்களுக்கு பண உதவி செய்யாததால்தான் அவர்கள் கொலை, கொள்ளை, கள்ளக் கடத்தல் போன்ற தவறுகள் செய்யும் கட்டாயத்துக்கு ஆளாயினர் - ஆகவே கருணாநிதிதான் குற்றவாளி!

என்று தீர்ப்புக் கூறுவதற்கா? இந்த நியாயத்தை எங்கே போய்ச் சொல்வது? நான் பண உதவி செய்யவில்லையாம். போராளிகள் தப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்களாம் - அதனால் 1989, 1990 இரண்டு ஆண்டு மட்டும் விசாரணை போதுமாம்!

1988-ல் புலிகளை ஜெயலலிதா அடிக்கடி சந்தித்து ரகசிய பேச்சுவார்த்தை நடத்தியதாக அவரே சொல்லியிருக்கிறாரே! அதற்கு விசாரணை வேண்டாமாம்!

1984-ஆம் ஆண்டு மீனம்பாக்கம் விமான நிலைய வெடிகுண்டு சம்பவத்தில் 40 பேர் சாவு - அதில் 18 பேர் இலங்கைப் பிரஜைகள் - அவர்களில் 13 பேர் பெண்கள் - என்று பயங்கரமான செய்திகள் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வந்ததே! அந்தக் கொலைகாரப் போராளிகள் இருவர் மூன்று வாரம் இடைக்கால ஜாமீன் பெற்று - ஜாமீன் கொடுத்த ஒருவர் இன்று காங்கிரசில் முக்கிய புள்ளி - அவரையும் பாவம்! சிக்க வைத்துவிட்டு, நாட்டை விட்டே ஓடிவிட்டார்களே! 1983 முதல் விசாரணை வைத்தால்தானே அந்தக் கொடூர சம்பவம் பற்றியும், அதன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

1986-ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் ஜீப்பைப் படுவேகமாக ஓட்டி, இரண்டு இளம் பெண்களைக் கொன்றுவிட்டுப் போய்விட்டார்களே; அந்தப் போராளிகள் யார்? அவர்களுக்குப் பாதுகாப்பு, தங்குமிடம் அளித்தது யார்? இதற்கு 1983 முதல் விசாரணை வைப்பதுதானே நல்லது!

1986-ஆம் ஆண்டு, சென்னை சூளைமேட்டில் பட்டப்பகலில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் பெரும் ரகளையில் ஈடுபட்ட போராளிகள் யார்? திருநாவுக்கரசு என்ற ஒரு வாலிபரை அவர்கள் சுட்டுக் கொன்றார்களே! வெடிமருந்து, துப்பாக்கிகள் சகிதம் பத்துபேர் காவல்துறை வண்டியில் ஏற்றப்பட்டார்களே? அவர்கள்

எந்தப் போராளிகள்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அதற்குப் பின்னணி யார்?

கழக ஆட்சி நடைபெற்ற இரண்டு ஆண்டுக் காலத்திற்கு விசாரணை வேண்டாமென்று சொல்லவில்லை நான்! முழுமையான விசாரணையில் அதுவும் அடங்கும்!

1983 முதல் உச்சநீதிமன்ற நீதிபதி விசாரணை அமைந்தால், அரங்கநாயகமே அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலப்படி, மத்திய மாநில அரசுகள் இந்திராகாந்தி - எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு உதவிய விபரங்கள் அனைத்தும் வெளிவரும்! முதல் நாள் போராளிகளின் ஆயுதங்களையும் வயர்லஸ்களையும் கைப்பற்றி, அதைக் கண்டித்து பிரபாகரன் உண்ணாவிரதம் இருந்ததும் எம்.ஜி.ஆர். ஆட்சியில் அந்த ஆயுதங்கள் மறுநாளே அவர்களிடம் திரும்பத் தரப்பட்டதே! ஏன்? எப்படி? எவர் போட்ட உத்தரவு? அன்றைய உள்துறை செயலாளர் யார்? அவர் மீது விசாரணை வேண்டாமா?

அத்துடன் மீனம்பாக்கம் வெடிகுண்டு சம்பவத்தில் 40 பேர் சாவு தொடங்கி, பட்டினம் காத்தான் துப்பாக்கிச் சூடு, பத்மநாபா படுகொலை, சூளைமேடு சம்பவம், வேதாரண்யம் இளம் பெண்கள் சாவு, ராஜீவ்காந்தி படுகொலை, வேதாரண்யம் சண்முகம் மர்மக் கொலை - இன்னும் விட்டுப் போன நிகழ்ச்சிகள் அனைத்தும் நாட்டுக்குத் தெரிய உதவிகரமாக இருக்கும்!

இது மாநில அரசு தொடர்புடைய பிரச்சினை மட்டுமல்ல. பெரும் பகுதி மத்திய அரசு தொடர்புடைய பிரச்சினை!

அதனால்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் 1983 முதல் இதுவரை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த உச்சநீதிமன்ற நீதிபதி வேண்டுமென்கிறோம்.

இதனை உறுதிப்படுத்தும் முறையில் அமைந்துள்ளதே அ.தி.மு.க. தலைமையின் ஒப்புதல் வாக்குமூலமாகும்.

அன்புடன்,

மு. க.

(13-12-1991)

1843. நெடுமாறன் தீட்டிய நீட்டோலை!

உடன்பிறப்பே,

ஆண்டுதோறும் கழகம் நடத்தும் முப்பெரும் விழா என்றாலும் - மாநாடுகள் என்றாலும் அவற்றில் கலந்துகொண்டு என்னைக் களிப்பில் ஆழ்த்துமாறு உனக்கு நான் கடிதம் எழுதுவதுண்டு.

இந்த முறை, திராவிட இயக்கப் பவள விழா மாநாட்டுக்கு நான் உனக்குக் கடிதம் எழுதுவதை விட, அதற்குப் பதிலாக உடன்பிறப்பாகிய நீயே எனக்குக் கடிதம் எழுதினால் எப்படியிருக்குமென்று எண்ணிப் பார்த்தேன்.

என் எண்ணம் ஈடேறும் வண்ணம், நான் எதிர்பாராமலே வந்த ஒரு உடன்பிறப்பின் கடிதத்தையே (என் கடிதமாக) உனக்கு அனுப்பி வைக்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில் வடக்கநந்தல் ஊரைச் சேர்ந்த க.பெ. நெடுமாறன் என்பவர்தான் அந்த உடன்பிறப்பு. 1946 - ஆம் ஆண்டு மதுரையில் திராவிடர் கழகம் நடத்திய கருப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாட்டில் கலந்துகொண்டவர் அவர். அந்த மாநாட்டுப் பந்தலுக்கு காங்கிரசார் தீ வைத்துக் கொளுத்தி, இரண்டாம் நாள் மாநாடே நடக்க முடியாமல் செய்தனர். கொளுத்தப்படுவதற்கு முன்பு இருந்த மாநாட்டுப் பந்தலின் படத்தையும் அவரது கடிதத்துடன் எனக்கு அனுப்பியிருக்கிறார். 45 ஆண்டுகளுக்கு முன் எடுத்த படம் - அழுக்கேறியும், செல்லரித்தும், மங்கிப் போன நிலையில் உள்ள படம்!

படம்தான் மங்கியுள்ளதே தவிர, திராவிட இயக்க உணர்வு மங்கிடவில்லை - மங்காது என்பதற்கு எடுத்துக்காட்டாக, என் உடன்பிறப்புகளில் ஒருவரான வடக்கநந்தல் நெடுமாறன் எழுதிய கடிதம் இதோ! அவர் எழுதியபடியே அப்படியே இணைத்துள்ளேன்-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, ஆற்றல் மிக்கவரே! வணக்கம்....

திராவிட இயக்க 75ஆம் ஆண்டு பவள விழா மகாநாட்டிற்கு தாங்கள் உடன்பிறப்பு மடல் வாயிலாக விடுக்கும் அழைப்பிற்கு பயன்படும் என்ற எண்ணத்தில் என் நினைவிற்கு வந்ததை எழுதி கருப்புச் சட்டைப்படை முதலாவது மாகாண மாநாடு நிழற்படம் ஒன்றும் இத்துடன் அனுப்பியுள்ளேன்.

1946 மே 11, 12 (சனி, ஞாயிறு) தேதிகளில் மதுரையில் கருப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாடு நடைபெற்றது.

மாநாடு வைகையாற்றில் கொட்டகை போட்டு நடைபெற்றது. 11.5.46 மாநாடு அமைதியாக, சிறப்பாக நடைபெற்றது.

11.5.46 மாநாடு கடைசியாக, தளபதி சி.என். அண்ணாதுரை எம்.ஏ. சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு இரவு ரயிலில் ஊருக்குச் சென்று விட்டார்.

11.5.46 இரவு, சி.என். அண்ணாதுரை எழுதி திராவிடர் கழகத்தினர் நடித்த அவன் பித்தனா? நாடகம் நடந்தது.

12.5.46 காலை, மாநாடு தொடங்கி அமைதியாக நடந்து கொண்டிருந்தது.

மாநாட்டிற்கு வந்திருந்த தோழர்களில் சிலர் நகரத்திற்குள் சென்றிருந்தவர்கள் ஆங்காங்கே அடித்து விரட்டப்பட்டார்கள். நகரத்திற்குள் சென்று திரும்பிய மணியம்மையார் அவர்களை வழிமறித்துச் சேலையை இழுத்து, விரட்ட அம்மையார் ஓடி ஒரு வீட்டினுள் நுழைய, அவ்வீடு முகமதியர் வீடாக இருந்து அவர்கள் அம்மையாரை ஆதரித்துப் பாதுகாப்பாக மகாநாட்டு பந்தல் கொண்டு வந்து சேர்த்தனர்.

அக்காலத்திலேயே திரைப்படங்களுக்கு வசனம் எழுதிக்கொண்டிருந்த திராவிடர் கழக பேச்சாளர்களில் ஒருவரான என். இராமசாமி என்பவரை அடித்து மூக்கை உடைத்துப் போட்டு விட, கூடச் சென்றவர்களில் சிலர் என். இராமசாமியைத் தூக்கி வந்து மாநாட்டு மேடையில்

கிடத்தினார்கள். இது போன்ற பலர் படுகாயமுற்றவர்கள் காலை 11 மணிக்கு முன்பு - 12.5.46 காலை 11 மணிக்கும் முன்பு - 12.5.46 காலை 11 மணிக்கு பின்பு ஓர் பெருங்கூட்டம் காங்கிரஸ் கொடியை பிடித்துக்கொண்டு வைத்தியநாத அய்யருக்கு ஜே என்று கோஷம் போட்டுக் கொண்டு நெருப்புப் பந்தம், கொடுவாள், கத்தி, தடிகள் எடுத்துக் கொண்டு மாநாட்டு கொட்டகைக்கு நெருப்பு வைத்து கொளுத்த வந்தது. மேடையில் பெரியாரிடம் சொல்லப்பட்டது. பெரியார், மாநாடு இத்தோடு முடிந்தது என்று அறிவித்ததோடு, கருப்புச் சட்டை போட்டுள்ள தோழர்கள் அனைவரும் வடக்கநந்தல் க.பெ. நாராயணன் (அப்போது என் பெயர் நாராயணன், 1947 மே ஈரோடு பிரச்சாரப் பள்ளியில்தான் நெடுமாறன் என மாற்றப் பெற்றது) தலைமையில் மாநாட்டுப் பந்தலைச் சுற்றிப் பாதுகாப்பாக இருக்கவும், பெண்களும், மற்றவர்களும் பக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்திற்குச் சென்ற பிறகு கருப்புச் சட்டை போட்டுள்ள தோழர்கள் பாதுகாப்புப் பணியில் இருந்து விலகி வரட்டும் என்று கட்டளையிட்டார்கள். (இத்துடன் இணைத்துக் கொடுக்கப் பெற்றுள்ள படம் அந்தப்படமே! மேலும் சில படங்கள் இருந்தன என்றாலும், அவைகள் பூச்சி தின்று அழித்து விட்டன. சேலம் கொண்டய்ய நாயுடுதான் போட்டோ எடுத்தவர். அவரிடம் வாங்கப்பட்டது அக்காலத்தில். அவர் இறந்து விட்டார்)

அந்தக் கட்டளைப்படி பாதுகாப்பாக இருந்து பெரியார், பெண்கள், முதியோர், மற்றையோர் அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்று சேர்த்த பிறகு கருப்புச் சட்டை அணிந்தவர்கள் கலைந்து சென்றோம். காங்கிரஸ் கூட்டம் வந்தே மாதரம், வைத்தியநாத அய்யருக்கு ஜே என்று கோஷம் போட்டுக்கொண்டு வந்து மாநாட்டுக் கொட்டகையை கொளுத்திவிட்டு பெரியாரும், பெண்களும் தங்கியிருந்த கட்டிடத்தின் கதவை உடைக்கவும், ஜன்னல் வழியாக கல் மண் போடவும் செய்ய கருப்புச் சட்டை அணிந்திருந்தவர்கள் தடுக்கவே காங்கிரஸ்காரர்கள் கோஷம் போட்டுக் கொண்டே சென்றார்கள். இவைகள்

12.5.46 மாலை 5 மணியோடு நடக்க அதற்குப் பிறகு, பெண்களுக்கு மட்டும் தயிர் சோறு பெரியார் அவர்களால் அவரவர்கள் கையிலேயே வழங்கப்பட்டது.

12.5.46 இரவு 8.30 மணிக்கு மேல் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை பஸ்களில் (S.R.V.S., T.V.S.) மதுரையிலிருந்து கொடைக்கானல் ரோடு ரயில் நிலையத்தில் கொண்டுபோய்விட அங்கிருந்து திருச்சி சென்று அவரவர்கள் ஊருக்கு சென்றனர்.

கள்ளக்குறிச்சி வட்டம் வடக்கநந்தலில் இருந்து க.பெ. நாராயணன் (நெடுமாறன்) என்கிற நான், எனது மனைவி சௌபாக்கியம், வே. விளையத்தான், கள்ளக்குறிச்சி, ந. கண்ணன், சின்ன சேலம், அ. அம்பாயிரம் வீ. கண்ணப்பன் ஆகிய அறுவரும் சென்றிருந்தோம். வே. விளையத்தான் தவிர மற்ற ஐவரும் உயிருடன் இருக்கின்றோம். மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவர் உரை அச்சியற்றி எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. வைத்திருந்தேன். தற்போது கிடைக்கவில்லை. தேடிக்கொண்டுள்ளேன். கிடைத்தால் அனுப்பித் தருகின்றேன்.

12.5.46 ஞாயிறு விடுமுறையானதால் வைத்தியநாத அய்யர் பலரையும் திரட்டி ஏவிவிட முடிந்தது. எனக்கு வயது 23, 1946-ல்! தற்போது (1991-ல்) 69. அண்ணா திராவிட நாடு இதழில் கேள்வி பதில் பகுதியில், தன்னைத் தள(ர்)பதி என்று எழுதினார். அந்த முறையில் 69-ல் உடல் தளர்ந்திருந்தால் 23-ல் இருந்த உள்ளத்துடனேயே க.பெ. நெடுமாறன் ஆகிய நானும், சௌபாக்கியம் ஆகிய என் இல்லாளும் 1946 மதுரை கருப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாட்டிற்கு இணைந்து சென்றதைப் போன்றே இந்த மாநாட்டுக்கும் இணையாகவே வருகின்றோம்.

1999 என் பவள விழாவிற்குத் தங்களை தற்போதே அழைக்கின்றேன். தாங்களே தலைமை ஏற்று நடத்தி வாழ்த்தக் கோரிடும்,

தங்கள்

க.பெ. நெடுமாறன்

உடன்பிறப்பே, நெடுமாறன் தீட்டியுள்ள நீட்டோலையை உனக்கு அனுப்பி விட்டேன்.

உடல் நலிவுற்று, மிகவும் மெலிந்து, முதுமைத் தோற்றம் முற்றுகையிட்ட நிலையில், அவரைச் சில நாட்களுக்கு முன் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

இந்த நிலையிலும், அவர் தனது துணைவியாருடன் பவள விழா மாநாட்டுக்கு வருகிறேன் என எழுதியுள்ளார்.

இந்த உணர்வுதான் இந்த இயக்கத்திற்கு ஊழிக்காலத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய உறுதியை நிலைப்படுத்தியிருக்கிறது.

இனி நான் வேறு உன்னை மதுரைக்கு அழைக்க வேண்டுமா? முதுமைகளே வரத் துடிக்கும் போது - இளமைகளுக்கு என்ன தயக்கம்?

அன்புடன்,

மு. க.

(14-12-1991)

(1947க்கு முன்பெல்லாம் அண்ணா அவர்களைத் தளபதி சி.என். அண்ணாதுரை என்றே அழைப்பதும் - விளம்பரம் செய்வதும் வழக்கமாக இருந்து வந்தது. - ஆசிரியர்.)

1844. மதுரைக் காஞ்சி - மதுரையில் காஞ்சி!

உடன்பிறப்பே,

மதுரையில் மாநாடு என்றதும் இலக்கிய ஆர்வம் படைத்தவர்களுக்கு மதுரைக் காஞ்சி நினைவுக்கு வருவது இயல்பன்றோ?

மதுரைக் காஞ்சி என்றதும், மதுரையும் காஞ்சியும் என எண்ணிடத் தோன்றுகிறது. மதுரை மூதூரில், காஞ்சிப் படைவீரர்கள் அணிவகுக்கிறோம், திராவிட இயக்கப் பவள விழாவில்! என்பதை நினைக்கவே இனிக்கிறது.

மாங்குடி மருதனார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்காகப் பாடியதே மதுரைக் காஞ்சி!

பாண்டியன் தலைநகரம் பற்றிய ஒரு இலக்கியப் படப்பிடிப்பு அது!

பண்பாடு, வாழ்க்கை முறை, வளம், வீரம், கொடை, இப்படிப் பலவற்றையும் எடுத்துக் காட்டும் சங்கப் புதையல்களில் ஒன்றே மதுரைக் காஞ்சி!

பத்து பாட்டு வரிசையில் ஒரு முத்துப் பாட்டாக ஒளிவிடும் மதுரைக் காஞ்சியில் என்னையும், உன்னையும் கவர்ந்திடும் வரிகள் இதோ!

“வில்லைக் கவை இக் கணைதாங்கு மார்பின்
மா தாங்கு எறுழ்த் தோள் மறவர்...”

முழுமையாக இழுத்து வளைக்கப்பட்ட வில்லின் நாணில் இருந்து கிளம்புகிற கணையின் வேகம் சாதாரணமானதா? மலரம்பு போடுவதென்றால் வில்லை மெல்ல வளைத்து நாணேற்றி விடுக்கலாம். எதிரே நாணம் பெண்ணுருவில்

நிற்பதால்! மதுரைக் காஞ்சி குறிப்பிடுவது மலரம்பு அல்லவே! மரண அம்பன்றோ! அதனால் இயன்ற மட்டும் இழுத்துப் பிடித்து வளைக்கப்பட்ட வில்லில் இருந்து, கடுவேகமாகப் புறப்படும் அம்பின் வேகத்தைத் தாங்கும் மார்புடைய மாவீரன் - அதேபோல் புரவியைப் புயல் வேகத்தில் செலுத்தவும், வேண்டும்பொழுது பிடித்து நிறுத்தவுமான தோள் படைத்த பெருந்தீரன் - இவர்களை அழைத்து வருக என்கிறான் மன்னன்! பாண்டிய மண்ணுக்கு எத்தகைய வீரப்பண்பைப் பாராட்டும் பழக்கம் இருந்திருக்கிறது! பார்த்தாயா?

"எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண்,
பெரு நல் யானை போர்க்களத்து ஒழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்..."

நெருப்பு நடந்து செல்வதைப்போல பகைவரின் படைகளுக்கு நடுவே நடந்து செல்லும் வீரன் - நடந்து சென்றது மட்டுமின்றி, பெருத்த யானையை வெட்டி வீழ்த்தி - மார்பில் விழுப்புண் பெற்ற வீராதிவீரன் - அவனை அழைத்து வருக! இப்படி வீரத்திற்கு இலக்கணம் கூறுகிறது மதுரைக் காஞ்சி!

அதுமட்டுமா? காழ்மண்டு எஃக மொடுகளை அலைக்கலங்கி, பிரிபு இணை அரிந்த நிறம் சிதை கவயத்து என்ற வரிகளுக்குப் பொருள் என்ன தெரியுமா?

வீசப்பட்ட வேல்களுடன் அம்புகளும் இணைந்து நிலை குலைக்க முற்பட்டு, அதனால் பலவாகப் பிரிந்து நொறுங்கி, நிறம் மாறிய கவசமணிந்துள்ள வீரனைப் போற்றுவதேயாகும்!

"வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல
துஞ்சாக் கண்ணர் - அஞ்சாக் கொள்கையர்,
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த
நூல் வழிப்பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி
ஊர் காப்பாளர், ஊக்கருங் கணையினர்
தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக...."

என்று வீரர்களின் சிறப்புக் கூறி, தேர் வழங்கு தெருவில்நீர் திரண்டு ஒழுக! என மாங்குடி மருதனார், மழை பொழிந்ததைக் குறிக்கிறார் எனினும், நான் அதனை மதுரைத் தெருவில் மழை வெள்ளமென நீ திரண்டு அணிவகுத்திடுக என்றே அழைக்கிறேன்.

தேர் வழங்கு தெருவில் திராவிட வீரர் கால், நீர் திரண்டு வருக என்று!

விழுப்புண் பெற்றோர், வேல்பட்டோர், கணை தாங்கியதால் கவசம் நொறுங்கப் பெற்றோர், இவர்களுக்கு அழைப்பு மதுரைக் காஞ்சியில்!

இங்கே பார்! நமது காஞ்சி அண்ணன் கழகத்தினரை மாநாடு ஒன்றுக்கு அழைத்துள்ள உருக்கத்தை!

தம்பி, தமிழகத்தில் நாம் நடத்தும் மாநாட்டில் கடிலாக்கில் வந்திறங்கும் கனவான்கள் - கருத்த முகத்தினர் - வைரக் கடுக்கன் ஒளி விடுவதால் சிரித்த முகத்தினர் - காட்டிலாகா காண்ட்ராக்டர் - நல்ல பக்தர் - நாட்டுப்பட்டி மிட்டாதார் - அடுத்த முறை தேர்தலில் போட்டிபோட இப்போது அச்சாரம் கொடுக்க நாலைந்து சீமோட்டிகள் சூழவரும் சீமான், பூமான் இவர்கள் இருக்கமாட்டார். வரமாட்டார். நாம் விரும்பவுமில்லை. அதோ காலிழந்த கந்தசாமி, சிறுகடை வைத்துக் காலம் தள்ளி வந்தான். ஆறு குழந்தைகள். சொந்த வீடு கூடக் கிடையாது. ஏழை. ஆனால் கோழை அல்ல! எனக்கு எதுவுமில்லாமல் இருக்கலாம். என் தாய் மொழி நாதியில்லாமல் இருக்க விட மாட்டேன் எனக் கூறி இந்தியை எதிர்த்தான். அடக்கு முறையில் காலிழந்தான். இதோ வருகிறான். அவன் வரும் பாதையில் மக்கள் கண்ணீர் தெளித்து வணங்குகிறார்கள். நமது இலட்சியம் நிறைவேற காலோ, கையோ, கண்ணோ போனவர்களில் ஒருவனாக நான் இருக்க விரும்பவில்லை தம்பி! அப்படிப்பட்ட மாநாடு ஒன்று நடக்கும்போது, நான் காலிழந்து, கரமிழந்து வருவதைவிட, அந்த மாநாட்டைக் காண முடியாத நிலையில் உயிரிழந்தோன் ஆகிவிடவேண்டுமென விரும்புகிறேன். என் விருப்பம் நிறைவேறும் அளவிலும், வகையிலும் அடக்கு முறையை அவிழ்த்து விடும்படி ஆட்சியாளருக்கு சில ஏடுகள் இன்னும் பலமுறைத் தூபமிட வேண்டுமென விரும்புகிறேன். நம்மில் பலர் நெருப்பாற்றில் இறங்கிய பிறகுதான் நமது இலட்சியம் நிறைவேறும் என்பதை அறிந்து கொள்ளும் அளவுக்கு தம்பி! நான் படித்திருக்கிறேன்.

கண்ணைக் குளமாக்கும் அளவுக்கு அண்ணா 1960ல் குடியரசுத் தலைவருக்கு கறுப்புக்கொடி காட்டும் அறப்போராட்டத்திற்காக, தம்பிக்கு எழுதிய கடிதத்தின் இந்தக்

கருத்துகளையும் மதுரைக் காஞ்சியின் கவிதை வரிகளையும் ஒப்பிட்டு பார்க்கின், இலட்சியப் பிடிப்பு கொண்ட வீரர்தம் உள்ள உறுதி எப்படி இருந்திடல் வேண்டும் என்பதை உணர முடிகிறதன்றோ?

கண்ணும், காலும், கரமும் இழந்தால் மட்டும் போதாது, கழகம் கொண்டுள்ள இலட்சியம் நிறைவேற உயிரையும் இழக்க வேண்டுமெனில், அதற்கும் தயாராக இருப்போரே என் தம்பிமார்கள் என்று மட்டுமல்ல! ஏன் - நானே கூட! என அறைகூவல் விட்டு அழைத்த அருமை அண்ணன் இன்றில்லை!

ஆனால் அந்த அண்ணன் கொண்டிருந்த கொள்கை உறுதியின் வடிவமே, நாம் ஒவ்வொரு உடன்பிறப்பும் என மார்தட்டிக் கூறியவாறு காஞ்சிப் படைவீரர்கள் நாம், மதுரைக் காஞ்சி ஒலித்திட்ட மாநகர் நோக்கிப் புறப்படுவோம்!

மதுரைக் காஞ்சி! ஆம்! மதுரையில் காஞ்சி காண்போம், வா!

அன்புடன்,

மு. க.

(18-12-1991)

1845. திரும்பிப் பார் - முன்னேறு!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கத்திற்கு 75ஆம் ஆண்டு நிறைவுற்று - மதுரையில் பவளவிழா மாநாடு நடத்தப்படுகிறது எனும் செய்தி, நமதியக்க உடன்பிறப்புகளுக்கு எத்துணை ஆர்வத்தை உருவாக்கியிருக்கிறது என்பதற்கு அடையாளமாக, சில நாட்களுக்கு முன்புதான் கள்ளக்குறிச்சி வடக்கநந்தல் நெடுமாறன் 1946ல் நடைபெற்ற மதுரை கருப்புச் சட்டை மாநாடு பற்றி எழுதியுள்ள குறிப்புகளை என் கடிதத்தில் இணைத்திருந்தேன்.

இதுபோன்ற பழங்காலத்து இயக்க நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களைத் தருவதற்கு நமது உடன்பிறப்புகள் எப்படிப் போட்டி போட்டுக்கொண்டு எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள் என்பதற்கு இதோ மற்றொரு எடுத்துக்காட்டு.

ஈரோடு நகரம் 19வது வட்ட கழகச் செயலாளர் நடேசன் என்ற உடன்பிறப்பு காஞ்சி மணிமொழியார் நடத்திய போர் வாள் எனும் கழக வார இதழில் 1.10.1949இல் இருண்ட வீட்டில் ஏற்றப்பட்ட ஒளிவிளக்கு தி.மு.க. என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரை வெளிவந்த இதழை எனக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இன்னுமொரு முக்கியமான வரலாற்றுத் தகவலை, இன்னொரு உடன்பிறப்பு அனுப்பியுள்ளார்.

1989ல் கழக ஆட்சியில் பெண்களுக்கும் சொத்தில் சமபங்கு என்று சட்டப்பேரவையில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியபோது, 1929ஆம் ஆண்டு பெரியார் முன்னின்று நடத்திய செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டு தீர்மானத்தை, அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு இன்று சட்டமாக நிறைவேற்றுகிறோம் என்று மகிழ்ச்சி பொங்க நான் தெரிவித்ததை நீ மறந்திருக்கமாட்டாய்.

அந்தச் சுயமரியாதை மாநாட்டில் இதுபோன்ற எத்தனையோ முற்போக்கான கருத்துடைய எழுச்சி மிகு புரட்சித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்த மாநாட்டுக்குத் தலைவர் யார் தெரியுமா? மதுரை பவள விழா மாநாட்டுக்கு சௌந்திரபாண்டியனார் நகர் என்று பெயர் வைத்திருக்கிறோமே! அந்த பகுத்தறிவுப் பாண்டியனார்தான் 1929 செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைவர்.

பவள விழா மாநாட்டுக்கு பி.டி. ராஜன் பந்தல் எனப்பெயர் சூட்டியிருக்கிறோமே! அந்த ராஜன்தான் செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்தவர்.

மாநாட்டுத் திறப்பாளர் அப்போது சென்னை மாகாண முதல்வராக இருந்த டாக்டர் சுப்பராயன்!

அந்த மாநாடு பற்றி சிறு குறிப்பும், அதன் தொடர்பான சில செய்திகளும், மாதிரி வரைபடமொன்றும் அடங்கிய கடிதமொன்றை வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூர் கி. வீரமணி என்கிற ஞானதீபன் எனக்கு அனுப்பியுள்ளார்.

இந்த உடன் பிறப்பு எனக்கு அடிக்கடி கடிதம் எழுதக்கூடியவர். அவர், மதுரை பவளவிழாவையொட்டி எழுதியது இதோ :-

> பேரன்புக்குரிய கலைஞர் அவர்களின் பார்வைக்கு!
> அன்புடையீர், நல்வணக்கங்கள். திராவிட இயக்கப் பவள விழா நடைபெற இருக்கும் இத்தருணத்தில், எங்கள் இல்லத்தில் இருக்கும் நூல்களின் பழந்தொகுப்பிலிருந்து ஒரு படத்தினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். செங்கற்பட்டில் 1929ஆம் வருடம் பிப்ரவரி 17, 18 தேதிகளில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டிற்கென உருவாக்கப்பட்ட தியாகராயர் நகரம் முகப்புப் பந்தல் அலங்கார அமைப்பைக் கொண்ட படம் இது.
>
> 1940-1945 கால கட்டத்தில் சென்னை மாவட்ட சுயமரியாதை இயக்க நிர்வாகிகள் (தலைவர் - புலவர் செல்வராஜ், துணைத்தலைவர்கள் - டி. பெரியசாமி, ஏ.ஏ. கபாலமூர்த்தி, செயலாளர் - எம்.எஸ். முத்து, இணைச் செயலாளர்கள் - எம். குப்புசாமி, எம். கிருஷ்ணன்,

பொருளாளர் - என்.வி. நடராசன்) உபயோகித்த லெட்டர்பேட் நகலையும்கூட அனுப்பியுள்ளேன்.

அவர்கள் எழுதும் கடிதங்களை உறையிடப் பயன்படுத்திய உறை (Cover)களின் மேலே ஒரு பகுதியில் பெரியார், அண்ணா, புரட்சிக்கவிஞர் ஆகிய மூவரின் படங்களில் ஒன்று அச்சிடப்பட்டு அதில் முகவரி எழுதும் பகுதிக்கு மேல்; கலைஞர் எழுதிய கவிதை வரிகளை வைர வரிகளாகப் பின்வருமாறு குறித்துள்ளனர்.

பெரியார் படத்தின் வலது புற மேல் பாகத்தில் பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம் - ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்! (மு.க.) என்றும், அண்ணா படத்திற்கருகே துடுக்குமிகக் கொண்டலைந்த துணிவு மிக்க ஆரியந்தான் அடுக்குச் சொல் அண்ணாவால் அலறித்தான் சாகுதடா! (மு.க.) என்றும், பாவேந்தர் படத்தருகே, புன்னகையா? புதுக்கருத்தா? புரட்சிக் கனலா? என்ன வேண்டும், எல்லாம் உண்டு எங்கள் கவிஞன் வாழ்க! (மு.க.) என்றும் இருக்கும்.

1936ல் தான் சுயமரியாதை இயக்கமே தொடங்கப்பட்டதென்றும் 1950 வரையில் கலைஞர் திராவிட இயக்கத்தையே அறிய மாட்டார் என்றும் பல கட்சிகள் மாறிப் பிதற்றித்திரியும் பெரியவர்கள் (?) சிலருக்கு, சிந்தனைத் தெளிவு ஏற்படுத்தவே இக்குறிப்புகளைத் தந்துள்ளேன்.

சென்னை மாவட்ட சுயமரியாதை இயக்க இணைச் செயலாளர்களில் எம். கிருஷ்ணன் என ஒரு பெயர் குறிப்பிட்டிருக்கிறதே! அவர் எனது தந்தையார். 1971ல் அவர் பொதுத் தேர்தலில் கழகத் துணை ஆய்வுக்குழு உறுப்பினராக செங்கை மாவட்டக் குழுவில் பணியாற்றியவர். இன்றும் திருப்பத்தூரில் பணியாற்றுவதை தாங்கள் அறிவீர்கள். அவரைப் பற்றியும், எங்கள் நூலகம் பற்றியும் பேராசிரியர் அவர்களிடம் அறியலாம். என்னைத் தாங்கள் அறிவீர்கள்.

நாட்கள் குறைவாக உள்ள நிலையில் - நேரமில்லா நிலையில் - அவசரமாக எழுதுகிறேன்.

பவள விழா சிறப்பு அழைப்பு எனக்குக் கிடைக்குமா? ஏனெனில் இளம்பிள்ளை வாதத்தினால், வெளியில் தெரியாத வகையில் லேசான கால் ஊனமுற்றவன் நான் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

மிக்க அன்புடன்

கி. ஞானதீபன் (வீரமணி)*

உடன்பிறப்பே, பார்த்தாயா நமது பகுத்தறிவு இயக்கத்தின் பாசமிகு உடன்பிறப்புகள் எங்கெல்லாம் பரவிக் கிடக்கிறார்கள் என்பதை!

அவர்தம் உடலில் சிறு ஊனமிருக்கலாம்! உள்ளத்தில் அந்த ஊனமில்லையே! உறுதியன்றோ நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்கிறது!

சலனத்திற்கும், சபலத்திற்கும் ஆட்படாமல் அதிகார வெறி, அடக்குமுறைகளுக்குப் பணியாமல் இத்தகையோர் இலட்சக்கணக்கில் இருக்கின்றனர் - இவர்களின் உடன்பிறப்பாக நான் இருக்கின்றேன் என்று நினைக்கும்போது, ஏ, அப்பா! எத்துணைப் பெருமிதம் எனக்கு!

62 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது - 1929ல் செங்கற்பட்டில் சுயமரியாதை மாநாடு! வெள்ளுடைவேந்தர் - திராவிட இயக்கத்தின் தன்மானச் சுடர் தியாகராயர் பெயரால் மாநாட்டுக்கென அழகிய பந்தல்! தியாகராயர் நகரமென்று!

இப்போது நான் 69வது அகவையையும், எனது அன்புச் சகோதரர் இனமானப் பேராசிரியர் அவர்கள் 70வது அகவையையும் தொடங்கிடும் கால கட்டத்தில் திராவிட இயக்கம் கண்டவர்களை, காத்தளித்தவர்களை, கண்துஞ்சாது பாதுகாத்தவர்களை, வளர்த்தவர்களை - நினைவு கூர்ந்து, நன்றி காட்டுவதோடு, அவர்கள் விதைத்த உணர்வை, மனதில் பதித்து நம் பயணம் தொடரத்தான் மதுரையில் பவள விழா மாநாடு!

மாநாட்டுக்கு அழைப்பிதழ் வருமா என ஞானதீபன் கேட்டுள்ளார்.

வரவேற்புக்குழுத்தலைவர் பொன். முத்துராமலிங்கத்திற்கு இனி நான் தெரிவித்து, அவர் அழைப்பிதழ் அனுப்புவது என்பது இயலாத காரியம்!

அன்பில் அழைக்கின்றார் என்று திருச்சி மாநில மாநாட்டுக்கு அண்ணா அழைத்துத் திராவிட நாடு இதழில் மடல் தீட்டியது போல, முத்துராமலிங்கம் அழைக்கின்றார் என்று அவர் சார்பில் நானும் அழைக்கின்றேன். இந்த ஒரு உடன்பிறப்பை மட்டுமல்ல. என்னுயிரினும் மேலான உடன்பிறப்புகள் அனைவரையும்! திரும்பிப்பார்! முன்னேறு! என்ற முழக்கத்துடன் அழைக்கின்றேன்!

அன்புடன்,

மு. க.

(20-12-1991)

1846. காவல் துறையும் - கடமை உணர்வும்!

உடன்பிறப்பே,

மதுரையைக் குலுங்கச்செய்து விட்டாய்! மகிழ்கிறேன்! மழை பொழிந்து வெள்ளம் பெருகுவது போல், விழாக் கோல வீதிகளில் திரண்டு வருக என மாங்குடி மருதன் எனும் சங்கப் புலவனின் பாட்டுவரிகளை நினைவுபடுத்தி எழுதியிருந்தேன். ஆனால் நீ திரண்டு பெருகி வந்த எழுச்சியை, உவமை காட்டி எழுத, இன்னுமொரு முறை அந்த மாங்குடி மருதனேயன்றோ, பிறந்து வரவேண்டும்!

திராவிட இயக்கப் பவள விழாப் பேரணியையும், இருநாள் மாநாட்டையும் நடத்த விடாமல் எத்தனையோ தடை முயற்சிகள்!

விடுதலைப்புலிகள் மாநாட்டுக்குள் ஊடுருவி, மதுரைநகரில் பரவி, மாநில முழுதும் படையெடுப்பார்கள் எனும் ஒரு கற்பனையைக் காவல் துறையினர் திரைப்படக் கனவுக் காட்சி போலப் படம் பிடித்துக்காட்டி, திடுக்கிட வைத்தது மட்டுமல்ல. மதுரை மாநகராட்சியினர் மாநாட்டுக்கு தமுக்கம் திடல் தருவதையும் தடுத்திட வைத்தனர். இது என்ன அநியாயம்! முதலில் தமுக்கம் மைதானத்தைத் தருவதாக வாய்மொழியாக உறுதி அளித்து விட்டு - இடையில் சில நாட்களே இருக்கும்போது இல்லை என எழுத்து மூலம் அறிவிக்கிறீர்களே எனக்கேட்ட போது, நாம் என் செய்வோம் - மேலிடத்து உத்தரவு அப்படி! என கைவிரித்துக் காட்டினர். மாநாடு நடந்தே தீரும் என வரவேற்புக் குழுத் தலைவர் பொன். முத்துராமலிங்கம் சூளுரைத்து அறிக்கை விடுத்தார். சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திட ஏற்பாடுகள் கழகச் சார்பில் முனைப்பாக செய்யப்பட்டன. அதற்கிடையில் திடீரென மாநாட்டுக்கான அனுமதியை - முதலில் இல்லை என்றோர் - வழங்குவதாக அறிவித்தனர். வழங்கினர். வழங்கிய பிறகும் எத்தனையோ இடையூறுகள்!

வரவேற்பு வளைவுகள் அங்கே போடாதே, இங்கே போடாதே என்று காவல்துறையினர் அலைக்கழித்திருக்கிறார்கள். மாநாட்டுக்கு மின்சாரம் பெற முன்பணமாக குறிப்பிட்ட தொகை கட்டப்பட்டிருந்தும்கூட, இரண்டாம் நாள் மாநாட்டன்று மேலும் பத்தாயிரரூபாய் கட்டினால்தான் மின் இணைப்பு தொடரும் இல்லையேல், துண்டிக்கப்படுமென மிரட்டியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து, மாநாட்டு நிர்வாகிகள் மிகுந்த சிரமத்தையேற்றுக் கொண்டு, மாநாட்டை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக நடத்திக் காட்டிவிட்டனர்.

அதிகார வர்க்கத்தினரைக் கொண்டு அளிக்கப்பட்ட தொல்லைகள் போதாதென்று - ஆழ் கடல் பொங்கி, அலைகள் விரித்து வருவது போல், தானாகவே வந்து தமிழ்க்குலம் மதுரை வீதியில் நடத்திய பேரணியின் அழகும், அமைதியும், ஆர்வமும் காணச் சகிக்காதவர்கள், திராவிட இயக்கப் பவள விழா ஆயிற்றே என்றும் நினைக்காமல், திராவிட என்னும் சொல்லைத் தமது கட்சிக்குள்ளும் தெரிந்தோ, தெரியாமலோ திணித்து வைத்துள்ளோமே என்கிற சிந்தனையுமில்லாமல் - பெரும் அமளி விளைத்திட முனைந்து சிறு சலசலப்புடன் அடங்கிப் போனார்கள். பேரணிமீது சோடா புட்டிகள், கற்கள் வீசி எழுச்சியைக் குலைத்துவிடலாமென்று எண்ணியவர்களின் திட்டத்தைத் தடுத்து நிறுத்தி, அமைதியை உருவாக்கிட மாநாட்டு நிர்வாகிகள் அரும் பாடுபட்டனர்.

இவ்வளவு பெரிய மாநாட்டுக்குக் காவல் துறையினர் செய்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், கடலில் பெருங்காயம் கரைத்த கதையாகத்தான் இருந்தது. இதை நான் சொல்வதைவிட மதுரையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகையின் செய்தியில் ("Police estimate") போலீஸ் போட்ட கணக்கு எனும் துணைத்தலைப்பில் பின்வருமாறு எழுதியுள்ளதைப் படித்தாலே போதும்.

"It is evident that the police intelligence had not properly assessed the situation. The police probably estimated that the crowd would be around 15,000 to 20,000; but were surprised to find it was more than a lakh and much more than what was normally seen during Chitrai festival. The number of police personnel was far less than used to be present at the time of Chitrai festival."

உடன்பிறப்பே, என்ன சொல்கிறார்! மதுரை இந்துவின் சிறப்புச் செய்தியாளர்!

பவள விழா மாநாட்டுக்கு பதினைந்தாயிரம் முதல் இருபதாயிரம் பேர்தான் வருவார்கள் என்று காவல்துறையினர் கணக்கிட்டிருந்தார்களாம். ஆனால் ஆச்சரியப்படும்படியாக, லட்சம் பேருக்குமேல், ஏன் - அதற்கும் மேல் சித்திரைத் திருவிழாவுக்கு வரும் கூட்டத்தைவிட, அதிகமாக மாநாட்டுக்கு மக்கள் கூடிவிட்டார்களாம். ஆனால் சித்திரை திருவிழாவுக்கு பாதுகாப்பு தரும் எண்ணிக்கையைவிட மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் மாநாட்டுக் கூட்டப் பாதுகாப்புப் போலீசார் இருந்தார்களாம்.

இப்படி இந்து எழுதுகிறது - அதுவும் மதுரைப் பதிப்பில் மட்டும் - குறைவான எண்ணிக்கைதான் காவல்துறையினர் என்று!

அந்தக் குறைவான எண்ணிக்கையினரும் என்ன செய்தார்கள்? குழப்பம் விளைவித்து, பேரணியின் எழுச்சியைக் குலைக்கத் தூண்டிவிடப்பட்ட குண்டர்களுடன் இணைந்து கொண்டு, கழகக் கண்மணிகளின் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்து குதூகலித்தார்கள்! கழகத்தினர் நூறு பேரைக் கைது செய்தார்கள்!

நமது ஊர்வலமென்றாலும் - அதில் கலாம் விளைவிப்பவர்களுக்குக் காவல்துறையினர் துணை போகிறார்கள்!

ஆளுங்கட்சி நடத்தும் எம்.ஜி.ஆர். நினைவு மௌன ஊர்வல மென்றாலும் - அவர்கள் நடத்திய வன்முறை வெறியாட்டங்களுக்கு மதுரைப் போலீசார் துணை போயிருக்கிறார்கள்!

மாநாட்டையொட்டி கட்டப்பட்டிருந்த கழகக் கொடித் தோரணங்களை, அறுத்து எரிப்பதற்கென்றே முன் கூட்டித் திட்டமிட்டு எடுத்து வந்த ஆயுதங்களைக் கொண்டு ஆளுங்கட்சியினர் கழகக் கொடிகளை அறுத்த போதும், எரித்த போதும், வழியில் உள்ள கடைகளை சூறையிட்ட போதும், காவல்துறையினர் கைகட்டி ரசித்து வேடிக்கை பார்த்திருக்கின்றனர்.

எம்.ஜி.ஆர். நினைவு மௌன ஊர்வலத்திலா? இப்படி வன்முறையா? இதற்குப் பெயர் துக்கம் கடைப்பிடிக்கும் செயலா? என்று கேட்கத் தோன்றும்!

எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்கையாக மறைந்த போது சென்னையில் உள்ள கடைகள் எல்லாம் சூறையாடப்பட்டு, கோடிக்

கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கொள்ளையிடப்பட்டு, என் சிலை திட்டமிட்டு உடைக்கப்பட்டு, அ.தி.மு.க.வினர் துக்கம் கொண்டாடியபோதும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போலீசார்தானே! இப்போதும் மதுரை மௌன ஊர்வலச் சேட்டைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

என் செய்வது? கர்நாடகத்தில் அடிபட்டு, உதைபட்டு, வீடு, வாசல், மாடு, மனை பறிக்கப்பட்டு, தமிழர்கள் ஓடிவந்து கொண்டிருக்கிறார்கள். நேற்றுக்கூட பெரியார் மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தியும், முன்னாள் சட்டமன்ற கழக உறுப்பினர் சுப்புவும் என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமிழகக் கர்நாடக மாநில எல்லையெனப்படும் சத்தியமங்கலம், தாளவாடி போன்ற பகுதிகளில் கன்னட மொழிக்காரர்கள், தமிழர்களைத் தாக்கி விரட்டுகிறார்கள். குழந்தைகளைத் தூக்கி நெருப்பில் வீசுகிறார்கள். எல்லையற்ற வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்று வேதனையுடன் சொன்னார்கள். அதுபற்றி தமிழக முதல்வருக்கும் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

நானும் உடனடியாகக் காவல்துறைத் தலைமை இயக்குனரைத் (டி.ஜி.பி.) தொடர்பு கொண்டு, நிலைமைகளைத் தெரிவித்தேன். அவரும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், மேலும் தீவிரப்படுத்துவதாகவும் என்னிடத்தில் கூறியிருக்கிறார்.

பிற நாடுகளில் - பிற மாநிலங்களில் தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை! நாயினும் கீழாய், நலிந்து போய்க் கிடக்கும் அந்தத் தமிழர்களைக் காத்திட, ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டிய நேரத்தில், இங்குள்ள தமிழர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதிலேயே தனி இன்பம் காணும் நிலைமை!

இங்குள்ள தமிழர்களை, தமிழர்களுக்காகக் குரல் எழுப்புகிறவர்களைத் தாக்கித்தகர்க்கும் தமிழனும் தன்னைத் தமிழினம் எனக் கூறிக் கொள்ளுதல் வெட்கக்கேடு அன்றோ?

இதனை இந்த இனம் உணரும் நாள்தான் என்றோ?

இதுவரை கர்நாடக மாநிலத்துக்குள்ளிருந்த தமிழர்களைத் தாக்கினார்கள். இன்னும் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தமிழ் நாட்டு எல்லையோரம் இருக்கும் கன்னடர்கள், தமிழர்களைத் தாக்கத் தொடங்கிவிட்டார்கள் என்றால்,

நாம் அமைதியை விரும்புவதற்குப் பெயர் கோழைத்தனம் - என்று அவர்கள் கருதிக் கொண்டு விட்டார்களா?

அவர்களின் அந்தக் கருத்து தவறு என்பதை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தைத் தமிழர்களுக்கு உருவாக்க முனைகிறார்களா?

அமைதியை மற்ற மாநிலக்காரர்களுடன் மட்டுமல்ல, இந்த மாநிலத்திற்குள்ளும் விரும்புகிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

எனவே, காவல்துறை தனது கடமையுணர்ந்து நடுநிலை நியாயத்தைக் கடைப்பிடித்து நடந்து கொள்வதே நலம்!

இங்குள்ள காவல்துறை மட்டுமல்ல! கர்நாடகத்தில் தமிழர்களுக்கெதிரான கிளர்ச்சியிலும் கூட, அங்குள்ள காவல்துறை அமளிக்குத் துணை போனால்,

“மொத்தத்தில் பாழ்படப் போவது
சட்டமும், ஒழுங்கும், சமுதாய
அமைதியும்தான்!”

எனவே, இங்கு எதிர்க்கட்சிகளை ஒழிப்பதிலும் - அங்கு தமிழர்களை ஒழிப்பதிலும் - காவல்துறையினர் தமது பங்கினையும் செலுத்துவது ஒரு ஜனநாயக நாட்டுக்கு - ஒருமைப்பாட்டுக்கு - ஒற்றுமைக்கு - உகந்த செயல்கள் ஆகமாட்டா!

அன்புடன்,

மு. க.

(26-12-1991)

1847. கர்நாடகத் தமிழரைக் காத்திட அணிவகுப்போம்!

உடன்பிறப்பே,

கர்நாடகத்தில் மேலும் பல ஊர்களில் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப்படுத்திக் கொண்டே அந்த மாநில முதல்வர், கர்நாடகம் இப்போது அமைதியாக இருக்கிறது என அறிக்கை விடுகிறார்.

தங்களுக்கு ஒரு மாநிலத்தில் பாதுகாப்பு இல்லை என்று மக்கள், இடம் பெயரும் நிலைமை துரதிர்ஷ்டவசமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் கூறியுள்ளார்.

தமிழக அரசு அளித்துள்ள விபரப்படி, இதுவரை 25000-க்கு மேற்பட்ட தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து தப்பி ஓடித் தமிழகம் வந்துள்ளனர். அவர்களில் 12000 பேர், உதவி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் சாம்ராஜ் நகர், கொள்ளேகல், குண்டல் பேட்டை, தி. நரசபூர் ஆகிய தமிழர் வாழும் பகுதிகளில் தொடர்ந்து அமளியும், பதற்றமும் இருப்பதாக தமிழக முதல்வர், டெல்லியில் உள்ள பிரதமருக்கு தெரிவித்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது.

தமிழகத்தில் ஏதேனும் எதிர் விளைவு இருக்கக் கூடுமென எதிர்பார்த்து, எச்சரிக்கையாக சுமார் 400 கன்னடர்கள் கர்நாடகம் சென்றனர் என்றும், அவர்களிலும் பலர், மீண்டும் தமிழகம் திரும்பி விட்டனர் என்றும் தமிழக அரசு செய்திக் குறிப்பு அறிவிக்கிறது.

உடன்பிறப்பே, நான் தலைமைக் கழக சார்பில் நேற்று விடுத்திருந்த அறிக்கையையும், அந்த அறிக்கையைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், இத்திங்கள் 31-ஆம் நாளன்று மாநில முழுவதுமுள்ள மாவட்ட ஆட்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகங்களின் முன்னால் நமது கழகத்தினர்

அமைதியான முறையில் கண்டன ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டுமென்று விடுத்துள்ள, கன்னட வெறியர்களின் செயலுக்கு எதிரான அறவழிப் போராட்ட வேண்டுகோளையும் படித்திருப்பாய்!

தமிழகத்தைச் சுற்றியுள்ள கர்நாடக எல்லைப் பகுதிகள் அனைத்திலும் - கன்னட வெறியர்கள், கலாம் விளைத்து தமிழர்களின் உடைமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுத்தி வருகின்றனர்.

அந்த எல்லைப் பகுதிகளில் உள்ள நமது கழக அமைப்புகளின் நிர்வாகிகள், மிகுந்த பதற்றமுடன் செய்திகளைத் தொலைபேசி வாயிலாகத் தெரிவிப்பதுடன், அவர்களால் இயன்ற அளவு - பாதிக்கப்பட்டு வரும் தமிழ்க் குடும்பங்களுக்குப் பரிவு காட்டியும் வருகின்றனர்.

அடிபட்டு வருகிறவர்களுக்கு மருந்தளித்தல் - சிகிச்சை செய்தல் - உணவு வழங்குதல் - இவையனைத்தும் ஓரளவு ஆறுதலை அவர்களுக்கு வழங்குமெனினும், இந்த வன்முறைத் தாக்குதல், கர்நாடகத்தில் தமிழர்கள் மீது இனியும் தொடராமல் உடனடியாக நிறுத்தப்பட மத்திய அரசு, தக்க நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். மாநில அரசும், இன்னும் தீவிரமாக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைய வேண்டியது என்பது தவிர்க்க முடியாத கட்டாயம்.

அப்படியொரு மன்றம் அமைந்து, அதன் இடைக்கால நிவாரண ஆணையும் வந்த பிறகும் - தாமதமாக எனினும், மத்திய அரசு அதனை அரசிதழில் வெளியிட்ட பிறகும் - நடுநிலை நியாயத்திற்குக் கட்டுப்பட மாட்டோம் என்று கூறி,

இங்குள்ள தமிழர்கள் தண்ணீர் கேட்டதற்கு - அங்குள்ள தமிழர்களைச் செந்நீரிலும், கண்ணீரிலும் மிதக்க விடுவது என்பது காட்டுமிராண்டிக் காலத்துக் கொடுமையல்லவா?

எனவே உடன்பிறப்பே, மனித நேயத்திற்காவது மதிப்பளியுங்கள் என கர்நாடக அரசை வலியுறுத்துவதற்கும்,

அதற்கு மதிப்பளிக்காமல் அங்குள்ள வெறியர்கள், தமிழ் மாந்தரை வேதனை நெருப்பில் தள்ளிக் களிக்கும் அநியாயத்திற்குக் கண்டனம் தெரிவிப்பதற்கும்,

இனியும் பாராமுகம் வேண்டாம்! உடன் தமிழர்களுக்குக் கர்நாடகத்தில் பாதுகாப்பு அளித்திடுக! என மத்திய அரசை வற்புறுத்துவதற்கும்,

மாநிலத்தில் இங்குள்ள அரசு, இதுவரை எடுத்துள்ள முயற்சிகளை விட, மேலும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு, கர்நாடகத் தமிழர்களைக் காப்பாற்ற முன்வரவேண்டுமெனக் குரல் கொடுப்பதற்கும்,

இம்மாதம் 31-ந் தேதி நடைபெறும் அமைதி வழி - அறவழி ஆர்ப்பாட்டங்கள் பயன்பட வேண்டும்.

முன்கூட்டியே அந்தந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகளுக்கு தெரிவித்துவிட்டு, குறிப்பிட்ட இடத்திலிருந்து ஊர்வலமாகக் குறிப்பிட்ட அலுவலகங்களுக்கு முன்னர் சென்று நின்று, கழகத்தின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றி -

தலைமைக் கழக வேண்டுகோளை நிறைவேற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(28-12-1991)

1848. இனியும் உறங்கிடுவோரை விழிப்புறச் செய்திடுக!

உடன்பிறப்பே,

கடந்த கால ஆட்சியில் ரயில் கட்டணம் உயர்வு, பஸ் கட்டணம் உயர்வு, அரிசி விலை உயர்வு, எனவே இந்தத் தேர்தலில் இ. காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்தால் நூறு நாட்களுக்குள் விலைவாசியைக் குறைப்போம் - எல்லாக் கட்டணங்களின் கடுமையையும் அகற்றுவோம் - என விண்ணதிர, இந்த மண்ணதிர முழக்கமிட்டவர்களின் வாய் வீச்சை நம்பி, வாக்காளப் பெருமக்கள் வரிசை வரிசையாக நின்று, வாக்குகளை அந்தக் கூட்டணிக்கு வாரி வழங்கினார்கள் அல்லவா! அதன் பலனை இதோ ஆறு மாதங்களுக்குள்ளேயே அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர்.

மலிவு விலை மதுவை ஒழித்து விட்டேன் பார் என மார் தட்டிக்கொண்டு, கள்ளச் சாராயத் தொழில் வளரக் கதவு திறந்து விட்டு வேடிக்கை பார்க்கும் ஒரு சாதனையைத் தவிர, வேறு என்ன சாதனையை நிகழ்த்தியிருக்கின்றனர்?

அரசியல் எதிரிகளை எப்படிப் பழி வாங்கலாம் என்று சிந்திக்கும் வேலையைத் தவிர, எத்தனை பெருந்திட்டங்களைத் தமிழக வளர்ச்சிக்காக உருவாக்கிட முனைந்துள்ளனர்?

விலைவாசி குறைந்ததா? இல்லை! அது நிலைகுலைந்து ஏழைகளின் நெஞ்சைப் பிளந்து வயிற்றில் கட்டாரிகளைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது!

அந்த வலி தாங்க முடியாமல் ஏழைகள் கதறும் போது - அவர்கள் தலையில் பஸ் கட்டண உயர்வு, ரயில் கட்டண உயர்வு என்று பாறாங்கற்களால் வேறு மோதிக் கொண்டிருக்கிறார்கள்!

நடுத்தர மக்களும் நலிவுற்றுப் போகுமளவுக்கு மின்கட்டண உயர்வு - வரி - என்று பல்வேறு திசைகளிலும் தாக்குதல்!

மத்திய அரசு அரிசி விலையை உயர்த்துகிறதாம் - மாநில அ.தி.மு.க. அரசு குய்யோ - முறையோ எனக் கூச்சல் போடுகிறது!

ஏன்? இவர்கள் இருவரும்தானே கோரஸ் பாடிக்கொண்டு - மக்களிடம் வாக்குறுதிகளை வழங்கி, வாக்குகளைப் பெற்றார்கள்!

மத்திய அரசு அரிசி விலையை உயர்த்திய போதெல்லாம், மாநிலத்தில் தி.மு.க. அரசு அரிசி விலையை உயர்த்திவிடவில்லையே!

இப்போது மட்டும் நாங்களும் அரிசி விலையை உயர்த்த வேண்டி வரும்! என்று மாநில அரசு மாய்மாலக் கண்ணீர் சொரிவானேன்?

மக்களின் வாழ்வுடன் ஒட்டிக் கிடக்கும் இதுபோன்ற பிரச்சினைகளைத் திசை திருப்ப - கச்சத் தீவை மீட்கிறேன் என்பது! தடாவைத் துஷ்பிரயோகம் செய்து மிரட்டிப் பார்ப்பது! எத்தனை நாளைக்கு இந்தத் திசை திருப்பும் தந்திரங்கள் எடுபடும்?

வெள்ளப்பாழ் தமிழகத்தின் பெரும் பகுதியை வீணடித்து வேதனை பெருக்கெடுக்கச் செய்ததே! உரிய நிவாரணம் உண்டா? உதவிகள் முறையாகப் போய்ச் சேர்ந்ததுண்டா?

மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் துன்ப துயரங்களுக்கு ஒரு முதலமைச்சர் ஆறுதல் கூறிட, நேரில் சென்றிடும் வழக்கமாவது கடைப்பிடிக்கப்பட்டதுண்டா? இல்லையே!

கேட்டால், போலீசார் அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று முதலமைச்சர் தொலைக்காட்சி மூலம் அறிவிக்கிறார்!

ஆயிரக்கணக்கான மக்களை நேரில் கண்டு ஆறுதல் கூற; காவல்துறை அனுமதிக்கவில்லை - ஆனால் அதே காவல் துறைதான் இப்போது மட்டும் ஒரே ஒரு தனிநபருக்கு முதல்வர் ஆறுதல் கூறிவிட்டுத் திரும்ப மன்னார்குடி வரையில் அனுமதி அளிக்கிறது! சாலைகளில் பரப்பிய நெற்கதிர்கள் மறைந்த மாயம் தெரியவில்லை என ஏடுகள் வியக்கின்றன! அந்த அளவு பாதுகாப்பில் சுறுசுறுப்பானவர்கள் நமது காவல்துறையினர் என்பது உலகிற்கு உணர்த்தப் பட்டிருக்கிறது!

கர்நாடகத்தில் தமிழர்கள் வதைபடும் போது, மதுரையில் திராவிட இயக்கப் பவள விழாவா என மாண்புமிகு ஒருவருக்குக் கேட்கத் தோன்றுகிறது! அந்தப் பவள விழாவிலும் கழகம், கர்நாடகத் தமிழர்களுக்காகவும்தான் குரல் கொடுத்தது என்பதை அனைவரும் அறிவர்! கர்நாடகத் தமிழர்கள் வதைபடும்போது, லட்சக்கணக்கான ரூபாய் செலவில் விளம்பரம், வரவேற்பு இத்யாதிகளுடன் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்று பட்டம் பெற்று பரவசமுற்றவரின் பாதந் தாங்கிகள்,

பரிதவிக்கும் மக்களின் பிரச்சினைகளை மறக்கச் செய்வதற்காக - ஏதேதோ பேசுகிறார்கள்! தோத்திர விளம்பரங்கள் தொகை தொகையாக! அகவிலையேற்றத்தால், கட்டண உயர்வால், அன்றாட வாழ்வே சிக்கலாகி ஆத்திரமுற்று நிற்கும் மக்களை இந்த விளம்பரங்களால் ஏமாற்றி விட முடியாது!

தேர்தல் நேரத்தில் அளித்திட்ட வாக்குறுதிகள் என்ன ஆயின? என மக்கள் கேட்கத் தொடங்கி விட்டனர். அதற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு இ. காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணிக்கு உண்டு!

சமாளித்து மழுப்பலாம் என்று எண்ணுவதும், பேசுவதும் இறுமாப்பின் அடையாளமாகத்தான் இருக்கும்!

தொடர்ந்து மக்களை ஏமாற்றலாம் என்று காங்கிரஸ் கட்சியும், அ.தி.மு.க. கட்சியும் கனவுகாண வேண்டாம்!

உடன்பிறப்பே, பிரச்சினைகளை திசை திருப்ப ஊரை ஏமாற்றும் இ. காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணியின் உண்மை உருவத்தை ஊர் ஊராகச் சென்று விளக்கிட வேண்டியதும், இனியும் உறங்கிடுவோரை விழிப்புறச் செய்ய வேண்டியதும் உன் பொறுப்பு! ஆற்றுக அக் கடமையை!

அன்புடன்,

மு. க.

(30-12-1991)

1849. ஆளுநர் மாநாடும், அறிவுரைகளும்!

உடன்பிறப்பே,

ஆளுநர்களின் மாநாடு புதுடெல்லியில் நடந்தபோது, குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்கள் அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம், நாணயம், நெறிமுறைகள் பற்றி அறிவு மணக்கும் கருத்துகளைக் கூறி, கொள்கைப் பிடிப்போ, இலட்சியமோ இல்லாத பதவி வெறியர்களை ஊக்கப்படுத்தக் கூடாது என்ற கருத்தமைந்த அரியதோர் உரையினை நிகழ்த்தியிருக்கிறார்.

அவரது உரையளவில் அந்த உரையில் சிந்திய சீலமிகு கருத்துகளை, செம்மாதுளை முத்துகளைப்போல அனைவரும் பாராட்டவும், வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அவரது செயல், அவரது உரைக்கேற்ப அமைந்துள்ளதா என்பதை அண்மையில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவரே, ஒரு வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியின் மூலம் கேள்விக்குறியாக்கியிருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்றம், டி.வி.யில் தொடர்கதைப் படக்காட்சியை தேர்வு செய்வதில் இரண்டு நிறுவனத்தினர் மோதிக் கொண்ட போது, ஒரு நிறுவனத்துக்குச் சார்பாக பரிந்துரை செய்ததாக, இந்தியாவின் முதல் குடிமகன் பெயரே இழுக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது என அளித்துள்ள தீர்ப்பு வாசகத்தை, ஆனந்த விகடன் இதழேகூட மிகுந்த கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளதை அதற்குள் யாரும் மறந்திருக்க இயலாது.

கொள்கைப் பிடிப்பு, இலட்சிய உறுதி அரசியல்வாதிகளுக்கு தேவை என்ற குடியரசுத் தலைவரின் கருத்தில் எவருக்கும் மாறுபாடே இருக்க முடியாது.

ஆனால் உடன்பிறப்பே, நான் குங்குமம் இதழில் எழுதி வரும் நெஞ்சுக்கு நீதி எனும் தொடரில் 10வது அத்தியாயத்தில்

குறிப்பிட்டுள்ள ஒரு செய்தியை உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒருவேளை நீயே நெஞ்சுக்கு நீதி படித்திடக்கூடும். இருப்பினும் மீண்டும் நினைவூட்டுகிறேன்.

இந்தியாவில் எமர்ஜன்சி பிரகடனப்படுத்தப் பட்டிருந்தபோது, இன்றையக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சுயராஜ்யா எனும் ஆங்கில இதழின் ஆசிரியராக இருந்தார். அப்போது அவர் எழுதியது இதோ :-

இந்திய அரசு அவசர நிலையைப் பிரகடனம் செய்திருப்பது அரசியல் சட்ட துஷ்பிரயோகமாகும். சீன ஆக்ரமிப்பை தொடர்ந்து 1962ல் பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலை, அந்த ஆக்ரமிப்பு சில வாரங்களில் முடிந்துவிட்ட போதும்கூட 1969 வரையில் நீடித்தது. 1971ல் பாகிஸ்தான் ஆக்ரமிப்பை தொடர்ந்து செய்யப்பட்ட அவசர நிலை பிரகடனம் 1971ல் சண்டை முடிந்தும்கூட அமலில் இருக்கிறது. கடந்த 25 ஆண்டுகளில் 11 ஆண்டுகள் இந்த நாடு அவசர கால சட்டத்தின்படியே இயங்கி வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், அரசியல் சட்டமானது பிரஜைகளுக்கு வழங்கியிருக்கிற அடிப்படை உரிமைகள், எமர்ஜன்சி எனும் பெயரால் பிடுங்கப்பட்டு விட்டன. இதுபோன்ற எமர்ஜன்சி விதிகள் உலகில் வேறு எந்த ஜனநாயக அரசியல் சட்டத்திலும் கிடையாது. ஜெர்மனியின் மூன்றாவது குடியரசு, இப்படி மிக அதிகமான அதிகாரங்களை இட்லருக்கு வழங்கிய காரணத்தினால்தான் அவன் சர்வாதிகாரியாக முடிந்தது.

இப்படி 1976-ல் எமர்ஜன்சிக்குக் கண்டனம் தெரிவித்து, இந்திராகாந்தி சர்வாதிகாரப் பாதையில் நடைபழகுவதாக சுயராஜ்யா ஏட்டில் எழுதிய ஆர். வி. அவர்கள், 1977 மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நின்றார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது - எந்த எமர்ஜன்சியை எதிர்த்துக் கடுமையாக எழுதினாரோ, அந்த எமர்ஜன்சி முற்றிலும் அகற்றப்படாத நிலையில், பல நூற்றுக்கணக்கானோர் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் போதே இ. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக ஆகிவிட்டார். அடடா! கொள்கைப் பிடிப்பும், இலட்சிய உறுதியும் எப்படிக் கொடி கட்டிப் பறந்தன என்பதற்கு இது எடுத்துக்காட்டு அல்லவா?

1977-ல் ஜனதா ஆட்சி வந்ததும், இதே ஆர்.வி. அவர்கள், காங்கிரசை உதறிவிட்டு சுயேச்சையாக நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்ததை நாடு மறந்திடுமோ?

கட்சித் தாவிகளுக்குப் பதவிகள் அளித்தல், குடியரசுத் தலைவர் அவர்களின் பெருங்கண்டனத்திற்கு உட்பட்டிருக்கிறது! கருத்து பாராட்டத்தக்கது! ஆனால் அவர் செயல்?

ஜனதாதளக் கட்சியை உடைத்துவிட்டு, சொற்ப எண்ணிக்கையுடன், மைனாரிட்டியிலும் கேடு கெட்ட மைனாரிட்டியாக ஒரு குழுவை அமைத்த சந்திரசேகருக்கு - ராஜீவ் தலைமையிலான காங்கிரஸ் எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்றுத் தந்து, அந்த ஆட்சி நீடிக்க ராஜீவுடன் ஓராண்டு காலத்திற்கான உத்திரவாதமும் பெற்றுள்ளேன் என உலகிற்கு உரைத்து, ராஷ்டிரபதி பவனமே அரசியல் சாணக்கியத்திற்குப் பயன்படுத்தப்பட்டு, குடியரசுத் தலைவரால் ஒப்புதலும் அளிக்கப்பட்டு பிரதமர் பொறுப்பும் வழங்கப்பட்டதே! அவர் கட்சித் தாவல் நடத்தியவர் என்பது ஆர்.வி. அவர்களுக்கு அப்போது தெரியாதா? தெரிந்திருந்தும் சந்திரசேகரை ஊக்கப்படுத்தி, பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது எந்த வகை தர்மம்? என்ன அரசியல்?

ஆளுநர்களின் பொறுப்பு, கடமை, அவர்களுக்குள்ள பணி பற்றியெல்லாம் சாங்கோ பாங்கமாக குடியரசுத் தலைவர் அந்த மாநாட்டில் எடுத்துரைத்து - ஆளுநர் பதவியின் மகிமை பற்றியும் சிறப்பித்துள்ளார்.

அந்த ஆளுநர்களில் ஒருவரான பர்னாலா அவர்கள், தி.மு.க. ஆட்சியைப் பற்றிப் பொய் சொல்லி அறிக்கை தரத் தயாராக இல்லை என்பதை அறிந்த பிறகும் - அந்த ஆளுநர் பர்னாலா டெல்லியில் தமிழ்நாடு அரசு மாளிகையில்தான் தங்கியுள்ளார் என்பது தெரிந்த பிறகும் - பர்னாலாவிடம் பிரதமர் சந்திரசேகர், உள்துறை அமைச்சர் சகாய், மற்றும் அதிகாரிகள் வலியுறுத்தியும் - அவர், இல்லாத ஒன்றை அறிக்கையாகத் தர முடியாது! எனக் கூறிவிட்டார் என்பதை உணர்ந்த பிறகும் - பர்னாலாவைக் கலக்காமலே, அவசர அவசரமாக கழக ஆட்சிக் கலைப்பு உத்தரவில்

கையெழுத்துப் போட்ட ஒரு குடியரசுத் தலைவர், ஆளுநர்களின் மதிப்பு, மகிமை, பொறுப்பு பற்றிப் பேசுவதும் - அரசியல் தர்மம் பற்றி உரை நிகழ்த்துவதும் - வேடிக்கையான வேதனையல்லவா?

உடன்பிறப்பே, இப்படி எத்தனையோ வேதனையான வேடிக்கைகள்!

எல்லாவற்றையும் இந்த நாடு தாங்குகிறதே! என் செய்வது!

அன்புடன்,

மு. க.

(31-12-1991)

1850. தானாடாவிடினும் தன் தசையாடுமன்றோ!

உடன்பிறப்பே,

கர்நாடகத் தமிழர்களைக் காப்பதற்காக, மத்திய மாநில அரசுகளை வலியுறுத்திக் குரல் கொடுக்க அமைதியான முறையில் மாநில முழுதும், புதுவை மாநிலம் உட்பட, அரசினர் அலுவலகங்களின் முன்னால் 31.12.91 அன்று கழகம் நடத்த இருந்த ஆர்ப்பாட்டம் (Demonstration) நிறுத்தப்பட்டு விட்டதில் நம்முடைய கழக நிர்வாகிகள் சிலருக்கு ஆதங்கம்!

அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஜனவரி 2-ஆம் நாள் முழு அடைப்பு நடப்பது நடக்கட்டும். அதிலும் கலந்து கொள்வோம் - அதற்கிடையே இந்த ஆர்ப்பாட்டத்தையும் 31.12.91-ல் நடத்தியிருக்கலாமே என்று கேட்கின்றனர். கேட்காதவர்கள் நினைக்கின்றனர் என்பதும் எனக்குத் தெரியும்.

என்னதான் ஆளுங்கட்சி - எதிர்க்கட்சிகள் என்று தகராறுகள் இருந்தாலும், கருத்து வேறுபாடுகள் கணக்கின்றி மலிந்து கிடந்தாலும் - சில குறிப்பிட்ட பொதுப்பிரச்சினைகளில் கழகத்தின் அணுகுமுறை எப்படியிருக்க வேண்டுமென்பதற்குக் கடந்த கால அனுபவங்கள் ஏராளமாக இருக்கின்றன.

பொதுப் பிரச்சினை என்று நாம் பார்க்கிறோம் - பரந்த மனப்பான்மையுடனும், பெருந்தன்மையுடனும் அதனை எண்ணி ஒத்துழைப்பு தருகிறோம். பொதுப் பிரச்சினைகளில் தமிழகக் கட்சிகள் வேறுபட்டுக்கிடக்கின்றன என்ற செய்திகள் வருவதன் மூலம், பிரச்சினையின் முக்கியத்துவம் சிதறிப் போய்விடுமோ என்று கவலைப்படுகிறோம். ஆனால் அவர்கள், அத்தகைய மனப்பான்மை கொண்டவர்களாக இல்லையே!

என்று நீ என்னைப் பார்த்து வினா எழுப்புவதும் விளங்காமல் இல்லை.

உடன்பிறப்பே! நீ எழுப்பும் வினாவில் பொருள் இல்லாமல் இல்லை! உண்மையும் கூட!

அண்ணா காலத்தில் 1968-ஆம் ஆண்டிலேயே, காவிரிப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டு, பிறகு முதல்வர் பொறுப்பிலிருந்த நானும், அடுத்து முதல்வர் பொறுப்பிலிருந்த எம்.ஜி.ஆர். அவர்களும், இடையிடையே தமிழக ஆளுநர்களும், 1989-ல் மீண்டும் நானும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 25 தடவைகளுக்கு மேல் பேசியும் - நடுவர் மன்றம் அமைக்குமாறு கழக ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியில் மத்தியில் இருந்த இந்திரா அரசையும், ராஜீவ் அரசையும் பலமுறை வலியுறுத்தியும் - சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியும் - பிரச்சினை தீராமல் இருந்த காரணத்தால், முடிவாக நடுவர் மன்றத்தைத் தவிர, வேறு வழியில்லை என்ற முடிவினை எடுப்பதற்காக 1989 ஜூலை மாதத்தில் கழக அரசின் சார்பில், காவிரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா அவர்களுக்கு, கடித வாயிலாக அழைப்பு விடுத்திருந்தேன். அந்த அழைப்புக்கு ஜெயலலிதா அவர்கள் அனுப்பிய பதில் கடிதத்தை நான் மறந்து விடவில்லை.

> “அன்புடையீர், வணக்கம், தங்களின் 11.7.89-ஆம் நாள் கடிதம் கிடைத்தது. காவிரிப் பிரச்சினை தொடர்பாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு, அனைத்துக் கட்சிகளையும் கலந்து பேசி இறுதியாக, இப்பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசுவதால் புதிய பரிகாரமோ, பலனோ ஏற்படாது என்பதால், தாங்கள் கூட்டியுள்ள கூட்டத்தினால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது எனது கருத்து. எனவே என் கருத்தை விளக்கி, அறிக்கை யொன்று வெளியிட்டுள்ளேன். அந்த அறிக்கையின் பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன். அந்த அறிக்கையின்

கருத்துகளை எங்கள் கட்சியின் கருத்தாகப் பதிவு செய்ய வேண்டுமென விரும்புகிறேன்.

அன்புள்ள

ஜெயலலிதா"

இவ்வாறு அவர்கள் கடிதம் எழுதியதோடு, அவர்கள் இணைத்து அனுப்பியிருந்த அறிக்கையிலும் :

முதல்வர் கருணாநிதி கூட்டியிருக்கும் இந்தக் கூட்டம் ஊரை ஏமாற்றும் கூட்டம். எனவே அ.இ.அ.தி.மு.க. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாது

என முத்தாய்ப்பு வைக்கப்பட்டிருந்தது.

உடன்பிறப்பே, கர்நாடகத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டகால நெருக்கடியில் அம்மையாரின் பழைய கடிதத்தையும் - அனைத்துக் கட்சிக் கூட்டம் ஊரை ஏமாற்றும் நாடகம் என வர்ணித்திருந்த வாசகத்தையும் நினைத்துப் பார்த்து - நாம் ஒதுங்கிக்கொள்ள முடியுமா? இது மனித நேயப் பிரச்சினை ஆயிற்றே!

அதனால்தான் முதல்வர் ஜெயலலிதா, கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு கழகச் சார்பில் கழகத்தின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா கலந்து கொண்டார்.

எல்லோரும் ஒருங்கிணைந்து ஜனவரி 2-ல் முழு அடைப்பு நடத்துவோம் - இடையே 31.12.91-ல் மாநிலம் தழுவிய கழக ஆர்ப்பாட்டம் (Demonstration) வேண்டாம் என்று அந்தக் கூட்டத்தில் கூறிய கருத்தையும் கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

1990-ல் எல்லோரும் ஒருங்கிணைந்து டெல்லி சென்று பிரதமர் வி.பி.சிங் அவர்களைச் சந்தித்து நடுவர் மன்றத்தை வற்புறுத்துவோம் எனச் சென்னையில் முடிவெடுத்தது, கழக அரசின் சார்பில் சட்டப்பேரவையில் அறிவித்து, டெல்லிக்குச் சென்றவுடன் - நாங்கள் உங்களுடன் வரமாட்டோம் - தனியாகத்தான் சென்று வி.பி. சிங்கை சந்திப்போம் என்று அ.தி.மு.க.வினரும், காங்கிரசாரும் ஒற்றுமையை உடைத்துக் கொண்டுபோன நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு!

ஆனால் நாம் அதை மனதில் வைத்துக் கொள்ளாமல் - அண்மையில் தமிழகம் சார்பில் அரசு முன்னின்று பிரதமர்

நரசிம்மராவ் அவர்களைச் சந்திக்கச் சென்ற குழுவினருடன், கழகச் சார்பில் திண்டிவனம் வெங்கட்ராமன் எம்.பி., ஜே.எஸ். ராஜு எம்.பி., இருவரும் கலந்து கொண்டு சென்றனர் என்பதையும் நாடறியும் நன்றாக!

கழக ஆட்சியிலும், எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் நடுவர்மன்றம் கேட்டு எழுதிய கடிதங்கள், சட்டப்பேரவையில் நிறைவேற்றிய தீர்மானங்கள் - மத்தியில் இருந்து இந்திரா அரசு, ராஜீவ் அரசு காலத்தில் குப்பைத் தொட்டிகளுக்குப் போயின!

1989-க்குப் பிறகு மீண்டும் அமைந்த கழக ஆட்சியில், நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக்கூட்ட முடிவு, சட்டப்பேரவை தீர்மானம், தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கில் கழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு காட்டிய தீவிரம், தமிழக அரசின் கருத்தை மத்திய தேசிய முன்னணி அரசு உச்சநீதி மன்றத்திற்கு தெரிவித்த சூழல் - இவற்றின் விளைவாகக் கிடைத்ததே 2.7.90-ல் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் என்ற வரப்பிரசாதம்!

இடைக்கால நிவாரணம் வழங்கிட நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை, உச்சநீதி மன்றம் அறிவிக்க வேண்டுமென முறையீடு செய்து 10.1.91-ல் கழக அரசு தொடர்ந்த வழக்கில் கிடைத்த பயனாக, காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் இடைக்கால நிவாரணமாக விடவேண்டுமென்ற நடுவர்மன்ற ஆணை!

இந்த ஆணையை அரசிதழில் வெளியிடுவதிலும் - அமல்படுத்துவதிலும் மத்திய காங்கிரஸ் அரசு காட்டியுள்ள அலட்சியப் போக்கும், கால தாமதமுமே இன்றைக்குக் கர்நாடகத்தில் தமிழர்களுக்கு விளைந்துள்ள அவதிக்கு முக்கியக் காரணமாகும்.

ஏறத்தாழ இருபது நாட்கள் கர்நாடகத்தில் தமிழர்களுக்கு அடி உதை, வீடுகள் தீக்கிரை, பெண்களுக்கு மானபங்கம், பல்லாயிரம் தமிழர்கள் அகதிகளாக வெளியேற்றம் எனப் பட்டியல் போட முடியாத அளவுக்கு எல்லையற்ற துன்பங்கள் நேர்ந்த போதும் - தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் அவசரமோ, அக்கறையோ காட்டாமல் இருந்தது என்பது வேதனையான ஒன்று. எனினும் - காலந்தாழ்த்தியாவது கண் திறந்து பார்க்கிறதே என்ற

ஆறுதலுடன்தான் நமது கழகத்தின் ஒத்துழைப்பும் உண்டு என அறிவித்திருக்கிறோம்.

இதுபோன்ற பொதுப் பிரச்சினைகளில், நமது நல்லெண்ணத்தையும், அணுகுமுறையையும் மற்றவர்கள் பின்பற்றுகிறார்களோ இல்லையோ, கடந்தகாலத்தில் நாம் எடுத்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்களோ இல்லையோ, அதற்காக நாமும் அவர்கள் முறையைப் பின்பற்றி, பிரச்சினையின் வடிவத்தையும் அது வளர்ந்தால் விளையக் கூடிய விபரீதங்களையும் மறந்து விட்டு, சர்வ கட்சிக் கூட்டம் ஊரை ஏமாற்றும் கூட்டம் என்று அவர்களைப்போல் அறிக்கை விட்டு விட முடியுமா என்ன?

தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற தமிழர்களின் பிரச்சினையாயிற்றே - அதை நினைத்துதான் கழகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

அதே நேரத்தில், முழு அடைப்பு மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடியதல்ல என்பதையும் மறந்து விடக்கூடாது - முழு அடைப்பு, பிரச்சினையை மேலும் வளர்த்துவிட்டு, கர்நாடகத் தமிழருக்கு துன்ப துயரங்கள் பெருகிடக் காரணமாகவும் இருந்துவிடக் கூடாது.

எனவே தமிழகத்தில் நடைபெற இருக்கும் முழு அடைப்பு, வேலை நிறுத்தத்தில் இம்மியளவு வன்முறையும் தலை காட்டாமல் - எந்த உருவிலும் அசம்பாவிதம் எங்கும் நிகழ்ந்திடாமல், அனைத்துக் கட்சியினரும், அரசின் காவல் துறையினரும் விழிப்புணர்வுடன் செயல்படுவது மிக மிக முக்கியம்!

உடன்பிறப்பே, உன் ஒப்புதலை எதிர்பார்த்தே ஜனவரி 2-ஆம் நாள் - அரசு முன்னின்று நடத்தும் அனைத்துக் கட்சிச் சார்பான முழு அடைப்புக்கு கழகம் ஆதரவு தர முன்வந்துள்ளது.

அன்புடன்,

மு. க.

(01-01-1992)

1851. புதிய செய்தி புரியவைக்கும் உண்மை!

உடன்பிறப்பே,

புத்தாண்டு பிறக்கும் இந்த நாளில், ஒரு புதிய செய்தி கிடைத்தது! பழைய செய்திதான், ஆனாலும் படித்து மறந்து போய்விட்ட செய்தி - அப்படி ஒன்று நடந்துவிட்டபிறகு, தீவிரப்படுத்தப் பட்டுள்ள புலன் விசாரணையில் இணைத்துப் பார்க்க வேண்டிய - இடம் பெற வேண்டிய செய்தி!

வரவர சில பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் - ராஜீவ் காந்தி அவர்கள், கவர்னர் ஆட்சி நடந்த போது கொல்லப்படவில்லை - கழக ஆட்சி நடந்த போதுதான் கொல்லப்பட்டார் என்று கயிறு திரிக்கவும் கூடும் என்கிற அளவுக்கு இப்போது கதைகளைக் கட்டிவருகின்றன அல்லவா?

1991 ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டு - அதற்குப்பிறகு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் முடிந்து மே மாதம் 21 ஆம் தேதிதான் கவர்னர் பெருமானுடைய ஆட்சி, காங்கிரஸ் ஆட்சியாக, அ.தி.மு.க. ஆணை கேட்டு நடக்கும் ஆட்சியாக நடைபெற்ற போதுதான் ராஜீவ்காந்தி கொடுமையான கொலைக்கு ஆளானார்.

அதற்கு முன்பு கழக ஆட்சியில், இரண்டு ஆண்டுக்காலத்தில் எட்டுமுறை அவர் தமிழகத்திற்கு வந்து சென்றபோது பத்திரமாகத்தான் பாதுகாக்கப்பட்டார்.

விடுதலைப்புலிகளுக்கு முகாம்கள் அமைத்துக் கொடுத்த ஆட்சிகள், மத்திய காங்கிரஸ் ஆட்சியும் - மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சியும் என்பதையே மறைத்துவிட்டு, அவர்களுக்கு ஆயுதம் தந்து, ஆயுதப் பயிற்சியும் தந்து, அளவற்ற நிதியும் தந்து - அவர்களை ஊக்கப்படுத்தியதும் அந்த ஆட்சிகள்தான் என்ற வரலாற்றை அப்படியே விழுங்கிவிட்டு, பழியைத் தி.மு.க. ஆட்சியின் மீது போடும் சூதுமதியினர் வாய் ஜாலத்தை, வஞ்சக

எண்ணத்தை, அரசியல் ஆதாயம் தேடுவதற்காகக் கடைப்பிடிக்கும் கயமைத்தனத்தை மக்கள் தெளிவாகவே புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

"ராஜீவ் கொலை பற்றி நடத்தப்படுகிற வர்மா கமிஷன் விசாரணையில் ராஜீவுக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு அன்றைய தினம் எப்படியிருந்தது என்பனபற்றியெல்லாம் விசாரணையில் ஆஜராகி சாட்சியமளித்தவர்கள் கூறியுள்ளதைப் படித்துப் பார்த்தாலே முரண்பாடுகள் விளங்கும்."

புதிய செய்தியாக - அதாவது பழைய செய்தியொன்றை நான் இக் கடிதத்தில் குறிப்பிடுவதற்கு முன்பு, வர்மா கமிஷன் முன்னிலையில் - கவர்னர் ஆட்சியின் போதும் அரசின் தலைமைச் செயலாளராக இருந்த திரு. டி.வி. அந்தோணி ஐ.ஏ.எஸ். அவர்கள் அளித்த வாக்கு மூலத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

டிசம்பர் 18 ஆம் நாள் அவர் அளித்த வாக்குமூலம் டிசம்பர் 19 ஆம் நாள் ஏடுகளில் வந்துள்ளது.

"ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு 18 நாட்களுக்கு முன்பாக, மே. 3-ந் தேதி வாராந்திர சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்டம் நடந்தது. அப்போது தமிழகத்தில் உள்ள எல்லாப் போராளிகளும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் மாநில புலனாய்வுப் பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்தார். தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட பிறகு, உடனடியாக இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக, குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர்களுடைய ஆதரவாளர்கள் கண்காணிக்கப்பட்டனர்.

கடலோர மாவட்டங்களில் போலீஸ் பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் 72 பேர் கைது செய்யப் பட்டனர். பிரப்ரவரி 1 ஆம் தேதிக்கும் மே மாதம் 20-ந் தேதிக்கும் இடைக்காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இவை.

ராஜீவ் கொலைக்கு சில தினங்களுக்கு முன்பு கூட, போராளிகள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டதாக மத்திய உளவுத்துறை எனக்குத் தெரிவித்திருந்தது."

உடன்பிறப்பே; இது தலைமைச் செயலாளர் அந்தோணியின் வாக்குமூலம்! வர்மா கமிஷனுக்கு அளித்தது! அவரது வாக்கு மூலத்தில் தி.மு.க. ஆட்சியில், விடுதலைப் புலிகளைத் தனி முகாம்களில் அடைத்ததையோ 30 பேரை தேசிய பாதுகாப்பு சட்டப்படி சிறை வைத்ததையோ குறிப்பிடவில்லை. பாவம்; குறிப்பிடமாட்டார்!

எனினும் அவரது வாக்கு மூலப்படி, கவர்னர் ஆட்சியில் கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்ட நிலையில், போராளிகள் நடமாட்டம் வெகுவாகக் குறைக்கப்பட்டச் சூழலில் - அந்தக் கொலைகாரக் கூட்டம் எந்த வழியாக தமிழ்நாட்டுக்குள்ளே வந்தது? அப்படியானால், போராளிகள் தடுக்கப்பட்டுவிட்டார்கள் - கண்காணிக்கப் படுகிறார்கள் - அவர்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது என மதிப்பீடு செய்ததெல்லாம் தவறுதானே! அப்படியொரு தவறான மதிப்பீட்டை, அரசின் முக்கிய அதிகாரிகளின் கூட்டத்தில் செய்யலாமா? அந்த தவறான மதிப்பீட்டையே நம்பிக் கொண்டு இருக்கலாமா?

இந்தச் சந்தேகங்களுக்கு பதில் கிடைக்கிறதோ இல்லையோ போகட்டும். இப்போது நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட அந்தப் புதிய (பழைய) செய்திக்கு வருகிறேன்.

உன்னிடம் 30.12.1987 ஜூனியர் விகடன் இருந்தால் எடுத்துக் கொள்!

அதில் ராஜீவ் விசிட் சென்னையில் - என்பதாக ஒரு தலைப்பு இருக்கும். அதைப் படித்துப் பார் - பழைய செய்திதான். ஆனால், எவ்வளவு புதிய செய்தி என்பதைப் புரிந்து கொள்வாய்!

சென்னையில் ராஜீவ் விசிட் எதற்குத் தெரியுமா? நேரு சிலையைத் திறப்பதற்காக! அந்த நிகழ்ச்சியில் முதல்வர் எம்.ஜி.ஆரும் கலந்து கொண்டார் - அதாவது 1987 ஆம் ஆண்டு!

அந்த நேரத்தில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் எப்படியிருந்தது என்பதை மத்திய அரசின் ரகசிய

பிரிவு இங்குள்ள உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளதாம்! அதனை ஜூனியர் விகடன் காஞ்சிபுரத்தில் என்ற சிறு தலைப்பில் வெளியிட்டுள்ளது. முதலில் அதைப் படிப்போம்.

"செங்கல்பட்டு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகமாய் இருந்ததால் - இருப்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகளை பயங்கர கவனத்துடன் செய்யவேண்டும் என்று மத்திய அரசின் ரகசிய பிரிவு எச்சரித்துள்ளது"

செங்கற்பட்டு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகமாய் இருந்தது எப்போது என மத்திய அரசு ரகசியப் பிரிவே சொல்லுகிறது?

கருணாநிதி ஆட்சிக் காலத்திலா? இல்லை! எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்! 1987-ல்!

அதுமட்டுமா? இப்போது ராஜீவ் விசிட் என்ற தலைப்பில் உள்ள ஜூனியர் விகடன் செய்தியைப் படிப்போம்.

"பிரதமர் ராஜீவ்காந்தி, சென்னைக்கு வந்து நேருவின் சிலையை திறந்து வைத்தார். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசி பொது நிகழ்ச்சியாகும் அது. இம்முறை பிரதமர் விஜயத்தின் போது ஏகக் கெடுபிடி! பிரதமர் ராஜீவ்காந்தி சென்னை வருகையையொட்டி, அதற்கு இரு நாட்களுக்கு முன்பே, சென்னையில் உள்ள காவல் துறை மேல்மட்ட அதிகாரிகள் சுமார் 60 பக்கம் கொண்ட ஒரு ரகசிய அறிக்கை மூலம் உஷார்படுத்தப் பட்டனர். பிரதமர் வருகையை யொட்டி, செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் என்னவென்ற நீலப் புத்தகத்தின் (Blue Book) நகல்களோடு, மத்திய புலனாய்வுத் துறையின் விசேஷ எச்சரிக்கைகளும், காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டன. இம்முறை அதில் ஒரு திடுக்கிடும் தகவலும் இருந்தது. சென்னையில் பிரதமர் ராஜீவின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் முயற்சி இருக்கக் கூடும். அதை நம்பத்தகுந்த வட்டாரத் தகவல் தெரிவிக்கிறது. அது குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண்ணால் நிகழலாம், என்பது அந்த அறிக்கையின் சாராம்சம்.

தவிர, பிரதமரைச் சுற்றி ஐம்பது அடிவட்டத்துக்குள் யாராய் இருந்தாலும் அனுமதிக்க வேண்டாம். பிரதமரை வரவேற்கும் இடத்தில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு மேல் யாரும் நிற்க வேண்டாம். குறிப்பாக பிரதமர் ராஜீவ் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில், அருகில் உள்ள பெண்களின் ஹேர் பின்களைக்கூட கவனமாகக் கண்காணிக்க வேண்டும். முன் அனுமதியோடு பார்க்க வருபவரோடு ஒட்டிக்கொண்டு, வேறு யாரும் நுழைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், என்றும் அந்த அறிக்கையில் விசேஷ எச்சரிக்கைகள் இருந்தன"

உடன்பிறப்பே,

இந்தப் பாதுகாப்பு பற்றிய ரகசிய தகவல்களையும் - ராஜீவ் கொலைக்கான சதி விபரங்களையும் - ஒரு இளம் பெண்ணால் அது நடத்தப்படும் என்பதையும் - மத்திய அரசு ரகசிய அறிக்கையே குறிப்பிடுகிறது என்பதை ஜூனியர் விகடன் தெரிவித்துள்ள ஆண்டு 1987 என்பதை மறந்துவிடாதே!

அதாவது அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற கால கட்டம்!

அப்போதுதான் செங்கற்பட்டு மாவட்டத்தில் புலிகள் நடமாட்டம் அதிகம்!

ஆம்! திருபெரும்புதூர் என்ற ஊரும் இடம் பெற்றுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தில்!

அதாவது, 1987 ஆம் ஆண்டில், அ.தி.மு.க. ஆட்சியில்!

87-க்குப்பிறகு 1989-ல் தான் தி.மு.க. ஆட்சி! 89, 90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ராஜீவ் தமிழகம் வந்த போதெல்லாம் - அதுவும் எட்டு முறை பிரதமராகவும் - முன்னாள் பிரதமராகவும் வந்தபோதெல்லாம் - கழக ஆட்சியில் அவரைக் கவனமுடன்தான் பாதுகாத்தோம்!

ஆனால் ஆளுநர் ஆட்சி எனப்படும் - அ.தி.மு.க. ஆணைப்படி நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியில்தான், 1987-ல் மத்திய அரசின் ரகசிய எச்சரிக்கை அறிக்கை பற்றிக் கவலைப் படாமலே, ராஜீவைக் கொலை வெறிக்குப் பலியாக்கிவிட்டனர் என்ற உண்மை புரிகிறதா?

ஒரு பெண் தலையில் வைத்திருக்கும் ஹேர் பின் பற்றிக் கூட எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென உளவுத்துறை காவல்துறையை அன்றைக்கே உஷார் படுத்தியிருக்கிறது!

ஆனால் ஒரு பெண், உடம்பில் குண்டு வைத்துக் கொண்டிருந்ததைக் கூட கவனிக்காமல்,

மாலை போட அழைத்து வந்தது யார்?

அனுமதித்தது யார்?

ராஜீவை மரணத்தை முத்தமிட

வைத்தது யார்?

ஜீனியர் விகடனில் 30.12.1987 இதழில் வந்த செய்தி, பழைய செய்தியாயினும் - இப்போதுள்ள புலன் விசாரணைக்கு புதிய செய்தியா? அல்லவா?

அன்புடன்,

மு. க.

(02-01-1992)

1852. இதய ஒலி, இன்னும் எட்டவில்லையோ?

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போது, ஆகா! புத்தாண்டுப் பரிசு இது! எனப் பாட்டுப் பாடி, ஆட்டம் ஆடிக் குதூகலித்த கட்சியினர், அவர் தனது பேச்சையும், பழிச்சொல் வீச்சையும் கேட்டு ஏமாந்து போய் வாக்களித்த மக்களுக்கு இந்த ஆண்டு மிக நன்றாகவே, அதுவும் ஜனவரி முதல் நாளே அருமையான புத்தாண்டுப் பரிசுகளை வழங்கி விட்டனர்.

வாங்கி வந்த பொருள்களின் வனப்பு மறையு முன்னரே, பெட்ரோல், டீசல், ரயில்களில் வழங்கப்படும் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது என்று கிடைத்த தகவல் மக்களின் கனவுகளைத் தவிடுபொடியாக்கி விட்டன. இது போதாதென்று அரிசி விலையின் அபார உயர்வும் மக்களை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தி விட்டது.

என்று தினமணி இதழே, ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது என்றால் பாரேன்!

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே மக்களுக்கு ஆழ்ந்த துக்கம் எதனால்?

கடந்த ஆண்டு இதே மக்களை ஆழ்ந்த தூக்கம், ஆட்டிப் படைத்ததினால்!

நூறு நாட்களில் விலைவாசிகளைக் குறைப்போம் என்று அ.தி.மு.க.வும், இ. காங்கிரசும் தேர்தல் பிரச்சாரத்தின் போது அளித்த வாக்குறுதி எங்கே?

இதோ நிறைவேற்றப்பட்டுக் கொண்டேயிருக்கிறதே!

வெளிச்சதையில் பொன்னி அரிசி விலை பதினோரு ரூபாய்!

ஐ.ஆர் இருபது அரிசி விலை ஒன்பது ரூபாய்!

புதிதாக அறுவடை ஆகும் அரிசியின் விலையும் கிலோ ஆறு ரூபாய் ஏழு ரூபாய்க்கு குறைவில்லை!

அன்றாடத் தேவைக்கான அத்தியாவசியப் பண்டங்கள் விலையோ, யானை விலை! குதிரை விலை!

கழக ஆட்சியில் நியாய விலைக் கடைகளில் இருபது கிலோ அரிசி!

இந்த ஆட்சியில் நியாய விலைக் கடைகளில் பனிரெண்டு கிலோ அரிசிதான்!

கழக ஆட்சியில் பச்சரிசி கிலோ ரூ. 2.50 என்ற விலையில் நியாய விலைக் கடையில் தரப்பட்டது.

இன்று அ.தி.மு.க. ஆட்சியிலோ, பச்சரிசி கூட்டுறவுக் கடைகளில் ரூ. 4.20 என்று விலை அறிவித்தார்கள்! அதுவும் சில பெரிய நகரங்களுக்கு மட்டுந்தான்! அந்த அரிசியை வாங்கிச் சாப்பிட்டவர்கள் வாய்க்குமட்டல் தாங்கவில்லை என்று அலறுகிறார்கள்.

பஸ் கட்டணம் என்றுமில்லாத அளவுக்கு அபரிமிதமாக உயர்வு! அதனால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, ஆதாயம் என்பதைவிடத் தனியார் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இமாலயக் கொள்ளை!

அந்தக் கொள்ளையின் எல்லையை யாருமே காண முடியாத அளவுக்கு, தனியார் பஸ் முதலாளிகளுக்கு மற்றொரு சலுகையாக - ஐந்தாண்டுகளுக்கு வழித்தட உரிமங்களை நீட்டித்துத் தர (பேரம் என்று கூறமாட்டேன்) பேச்சு வார்த்தை நடப்பதாகக் கேள்வி! நடக்கட்டும்! இனி ஏழை மக்கள் பஸ்களில் ஏற முடியாமல் நன்றாக நடக்கட்டும்! கால்களுக்கு பயிற்சி! பலம்!

ஆம்னி பஸ்களுக்கு இருக்கை ஒன்றுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரிச் சலுகை! ஆம், குறைப்பு! அதுவும் முன் தேதியிட்டு ஆணை!

ஆனால் அரசுப் போக்குவரத்துகளில் ஏழை, நடுத்தர மக்களுக்கு அவர்களால் சமாளிக்க முடியாத அளவுக்குக் கட்டண உயர்வு!

என் பங்கு என்ன குறைவா? எனக்கேட்டு ரயில் கட்டணம் வேறு மிக உயர்வு!

இந்த அழகில் தமிழகத்தில், சில ரயில் தடங்கள் அகற்றப்படவும் கூடுமாம்!

மின் கட்டணத்தில் உயர்வு மட்டுமல்ல! வரி வேறு விதிக்கப்பட்டு, நடுத்தர மக்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள்!

நூறு நாட்களில் விலைவாசிகளைக் குறைத்து, அல்லற்படாத அவதியுறாத நிலையைத் தொடருவோம்! என ஆர்ப்பரித்து வாக்குகளை நிறைத்துக்கொண்ட இ. காங்கிரசாரும், அவர்களின் கூட்டணிக் கட்சியாக இருந்து மாநில ஆட்சி நடத்தும் அ.தி.மு.க.வினரும் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டுப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள்! வாக்களித்த மக்கள் இனியும் ஏமாறத் தயாராக இல்லை!

இதோ மேலும் குவிந்துள்ள புத்தாண்டுப் பரிசாக, டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் இவற்றுக்கான விலை உயர்வு அறிவிக்கப்பட்டு - அமலுக்கும் கொண்டு வரப்பட்டு விட்டது.

16 ரூபாய் 53 காசு என ஒரு லிட்டருக்கு இருந்த பெட்ரோல் விலை, புத்தாண்டு தினம் முதல் 17 ரூபாய் 17 காசாக உயர்ந்துள்ளது.

5 ரூபாய் 53 காசாக இருந்த டீசல் விலை, 5 ரூபாய் 72 காசாக உயர்ந்துள்ளது.

2 ரூபாய் 82 காசுக்கு விற்ற மண்ணெண்ணெய், இனிமேல் 2 ரூபாய் 90 காசு!

டீசல், மண்ணெண்ணெய் இவற்றின் விலையேற்றம் நேரடியாக ஏழைகளையும், விவசாயிகளையும் பாதிக்கும். மறைமுகமாக மற்ற பொருள்களின் விலையேறுவதற்கும் காரணமாகும். குறிப்பாகக் காய்கறி போன்ற பொருள்களின் விலை உயரும். வாகனங்களில் வரக்கூடிய பொருள்களின்

விலையேற்றத்துக்கும் வழிவகுக்கும். பெட்ரோல் விலையேற்றத்தால் நடுத்தர மக்கள், அரசு அலுவலர், பெரிதும் பாதிக்கப்படுவர்.

தேர்தல் உறுதிமொழிகளைக் காற்றில் மிதக்க விட்டுவிட்டு, நாட்டு மக்களைப் பல வகையிலும் தேம்பியழ வைத்துள்ள நிலையில் - மக்களின் கவனத்தைத் திசை திருப்ப மத்திய அரசு,

காஷ்மீர் என்றும், பஞ்சாப் என்றும், அசாம் என்றும், எத்தனை நாளைக்குப் போக்குக் காட்டிக் கொண்டிருக்க முடியும்!

அதேபோல இங்குள்ள மாநில அரசு, கச்சத் தீவு என்றும், கர்நாடகப் பிரச்சினை என்றும், கட்டிய கல்லறையைப் புதுப்பிக்கின்றேன் என்றும் - தமிழ் நாட்டு மக்களை எவ்வளவு நாளைக்குத் திசை திருப்ப முடியும்!

காஷ்மீரோ, பஞ்சாப்போ, அசாமோ, கர்நாடகமோ - அலட்சியப்படுத்தக் கூடிய பிரச்சினைகள் அல்ல!

இன்னும் சொல்லப் போனால், இந்தியாவின் ஒருமைப்பாட்டையே கேள்விக் குறியாக்கியுள்ள பிரச்சினைகள்!

ஒருமைப்பாடு கேள்விக்குறி! என்று நாம் பேசினால் பார்! பார்! பிரிவினைவாதப் பேச்சு எனக் கூச்சலிடுவார்கள்!

ஆனால் இன்று, பழுத்த தேசியப் பரம்பரை எனத் தங்களைப் பற்றி பறை அறிவித்து முழக்கியவர்களும் - அந்தக் காங்கிரசோடு கைகோத்து நிற்கும் அ.தி.மு.க. அமைச்சர்களுமே இந்திய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குறியாக்கிக் கணை தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அந்தக் கணைகளின் பக்கம் மக்களின் கவனத்தைத் திருப்பி, மக்களின் அன்றாட வாழ்வே கேள்விக் குறியாகிவிட்ட அபாயத்தை மறைத்து விடலாமென, மத்திய, மாநில அரசுகள் மனப்பால் குடிக்க வேண்டாம்!

கோயபல்ஸ் பிரச்சாரத்திற்கென்றே ஒதுக்கப்பட்டுள்ள அரசின் பிரச்சார சாதனங்களான வானொலியும், தொலைக்காட்சியும் துணையிருக்கும் வரையில், தொல்லையில்லையென அவர்கள் நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்!

ஒருமைப்பாட்டுக்கு ஊறு தேடுவோரையும் கண்டிப்போம். எங்கள் வறுமைப்பாட்டை உணராமல் தலைவிரிகோலத் தர்பார் நடத்தும் அரசுகளையும் தண்டிப்போம்!

என்று ஏமாந்த மக்களின் இதயங்கள் துடிக்கும் ஒலி, ஆளுவோரின் செவிப் பறையை இன்னும் எட்டவில்லையோ? இல்லையெனில், அந்த ஒலி விரைவில் எட்டும்! எட்டித்தான் தீரும்! அதற்கு இ. காங்கிரசும், அ.தி.மு.க.வும் பொறுப்பேற்று பதில் சொல்லித்தான் தீர வேண்டும்!

அன்புடன்,

மு. க.

(03-01-1992)

1853. கர்நாடகத்தின் கனிவான சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம்தான் தீர்வு காண வேண்டுமென்றும், அப்படி ஒரு தீர்வு ஏற்படும் வரையில், நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகளை மத்திய அரசு நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் கர்நாடக சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்கிய கூட்டம் ஒன்றில் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

1968 - ஆம் ஆண்டு தொடங்கி, 1989 - ஆம் ஆண்டு முடிய 21 ஆண்டுகள் சுமார் 25 தடவைகளுக்கு மேல் தமிழக அரசு, கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லையா? வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டால், தானே முன்னின்று பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு காணுகிறேன் என்ற பிரதமர் இந்திரா காந்தியின் வாக்குறுதியை நம்பி, மீண்டும் பேச்சுவார்த்தை தொடரவில்லையா? அந்தப் பேச்சுவார்த்தைகளில் என்ன பயன் ஏற்பட்டது?

பேச்சுவார்த்தை என்று சொல்லியே காலத்தை நீட்டி, அண்ணா முதல்வராக இருந்த போதும் - நான் அந்தப் பொறுப்புக்கு வந்த காலத்திலும் - எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போதும் - இடையே சுகாதியா, அலெக்சாண்டர் ஆகிய கவர்னர்கள் ஆட்சிக் காலத்திலும், ஒருபுறம் பேச்சுவார்த்தை - அதே சமயம் மறுபுறம் கர்நாடகத்தில் அணைகள் கட்டுவதில் தீவிரம் என்ற நிலையல்லவா ஏற்பட்டது.

பேச்சுவார்த்தையால் எந்தப் பயனும், தீர்வும் காணப்படாத காரணத்தினால்தான் - 1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு கூட, கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டில் அவர்களுடன்

இருமுறை டெல்லியிலும், சென்னையிலும் பேச்சுவார்த்தை நடத்தியதையே கடைசி முயற்சியாக எடுத்துக் கொண்டு, நடுவர் மன்றத்தைத் தவிர, வேறு மார்க்கமே இல்லை என்ற முடிவுக்கு தமிழக மக்கள் வரவேண்டியதாயிற்று. நடுவர் மன்ற கோரிக்கை முடிவையும் கழக அரசு அனைத்துக் கட்சி முடிவாகவே எடுத்து அறிவித்தது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்த வாசகப் படியே கூட, காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதில் எதுவும் பிரச்சினை தோன்றினால் மாநில அரசுகள் தங்களுக்குள் பேசித் தீர்க்கலாம் என்றும் - மத்திய அரசு தலையிட்டு மத்தியஸ்தம் செய்யலாமென்றும் - இவற்றால் பிரச்சினை தீராத பட்சத்தில் நடுவர்மன்ற முடிவுக்கு விடலாமென்றும்தான் இருக்கிறது. அதன்படி, எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்தும் பிரச்சினை தீராத காரணத்தினால் தான், இறுதி முயற்சியாக நடுவர் மன்றம் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை இந்திரா காந்தியோ, ராஜீவ் காந்தியோ காதில் போட்டுக் கொள்ளவில்லை. பேசித் தீர்க்கும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபடவில்லை.

வேறு வழியே இல்லை என்ற நிலையில்தான் கழக அரசு, மத்தியில் இருந்த வி.பி. சிங் அரசின் கவனத்திற்குப் பிரச்சினையின் கடுமையை எடுத்துச் சென்றது. சட்டப் பேரவையில் நடுவர் மன்றம் வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. 1990-ல் நடுவர் மன்றமும் அமைந்தது. தொடர்ந்து கழக அரசு உச்ச நீதிமன்றத்தில் செய்து கொண்ட முறையீடு காரணமாக, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையும் கிடைத்துள்ளது.

பேச்சுவார்த்தை என்றால் என்ன விளக்கம்? தொடர்புடைய மாநில அமைச்சர்கள் அதிகாரிகள் விவாதிப்பார்கள். தங்கள் தங்கள் வாதங்களை எடுத்து வைப்பார்கள். இறுதியில் ஒரு பொதுவானதும், யாருக்கும் பாதகமில்லாததுமான ஒரு நல்ல முடிவுக்கு வருவார்கள்.

காவிரிப் பிரச்சினையில் 21 ஆண்டுகள் நடந்த பேச்சு வார்த்தைகளில் அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஆனால் பொதுவான நல்ல முடிவுக்கு வர முடியவில்லை.

எனவேதான், நடுநிலையானவர்கள் முடிவு சொல்லட்டும் என்று நடுவர் மன்றத்தை நாடினோம்.

நடுவர் மன்ற வாதத்தில் இரு தரப்புகளிலும், அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டு பேசவில்லையே தவிர - அந்த அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் விரிவாகக் கலந்து பேசிய வழக்கறிஞர்கள்தான் தொடர்புடைய அரசுகள் தரப்பு வாதத்தை எடுத்து வைத்து பேசியிருக்கிறார்கள்.

எல்லாத் தரப்பு கருத்துகளையும் நடுவர் மன்றம் அலசி ஆய்ந்துதான் ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறது, அதுவும் இடைக்கால நிவாரணமாக ஓர் ஆணை! அந்த ஆணையின் படி, 205 டி.எம்.சி. தண்ணீர் என்பதே கூட தமிழக விவசாயிகளுக்கு திருப்தி தரக்கூடியதல்ல! எனினும் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரையில், இதை ஒரு நிவாரணமாகக் கொள்வோம் என்று ஒரு ஆறுதல் மட்டுமே தமிழ்நாட்டுக்கு!

அந்த ஆறுதல் பெறவும் தமிழகத்தை அனுமதிக்க மாட்டோம் என்று, கர்நாடகத்தில் உள்ள விஷயமுணர்ந்த அரசியல்வாதிகள் பிடிவாதம் காட்டுவது ஏன் என்றுதான் தெரியவில்லை!

அப்படியானால் தமிழ் நாட்டுக்குக் காவிரியில் தண்ணீரே தர முடியாது - தமிழ் நிலம் தரிசு நிலமாகப் போகட்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்களா?

தொன்மைக் காலமாக தொடர்ந்து பயன்பெறும் ஆயக்கட்டுகளுக்கு முன்னுரிமை என்ற, நதி நீர்ப் பிரச்சினை தொடர்பான சர்வதேச மரபுகளைக் கூடப் புறக்கணிக்கத் துணிகிறார்களா?

கர்நாடக மாநில விவசாயிகளின் நலனை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் - எல்லாத் தண்ணீரையும் எமக்கே வழங்க வேண்டும் என்று கடின சித்தம் கொண்டு தமிழகம் கோரிக்கை வைக்கவில்லையே!

உலகத்தில் பல நாடுகள் வழியாக ஓடும் நதிகளின் தாவாக்கள் எல்லாம் தீர்க்கப்பட்டுள்ளன.

ஆனால் இங்கே, ஒரே நாட்டுக்குள் மாநிலங்களுக்கிடையே இப்படியொரு தகராறு இருக்கலாமா?

கர்நாடகத்தில் உள்ளவர்கள் இதனைச் சிந்திக்க வேண்டாமா?

சிந்தித்துப் பார்த்தால், இந்தப் பிரச்சினையைப் பற்றிய நுணுக்கங்கள் எதுவும் தெரியாமல், கர்நாடகத்தில் வாழ்ந்து

கொண்டிருக்கிற அப்பாவித் தமிழர்களை இவ்வளவு அல்லலுக்கு ஆளாக்கியிருப்பார்களா?

மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு, தொடக்கத்திலேயே இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிட அரசியல் கண்ணோட்டமின்றி முன்வந்திருந்தாலும் - அல்லது இப்போது மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு, நடுவர் மன்ற இடைக்கால ஆணையைத் தாமதம் செய்யாமல் நடைமுறைப்படுத்த முன்வந்திருந்தாலும், இந்த பிரச்சினை தமிழ் மக்களுக்கும், கன்னட மக்களுக்குமிடையே ஒரு வெறுப்பு உணர்ச்சியை வளர்க்கிற அளவுக்குப் போயிருக்காது!

இப்போதும், இரு மாநிலங்களின் உறவு ஊனமடையாமல் காக்கப்படவும் - ஒற்றுமை, ஒருமைப்பாடு என்ற கொள்கைகள் வலுப்பெறவும், ஒத்துழைப்புத் தர வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு கர்நாடக அரசியல் தலைவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அன்புடன்,

மு. க.

(07-01-1992)

1854. சங்கநாதம் செய்யும் நாள்
ஜனவரி 25 ஆம் நாள்!

உடன்பிறப்பே,

“எப்பக்கம் வந்து புகுந்துவிடும் - இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?”

- என அறைகூவல் விடுத்து 1938 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மூன்றாம் நாள் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போரில் எழுபதுக்கு மேற்பட்ட மகளிர், முப்பதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளிட்ட சுமார் 1300 பேர் சிறைப்பட்டனர். தாளமுத்து, நடராசன் என்ற இரு தமிழ்க் காளையர் சிறையிலிருந்து பிணமாக விடுவிக்கப்பட்டனர்.

1989-ல் கழகம், மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கட்டி முடிக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமக் கட்டிடம், ஆம் - ஓங்கி உயர்ந்த அந்தப் பெரும் மாளிகைக்கு தாளமுத்து நடராசன் மாளிகை எனப் பெயர் வைத்த போது ஐம்பதாண்டுக்கு மேற்பட்ட இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின் வரலாறும், அந்தப் போரின் தொடக்க நாள் எனது பொது வாழ்க்கையின் நிகழ்ச்சிக் கோவையும் என் நெஞ்சில் நிழலாடத் தவறவில்லை!

அன்றைய சென்னை மாகாண காங்கிரஸ் அரசின் தலைமை அமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள்தான், 1938 ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் கட்டாய இந்தித் திணிப்புக்கான ஆணையை வெளியிட்டார்.

அவர்தான் தாளமுத்து, நடராசன் இருவரும் சிறையில் மாண்டது பற்றி எழுந்த கேள்விக்கு பதில் அளித்தபோது, அவர்கள் படிக்காத காரணத்தால் சிறை சென்று மாண்டனர் எனக் கேலியாகக் குறிப்பிட்டார்.

அவரேதான் 1963-64 ஆம் ஆண்டுகளில், இந்தி ஆதிக்கத்தால் தமிழ்நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்படுவர் என எச்சரித்தார்.

1965-ல் நடைபெற்ற மொழிப் புரட்சி பற்றி குறிப்பிட்டபொழுது, இந்தி எதிர்ப்புப் போராட்டம் எனக் கூறாதீர்கள்! போராட்டமென்ன! போர் ஆட்டம்! போர்! என்றே கூறுங்கள்! என ஆவேசமாக உணர்ச்சி ததும்ப உரைத்தவரும் அவரேதான்!

யார் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க முனைந்து, அதனை எதிர்த்தோரைச் சிறையில் தள்ளினாரோ அவரே, இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டினார் என்றால் - அந்த மாற்றத்திற்குக் காரணம், பெரியாரும், அண்ணாவும் - அவர்களின் தலைமையேற்று,

"செந்தமிழுக் கொரு தீமை வந்தபின்னும்
இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ?"

எனக்கேட்டு உயிரையும் தரத் தயாராகி விட்ட இளைய ஞாயிறுகளான மாணவர்களும், துறவிகளாயினும் யாம் தமிழ்ப்பற்றைத் துறந்தோமில்லை என்று சூளுரைத்துப் புறப்பட்ட தமிழறிஞர் கூட்டமும், எலியென நினைத்தனரோ எம்மை என்று புலியெனக் கிளம்பிய புலவர்கள் அணியும், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் - அந்தத் தமிழ் இன்றி இந்த உயிர் எதற்காக என முழங்கி - துப்பாக்கிக் குண்டுகளை நெஞ்சில் ஏந்தியும், நெருப்புப் பிழம்பை நீச்சல் குளமென எண்ணி மூழ்கியும் பிணமாகக் கருகிய இளைஞர் ஏறுகளும், தொடர்ந்து நடத்திய தொய்வில்லாப் போர்தான் என்பதை எண்ணிப்பார்க்கிறோம். பெருமிதம் கொள்கிறோம்! பெருமூச்சும் விடுகிறோம்! இன்னும் இந்தியின் ஆதிக்கம் சமயம் பார்த்து தலை நுழைத்திடப் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறது என்பதற்காக!

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில், அடக்குமுறைக்கு ஆளாகி, போலீசாரிடம் தடியடிக்கும், துப்பாக்கிகளுக்கும் எதிர்நிற்கும் போதுகூட தாளமுத்து நடராசா! என்று முழக்கம் செய்வோம். வலியும், வேதனையும் ஏன்? சாவுங் கூட நம்மை ஒன்றும் செய்யாது! அந்த முழக்கத்திற்கு அவ்வளவு ஆற்றல் உண்டு! என்று அண்ணா அவர்கள் உணர்ச்சிப் பிழம்பாக நின்று உரை நிகழ்த்தியது இன்னமும் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

கீழப்பழுவூர் சிங்கத்தமிழன் சின்னச்சாமி, என் தாய்த் தமிழ் அழிக்க இந்தித் தணலா? இதோ, அதை எதிர்த்து என்னையே

தணலுக்குத் தீனி ஆக்குகிறேன் எனக்கூறி, மேனி கருகிச் செத்தானே - அவனைப் பின்பற்றி எத்தனை வாலிப வசந்தங்கள் தீயில் வதங்கிப் பூமியில் புகழாய்ப் பூத்தன!

ஐம்பதாண்டு காலத்திற்கு மேற்பட்ட மொழிப் போர் வரலாறு, இன்னும் முற்றுப் பெற வில்லை!

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்த இடமில்லை; இருமொழித் திட்டம்தான் இனிச் செயல்படுமென உரைத்து அறிஞர் அண்ணா நடைமுறைப்படுத்தியது, நமது மொழிப் போரின் ஒரு கட்ட வெற்றிதான்!

எத்தனையோ மொழிகளில் ஒரு மொழியாக, இந்தியாவில் இந்தி இருப்பதில் நமக்கு மறுப்பு இல்லை - ஆனால் அது, இங்கே கொடிகட்டிப் பறப்பேன்! தமிழன் எனது அடி தொட்டுக் கிடக்க வேண்டும் எனக் கருதி, அதற்கெனச் சந்து பொந்துகளில் நுழைந்தால் -

“அன்று நாங்கள் ஓங்கிய
அறப்போர் வாள்
இன்னும் உறையிலிடப்படவில்லை”

என்ற உண்மையை நினைவுப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்காகத் தான் - இந்த மொழிப்போரில் உயிரிழந்தோர், சிறைப்பட்டோர், தியாகம் பல புரிந்தோர் அனைவரையும் நினைத்து வீர வணக்கம் செலுத்துகிறோம்.

ஆண்டு தோறும் ஜனவரி 25 தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள் - தி.மு.கழக மாணவர் அணியில் சார்பில் நடத்தப்படுவது போலவே, இந்த ஆண்டும் நடத்தப்படுகிறது.

இந்தி ஆதிக்கம் நுழைந்து விடாமல் தடுத்திட - கண் துஞ்சாமல் காவல்புரியும் சிப்பாயாகக் கழகம் என்றென்றும் இருக்கும் என்பதை,

சங்க நாதம் செய்து தெரிவிக்கும்
நாள்தான் ஜனவரி 25 ஆம் நாள்!

அன்புடன்,

மு. க.

(08-01-1992)

1855. பொதுமக்கள் பாதுகாப்பு என்ன ஆவது?

உடன்பிறப்பே,

கடந்த ஆறுமாத காலமாகவே ஒவ்வொரு நாளும் தின இதழ்களைப் பிரித்தால் கொலை, கொள்ளை, வழிப்பறி என்று சமூக விரோதச் செயல்கள், தமிழ்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் இருக்கிறதா என்பதைக் கேள்விக் குறியாக்கி விட்டிருக்கின்றன.

ஆறுமாதத்திற்கான பட்டியலைப் போட்டு, இந்த விபரங்களை வரிசைப் படுத்துவதென்றால் ஏடு இடங்கொள்ளாது.

* டிசம்பர் 31-ஆம் நாள் முரசொலியில் நேற்று ஒரு நாள் மட்டும் சென்னையில்! என்று வெளி வந்த செய்தியில் புரசைவாக்கம் பரமசிவம் என்னும் தொழில் அதிபர் குடும்பத்தோடு வெளியூர் சென்றிருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு, அவரது வீட்டை உடைத்து 103 பவுன் நகைகளையும் மற்றும் 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களையும் கொள்ளையடித்ததையும் -

* சென்னை அண்ணா சாலையில் தபால் நிலைய அதிகாரி நாகராசன் என்பவர், நிதி நிறுவனம் ஒன்றில் கடன் வாங்கி வந்த 10 ஆயிர ரூபாயை ஒருவன் பறித்துக் கொண்டு போனதையும் -

* சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் விசா வாங்குவதற்காகக் காத்திருந்தவர்களிடம், சைக்கிளில் வந்து இறங்கிய இருவர் கத்தியைக் காட்டி மிரட்டி தங்கச் சங்கிலி,

கைக்கடிகாரம், காமிரா முதலியவற்றை அபகரித்துச் சென்றதையும் -

* சென்னை நுங்கம்பாக்கம் பட அதிபர் ஒருவர் வீட்டில் புகுந்து வேலைக்காரர்களைக் கட்டிப் போட்டு விட்டு, 15 லட்ச ரூபாய் மதிப்புள்ள நகைகளையும், பணத்தையும் திருடிக் கொண்டு போனதையும் -

* அதே நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்த செல்வம், மோகன் என்னும் இருவரை ஆட்டோவில் வந்த மூவர் கத்தியால் குத்திவிட்டு 4000 ரூபாயை பிடுங்கிக் கொண்டு ஓடியதையும் -

தொகுத்து வெளியிடப்பட்டிருந்தது. அவை ஏடுகளில் வெளிவந்த ஒரு நாள் சென்னை நிகழ்ச்சிகள்.

இதோ நான் இந்தக் கடிதம் எழுதும் இந்த நாளில் வெளிவந்துள்ள ஏடுகளில் காணப்படும் செய்திகளையும் தொகுத்துப் பார்த்தால், இப்படியொரு தொடர்கதை இன்னும் எத்தனை நாளைக்கு காவல் துறையினராலும், காவல் துறைக்கும் அமைச்சராக இருப்பவராலும் அனுமதிக்கப்பட இருக்கிறது என்ற நியாயமான கேள்வி எழுவதில் தவறு இருக்க முடியாதல்லவா?

இன்று ஏடுகளில் படித்த செய்திகளை மட்டும் கவனப்படுத்துகிறேன்.

* காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலில் பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்க நகைகள், தங்க கட்டிகள் எல்லாம் வெள்ளியாக மாறி விட்டன - இப்படியொரு செய்தி இன்றைக்கு!

* திண்டுக்கல் காந்தி கிராமத்தில், குடியரசுத் தலைவர் கூட்டத்தில் வெடிகுண்டு வீச சதி நடத்தப்பட்டது. இதுவும் இன்று வந்த செய்திதான்!

* வேலூரில் கடந்த ஒரு வாரத்தில் நான்கு கொள்ளைகள், போலீசாரை அயரவைக்கிற அளவுக்கு நடந்துள்ளன. இன்றைய செய்திதான் இதுவும்!

* சென்னை அரும்பாக்கம் காந்தி நகரைச் சேர்ந்த மளிகைக் கடைக்காரர் தங்க மாரியப்பனை வழி மறித்து, ஆட்டோவில் வந்த 4 பேர் அவரிடமிருந்த ரொக்கப் பணம் 49 ஆயிரம், கடிகாரம், மோதிரம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடி விட்டனர். இன்று வந்துள்ள செய்திதான்!

* சென்னைப் பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பில் திருடுவதற்கு முயன்ற, ஒரு கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, ஒரு ஆட்டோவைக் கடத்தியதோடு - பொதுமக்கள் துரத்தியதால் ஓடிவிட்டனர் என்பதும் இன்றைய செய்தியே ஆகும்.

* சென்னைக் கீழ்ப்பாக்கம் தாமோதரன் என்கிற ஒரு சினிமா தியேட்டர் கேஷியர், வசூலான பணத்தில் ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலையையும், 62 ஆயிரம் ரொக்கத்தையும் எடுத்துக் கொண்டு வங்கிக்குச் செல்லும் போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மின்னல் வேகத்தில் அவரைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டு கொள்ளையடித்துப் போய்விட்டனர் - இதுவும் இன்றைய செய்திதான்!

* பூங்கா நகர் பகுதி கழக செயலாளர் கொ. சி. நடராசன், அவர் தனது பாத்திரக்கடையிலிருந்து ஸ்கூட்டரில் வீடு திரும்பும் போது, முகத்தை மறைத்திருந்த ஒருவன் பின் தொடர்ந்து அவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டு தப்பிவிட்டான் - இதுவும்கூட இன்று வந்துள்ள செய்திதான்!

சென்னை மாநகரிலே மட்டுமல்ல, மாநில முழுதும் இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் மிகத் தாராளமாக நடக்கத் தொடங்கி விட்டன.

ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களே அதிகாரிகளை அடிக்கிறார்கள் - தொகுதிகளில் அட்டகாசம் செய்கிறார்கள் - அவர்களின் அடாவடித்தனம் பொறுக்க முடியவில்லை என்று நாள்தோறும் செய்திகள் குவிந்த வண்ணமிருக்கின்றன என்கிற போது, ஏனைய சமூக விரோதிகளைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

இவற்றை நான் குறிப்பிடுவதன் நோக்கம், இந்தக் குற்றங்கள் தவிர்க்கப்படவும், தடுக்கப் படவும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, இதுபோன்ற செய்திகள் வெளியிடுவதை பத்திரிகைகள் தவிர்க்க வேண்டுமென்று, அரசு ஆணையிட்டு மிரட்டுவதற்காக அல்ல!

திறமைமிக்க காவல்துறைதான்! என் செய்வது? அவர்கள் அமைச்சர்களின் பாதுகாப்புக்கே அனுதினமும் அலைய வேண்டியுள்ளதே!

சென்னை மாநகரம், பாதுகாப்பின் நிமித்தம், இன்னும் சில நாட்களில் எல்லா சாலைகளிலும் தடுப்புக் கம்புகள் (ரயில்வே கேட்) குறுக்கே வைக்கப்பட்டு சிலந்தி வலையாகக் காட்சி தரும் போலிருக்கிறது!

ஏன்? எதற்கு? பொதுமக்களின் உயிர் உடைமைகளின் பாதுகாப்புக்காகவா? இல்லை!

பொறுப்பில் உள்ளவர்க்குப் பாதுகாப்பு தேவைதான்!

பொறுப்பில் உள்ளோர் பாதுகாப்புக்காக, பொதுமக்களுக்கான பாதுகாப்பை பொறுப்பற்ற முறையில், போலீஸ் துறையினர் தட்டிக் கழிக்கலாமா?

அன்புடன்,

மு. க.

(09-01-1992)

1856. விழுப்புரம் பேச்சும் விளக்க வேண்டிய விபரங்களும்!

உடன்பிறப்பே,

விழுப்புரத்தில் அரசு நடத்திய விழாவில் எதிர்க்கட்சிகளை, குறிப்பாக தி.மு.கழகத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, அரசியல் எதிரிகளை அடக்குகிற ஆயுதமாக தடா சட்டத்தைப் பயன்படுத்த மாட்டேன் என்று கூறி, அந்த அறிவிப்பு, ஏடுகளில் கொட்டை எழுத்துத் தலைப்பாக வெளி வந்துள்ளது.

ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தடா சட்டத்தில் கைது செய்து - அவரது பெயரால் ஒரு வாக்குமூலம் தயாரித்து, அதனை நாடு முழுவதும் பரப்பி, தி.மு.கழகத்தின் மீது களங்கம் சுமத்த முயன்றதும், தொடர்ந்து முயன்று வருவதும், தடா சட்டத்தை அரசியல் எதிர்ப்பை அடக்குகிற ஆயுதமாக பயன்படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக அமையவில்லையா? என்பதே நமது கேள்வி!

இலங்கைப் போராளிக் குழுக்களைச் சேர்ந்த சிலரின் வன்முறை நடவடிக்கைகளுடன், இங்குள்ள சில கட்சிகளின் உறுப்பினர்கள் அல்லது கட்சிகளின் ஆதரவாளர்கள், எனப்படுவோரை யெல்லாம் முடிச்சுப் போட்டு இணைத்து அவர்களைத் தடா சட்டத்தில் நீண்டகாலம் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்துவது என்பது - அரசியல் எதிர்ப்புகளை அடக்கவும், மிரட்டவும், அடிபணிய வைக்கவும் நடத்தப்படும் மினி எமர்ஜன்சி நடவடிக்கைதான் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை!

அரசியல் எதிரிகளை அடக்கும் ஆயுதமாகத் தடாவைப் பயன்படுத்த வில்லை என முதல்வர் ஜெயலலிதா கூறுவது உண்மையல்ல என்பதை, ஏற்கனவே தி.மு.கழகத்தைச்

சேந்தவர்களையும், திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் தடாவில் கைது செய்து வதைப்பதிலிருந்தே, மக்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர்.

அரசியல் எதிர்ப்பை அடக்கும் ஆயுதமாகவே தடாவைப் பயன்படுத்தும் இந்த அரசு, அரசின் முதல்வராக இருக்கும் ஜெயலலிதாவின் கடந்த காலப் பேச்சுக்களையும், பேட்டிகளையும் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு,

தடா சட்டம், இப்போது பயன்படுத்தப்படும் நிலையில் - இந்த விவகாரங்களுக்கு விதிவிலக்கா? என்பதை வெளிப்படையாக அறிவித்தால் நலமாக இருக்கும்.

இதோ ஜெயலலிதா அவர்களின் சுய வாக்குமூலமும், பேட்டிகளும், பேச்சும்!

இந்திய அமைதிப் படையும், விடுதலைப்புலிகளும் போரில் மோதிக் கொண்ட பிறகு, 1988 பிப்ரவரி 22 ஆம் நாள் இந்தியன் எக்ஸ்பிரசுக்கு ஜெயலலிதா அளித்த பேட்டியில் :-

> விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாத எந்தவொரு பேச்சு வார்த்தையும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்களது நலன் காத்திடும் வகையில் அமைவது மிகவும் கடினம். நான் விடுதலைப்புலிகளின் தலைவர்களை சமீபகாலத்தில் பல தடவை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அந்த சந்திப்புகளின் போது என்ன பேசினோம் என்பதை தெரிவிப்பதற்கில்லை.

1988 மார்ச் முதல் தேதி இந்து ஏட்டுக்கு அளித்த பேட்டியில் :-

> நான் எல்.டி.டி.ஈ. பிரதிநிதிகள் சிலருடன் பேசியிருக்கிறேன். அவர்கள் இளைஞர்களாகவும், இலட்சியவாதிகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளை நாம் புரிந்து கொண்டால்தான் பிரச்சினையை தீர்க்க முடியும்.

1988 மார்ச் 21 - ஜெயலலிதா கூட்டிய செய்தியாளர்கள் கூட்டத்தில் :-

> விடுதலைப்புலிகள் மீதான இராணுவ நடவடிக்கையை இந்தியா நிறுத்திக் கொள்ள வேண்டும். பிரபாகரனை அழைத்துப் பேச வேண்டும். இந்திய அமைதிப்படையினால் பிரபாகரனுக்கு ஏதாவது

ஒரு தீங்கு ஏற்பட்டால், அது தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கும்.

1990 அக்டோபர் 3 ஆம் தேதி (அதாவது பத்மநாபா கொல்லப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு) இந்தியன் எக்ஸ்பிரசுக்கு அளித்த பேட்டியில் :-

கடந்த இரண்டு மாதங்களாக விடுதலைப்புலிகள், (எல்.டி.டி.இ.) தமிழ் நாட்டில் புகார் கூறப்படுகிற அளவுக்கு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அவர்கள் சிங்கள இராணுவத்தை எதிர்த்து ஒரு மகத்தான போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கினால் இலங்கையில் உள்ள தமிழ் இனம் முழுமையும் அழிந்து விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. விடுதலைப்புலிகளின் வெற்றியே ஈழத் தமிழர்களின் வெற்றி!

1990 அக்டோபர் ஏழாம் தேதி எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழாவில் ராஜீவ் காந்தி அவர்களின் முன்னிலையில் :-

மத்தியில் உள்ள (வி.பி. சிங்) அரசும், மாநிலத்தில் உள்ள (தி.மு.க.) அரசும் இலங்கைத் தமிழர்களைக் காக்க எதுவும் செய்யவில்லை. இப்போது நடக்கும் சண்டையில் விடுதலைப்புலிகள் வீழ்ச்சியடைந்தால் அந்தத் தீவில் உள்ள தமிழ் இனமே சின்னாபின்னமாகிவிடும். மாநில (தி.மு.க.) அரசு, அவர்களுக்கான உதவிகளை அதிகப்படுத்த வேண்டும்.

1991 ஏப்ரல் 29 அன்று இந்து இதழுக்கு அளித்த பேட்டியில் :-

இலங்கையில் இனப்படுகொலை நீடித்துக் கொண்டே யிருந்தால், முன்பு இந்திராகாந்தி பங்களாதேஷில் இராணுவ நடவடிக்கை எடுத்தது போல, இலங்கை மீதும் எடுப்பது பற்றி யோசிப்பதில் தவறில்லை என நான் கருதுகிறேன்.

உடன்பிறப்பே, இன்றைய முதல்வரே 1988, 1990, 1991 ஆகிய ஆண்டுகளில் அளித்த பேட்டிகள், வழங்கிய கருத்துகள் அனைத்திலும் ஒரு வாக்குமூலம் போலவே, அவருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற ரகசிய

சந்திப்புக்களைக் கூறியிருக்கிறார். பேசிய விபரங்களை வெளியிட மறுத்திருக்கிறார். பிரபாகரனுக்கு எந்தத் தீங்கு விளையவும் இந்திய ராணுவம் காரணமாக இருந்தால் தமிழ்நாடு கொந்தளிக்கும் என எச்சரித்திருக்கிறார். பங்களாதேஷை உருவாக்கியது போல, தமிழ் ஈழம் உருவாக்க இந்திய இராணுவம் செல்லலாம் என்றும் யோசனை கூறியிருக்கிறார்.

ஆனால், இன்று அவர் ஆட்சிக்கு வந்தவுடன் - அரசியல் எதிர்ப்பை அடக்கிட தடா சட்டத்தைப் பயன்படுத்தவில்லை என்று சொல்லிக் கொண்டே, அதனைத் தீவிரமாகப் பயன்படுத்தி வருகிறார்.

மீண்டும் ஒருமுறைக்குப் பலமுறை அவரது பேட்டிகள், பேச்சுகளைப் படித்துப் பார்த்துவிட்டு, விபரங்களை மக்களுக்கு நீ விளக்கிடவேண்டும் என்பதற்காகவே, இதனை எழுதுகிறேன்.

முதல்வர் ஜெயலலிதாவின் விழுப்புரம் பேச்சின் காரணமாக, இதை எழுத நேரிட்டது.

அன்புடன்,

மு. க.

(10-01-1992)

1857. கல்வி நீரோடையில் முதலைகள்!

உடன்பிறப்பே,

கல்வி நீரோடையில் முதலைகள் என்று அண்ணன் குத்தூசி குருசாமி அடிக்கடி விடுதலையில் எழுதுவார். இப்போது அதே தலைப்பில், வேறு ஒரு விவகாரம் பற்றி இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

பல்கலைக் கழகம் என்பது, கல்லூரிகளைத் தலைமை தாங்கி நடத்தும் அறிஞர்களும், கல்வி வல்லுநர்களும் அடங்கிய அமைப்பாகும். பாடத் திட்டங்கள் எழுதுமுறை விதிகளை வகுக்கும் முன்னோடி நிறுவனமாகும்.

அதுவே தவறுக்கு வழி வகுக்கலாமா? என்பது ஒரு கேள்வி!

அதுபோலவே வட்டாரக் கல்வி இயக்குநர் அலுவலகம் என்பது, கல்லூரி நிர்வாகம், நிதி அனுமதி, ஆசிரியர் நியமித்தல், ஒழுங்குபடுத்தல் போன்ற முக்கிய பணிகளைச் செய்கின்றது.

அதுவும் தவறுக்குத் துணைபோகலாமா? என்பது மற்றொரு கேள்வி!

இந்த இரண்டு கேள்விகளும் எழுந்துள்ளதற்கு என்ன காரணம் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டாமா?

தவறு செய்யக்கூடிய கல்லூரிகளையும், வரம்பு மீறும் கல்லூரிகளையும் தட்டிக்கேட்கும் நிலையில் உள்ள பல்கலைக் கழகமும், அரசுக் கல்வித்துறையும் தனியார் கல்லூரிகளையும், சுயநிதிக்கல்லூரிகளையும் கேட்டுப் பணம் பெற்றால், அந்த முறை - தவறான வகையில் அவைகளுக்குச் சலுகைகளை அளிப்பதற்கும், அந்தக் கல்லூரிகளும் அத்தகைய சலுகைகளைக் கேட்டுப் பெறுவதற்கும் கதவு திறந்து விட்ட கதையாகி விடாதா?

இந்த வினாக்கள் எங்கே ஆரம்பிக்கின்றன தெரியுமா?

சென்னைப் பல்கலைக் கழகம் முதல்வர் ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

பிரச்சினை இப்போது டாக்டர் பட்டம் வழங்கியதைப் பற்றி அல்ல!

பட்டம் வழங்கப்பட்ட நாளான 19.12.91 அன்று வெளிவந்த நான்கு தமிழ் தினசரிகளில் அளிக்கப்பட்டிருந்த விளம்பரத்தைப் பற்றியது!

அது ஒரு முழுப்பக்க விளம்பரம் - நான்கு நாளேடுகளில் வந்த அந்த விளம்பரம், எத்தனையோ ஏடுகளில் வந்த, வண்ணவண்ண விளம்பரங்களைப் போன்றதல்ல!

ஆளுநர், நிதியமைச்சர், கல்வி அமைச்சர், துணைவேந்தர், கல்வி இயக்குநர் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளைக் கொண்டதும், ஜெயலலிதா அவர்களைச் சென்னைப் பல்கலைக் கழகம் பாராட்டி எழுதிய வாசகங்கள் அமைந்ததுமாகும்.

அந்த விளம்பரத்தை அளித்த கல்லூரிகள் என்ற பட்டியலில் பெருமகிழ்ச்சியடைந்து வாழ்த்துக்கூறும் கலைக்கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் எனும் தலைப்புகளில் - மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி, தொரப்பாக்கம் டி.பி. ஜெயின் கல்லூரி மற்றும் மருந்தகக் கல்லூரி, டி.டி.ஜி.டி. வைஷ்ணவ கல்லூரி, எத்திராஜ் கல்லூரி, எஸ்.ஐ.இ.டி. பெண்கள் கல்லூரி, லயோலா கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை சமூகப் பணிப் பள்ளி, சென்னை மீனாட்சி கல்லூரி, சென்னை புதுக்கல்லூரி, என்.கே.டி. நேஷனல் காலேஜ், எஸ்.டி.என்.பி. பெண்கள் வைஷ்ணவக் கல்லூரி, சென்னை கௌரிவாக்கம் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ் காலேஜ், தியாகராய கல்லூரி, விவேகானந்தா கல்லூரி, பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, ஓசூர் அதியமான் காலேஜ், மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கல்லூரி, செய்யார் அருள் மிகு மீனாட்சி அம்மன் கல்லூரி, சென்னை பாரத் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி, மத்திய சட்டக் கல்லூரி (சேலம்) கேளம்பாக்கம் தனபாலன் பெண்கள் கல்லூரி, இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி, மதுரவாயல் எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரி, சென்னை சத்ய பாமா பொறியியல் கல்லூரி, வண்டலூர் கிரசென்ட் பொறியியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர் ராமசாமி பொறியியல் கல்லூரி, பூந்தமல்லி வெங்கடேஸ்வரா பொறியியல்

கல்லூரி, வேலூர் இன்ஜினியரிங் கல்லூரி, சேலம் விநாயக மிஷன் இன்ஜினியரிங் கல்லூரி, கலவை ஆதிபராசக்தி காலேஜ் ஆப் சயின்ஸ், அண்ணாநகர் அண்ணா ஆதர்ஷ் பெண்கள் கல்லூரி, செவிலியர் தாமஸ் எலிசபெத் பெண்கள் கல்லூரி, நெய்வேலி ஜவகர் சயின்ஸ் காலேஜ், ஓசூர் எம்.ஜி.ஆர். கல்லூரி, முகமது சதாக் காலேஜ், திருச்செங்கோடு செங்குந்தர் ஆர்ட்ஸ் காலேஜ், கெல்லீஸ் சிந்து கல்லூரி, காஞ்சி சங்கரா ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் காலேஜ், கடலூர் புனித ஜோசப் காலேஜ், விழுப்புரம் தெய்வானை அம்மாள் பெண்கள் கல்லூரி, அண்ணா நகர் வள்ளியம்மாள் பெண்கள் கல்லூரி, சேலம் வைசியா கல்லூரி - என நாற்பதுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன.

அதாவது அந்தக் கல்லூரிகளே முன்னின்று, அந்த முழுப்பக்க விளம்பரங்களை அளித்தது போன்ற ஒரு தோற்றம்.

ஆனால் உண்மை என்ன? விளம்பரங்கள் பல்கலைக் கழக அதிகாரிகளாலும், எலிகண்ட் எனப்படும் விளம்பர நிறுவனத்தினராலும் அனுப்பப்பட்டுள்ளன.

இது எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா?

சென்னை வட்டாரக் கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் ஏ. திலகவதி அவர்கள் 6.1.92 அன்று ஒவ்வொரு கல்லூரி முதல்வருக்கும் தனது கையெழுத்திட்ட கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதாவது பட்டமளிப்பு விழா விளம்பரப் பட்டியலில் இடம் பெற்றுள்ள கல்லூரி முதல்வர்களுக்கு அனுப்பியுள்ளார். அவரே விருப்பத்துடன் அந்தக் கையெழுத்தைப் போடவில்லை யென்றும், வலியுறுத்தலினால் போட்டார் என்றும் ஒரு செய்தி!

எப்படியோ அவரது கையெழுத்துடன் 6.1.92 என்று குறிக்கப்பட்ட தேதியும், தட்டச்சு செய்யப்பட்ட கடிதத்தின் தலைப்பில் 6.1.92 என்று குறிக்கப்பட்ட தேதியும் கொண்டு, விளம்பரத்தில் கண்டுள்ள கல்லூரிகளின் முதல்வர்களுக்குக் கடிதம் போய்ச் சேர்ந்திருக்கிறது. அவற்றில் ஒரு கடிதம் என் கைக்குக் கிடைத்தது. ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்ட கடிதம், இதோ அப்படியே தமிழில் தருகிறேன்.

முதலமைச்சருக்கு சென்னைப் பல்கலைக் கழகம்
டாக்டர் பட்டம் வழங்கிய 19.12.91 அன்றைய

தினம் செய்தி ஏடுகளில் வந்த விளம்பரங்களின் செலவுகளை கல்லூரிகள் ஏற்றுக் கொண்டதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

கடிதத்தின் முதல்பகுதி இது! இதைப் படித்த பல கல்லூரி முதல்வர்கள் திடுக்கிட்டுப் போயிருக்கிறார்கள்.

சென்னை வட்டாரக் கல்லூரி கல்வி இயக்குநரே இப்படியொரு கடிதம் - முதலமைச்சரின் பட்டமளிப்பு விழா விளம்பரம் குறித்து எழுதினால், கல்லூரி முதல்வர்களுக்கு வியப்பும் திகைப்பும் இருக்காதா?

அந்தக் கடிதத்தின் அடுத்த பகுதிகளைப் பார்ப்போம்!

விளம்பரங்கள் பல்கலைகக் கழக அதிகாரிகளாலும், எலிகண்ட் நிறுவனத்தாலும் அனுப்பப்பட்டன. நான்கு தமிழ் ஏடுகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. முதலில் ஒரே ஒரு செய்தி ஏட்டில் விளம்பரம் கொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருந்தாலும், சில சூழ்நிலைகளால் நான்கு ஏடுகளில் விளம்பரம் செய்யப்பட்டன.

அந்த விளம்பர செலவுக்கான கட்டணம் குறித்து எலிகண்ட் விளம்பர நிறுவனம் அனுப்பியுள்ள பில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த தொகையை விட இப்போது அதிகம் செலவாகியுள்ளதால், விளம்பரத் தொகையை செலுத்துவதற்கு, தயக்கம் காட்டமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

எனக்காக இதை அன்புடன் தாங்கிக்கொள்ளவும். பில்லில் குறிப்பிட்டுள்ள தொகைக்கான காசோலையை எனக்கு அனுப்பி வைக்கவும். மொத்த தொகைக்கான காசோலைகளை சேர்த்து உரிய நபரிடம் அனுப்புவதற்கு எனக்கு ஏதுவாக இருக்கும்.

இங்ஙனம்

ஏ. திலகவதி

உடன்பிறப்பே, அந்தக் கடிதத்துடன் பத்தாயிர ரூபாய்க்கான பில் ஒன்றும், 19.12.91 முதலமைச்சர், டாக்டர் பட்டம் பெறும்

விழாவுக்காக கல்லூரி கொடுத்த விளம்பரத்திற்காக என்ற விபரமும் இணைந்த எலிகண்ட் விளம்பர நிறுவனத்தாரிடமிருந்து வந்த மடலும் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளது.

தலா ஒவ்வொரு கல்லூரியும், அந்த விளம்பரச் செலவில் பத்தாயிரம் ரூபாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் வட்டாரக் கல்லூரி கல்வி இயக்குநரிடமிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தின் சாரம்!

ஒரு ஏட்டுக்கு மட்டும் கொடுப்பதாயிருந்த விளம்பரம் சில சூழ்நிலை காரணமாக நான்கு ஏடுகளுக்கு தரும்படியாக ஆகிவிட்டது என்றுள்ள கடித வாசகத்தின் படி, அந்தச் சூழ்நிலை என்பது என்ன? எங்கிருந்து அந்தச் சூழ்நிலை ஆணையாக வந்தது?

அரசாங்க இயந்திரம் எப்படியெல்லாம் நெறிகெட்டு இயங்குகிறது - அல்லது இயக்கப்படுகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டல்லவா?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல - அந்தப் பழமொழி அனைத்துக்கும் பொருந்தும் அளவில்தான் இந்த அரசின் நிர்வாகம் எல்லாவகையிலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

இந்த முறைகேட்டுக்குப் பல்கலைக் கழகமும் கூட்டு சேர்ந்து கொள்கிறது என்கிற போது, நினைக்கவே பெரும் வேதனையாக இருக்கிறதல்லவா?

நான்கு தமிழ் ஏடுகளில் வெளிவந்த முழுப்பக்க விளம்பரச் செலவை கல்லூரிகளின் தலையில் கட்டியுள்ள தமிழக அரசு, ஆங்கில நாளேடுகளில் வெளிவந்த முழுப்பக்க விளம்பரங்களுக்கான செலவை யார் தலையில் கட்டியதோ?

என்ன செலவோ?

என்னென்ன சலுகையோ?

அன்புடன்,

மு. க.

(11-01-1992)

1858. கேட்டது கிடைக்கவில்லை - முன்பு கிடைத்ததும் கிட்டவில்லை!

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு 1991 ஜனவரி முதல் வாரத்தில், தமிழக அரசின் 1991-92 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டுக்கான விவாதத்தில் கலந்துகொண்டு, மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெற சந்திரசேகர் ஆட்சியில் திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. மோகன்தாரியாவை சந்தித்து நானும், தமிழக அரசு அதிகாரிகளும் உரையாடி (91-92 ஆம் ஆண்டுக்கு) திட்ட ஒதுக்கீடு 1600 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றோம்.

அப்போது முதல்வரின் டெல்லிப் பயணம் வெற்றி என்றும், கடந்த 90-91 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை விட 150 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டுக்கான தொகை அதிகமாகியிருக்கிறது என்றும், மொத்தமாக 1600 கோடி ரூபாய்க்கான மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெற்று வந்தது பாராட்டுக்குரியதென்றும் ஏடுகள் எழுதின.

இப்போது 92-93 ஆம் ஆண்டுத் திட்ட ஒப்புதல் 1751 கோடி ரூபாய்க்கு தேவையென்று இன்றைய முதல்வர் ஜெயலலிதா, டெல்லி சென்று மத்திய திட்டக் குழுவிடம் எடுத்துரைத்து, கேட்டதற்கு 265 கோடி ரூபாய் குறைவான ஒப்புதலை மட்டுமே பெற்றுள்ளார். இந்த ஒப்புதல், கேட்டதை விடக் குறைவு என்பது மட்டுமல்ல. கழக ஆட்சியில் 91-92 ஆம் ஆண்டுக்கென மத்திய திட்டக் குழுவிடம் பெற்ற திட்டஒதுக்கீடு ஒப்புதலை விட 120 கோடி ரூபாய் குறைவாக இப்போது பெற்றுள்ளனர்.

கழக ஆட்சியில், 150 கோடி ரூபாய் அதிக ஒதுக்கீடு வழி செய்து 1600 கோடி ரூபாய் என திட்ட ஒதுக்கீடு ஒப்புதல் கிடைத்திருக்க, ஜெயலலிதா ஆட்சியில், அந்த 1600லும் 120

கோடி குறைந்து 1486 கோடி ரூபாய்க்கான திட்ட ஒதுக்கீடு ஒப்புதலே பெற முடிந்துள்ளது. ரூபாயின் மதிப்புக்கு இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள சரிவைக் கணக்கிட்டால் இது மேலும் குறைவான தொகையாகும்.

திட்டக் குழுத் துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்கள், இது பற்றிக் குறிப்பிடும் போது இந்த ஆண்டு இறுதி வரையிலான செலவுடன் இந்த ஒதுக்கீட்டை ஒப்பிட வேண்டுமே தவிர, நடப்பு நிதி ஆண்டின் ஒதுக்கீடு மதிப்பீட்டுடன் இதை ஒப்பிடக் கூடாது என்று கூறியுள்ளார்.

இதிலிருந்து தெரிகிற உண்மை என்ன?

91-92 ஆம் ஆண்டுக்கு திட்ட ஒதுக்கீடாக ஒப்புதல் பெற்ற தொகை 1600 கோடியை அ.தி.மு.க. அரசு, வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவழிக்கவில்லை என்பது புலனாகிறது.

செலவழித்துத் திட்டங்களை தொடங்கியிருந்தாலோ - தொடர்ந்திருந்தாலோ, அப்படிச் செலவழிக்கப்பட்ட மதிப்பீட்டை வைத்து 92-93 ஆம் ஆண்டுக்கு 1600 கோடி ரூபாய்க்கு மேலாக திட்ட ஒதுக்கீடு ஒப்புதல் கிடைத்திருக்கும்.

1991 தொடக்கத்தில் கழக ஆட்சி கலைக்கப் பட்ட பிறகு, சில மாதங்கள் கவர்னர் ஆட்சியிலும் - அதன்பிறகு ஜெயலலிதா ஆட்சியிலும் திட்டங்களுக்காக செலவிடுவதற்குப் பதில், அரசியல் கட்சிகளைப் பழி வாங்குவதற்கே அதிக நேரத்தை செலவு செய்து விட்டார்கள்! இன்னமும் தொடர்ந்து அந்தப் பழி வாங்கும் படலமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கழக ஆட்சியில் மத்திய திட்டக் குழு விவாதத்தின் போது - திட்டக் குழுத் துணைத் தலைவர் மோகன்தாரியா அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் இந்தியாவின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட, அதிகமாக இருப்பது தனித் தன்மை வாய்ந்ததாகும். ஒவ்வொரு நபருக்கும் மேற்கொண்டுள்ள திட்டச் செலவில், தமிழ்நாடு மிக அருமையான சாதனையைச் செய்துள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, தமிழ்நாட்டின் திட்டமிடும் இயந்திரம் மிக உயரியதாகும். பல்வேறு முனைகளிலும் தமிழக அரசு மேற்கொண்டுள்ள அரிய முயற்சிகளையும், ஏழைகளின் துயர் துடைத்திட ஒதுக்கிச்

செலவிடப்பட்டுள்ள மிகுந்த நிதி அளவையும் கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறேன்.

என்று புகழாரம் சூட்டினார்.

உடன்பிறப்பே,

வெறும் அறிவிப்புகள், ஆடம்பரங்கள், அலங்கார விளம்பரங்கள் என்ற அளவோடு நின்று, திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை கொள்ளாது - அதற்குரிய ஒதுக்கீடான 1600 கோடி ரூபாயை செலவு செய்யாமல் - 91-92 ஆம் ஆண்டில் நடத்திய நிர்வாகக் குளறுபடியால், 92-93 ஆம் ஆண்டு திட்டத்திற்கான தொகை - உள்ளதும் போச்சு என்று நிலையில், கடந்த ஆண்டை விட 120 கோடி குறைவாகப் பெறக்கூடிய அவலத்திற்குத் தமிழ்நாடு ஆளாகியிருக்கிறது!

எனவேதான் சொல்லுகிறேன்! இது எதிர்க்கட்சிகளை திட்டுகிற அரசே தவிர, திட்டமிடுகிற அரசு அல்ல! அரசியல் எதிரிகளைப் பழிவாங்க அரிவாளைத் தீட்டுகிற அரசே தவிர, மக்களுக்குத் தேவையான அரிய திட்டங்களை தீட்டுகிற அரசு அல்ல! என்று!

இந்த உண்மையை விளக்குவதே, ஜெயலலிதா நடத்திய திட்டக் குழு திக் விஜயத்தின் தோல்வியாகும்!

அன்புடன்,

மு. க.

(12-01-1992)

1859. மார்க்சிஸ்டு கட்சியின் கவனத்திற்கு!

உடன்பிறப்பே,

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு, தி.மு. கழகம் பற்றியும், நடந்து முடிந்த தேர்தலின் முடிவு பற்றியும் வெளிப்படையாக விடுத்த விமர்சன அறிக்கை குறித்து என்னைச் செய்தியாளர் ஒருவர் கருத்து கேட்ட போது பின்வருமாறு சொன்னேன்:-

ஆளுங்கட்சியை எதிர்க்கட்சி வெளிப்படையாக விமர்சிக்கலாம். அதுபோல எதிர்க்கட்சி குறித்து, ஆளுங்கட்சியும் விமர்சிக்கலாம். தோழமையல்லாத எதிர்க்கட்சிகளும் விமர்சனங்களில் ஈடுபடலாம். ஆனால் தோழமைக் கட்சிகளுக்குள் ஒன்றைப் பற்றி ஒன்று, வெளிப்படையாக விமர்சிக்கத் தொடங்கினால் - அந்தக் கட்சிகளின் அடிமட்டத்துத் தொண்டர்களிடையே தேவையற்ற மனக்கசப்புகள் வளர வழி வகுக்கும்.

இதுதான் நான் சொன்ன கருத்து. மார்க்சிஸ்டு கட்சி சார்பில் வெளிப்படையாக என்ன விமர்சனம் செய்தார்களோ, அது பற்றியே என்னிடமும், பேராசிரியரிடமும் அக்கட்சியின் மாநிலத் தலைவர்கள் நீண்ட நேரம் விவாதித்திருக்கிறார்கள். நாங்களும் பல விளக்கங்களை அந்த விவாதத்தின் போது, அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறோம். சுமார் ஒருமணி நேரத்துக்கு மேல் பேசியபிறகு கூட, இன்னும் ஏதாவது சந்தேகமிருந்தால் கேளுங்கள். மீண்டும் சந்தித்துப் பேசுவோம். பிரச்சினைகளை விவாதித்துப் பேசித் தீர்ப்பது இருவருக்குமே நல்லது. நமது தோழமை உணர்வுக்கும் நல்லது என்று நான் கூறியிருக்கிறேன்.

அதன்பிறகு சில நாட்கள் கழித்துத்தான், தி.மு.க. குறித்த அவர்களது வெளிப்படையான விமர்சனம் அறிக்கையாக

ஏடுகளில் வந்து, அந்த ஏடுகள் சிலவற்றில் மார்க்சிஸ்ட் கட்சி, தி.மு.க.வின் தோழமையைத் துண்டித்துக் கொள்ளப் போகிறது என்ற யூகங்களும் எழுதப்பட்டன என்பதை அனைவரும் அறிவர்.

அதன்பிறகு செய்தியாளர்கள் கேள்விக்குப் பதில் அளித்த தமிழ் மாநில செயலாளர் நல்லசிவன் எம்.பி. அவர்கள், தி.மு.க.வுடன் மார்க்சிஸ்ட் கட்சியின் தோழமை தொடரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு விமர்சனம் குறித்து, மதுரை திராவிட இயக்கப் பவள விழா மாநாட்டில் பேசிய தம்பி முரசொலி மாறன், தி.மு.கழகம் அண்ணா வழி நின்று பார்ப்பனியம் என்ற தன்மையைத்தான் எதிர்க்கிறதே தவிர, பார்ப்பனர்களைத் தனிப்பட்ட முறையில் எதிர்க்கிற இயக்கமல்ல என்று குறிப்பிட்டதோடு - எப்படி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, பி.ஜே.பி. பரப்பிடும் இந்து சனாதன அடிப்படை உணர்வுகளால், மதச்சார்பற்ற தன்மைக்கு ஆபத்து வரும் என்று கூறுகிறதோ, அதே முறையில்தான் கழகமும் தனது கருத்தை எடுத்து வைக்கிறது என்றும் விளக்கமளித்தார். நடந்து முடிந்த தேர்தலில் தென்னகம் மட்டுமன்றி, வடபுல மாநிலங்களிலும் ராஜீவ்காந்தியின் படுகொலைக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றத்தை, புள்ளி விபரங்களுடன் சுட்டிக் காட்டினார். இத்தனை விளக்கங்களுக்குப் பிறகும் கூட, மார்க்சிஸ்ட் கட்சி, வெளிப்படையாகச் செய்துள்ள இந்த விமர்சனம், தோழமையைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு அமைந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான் நீங்களுமா? என்று ஆதங்கத்துடன் கேட்டார்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநாட்டையொட்டி, 9.1.92-ல் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் சங்கரய்யா அவர்கள் ஆற்றிய உரை வெளி வந்துள்ளது.

தி.மு.க. தேவையில்லாமல் பிராமண எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. இத்தகைய பிராமண எதிர்ப்பு நிலையை எடுக்கலாமா?

இது தோழர் சங்கரய்யாவின் கேள்விகளில் ஒன்று!

முதலமைச்சர் ஜெயலலிதா, தன்னைத்தானே பாப்பாத்தி என்று சட்டப்பேரவையில் சொல்லிக் கொண்டதைக் கண்டிப்பதும்,

கேலி செய்வதும், ஒரு முதலமைச்சர் இப்படிப் பேசலாமா என்று கேட்டதும் தவறானது என்று யாரும் கூற முடியாது!

நீதிக்கட்சி காலத்தில், நல்ல நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அறநிலையத் துறையை, தொடர்ந்து வந்த எல்லா ஆட்சிகளிலும் செம்மைப்படுத்துகிற முயற்சிகளிலேயே ஈடுபட்ட நிலைக்கு மாறாக - அந்தத் துறையை பலவீனப்படுத்தி, ஆலய வாரியம் அமைத்ததும், வேதக் கல்லூரியொன்று ஒரு கோடி ரூபாய்ச் செலவில் அரசு நிறுவும் என அறிவித்ததும், ஆலய நிதி வசூலிப்பதும், மதச்சார்பற்ற தன்மைக்கு விரோதமான இந்து சனாதன ஆதிக்கத்திற்கு வழிவகுப்பவை எனக் கழகம் சுட்டிக் காட்டுவதும் எப்படி பிராமண எதிர்ப்பு ஆகும்?

தினமணி போன்ற சில ஏடுகளில்தான் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் எதிரான கருத்துகள் எழுதப்பட்டு, அவற்றுக்கு பதில் அளிக்க வேண்டிய கடமை முரசொலி இதழுக்கு ஏற்பட்டது! அதன் விளைவாக, தினமணி தமிழுக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் மாசு கற்பிக்க முனைந்த நிலையிலேயிருந்து இப்போது தன்னை மாற்றிக் கொண்டிருப்பதையும் காணலாம். இருந்தபோதிலும், தி.மு.க.வுக்கு எதிரான அதன் மனப்பான்மையும், தன்மையும் நீங்கியபாடில்லை!

தி.மு.க.வுக்கு தேர்தலில் வாக்களிக்கக் கூடாது என அறிக்கை விடுத்தும், இப்போது நடப்பது நமது ஆட்சி என அறிக்கை விடுத்தும் செயல்பட்ட பிராமணர் சங்கத்தின் போக்கை, தி.மு.க. கண்டித்தது; எந்த வகையில் தனிப்பட்ட பிராமண எதிர்ப்பு ஆகும்?

மேலும் அந்தக் கூட்டத்தில் பேசிய சங்கரய்யா அவர்கள் தி.மு.கழகம் (கர்நாடக தமிழர் பிரச்சினையில்) ஒரு தவறான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. கன்னட மக்களுக்கு எதிராகக் குரல் எழுப்பியிருக்கிறது. தமிழ்நாடு, ஆந்திரம், கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியது திராவிடம் என்கிற போது, கர்நாடகத்திற்கு எதிரான நிலைப்பாடு தி.மு.க. கொள்கைக்கு முரண்பாடு அல்லவா? என மற்றொரு கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

முதலில் தோழர் சங்கரய்யாவும் எனது அருமை மார்க்சிஸ்ட் கட்சி நண்பர்களும், காவிரிப் பிரச்சினையில் தி.மு.கழகமும், தி.மு.க. ஆட்சியும் இருமாநில மக்களுக்கும் பாதகம் ஏற்படாமல், தமிழ்

மாநில மக்களின் உரிமைகளுக்காக எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொண்டன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நடுவர்மன்றம் குறித்து, இன்றைக்கு மார்க்சிஸ்டு கட்சிக்கு எத்தகைய கருத்தோட்டம் உள்ளது என்பது எனக்கு சரியாகத் தெரியாது.

ஆனால் 1990 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், காவிரிப்பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திட, தமிழக அரசின் சார்பில் அன்றைய பொதுப்பணி அமைச்சர் தம்பி துரைமுருகன் தலைமையில், அனைத்துக் கட்சிக் குழுவினர் பிரதமர் வி.பி.சிங்கை சந்திக்கச் சென்ற போது, அந்தக் குழுவில் மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் நண்பர் நல்லசிவன் எம்.பி. அவர்களும் இடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே நடுவர்மன்றம் என்பது, இருபது ஆண்டுகாலத்திற்கு மேலாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளால் பலன் ஏற்படவில்லை என்பதால், தவிர்க்க முடியாமல், வலியுறுத்திப் பெற்ற தமிழக அரசின் கோரிக்கையாகும்.

இது கன்னட மக்களுக்கு விரோதமானது என்று சங்கரய்யா அவர்கள் கூறமாட்டார் என்றே நம்புகிறேன்.

கன்னட மக்களுக்கு எதிரான குரல் தி.மு.க. எழுப்பியிருக்கிறது என்ற அவரது குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

மதுரை பவள விழா மாநாட்டுத் தீர்மானத்தைப் படித்துப் பார்த்தால், அதில் தமிழ்நாட்டுப் பாசன உரிமையின் அடிப்படையில் கருத்தறிவிக்கப்பட்டும், கர்நாடகத்தில் தமிழர்கள், கர்நாடகக் காங்கிரஸ் அரசின் தூண்டுதலோடு, கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கி விரட்டப்படுவதும், மத்திய அரசின் அலட்சியப் போக்கால் ஏற்பட்ட விபரீதங்கள் எனச் சுட்டிக் காட்டி, உடனடியாக கர்நாடகத் தமிழர்களைக் காத்திட மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியும்தான் வாசகங்கள் அமைந்துள்ளனவே தவிர, கன்னட மக்களுக்கு எதிரான குரல் எதுவும் எழுப்பப் படவில்லை.

தோழர் சங்கரய்யா 9.1.92ல் கடற்கரையில் பேசுகிறார். கட்சியின் மாநாட்டுப் பணிகளின் காரணமாக, 7.1.92ல் நான்

முரசொலியில் எழுதியிருந்த கடிதத்தைப் படித்திட அவருக்கு நேரமிருந்திருக்காது என நினைக்கிறேன்.

7.1.92 முரசொலியில் நான் எழுதியுள்ள கடிதத்தின் தலைப்பே கர்நாடகத்தின் கனிவான சிந்தனைக்கு! என்பதுதான்!

அதில் இறுதிப் பகுதியில், உலகத்தில் பல நாடுகள் வழியாக ஓடும் நதிகளின் தாவாக்கள் எல்லாம் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கே, ஒரே நாட்டுக்குள் மாநிலங்களுக்கிடையே இப்படியொரு தகராறு இருக்கலாமா? கர்நாடகத்தில் உள்ளவர்கள் இதனைச் சிந்திக்க வேண்டாமா? சிந்தித்துப் பார்த்தால் இந்தப் பிரச்சினையைப் பற்றிய நுணுக்கங்கள் எதுவும் தெரியாமல், கர்நாடகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற அப்பாவித் தமிழர்களை இவ்வளவு அல்லலுக்கு ஆளாக்கியிருப்பார்களா? இப்போதும் இருமாநிலங்களின் உறவும் ஊனமடையாமல் காக்கப்படவும் - ஒற்றுமை, ஒருமைப்பாடு என்ற கொள்கைகள் வலுப்பெறவும், ஒத்துழைப்புத் தர வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு கர்நாடக அரசியல் தலைவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன் என்றுதான் எழுதியிருக்கிறேன். கழகத்தின் அணுகுமுறை இவ்வாறு இருக்க, இல்லாத ஒன்றை கற்பனை செய்து கொண்டு மார்க்சிஸ்ட் கட்சி நண்பர் பேசியிருப்பது விந்தையாக உள்ளது.

கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழகம் உள்ளடக்கியதுதானே திராவிடம் - அப்படியிருக்க, கர்நாடகத்திற்கு எதிரான நிலைப்பாடு, தி.மு.க. கொள்கைக்கு முரண்பாடல்லவா?

என்று அவர் கேட்டுள்ளார் - திராவிட முன்னேற்றக் கழகம், அவர் கூறுகிற திராவிடப் பிரிவினையை 1962ஆம் ஆண்டிலேயே கைவிட்டு விட்டது! நான்கு மாநிலங்களுக்கிடையே, இனவழிக் கலாச்சாரத் தொடர்பு நிலவிட வேண்டிய அவசியத்தையே தி.மு.க. வலியுறுத்தி வருகிறது.

தோழர் சங்கரய்யா குறித்துக்காட்டும் நான்கு மாநிலங்கள் அடங்கிய திராவிடம், இந்தியாவுக்குள்தான் இருக்கிறது.

அதற்காக ஒரு மாநிலத்தின் உரிமையை, அப்படியே விட்டுக் கொடுத்து விட்டு - அந்த மாநிலம் பாலைவனமாகி விட வேண்டுமென்பதை, ஒருமைப்பாட்டில் நம்பிக்கை உடைய யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுதான் என்பது கிராமத்துப் பழமொழி!

கர்நாடகத்திற்கு எதிரான நிலைப்பாடு ஒன்றைக் கழகம் எடுப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு, ஒரு துளியும் உண்மையற்ற குற்றச் சாட்டாகும்!

பாதிக்கப்படும் தமிழகத்திற்கும் - இலட்சக் கணக்கில் அகதிகளாக ஓடிவரும் கர்நாடகத் தமிழர்களுக்கும் - பரிந்து பேசுவதும், குரல் கொடுப்பதும் கன்னட மக்களுக்கு எதிரான குரலாகாது!

அன்புடன்,

மு. க.

(13-01-1992)

1860. மும்முனைப் போராட்டம் வெற்றி பெற!

உடன்பிறப்பே,

தலைமை நிர்வாகக் குழுவின் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பெற்று, மூன்று முனைகளில் போராட வேண்டிய அவசிய நிலை குறித்து விவாதித்து முதல் கட்டமாக - மும்முனைப் போராட்டத் திட்டமொன்றை அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நீயும், ஏனைய உடன் பிறப்புகளும் கூர்ந்து நோக்கினால் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என போராட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதை உணர முடியும்.

முதலாவதாக, நமது மாநிலப் பிரச்சினை குறித்து கவலைப்படுவதை விட அதிகமாக - நமது கழகத்தின் மீது ஏவிவிடப்படுகிற அடக்குமுறை கண்டு ஆர்த்தெழுவதைக் காட்டிலும் அதிகமாக - நமது தமிழ் மக்கள் அண்டுவதற்குச் சென்ற அண்டை மாநிலமான கர்நாடகத்திலிருந்து கதியற்றோராக ஒரு லட்சம் பேருக்கு மேற்பட்டோர் தமிழகம் ஓடி வந்துள்ளார்களே! அவர்களுக்குத் தற்காலிகமாக வாய்க்கு ருசியாக இல்லாவிடினும், குமட்டல் எடுக்காத அளவுக்குப் பசியாற உணவு அளிக்கக் கூட முன்வராத நிலையில் மாநில அ.தி.மு.க. அரசு அலட்சியம் காட்டுவதையும், அந்த மக்கள் மீண்டும் கர்நாடக மாநிலம் சென்று அமைதியாக வாழ்ந்திட வழி வகுத்திடாததையும் - அதற்கென மத்திய காங்கிரஸ் அரசு, எந்தவிதத் தீவிர நடவடிக்கை எடுக்காததையும் கண்டித்து, நமது துயரத்தை வெளிப்படுத்துவதின் மூலம் - மத்திய, மாநில அரசுகளை செயலாற்றிடுமாறு தூண்டுவதிலேயே அதிக கவனம் அதிலும், முதற்கவனம் செலுத்த வேண்டுமென்று அதற்கான முதல் தீர்மானத்தைக் கழக நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ளது.

கர்நாடகத் தமிழர் பிரச்சினைக்காக, ஜனவரி 20-ஆம் நாள் திராவிடர் கழகம் மறியல் கிளர்ச்சி நடத்திட இருப்பதால், ஜனவரி

21-ஆம் நாள் தடா சட்டத்தை எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சி போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும், கழகம் நடத்துகிற கண்டனப் போராட்டம் ஜனவரி 22-ஆம் நாள் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடகத்திலிருந்து கொடுமைப்படுத்தப்பட்டு விரட்டப்பட்டுள்ள இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களைத் திரும்பவும் கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பி வைத்து, அங்கு அவர்களுக்கு அமைதியான வாழ்வு அளிக்கத் தவறியுள்ள மத்திய காங்கிரஸ் அரசு, மாநில அ.தி.மு.க. அரசு ஆகிய இரு அரசுகளையும் கண்டித்து ஜனவரி 22-ஆம் நாள் மாநிலம் முழுதும் மாவட்டத் தலைநகரங்களில் மற்றும் புதுவையிலும், காரைக்காலிலும் மாலை 3 மணியளவில் கறுப்புக் கொடி ஊர்வலங்களைக் கழக அமைப்புகள் அனைத்தும் கலந்து கொண்டு அமைதியாக - அதே நேரத்தில் எழுச்சியாக நடத்திட வேண்டும்.

இரண்டாம் முனைப் போராட்டம், குடியரசு தினத்திற்கு மறுநாள் ஜனவரி 27-ஆம் நாள் என குறிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ குடியரசு தினங்கள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுங் கூட, கொடிகள் குதூகலமாக ஏற்றப்பட்டும் கூட, குடும்பம் குடும்பமாக மக்கள் குமுறிக் கொண்டிருக்கிற நிலை மாறவில்லை! நிலை மாறாதது மட்டுமல்ல! அவர்கள் தலையில் நித்தம் நித்தம் விலைவாசி உயர்வுச் சுமை ஏறிக் கொண்டே இருக்கிறது! ஏழை நடுத்தர மக்கள் தமது வாழ்வை நகர்த்துவது எப்படி என்று கூனல் விழுந்த கேள்விக் குறிகளாக மாறித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். மத்தியில் காங்கிரசும், மாநிலத்தில் அ.தி.மு.க.வும் ஆட்சிக்கு வந்தால், நூறு நாட்களுக்குள் விலைவாசியை இறக்கிக் காட்டுவோம் என்று வாக்குறுதி வழங்கினார்கள். இன்று அவர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக்கொண்டு, மக்கள் மத்தியிலே கூத்து நடத்துகிறார்கள்.

விலைவாசி பல மடங்கு ஏறியுள்ளது மட்டுமல்ல, பஸ் கட்டணம், மின் கட்டணம், ரயில் கட்டணம் என்று எல்லாமே எல்லையற்று ஏற்றப்பட்டு விட்டன. இலையை நம்பி வாக்களித்தேன் எதுவுமிலையே! உணவிலையே! கதியிலையே! எனக் கதறுவோரும், கையை நம்பி வாக்களித்தேன் கை விட்டு விட்டனரே என அலறுவோரும் பெருகிடக் காண்கிறோம். இந்த அழகில் அ.தி.மு.க. அரசின் ஊழல்களோ, அரபிக்கடல், இந்துக்கடல், வங்கக்கடல் மூன்றையும் வெற்றி கொள்ளும்

அளவுக்கு நடைபெறுகின்றன. கிராமப்புறத்தில் ஒரு சாதாரணப் பணியின் ஒப்பந்த வேலை எனினும், அதில் ஐந்து சதவிகிதம் கமிஷன் - முன்கூட்டியே ஒப்பந்தக்காரர் அதிகாரிகள் மூலம் கப்பம் கட்டியாக வேண்டும். அந்தக் கமிஷனுக்குத் தக்கபடி ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையும் உயர்த்தப்படுகிறது. அங்கிங்கெனாதபடி இது தமிழ்நாடு முழுவதும், அதிகார மஞ்சம் விரித்து, அதில் லஞ்சம் நடத்துகிற லீலா விநோதம்!

பொதுத்துறை - கூட்டுத் துறை என்றெல்லாம் வளர்ந்து, ஆதாயம் தருகிற துறைத் தொழில்களைக் கூடத் தனியாருக்குத் தாரை வார்க்கும் கொடுமை - அதற்கெனத் தனியாகக் குவித்துக் கொள்ளும் பெருந்தொகை!

ஆம்னிபஸ் முதலாளிகளுக்கு வரிச் சலுகை -
அதற்காகச் சில கோடி!

தனியார் பஸ் முதலாளிகளுக்குப் பெரும் சலுகை -
அதற்காகப் பல கோடி!

ஏன்? டாக்டர் பட்டம் வாங்குகிற விழாவுக்குக் கூட, விளம்பரச் செலவுகளை கல்லூரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, அரசுத் துறை கல்லூரி கல்வி இலாகாவிலிருந்தே கடிதம் எழுதியுள்ள விந்தை!

இப்படி மாநில அளவிலே மட்டுமல்ல, மாவட்ட அளவில் - ஒன்றிய அளவில் நடைபெறுகிற ஊழல்களை நீயும் மற்ற உடன்பிறப்புகளும், பொது மக்களே கூட தெரிந்தே வைத்திருக்கிறார்கள்.

எனவே ஜனவரி 27-ஆம் நாளன்று, விலைவாசி உயர்வு, பஸ் - ரயில் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, மற்றும் அ.தி.மு.க. அரசின் ஊழல்களையும், ஆளுங்கட்சியினரின் அடாவடிச் செயல்களையும் கண்டித்து, மாநில முழுதும் மத்திய அரசு, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் (Demonstration) நடத்துவதென நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை, கழக அமைப்புகள் அனைத்தும் செயல்படுத்திட வேண்டும்.

மாவட்டத் தலைநகர், வட்டத் தலைநகர், மற்றும் மாவட்டச் செயலாளரால் அறிவிக்கப்படும் ஊர்களோ, நகர்களோ எல்லா இடங்களிலும், மத்திய அரசு அலுவலகம் முன்பு, முன்கூட்டியே இடத்தைக் குறித்து அறிவித்து விட்டு, காலை 11 மணிக்கு கழகக்

கொடிகளுடன் ஊர்வலமாகப் புறப்பட்டு அலுவலகங்களுக்கு முன்னால் நின்று கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாத நிலையில் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் (Demonstration) நடத்திட வேண்டும்.

வசதிப்பட்டால் அன்றுமாலை, பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தலாம்.

ஜனவரி 25-ஆம் நாள் மாணவர் அணி சார்பாக நடைபெறுகிற மொழிப் போர் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டங்களிலும் - ஜனவரி 27-ஆம் நாளைய ஆர்ப்பாட்டம் குறித்த விளக்கங்களை அளித்து, இரண்டாம் முனைப் போராட்டம் வெற்றிகரமாக அமைந்திட ஆவன செய்திடல் வேண்டும்.

இத்தனைக்கும் பிறகு மூன்றாம் முனைப் போராட்டமாகத்தான், நமது கழகத்தினரான சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் ஜெகதீசன், நெல்லை ரவிச்சந்திரன், தளி மாரிமுத்து போன்றோர் மீதும், மற்றும் அரசியல் ஈடுபாடுடைய கட்சிகளின் மீதும் அடக்குமுறைத் தடாச் சட்டம் பழிவாங்கும் நோக்குடன் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், அந்தத் தடா சட்டத்தால் பழிவாங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவும், பிப்ரவரி 3-ஆம் நாள்! ஆம் - நமது இனக் காவலர், ஜனநாயகக் காவலர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு போற்றும் நாளில் - காலையிலே அண்ணா சதுக்கம் சென்று அண்ணா உறங்குமிடத்தில் மலர் வளையம் வைத்துத் தொழுதுவிட்டு, அன்று மாலை கழகத்தின் மகத்தான பேரணியொன்று ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்று, ஆளுநரிடம் தடா சட்ட துஷ்பிரயோகம் பற்றிய முறையீடு தருவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்து இந்தியப் பிரதமர் அவர்களையும் சந்தித்து, முறையீடு வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவற்றால் பயனின்றிப் போகுமாயின், மனித உரிமைகளைக் காப்பாற்றவும், ஜனநாயக நெறியைக் காப்பாற்றவும் ஒரு மாபெரும் போராட்டத்தை - அடுத்த கட்டமாக அறிவித்து நடத்துவதென்றும் நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே நீதிமன்றத்தின் மூலமும் நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அண்மையில் உயர்நீதிமன்றம், திராவிடர் கழக வழக்கறிஞர் வீரசேகரன் அவர்களை, பொறுப்பில் விடுதலை செய்துள்ளது. ஆனால் அ.தி.மு.க. அரசு, தனது பழிவாங்கும் இயல்பை வெளிப்படுத்தும் வகையில் அதை எதிர்த்து மேல் முறையீடு (அப்பீல்) செய்யப் போகிறதாம்.

நீதி என்பது வழங்கப்பட வேண்டிய ஒன்றே தவிர, வாங்கப்படக்கூடிய ஒன்றல்ல! என்று நான் பலமுறை குறிப்பிட்டிருப்பதை மறந்திருக்க மாட்டாய்!

நமது கழகத்தினர் தடாவில் சிக்க வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்தும் - உண்மையிலேயே குற்றம் புரிந்தவர்கள் யாராயிருந்தாலும், ஏற்கனவே இருக்கிற இந்திய குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்வுடன் வஞ்சம் தீர்க்கும் வகையில் தடா சட்டத்தைப் பயன்படுத்த எந்த முகாந்திரமும் கிடையாது என்பதையும் எடுத்துரைத்து நீதி கிடைத்திட, நாம் வாதாடவும் வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கொலைக் குற்றங்களுக்கெல்லாம் தடா சட்டம் பிரயோகம் என்றால், தராசு அலுவலகத்திலே இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டார்களே! அமைச்சர்களின் கையாட்கள், அ.தி.மு.க. பயில்வான்கள் என்ற காரணத்தால் அவர்களைத் தடா சட்டம் நெருங்கவில்லையா? தொடரப்பட்ட அந்த வழக்கே, அனாதையாக நிற்கிறதே - ஏன்?

1984-ல் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வெடிகுண்டு வைத்து நாற்பது பேரைக் கொலை செய்து, விமான நிலையத்துக்கும் பல லட்ச ரூபாய் சேதம் விளைவித்த இலங்கைப் போராளிகள் இருவர் ஜாமீனில் வெளிவந்து, வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டார்களே! இப்போதும் அவர்கள் மீது தடா சட்டம் பாயலாமே! அவர்களுக்கு ஜாமீன் கொடுத்தவர்கள் மீதும் - அப்படி ஜாமீன் கொடுத்தவர்களை தனது அலுவலகத்தில் வைத்திருக்கிறார்களே! அவர்கள் மீதும் தடா பாயலாமே!

இதற்கெல்லாம் தடாவைப் பயன்படுத்துக என்று நான் சொல்லவில்லை!

இவற்றுக்கு என்ன நிலை எடுத்து, எந்த சட்டத்தைப் பயன்படுத்துவது என ஏற்கனவே இருக்கிறதோ, அதே சட்டத்தை,

உண்மையிலேயே குற்றவாளிகள் என்றால் பயன்படுத்திட வேண்டுமே தவிர,

"தடா"வைத் தேவையில்லாத நேரத்தில்,
தேவையில்லாத மாநிலத்தில் அரசியல் எதிரிகளைத்
தாக்கித் தகர்க்கும் வெடிகுண்டு போலப்
பயன்படுத்திடக் கூடாது"

- என்பதை விளக்குவதற்கே இதனைச் சொல்லுகிறேன்.

உடன்பிறப்பே! தடாவை எதிர்த்துப் போராட்டம் ஒருபுறம் - நீதிமன்ற நடவடிக்கை ஒரு புறம் - எனக் கழகம் எடுத்துள்ள முடிவுக்கு உன் போன்றோர் ஒத்துழைப்பு மிகமிகத் தேவை!

ஒத்துழைப்புதானே? போராட்டத்திற்கு
நான் என்ன சளைத்தவனா? முதலில்
தேதியைச் சொல்! என்று நீ
கேட்பது எனக்குத் தெரியும்.
போராட்டத்திற்கு நீ போதும் -
நான் போதும் - நம் போன்ற
உடன்பிறப்புகள் பல்லாயிரம் பேர்
உண்டு. போதும்!
ஆனால் நீதிமன்றத்துக்கும் செல்வது
என்று நாம் எடுத்துள்ள முடிவுக்கு
வழக்காடுவதற்கான நிதியாகப்
பெருந் தொகை தேவைப்படும்.

எனவே, குறிப்பறிந்து செயல்படும் என் அன்பு உடன்பிறப்பே! தடா சட்ட எதிர்ப்பு வழக்கு நடத்திட தேவைப்படுகிற நிதியை கழகப் பொருளாளர் சாதிக், தி.மு.க. தலைமைக் கழகம், அண்ணா அறிவாலயம், சென்னை என்ற முகவரிக்கு, கழக வழக்குநிதி என்ற தலைப்பில் பணவிடைத்தாள் (மணியார்டர்) வாயிலாக அனுப்பி வைப்பாய் என நம்புகிறேன்.

தலைமைக் கழக நிர்வாகக் குழு அறிவித்துள்ள மும்முனைப் போராட்டம் பெற்றிபெற முனைந்து செயல்படுமாறு வேண்டுகிறேன்.

அன்புடன்,

மு. க.

(14-01-1992)

1861. கர்நாடகத் தமிழரைக் காத்திட கறுப்புக் கொடி ஊர்வலம்!

உடன்பிறப்பே,

கழகம் அறிவித்துள்ள மும்முனைப் போராட்டத்தில் முதல் போராட்டம் ஜனவரி 22-ஆம் நாள் மாவட்டத் தலைநகர்களிலும், மற்றும் மாவட்டத்திலுள்ள பெருநகரங்களிலும், புதுவையிலும், காரைக்காலிலும் நடைபெற இருக்கிறது. காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையினால் தமிழகம் கர்நாடகம் ஆகிய இருமாநிலங்களுக்கிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாட்டுக்கும் - கர்நாடகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களை அடித்துத் துவைத்து, அவர்களின் உடைமைகளையும், உறைவிடங்களையும் பாழாக்கித் துரத்துவதற்கும் என்ன தொடர்பு என்று மனித நேயம் கொண்ட எவராலும் கேட்காமல் இருக்க முடியாது.

எங்கே அப்பாவி மக்கள், துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு துரத்தப்பட்டாலும், அவர்களுக்காகக் கசிந்துருகிக் குரல் கொடுப்பதும், அந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்த முனைவதும் மனிதப்பண்பாடு என்ற முறையில், அந்தப் பகுதிகளுக்கு அப்பால் வெகுதொலைவில் இருக்கிற நாம், அப்பகுதிகள் இலங்கை போன்ற வேறு நாடுகளில் இருந்தாலும் - பங்களாதேஷ் போன்ற பிறநாட்டுப் பகுதிகளாக இருந்தாலும், நமது கண்டனத்தைத் தெரிவித்து, ஆங்காங்கு பாதிக்கப்படும் மக்களுக்குப் பரிவு காட்டவும் - பாதுகாப்புத் தரவும், இங்குள்ள மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துவது என்பது புதிய செய்தியல்ல!

இப்போது ஏற்பட்டுள்ள தொல்லை! பங்களாதேஷில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு இந்தியாவுக்குள் வந்தது போலவோ - அல்லது இலங்கையில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு இந்தியாவுக்குள்

வந்தது போலவோ அல்லாமல், இந்தியாவுக்குள்ளேயே தென்னகத்தில் ஒரு மாநிலத்தில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு துரத்தப்பட்டுள்ளார்கள் என்பதும், அவர்களும் தமிழ் மாநிலத்து மக்கள் என்பதும்தான்!

வீடுவாசல்களை, உடைமைகளை, பயிர் பச்சை குலுங்கிய நிலங்களை, அன்றாட வாழ்வுக்கான தொழில்களை, எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு துரத்தப்பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடு தந்து, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்பதும் - தமிழகத்திற்கு ஓடிவந்த கர்நாடகத் தமிழர்களுக்குச் சில நாட்கள் மட்டுமே தங்குவதற்கு முகாம் ஏற்பாடு செய்து, இப்போது அவர்களையெல்லாம் பல முகாம்களில் இருந்து தமிழ்நாட்டுக்குள்ளேயே அவர்களது பூர்வீகமான ஊர்களுக்கோ, அல்லது உறவினர் வீடுகளுக்கோ, அனுப்பிவிட்ட மாநில அரசின் தவறைச் சுட்டிக்காட்டி, அந்த அப்பாவித் தமிழ் மக்கள் மீண்டும் கர்நாடக மாநிலம் சென்று வாழ்வதற்குரிய வசதிகளையும், பாதுகாப்பையும் செய்து தருமாறு வலியுறுத்துவதும் கன்னட மக்களுக்கு விரோதமான செயல்கள் ஆகமாட்டா!

இந்தக் கோரிக்கை, கன்னட மக்களுக்கு விரோதமானது என்று திசைதிருப்புவோர் யாராயினும் அவர்கள், அப்பாவித் தமிழர்களின் நல்வாழ்வில் அக்கறையில்லாதவர்களாகவே இருக்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில், தமிழ்நாட்டின் நியாயமான உரிமைக்கு நாம் வாதாடுகிறோம் எனினும், அதே சமயத்தில் கர்நாடக மாநில நலன்கள் பாதிக்கப்பட வேண்டும் என்ற நிலையை எப்போதுமே எடுத்ததில்லை.

அதேபோலத்தான் காவிரிப் பிரச்சினைக்கும், கர்நாடகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் முடிச்சுப் போட்டு, கர்நாடகக் காங்கிரஸ் அரசு கன்னட வெறியர்களைத் தூண்டிவிட்டுத் துணையும் நின்று ஒருமைப்பாட்டுக்கு விரோதமான கலவரத்தை உருவாக்கி, கர்நாடகத் தமிழர்களை வேதனைக்காளாக்கியபோது, நமது கண்டனத்தைத் தெரிவிக்கவும் - மத்திய மாநில அரசுகளின் உடனடிக் கடமையை உணர்த்தவும் தமிழகத் தலைநகரமான சென்னையில் மாபெரும் கண்டனப் பேரணியொன்றை நடத்தினோம். பனிரெண்டு மணி நேர அறிவிப்பில் லட்சக்கணக்கானோர் கலந்துகொண்ட அந்தப் பேரணி,

பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பாதுகாக்க நடத்தப்பட்டதே தவிர, இங்கு வாழ்கின்ற கன்னட மக்களைப் பதிலுக்குப் பதில் வேதனைப் படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்திற்காக அல்ல!

அவ்வாறு பழிக்குப்பழி என்ற நிலையில் காரியங்கள் நடைபெற வேண்டும் என்று, இங்குள்ள கட்சிகள், அதிலும் குறிப்பாகக் கர்நாடகத்தில் அவதியுற்ற - அகதிகளாக்கப்பட்ட தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் கட்சிகள் எதுவுமே, தமது போராட்டங்களை அந்த நோக்கத்துடன் வகுத்து நடத்தவுமில்லை!

கர்நாடகத்தில் சில கன்னட வெறியர்கள் செய்த தவறை - அல்லது தொடர்ந்து செய்திட விரும்புகிற தவறை - இங்குள்ள தமிழ் மாநிலத்தவரும் செய்வது என நினைப்பதே, நாம் கட்டிக் காத்து வரும் பண்பாட்டுக்கு மாறானதாகும் என்பதை உணர்ந்தே, அந்த உணர்வின் அடிப்படையிலேயே நமது போராட்டத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றன.

இந்தப் போராட்டத் திட்டங்களில் கூட வேகமில்லை - விறுவிறுப்பு இல்லை - என்று சிலர் விமர்சித்தாலும் பரவாயில்லை! துரத்தப்பட்ட கர்நாடகத் தமிழர்கள் - மீண்டும் அந்த மாநிலத்தில் அமைதியான வாழ்வு நடத்திட, இங்குள்ள மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுத்திட வேண்டும் - அதற்கான நமது குரல் இரு அரசுகளின் செவிகளிலும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனும் - நமது போராட்டம் தீவிரமாக இருந்தால் அதன் விளைவுகளால் கர்நாடகத்தில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களுக்கு மேலும் தீங்கு வந்திடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடனும் - நமது போராட்ட வேகத்தால் தமிழகத்தில் வாழும் கன்னட மக்களுக்குக் கடுகளவு தொல்லையும் ஏற்படக் கூடாது என்ற பண்பாட்டு உணர்வுடனும், கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு ஆழமான சிந்தனையுடன் நீண்ட நேரம் விவாதித்து - முதலாவது - இரண்டாவது - மூன்றாவது என வரிசைப்படுத்தி மும்முனைப் போராட்டத்தை மிகுந்த பொறுப்புணர்வுடன் அறிவித்துள்ளது.

முதலாவது போராட்டம், கர்நாடகத் தமிழர்களின் மறுவாழ்வை வலியுறுத்தியும் - அவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கான உடனடி நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியும் - விரட்டப்பட்டு வந்த தமிழர்களை முகாம்களில் இருந்தும் விரட்டிவிட்டு, அவர்கள் மீண்டும் கர்நாடக மாநிலம்

திரும்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல், அக்கறையற்றுள்ள மாநில அ.தி.மு.க. அரசின் போக்கைக் கண்டித்தும் - ஜனவரி 22 ஆம் நாள் மாலை 3 மணிக்கு கறுப்புக் கொடி ஊர்வலங்களை மாநில முழுதும் மாவட்டத் தலை நகர்களிலும், மற்றும் மாவட்டத்திலுள்ள பெரு நகரங்களிலும், புதுவையிலும், காரைக்காலிலும் நடத்துவதென நிர்வாகக்குழு எடுத்த முடிவை; வெற்றிகரமாகவும் - அமைதியாகவும் - கண்ணியம், கட்டுப்பாடு எள்ளளவும் சிதறாமலும் நிறைவேற்றிட வேண்டுமென கழகத்தின் அனைத்து அமைப்புகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை இந்தப் போராட்டங்களுக்கென மாவட்டக் கழகக் கூட்டம் கூட்டப் பெறாமலிருந்தால், உடனடியாக மாவட்டச் செயலாளர்கள் மாவட்டக் கழகக் கூட்டங்களைக் கூட்டி -

* **ஜனவரி 22**
* **ஜனவரி 27**
* **பிப்ரவரி 3**

இந்த மூன்று நாட்களிலும் தலைமை நிர்வாகக் குழு எடுத்துள்ள முடிவு, எழுச்சியுடன் நிறைவேற ஆவன செய்திட வேண்டுகிறேன்! கழகத்தின் அனைத்து அணிகளிலுமுள்ள என் கண்மணிகளாம் உடன்பிறப்புகளின் கடமை தவறாத ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(17-01-1992)

1862. நிதியமைச்சர் - பதில் அளிப்பாரா?

உடன்பிறப்பே,

மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜியுடன் ஆண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஒப்புதலைப் பெற, எல்லா மாநில முதல்வர்களைப் போலவே தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவும், நிதியமைச்சர் நாவலரும், தலைமைச் செயலாளர், நிதித்துறை செயலாளர் ஆகியோரும் கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கான ஆண்டு திட்டத்திற்கான விவாதம் நடத்தி 1486 கோடி ரூபாய்க்கு மட்டுமே ஒப்புதல் பெற்று வந்தனர்.

ஜெயலலிதா அவர்கள் கேட்டது 1751 கோடி ரூபாய் - கேட்டது கிடைக்காதது மட்டுமல்ல, தி.மு. கழக ஆட்சியில் 1991-92 ஆம் ஆண்டுக்கு 1600 கோடி ரூபாய் என்றிருந்த ஒதுக்கீட்டை விடவும், 120 கோடி ரூபாய் குறைவாகவே ஒப்புதல் கிடைத்துள்ளது.

இந்தச் செய்தி இந்தியாவில் உள்ள எல்லா ஏடுகளிலும் வெளி வந்துள்ளது.

1990-91 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 1450 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்ட ஒப்புதல் பெற்று - 91-92 ஆம் ஆண்டுக்கு அதைவிட 150 கோடி ரூபாய் அதிகமாகத் திட்ட ஒதுக்கீடு ஒப்புதல் பெற்றிருக்கும் போது, இப்போது அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா அந்த 1600 கோடிக்கும் 120 கோடி குறைவாகத் திட்ட ஒதுக்கீட்டுக்கான ஒப்புதல் பெற்றிருப்பது தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட அவலம் என்று சுட்டிக் காட்டியிருந்தேன்.

உடனே தமிழக அரசின் சார்பில், பொதுவான ஒரு அறிக்கை வெளிவந்தது.

எந்த பத்திரிகைகளில் 1486 கோடி ரூபாய்தான் இந்த (92-93) ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு என முதல் பக்கத்தில் செய்தி

வந்ததோ - அதே பத்திரிகைகளில், பத்திரிகையின் சார்பில் மறுப்பு வராமல் அரசு சார்பில் மறுப்பு வந்தது.

என்னவிதமான மறுப்பு? மத்திய திட்டக் குழு 1486 கோடி என்று சொன்ன போதிலும், ஜெயலலிதா 1751 கோடி ரூபாய் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார், இன்னும் முடிவாகவில்லை என்பதுதான் அந்த மறுப்பு!

எல்லா மாநிலங்களுக்குமான ஆண்டுத் திட்டத்தை மத்திய திட்டக் குழு பத்திரிகையாளர்களுக்கு அறிவித்திருப்பதைப் போலத்தான், தமிழ் மாநிலத்துக்கான ஆண்டுத் திட்டத் தொகையையும் மத்திய திட்டக் குழு வரையறுத்து அறிவித்திருக்கிறது.

இதிலே இந்த மறுப்புக்கு என்ன மதிப்பு என்றுதான் புரியவில்லை!

ஆட்சியிலிருந்த ஒரு கட்சியின் சார்பில், இந்த ஆண்டுக்கான திட்டத் தொகை குறைந்து விட்டதை விமர்சித்து கருத்து தெரிவிக்கப்படும்போது, அதை பயன்படுத்திக் கொண்டு - இந்த மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு இப்போதுள்ள ஆட்சியாளர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமே தவிர, அதற்கு மாறாக, என் மீது சீறிப் பாய்ந்து அரங்கநாயகத்தின் பெயரால் ஓர் அறிக்கையை முற்றிலும் அவதூறான முறையில் வெளியிடுவதால் என்ன இலாபம்?

ஆகா! அரங்கநாயகத்தின் பெயரைப் பயன்படுத்தி கருணாநிதியின் முகத்தில் கரிபூசி விட்டோம் என்று தோத்திரப் பிரியர்களிடம் வேண்டுமானால் சபாஷ் வாங்கலாம்!

ஆனால் உண்மை என்ன என்பதையாவது, அரங்கநாயகத்தின் அறிக்கையை வெளியிடுகிற ஏடுகள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

கேவலம்! வாரத்திற்கு நாலு முழுப் பக்க அரசு விளம்பரங்களுக்காக - முழுப் பூசணிக்காயை இலைச்சோற்றில் மறைக்க முயலுகின்ற அறியாமையில் அந்த ஏடுகள் இடறி விழலாமா?

அரங்க நாயகம் அறிக்கையில் கூறப்படும் விளக்கம் என்ன?

1988 - 89 குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஆண்டுத் திட்டம் 1457 கோடி ரூபாய்க்கு பெறப்பட்டது என்றும், சந்தர்ப்ப வசத்தால் முதலமைச்சராக வந்த கருணாநிதி, அந்த ஆண்டுத் திட்டத்தை 1202 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டார் - கருணாநிதி நிர்வாகத்தில் புலி! அதனால் ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே ஒதுக்கப்பட்ட ஆண்டுத் திட்டத்தை அவர் முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும் - அரங்கநாயகத்தின் அறிக்கை ஓர் அண்டப் புளுகை அவிழ்த்து விட்டுள்ளது.

உடன்பிறப்பே, 1988-89 ஆம் ஆண்டுத் திட்டம் என்பது 1989 மார்ச்சுடன் முடிவடைகிற திட்டமாகும். அதனால் 1988 ஆம் ஆண்டு பெரும் பகுதி திட்டம் முடிவடைந்து, 1989 ஜனவரி கடைசி வாரத்தில் ஆட்சிக்கு வந்த கழக அரசு அந்த திட்டத்தில் பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு மாதங்களுக்குத்தான் பொறுப்பாகும்.

எனவே 1988-89 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு, 1457 கோடி ரூபாய் என அறிவிக்கப்பட்ட போதிலும், அதில் 155 கோடி ரூபாய் பற்றாக்குறையாகவே இருந்தது என்பதையும், அதை சரிக்கட்ட சுமார் 50 கோடி ரூபாய்க்கு கூடுதல் நிதி ஆதாரம் திரட்டுவதாக வாக்களித்தவாறு குடியரசுத் தலைவர் ஆட்சியில் திரட்டவில்லை என்பதையும், எனவே 88-89 ஆம் ஆண்டுக்கானத் திட்ட ஒதுக்கீட்டை 1202 கோடி ரூபாயாக திருத்தியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும், 1989-90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

இதிலிருந்து, 88-89 - ஆம் ஆண்டுக்கானத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தாததற்கு குடியரசுத் தலைவர் ஆட்சி தான் பொறுப்பே தவிர, 89-ஆம் ஆண்டு ஜனவரி 27-க்கு மேல் பொறுப்பேற்ற கழக ஆட்சி எவ்வகையிலும் காரணமல்ல! ஆண்டுத் திட்டத்திற்கான வரையறை, நிதியாண்டு கணக்கிடப்படுகிற மார்ச் வரையில்தான் என்பதைப் புரிந்து கொண்டால், அதனையும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

இதோ 1989-1990 நிதிநிலை அறிக்கையில் திட்டம் குறித்து நான் கூறியதும், 1990-91 நிதிநிலை அறிக்கையில் திட்டம் குறித்து நான் கூறியதும், கழக அரசு, நிதி நிர்வாகத்தில் எவ்வளவு திறமையுடன் செயல்பட்டது என்பதை எடுத்துக்காட்டுவனவாகும்.

* 1990-90 - ஆம் ஆண்டுக்குரிய திட்ட ஒதுக்கீடு பற்றி மத்திய திட்டக் குழுவுடன் அண்மையில் விவாதித்து, வரும் ஆண்டில் 1360 கோடி ரூபாய்க்கான திட்ட ஒப்புதல் பெற்றுள்ளோம். நிதி நெருக்கடி இருந்த போதிலும், கடந்த ஆண்டைவிட, 1989-90-ல் திட்ட ஒதுக்கீட்டை, 13 சதவீதம் பெருக்கியுள்ளோம்.

(1989 - மார்ச் 25 நிதிநிலை அறிக்கை)

* நடப்பு ஆண்டின் திட்ட ஒதுக்கீடு 1360 கோடி ரூபாய் என வரையறுக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் திட்டப்பணிகளுக்கானச் செலவு 1377 கோடி ரூபாய்க்குக் குறையாமல் அமையும்.

(1990 மார்ச் 17 நிதிநிலை அறிக்கை)

உடன்பிறப்பே, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட, அதிகம் செலவு செய்ததே தவிர, குறையவில்லை.

அதுமட்டுமல்ல, 1990-91 ஆண்டு திட்டத்திற்கு, அதற்கு முந்தைய ஆண்டை விட அதிக ஒதுக்கீடு பெற்று 1450 கோடி ரூபாய் என திட்ட ஒதுக்கீடு ஒப்புதல் பெற்றதும் கழக அரசுதான்!

அதன் பிறகு 1991 ஜனவரியில் மத்திய திட்டக்குழுவுடன் நான் விவாதித்து, 91-92 ஆம் ஆண்டுக்கானத் திட்ட ஒதுக்கீடு 1600 கோடி ரூபாய் அளவுக்கான ஒப்புதல் பெறப்பட்டது.

இப்படிப் படிப்படியாக திட்டத் தொகை ஒதுக்கீட்டினைப் பெறுவதிலும் முன்னேற்றம் கண்டு, ஒதுக்கப்பட்ட தொகையையும் ஒழுங்காகச் செலவு செய்து, எல்லாவற்றையும் விட முக்கியமாக மாநில அரசின் வருவாய்க் கூறுகளை விரிவாக்கி நடத்தப்பட்ட கழக அரசின் நிர்வாகத்தில் நிதிநிலை குளறுபடி ஆகிவிட்டது என்று அரங்கநாயகம் அடிப்படையற்ற ஓர் அவதூறைக் கூறியுள்ளார்.

மத்திய திட்டக்குழுவுடன் விவாதம் நடத்தித் திரும்பியுள்ள முதலமைச்சரோ, நிதியமைச்சரோ எந்த விளக்கமும் சொல்ல முடியாமல், அரங்கநாயகம் என்ற மறைவுக்குள் நெருப்புக் கோழிகள் தலையை மட்டும் ஒளித்துக் கொள்வது போல ஒளித்துக்கொண்டு, அரங்கநாயகம் பெயரால் ஆகாயப்புளுகுகளை அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருப்பது ஏன்?

நிதி அமைச்சர் நாவலர் வாய் திறந்து சொல்லட்டும் - ஜெயலலிதா கேட்டுள்ள 1751 கோடிக்கானத் திட்ட ஒப்புதல் கிடைத்து விடுமா?

இப்போது 1486 கோடி ரூபாய்க்குத்தான் ஒப்புதல் கிடைத்துள்ளதாக ஏடுகளில் வெளிவந்துள்ள செய்திகள் உண்மையல்லவா?

1988-89 - ஆம் ஆண்டுக்கானத் திட்ட ஒதுக்கீடு 1457 கோடி என குடியரசுத் தலைவர் ஆட்சியில் அறிவிக்கப்பட்டதே தவிர, அதில் 155 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது மறைக்கப்பட்டது உண்டா? இல்லையா? மீதமுள்ள 1302 கோடி ரூபாய்க்கான திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தாமைக்கு, குடியரசுத் தலைவர் ஆட்சிதான் பொறுப்பு என்பது சரியா? தவறா?

1989-ல் ஆட்சிக்கு வந்த தி.மு.கழகம் 89-90-க்கும், 90-91-க்கும், 91-92-க்கும் ஆன ஆண்டுத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை முந்தைய ஆண்டுகளை விடக் குறைவாகப் பெற்றதா? அதிகமாகப் பெற்றதா?

நிதியமைச்சர் இவற்றுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

அல்லது நிதித்துறை செயலாளராவது விளக்கமளிக்க வேண்டும்.

அதை விடுத்து, அரங்கநாயகத்தைப் பலிகடாவாக்கிப் பயன் என்ன?

அன்புடன்,

மு. க.

(18-01-1992)

1863. அரசு விழாவில் அடாவடிப் பேச்சா?

உடன்பிறப்பே,

அரசு விழாவாக எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா சென்னையில் நடத்தப்பட்டது. முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில்,

அண்ணாவைவிட, அதிக செல்வாக்கு படைத்தவர் எம்.ஜி.ஆர். என்றும், அவரது சக்தியினால்தான் அண்ணா முதல்வராக முடிந்தது என்றும் பேசினார்.

அந்த எம்.ஜி.ஆரைப் போல, பத்து எம்.ஜி.ஆர். பலமும், செல்வாக்கும் கொண்டவர் ஜெயலலிதா என்பதாக ஒரு அமைச்சர் புகழ்ந்துரைத்தார்.

இந்த ஒப்பீடுகளுடன் அந்த அரசு விழாவில் தி.மு.க. ஆட்சி நடைபெற்ற இரண்டு ஆண்டு காலத்தை இருண்ட காலம் என்றும், களப்பிரர் காலம் என்றும் ஜெயலலிதா தாக்கிப் பேசினார்.

அரசு விழா என்பதை நீயும், மற்றவர்களும் மறந்து விடக் கூடாது! அதிகாரிகள் முன்வரிசையில் அமர்ந்திருந்த அந்த விழாவில்தான் கழக ஆட்சி நடைபெற்ற இரண்டு ஆண்டுகளும் இருண்ட ஆண்டுகள் என்றும், களப்பிரர் காலமென்றும் மிகுந்த வாய்த்துடுக்குடன் முதல்வரால் அடாவடி அரசியல் பேசப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள், அதாவது நிருபர்கள் ஒருவர் முகம் ஒருவர் பார்த்துக் கொண்டனர். இது என்ன அநாகரிகம் என்று ஒரு சிலர் முகம் சுளித்துக் கொண்டனர். பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள் - அரசு விழாவில் இப்படி ஒரு விமர்சனம் செய்வது சரியல்ல என்று பத்திரிகை ஆசிரியர்களோ, அதிபர்களோ எழுதினால் விளம்பரம் நின்று விடுமே! மின்சாரம் வெட்டப்பட்டு விடுமே! ஏன்? தடா கூடப் பயமுறுத்தக் கூடுமே!

கழக ஆட்சியைக் களப்பிரர் ஆட்சி எனக் கூறிய ஜெயலலிதா அவர்களுக்கு, இந்தக் கடிதத்தில் விளக்கமான பதில் அளிக்க நான் முனைவதைவிட, ஜனவரி 4 ஆம் தேதியன்று எனக்கு எழுதப்பட்டுள்ள ஒரு நண்பரின் கடிதத்தை மட்டும் இக்கடிதத்துடன் இணைத்தால் போதுமெனக் கருதுகிறேன்.

எழுதியவர் மல்லியம் மூர்த்தி என்பவர். கடிதத் தொடக்கத்தில் தன்னைப் பற்றிய குறிப்புகளை விவரித்துள்ளார். என்பாலும், கழகத்தின் பாலும் அவருக்குள்ள அன்பையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றையெல்லாம் விடுத்து தமிழக நிலவரம் குறித்து அவர் எழுதியுள்ளதை மட்டும் உன் போன்றோர் கவனத்திற்கும், கழக ஆட்சியை இருண்ட கால ஆட்சி என வர்ணித்தோர், அதனை வாய் பிளந்து கேட்டோர் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இதோ அந்த நண்பரின் கடிதம்.

> நான் கிராமப்பகுதியில் வசிப்பவன். அடிமட்ட மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின், ஏழை எளிய, பாட்டாளி மக்களின் உள்ள உணர்வுகளை அவர்கள் தினசரி உரையாடலிலிருந்து நேரடியாக கேட்கும் வாய்ப்புப் பெற்றவன். இன்றுள்ள, மக்கள் மனநிலை பற்றி தங்களுக்கு எழுதி, என் எண்ண அலைகளைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இம்மடல்.
>
> மூலை முடுக்குகளிலெல்லாம் மக்களிடமிருந்து அதிகமாக கேட்கும் ஒரே குரல் இந்த அம்மாவை விட, அந்த புண்ணியவான் கருணாநிதியே எவ்வளவோ மேல் இதுதான்.
>
> தமிழகத்தில் எங்குமே பத்ரகாளியாட்டம்தான். பேயாட்டம்தான், வெறியாட்டம்தான், லஞ்ச லாவண்யம்தான், அரசுப் பணியாளர்கள் ஆங்காங்கே, சட்டமன்ற உறுப்பினர்களால், ஆளும் கட்சி பிரதிநிதிகளால் உதைக்கப்படுவதும் மிரட்டப்படுவதும் அன்றாட காட்சிகள். மக்கள் நலன் என்பது ஒரு கேள்விக்குறியாகிவிட்டது - எங்கும் சுருட்டல், சுரண்டல்தான்.
>
> கழக ஆட்சியில், மக்கள் நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவுகள், அமலாக்கப்பட்ட திட்டங்கள், செயல்படுத்தப்

பட்ட நற்பணிகள் யாவும் தூக்கி வீசப்பட்டுவிட்டன. குறிப்பாக -

1. நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்ட 20 கிலோ அரிசி,
2. குறைந்த விலைக்கு வழங்கப்பட்ட அரிசி, மண்ணெண்ணெய்,
3. எட்டாம் வகுப்பு படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்காக ரூ. 5000/-
4. நியாயமான பேருந்து கட்டணம்
5. கல்விச் சலுகைகள்

இவைகள் யாவும் மறைந்தே போய் விட்டன. இன்னும் என்னென்ன மறைய விருக்கின்றனவோ தெரியவில்லை.

கிராமங்கள், சாலைகள், பொது இடங்கள் யாவும் இருட்டில் மூழ்கிக் கிடக்கின்றன. மின்சார விளக்குகள் அணைந்து போய், இருந்த இடம் தெரியாமற் போய் மாதங்கள் பல ஆகிவிட்டன.

பொருட்களின் விலை, நாளுக்கு நாள் விஷம்போல் ஏறிக்கொண்டே போகிறது. கழக ஆட்சியில், ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கு ரூ. 300/-க்கு வாங்கப்பட்ட மளிகை சாமான் தற்சமயம் ரூ. 500/-க்கும், 600/-க்கும் வாங்க வேண்டிய நிலை. மிளகாய் வத்தல் ரூ. 60/-க்கும் கீழே வரவே பயப்படுகின்றது. கழக ஆட்சியில் ரூ. 4/-க்கு விற்ற அரிசி இன்று ரூ. 10/-க்கும், ரூ. 12/-க்கும் கிடைக்க மறுக்கிறது.

கிட்டத்தட்ட எம்.எல்.ஏ.க்களில் 75 சதவிகிதம் பேர், சொக்கலிங்கமாகவும், மாலாவாகவும் உருவெடுத்திடவே முயல்கிறார்கள். எங்கு பார்த்தாலும், கொலை, கொள்ளை, அடிதடி, மிரட்டல், தாலி அறுப்பு, கழுத்துச் சங்கிலியறுப்புதான். கழக ஆட்சியில் பெண்கள் வெளியில் நடமாட முடியவில்லை என மற்றவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அது உண்மையா என்ற கணக்கே போட அவசியமில்லை. ஆனால் ஒன்று

மட்டும், இன்றுள்ள ஆட்சியில் காண முடிகிறது. பெண்கள் கதவைப் பூட்டிக் கொண்டு வீட்டிலிருக்கவும் முடியவில்லை.

மலிவு விலை சாராயத்தை ஒழிப்பதாக ஸ்டண்ட் அடித்து, ஆட்சிக்கு வந்தபின், முதலில் கையொப்பமிட்டதே மலிவு விலை மதுக்கடை ஒழிப்புதான் எனக் கூறினார். ஆனால், கள்ளச் சாராயம் இன்று ஆறாக ஓடுகிறது. அரசுக்கு வந்து கொண்டிருந்த வரிப் பணம், அரசியல்வாதிகள் பாக்கெட்டுக்கும், காவல்துறையினர் பாக்கெட்டுக்கும்தான் செல்கிறது.

சில கிராமங்களில், சாராயக் கடைகள் ஏலம் கூட விடப்படுகின்றன. பாவம்! காவல் துறையினர்தான் என்ன செய்ய முடியும். யார் மீதாவது சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்தால், பிறகு அவர்கள் தண்ணீர் இல்லாத காட்டுக்கு மாற்றப்படுகிறார்கள். ஆகையால் காவல்துறையினரும், தானாகவே முன்வந்து சாராய சாம்ராஜ்யத்தில் பங்கேற்கிறார்கள்.

உடன்பிறப்பே, இதுதான் அந்தக் கடிதம் - அதிலுள்ள வாசகங்கள், இருண்ட ஆட்சி எது? என்பதை விளக்கும் வலிமை வாய்ந்தவை!

இருண்ட ஆட்சியான (?) கழக ஆட்சியில்தான், 1989-90-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு முந்தைய ஆண்டை விட 13 சதவீதம் அதிகமாகப் பெறப்பட்டது; அதாவது 1360 கோடி ரூபாய்க்கான ஒப்புதல்!

இருண்ட ஆட்சியான (?) கழக ஆட்சியில்தான், 1990-91 - ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு அதற்கு முந்தைய ஆண்டுக்கு அதிகமாய் பெற்று 1450 கோடி ரூபாய்க்கான ஒப்புதல் தமிழகத்திற்குக் கிடைத்தது.

இருண்ட ஆட்சியான (?) கழக ஆட்சியில் தான், 1991-92 - ஆம் ஆண்டுக்கானத் திட்ட ஒதுக்கீடு மேலும் 150 கோடி அதிகமாகி 1600 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றோம்.

ஆனால் இந்த வெளிச்ச ஆட்சியில், ஒளி மிகுந்த ஆட்சியில், முந்தைய இருண்ட ஆட்சி(?)யை விட அதிகமாகப்

பெறாவிட்டாலும், அதற்கும் குறைவாக 1486 கோடி ரூபாய்க்கான திட்ட ஒப்புதல் மட்டுமே பெற முடிந்திருக்கிறது.

பக்கத்திலே உள்ள கர்நாடக மாநிலம், நடப்பு ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 1510 கோடி ரூபாய் - இந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 1915 கோடி ரூபாய் - அதாவது 405 கோடி ரூபாய் அதிகம்!

அதே போல கேரள மாநிலம் நடப்பு ஆண்டில் 807 கோடி ரூபாய்க்கான திட்டம் என்றிருந்ததை, இந்த ஆண்டு (92-93)-க்கு 913 கோடியாக - அதாவது 106 கோடி ரூபாய் ஒதுக்கீடு அதிகம் பெற்றுள்ளது.

ஆனால் இங்கேயுள்ள வெளிச்ச ஆட்சியில், 1600 கோடியாக இருந்தது, 1486 கோடியாகக் குறைந்து விட்டது!

களப்பிரர் ஆட்சி(?)யான கழக ஆட்சியில், 1600 கோடிக்கு ஒப்புதல் பெற்ற ஆண்டுத் திட்டம் இந்தச் சங்க கால(?) ஆட்சியில் 120 கோடி ரூபாய் அளவுக்கு வெட்டுண்டு போயிற்று!

அவ்வளவு ஏன்? குட்டி மாநிலமான மணிப்பூர், நடப்பு ஆண்டைவிட இந்த ஆண்டுத் திட்டத்துக்கு 15 கோடி ரூபாய் அதிகம் பெற்று, தனது திட்ட ஒதுக்கீடு 210 கோடி என நிமிர்ந்து நிற்கிறது.

இந்த அழகில் கழக ஆட்சி இருட்டு ஆட்சி எனக் கிண்டல்! அரசு விழாவில்!

இப்போது நடப்பது வெளிச்ச ஆட்சியாம்! ஆம், வெளிச்சம் போடும் ஆட்சி! தெருவுக்கு, ஊருக்கு, நகருக்கு அல்ல வெளிச்சம்! தினசரி ஏடுகளுக்கு விளம்பர வெளிச்சம்! இதிலேயே காலத்தை ஓட்டலாமெனப் பார்க்கிறது - ஏமாந்தோர் விழித்துக் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்திட மறுத்து!

அன்புடன்,

மு. க.

(19-01-1992)

1864. நினைவூட்டிக் கொண்டே இரு!

உடன்பிறப்பே,

1991 ஜனவரி 30-ஆம் நாள் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. பிரதமராக இருந்த சந்திரசேகர் சொன்னபடி, கழக அரசு இலங்கைத் தமிழ்ப் போராளிகளான விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தவில்லையென்று சந்திரசேகர் அவர்களாலேயே, ஆட்சிக் கலைப்புக்கு முதலில் காரணம் கூறப்பட்டது.

தற்காலிகமாக தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள, எனது தலைமையில் உள்ள ஆட்சியை சந்திரசேகர் கலைத்துள்ளார் என நான் அப்போதே தெரிவித்தேன்.

சந்திரசேகரைப் பலிகடாவாக்கிய காங்கிரஸ் கட்சி, சில நாட்களுக்கெல்லாம் ராஜீவ் காந்தி வீட்டு வாசலை இரண்டு அரியானா போலீஸ்காரர்கள் நோட்டம் விட்டார்கள் என்று சொல்லி, சந்திரசேகரைப் பிரதமர் பதவியிலிருந்து தூக்கி எறிந்து அவரது ஆட்சிக்கு முடிவு கட்டியது.

அதே நேரத்தில் சந்திரசேகர் அவர்கள், ராஜீவ்காந்தி, ஜெயலலிதா இருவரின் வற்புறுத்தலினால்தான் கருணாநிதி ஆட்சியைக் கலைத்தேன் என்று கூறினார். ஆம்! திடீரென்று ஏற்பட்ட வற்புறுத்தல்! 1991 பிப்ரவரி 2-ஆம் நாள் கழக அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்ற செய்தி வந்தவுடன், அதற்குள்ளாகவே ஆட்சியைக் கலைத்து விட வேண்டுமென்று துடித்தனர்! அதனால் வற்புறுத்தினர்!

இல்லையேல் மத்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா அவர்கள், பிரதமர் சந்திரசேகரின் ஒப்புதலுடன், மதுரைக்கு வந்து என்னை ஜனவரி 28-ந் தேதி சந்தித்து விட்டு - இலங்கை சென்று, இலங்கையில் 30-ந் தேதி காலை நிருபர்களிடம் பேசும்போது,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தருகிறார் எனப் பாராட்டிக் கூறியிருக்க முடியுமா? அன்றைக்குத் தானே இங்கே கழக அரசு கலைக்கப்படுகிறது!

அதுவும் எப்படி? கவர்னர் பர்னாலாவை டெல்லிக்குப் பிரதமர் சந்திரசேகர் அழைத்து, கழக அரசைக் கலைக்குமாறு காரணம் கூறிடும் அறிக்கையொன்றை தருமாறு வற்புறுத்துகிறார். கவர்னர் பர்னாலா மறுக்கிறார். பொய் கூறி அறிக்கை தர இயலாது என்கிறார். இப்படி கவர்னர் அறிக்கை தர மறுத்து விட்டார் என்பது தெரிந்தும் கூட, குடியரசுத் தலைவர் கவர்னர் அறிக்கை இல்லாமலே கழக ஆட்சியைக் கலைத்திட கையெழுத்திடுகிறார்.

வற்புறுத்தலினால்தான் கலைத்தேன் என்று அன்று கூறிய சந்திரசேகர், இப்போது சென்னைக்கு வந்து ஒரு கூட்டத்தில் - தேசத்தின் நன்மைக்காகவே கலைத்தேன் கழக ஆட்சியை எனக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

இப்போது அவர் பேசியுள்ளதும் வற்புறுத்தலினால்தான் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

சரி, போகட்டும்! ஏதோ கழக ஆட்சியைக் கலைத்தால்தான் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாகும். இலங்கைப் போராளிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றார்களே! என்ன ஆயிற்று, அவர்களது கூற்று?

ஜனவரி 30-க்குப் பிறகு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களும் - மே மாதத்தில் 20 நாட்களும் நகர்ந்து முடிந்த பிறகு, கவர்னர் பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், நிருபர்களிடம் பேசும் போது - ஈழப் போராளிகளை, அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளை விரட்டி விட்டோம் - சட்டம் ஒழுங்கு அமைதியைத் திரும்பவும் கொண்டு வந்து விட்டோம் - என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறினார்.

அவர் அப்படிப் பிரகடனப்படுத்திய அதே நாளில்தான் - உலக நாடுகள் அனைத்தும் திடுக்கிடக் கூடிய, கொடிய சம்பவமாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், திருபெரும்புதூரில் கொலை செய்யப்பட்டார்.

கழகத்தின் இரண்டு ஆண்டுகால ஆட்சியில், எட்டுமுறை தமிழகம் வந்து பத்திரமாகத் திரும்பிச் சென்ற ராஜீவ் காந்தி; கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகுதான், சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட்டது என கவர்னர் தெரிவித்த நாளில்தான் கொலையுண்டார்! அந்தக் கொலையைத் தொடர்ந்து சுமார் இருபது போராளிகள் அல்லது விடுதலைப் புலிகள், போலீசார் துரத்தியபோது சயனைட் அருந்தியும், போலீசாரால் சுடப்பட்டும் தமிழ் நாட்டிலும், கர்நாடகத்திலுமாக செத்திருக்கிறார்கள். வேதாரண்யம் சண்முகம் சாவு இன்னமும் மர்மமாகவே இருக்கிறது!

இவைகள் எல்லாம், கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகுதான் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப் பட்டது என்று கூறுகிறார்களே! அதற்கு அடையாளங்களா?

இப்போது வாரந்தோறும் ஏடுகளில், இலங்கைப் போராளிகள் அங்கே திருடினார்கள் - இங்கே கொள்ளையடித்தார்கள் என்று செய்தி வருகிறதே! இதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள்?

கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மதுராந்தகம் சிறையிலிருந்து நான்கு தடவைக்கு மேலாக, இதுவரை மொத்தம் இருபது போராளிகள் தப்பிச் சென்றிருக்கிறார்களே! அது எப்படி? அவர்களைத் தப்பவிட யாராவது மேலிடத்திலிருந்து வாய்மொழி உத்தரவு வழங்கினார்களா? அல்லது அதிகாரிகள் மட்டத்தில் அது போன்ற வாய்மொழி உத்தரவு ஏதேனும் உண்டா? சிறையிலிருந்து ஒருமுறையல்ல! நாலு ஐந்து முறை - ஒருவர் இருவரல்ல - இருபது பேர் தப்பியிருக்கிறார்கள்.

இதோ இன்று ஏடுகளில் முக்கியத்துவம் பெற்று வந்துள்ள ஒரு செய்தி :-

சென்னை அண்ணாநகரிலிருந்து போராளிகள் கோஷ்டியால் கடத்தப்பட்டு, பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த ரஞ்சன் என்ற இலங்கைத் தமிழர் இதுவரை போலீசாரால் மீட்கப்பட முடியாமல் சிக்கிக் கொண்டிருந்தார். அவர் கடத்தப்பட்டு இரண்டு மூன்று வாரங்கள் கடந்து விட்டன. அவருடன் ஒரு மாருதி காரும் கடத்தப்பட்டிருந்தது. அவரை மீட்பதற்கு 15 லட்ச ரூபாய் கேட்டு

டெலிபோன் மிரட்டல்கள் வந்து கொண்டேயிருந்தன. கடைசியாக ரஞ்சன் குடும்பத்தினர், அந்தப் போராளிகளுக்கு ஒரு லட்ச ரூபாய் ரொக்கப் பணமும், நாலு லட்ச ரூபாய் மதிப்புள்ள காரும் தந்து விட்டு, ரஞ்சனை மீட்டுள்ளனர். வியாழக்கிழமையன்று ரஞ்சன் வீடு திரும்பியுள்ளார்.

உடன்பிறப்பே, கழக ஆட்சியைக் கலைத்து சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்டி விட்டோம் எனப் பக்கம் பக்கமாக விளம்பரம் செய்து கொள்கிறார்களே! பாராட்டி எழுதவும் பேசவும் சிலர் போட்டி போட்டுக்கொண்டு கிளம்புகிறார்களே! அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டாமா? கழக ஆட்சி இல்லாத போதுதான் ராஜீவைப் பறி கொடுத்தோம் என்பதை! நினைத்துப் பார்க்க வேண்டாமா? இப்போதுதான் பணயத் தொகைகளுக்காக போராளிகள், ஆட்களைக் கடத்துகிற நிகழ்ச்சியும் தமிழ் நாட்டில் ஆரம்பமாகியுள்ளது என்பதை!

அவர்கள் நினைக்கிறார்களோ இல்லையோ - நீ மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இரு!

அன்புடன்,

மு. க.

(21-01-1992)

1865. கடமையை உணர்த்தவே கறுப்புக் கொடி ஊர்வலம்!

உடன்பிறப்பே,

பொதுத்தேர்தல் நேரத்தில் ராஜீவ் காந்தி அவர்கள், கொலையுண்டதைப் பயன்படுத்திக் கொண்டு தேர்தலில் காங்கிரசையும், அ.தி.மு.க.வையும் எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகளின் தேர்தல் அலுவலகங்களைச் சூறையாடியும், கொளுத்தியும், வேட்பாளர்களின் வீடுகளில் புகுந்து பெருஞ்சொத்து சேதம் விளைவித்தும், அவர்களது வாகனங்கள் மற்றும் உடைமைகள், கடைகள், தொழிற்சாலைகள் அனைத்தையும் சின்னாபின்னப்படுத்தியும் வன்முறையாட்டம் ஆடியதோடு - பொதுமக்களின் உடைமைகளுக்கும், வணிகர்களின் சொத்துகளுக்கும் ஏராளமான இழப்பை ஏற்படுத்திய நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க முடியாது. கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டதை எல்லா ஏடுகளுமே புகைப்படமெடுத்து வெளியிட்டிருந்தன. உடைமைகள் மட்டுமன்றி, பல உயிர்களும் பறிக்கப்பட்ட கொடுமையும் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றால் - பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்றும், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுமென்றும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும், அறிவிப்பு மூலமும் நான் தெரிவித்தேன். அவ்வாறு நான் தெரிவித்த சில நாட்களுக்கெல்லாம் ஜெயலலிதா அவர்களும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வருமானால் - பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அதுபற்றிக் கவலைப்படவே இல்லை. அதுமட்டுமல்ல, இடையிலிருந்த கவர்னர் ஆட்சியில்

கூட்டப்பட்ட அ.தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் முன்னிலையில் பாதிக்கப்பட்டோருக்கு அரசு நஷ்ட ஈடு தர வேண்டுமெனவும் எடுக்கப்பட்ட முடிவை, நினைவுபடுத்தியும்கூட அ.தி.மு.க. ஆட்சி, அந்தக் கோரிக்கையைக் காதிலே போட்டுக் கொள்ளாமலே இருந்துவிட்டது.

ஜெயலலிதா அவர்கள், தேர்தலுக்கு முன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிட மறுத்து விட்ட காரணத்தால், தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள், இந்த நஷ்ட ஈடு குறித்த வழக்கு ஒன்றினை உயர்நீதிமன்றத்தில் தொடுத்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் இருவர், பேராசிரியர் அவர்களின் முறையீட்டில் உள்ள நியாயத்தை உணர்த்தி - தமிழக அரசின் சார்பில் ஓர் உயர் அதிகாரியை நியமிக்க வேண்டுமெனவும் - குறிப்பிட்ட காலத்திற்குள் பாதிக்கப்பட்டோர், தமது பாதிப்பு விபரங்களை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் - அவர்கள் ஆறுமாதங்களுக்குள் அந்த விபரங்களை ஆய்வு செய்து முடித்து, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் உள்ள அந்த உயர் அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் - அந்த உயர் அதிகாரி மூன்று மாதத்திற்குள் அந்த விபரங்களைத் தொகுத்து, நஷ்ட ஈட்டுத்தொகையை முடிவு செய்து அளித்திட வகை செய்ய வேண்டுமெனவும் - எடுத்துக்கூறி, அரசின் சார்பிலும் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேராசிரியர் தொடர்ந்த வழக்கில் நல்ல முடிவு கிடைத்தமைக்காக, வணிகப் பெருமக்களும் - மற்றும் பெரும் இழப்புக்கு ஆளான விவசாயிகள், பொதுமக்கள், பல்வேறு கட்சியினர் அனைவருமே ஆறுதலுற்று, நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

ஆனால், அந்த முடிவு எவ்வளவு விரைவில் செயல்படும் என்பதில் இப்போது சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் நமக்கு வந்துள்ள தகவலின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏராளமானோர் தங்களுக்குற்ற பாதிப்பு விபரங்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றும், அத்தனை

மனுக்களையும் ஆய்வு செய்து முடிவெடுக்க, கூடுதலாகவோ, அல்லது இருக்கும் தொகுப்பிலிருந்தோ அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளதாகத் தெரிகிறது.

அரசு அதற்கான ஏற்பாடுகளை இதுவரையில் செய்திருக்குமென நம்புகிறேன். இல்லையேல் இனியாவது விரைவுபடுத்தி, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அந்த விபரங்களைத் தொகுத்தளிக்க உதவிட வேண்டியது அரசின் கடமை என்பதை நினைவு படுத்துகிறேன்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்ட ஈடு தரப்படுமென, தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை மறந்தும், மறுத்தும் - அதன்பிறகு தி.மு.க. தலைமைக் கழகச் சார்பில் பொதுச் செயலாளர் அவர்கள் நீதிமன்றம் சென்ற பிறகே, நஷ்டஈடு கோரிக்கை அ.தி.மு.க. ஆட்சியால் ஏற்கப்பட்டுள்ளது என்ற இந்த நிலையில், நடவடிக்கைகள் சுணங்கிவிடாமல் பாதிக்கப்பட்டோர் பலன் பெறுவதற்கு ஆவனசெய்திட அக்கறை கொள்ள வேண்டும்.

கர்நாடக மாநிலத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டுமென, இங்குள்ள ஆளுங்கட்சி உள்ளிட்ட எல்லாக்கட்சிகளும் வலியுறுத்துவதை, இங்குள்ள அரசு நினைவில் வைத்துக் கொண்டால் - ராஜீவ் காந்தியின் கொலையின் போது, தமிழக முழுதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு தரவேண்டுமென்பதை, நீதிமன்ற முடிவுக்குப் பிறகாவது நிறைவேற்றுவதில் தாமதம் காட்ட வேண்டிய நிலைமை ஏற்படாது.

ஜனவரி 22ஆம் நாள் கழகத்தின் சார்பில், கறுப்புக்கொடி ஊர்வலங்களை நாம் நடத்துவதற்குக் காரணமே, கர்நாடகத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தரும் முயற்சியில், மத்திய காங்கிரஸ் அரசும் தீவிரம் காட்டவில்லை. மாநில அ.தி.மு.க. அரசும் அறிக்கைகள் விடுவதுடன் நின்று விட்டதே தவிர, தொடர்ந்து அக்கறை காட்டவில்லை என்பதைக் கண்டிப்பதற்காகத்தான்.

இந்த அரசு உறுதியளித்த நஷ்ட ஈட்டுக்கே நீதிமன்றம் சென்று அதனை வலியுறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டதைப்

பார்க்கும்போது - கர்நாடக அரசையோ அல்லது மத்திய அரசையோ வலியுறுத்துவதற்கு இந்த அரசுக்குத் தயக்கமாக இருக்கலாம் அல்லவா?

அதனால்தான் இங்குள்ள மாநில அரசு அந்தத் தயக்கத்திலிருந்து விடுபடவும் - மத்திய அரசு, கர்நாடக அரசை வலியுறுத்திடவும் - பாதிக்கப்பட்ட கர்நாடகத் தமிழர்கள் மறுவாழ்வு பெறவும் நாம் குரல் எழுப்புகிறோம்.

தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திகளில் கர்நாடகத் தமிழருக்கு 300 கோடி ரூபாய் நஷ்டம் என்றும், அங்கிருந்து துரத்தப்பட்டு தமிழகம் வந்துள்ளோர் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு ஓடிவந்துள்ள தமிழர்கள் ஓரிரு நாட்கள் மட்டுமே முகாம்களில் வைக்கப்பட்டு பின்னர், பெரும்பாலோர் அவர்களது பூர்விக ஊர்களுக்கு, அல்லது அவர்களின் உறவினர் வாழும் ஊர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். ஒன்றிரண்டு முகாம்களில் மட்டுமே நூற்றுக்கணக்கில் கர்நாடகத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்களே தவிர, மற்றவர்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சிதறிப்போயுள்ளனர்.

இந்த ஒரு லட்சம் தமிழர்களை மீண்டும் கர்நாடகத்திற்கு அனுப்பி, நிம்மதியாக வாழ வைப்பதற்கு மாநில அ.தி.மு.க. அரசு எடுத்த முயற்சி என்ன?

அல்லது வந்த தமிழர்களை, முகாம்களில் வைத்து வாழ வைத்த அழகுதான் என்ன?

எனவேதான், பல்வேறு பிரச்சினைகளில் மறைந்து விடக்கூடிய, மறந்து விடக்கூடிய பிரச்சினையாக கர்நாடகத் தமிழர் பிரச்சினையும் இப்போது ஆக்கப்பட்டு விட்டது என்பதை எடுத்துக்காட்டி, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கிட மத்திய காங்கிரஸ் அரசும், மாநில அ.தி.மு.க. அரசும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்த - கழகம் கறுப்புக்கொடி ஊர்வலம் நடத்துகிறது.

பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்ற நியாயத்தைக் கூட, நீதிமன்றம் சென்றுதான் பெற வேண்டுமென்ற நிலையை இங்கே உருவாக்கிய அ.தி.மு.க. அரசு, தான் செய்த தவறை கர்நாடக அரசு செய்யாமல் பார்த்துக் கொண்டு - மத்திய அரசை வற்புறுத்தி வெற்றி பெறுவதன் மூலம், தனது தவறுக்குக் கழுவாய் தேடிக்கொள்ள வேண்டும்.

மத்திய அரசும், கர்நாடகத் தமிழர்களும் இந்தியக்குடி மக்கள்தான் என்ற உணர்வுடன், செயல்பட விரைந்திட வேண்டும்.

இதனை உணர்த்தவே கறுப்புக்கொடி ஊர்வலம்!

அன்புடன்,

மு. க.

(22-01-1992)

1866. வெறிப் போக்கு வேண்டவே வேண்டாம்!

உடன்பிறப்பே,

இந்திய நாடு - இந்திய குடிமக்கள் - இந்த நாட்டுக்குள் பல்வேறு தேசிய இனங்கள் - மொழிகள் - பல்வேறு மதங்கள், இந்த வேற்றுமைக்குள் ஒற்றுமை காண வேண்டுமென்பதுதான் குறிக்கோள் என்றால், இந்திய நாட்டை, இந்துக்களின் நாடு என்றும் - இந்தியக் குடிமக்களை, இந்துக்கள் என்றும் கூறிக்கொண்டு ஒற்றுமையில் வேற்றுமையை உருவாக்குவது என்ற முயற்சியை நாட்டு நலனில், அமைதியில் அக்கறையுடையோர் எவரும் ஏற்றுக் கொள்ள இயலாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இராமன் பெயரைச் சொல்லிக் கொண்டு அயோத்திக்கு இரத யாத்திரை என்ற பெயரால், ஒற்றுமை உணர்வுக்குச் சம்மட்டி அடி கொடுத்துச் சிதற அடிக்க பாரதீய ஜனதா கட்சி, வன்முறை பவனியொன்றை நடத்தியது. அந்தத் திட்டம், முழுக்க முழுக்க அரசியல் ஆதாயம் கருதியதே என்பதற்கு அடையாளமாக அந்த இரதத்தின் முகப்பு, அந்தக் கட்சியின் தேர்தல் சின்னமான தாமரை மலரால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இப்போது இராமனைக் காட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, இவர்கள் காஷ்மீருக்கு யாத்திரை கிளம்பி, குடியரசு நாளன்று ஸ்ரீநகரில் நுழைகிறார்கள். தேசியக் கொடியை ஏற்றப் போகிறோம் என்கிறார்கள்.

ஜனவரி 11 ஆம் நாள் கன்யாகுமரியில் இந்த இரத யாத்திரை தொடங்கப்பட்ட போதே, நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் - இதனால் ஏற்படக் கூடிய உடனடி

விளைவுகளும், நீண்டகால தாக்கங்களும் இந்திய நாட்டு ஒற்றுமைக்கு உகந்தவைகளாக இருக்க முடியாது என எச்சரித்தும், பாரதீய ஜனதா கட்சியினர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

காஷ்மீர் பிரச்சினை, நீண்ட காலமாகப் புகைந்து இன்று புரையோடி விட்ட ஒன்று!

நேரு காலத்திலேயே ஆரம்பமாகி, இந்திரா காந்தி காலத்தில் சற்று சமாளிக்கப்பட்டு - அதற்குள் அங்கே காங்கிரஸ் ஆட்சிதான் வரவேண்டுமென்று இந்திரா காந்தி அவசரப்பட்டு - அதன் தொடர் விளைவுகள் ராஜீவ் காந்தி காலத்தில் - எல்லை கடந்து போய் - தேசியக் கொடியை காஷ்மீரத்தில் தெருக்களில் போட்டுக் கொளுத்தும் அளவுக்கு முற்றிப் போய்விட்டது.

தேசியக் கொடியின் பெருமையைக் காத்திட வேண்டியது கடமைதான்!

அதற்காக, நிலைமையை உணராமல், நீக்குப் போக்கு இல்லாமல் இதுபோன்ற வேளைகளில் ஆத்திரப்பட்டோ அல்லது அரசியல் ஆதாயத்தினை முன்னிட்டோ எடுக்கப்படும் எதிர் நடவடிக்கைகளால் நாட்டின் ஒற்றுமைக்கு வேட்டு வைத்து விடக் கூடாது.

இரத யாத்திரை போகும் வழியில் பஞ்சாபில் ஆறு பேர் சுட்டுக்கொலை! பலருக்குப் படுகாயம்! இப்படிச் சில உயிர் இழப்புகளோடு மட்டும் முடிந்து விடுவதல்ல, இதுபோன்ற நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி!

எதிர்காலத்தில் இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமையின்மை, இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்தை உண்டாக்கி விடக்கூடுமே என்ற அச்சம் அனைவருக்கும் இருந்தாக வேண்டும்.

எனவே, இத்துடன் இந்த யாத்திரையை நிறுத்துவதே அறிவுடைமை!

இப்பொழுது யாத்திரையைக் கைவிடுவது என்பது பயங்கரவாதத்திற்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படும்.

என்று தினமணி போன்ற ஏடுகள் குறிப்பிடுவது, யாருக்கும் உடன்பாடாக இருக்க இயலாது!

இனியும் வன்முறைக்கு இடம் தராமல், அதே நேரம் மதச்சார்பற்றத் தன்மையை உருக்குலையாமல் காத்திட - காஷ்மீருக்குள் நுழையும் முயற்சியை நிறுத்திவிடுவதுதான் பொறுப்புள்ளோர் செயலாக இருக்க முடியும்.

இல்லையேல், இந்து சனாதன அடிப்படைத் தத்துவம் தனது, வெறிப் போக்கைக் கைவிடத் தயாராக இல்லை என்றே எண்ணிட வேண்டியிருக்கும்.

அன்புடன்,

மு. க.

(25-01-1992)

1867. ஜனவரி 27 - அறப்போர் ஆர்ப்பாட்டம்!

உடன்பிறப்பே,

கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு முடிவு செய்து அறிவித்த மும்முனைப் போராட்டத்தில், முதல் போராட்டமான கர்நாடகத் தமிழரைக் காத்திட மத்திய - மாநில அரசுகளை வற்புறுத்தும் கறுப்புக் கொடி ஊர்வல நிகழ்ச்சியை, வெற்றிகரமாக நடத்திக் காட்டியுள்ள உன் ஆற்றலைப் போற்றுகிறேன். பாராட்டுகிறேன்.

அடுத்தது, ஜனவரி 27-ஆம் நாளன்று மத்திய அரசு, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்ட அறப்போராட்டம்! அந்த ஆர்ப்பாட்டம் (Demonstration) எந்தெந்த இடங்களில், எப்படி நடைபெற வேண்டும் என்ற விபரங்களை எல்லா மாவட்டக் கழக கூட்டங்களிலும் முடிவு செய்யப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளில் கழகத்தின் அமைப்புகள் அனைத்தும் ஈடுபட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் ஒரே மேடையில் நின்று கொண்டு, காங்கிரசாரும் - அ.தி.மு.க.வினரும் நூறு நாட்களில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி மேலும் குறைத்துக் காட்டுவோம் என்று வாக்காளர்களுக்கு உறுதிமொழி வழங்கினர்.

ஆனால் இன்றைக்கு, மத்திய காங்கிரஸ் அமைச்சர், மாநில அ.தி.மு.க. அரசையும் - அதே போல அ.தி.மு.க. அமைச்சர் மத்திய காங்கிரஸ் அரசையும் குறைகூறி, விலைவாசி உயர்வுக்கு நீதான் காரணம் என்று ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

கழக ஆட்சி நடந்தபோது, விலைவாசி ஐந்து காசு உயர்ந்தாலும், பஸ் கட்டணம் ஓரிரு பைசாக்கள் உயர்த்தப்பட்டாலும், குய்யோ முறையோ! என்று கூச்சலிட்டு கருணாநிதி உடனே ராஜினாமா செய்ய வேண்டும் என வீரமுழக்கமிட்ட அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அவர்கள், இன்றைய தினம் ஏறிக் கொண்டேயிருக்கும்

விலைவாசியின் கடுமையைக் கண்டு கொள்ளாமலே, யானைகள், குதிரைகள் வரவேற்கவும், விமானங்கள் மலர் மாரி பொழியவும், ஆயிரம் கார் பவனி நடத்திக் கொண்டு, மாநில முழுதுமுள்ள காவலர்களில் பாதிக்கு மேற்பட்ட எண்ணிக்கையினரைத் தனது நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு என்ற பெயரால் திரட்டிக் கொண்டு, விலைவாசி ஏற்றம் என்பது தனக்குச் சம்பந்தமில்லாத விஷயம் எனப் பேசிக் கொண்டிருக்கிறார்.

சம்பந்தமில்லாத விஷயம் என்றால் அன்றைக்கு ஒரே மேடையில் நின்று, காங்கிரசுடன் கைகோத்துக்கொண்டு, விலைவாசியைக் குறைத்தே தீருவோம் என்று முழங்கியது ஏன்? மக்களை ஏமாற்றத்தானே!

விலைவாசியைக் குறைக்க முடியாவிட்டாலும், ஏறாமலாவது பார்த்துக் கொண்டார்களா?

கழக ஆட்சி நடந்தபோது 1991 ஜனவரி மாதம் துவரம் பருப்பு கிலோ 16 ரூபாய் 50 காசு. இவர்கள் ஆட்சியில் இப்போது 22 ரூபாய்!

அன்று கடலைப் பருப்பு 9 ரூபாய் 50 காசு. இன்று 12 ரூபாய் 50 காசு!

அன்று பயிற்றம் பருப்பு 10 ரூபாய் 50 காசு. இன்று 14 ரூபாய் 50 காசு!

அன்று கடுகு 6 ரூபாய் 50 காசு. இன்று 20 ரூபாய்!

அன்று சாதாப் பூண்டு 6 ரூபாய் 50 காசு. இன்று 20 ரூபாய் 50 காசு!

அன்று மிளகாய் முதல் ரகம் 10 ரூபாய் 50 காசு. இன்று 52 ரூபாய்!

பொன்னி புழுங்கல் (வெளிச் சந்தையில்) அன்றைக்குக் கழக ஆட்சியில் 5 ரூபாய் 50 காசு. இன்றைக்கு ஜெயலலிதா ஆட்சியில் அதே புழுங்கல் அரிசி 11 ரூபாய்!

அன்று பொன்னி பச்சரிசி 4 ரூபாய் 60 காசு. இன்று 10 ரூபாய்!

அன்று சிறுமணி 4 ரூபாய். இன்று 7 ரூபாய் 50 காசு!

அன்று நல்ல எண்ணெய் 34 ரூபாய். இன்று 47 ரூபாய்!

வி.வி.டி. தேங்காய் எண்ணெய் அன்றைக்கு 52 ரூபாய். இன்றைக்கு 80 ரூபாய்!

இந்த விபரங்கள் எனக்கு ஐந்து நாட்களுக்கு முன் கிடைத்தவை! அதற்குப் பிறகு இன்னும் விலை ஏறியிருக்கலாம்! அதன் பிறகுதான் சர்க்கரை விலை 60 காசு அதிகம்! பால் விலையும் ஒரு ரூபாய் அதிகமாகிறது! நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் சன்னரக அரிசியின் விலையும், மிக சன்னரக அரிசியின் விலையும் மேலும் ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, அத்துடன் வரி இவற்றையெல்லாம் சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் தாங்க முடியாமல் வேதனைப்படுகிறார்கள்.

அவர்களை விழாக் கோலம், விளம்பரக் கோலம் காட்டி ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது!

விலைதான் இப்படி ஏறிக்கொண்டேயிருக்கிறதென்றால், மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் ஊழல்!

முதலில் எவ்வளவு கமிஷன் லஞ்சமாகக் கிடைக்குமென்று கணக்கிட்டு, வசூலித்துக் கொண்ட பிறகுதான் வளர்ச்சிப் பணிகளே ஆரம்பமாகின்றன! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஆளுங்கட்சியினர் ஊழல்! அடாவடித்தனம்! சகிக்க முடியவில்லை!

இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. விலைவாசி ஏற்றத்தால், விநியோகத்தில் நடக்கும் ஊழலால், பாதிக்கப்படும் மக்களின் சார்பாகக் குரல் எழுப்ப வேண்டியது நமது கடமை என்ற உணர்வுடன்தான் ஜனவரி 27 மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, விளக்கங்களை அளிக்கின்ற பணியினைக் கழகம் ஏற்றுள்ளது.

எல்லா இடங்களிலும், இந்த அறப்போர் ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றிட, கழக அமைப்புகளும், கழகத்தின் பல்வேறு அணியினரும் பங்கேற்றிட வேண்டுகிறேன்.

அன்புடன்,

மு. க.

(26-01-1992)

1868. வெள்ளம் போல் தமிழர் கூட்டம்!

உடன்பிறப்பே,

மதுரை பவள விழா மாநாடுதான் இன்னமும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதோ!

அந்த மாநாட்டு மேடையில்தான் அமர்ந்திருக்கிறோமோ!

இப்படி ஓர் உணர்வு, ஜனவரி 25 அன்று விழுப்புரம் மொழிப் போர் தியாகிகள் வீர வணக்க நாள் கூட்டத்தில் எனக்கு ஏற்பட்டது.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் எனப் புரட்சிக் கவிஞர் பாடிய கவிதைக்கு, வடிவம் தந்து மகிழ்வித்தது விழுப்புரம்!

பெரியோர், வாலிபர், மகளிர், தொழிலாளர், உழவர், மாணவர், இளைஞர் என லட்சக்கணக்கில் குழுமியிருந்த அந்தக் காட்சி கண்டு என் உயிரினும் மேலான உடன்பிறப்பே! நீ பூரித்தது போலவே நானும் பூரித்துப் போனேன்!

தேர்தலில் பெருந்தோல்வி ஏற்பட்டதாலேயே, தேய்ந்து, சிதைந்து, மறைந்து விட்டது கழகம் என மனப்பால் குடிப்போருக்கு அறைகூவல் விடுப்பது போல மதுரை பவள விழா மாநாடும், அதனைத் தொடர்ந்து விழுப்புரம் பொதுக் கூட்டமும் அமைந்தன எனில், அதனை மறுப்பார் இலர்!

திண்டிவனம் முதல் விழுப்புரம் வரையில் திரும்பிய பக்கமெல்லாம் தமிழ் மக்கள்! எழுச்சியுடனும் உணர்ச்சியுடனும்!

கொண்டு வரப்பட்ட கூட்டம் என்றில்லாமல் - கொள்கை வழிப்பட்ட கழகப் பட்டாளம் இரு வண்ணக் கொடியேந்தி பீடு நடைபோட்ட பெருமிதத்தை என்னவென்று சொல்வேன்!

சுடரேந்தி வந்து சுடர் முகம் தூக்கி நின்ற சுயமரியாதைச் சுடரொளிகளாம் இளைஞர்களின் கம்பீரத்தை, வர்ணிக்க வார்த்தைகள்தான் ஏது?

கழகத்தினர் மட்டுமா கூடினர்? அல்ல! அல்ல! கட்சிச் சார்பற்ற பொதுமக்கள் கடந்த தேர்தலில் ஏமாற்றப்பட்டோமே என்ற ஏக்கத்துடன் அந்தப் பரந்த மைதானத்தை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

மதுரை, விழுப்புரம் மட்டுமல்ல நமது வலிவை மாற்றுரைத்துப் பார்த்திட, ஜனவரி 22 ஆம் நாள் கறுப்புக் கொடி ஊர்வலம், ஜனவரி 27 அன்று ஆர்ப்பாட்டப் போராட்டம், இந்த இரு போராட்டங்களையும் கடமை உணர்வோடு, கண்ணியம் தவறாமலும், கட்டுப்பாட்டுடனும் தமிழகத்திலும், புதுவையிலும் நடத்திக் காட்டிய கழக மாமணிகளின் கரம் பிடித்து என் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன்.

முதல் போராட்டம் - கர்நாடகத் தமிழர்களைக் காத்திட, அவர்களை வாழ வைத்திட! அவர்களது பிரச்சினையை மறந்து போய்விட்ட மத்திய மாநில அரசுகளின் கேளாச் செவிகள், கேட்குமாறு செய்திட!

இரண்டாவது போராட்டமோ, தேர்தல் நேரத்தில் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பறித்துக் கொண்டு - அன்று அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், வரி என்றும், கட்டண உயர்வு என்றும், அரிசி விலை, பால் விலை முதல் அக விலை அனைத்தும் உயர்வு என்றும் ஆக்கி வாக்களித்தவர்களின் வாழ்வையே கேள்விக் குறியாக்கிவிட்ட அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் அரசுகளின் அலட்சியப் போக்கைக் கண்டித்து நடத்தப்பட்டது!

இந்த இரண்டு பிரச்சினைகளையும் எண்ணித் துன்புறும் தமிழ்நாட்டு மக்களைத் திசை திருப்ப தடா சட்டப் பிரயோகம்! ஆம், துஷ்பிரயோகம்!

எந்தக் கொலையில் யாரை இணைத்துப் பொய் வழக்குப் போட்டு, பொய் வாக்குமூலம் தயாரித்து, அதன் மூலம் கழகத்திற்கு களங்கம் விளைவிக்கலாம் என்பதே இந்த அரசின் சிந்தனை! அந்த சிந்தனை முழுதும் வஞ்சனை!

ஏடுகளில் தடா வழக்கு - கைது - விசாரணை - ஜாமீன் மறுப்பு - இப்படி நாள்தோறும் செய்திகள் வந்து கொண்டிருந்தால், மக்கள் விலைவாசி உயர்வுக் கொடுமையை, வரிக் கொடுமையை, சிற்றூர் முதல் சிங்காரச் சென்னைத் தலைநகர் வரையில் நடத்தப்படும் ஊழல் கொடுமையை மறந்துவிட்டு தடா மீது கவனம் செலுத்துவார்கள் என்று ஒரு திட்டம்!

தடா சட்டம் பஞ்சாப், காஷ்மீருக்காக என அறிவிக்கப்பட்டது!

இப்போது இந்த அரசு, தமிழகத்தையும் பஞ்சாப், காஷ்மீர் ஆக்கிட வேண்டுமென்ற கெடு நினைப்புடன் செயலாற்றுகிறது.

அவ்வாறு தமிழகம் ஆக்கப்படக் கூடாது என்பதிலே ஆழ்ந்த கவலை கொண்டுள்ள நமது கழகம், தடா துஷ்பிரயோகத்தைக் கண்டித்தும், அந்த பயங்கரவாத சட்டத்தில் கைதானவர்களை விடுதலை செய்ய வற்புறுத்தியும் ஆளுநரிடம் முறையீடு வழங்கிட, பிப்ரவரி 3 ஆம் நாள் மாலை சென்னையில் மாபெரும் பேரணி நடத்துகிறது.

தமிழ்நாட்டில் ஜனநாயகம் கொலை செய்யப்படாமல் தடுத்து நிறுத்திட, அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்திட, ஒடுக்குமுறை நீண்ட காலம் நீடிக்காது என எச்சரித்திட, தமிழகம் முழுதுமிருந்து, உடன்பிறப்பே! நீயும், ஏனைய உடன்பிறப்புகளும் சென்னை மாநகரம் நோக்கி வந்திடுக!

பிப்ரவரி 3

நமது அண்ணன் நினைவு நாள்

அன்று காலை அண்ணா சதுக்கத்தில் கூடுவோம்!

அன்று மாலை வெள்ளம் போல் தமிழர்

கூட்டமென ஆளுநர் மாளிகைக்கு அணி

வகுப்போம்;

அலை அலையாக!

வருக! வருக!

அன்புடன்,

மு. க.

(29-01-1992)

1869. தொடரும் துன்பங்களுக்கு யார் பொறுப்பு?

உடன்பிறப்பே,

எல்லாவற்றுக்கும் மத்திய அரசின் மீது பழியைப் போட்டே மாநிலத்தில் உள்ள ஜெயலலிதா அரசைக் காப்பாற்றும் முயற்சியில் அல்லது இந்த அரசுக்கு வக்காலத்து வாங்கும் முயற்சியில் - ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் ஆளுங்கட்சியின் அதிதீவிர ஆதரவு ஏடுகளும் இறங்கியுள்ள காட்சியை இன்றைக்குப் பார்க்கிறோம்.

நுகர்வோருக்குக் கருணாநிதி ஆட்சியில் இரண்டு ஆண்டுக்காலமாகப் பாலின் விலையை ஏற்றவே இல்லை. அதனால் இப்போது, நாங்கள் ஏற்றியுள்ளோம் என்று அ.தி.மு.க. அமைச்சர் பெயரால் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் பால் விலையை உயர்த்தி, அதனைப் பயன்படுத்தும் ஏழை நடுத்தர மக்களை பாதிப்புக்கு ஏன் ஆளாக்கவில்லையென்று அ.தி.மு.க. நம்மைப் பார்த்துக் கேட்கிறது. இதனை வேடிக்கை என்பதா? வேதனை என்பதா? என் செய்வது? 1991 ஜனவரி முதல் வாரத்தில் டெல்லியில் திட்டக்குழுவுடன் நானும், அதிகாரிகளும் விவாதித்து, 91-92 ஆம் ஆண்டுக்கான ஆண்டுத்திட்ட ஒப்புதல் 1605 கோடி ரூபாய்க்குப் பெற்றோம். ஆனால் ஜெயலலிதா, டெல்லி சென்று 1750 கோடி கேட்டு, நாம் ஒப்புதல் பெற்ற 1605 கோடிக்கும் 120 கோடி ரூபாய் குறைவாகப் பெற்ற போது, இந்த மாநில நன்மையை அடிப்படையாகக்கொண்டு, அதனை விமர்சித்துக் குறை கூறினோம். அதை மறுத்து, என் மீது சகதியை அள்ளி வீசி ஓர் அ.தி.மு.க. அமைச்சர் பெயரால் அறிக்கை வந்தது.

அந்த அறிக்கையை மறுத்து புள்ளி விபரச் சாட்சியங்களுடன் நமது பதில் வந்தது மட்டுமல்ல. நிதியாண்டுக் கணக்குகூட தெரியாத நீர் சற்றே விலகியிரும் பிள்ளாய்! நிதி அமைச்சரோ அல்லது நிதிச் செயலரோ பதில் சொல்லட்டும் என்று கூறியதும் - அந்த வட்டாரத்திலிருந்து பிறகு மூச்சுப் பேச்சில்லை! மௌனம்! நீண்ட மௌனம்!

திட்ட ஒதுக்கீடு ஒப்புதல் முடிவானதல்ல என்றது தமிழக அரசு!

முடிவானதுதான் என்றார் மத்திய திட்டக் குழுத் தலைவர்!

தமிழகம் ஏமாந்து போய்விட்டது என்ற சான்றுகளுடன், புள்ளி விபரங்களுடன் நமது விளக்கங்கள் வழங்கப்பட்டபிறகு, முதலமைச்சர் ஜெயலலிதா காங்கேயத்தில் போய் திட்டக் குழுவை எதிர்த்து முழக்கினார்!

டெல்லியிலேயே நல்லமுறையில் விவாதித்து - செல்வாக்கைப் பயன்படுத்தி - திட்டத்தொகை கோரிக்கையான 1750 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றிருக்கலாம். இப்போது தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் கதையாகி விட்டது.

இப்போதும் சென்னைக்கு வந்த மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் முகர்ஜி, என்ன சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்? வருவாய்க் கூறுகள் குறித்து தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது. எனவே, பரிசீலித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்றுதான் கூறியிருக்கிறார்.

நாம் சப்தம் போட்ட பிறகாவது, ஆகா சப்தம் போட்டு விட்டார்களேயென்று நம்மீது சேறுவாரி இறைத்துக் கொண்டே, அ.தி.மு.க. அரசு; திட்டத் தொகையை அதிகம் பெற முயற்சிக்கிறதே என்பதில் நமக்கு ஒரு திருப்திதான்!

சரி, திட்டத்தொகை ஒதுக்கீடு ஒப்புதல், கேட்டது கிடைக்கவில்லையெனில், மத்திய அரசைக் குறை கூற வேண்டியதுதான்! வலியுறுத்திப் பெறவேண்டியது மாநில அரசின் பொறுப்பும், கடமையும் என்பதை மறந்து விடலாமா? பொறுப்புணர்ந்து செயல்படாத மாநில அரசை மகிழ்ந்து

பாராட்டிக்கொண்டிருக்கவா முடியும் - அதற்கென்று சிலபேர் இருக்கிறார்கள். அவர்களின் பணி அதுவாக இருக்கட்டும்!

பால் விலையைக் காலையிலே ஏற்றி விட்டு, மாலையிலே அரிசி விலையையும் ஏற்றி - இரண்டு ஏற்றத்துக்கும், மத்திய அரசே காரணம் என்பது மக்களை ஏமாற்றும் மாய்மாலம் தானே!

மத்திய அரசின் ஆட்சியாளர்கள் யார்? இந்திரா காங்கிரஸ்காரர்கள்!

மாநில அரசின் ஆட்சியாளர்கள் அ.தி.மு.க. கட்சியினர்!

இந்த இரண்டு கட்சியினரும்தானே கையையும், இலையையும் இணைத்து வைத்து, ஒரே மேடையில் எங்களுக்கு வாக்களியுங்கள்! நூறு நாட்களுக்குள் விலைவாசியைக் கிடுகிடு பாதாளத்திற்கு இறக்கிவிடுகிறோம் என்று உறுதிமொழி கொடுத்தனர்!

பாதாளத்திற்கு இறக்காதது மட்டுமல்ல! விலைவாசியை ஆகாயத்திற்கல்லவா உயர்த்தி விட்டிருக்கிறார்கள்!

வெளிச்சந்தையில் ஐந்து ரூபாய் விலையென கழக ஆட்சியில் அரிசி விற்ற போதே, இந்த ஜெயலலிதா அவர்கள் அந்தோ! பாவிகள் ஆட்சியில் அரிசி விலை பத்து ரூபாய் விற்கிறதே! என்று மேடைக்கு மேடை பொய் பேசிடவில்லையா? இன்று அவரது ஆட்சியில் உண்மையிலேயே அரிசி விலை வெளிச்சந்தையில் பத்து ரூபாயைத் தாண்டிவிட்டதே! இதற்கு என்ன எதில் சொல்லுவார்?

ரேஷன் கடையில் இரண்டு ரூபாய் அரிசி விலையை ஏற்றவில்லையாம் - இப்படி ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள்! அந்த அரிசி எங்கே கிடைக்கிறது? கிடைத்தாலும் அதனை யார் விரும்பி வாங்குகிறார்கள்?

கழக ஆட்சியில் இருபது கிலோ அரிசி, ரேஷன் கார்டுக்குக் கொடுக்கப்பட்டது - இந்த ஆட்சியில் பத்து கிலோவுக்கே இழுபறி!

மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தி விட்டது. அதனால், நாங்களும் உயர்த்துகிறோம் என்று கூறுவது முற்றிலும் பொருந்துகிற வாதமா?

மத்திய தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கு தரப்படும் அரிசி விலை வேண்டுமானால் உயர்த்தப்பட்டிருக்கலாமே தவிர,

மாநிலத்தில் விளையும் அரிசிக்கு ரேஷன் கடைகளில் விலையை உயர்த்துக என்று, மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளதா? அப்படியென்றால் அந்த ஆணை, கேரள அரசுக்கு ஏன் பிறப்பிக்கப்படவில்லை?

வரிந்து கட்டிக்கொண்டு மத்திய அரசின் கொள்கைதான் இதற்குக் காரணம் என்றும், ஜெயலலிதா அரசை வாழப்பாடி இராமமூர்த்தி கண்டிப்பதில் நியாயமில்லையென்றும் ஜெயலலிதா அரசைக் காப்பாற்றுவதற்காக, வக்காலத்து வாங்கி எழுதப்பட்டுள்ள தினமணி தலையங்கமேகூட, தன்னையறியாமல் ஜெயலலிதா அரசின் காலை வாரிவிடுவது போல கடைசிப் பத்தியில் பின்வருமாறு முடிக்கப்பட்டுள்ளது.

> "கேரள அரசு செய்தது போல மத்திய அரசின் அரிசி விலை உயர்வுக்குத் தமிழக அரசும் மானியம் அளிக்க முடிந்திருந்தால், அரிசி விலை உயர்வைத் தடுத்திருக்கலாம். அரிசி, பால் போன்ற இன்றியமையாத அத்தியாவசியப் பொருள்கள் விஷயத்திலேனும், மாநில அரசு சாதாரண மக்களின் துயரத்தைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியம்."

அடடா! எவ்வளவு மனச்சங்கடத்துடன் மாநில அரசுக்குரிய அவசியத்தை தினமணி சுட்டிக் காட்ட வேண்டிய நெருக்கடிக்கு தவிர்க்க முடியாமல், உள்ளாகியிருக்கிறது என்பதை - உடன்பிறப்பே, உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா!

நம்மைப் பொறுத்தவரையில், வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மட்டுமல்ல. மேலும், மக்களை வாட்டும் துன்பதுயரங்கள் தொடர்வதற்கு மத்திய மாநில அரசுகள் இரண்டுமேதான் காரணம் என்பதே தெளிவு.

அன்புடன்,

மு. க.

(30-01-1992)

1870. அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்"!

உடன்பிறப்பே,

அண்ணா எழுதிய நீதிதேவன் மயக்கம்! நாடகம், அண்ணா அவர்களே நடித்துப் பலதடவை பார்த்துமிருக்கிறேன். அது புத்தகமாக வந்த பிறகு படித்தும் இருக்கிறேன்.

இரக்கமற்ற அரக்கன் இராவணன் - அதனால் தான் இலங்கை அழிந்தது என்று கம்பர் தீட்டிய இராமாயணத்தைக் கண்டித்து இராவணன், நீதிமன்றத்தில், மேல் முறையீடு செய்து கொள்கிறான். நீதி தேவன் நடுவராக அமர்ந்து, கம்பரும், இராவணனும் நீதிமன்றத்தில் எதிர் வழக்காடுவதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். இடையிடையே நீதிதேவனும் சில கேள்விகளைக் கேட்டு ஐயத்தைப் போக்கிக் கொள்கிறார்.

நீதிதேவனாக நமது பேராசிரியர் அவர்கள், வேடம் தாங்கியும், காஞ்சி சி.வி.எம். அண்ணாமலை அவர்கள், கம்பராக வேடம் தாங்கியும், கூண்டில் நின்று இரக்கம் என்பதற்கு எண்ணற்ற விளக்கங்களை வழங்கி, தன்னை இரக்கமற்றவனல்ல என்று நிரூபித்திட ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் கூறி முழக்கம் செய்யும் தென்னிலங்கை வேந்தன் இராவணனாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடித்ததும், அந்த நாடகம் இலக்கிய உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்பதும், நமது கழகத்தின் மூத்த தலைமுறையினர் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நீதி தேவன் மயக்கம் நாடகத்தில் சில பகுதிகளை உனக்கும், நாட்டுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன்.

என்ன இது? திடீரென நீதிதேவன் மயக்கம்! ஒன்றும் புரியவில்லையே! என சொல்லமாட்டாய்!

ஏனெனில் எமர்ஜென்சி காலத்திலேயே, அரசியல் நிலை விளக்கும் கடிதங்களை முரசொலியில் எழுதக் கூடாதென கடுமையான தணிக்கை முறை கடைப்பிடிக்கப்பட்டபோது,

இலக்கியக் கடிதங்கள் எழுதியே உன்னோடும், மக்களோடும் தொடர்பு கொண்டவன் நான்! நீயுமென்ன சாமான்யமா? கடிதம், கலை, இலக்கியம், கவிதை என்ற எந்த வடிவத்தில் வந்தாலும், அதில் மறைந்திருந்து முகம் காட்டுகிற அரசியல் நடப்புகள் குறித்த விஷயங்களைப் புரிந்து கொண்டு செயல்பட்ட என் அன்பு உடன்பிறப்பாயிற்றே! ஜாடை தெரிந்து ஆளை அடையாளங் காணும் அற்புதப் புலனாய்வுக் கருவியாயிற்றே உன் மூளை!

இந்த எழுத்துக்கு என்ன அர்த்தம்? இந்தச் செய்திக்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதே ஏன்? முகப்புத் தலைப்பிலோ அல்லது முக்கியமான பக்கத்திலோ இச் செய்தியை இடம்பெறச் செய்ததின் நோக்கமென்ன?

இப்படி ஆராய்ச்சி செய்து தெளிவான முடிவுக்கு வரக்கூடிய உடன்பிறப்பல்லவா நீ! உன்னை யார் ஏமாற்ற முடியும்?

இந்த ஆண்டு அண்ணா சதுக்கத்திற்கு வர இயலாதவர்கள் என்று 1976 பிப்ரவரி 3-ஆம் தேதி நிகழ்ச்சி குறித்து முரசொலியில் தொடர்ந்து பெயர்ப் பட்டியலை வெளியிட்டுக் கொண்டே வந்தோம்!

ஏன் அப்படி வெளியிடப்பட்டது என்பதை நீ புரிந்துகொண்டு, மற்றவர்களுக்கும் விளக்கினாய்! யார் யார் மிசாக் கைதிகளாக சிறை வைக்கப்பட்டனர் என்ற செய்தியை வெளியிட பத்திரிகைகளுக்குத் தடை! யார் யார் தி.மு.க.விலிருந்து விலகினார்கள் என்பதை மட்டுமே படம் போட்டுப் பிரசுரிக்க பத்திரிகைகளுக்கு எமர்ஜன்சி காலத்தில் உற்சாகமூட்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனால்தான், மிசா சட்டத்தில் சிறைப்பட்டவர்கள் பெயரை முரசொலி வெளியிட முடியாத நிலையில் - பிப்ரவரி 3-ல் அண்ணா நினைவு நாளுக்கு வர இயலாதவர்கள் என்ற தலைப்பில் நாள்தோறும் பட்டியல் வெளியிடப்பட்டது.

தாமதமாக அந்தத் தந்திரத்தைப் புரிந்து கொண்ட தணிக்கை அதிகாரிகள், பின்னர் அதற்கும் தடை விதித்தனர். அதற்குள் வெளியிட வேண்டிய பெயர்கள் வெளியிடப்பட்டு விட்டன.

ஆட்சி கலைக்கப்பட்டு, மிசா சட்டம் பயமுறுத்தத் தொடங்கியதும் எனது காரோட்டிகள் இருவரும்கூடப் பணியிலிருந்து விலகி விட்டனர். அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைகள் போல!

அப்போது முன்னாள் அறநிலையத் துறை அமைச்சரான நமது கண்ணப்பன்தான், நான் வெளியூர் செல்வதற்கு கார் ஓட்டிக் கொண்டு வந்தார். மதுரை சிறையில் சாத்தூர் பாலகிருஷ்ணன் மிசா கைதியாக இறந்து விட்டார் என்றவுடன், இறுதி மரியாதை செலுத்திட நான் சாத்தூர் சென்றபோது கண்ணப்பன்தான் காரோட்டி வந்தார்.

அதன் விளைவாக இரண்டொரு நாட்களில் கண்ணப்பன் கைது செய்யப்பட்டார். மிசா சட்டத்தில்!

முரசொலியில் அந்தச் செய்தி வெளியிட தணிக்கை அனுமதிக்காது! எனவே காரோட்டி கைது என்று எடுப்பாக ஒரு தலைப்பிட்டு, அந்தச் செய்தி வெளியிடப்பட்டது! அந்தக் காரோட்டி, கண்ணப்பன் தான் என்பது கழக உடன்பிறப்புகளான உன் போன்றோர் அனைவருக்கும் புரிந்தது!

அப்படி இப்போதும் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையில்தான், அண்ணா அவர்கள் எழுதி, அவரே இராவணனாக நடித்த - நீதிதேவன் மயக்கம் நாடகத்திலிருந்து சில பகுதிகளை மட்டும் நினைவூட்டுகிறேன். நீதிமன்றத்தில் நடைபெற்ற வாதப்பிரதிவாதம், பாத்திரங்கள் பேசும் உரைநடையில்! அண்ணாவின் அழகு மொழியில்! இதோ :-

இராவணன் :-

இரக்கம் எனக்கில்லை எனக்கூறி, அந்த இரக்கமெனும் ஒரு பொருளில்லாத அரக்கன் என்று கூறி, அதனால்தான் நான் அழிக்கப்பட்டேன் என்று பேசுவது வீண் அபவாதம்! இரக்கமில்லாதோர் அரக்கர் என்றால் ஆண்டவன் உட்பட அனைவரும் அரக்கர்கள்தான்! ஆஸ்ரமங்களில் உள்ள மான் தோல் ஆசனங்கள், இரக்கத்தின் அடையாளச் சீட்டுகளா? விதவிதமான யாகங்களில் குதிரைகள் போன்ற விலங்கினங்கள் பலியிடப் படுகின்றனவே! அவை இரக்கமுள்ளோர் செயலா?

கம்பர் :-

தபோதனர்களை அரக்கராக்கி விட்டார் இலங்கேசன்! இனி, தயாபரனையும் குற்றம் சாட்டுவார் போலும்!

இராவணன் :-

ஆம்! தாய் பிடிக்க, தந்தை அறுக்க, சீராளனைக் கறியாக்கும்படி தயாபரன் சோதித்தது, இரக்கமெனும் ஒரு பொருள் இல்லாதவர் அரக்கர் என்ற உமது இலக்கணத்தைப் பொய்யாக்கத்தான்! நீதி தேவன் அவர்களே! என் மண்டோதரி, இது சமயத்து இங்கு நின்று கதறினால்...

நீதிதேவன் :-

நீதி நெறியினின்றும் நான் அப்போதும் தவற முடியாது.

இராவணன் :-

அவளது கண்ணீரைக் கண்டும்...?

நீதிதேவன் :-

கண்ணீருக்காகக் கடமையினின்றும் தவற மாட்டேன்.

இராவணன் :-

அங்ஙனமாயின் கடமை பெரிதா? இரக்கம் பெரிதா?

நீதிதேவன் :-

கடமைதான் பெரிது!

இராவணன் :-

கடமையை நிறைவேற்றுகையில் அச்சம், தயை, தாட்சண்யம் எதுவும் குறுக்கிடக் கூடாது. ஆக, அறமன்றத்தில் நீர் வீற்றிருக்கும் போதெல்லாம் அரக்கர்தானே?

கம்பர் :-

உயர்ந்த இலட்சியத்திற்காக உழைக்கிறவர்கள் இரக்கம் என்பதை அலட்சியப்படுத்துவது குற்றமல்ல!

இராவணன் :-

ஆம்! ஆனால் எது உயர்ந்த இலட்சியம் - எது குறைந்தது என்பது அவரவர்களின் சொந்த அபிப்பிராயம்!

நீதிதேவன் :-

சரி! வேறு ஏதாகிலும் உண்டோ?

இராவணன் :-

ஏனில்லை! என்னைப் போன்றவர்கள் இன்னும் ஏராளம் - என் தங்கை சூர்ப்பனகை! ஆயிரமாயிரம் வீரர்களுக்கு அதிகாரியாக வீரமொழி பேசி வந்த என் தங்கை இப்போது, நாலு பேர் நடுவே நின்று பேச முடியாதபடி ஆக்கப்பட்டு விட்டாள்.

கம்பர் :-

இரக்கம் காட்டுவதா அந்தத் தூர்த்தையிடம்?

இராவணன் :-

காதலைத் தெரிவிப்பவர் தூர்த்தையா?

கம்பர் :-

காமம் பித்தம் பிடித்து அலைந்தவளைத் தண்டிக்காமல் விடுவரோ?

இராவணன் :-

கம்பரே! நானிருக்கிறேன் தண்டனை தர! ஏதாவது தந்திரம் பேசி அவளை அனுப்பிவிட்டு அவளது நடத்தை குறித்து எனக்குச் செய்தி அனுப்பினால், நானிருக்கிறேன் அவளுக்குப் புத்திபுகட்ட! இரக்கமும் இல்லை! யூகமும் இல்லை! இரக்கத்தை மறந்த அரக்கர்களால் அலங்கோலப்படுத்தப் பட்டாள் என் தங்கை! ஒரு நாள் சிக்கின சூர்ப்பனகை எந்த நாளும் எவர் முன்னும் வர முடியாத நிலையைப் பெற்றாள். என் கைதியாகப் பல நாள் இருந்த சீதை, சௌந்தர்யவதியாய், சகல சௌபாக்கியங்களையும் அயோத்தியிலே பிறகு அனுபவித்தாள். ஆனால் நான் அரக்கன்....

நீதிதேவன் :-

மேலும் ஏதாவது?

இராவணன் :-

உண்டு நீதிதேவா! கம்பரே எழுதியுள்ளார் இராமன் காடேக முனைந்த போதும் ஆவும், காவும், மாவும், களிறும் அழுதன! தசரதனைப் போலவே பசுவும், கன்றும்,

அன்றலர்ந்த பூவும், பறவைகளும், சோலைகளும், தேரின் குதிரைகளும் அழுதன என்று!

நீதிதேவன் :-

ஏது? இராவணன், கம்பரின் கவிதைகளை நுட்பமாக அறிந்திருக்கிறாரே?

இராவணன் :-

எதிர்க்கட்சி வக்கீலாயிற்றே கம்பர்! அவருடைய வாய் மொழிகளில் உள்ளவைகளைக் கவனித்துத்தானே என் குற்றமற்ற தன்மையை நிரூபிக்க வேண்டும்!

நீதிதேவன் :-

சரி! அயோத்தியே ஒரே அழுகுரல் மயமாகிவிட்டது. அதனால் ...

இராவணன் :-

இராமன் காடு செல்வதைக் கேட்டு பூனையும், யானையும், குதிரையும், குழந்தையும், பூவும், காவும், கிளியும் அழுதனவாமே! அந்த நேரத்திலும் கைகேயியின் மனம் இளகவில்லை அல்லவா?

கம்பர் :-

உண்மைதான்.

இராவணன் :-

ஊரே புரண்டு அழுத போது, துளியும் இரக்கம் காட்டவில்லை கைகேயி! வெற்றி பெற்ற களிப்பில் அன்றிரவு நிம்மதியாகத் துயில் கொண்டாள் என்று கம்பர்தான் கூறியுள்ளார். இல்லையா கம்பரே?

கம்பர் :-

ஆமாம்.

இராவணன் :-

இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாதார் அரக்கர்! உமது இலக்கணமல்லவா அது? கைகேயி அம்மையிடம் அந்த இரக்கம் ஒரு துளியும் இல்லையே! ஏன், அரக்கர்

குலமாக்கவில்லை அம்மையை! இரக்கமென்ற ஒரு பொருள் இல்லாத காரணத்தாலேயே நானிருந்த இலங்கை அழிந்தது என்றீரே, இரக்கத்தை எள்ளளவும் கொள்ளாத இந்த அம்மையார் இருந்தும், அயோத்திக்கு அழிவு வராத காரணம் என்ன? என் தங்கைக்குப் பங்கம் செய்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் என் கண் முன் சீதை கதறிய போதிலும், இரக்கப்படக் கூடாது - இரக்கத்துக்காக வேண்டி, அரக்கர் குல அரச மங்கையின் அங்கத்தைத் துண்டித்த ஆரியர்களை வதைக்காது விட்டோமானால், அரக்கர் குலத்தையே ஆரிய குலத்தின் அடிமையாக்கி வைக்கும் இழிசெயல் புரிந்தவனாவோம் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின் முன் இரக்கம் தலைகாட்டவில்லை. இரக்கம் காட்டாததற்காக நான் அழிந்துபடுவது! இரக்கமின்றி என் தங்கையைப் பங்கப்படுத்தி, வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன், தெய்வமென்று கொண்டாடப்படுவது, தேன் தமிழிலே இந்த கம்பனுக்குப் பாட்டு கட்டத் தெரிந்தால், நீதிதேவா! இது சரியா? சீதையை நான் களவாடிச் சிறை வைத்தேன். மூவர்கள் இது போல் பலமுறை செய்திருக்கிறார்களே! நான் சீதையின் சம்மதம் கிடைக்கட்டும் என்று சிந்தையில் மூண்ட காமத்தைக்கூட அடக்கினேன். மூவர்கள் அழகிகளைக் கண்ட நேரத்தில், அடக்க முடியாத காமத்தால், ஆபாசங்கள் செய்திருக்கின்றனரே! எந்தத் தேவன் கற்பை மதித்தான்? எத்தனை ஆஸ்ரமங்கள் விபச்சார விடுதிகளாக இருந்ததற்குச் சான்று வேண்டுமா? மானைக் காட்டி மயக்கினேன் என்று கூறினார். முருகன் யானையைக் காட்டி விரட்டினானே வள்ளியை! இங்கே உள்ள தேவரும், மூவரும் செய்யாததை நான் செய்ததாக ருஜுப்படுத்தும் பார்ப்போம்! சீதை போன்ற ஜெகன்மோகினி என் கரத்திலே சிக்கியும் சீரழிக்காது நான் விட்டது போல, எந்தச் சிங்காரியையாவது தேவரும், மூவரும் விட்டிருப்பாரா? கூறுங்கள்! இரக்கம் இல்லை என்று குற்றம் சாற்றினது அக்ரமம்! அதற்காக இலங்கையை அழித்தது அநீதி! என் வேலை தீர்ந்தது. இனி நீதியின் வேலை நடக்கட்டும்...

(இப்படி இராவணன் நீதி கேட்டு நெடிய உரை ஆற்றிக் கொண்டேயிருக்கும்போது; மனச்சாட்சிக்கு மதிப்பளிக்கும் நீதிதேவன் மயக்கமுற்று சாய்ந்து விடவே; நீதிதேவனுக்கு மயக்கம் தெளிந்த பிறகுதான் தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்றச் சேவகர் அறிவிக்கிறார். அது நீண்ட நாளைக்குப் பிறகுதானே சாத்தியம் என்று கூறிக்கொண்டே இராவணன் போய் விடுகிறான். கம்பர் போகும் அவசரத்தில் கால் இடறிக் கீழே விழுகிறார்.)

உடன்பிறப்பே! நீதிதேவன் மயக்கம் நாடகத்தில் சில பகுதிகள் - சில உரையாடல்கள் மட்டுமே, இந்தக் கடிதத்தில் இணைத்துள்ளேன்.

தீர்ப்பு சொல்ல முடியாமல் நீதி தேவன் மயங்குவதுதான் அண்ணா எழுதிய நாடகத்தில் முக்கியமான கட்டம்!

கம்பர், அரண்மனைவாசி! மாளிகைகளில் அவருக்கு மகத்தான மதிப்பு உண்டு!

இராவணனோ அரசிழந்தவன், தன் இனத்தார் வீழ்த்தப்பட்டது கண்டும், அவன்மீது உரைக்கப்பட்ட பழிச் சொல் கேட்டும் - நீதி கோரி நிற்பவன்!

இதில் கம்பருக்கு எதிராகத் தீர்ப்புக் கூறினால், பெரிய இடத்துப் பொல்லாப்பு!

ஆனால், நியாயம் இராவணன் பக்கம்தான் இருக்கிறதெனத் தெரிகிறது!

என் செய்வார் நீதி தேவன் -
இந்தக் குழப்பத்தில் மயங்கிச்
சாய்வதைத் தவிர, அவருக்கு
வேறு வழியில்லாமல் போகிறது!

இதற்குமேல், என் உடன்பிறப்பே! உன் கற்பனைகள், ஆய்வுகள், விளக்கங்கள் தொடரட்டும்!

அன்புடன்,

மு. க.

(31-01-1992)

1871. அரிசி விலையும் அரசியல் சட்டமும்!

உடன்பிறப்பே,

ஆளுநர் உரை விவாதத்தின் பொழுது, காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், அரிசி விலை உயர்த்தப்பட்டதைக் கைவிட வேண்டுமென வலியுறுத்தி - எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அரிசி விலை உயர்த்தப்படவில்லை என சுட்டிக் காட்டியபோது, முதல்வர் ஜெயலலிதா குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அரிசி விலை உயர்த்தப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த ஆட்சிக் காலத்தில் கள், சாராயக் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு, அரிசிக்காக கொடுக்கும் மானியத் தொகையை ஈடுகட்ட முடிந்தது.

நாங்கள் மதுவிலக்கு கொண்டு வந்திருப்பதின் காரணமாக ஏற்படும் முழு நஷ்டத்தையும் ஈடுகட்ட முடியாவிட்டாலும் ஓரளவுக்காகவாது, ஈடு செய்ய மத்திய அரசு முன் வரவில்லை. மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெளிவாகவும், பட்டவர்த்தனமாகவும் மறுத்துவிட்டார்.

அப்படியானால் மத்திய அரசு, மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தத் தேவையில்லை எனக் கருதுகிறதா? அப்படியானால், அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர மத்திய அரசு தயாராக இருக்கிறதா?

இப்படி மத்திய அரசுக்கு ஜெயலலிதா அவர்கள் வினாக்கணை தொடுத்துள்ளார்.

முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்!

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, தமிழ்நாட்டில், கள், சாராயக் கடைகள் மட்டுமல்ல - பிராந்தி, பீர், ஒயின் ஷாப்புகள்கூட இல்லாத தீவிர மதுவிலக்குக் கடைப்பிடிக்கப்

பட்ட போதே - அண்ணா அவர்கள் அதனால் ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசிடம் ஈட்டுத் தொகை கேட்டு அப்போதே மத்திய அரசு மறுத்துவிட்டது. அதற்காக அண்ணா அவர்கள் அரிசியின் தலையில் அந்தச் சுமையைப் போடவில்லை!

அண்ணாவுக்குப் பிறகு கழக அரசை நடத்தும் பொறுப்பு எனக்கு வந்தபோது, மதுவிலக்கு திட்டத்தைக் கைவிடவேண்டும் என்ற தீர்மானத்தைக் கழகப் பொதுக்குழு கூட்டத்தில் எம்.ஜி.ஆர். அவர்களே ஆதரித்துப் பேசி, அந்த முடிவின் அடிப்படையில் மதுவிலக்குத் திட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

பிறகு இரண்டு ஆண்டு கழித்து மீண்டும், மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட இழப்பு குறித்தும் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி ஈட்டுத் தொகை கேட்டபோது, மத்திய அரசு மறுத்து விட்டது!

பிறகு எம்.ஜி.ஆர். முதல்வராகி, இரண்டு ஆண்டு மது விலக்கைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார் எனினும் - அதன்பின்னர், அவரே மதுக்கடைகள் திறப்பதற்கு உத்தரவிட்டார்.

சில ஆண்டுகள் மதுக்கடைகள் திறந்திருந்து, அடுத்து அவரது ஆட்சியிலேயே சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் மட்டும் மூடப்பட்டு பீர், பிராந்தி, ஒயின் ஷாப்புகள் திறக்கப்பட்டிருந்தன.

கள், சாராயக் கடைகளை மட்டும் மூடிய நிலையில், மத்திய அரசை அவர் ஈட்டுத் தொகை கேட்டதாகவும் தெரியவில்லை. மத்திய அரசு கொடுத்ததாகவும் தெரியவில்லை.

பீர், பிராந்தி, விஸ்கி, ஒயின் போன்ற உயர்ரக மதுக்கடைகள், மற்றும் கள்-சாராயக் கடைகள் மூடப்பட்டிருந்த முழுமையான மதுவிலக்கு தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்ட அண்ணா ஆட்சியிலேயே மத்திய அரசு,

அதனால் ஏற்படும் வருவாய் இழப்புக்குப் பொறுப்பேற்க இயலாது என்று கூறிவிட்டது என்பதை அறிந்த பிறகும் - சாராயக் கடைகளை மட்டும் மூடிவிட்டால் மத்திய அரசு, இழப்பீட்டுத் தொகை தரும் என்று முதல்வர் ஜெயலலிதா எப்படி எதிர்பார்த்தார்? அல்லது அதிகாரிகள் தான் எப்படி நம்பினார்கள் என்று நமக்கு புரியவில்லை.

அதற்காக, சாராயக் கடைகளை மூடியதற்கு நாம் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை!

உயர் ரக மது விற்பனை செய்யும் கடைகளையும் மூடிவிட்டு, முழுமையான மதுவிலக்கு கொண்டு வந்தாலும் நமக்கு மகிழ்ச்சியே!

ஆனால், அரைகுறை மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்திக்கொண்டு - அதைச் சாக்கிட்டு அரிசி விலையை ஏற்றிவிட்டு, மத்திய அரசு மதுவிலக்கு வேண்டாம் என்று அரசியல் சட்டத்தைத் திருத்துமா? என்று கேட்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

முதலில், அரசியல் சட்டத்தில் மதுவிலக்கு பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது நல்லது.

அரசியல் சட்டம் நான்காம் பாகம் என்பது 36-ல் தொடங்கி 51 வரையில், துணைப்பிரிவுகள் நீங்கலாக 16 பிரிவுகளைக் கொண்ட நெறிமுறை வழிகள் எனப்படுபவைகளை உள்ளடக்கியதாகும். இதனை Directive Principles of State Policy என்று ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளது அரசியல் சட்டத்தில்!

இந்த நான்காம் பகுதியில் உள்ள எந்தவொரு பிரிவின் மீதும் நீதிமன்றத்திற்குச் சென்று வலியுறுத்த முடியாது என்பது, இந்தப் பகுதியில் எடுத்த எடுப்பிலேயே கூறப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் சொல்லப்படுகிற கொள்கைகள் ஆட்சி முறைக்கு அடிப்படையானவை என்பதால், இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும் என்று ஓர் அறிவுரை போலத்தான் இதில் வரும் பிரிவுகள் அமைந்துள்ளனவே தவிர, இதற்கு மாறாக நடந்தால், நீதிமன்றம் சென்று வலியுறுத்தலாம் என்பதற்கு வழியே இல்லை!

அதனால்தான் இந்த அரசியல் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டு, பத்து ஆண்டுகளுக்குள் குழந்தைகள் அனைவரும் பதினான்கு வயது முடியும் வரையில், இலவசமாகவும், கட்டாயமாகவும் கல்வி பெற்றிடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும் என இந்த நாலாம் பாகத்தில் உள்ள பிரிவு, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் செயல்படுத்தப்படாமலே இருக்கிறது.

இதே நாலாம் பாகத்தில்தான் 47-வது பிரிவில் போதையூட்டும் மது வகைகளை மருந்துக்காக அன்றி, வேறுவிதத்தில் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்காக மதுவிலக்கை அமல்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிவுரை அல்லது நெறிமுறை வழிகள், அதிலும் குறிப்பாக, மிக முக்கியமாக - உத்தமர் காந்தியடிகளின் இந்த மதுவிலக்குக் கொள்கைக் கொடி, 1947 ஆகஸ்டு 15-ல் சுதந்திரக் கொடி ஏற்றப்பட்டபோதே ஏற்றப்பட்டிருக்கவேண்டும்.

மதுவிலக்கு ஒரு கொள்கையே தவிர, அது கட்டாயமல்ல! நீதிமன்றத்தில் வலியுறுத்தக் கூடியதல்ல! என்று அரசியல் சாசனமே கூறுவதால் - அந்த நிலையை 40 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்றுக் கொண்டு இந்தியா முழுதும், மதுபானம் தாராளமாகப் புழங்கிக்கொண்டிருக்கிறது! குஜராத் மாநிலம் விதிவிலக்கு! அங்கே முழுமையான மதுவிலக்கு என்று கூறப்படுகிறது! அங்கேதான் காந்தியடிகள் பிறந்த போர்பந்தரிலேயே, கள்ளச் சாராயக் கிணறு ஒன்றே தோண்டப்பட்டிருந்தது என்று பாராளுமன்றத்திலேயே இந்திராகாந்தி காலத்தில் கூறப்பட்டது!

தமிழகத்திலும் மதுவிலக்கு என்று கூறிக் கொண்டு பெருமைப்படலாமே தவிர, சாராயக் கடைகள் இல்லை. அவ்வளவுதான்! அதற்குப் பதிலாக ஏராளமான கள்ளச் சாராய தயாரிப்பு நடைபெறுகிறது - உயர்ந்த ரக மதுபானங்கள் அரசின் அனுமதியோடு கடைகளில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

இந்தச் சூழலில், அரிசி விலையை ஏற்றாதீர்கள்! என்றால் - மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட முனைவதைப்போல, மதுவிலக்கு நஷ்டஈடு மத்திய அரசு கொடுக்கவில்லையென்று கூறி சமாளிப்பதும், மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்துமா என்று சவால் விடுவதும் பொருத்தமான பதில்களாக இல்லவே இல்லை!

ஆனால் ஒன்று! அரசியல் சட்டத்தைத் திருத்த மத்திய அரசு தயாரா? என்று முதல்வர் கேட்டவுடன், காங்கிரஸ் உறுப்பினர் மது விலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் எடுக்கும் முடிவே எங்கள் கட்சியின் முடிவு என்று கூறி விட்டார் என ஏடுகளில் செய்தி கண்டேன்.

அதற்குப் பொருள் என்னவாக இருக்கும்? முதலமைச்சர் மதுவிலக்கை நீடித்தாலும் காங்கிரஸ் ஆதரிக்கும் - முழுமையான மதுவிலக்கு கொண்டு வந்தாலும் ஆதரிக்கும் - அல்லது மதுவிலக்குக் கொள்கையைக் கை விட்டாலும் ஆதரிக்கும் - என்று எண்ணிடத் தோன்றுகிறதல்லவா?

மதுவிலக்கு விஷயத்தில் முதல்வர் முடிவே காங்கிரஸ் முடிவு என்றால், காங்கிரஸ் என்பது தமிழ்நாடு காங்கிரசை மட்டுமே குறிக்கும் போலும்!

ஏனெனில் இந்தியாவில் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் எல்லாம் (அ.தி.மு.க. ஆதரிக்கும் புதுவை உட்பட) மதுக்கடைகள் அரசு அங்கீகாரம் பெற்று நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

> "நான் அரிசி விலையை ஏற்றியதைத் தவறு என்று சொன்னால், நீங்கள் மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்தத் தயாரா? என்று கேட்கிறீர்கள் - இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? எம்.ஜி.ஆர். - அவர்களேகூட, அவர் ஆட்சியில் திறந்த மதுக்கடைகளை பிறகு அவரே மூடி விட்டு ஆட்சி நடத்தினாரே! அப்போதும் அவர் அரிசி விலையை ஏற்றவில்லையே - அவர் வழி வந்த அரசு என்று சொல்லிக்கொண்டு நீங்கள் விலையை ஏற்றியதுமல்லாமல் - அரிசி விலைக்கும், அரசியல் சட்டத்திற்கும் கொக்கி போடுகிறீர்களே!"

என்று காங்கிரஸ் உறுப்பினர் கேட்டிருக்க வேண்டும்! கேட்கவில்லை! அவர்தான் மதுவிலக்கில் முதல்வர் எந்த முடிவெடுத்தாலும், அது எங்கள் கட்சியின் முடிவாக ஏற்போம் என்று உறுதிகூறி முத்தாய்ப்பு வைத்து விட்டாரே!

அதாவது மதுவிலக்கைக் காரணம் காட்டி, அரிசி விலையை ஜெயலலிதா அரசு உயர்த்தியிருக்கும் முடிவுகூட, காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளும் முடிவுதான் என்பது இதற்கு விளக்கம் போலும்!

எப்படியோ, விலைவாசிகளை நூறு நாட்களில் குறைப்போம் என்று அ.தி.மு.க.வும், காங்கிரசும் தான் தேர்தல் மேடைகளில் முழங்கின!

இப்போது அரிசி விலை குறைய, அரசியல் சட்டம் திருத்தத் தயாரா? என்று அம்மையார் அறைகூவல் விடுகிறார்!

இது, பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குக்கு விலை சொன்னது போல இருக்கிறது!

என்செய்வது? வழி கேட்டவரும் அப்படியா! நீங்கள் சொன்னால் சரி! என்று தலையாட்டி விட்டுப் போகிறாரே!

அன்புடன்,

மு. க.

(01-02-1992)

1872. தடாவை எதிர்த்து தடந்தோள் உயர்த்து!

உடன்பிறப்பே,

“பிப்ரவரி 3. அண்ணன் நினைவு நாள்!
தமிழே! தேனே! தங்கக் கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட் குளிரே!
தருவே! நிழலே! நிழலின் சுகமே!

என எந்த அண்ணனை வாயாரா மனமார வாழ்த்தி, அவரை பின்தொடர்ந்து இலட்சியப் பயணம் மேற்கொண்டோமோ, அந்த அண்ணனின் நினைவு நாள்!

சந்தனமாய் - தென் பொதிகைத் தழுவி வரும் இளங்காற்றாய் - நந்தாச் சுடர் விளக்காய் - நறுமணத்துப் புதுமலராய் - கண்ணியத்தைக் கடமையினைக் கட்டுப்பாடெனும் பண்பைக் கண்போலக் காத்திடற்கே கற்பித்த பெருந்தகையாய் - எதையும் தாங்கும் இதயம் வேண்டுமடா தம்பி என்று அலையும், காற்றும் தாலாட்டும் - வங்கக் கடலோரம் வாய் மூடிக் கண் மூடி மோனத் தவமிருக்கும் முத்தமிழ் வித்தகர்க்கு நினைவு நாள்!

பூவிதழின் மென்மையினும், மென்மையான புனித உள்ளம் - அன்பு உள்ளம் - அரவணைக்கும் அன்னை உள்ளம் - அவர் மலர் இதழ்கள் தமிழ் பேசும் - மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்று விடும்! விழிமலர்கள், வேலாகும், வாளாகும்! தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்! கால் மலர்கள் வாடிடினும், அவர் கடும் பயணம் நிற்காது. கைமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை! அம்மலரே எதிரிகளை மன்னித்து, நெற்கதிர் போல் தலை நாணச் செய்து விடும்! மக்களாட்சி மலர் குலுங்க, சமதர்மப் பூ மணக்க, தாய் மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக - ஆடிவரும் தென்றல், நாடி வரும் பூ முடியே! புகழ் முடியே!

உமைத் தேடி வரும் வாழ்த்துக் குவியலிலே - தினம் பாடி வரும் வண்டாக நான் பறப்பேன், உனைக் காக்க எனைத்துறப்பேன்! எனப் பல கோடித் தமிழ் இளைஞர் பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவனின் நினைவு நாள்!

ஓராண்டு கூடத் தொய்வின்றி, ஒவ்வொரு ஆண்டும் அண்ணா சதுக்கம் சென்று அவர் நினைவு போற்றுகிறோம் எனினும், அணுப்பொழுதும் அவர் நம் நினைவை விட்டு நீங்கினாரில்லை!

வெறும் பெயரளவில் நம்மோடு கலந்தவரல்ல அவர்! கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் - இவை நம் குருதியோட்டத்திலும், மூச்சிலும், இதயத் துடிப்பிலும் இரண்டறக் கலந்து விட்டவை என்கிற போது, அண்ணாவும் அவற்றுடன் பிரிக்க முடியாமல் கலந்திருக்கிறார் என்றே பொருள்!

குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல், சுழன்றடிக்கும் சூறாவளி, எதுவாயினும் - இனம் காக்க, மொழி காக்க, இன்னுயிராம் நம் இலட்சியம் காக்கப் பட்டாளத்து நடைபோடு! பயணத்தை நிறுத்தாதே! எனக் காஞ்சிப் பகலவன் கற்பித்த பாடத்தை மறவாத மானமறவர்களின் பாசறை தான் நம் கழகம் என்கிற போது, இதனை நினைக்கும் போதே நெஞ்சை நனைக்கிறதே இன்பத் தேனருவி!

பிப்ரவரி 3 - காலையில் கண்களை நீர்மறைக்க அண்ணனின் கல்லறையில் மலர் வளையம் வைத்திடுவோம்!

அன்று மாலையில் அண்ணன் பெயரால் அமைந்துள்ள அறிவாலயத்தில் அணி வகுத்திடுவோம்!

“வீட்டு விளக்கு ஜன நாயகம்!
காட்டுத் தீ சர்வாதிகாரம்!”

என விளக்கிய விவேகி நமது அண்ணன் - ஆனால் அவர் கருத்து கவைக்குதவாதென்று தள்ளிவிட்டு, இங்கோர் ஆட்சி, காட்டுத் தீயை நாட்டுக்குள் பரப்பிட முனைகிறது!

அதை எதிர்த்து ஆயிரம், பதினாயிரம், இலட்சம் எனக் கரங்கள் இணைந்து அறப்போர் முரசம் கொட்ட வேண்டும்! அடக்கு முறையால் நமது கழகத்தை அழித்திட முயன்றோர், அடங்கிப் போனார்! அவதூறுகளால் நமது கழகம் பூண்டற்றுப் போகும் என நம்பினோர், புலம்பித் திரிகின்றார்!

எந்தச் சட்டமாயினும், அது முறை கேடாகப் பயன்படுத்துவதை - முகாந்திரமில்லாமல் பயன்படுத்துவதை முழு மூச்சுடன் எதிர்த்தவர் அண்ணா!

இன்று தமிழகத்தில் அந்த நிலைதான்! தடா பாய்கிறது, திடீர் திடீரென்று!

"சட்டம் ஓர் இருட்டறை, அதில்
வக்கீலின் வாதம் ஒரு விளக்கு"

என்றார் அண்ணா! சில நேரங்களில் அந்த விளக்கின் ஒளியிலும், நீதி என்ற இரண்டெழுத்து கண்ணுக்குத் தெரியாமல் ஆக்கப்பட்டு விடுகிறது! எப்படியும் நீதியைக் கண்டிட, இருட்டறைக்குள் விளக்கேற்றித் தேடிக் கொண்டிருக்கிறோம்!

அதுமட்டும் ஆளவந்தோரின் பழி வாங்கும் செயலுக்குத் தடுப்புச் சுவர் எழுப்பாது என்பதால் தான் - ஆளுநர் மாளிகை நோக்கி அணி வகுக்கிறோம்!

நீதி கேட்டு நெடிய பயணத்திற்கு இருநூறு கிலோ மீட்டர் தொலைவு - மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் என்னுடன் இலட்சக்கணக்கில் வந்த உடன்பிறப்புகளின் பாசறை ஆயிற்றே நமது கழகம் - அண்ணா அறிவாலயத்திலிருந்து ஆளுநர் மாளிகை, தொலைவு குறைவுதான் எனினும் - நம் தோளில் ஏற்றப்பட்டுள்ள பொறுப்பு அதிகம் என்ற உணர்வுடன் நடைபெறுகிற பேரணி இது!

ஒடுக்கு முறையால் கழகத்தை ஒழித்து விடலாமென அச்சுறுத்துவோர்க்கு, எமர்ஜன்சி காலத்து மிசாவை எதிர்த்து எந்த தியாகத்திற்கும் தயாராகப் போராடியது இந்தக் கழகம் என்பதையும், இப்போது தடா கொடுமையை எதிர்த்து தியாகம் செய்யத் தயாராக இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டவே, உடன்பிறப்பே! நீ சுடர் முகம் தூக்கிப் பீடு நடைபோட்டுப் பேரணியில் கூடிடு என அழைக்கிறேன்! தடாவை எதிர்த்துத் தடந்தோள் உயர்த்திட வா! வா! வா!

அன்புடன்,

மு. க.

(02-02-1992)

1873. அண்ணன் நினைவு நாளில் அன்பான வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

அண்ணன் நினைவு நாளான இன்று, அவர் 35 ஆண்டுகளுக்கு முன்பு தம்பிக்கு எழுதிய கடிதம் ஒன்று என் நினைவுக்கு வந்தது! தேடி எடுத்துப் படித்துப் பார்த்தேன்!

காங்கிரஸ் அமைச்சர்களும், அவர்களுக்கு லாலி பாடிக் கொண்டிருந்தவர்களும், கழகத்தைப் பற்றிக் கடுஞ்சொல் கூறி விமர்சித்தபோது அண்ணனின் எழுதுகோல், எவ்வளவு நயம்பட தாளில் மட்டுமல்ல - தம்பிகளின் நெஞ்சிலும் உழுது பயன் விளைத்திருக்கிறது என்பதை எண்ணிட மெய் சிலிர்த்தது!

அண்ணன் நினைவு நாளில் அந்த எழுத்துகளைக் கழகச் செயல்வீரர்களும், கொள்கை விளக்க அணியினராம் சொற்பொழிவாளர்களும் இதயத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்தக் கடிதத்துடன் இணைத்து வழங்குகிறேன்.

> “அரசியலுக்கு மட்டுமல்ல தம்பி! சமூகத்திலேயே, நாட்டிலேயே, நமக்கு இடம் இல்லை - இருந்திட இலாயக்கு இல்லை என்று பேசினர் - நாடு, இத்துணை ஆணவப்போக்கு எத்துணை நாட்களுக்கு என்று கேட்டு, எள்ளி நகையாடிற்று.
>
> வெட்கமேனும் இவர் தம் உள்ளத்தில் உறுத்தினால், நாமோ என்னென்ன பழிகளைச் சுமத்தலாமோ அவ்வளவு சுமத்திப் பார்த்தோம் - கடு மொழியினைக் கொட்டினோம் - சட்டம் கொண்டு தாக்கினோம் - சபித்தோம் - சந்து முனைச் சிந்து பாடி நிந்தித்தோம் - எல்லாம் குறைவறச் செய்தும், காண்பது என்ன? கழகம் கருகி வருகிறதா? மக்கள் விலகிச் செல்கின்றனரா?

ஆதரவு அழிந்து பட்டதா? இல்லையே! நாள் தவறாமல், நாலாறு இடங்களில் அந்தக் குரல் அல்லவா கேட்கிறது! விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் விதண்டாவாதம் பேசிக் கொண்டு, தமிழகத்தில் நடமாடித் திரிகிறார்கள் என்று நையாண்டி பேசியது போய், இன்று எங்கும் இரண்டொருவர் இருந்து கொண்டு, அடுக்கு மொழி பேசி மயக்கி வருகிறார்கள், இவர்களை இனியும் விட்டு வைத்தலாகாது, என்று பேசிடும் நிலையன்றோ வந்து சேர்ந்தது? பலகாலும் பழி கூறிப் பலன் ஏதும் காணோமே? இனியும் அதே முறையில் இருந்திடின், காணப் போகும் பலன் என்ன இருக்கிறது? என்றாவது எண்ணுவர். எண்ணினரா? இல்லை! ஆசை வெட்கமறியாது என்றுதான் ஆன்றோர்களே கூறிவிட்டனரே! மீண்டும் மீண்டும், அரைத்த மாவையே அரைக்கிறார்கள் - அவர்கட்கு அலுப்பு தான் அதிகமாகிறதே ஒழிய, கழகத்துக்கு மக்கள் அளிக்கும் ஆதரவு குன்றவில்லை, குறைய வில்லை, குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிவிட்ட வண்ணம் இருக்கிறது.

சென்னை பெரம்பூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு, காஞ்சி வந்து இதனை எழுதுகிறேன். தம்பி, நாளை மீண்டும் சென்னையிலே கூட்டம்!

நான் மட்டுமல்ல - நமது கழகப் பேச்சாளர்கள் யாவருக்குமே, இதே முறையில் வேலை மிகுதி இருந்திடக் காண்கிறோம்.

இந்த இடையறாத பொதுமக்கள் தொடர்பு வீண் போகும் என்றா, ஒரு இயக்கத்தில் ஈடுபட்டவர் எண்ணுவது? இந்தத் தொடர்பு எதன் விளைவு? என்பதனையாவது எண்ணிப் பார்த்தாரோ! இல்லை என்றல்லவா அவர் பேச்சு காட்டுகிறது! இத்தகு அற்புத சக்தியைக் கூர்ந்து கவனித்து மதிப்பிடுவது தேவை - வேண்டாமய்யா, அத்தனை கடினமான வேலை தர வேண்டாம். மிகச் சாதாரணமாகப் புரிந்துகொள்ளக் கூடியதையுமா மறந்து நிற்க வேண்டும். மமதை மதியை அடியோடு அழித்து விட்டதே, வருந்துகிறேன் தம்பி, நிச்சயமாக வருந்துகிறேன்.

நான், கழகத்தின் சார்பில் வாதாடும் போக்கிலே கூட, இப்போது இதனைக் கூறவில்லை. தமிழ்நாட்டு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பவன் என்ற முறையிலேயே கூறுகிறேன். அமைச்சர் பெருமான்களும், அந்தப் பெருமை அதிக நாள் கிடைக்காது ஆயாசப்படுவோரும், அடுத்த முறை எனக்குத்தான் என்று ஆவல் ததும்பும் உள்ளத்துடன் இருப்போரும், பொன்னும், பொருளும் மிக்கோரும், புலமையைத் துணை கொண்டோரும், எல்லோரும்தானே, கூடிக்கூடி, நாடெங்கும் ஓடி ஆடி கழகத்தைக் கடுவிஷமென்றும், காட்டுத்தீ என்றும், நாசவேலை என்றும், நாத்திக மென்றும், மயக்கமென்றும், மதியீனமென்றும் பலப்பல கூறினர். பலன் என்ன கண்டனர்!

பட்டி தொட்டி எங்கும் பட்டொளி வீசிப் பறந்திடும் நமது கழகக் கொடிகளைக் காணுகின்றனர்!

பட்டினமும் பாக்கமும், நமது கழக விளக்கம் கேட்கும் கோட்டங்களாவதைக் காண்கின்றனர்.

நள்ளிரவு வரையிலும் கூட, தாழ்ந்த தமிழகம் மீண்டும் எழுந்திட வழிவகையாது என்பது குறித்து நமது தோழர்கள் பேசுவதைக் கேட்டிட பல்லாயிரவர், ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்துடன் ஆவலாக இருப்பதைக் காண்கின்றனர்.

பழி பேசிப் பகை வளர்த்திட எண்ணமிடும் தலைவர்களிற் பெரும்பாலோர் இல்லங்களிலேயே, நமது கழக இலட்சிய முழக்கம் எழக் கேட்கின்றனர்.

எங்கும் நிறைநாதமாகிவிட்ட இந்த எழுச்சியை, இன்னமும் ஏளனத்தினாலும் இழிவாகப் பேசுவதாலும், தூற்றுவதாலும், துடுக்குத்தனமாகத் தாக்குவதாலும் அழித்தொழித்திட முடியும் என்று, இவர்கள் கருதுவார்களானால், தம்பி, நாம் பரிதாப்படுவது தவிர, வேறென்ன செய்ய முடியும். நீயே கூறு, கேட்போம்.

இவர்களின் காரணமும், பொருளும் அற்ற கடும் தாக்குதல், இவர்தம் குணம் யாது என்பதனை, நாடறியச்

செய்கிறது. இவர்தம் சுடு மொழிகளைத் தாங்கிக் கொண்டு, நாம் நமது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து பணியாற்றியபடி இருந்திடும் பண்பும், நாட்டுக்குத் தெரிகிறது.

தெரிந்தும், தொலைவில் நின்றோரெல்லாம், தோழராகின்றனர். கழகம் வளருகிறது!

எனவே, என்றேனும், வென்று வருகிறோம் என்பதை அறிவதனாலேயே வெகுண்டெழுந்து நமது கழகத்தின் மீது ஒருசிலர் வெறுப்பினைக் கக்கிடக் கேட்டால், தம்பி, குறித்து வைத்துக்கொள், நம்மீது அவர்கள் வீசிடும் ஒவ்வொரு சுடு சொல்லும் பத்து புதிய ஆதரவாளர்களை நம்மிடம் அழைத்து வருகின்றது, என்ற பேருண்மையை."

என் தேர்தலின்போது, எனக்குத்தான் ஓட்டுப் போட்டாக வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்கும் அளவுக்கு உறவும், உரிமையும் உள்ள ஒரு இல்லத்திலே, ஒரு இளமாது, அண்ணாவுக்கு இல்லாமலா எமது ஓட்டு? என்று கூறி, என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்திய பிறகு, காங்கிரசுக்கு ஓட்டு அளித்ததாக அறிந்து, ஒரு பொதுக்கூட்டத்தில், இப்போது இங்கு எழுதியது போலவே இடமும் பெயரும் குறிப்பிடாமல் பேசினேன். அது புரிந்ததால், எனக்கு ஓட்டளிக்காததன் காரணத்தை விளக்கியும், தான்கொண்ட போக்கு குறித்து வருத்தம் தெரிவித்தும் அந்த வனிதை எழுதிய கடிதத்தின் கடைசி வாசகம், என் நினைவிற்கு வருகிறது.

இப்படிக்கு,
எதிர்கால தி.மு.க. உறுப்பினர்.

என்பதுதான், அந்த வாசகம்!

இன்றைய பகைவர் நாளைய நண்பர் - ஆகிறார்களோ இல்லையோ, மிகப் பெரிய செயலுக்கு நம்மை நாம் ஒப்படைத்து விட்டோம் - நான் இந்தச் சீரிய நோக்கத்துடன் பணியாற்ற வேண்டும்.

உன் ஆற்றல், இதிலே எத்துணை வெற்றி பெற்றுத் தருகிறாய், என்பதைப் பொறுத்துத்தான் மதிப்பிடப்படும்.

"பாட்டுக்கு பாட்டெடுப்பேன்
உன் பாட்டனாரைத்
தோற்கடிப்பேன்!"

என்ற இலாவணி முறையிலே அரசியல் நடத்துவது, எளிது. துவக்கத்திலே சுவை கூடத் தரும். ஆனால் அந்தச் சுவை, தம்பி! நானும் துள்ளி விளையாடும் பருவத்திலே மெத்தக் கண்டதுதான். புளியம் பழத்தைச் சுவைக்கும் போது, புளிப்புடன் ஓர் இனிப்பும் கிடைக்கும்! ஆனால் இரண்டொரு பழம் உண்டபிறகோ, எதைச் சாப்பிட்டாலும், நாக்கிலே எரிச்சல் ஏற்படும்!

தம்பி! இலாவணி முறை அரசியலும், இதுபோலத்தான். எளிது, துவக்கத்தில் சுவையும் தருவது, பிறகோ உள்ளத்தில் அமைதியைக் குலைக்கும், இலட்சியத்தைச் சிதைக்கும்.

"நமக்கு வேண்டாம், அந்த முறை! அது அவர்களின்
ஏகபோக உரிமையாகவே இருக்கட்டும்.
அனுமதிப்போம்,"

உடன்பிறப்பே, அண்ணாவின் எழுத்தைப் படித்துச் சுவைத்தால் மட்டும் போதாது. கழகத்தில் செயலாற்றுவோர், பேசுவோர், எழுதுவோர் அனைவருமே பயன்படுத்திக்கொள்ள வேண்டு மென்பதே என் அன்பான வேண்டுகோள்!

அன்புடன்,

மு. க.

(03-02-1992)

1874. தயக்கமின்றி தயாராகிக் கொள்வோம்!

உடன்பிறப்பே,

லட்சோப லட்சம் பேர் அணிவகுத்த தடா எதிர்ப்பு தி.மு.க. பேரணி, தலைநகர் சென்னையைக் குலுக்கியது. சில ஏடுகளில் ஆயிரக்கணக்கானோர் எனச் செய்திகள் வந்த போதிலும், ஆங்கில ஏடுகளே கூட, பிரமாண்டமான பேரணி என்று குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அப்படியொரு மக்கள் கடல் சென்னையில் அண்ணா அறிவாலயத்திற்கும், ஆளுநர் மாளிகைக்குமிடையே அலை மோதிய காட்சி கண்டு மெய் மறந்துபோனேன்.

தலைமை நிர்வாகக் குழுவின் தீர்மானப்படி, நமது மும்முனைப் போராட்டத்தின் மூன்றாவது போராட்டத்திற்கு வருமாறு இரண்டு கடிதங்கள்தான் எழுதினேன். இன்னும் சில கடிதங்கள் எழுதியிருந்தால் சென்னை தாங்காது என்பது இப்போது புரிந்தது!

பிப்ரவரி 3 - நமது அண்ணன் நினைவு நாளில், காலையில் அண்ணா சதுக்கத்திற்கு ஆண்டுதோறும் வருவது போலவே, பெருங் கூட்டம் - அமைதி - ஆனால் அந்தக் கூட்டத்தின் முழு அளவை ஆதிக்கபுரியினரின் ஏடுகள் வெளியிடவில்லை. தொலைக்காட்சியினரோ, ஆளுங்கட்சியினர் நடத்திய அமைதி ஊர்வலத்தை விடக் கழக அமைதி ஊர்வலம் பல மடங்கு பெரிது என்பதால், நமது நிகழ்ச்சியின் படத்தையே காட்டவில்லை. ஆளுங் கட்சி அமைதி ஊர்வலம் மிகச் சிறியது என்பதால், முதல்வர் ஜீப்பில் வருகிற காட்சிகளையும், அண்ணா கல்லறையில் மலர் வைக்கிற காட்சியை மட்டும் காட்டி விட்டு, ஊர்வலக் காட்சியைத் தவிர்த்து விட்டனர். கெட்டிக்காரர்கள்! மிக நல்ல விசுவாசிகள்! வாழ்க!

ஆளுநரைச் சந்தித்து யார் யாரோ மனு கொடுக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் படமெடுத்துத் தொலைக் காட்சியில் காட்டுகிறவர்கள், நமது சனாதன மூளையின் சாக்கடைப் பெருக்கத்தால் துர்நாற்றமெடுக்கும் அரசியல் அநாகரிக அசிங்கத்தை மக்கள் நுகர்ந்து, புரிந்து கொள்ளட்டு

மென்பதற்காகவோ என்னவோ, லட்சக் கணக்கானோர் அணி வகுத்துச் சென்று தடா சட்டத்தைத் திரும்பப் பெற்றிடுக எனக் கோரும் ஒரு மகஜரை ஆளுநரை சந்தித்து அளித்திடும் நிகழ்ச்சியை அறவே இருட்டடிப்பு செய்து விட்டனர்! எனக்குத் தெரியும், தொலைக்காட்சி நிலையத்தில் இருட்டில் தொங்கும் பழந்தின்னி வெளவால்கள் எவை எவை என்று!

தடா எதிர்ப்புப் பேரணியின் எழுச்சி கண்டு எரிச்சல் கொண்டனர்! ஏ, அப்பா! வெள்ளம் போல் தமிழர் கூட்டமா? என்று வெகுண்டனர்! ஆம்! இது மேலும் பெருகிடக் கூடிய கூட்டமென்பதை உணர்ந்தனர்! அமைதியாகச் சென்ற பேரணியின் மீது வன்முறைச் செயல்களைத் தொடுத்தனர்! போலீசார்தான் இருக்கவே இருக்கிறார்கள். மனச்சாட்சியை விற்றுவிட்டு அ.தி.மு.க.வினருடன் கூடிக்கொண்டு, அந்தப் பேரணியின் அமைதியைக் குலைப்பதற்கு அவர்களும் துணை நின்றனர்! எனவே துப்பாக்கிப் பிரயோகம்!

அதனையொட்டி, சில பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன! ஒரு டெப்போ ஆபீசுக்குத் தீ! விரும்பத்தகாத செயல்கள்தான் இவை எனினும், இதற்குக் காரணம் - அ.தி.மு.க. குண்டர்களுடன் போலீசாரும் இணைந்து நின்று பேரணியினர் மீது தொடுத்த போர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது!

முதல்வர் ஓர் ஊர் நிகழ்ச்சிக்குச் செல்கிறார் என்றால், தமிழ்நாடு முழுதும் 40 போலீசார் உள்ள காவல் நிலையம் ஒவ்வொன்றிலுமிருந்து 30 போலீசார் என்ற அளவில் - மாநில முழுதுமிருந்து இருபதாயிரம் போலீசார், சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்புக்குச் செல்கிறார்கள். முதல்வருக்குப் பாதுகாப்பு வேண்டாம் என்று கூறுகிற அரசியல் காழ்ப்பு நமக்குக் கிடையாது!

அதே நேரம், லட்சக்கணக்கானோர் திரளுகிற பேரணி; அதற்கு நூற்றுக்கும் குறைவானவர்களே போலீசார் என்றால் எப்படி? கவர்னர் மாளிகை வாசலில் மட்டுமே சற்று எண்ணிக்கை கூடுதலாக போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர்! ஊர்வலத்தினர் உள்ளே புகுந்துவிடுவார்களாம். அதைத் தடுப்பதற்காக!? - வேடிக்கையான வேதனையல்லவா இது?

சேதமுற்ற பஸ்களையும், ஒரு சிறிய டெப்போவையும் படமெடுத்துப் பக்கம் பக்கமாக வெளியிடும், ஆதிக்கபுரி ஏடுகளுக்கு - சனாதனத்தை மொத்த குத்தகைக்கு எடுத்துள்ள முதலாளித்துவ ஏடுகளுக்கு - ஏழெட்டு மனித உயிர்கள் கேள்விக்குறியாகி படுகாயமுற்று மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது கண் தெரியவில்லை!

அதேபோல பரங்கிமலை கண்டோன்மெண்ட் தேர்தலில், நிச்சயம் தி.மு.க. வேட்பாளர்களே வெற்றி பெறுவர் என முன்கூட்டிய நிர்ணயிக்கப்பட்ட 1வது வார்டு, 2வது வார்டுகளில் வாக்குச் சாவடிக்குள் நுழைந்து - செல்வராசன் எம்.எல்.ஏ. அவர்களையும், திருவொற்றியூர் முன்னாள் எம்.எல்.ஏ. பழனிசாமி அவர்களையும் - படுகாயப்படுத்தி, முதல் வார்டு வேட்பாளர், இரண்டாவது வார்டு வேட்பாளர் டென்சில் மற்றும் காங்கிரஸ் சுயேச்சை வேட்பாளர்களையும் புரட்டிப் புரட்டி அடித்துப் போட்டார்கள். போலீஸ் துணையுடன்!

அ.தி.மு.க. அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், குண்டர்கள் - அரிவாள்களுடன் தெருக்களில் ஊர்வலம் போயினர்!

அந்த அராஜகத்தில் காயமுற்றுக் கிடக்கும் செல்வராசன், பழனிசாமி இருவரின் படங்களோ, அந்தச் செய்திகளோ கூட, ஆதிக்கபுரியினர் ஏடுகளில் வெளிவரவில்லை.

ஏன்? ஏன்? என்ன காரணம் புரிகிறதா? இத்தனை கொடுமையான அராஜக தர்பாருக்கு இடையில் ஏழு வார்டுகளில் மூன்று வார்டுகளில் கழகம் வெற்றி! ஒன்று காங்கிரசுக்கு! ஒன்று ஐக்கிய கம்யூனிஸ்டுக்கு! இரண்டே இரண்டுதான் அ.தி.மு.க.வுக்கு! அதுவும் இரத்த வெறியாட்டம் நடத்தி, அவர்களே குத்திப் போட்டுக் கொண்ட வாக்குகள்!

அமைதியாகத் தேர்தல் நடந்த நீலகிரி வெலிங்டன் கண்டோன்மெண்ட்டில் ஏழு இடத்தில் தி.மு.க.வுக்கு நாலு இடங்கள்! சுயேச்சைகள் இரண்டு! அ.தி.மு.க. ஒரே இடம்!

நீலகிரி மலையில் - பெருமழை, புயல், வெள்ளத்தால் நிலச் சரிவு ஏற்படுவதுண்டு!

அதுபோன்ற சரிவு, அ.தி.மு.க. ஆட்சிக்கு ஆரம்பமாகிவிட்டது என்பதைக் காட்டுவதே, இரு கண்டோன்மெண்ட் தேர்தல்களின் முடிவுகளும் என்பதை உணர்ந்து கொண்டால் சரி!

உடன்பிறப்பே, இன்னும் உன் எழுச்சியைக் காணக் காண எரிச்சல் மிகும் ஆளவந்தோர்க்கு! கை வசம் இருக்கும் குண்டர்கள் போதாதென்று, காவல் துறையினரையும் நம்மைத் தாக்கிடக் களத்தில் இறக்கிடுவர். பரங்கிமலை போல! சென்னைப் பேரணிச் சம்பவம் போல!

இன்னும் பல தொடரக் கூடும்! அதனால்தான் நான், பேரணி முடிவில் பேசும்போது பின் வருமாறு குறிப்பிட்டேன்!

நான் காவல்துறையினருக்கு சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் உங்களைப் பாதுகாக்க வராதது மட்டுமல்ல. உங்களை நாங்கள் தாக்குவோம். தடியடி, கண்ணீர்புகை, துப்பாக்கி குண்டு இவைகளைப் பயன்படுத்துவோம் என்று சொல்வீர்களேயானால், அதை வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள், நாங்களும் தயாராகிக் கொள்கிறோம்!

முரசொலியில் இந்தப் பேச்சு வந்துள்ளது முழுமையாக! நீ படித்திருப்பாய்! ஆம்! உயிர் குடிக்க அவர்களிடம் துப்பாக்கிகள் இருக்கலாம். நம்மிடமோ அதனைத் தாங்கி நிற்க உறுதி படைத்த நெஞ்சம் உண்டு! அந்த உறுதியே நமக்குக் கவசம்! கேடயம்! அதனையும் துளைத்துக் கொண்டு - அந்த துப்பாக்கி ரவைகள் நமது உயிரைக் குடிக்குமானால், அதற்கு நானும், நீயும், நம் போன்ற உடன்பிறப்புகளும் தயக்கதுமேதுமின்றி தயாராகிக் கொள்வதைத் தவிர, ஜனநாயகம் காத்திடவும், மனித நேயம், மனித உரிமை காத்திடவும், குறிப்பாக ஆதிக்கபுரியினரிடமிருந்தும், அராஜக வாதிகளிடமிருந்தும் இந்தத் தமிழ் நிலம் காத்திடவும் வேறு வழி என்னதான் இருக்கிறது!

அன்புடன்,

மு. க.

(05-02-1992)

1875. ஒதியமிலார் அல்ல; உன் வீரம்!

உடன்பிறப்பே,

உன்னையேன் உருகி உருகி சென்னைப் பேரணிக்கு அழைத்தேன் என்று என்னையே நான் நொந்து கொள்கிறேன் இப்போது!

பிப்ரவரி 3 பேரணி முடிவுற்று அண்ணா அறிவாலயத்தில் நானும், பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும் அமர்ந்திருந்தபோது; எத்தனை எத்தனை உடன்பிறப்புகள் இரத்தம் சொட்டச் சொட்ட தூக்கி வரப்பட்டனர் - எத்தனை பேர் உடல் முழுதும் உருண்டை உருண்டையாக வீங்கிப் போன ஊமைக் காயங்களுடன் எங்கள் முன்வந்து விழுந்தனர் -

உங்களுக்கென்ன ஆயிற்று? ஊர்வலம் முடிந்து நெடுநேரம் ஆகிறதே! உங்களை ஏன் அடித்தார்கள்? யார் அடித்தது? கேட்டோம் அவர்களை!

ஊர்வலத்தில் தாக்கப்பட்டவர்களையும், துப்பாக்கி குண்டுகளால் காயம்பட்டவர்களையும் மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் அமைதியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். மறைமலை அடிகள் பாலத்தில் போலீசார் வேன்களில் வந்து எங்களை வழிமறித்து எந்த ஊருடா நீங்க? .....யா பசங்களா! என்று கேட்டுக் கொண்டே தடியடிப் பிரயோகம் செய்தனர். எங்களில் ஒருவர் ஈரோடு என்றார். ஓ! ராமசாமி நாய்க்கன் ஊரா? அப்ப இன்னும் ரெண்டு சேத்து வாங்கிக்க! என்று அவரைக் கீழே உருட்டி ஒரு போலீஸ் அதிகாரி அடித்தார்!... ஏன்ய்யா எங்களை வீணா அடிக்கிறீங்க? நாங்க பேரணிக்கு வந்துட்டு அமைதியாகத்தானே திரும்புறோம் எனக் கேட்டதற்கு .... தடா எதிர்ப்பு பேரணிக்கு வந்தீங்கள்ளே... இப்படித்தாண்டா தடால் தடால்னு விழும் - உங்க தலைவனுக்கும் விழும்! என்று பலங்கொண்ட மட்டும் அடித்தார்கள் என்று வலியாலும் ஏற்படாத வேதனை, அந்த வார்த்தைகளால்

ஏற்பட்டதே என்று வாடிப்போய் நின்றனர். தம்பிகள் டி.ஆர் பாலுவும், உசேனும் மற்றும் கழக முன்னணியினரும் துப்பாக்கிச் சூட்டில் காயம்பட்டவர்களை மருத்துவமனைகளில் சேர்த்துவிட்டு, காயமுற்றோர் சிலர் கவலைக்கிடமான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைத் தெரிவித்தபோது, உடன்பிறப்பே! என் உள்ளம் பட்டபாட்டை எப்படி எழுத்துகளில் விளக்க முடியும்!

சென்னை இராயப்பேட்டையிலும் மற்றும் அரசு பொது மருத்துவமனையிலும் காலொடிந்து, கையொடிந்து கண்மூடிய நிலையில் கிடத்தப்பட்டுள்ள கழகக் காளைகளை, நானும் பேராசிரியரும், கழக முன்னணியினர் பலரும் 4-ந் தேதியன்று சென்று பார்த்தபோது அந்தக் காட்சிகளைக் காணச் சகிக்கவில்லை.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராகப் பணியாற்றும் சக்கரவர்த்தி என்ற கழக உடன்பிறப்புக்கு உயிர்நிலைக்கு அருகாமையில் துப்பாக்கி ரவை பாய்ந்து பிழைப்பது கேள்விக்குறியாக உள்ளது. கோவை ராசம்மாள் என்ற மூதாட்டி, இந்த மகனின் அழைப்பை ஏற்று சென்னைப் பேரணிக்கு வந்த குற்றம், முகத்தில் காயமுற்றுள்ளார். ஓடச் சக்தியற்ற உடல்வாகு! அவர் ஓடஓடப் போலீசாரால் துரத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

மற்றும் தங்கவேலு, சாமுவேல், ஜெயபாண்டியன், தனசேகரன் ஆகியோரையும் மருத்துவமனையில் கண்டோம் - மூவரில் இருவர் பிரக்ஞையற்ற நிலையில்!

தனசேகரன் தேக்கு மரத் தேகம் படைத்த வாலிபன்! அவன் கால்களில் துப்பாக்கி குண்டு பாய்ந்து பெருமளவு இரத்தம் வெளியேறிவிட்டதால், இளைஞரணி தம்பி உமாபதி போன்றோர் இரத்தம் கொடுத்துள்ளனர். அந்த கட்டுடல் வீரனின் கால்களில் ஒன்று வெட்டப்பட்ட வேண்டுமாம் - அத்துணைச் சேதம்! தனசேகரன் குடும்பத்தினர் எங்களைச் சூழ்ந்துகொண்டு அழுது புலம்பியதை, அம்மவோ! தாங்கிக் கொள்ள முடியவில்லை!

மக்கள் பிரச்சினைகள் நாளுக்கு நாள் துன்ப மயமாகிக் கொண்டிருக்கிறது. விலைவாசி ஆகாயமளாவ ஏறி அல்லற்படுத்துகிறது - அண்டை மாநிலம் கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள் அகதிகளாக்கப்படுகிறார்கள் - இவற்றில் கவனம் செலுத்தாத அரசுகள் தடா சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து

எத்தனை தலைகளைக் கொய்திடலாமென தர்பார் நடத்துகிறது - எனவே, மும்முனைப் போராட்டம் என கழகத் தலைமை நிர்வாகக் குழு முடிவெடுத்தது.

முதற்கட்டமாக, முழு அடைப்பு, மறியல் போன்ற போராட்டங்கள் எதுவும் வேண்டாமென்று தான் கருப்புக் கொடி ஊர்வலம், ஆட்சி அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டம், ஆளுநர் மாளிகைக்கு மனு கொடுக்க பேரணி என மூன்று போராட்டங்களும் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டன.

தடா எதிர்ப்புப் பேரணி, லட்சோப லட்சம் மக்களைக் கொண்ட மனித வெள்ளமாகக் காட்சி அளித்ததையும் - அமைதியாகவும் கட்டுப்பாட்டு உணர்வுடனும் - அனைவரும் பாராட்ட நடைபெற்றதையும் கேள்விப்பட்டவுடன், ஆளுங்கட்சியினர் அதைக் குந்தகப்படுத்த கற்கள், குண்டாந் தடிகள், துப்பாக்கி குண்டுகள் என்ற ரீதியில் போலீஸ் துணையுடன் தாக்குதலைத் தொடங்கினர். பேரணியைக் கலைத்தனர் - சிதறியோடச் செய்தனர் - ஆளுநர் மாளிகைக்கு முன்னால் நான் பேசுவதற்கு மேடை அமைத்திட அனுமதிபெற்று, குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மக்கள் அந்த மேடையருகே வரமுடியாமல் போலீசாரால் தாக்கப்பட்டனர். அந்தக் கொடுமையையும் மீறிக் கூட்டம் நடைபெற்றது.

ஆனால் ஜெயலலிதா, சட்டப்பேரவையில் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார்.

தி.மு.க. பேரணி நடத்துவதென்றால், நிபந்தனை ஒப்பந்தத்தில் நான் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டுமாம்!

அண்ணன் குத்தூசி குருசாமி இருந்தால், இப்படி எழுதுவார் :- முதல் மந்திரியின் இந்த நிபந்தனையைக் கேட்டு அரசியல்வாதிகள் வாயால்கூட சிரிக்கமாட்டார்கள் ....யால்தான் சிரிப்பார்கள் என்று எழுதுவார்!

பெரியார் இருந்தால், இது என்ன நிபந்தனை! வெங்காய நிபந்தனை என்று கேட்பார்!

புரட்சிக் கவிஞர் இருந்தால், தடைக்கற்கள் உண்டெனினும், தடந்தோள்கள் உண்டெனச் சிரிப்போம் என்று முழங்கியிருப்பார்!

அண்ணன் தளபதி அழகிரி இருந்தால், உன் ரஜகஜதுரக பதாதிகளை ஒரு கை பார்ப்போம்! என்பார், வான்நோக்கிக் கை நீட்டி!

அறிஞர் அண்ணா இருந்தால், இராமலிங்க விலாஸ் பிரியாணி ஓட்டல் என்பது போல, என் பெயரை கட்சிக்கு வைத்துக்கொண்டு சர்வாதிகாரக் காட்டுத் தீயைக் கொண்டு ஜனநாயகத்தைப் பொசுக்குவதா? என வேதனைப்பட்டிருப்பார்.

நாம், இவர்களின் கருத்துகளுக்கெல்லாம் செயல்வடிவம் கொடுப்போம்!

மும்முனைப் போர் முதல் கட்டம் முடிந்தது - அடுத்த கட்டங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுப்போம்!

நான் அழைத்தேன்! வந்தாய்! அடிபட்டு நொந்தாய்!

அதற்காக, அடுத்த கட்டப் போராட்ட அழைப்புக்கு ஒதுங்கிவிடும் ஒதியமிலார் அல்ல உன் வீரம் என்பது எனக்குத் தெரியும்!

இன்னும் வேகமான போராட்டம் என்ன என எதிர்பார்த்துத் துடிக்கும் உனக்கு, கழகத்தின் முக்கிய குழுக்கள் கூடி, விவாதித்து விரைவில் அறிவிப்பு தரும்!

தியாகம் செய்யத் தயாராக இருப்போம்!

அன்புடன்,

மு. க.

(06-02-1992)

1876. தன்னை வெல்வான், தரணியை வெல்வான்!

உடன்பிறப்பே,

> “அரசியல் கட்சிகள் தேர்தல்களில் ஈடுபடும் போது, ஏற்படும் வெற்றி தோல்விகள் - ஓட்டு எண்ணி அறிவிக்கப்படும் முடிவுகள் காட்டும் பாடத்துடன் நின்று விடுவதல்ல! ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதே இதிலே மிக முக்கியமான பாடமாகக் கொள்ள வேண்டும்.”

1957-ல் அறிஞர் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய மடலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். இது, நமது கழகத்திற்காக - கழக உடன்பிறப்புகளுக்கு மட்டுமல்ல. எண்ணிக்கையில் குறைவாகத்தானே வென்றுள்ளனர். எனவே எகிறிப் பாயலாம், எரிச்சல் மொழி உதிர்க்கலாம், ஏனோதானோவென்று சொற்பிரயோகம் பண்ணலாம், இழித்துரைக்கலாம், பழி கூறலாம், என எண்ணிச் செயல்படுவோருக்கும் அறிவுறுத்தும் அரிய கருத்துதான் அண்ணாவின் இந்தக் கருத்து!

ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதைத்தான் முக்கியமான பாடமாகக் கொள்ள வேண்டும்.

அண்ணா அவர்களின் இந்த அறிவுரையை நெஞ்சில் பதிய வைத்துத்தான், எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும், எமர்ஜன்சி காலத்து மிசாக் கொடுமையையும், இன்று மினி எமர்ஜன்சி காலத்து தடாக் கொடுமையையும் கழகம் தாங்கிக்கொண்டே, தனது பயணத்தைத் தளர்ச்சி சிறிதுமின்றி நடத்திக் கொண்டிருக்கிறது.

தடா சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரியும் - அந்தச் சட்டப்படி கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யக் கோரியும் - ஆளுநரிடம் முறையீடு ஒன்றை அளித்திட பிப்ரவரி

3 ஆம் நாள் கழகம் நடத்திய - இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்ட பேரணியில், பேரணியின் முடிவில் கலகம் செய்து, துப்பாக்கிப் பிரயோகம் நடத்திப் பலரைக் காயப்படுத்தியதோடு, சிலரை உயிருக்குப் போராடச் செய்துள்ள ஆளுங் கட்சியினர் - இனிமேல் பேரணி நடத்துவதென்றால் விளைவுக்குப் பொறுப்பேற்றுக் கழகத் தலைவர் எழுதித் தர வேண்டும் என்று ஆவேசமாக அறிவித்துள்ளனர்.

துப்பாக்கிகள், பீரங்கிகளை வெடித்துக் காயப்படுத்தி மட்டுமல்ல. அவைகளை விடக் கடுமையான வார்த்தைகளால் இட்லர், இடி அமீன் போன்றவர்களைப் பின்னுக்குத் தள்ளும் விதத்தில் பேசினாலும், ஆணைகள் பிறப்பித்தாலும் - அவற்றையும் தாங்கும் சக்தி கழகத்திற்கு உண்டு!

1965-ல் பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த என்னைக் கண்ட பிறகு, காஞ்சி இதழில் தம்பிக்குக் கடிதம் எழுதிய அண்ணா அவர்கள், தம்பி கருணாநிதியைத் தனியாக அடைத்து வைத்திருக்கும் சிறைவாசல் முகப்பில் எழுதப்பட்டுள்ள வாசகம் என்னைக் கவர்ந்தது. தன்னை வெல்வான், தரணியை வெல்வான்! என்பதே அந்த வாசகம் என்று குறிப்பிட்டிருந்ததை எண்ணிப் பார்க்கிறேன்.

65 ஆம் ஆண்டு பாளைச் சிறைவாசலில் அவர் படித்து மகிழ்ந்த அதே வாசகத்தின் கருத்தைத்தான் அண்ணா அவர்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன்பே 1957-ல் காஞ்சி இதழில், ஒரு கட்சிக்குத் தாங்கும் சக்தி முக்கியம் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

தாங்கும் சக்தி இருந்தால்தான் தன்னை வெல்ல முடியும்! தரணியையும் வெல்ல முடியும்!

அண்ணா மறைந்து இந்த இருபத்தி மூன்று ஆண்டுகளில், இருமுறையோ அல்லது மும்முறையோ அண்ணா சதுக்கத்திற்குச் சென்று மலர்வளையம் வைத்தவர் ஜெயலலிதா என்பது நாட்டுக்குத் தெரியும். அதுவும்கூட, நேராக அண்ணா சதுக்கத்திற்குக் காரில் வந்து இறங்கி மலர் வளையம் வைத்து விட்டுப் போனவர். இந்த ஆண்டுகூட ஏதோ விழாவுக்குப் போவது போல, ஜீப்பில் ஏறிக்கொண்டு, பல ஜீப்புகளில் அமைச்சர்களும், போலீசாரும் புடைசூழ - வாழ்த்து முழக்கங்களுடன் அண்ணா

சதுக்கத்திற்கு ஊர்வலம் சென்று அண்ணா நினைவு நாளைக் கொண்டாடியவர்.

அவர் நம்மைப் பார்த்து, ஆம் - இந்த இருபத்தி மூன்று ஆண்டுகளும், ஓராண்டு கூடத் தவறாமல், நமக்கு அண்ணனைத் தந்த பெரியார் சிலையிலிருந்து நடந்தே அமைதி ஊர்வலமாகச் சென்று அண்ணா சதுக்கத்தில் வணக்கம் செலுத்திவரும் நம்மைப் பார்த்து, நாம் அண்ணாவின் அன்புடையவர்களும் அல்ல! அவரது கொள்கைகளில் நம்பிக்கையுடையோரும் அல்ல என்று பரிகசிக்கிறார்! பார்த்தாயா உடன்பிறப்பே! காலம் எப்படிக் கெட்டு விட்டதென்று!

இதைத்தான் 1957லேயே அண்ணன், ஒரு கட்சிக்குத் தாங்கும் சக்தி தேவை என்று வலியுறுத்தினார்!

இப்போதுகூடப் பாரேன்! நமது கழகச் சார்பில் இரண்டு பேர் சட்டப் பேரவையில்!

இருவரும் திராவிட இயக்கத்தில் திடீர் இட்லி, திடீர் சாம்பார் அல்ல! முப்பது ஆண்டுகளுக்கு முன்பே அண்ணா எழுதிய காஞ்சி இதழ்க் கடிதமொன்றில், அவர் கழக முன்னணியினரின் பட்டியல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதிலே இடம் பெற்ற பெயர்களில் ஒன்று துறைமுகம் செல்வராசனின் பெயர்! 1969-ல் கழகத்தின் தேர்தலில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை எதிர்த்து தலைமைக் கழகப் பொருளாளர் பொறுப்புக்குப் போட்டியிட்டு, பிறகு எம்.ஜி.ஆர். அவர்களும், கழக முன்னணியினரும், நானும், நாவலரும், பேராசிரியரும் கேட்டுக் கொண்ட பிறகு, அந்தப் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் போட்டியின்றிக் கழகப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட உதவியவர்.

அவரைப் பரங்கிமலைக் கண்டோன்மெண்ட் தேர்தலில் ஆளுங்கட்சியினர் தாக்கி - மண்டையுடைந்து, வலக் கண்ணிலும் ஒரு நரம்பு அறுந்து மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வருகிறார்!

இன்னொருவர் - இளம்வழுதி! அவர் கழகத்தின் நெடுநாளைய தளகர்த்தர்களில் ஒருவரான இளம்பரிதியின் செல்வன்! தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலைநிமிரத் தடந்தோள் தட்டி, பட்டிதொட்டியெங்கும் முரசு கொட்டிய இளம்பரிதிக்கு மகனாகப்

பிறந்து, புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ற மொழிக்கு இலக்கணமாக விளங்கும் பாரம்பர்யமிக்கக் கழகத்துக் காளை!

அவரும் பேரவையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். அரசினர் தோட்டத்திற்குள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வசிக்கும் அவரைக் கடத்திச் செல்லக் கடும் முயற்சி நடைபெற்றதாகவும் - கட்சியிலிருந்து தாவிடச் செய்ய வன்முறை வரையில் மாற்றார் கையாண்டதாகவும் - எனவே தனக்குப் பாதுகாப்பு தேவையென்று பேரவையில் இளம்வழுதி உரிமைப் பிரச்சினை தந்ததாகவும், அதுபற்றி விளக்கமளிக்க எழுந்தபோது, சபாநாயகரின் உத்தரவுக்குக் கீழ்ப்படியாத காரணத்தால் அந்தத் தம்பிக்கு இப்படியொரு தண்டனை விதிக்கப்பட்டதாகவும் செய்திகள் ஏடுகளில்!

இந்தச் செய்தியைக் குறித்து விமர்சனம் எதுவும் செய்திட விரும்பவில்லை நான்! பேரவையில் மரபு, மாண்பு இவற்றினைக் காப்பதில் எனக்கு அக்கறை அதிகம் உண்டு என்பதால்!

உடன்பிறப்பே,

கடந்த கால நிகழ்ச்சிகள் சில உன் மனக்கண் முன்னே தோன்றுகின்றன அல்லவா?

பட்ஜெட் படிக்க முற்படும்போது, எதிர்கட்சிகள் அதிகபட்சம் வெளிநடப்பு செய்யலாம் - அல்லது வெளிநடப்புக்கான காரணத்தைக் கூறிவிட்டு அவையைவிட்டு வெளியேறலாம்! இவையெல்லாம் கூட அதிகபட்சமாகத்தான்!

ஆனால் 1989-ஆம் ஆண்டு, நான் பட்ஜெட் படிக்க முற்படும்போது என்ன நடந்தது?

பட்ஜெட்டே படிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டது! படிக்காதே! படிக்காதே! என்று கூச்சல் மட்டுமல்ல, என் மீதே தாக்குதல் கூட! பட்ஜெட்டை பிடுங்க முயற்சி! முதலமைச்சராக நின்ற என் முகத்தில் குத்து! மூக்குக் கண்ணாடி உடைப்பு! தொடர்ந்து ரகளை - கலவரம்! அவை ஒத்திவைப்பு! பிறகு பட்ஜெட் படித்த நிகழ்ச்சி!

பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட வழிவிட்டு - மறுநாள், எதிர்க்கட்சியினர்தமது உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கலாம் என்று யாராவது அப்போது எழுதினார்களா? விமர்சித்தார்களா?

1991-ல் கவர்னர் பர்னாலா உரை நிகழ்த்தப் பேரவையில் எழுந்து நின்றபோது - படிக்காதே! படிக்காதே! என்று அவரது இருக்கையைச் சுற்றி நின்று ஆரவாரம் செய்தது யார்? கவர்னர் உரைப் புத்தகத்தைக் கிழித்து அவர் இருக்கையை நோக்கி வீசியவர்கள் யார்?

இப்போதும் அதேபோல நடந்துகொள்ள வேண்டுமென எண்ணுகிறவனோ, விரும்புகிறவனோ அல்ல நான்!

கவர்னர் உரையின்போது, தனது கருத்தைச் சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்திட முயன்ற பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்டார். தாக்கியவருக்கும், தாக்கப்பட்டவருக்கும் ஒரே தண்டனை!

இதே பேரவையில்தான் சபாநாயகம் மீது ஆளுங்கட்சி சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அன்றைய அவை முன்னவரும் இன்றைய நிதி அமைச்சருமான நாவலர் முன் வருவாரா? வர முடியாது! வரவும் கூடாது! மரபுக்கும், விதிமுறைகளுக்கும், பேரவையின் மாண்புக்கு விரோதம்!

ஆனால் அன்றைக்கும் சரி! இன்றைக்கும் சரி! எவராவது 1972 டிசம்பர் 2-ந் தேதி சட்டப் பேரவை நிகழ்ச்சியில் எதிர்க்கட்சியினரான எம்.ஜி.ஆர். கட்சியினர் விதிகளை மீறினர் - என்று விமர்சனம் செய்தது உண்டா?

அப்போதும் சரி! இப்போதும் சரி - செய்ததில்லை! செய்ய மாட்டார்கள்!

இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். நாம்தான் உண்மையான அண்ணாவின் தம்பிகள் - அண்ணா கொள்கைகளை செயல்படுத்தும் கழகத்தினர் - என்ற உறுதியான நிலையை!

அதனால்தான் உண்மையான கழகத்தை வீழ்த்தி விட்டு, போலிகளை வளர்த்துத் தங்கள் ஆதிக்கத்துக்குச் சரிவு வராமல் பாதுகாத்துக் கொள்ள - பத்திரிகா தர்மம் பேசும் பத்திராதிபர்களும், பண முதலைகளும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுகிறார்கள்!

அடக்கு முறைகள்!

ஆணவ உரைகள்!

அராஜகச் செயல்கள்!

இவைகளை மட்டுமல்ல! இவர்களைப்போன்ற ஆதிக்கபுரியினரின் சூது மாயங்களையும் தகர்த்தெறிய வேண்டுமானால்,

கட்சியின் தாங்கும் சக்தியைப் பெருக்கிடச் சொன்னாரே அண்ணா அவர்கள், கடிதத்தை எப்படி முடிக்கிறார் தெரியுமா?

இதோ அது :-

தொல்லைகளுக்கு எல்லையே கிடையாதா? என்று துயரப்படாதே! வைரம் என்பது நெடுங்காலமாய் நெருக்கிக் குறுக்கி வைத்த ஒரு துண்டு நிலக்கரியே என்ற உண்மையை நினைவு கொள்!

அன்புடன்,

மு. க.

(07-02-1992)

1877. வீர வணக்கம் செலுத்துவோம்!

உடன்பிறப்பே,

வடசென்னைப் பகுதியே வாட்டமுற்றுக் கிடந்தது! இராயபுரமும், இராதாகிருஷ்ணன் நகரும் கடையடைப்புச் செய்து விட்டு கண்களைத் திறந்து வைத்துப் பெருகிடும் கண்ணீருக்கு வழி விட்டுக் கொண்டிருந்தன!

அந்த இளைஞன் தனசேகரன், தனது இருபத்தேழு வயதுக்குள் அந்த அளவுக்கு அந்த வட்டாரத்தைத் தனது கழகப் பணிகளால் கவர்ந்திருந்தான்.

ஏழ்மை நெளியும் குடும்பம் - இயக்கத்தை இதயத்தில் குடியமர்த்திக் கொண்ட பெற்றோர்க்கு அவன் பிள்ளை! கிள்ளையொருத்தியை மணம் முடிக்கும் ஏற்பாடுகளில் பெற்றோரும், உற்றாரும் முனைந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சில நாட்களுக்கு முன்பு, அவனது தம்பியை இயற்கை கொத்திக்கொண்டு போய்விட்டது. தம்பிக்கான ஈமக் கடன்களை முடித்த மறுநாள் பிப்ரவரி 3-ந் தேதி, அண்ணா நினைவு நாள் அமைதி ஊர்வலத்தில் காலையில் கலந்து கொண்டு, மாலையிலே கழகம் தடத்திய தடா எதிர்ப்புப் பேரணியை ஒழுங்குபடுத்திக்கொண்டு சென்றான்.

பேரணியின் பெரு வெற்றிச் செய்தியைக் கேட்டுச் சகிக்காதவர்கள், ஊர்வலத்தின் இறுதிக் கட்டத்திலாவது அந்த அணியின் கட்டுப்பாடு மிக்க எழுச்சியை உருக்குலைத்தே தீர வேண்டுமென்று உறுமினர்! திட்டம் தீட்டினர்!

ஆளுநரைச் சந்திக்க நாங்கள் ராஜ் பவனத்திற்குள் சென்றிருந்த நேரம் பார்த்து - பரங்கிமலை கண்டோன்மெண்ட் தேர்தலில் ஒத்திகை பார்த்துக் கொண்ட வன்முறையை அரங்கேற்றினர்! பரங்கிமலையில் பார்வையாளர்களாகவும்,

ஆளுங்கட்சிக்குப் போர்வையாளர்களாகவும் இருந்த காவல் துறையினர் பேரணியில் வந்தோர் மீது துப்பாக்கி குண்டுகளைப் பொழிந்தனர். அதில் காயமுற்று வீழ்ந்த சிலரைக் காப்பாற்றித் தூக்கி வரத்தான் கண்மணி தனசேகரன் காற்றாய்ப் பறந்து சென்றான் - அந்தத் தம்பியின் மூச்சு காற்றைத்தான் இந்த அரசின் கொடுங்கோன்மை பறித்துவிட்டது!

ஏழெட்டு பேர் காயமுற்று மருத்துவமனையில் கிடக்கின்றனர். காயமுற்றவர்களை இந்த அரசு கைது செய்து வழக்குப் போட்டுள்ளது. என்னவோ, குற்றம் புரிந்தவர்களைத்தான் காவலர்கள் குறிபார்த்துச் சுட்டதைப் போல, காயம்பட்டோர் மீதெல்லாம் கடுமையான சட்டப் பிரிவுகளிலே வழக்குகள்! அந்த வழக்குகளைக் கழகம் சந்திக்கும்!

புல்லர் தொடுக்கும் பொய் வழக்குக் கணைகளைப் பொடிப் பொடியாக்கி, நீதியை நிலை நாட்டத்தான் நீ வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாயே! வழக்கு நிதி - நாள்தோறும்! இதுவரை இலட்சத்தை எட்டியிருக்கிறது. எனவே தக்க வழக்கறிஞர்களைக் கொண்டு, எத்தனை நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் வேண்டுமானாலும் ஏறி, இறங்கிப் பொய்மையின் முழுத் தோலையும் உரித்துக் காட்டுவோம்!

ஆனால் உடன்பிறப்பே, எத்தனை நீதி மன்றங்களுக்குச் சென்றாலும் - எவ்வளவு திறமையான வழக்குறைஞர்கள், எத்தனை நாள் வாதாடினாலும் - தம்பி தனசேகரனைத் திரும்பப் பெற முடியுமா? அவன் பெற்றோருக்கும், சகோதரிகளுக்கும், உற்றாருக்கும் முன்னே அவனை உயிரோடு கொண்டு வந்து நிறுத்த முடியுமா? என் அன்புத் தம்பிகளில் ஒருவனை இழந்து நிற்கிறேனே! அண்ணனே! இதோ வந்து விட்டேன். மீண்டும் கழகப் பணியாற்றிட! என்று அந்த இளைஞரணிச் செல்வன் ஓடி வந்து என்னைத் தழுவிக் கொள்வானா? நான் தரும் பாசமிகு முத்தங்களை அவன் நெற்றியிலும், கன்னத்திலும் ஏந்திக் கொள்வானா?

கறுப்பு வைரம் போல் என்ன உடல்வாகு! கண்களில் எத்தனை ஒளி! தேக்கு மரம் கடைந்தெடுத்து வடித்தெடுத்த வடிவழகன்! பத்து பேர் சேர்ந்து தாக்கினாலும், தாக்கியவர்க்கே உடல் வலியெடுக்கும் புலிப் போத்து! மருத்துவமனையிலும் அவனைப்

பார்த்தோம் - மரணத்தை அவன் தழுவிக்கொண்ட பிறகும் மாலை சூட்டி, அந்த மாவீரனின் மலைத் திருமேனியைப் பார்த்தோம்.

அவன் சகோதரி என் கரங்களைப் பிடித்துக் கொண்டு அழுதவாறு சொன்னார், அண்ணே உன்கிட்டே அவன் கல்யாணத்துக்கு தேதி கேக்கணும்னு மூணுமாசமா சொல்லிகிட்டு இருந்தானே! நீ இப்ப அவனுக்குக் கல்யாண மாலை போட வந்துட்டியே! போடண்ணே! போடு! தம்பி மாலையை போட்டுக்கடா!

இந்த வார்த்தைகள் என் நெஞ்சில் மட்டுமல்ல! என்னுடன் வந்திருந்த நமது பேராசிரியர் மற்றும் கழக முன்னணியினர் நெஞ்சங்களிலெல்லாம் வாள் கொண்டு வீசியது போன்ற உணர்ச்சியை அல்லவா வரவழைத்தன!

சில நாட்களுக்கு முன்பு நோய்க்கு ஒரு மகனையும் - இன்று வன்முறை பேய்க்கு மற்றொரு மகனையும் பலிகொடுத்து விட்ட அந்தக் குடும்பத்தின் குமுறலையும், கொந்தளிப்பையும் - பெரும் புயல் தாக்கும் கடலுடன் கூட ஒப்பிட முடியாதே!

அந்தத் தம்பியின் உடலை அடக்கம் செய்திட ஊர்வலமாக எடுத்துச் சென்ற போது இருபதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் நடந்து சென்றனர். வீதிகளின் இருமருங்கிலும் பல்லாயிரவர் நின்று கண்ணீர் உகுத்தனர்.

இந்த உணர்ச்சி கொப்பளிக்கும் வேளையிலும், கழக உடன்பிறப்புகள் கட்டுப்பாடு காத்து அந்த இறுதி ஊர்வலத்தை அமைதியுடன் நடத்தியிருக்கிறார்கள்.

இவர்கள்தான், தடா எதிர்ப்புப் பேரணியில் அமளியில் ஈடுபட்டனர் என்று அபாண்டம் கூறுகிறது அரசு!

அரசின் அபாண்டத்தையும், அது நடத்திய அலங்கோல காட்டு தர்பாரையும் கண்டித்து, காங்கிரஸ் தவிர, மற்ற எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் அறிக்கைகள் விடுத்துள்ளனர்.

தம்பியின் பேரிழப்புக்காக வழிந்து கொண்டிருக்கும் என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, அந்தக் கட்சித் தலைவர்களின் ஜனநாயக உணர்வுக்கு என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்பி! உன் தியாகம், தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து, தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக்கூறி, இந்த ஆதி திராவிட இனத்து அடலேறுவாம் தனசேகரனுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்!

அன்புடன்,

மு. க.

(09-02-1992)

1878. பொன்விழா ஆண்டு; பூரித்துப் போகிறேன்!

உடன்பிறப்பே,

குங்குமம் வார இதழில், நெஞ்சுக்கு நீதி மூன்றாம் பாகம் தொடரை எழுதிக் கொண்டிருக்கிறேன் அல்லவா? அதற்காகப் பல்வேறு செய்திக் குறிப்புகளை பழைய நாளேடுகளில், நூல்களில் தேட வேண்டியிருக்கிறது. இளமைக் காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வந்தபோது இன்று நாளேடாகக் கழகப் பிரச்சாரப் பணியாற்றிக் கொண்டிருக்கிற முரசொலி - அன்றைக்குத் துண்டு அறிக்கையாக வெளிவந்த நாட்களைப் பற்றிய சிந்தனை எழுந்தது. நெஞ்சுக்கு நீதி முதல் பாகம் புத்தகத்தில் அதுபற்றிய குறிப்பு இருக்குமென எதிர்பார்த்து அந்தப் புத்தகத்தைப் புரட்டினேன்.

1944-ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற வர்ணாஸ்ரம மாநாட்டைக் கண்டித்து, அதனை எதிர்த்துக் கிளம்பிட வேண்டுமென்று வருணமா? மரணமா? என்ற தலைப்பில் முரசொலி கட்டுரை பற்றிய குறிப்பு நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் கிடைத்தது. அதில் 5.10.1944 என்று தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. ஈ.வெ.ரா. ஆண்டு 67 - முரசு 2 - என்றும் அந்த முரசொலி வெளியீட்டின் முகப்பில் அச்சிடப் பட்டிருந்த தோற்றம் 1942 என்ற குறிப்பில் நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் தோற்றம் என்பது மட்டுமே அச்சாகியிருந்தது. பிழைதிருத்தியவரின் பிழையின் காரணமாக, 1942 என்பது அச்சாகாமல் விடப்பட்டு விட்டது.

முரசு 2 என்று இருப்பதால், 1944-க்கு முன்பு இரண்டு ஆண்டுக்கு முன்னர் 1942-ல் தானே முரசொலி முதன் முதலாக ஒலித்திருக்க வேண்டும் என்ற நினைவுடன், தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்திற்காகச் சென்றபோது திருவாரூரில் என் பழைய நண்பன் தென்னவனிடம் முதல் முரசொலி வெளியிடப்பட்ட

ஆண்டும், மாதமும், தேதியும் சரியாக எனக்குக் கிடைக்க வேண்டுமென்று கேட்டேன்.

அந்தக் காலத்தில் எனக்குப் பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், அவர்கள் கைப்பட எழுதிய கடிதங்கள் கூட, திருக்குவளையில் நான் பிறந்த வீட்டில் பத்திரமாகக் காட்சியில் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை எனக்குக் காட்டிய தென்னவன், 1942-ல் முரசொலி வெளியிடப்பட்ட தேதிக்கான ஆதாரத்தையும் அவற்றுடன் இணைத்துத் தந்தவுடன் என் உள்ளத்தில் பீறிட்டெழுந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

1942 ஆகஸ்டுத் திங்கள் 10-ஆம் நாள், முரசொலி திருவாரூரில் துண்டு வெளியீடாகத் தொடங்கப்பட்ட அந்த நிகழ்ச்சி, அடடா! அப்போது உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் பலபேர் பிறந்துகூட இருக்க மாட்டார்கள் - அன்று தொடங்கிய முரசொலியின் முழக்கம் இன்றும் ஓயாமல் கேட்டுக்கொண்டிருக்கிறது. எத்தனையோ இடையூறுகள் - எத்தனையோ இன்னல்கள் - எத்தனையோ அடக்குமுறைகள் - எத்தனையோ சூழ்ச்சிகள் - எத்தனையோ பொருளாதாரக் கஷ்டங்கள் - எத்தனையோ தடைகள், தடங்கல்கள், எதிர்ப்புகள் - அனைத்தையும் கடந்து இன்று கழகத்தின் போர்வாளாகவும், கேடயமாகவும் உன்போன்ற உறுதி படைத்த உடன்பிறப்புகளின் கரங்களில் ஒளிவிடும்போது, முரசொலியின் வரலாற்றுப் பெருமையை எண்ணிப் பெருமிதம் அடைவதில் தவறில்லையல்லவா?

சேரன் என்ற புனைப் பெயரில் நான் எழுத - தென்னவன் செயலாளராக இருந்து, ஆயிரக்கணக்கான துண்டுவெளியீடுகளை திங்கள் இதழாகவும், சில நேரங்களில் திங்களிருமுறை இதழாகவும் வெளியிட்டு - பின்னர் வார ஏடாக வளர்த்து, இதனைத் தொடர்ந்து நடத்திட பட்டபாடு கொஞ்சமல்ல!

ஓரிரு வாரங்களில் என் வீட்டில் உள்ள நகைகள் எல்லாம் அடகு போய், அதில் கிடைக்கும் தொகை கொண்டுதான் அச்சகத்திலிருந்தே முரசொலி வார இதழை எடுத்து வர முடியும் - அந்த நகைகள் திரும்ப மீட்கப்பட்டதும் உண்டு - அடகுக் கடையிலேயே மூழ்கிப் போனதும் உண்டு!

தள்ளாடும் - தத்தி நடக்கும் - தணலை மிதிக்கும் - விழும்! எழும்! ஆனாலும் எந்த நிலையிலும், கொண்ட கொள்கையை

மண்டியிட வைத்ததில்லை. முன்வைத்த காலைப் பின்வைக்க நினைத்ததுமில்லை!

அடிக்கடி நான் சுட்டிக்காட்டியிருப்பது போல, முரசொலி நான் பெற்ற முதல் குழந்தை! ஆம்! அந்த முதற் பிள்ளைதான் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைப் போல, கிண்கிணி அணிந்த கால்களுடன் பகைவர்கள் பலரைக் களத்தில் சந்திக்க சென்று வா மகனே! செருமுனை நோக்கி! என அனுப்பி வைக்கப்பட்ட என் அன்புப் பிள்ளை!

அந்தப் பிள்ளை, ஆம், முரசொலிப் பிள்ளை என்றைக்குமே தான் மட்டும் வளர வேண்டுமென எண்ணிய பிள்ளை அல்ல! தனக்குத் துணையாகக் களம் புகுந்திட பல்வேறு படைக்கலன்களாக வார இதழ்கள், நாளிதழ்கள் வரவேண்டுமென விரும்பிய பிள்ளை!

அண்ணா அவர்கள், ஒருமுறை தம்பிக்கு எழுதிய மடலில் பட்டியல் போட்டுக் காட்டினார் - நமதியக்கத்திற்கு எத்தனை ஏடுகள் இருக்கின்றன என்று பெருமிதத்துடன்!

திராவிட நாடு, முரசொலி, மன்றம், புது வாழ்வு, போர்வாள், தென்னகம், தென்றல், தீப்பொறி, இன முழக்கம், கிளர்ச்சி, தோழன், தம்பி, அறப்போர், திராவிடன், நிலவு, பொன்னி, குயில், தீச்சுடர் என நாற்பதுக்கு மேற்பட்ட வார ஏடுகள் - நம்நாடு, தனி அரசு, மாலை மணி என நாளேடுகள்!

இன்று அத்தனை ஏடுகள் இல்லை - இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அன்று பெருகியது போன்று, நமது ஏடுகளின் எண்ணிக்கை இல்லை! இது வருந்தத்தக்கது!

எத்தனையோ புயல், சூறாவளி, பூகம்பம் இவற்றைச் சமாளித்து முரசொலி நாளிதழாக உருக்கொண்டு - 1942-ல் பிறந்து 1992-ல் தனது ஐம்பதாவது பொன்விழா ஆண்டு நிறைவினை வருகிற ஆகஸ்டு 10-ஆம் நாள் கொண்டாட இருக்கின்றது!

முரசொலியின் எழுத்து என்னை, எத்தனையோ முறை அடக்குமுறைக்கு ஆளாக்கியிருக்கிறது! தம்பி மாறனை முரசொலியின் கட்டுரைகளும், கார்ட்டூன்களும் காராக்கிரகத்தில் அடைத்திட்ட காலமும் உண்டு! முரசொலி செல்வத்தின் மீது அடக்குமுறை பாய்ந்ததுண்டு!

முரசொலியில் தயாரான பலர், இன்று தமிழகத்தில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் இதை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள அச்சம் தடுத்தாலும், உள்ளூர ஓர் உணர்வு அவர்களின் இதய அதரங்களை அசைத்து நான் முரசொலிப் பாசறையிலிருந்து வந்தவன் என்று சொல்ல வைத்துக்கொண்டு தானிருக்கிறது.

வணிக ஏடாக முரசொலி தன்னைக் கருதிக் கொள்ளாத காரணத்தால் - தன்னைப் போலவே இயக்கக் கருத்துகளைப் பரப்பிட, இன்னும் பல ஏடுகள் வரவேண்டுமென்று விழைந்தது! விழைகிறது!

அலை ஓசை, எதிரொலி பத்திரிகைகள் - முரசொலியில் அச்சியற்றப்பட்ட காலங்களும் உண்டு! தினகரன் ஏடு தொடக்கத்தில் முரசொலி அச்சகத்தில்தான் அச்சியற்றப்பட்டது!

கழகக் கருத்துகள் பரவிட வேண்டும் - நான் ஒருமுனையில் பிரச்சாரம் செய்தால், நம்மைப் போல முழுமையாக இல்லாவிடினும், பிற ஏடுகள் கழகக் கருத்துகளை அவைகளின் பாணியில் பிரச்சாரம் செய்ய வேண்டும் - மொத்தத்தில் இயக்கம் வலிவும், பொலிவும் பெற வேண்டும் என்பதே முரசொலியின் குறிக்கோளாக இருந்தது. இன்றைக்கும் இருக்கிறது.

ஏறத்தாழ எட்டு பொதுத்தேர்தல்களில் முரசொலியின் பணி, கழகத்திற்குப் பெரும் படைக்கலனாக அமைந்து பயன்பட்டிருக்கிறது! எண்ணற்ற போராட்டங்களில் முரசொலியின் யுத்த முழக்கம் கழகக் காளையரை உற்சாகமூட்டி, எதிரிகளைப் புறங்கண்டிருக்கிறது!

எமர்ஜன்சி காலத்தில், எல்லாப் பத்திரிகைகளும் வாயை மூடிக்கொண்டு, மடக்கிய கத்திகளாக மாறிவிட்ட நேரத்தில், உறைக்குள் உறங்கிடாத வீரவாளாக ஓங்கி உயர்ந்து சுழன்றது முரசொலிதான் என்பதை மாற்றாரே ஏற்றுக் கொள்வர்.

அண்ணாவுக்கு எதிராக தோழர் சம்பத்தும், வேறு சிலரும் கழகத்திற்குள் ஊருக்கு ஊர் குழுக்களை உருவாக்கிக்கொண்டு, புறம்பேசித் திரிந்தபோது - அம்பலத்திலொன்றும் அறைக்குள் ஒன்றுமாகப் பேசி சதிவலை பின்னியபோது - புதிய இயந்திரம் அமைப்பதற்காக, முரசொலி நாளிதழ் மூன்று மாதம் தற்காலிகமாக

நிறுத்தி வைக்கப்படுமென்று அறிவித்ததைப் படித்து விட்டு, அண்ணா அவர்கள் என்னையும், மாறனையும் அவசரமாக அழைத்து - முரசொலியை தற்காலிகமாக நிறுத்திவைக்க இதுதானா நேரம்! கூடாது! கூடாது! நிறுத்தாமல் நடத்து! பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஆணையிட்டு, அதன்படி அண்ணாவுக்கும், கழகத்திற்கும் எதிராக எழுந்த துரோகத்தைத் தூள் தூளாக்கிக் காட்டியதில் முரசொலிக்கும் பெரும் பங்கு உண்டு!

துரோகக் கும்பலுக்கு முரசொலி வைத்த பெயர் குட்டி காங்கிரஸ்! ஆம்! அது பிறகு குட்டிக் காங்கிரசாகவே ஆகி ஒட்டுக் காங்கிரசும் ஆனது! அந்தக் காலகட்டத்தில் முரசொலியில் வெளிவந்த ஐஸ்புரூட் கார்ட்டூன்களை கழகத்தினர் மட்டுமல்ல! வேறு யார்தான் மறந்திட இயலும்?

எமர்ஜன்சி பிரகடனம் செய்யப்பட்டவுடன், இட்லராகிறார் இந்திரா என்ற தலைப்பில், முரசொலியில் வெளிவந்த கார்ட்டூன் படத்தை, வெளிநாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்ட வரலாற்றுச் சிறப்பு என்னுடைய செல்லப் பிள்ளையாம் முரசொலிக்கு உண்டு!

நெருக்கடி நெருப்பு - தணிக்கைக் கட்டுப்பாடு - அலுவலகத்தில் அடிக்கடி சோதனைகள் - அதாவது ரைடுகள் - முதுகில் குத்திய துரோகச் செயல்கள் - அற்ற குளத்து அறுநீர்ப்பறவைகளின் அவதூறுகள் - வழக்குகள் - கைதுகள் - இத்தனைக்கு மிடையில் ஒவ்வொரு நாளும் முரசொலி, இலக்கியமாய், கவிதையாய், காவியமாய், கட்டுரையாய், கடிதமாய் - இந்த இயக்கமெனும் கோட்டை முகப்பிலிருந்து பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்து கொண்டேயிருந்ததை உண்மையான கழக உடன்பிறப்புகள் மறந்துவிடக் கூடுமோ?

ஆண்டு தோறும் பொங்கல் மலர் - அண்ணா பிறந்த நாள் மலர் - மலர் வெளியிடும் திறன் சிலருக்கே உண்டு. கழகத்தினர்க்கு இல்லை எனத் தவறான பிரச்சாரத்தின் தலையிலடித்துத் தரமானதும், அழகானதுமான அரிய மலர்களை வெளியிட்டுக் காட்டியதும், அண்ணாவின் பாராட்டு வாழ்த்துகளுடன் அந்த மலர்களை அனைவரின் கரங்களை அலங்கரித்ததும் நெஞ்சில் நிறைந்த நிலையான சரித்திரக் குறிப்புகளன்றோ!

சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம் என்று, முரசொலியை அண்ணா அவர்கள், சிறப்பித்தது அவர் முரசொலிக்கு சூட்டிய முத்தாரமன்றோ!

முத்தாரமென்பது 1953-ஆம் ஆண்டு, நான் கல்லக்குடி போராட்டத்தின் போது, திருச்சி சிறையில் எழுதிய புதுக்கவிதைகளின் தொகுப்பாக வந்த புத்தகம்! அதுவே பிறகு முரசொலி நிறுவனத்தின் வார இதழாக வெளிவந்த, இன்று குங்குமம் வெளியீட்டகத்திலிருந்து உலகத்தின் பல கோணங்களைப் படம் பிடித்துக் காட்டும் எழிலாரமாகத் தமிழ்மக்களின் கைகளில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

இது தொடர்ந்து நடக்குமா? என்ற ஐயப்பாட்டுடன் துண்டு வெளியீடாகத் தொடங்கப்பெற்ற முரசொலி இன்றைக்கு, என் உயிரினும் மேலான உடன்பிறப்பே, நமது பாசறையாம் தி.மு. கழகத்தின் வேலாக, வாளாக, ஈட்டி முனையாகத் தனது ஐம்பதாண்டுப் பொன் விழாவைக் கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. உனது கொள்கை உறுதியால்! உனது இலட்சியப் பற்றினால்!

எனவே இது முரசொலிக்குப் பொன் விழா ஆண்டு - ஆகஸ்டு 10-ஆம் நாள் அந்த விழாவை உன்னோடு இணைந்து கொண்டாடுவேன்!

திருவாரூரில் 1942-ஆம் ஆண்டு முரசொலி வெளியீட்டுக் கழகம் என ஆரம்பித்து, மாநில முழுதும் - ஏன் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கும் - வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் கூட, அந்த வெளியீடுகளை அனுப்பி வைத்து இயக்கக் கொள்கைகளைப் பரப்பிய போது வெளியீட்டுக் கழகத்தின் புரவலராக இருந்த திருவாரூர் டி.எஸ். இராசகோபால் அவர்கள், சில திங்களுக்கு முன்பு தென்காசிக்கு அருகேயுள்ள ஆய்குடியில் காலமாகிவிட்டார். முரசொலி பரப்பிட ஊக்கம் தந்து உழைத்த தஞ்சை மாவட்ட திராவிடர் கழகச் செயல்வீரன் வி.எஸ்.பி. யாகூப் இருபது ஆண்டுகளுக்கு முன்பு நோய்வாய்ப்பட்டு, அவரைக் காப்பாற்ற நானும், தளபதி வீரமணியும் எவ்வளவோ முயன்றும் முடியாமல் அப்போதே இயற்கை எய்திவிட்டார். முரசொலி வார இதழாக ஆரூரில் கருணை ஜமால் அவர்களின் அச்சகத்தில் அச்சியற்றப்பட்ட நேரத்தில், அவைகளைக் கட்டித் தலையில்

வைத்துத் தூக்கிக்கொண்டு விஜயபுரத்திலிருந்து திருவாரூர் முரசொலி அலுவலகம் வரையில், நான் நடந்து வந்தபோது எனக்குத் துணையாகத் தலைச் சுமையுடன், என்னுடன் நடந்த அலுவலக மேலாளர் கனக சுந்தரம் சில ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார். முரசொலி நாளேடு வளர உழைத்த மேலாளர், நன்றிமிக்க நண்பர் மோகன்தாஸ் இன்றில்லை.

இப்போது திருவாரூர் சென்றிருந்தபோது அவர்களையெல்லாம் நானும் தென்னவனும் நினைவு கூர்ந்தோம்!

நடந்துவந்த அடிச்சுவடுகளைத் திரும்பிப் பார்த்திடுவதில் ஒரு தனிச் சுகம் - சோகம் கலந்த சுகமாக அது இருப்பினும், நன்றி மறவாத மனிதப் பண்பாடு அல்லவா?

துண்டு வெளியீடாகத் தொடங்கி, நாளேடாக உன் அகம் நிறைந்துள்ள முரசொலிக்குப் பொன்விழா வருகிறது விரைவில் என நினைக்கும் போதே மெய் சிலிர்க்கிறது எனக்கு!

1943-ல் பேராசிரியர் அவர்களையும், நாவலர் அவர்களையும் அழைத்து முரசொலி துண்டு வெளியீட்டுக்கு ஆரூரில் ஆண்டு விழா கொண்டாடிய நிகழ்ச்சி நெஞ்சில் இன்னமும் நிழலாடுகிறது.

அன்று, முதல் ஆண்டு விழா - இந்த ஆண்டோ ஐம்பதாம் ஆண்டுப் பொன்விழா!

பெற்ற பிள்ளைக்குப் பொன்விழா கண்டு எந்தத் தாயுள்ளம்தான் பூரித்துப் போகாமல் இருக்கும்? அந்தத் தாயின் நிலையில் இருந்து மகிழ்கிறேன்! உடன்பிறப்பே - மகிழ்கிறேன்!

அன்புடன்,

மு. க.

(13-02-1992)

1879. வழக்கம் போல் வழங்கிடுக வழக்கு நிதி! கழக நிதி!

உடன்பிறப்பே,

1967 முதல் 1976 வரையில், கழகம் ஆளுங்கட்சியாக இருந்திருக்கிறது. பின்னர் 1989 முதல் 1991 வரையில், ஆளுங்கட்சியாக இருந்திருக்கிறது. மொத்தம் இந்தப் பதினோரு ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஆட்சியைப் பயன்படுத்திக்கொண்டோ மிட்டா மிராசுகள், சீமான்கள் பூமான்கள், தொழில் அதிபர்கள் போன்றவர்களுக்குச் சலுகைகள் அளித்தோ - முறைகேடாகக் காரியங்கள் செய்து கொடுத்து அதற்காக என்று தொகை வசூலித்தோ - கட்சிப் பணிகள் எதையும் நிறைவேற்றிக் கொண்டதில்லை.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அண்ணா காலத்தில் கழகத்தினரிடத்தில் எப்படி நிதிபெற்று அறிவகம் பழைய கட்டிடம் விலைக்கு வாங்கப்பட்டதோ, அன்பகம் விலைக்கு வாங்கப்பட்டதோ, அஃதேபோல், கழகப் பணிமனைகள் பல ஊர்களில் உருவாக்கப்பட்டதோ அந்த வழியில்தான் அண்ணா அறிவாலயத்தைக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த 13 ஆண்டுக் காலத்தில் எழுப்பியது. அங்கே ஒரு திருமண மண்டபமும், கண் மருத்துவமனையும் அமைந்தது. கலனாகிக் கிடந்த அறிவகம் கட்டிடம் பழுது பார்த்திடவும், புதிய அமைப்புடன் திகழவும், கழக உடன்பிறப்புகள் தந்த நிதியே பயன்பட்டது.

உன் போன்ற உடன்பிறப்புகள் பணவிடைத்தாள் வாயிலாக கேட்கும் போதெல்லாம் நிதி அனுப்புகிறீர்கள் - என்னைக் காணும் போதெல்லாம் ஒரு தாளில் உடன்பிறப்பின் பெயரும் முகவரியும் எழுதி, அத்துடன் நிதியையும் இணைத்துத் தருகிறீர்கள். மாவட்டக் கழக தளகர்த்தர்களாகச் செயல்படும் மாவட்டச் செயலாளர்கள், மற்றும் ஒன்றிய நகரக் கழக இணை

அமைப்புகளின் செயலாளர்கள், தொழிலாளர் அணியினர், இளைஞர் அணியினர் அரும் பாடுபட்டு பெருந்தொகையை சிறு துளி பெருவெள்ளமெனச் சேர்த்து மாவட்டத்திற்கு மாவட்டம் போட்டி போட்டுக் கொண்டு எழுச்சி மிக்க நிதியளிப்பு விழா நிகழ்ச்சிகளை நடத்தி அளித்த நிதியின் அடையாளமாகத்தானே நமது அண்ணன், இதயமன்னன் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயர் தாங்கிய அண்ணா அறிவாலயம் கம்பீரமாக அண்ணா சாலையில் நின்று கொண்டிருக்கிறது.

கழக நிதி - அது தேர்தல் நிதியாயினும், வழக்கு நிதியாயினும், பாதிக்கப்பட்ட கழகக் குடும்பங்களின் பாதுகாப்பு நிதி ஆயினும், பொதுப்பிரச்சினைகளுக்கான புயல் நிவாரண நிதி, வெள்ள நிவாரண நிதி போன்ற நிதிகளாயினும் கழகச் சார்பில் எடுக்கப் படும் முயற்சிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் நான் உன்னை நோக்கித்தான் கையேந்தி இருக்கிறேன். நீயும் முகம் கோணாமல் முடிந்ததை வழங்கிக் கொண்டே இருக்கிறாய்!

கொடி ஏற்றிட இருநூறு ரூபாய் - சிற்றுண்டி அருந்திட இருநூறு ரூபாய் - மதியம் உணவருந்த ஐநூறு அல்லது ஆயிரம் என்றெல்லாம் கூட, உன் போன்றோரைக் கசக்கிப் பிழிந்திருக்கிறேன். பொதுக் கூட்டமெனில் ஐயாயிரம் - பத்தாயிரம் இப்படி யெல்லாம் கண்டிப்பாக நடந்து கொண்டிருக்கிறேன்!

இவையனைத்தும் கழக நிதி திரட்டும் வரலாற்றில் கடந்த காலங்கள் மட்டுமல்ல. நிகழ்காலமும் அப்படித்தான்! வருங்காலமும் கூட அவ்வாறே!

இவ்வளவு கண்டிப்புடன் நிதி விஷயத்தில் நான் நடந்துகொள்ளாவிடில், நீயும் கனிவுததும்ப அள்ளித் தந்திராவிடில் - எட்டு பொதுத் தேர்தல்களை நடத்தியிருக்க முடியுமா?

இத்தனை மாநாடுகளை வரலாற்றுச் சிறப்புமிக்கவைகளாக ஆக்கியிருக்க முடியுமா?

எண்ணற்ற வழக்குகளை சந்தித்துக் கழகம் மீண்டிருக்க முடியுமா?

ஏ, அப்பா - எவ்வளவு நிதியைத் தாராளமாக நீ தந்திருக்கிறாய். அதற்கெல்லாம் உரிய கணக்குகள் செயற்குழு, பொதுக்குழுக்களில் அறிவிக்கப்பட்டு மகிழ்ந்திருக்கிறாய்!

பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக் குழு உறுப்பினர்கள் மிக உன்னிப்பாகக் கணக்கு வழக்குகளை பார்த்து தணிக்கை அறிக்கையினைப் பொதுக்குழு, செயற்குழுக்களுக்குத் தருகிறார்கள்.

கழகத்தில் கணக்கு ஒழுங்காக இருக்கும். காசு வீணாகாது. என்ற நம்பிக்கை உனக்கும் - இது காசு அல்ல, கழகக் கண்மணியின் வியர்வைத் துளி என்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிற காரணத்தினால்தான் ஒவ்வொரு முறையும் முக்கியமான தேவைகளுக்கு நிதி குவிகிறது!

பஸ் முதலாளிகளுக்குச் சலுகை! கொண்டு வர ஆறு கோடி என்றோ - அரிசி வியாபாரிகளுக்கு சலுகை! எடு இரண்டு கோடி என்றோ - ஆம்னி பஸ்களுக்கு வரி குறைப்பு! தந்திடு ஒண்ணரைக் கோடி என்றோ - மது தொழிற்சாலை விற்பனை! வழங்கிடுக இரண்டு கோடியென்றோ - பேரம் செய்து, வந்ததில் கொஞ்சம் கட்சிக்கும் மீதியுள்ளது சொந்தப் பெட்டிக்குமெனக் குவித்துக்கொள்ளும் குள்ளமதி என்றைக்குமே கழகத் தலைமைக்கும், கழக ஆட்சித் தலைமைக்கும் இருந்ததில்லை.

அதனை நீ உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான், இப்போது நம் கழகத்தினர் மீது அரசு தொடரும் வழக்குகளைச் சந்திக்கவும் - உச்ச நீதிமன்றம் வரையில் சென்று வாதாடிடவும் - வழக்கிற்கும் நிதி வேண்டும், கழகப் பணிகளுக்கும் நிதி வேண்டுமெனக் கேட்டு வேண்டுகோள் விடுத்தேன்.

நேற்று 13-2-92 வரையில், உடன்பிறப்பே! நீ வழங்கியுள்ள கழக நிதியும், வழக்கு நிதியும் இந்தச் சில நாட்களில் ஒரு லட்சத்து முப்பத்தி ஐயாயிரம் ரூபாயைத் தாண்டியுள்ளது. முரசொலியில் அன்றாடம் நிதி அளித்தோர் பெயருடன் விபரம் வந்து கொண்டிருக்கிறது. இடமில்லாத காரணத்தால் முரசொலியில் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடப்படுகிறது.

அண்மையில் நாகை, திருவாரூர், தஞ்சை நிகழ்ச்சிகளில் சுமார் இருபத்தி எட்டாயிரம் ரூபாய் அளவுக்கு நிதி வழங்கப்பட்டது.

என்னிடம்தான்நேராக வழங்க வேண்டுமென்று இல்லாமல், கழகப் பொருளாளர் பெயருக்கு பணவிடைத்தாள் மூலம் அனுப்பி உதவிடுக!

கூட்டங்களில், மண விழாக்களில், நிகழ்ச்சிகளுக்கு வரும்போது நேரில் வழங்குக - ஒவ்வொருவரும் தமது பெயர் முகவரியுடன் இணைத்து நிதி வழங்கிட வேண்டுகிறேன்.

கழக நிதி, வழக்கு நிதி இரண்டும் தேவைப்படுவதால் உன்போன்ற உடன் பிறப்புகளிடம் அதிகம் எதிர்பார்க்கிறேன் - நிதி வழங்குவதில் மேலும் ஆர்வத்தை எதிர் பார்க்கிறேன் - அக்கறையை எதிர்பார்க்கிறேன் - நீதானே கழகம்! உன் மாசற்ற கரங்களை விடுத்து, வேறு எவரிடம் நான் கேட்பேன்? யாரிடம் கேட்டிருக்கிறேன் - என்னை உணர்ந்த உடன்பிறப்பே! தயக்கமின்றி வழங்கிடுக, கழக நிதி - கழக வழக்கு நிதி!

அன்புடன்,

மு. க.

(15-02-1992)

1880. மகாமகமும் மயான காண்டமும்!

உடன்பிறப்பே,

ஆண்களும், பெண்களுமாக நூறு பிணங்கள் அடுக்கி வைக்கப்பட்ட மயானச் சூழ்நிலையில் மகாமகத் திருவிழா நடந்தேறியிருக்கிறது.

எந்த மகாமக விழாவிலும் இல்லாத அளவுக்கு இந்த மகாமகத்துக்குக் கூட்டம் அதிகம் - காரணம் எல்லா மகாமக விழாக்களிலும் இத்தனை ஆடம்பரமான அழைப்புகள் ஆரவாரமாக பக்தர்களுக்கு விடப்பட்டதில்லை. இத்தனை முழுப் பக்க விளம்பரங்கள் அரசின் சார்பிலும், மாவட்ட ஆட்சித்தலைவரைப் பொறுப்பாளராகக் கொண்ட விழாக்குழுவின் சார்பிலும் செய்யப்பட்டதில்லை. இவைகள் போதாதென்று ஆளுங்கட்சி அமைப்பின் சார்பிலும் விளம்பரமோ விளம்பரம்! ஏடுகளில் முழுப் பக்க விளம்பரம்!

இத்தனை ஆர்ப்பாட்ட விளம்பரம் செய்ததும் மகாமகத்துக்காகவா என்றால், அதுதான் இல்லை! ஜெயலலிதா அந்தக் குளத்துப் படிக்கட்டுகளை மிதிக்க வருகிறார் என்பதற்காக! பக்தர்களை வருக வருக என்று கூவி அழைத்தது மட்டுமல்ல! பரதேசிப் பண்டாரங்களையும் பெருந்திரளாக வரச் செய்வதற்கு, பத்து லட்சம் உணவுப் பொட்டலங்கள் ஜெயலலிதாவின் சொந்தப் பணத்திலேயே வழங்கப்படுமென்று செய்திகள் வேறு!

மாதம் ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் பெற்றுக் கொள்கிற ஜெயலலிதா, இந்த எட்டு மாத காலத்திற்குள் குடந்தையில் பத்து லட்சம் பேருக்கு சொந்தச் செலவில் சாப்பாடு வழங்கியது உட்பட, சுமார் இருபது லட்சம் ரூபாய்க்கு மேல் வாரி வழங்கியுள்ளார். பல நிதிகளுக்குத் தனது சொந்தப் பணத்தையே அளிப்பதாகச்

செய்திகள் விடுத்துள்ளதையும் நினைவு கூர்ந்தால் இதுவரையில், இருபது லட்சம் ரூபாய் அளவுக்கு எட்டே மாதங்களில் அவர் சொந்தப் பணத்தில் செலவிட்டிருப்பது தெளிவாகும். இது வருமான வரி இலாக்கா ஆராய்ந்திட வேண்டிய விவகாரம். இப்போது நான் அந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை.

மகாமகத்தன்று நடந்தது என்ன? பாவம்! தொலைக்காட்சியில் விழா நிகழ்ச்சிகளை விளக்குவதற்காக நியமிக்கப்பட்ட தமிழ்மொழி வித்தகர்கள் திணறிப் போனார்கள்.

அதோ காணுங்கள்; பிர்ம தீர்த்தேஸ்வரர் கோயில் - முகுந்தேஸ்வரர் பாருங்கள்! பக்திகேசுவரர், பைரவ ஈஸ்வரர் தரிசனம் காணுங்கள்! என்று மகாமகக் குளக்கரையையொட்டி எழுந்தருளியுள்ள கடவுளர்களைப் பற்றி வர்ணிப்பதற்கு விளக்கவுரையாளர்கள் வாய் திறக்கும் போதெல்லாம், குளத்தைச் சுற்றி மிக உயரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் கட் அவுட்களைப் பார்த்து விமர்சகர்கள் திணறிப் போனார்கள். யாரைத் தரிசிக்கச் சொல்வது என்று புரியாமல்!

குளத்துக்குள் தீர்த்தவாரி செய்து கொண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டு கும்பேஸ்வரா! என்று கும்பிட்டபடி கண் திறந்த லட்சணக்கான பக்தர்களும், ஜெயலலிதாவின் கட் அவுட்களைப் பார்த்து வணங்குவதிலிருந்து தப்பிக்கவே முடியாதபடி வண்ண வண்ண கட் அவுட்டுகள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நிறைந்திருந்த காட்சி என்ன காட்சியோ!

காஞ்சிப் பெரிய சங்கரர் வராவிடினும்கூட, நடு சங்கரரும், இளைய சங்கரரும் வந்திருந்தார்கள். பாவம்! எங்கோ ஒரு படித்துறையில் அவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அம்போ என்று நின்று கொண்டிருந்த காட்சியைத் தொலைக்காட்சியினர் பரிதாபப்பட்டுப் படம்பிடித்துக் காட்டிக் கடமையாற்றினர்!

தஞ்சை மாவட்டத்துத் தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை ஆதினங்களின் தலைகளே தொலைக்காட்சியில் தென்படவில்லை!

கும்பகோணத்தில் உள்ள காசி விசுவநாதர், நாகேஸ்வரர், சோமேஸ்வரர், கவுதமேஸ்வரர், பாணபுரீஸ்வரர், அபிமுக்தீஸ்வரர், ஏகாம்பரேசுவரர் போன்ற பதினோரு சிவஸ்தல சாமிகளையும் - சாரங்கபாணி, சக்கரபாணி உள்ளிட்ட ஐந்து வைணவ ஸ்தல சாமிகளையும் - மிஞ்சக் கூடிய அளவுக்கு, குடந்தையில் உள்ள கோடீஸ்வரர் என்ற கடவுளுக்கு மேலாகப் புதிய தெய்வம் கோடீஸ்வரி மகாமகக் குளக்கரைக்கு எழுந்தருளிவிட்ட காரணத்தால் அதிகாரிகள் அனைவரும் இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டும் - ஆத்திகப் பெரியவர்கள், அந்தணப் பெருமக்கள் கையது கொண்டு வாயது பொத்திக் கொண்டும் - அமைச்சர்கள் சிவப்புக் கம்பள சுருக்கங்களைச் சரி செய்து கொண்டும் - போலீசார் பூப்பந்தல் முதல்வரின் தலையில் இடிக்காமல் கவனமாகப் பார்த்துக் கொண்டும் - விழா நினைவையே இழந்து விட்டு இயந்திரங்களாக இயங்கினர்!

குளத்திற்குள் ஈயம், பித்தளைப் பாத்திரங்களிலும், தகரக் குவளைகளிலும் தண்ணீரை மொண்டு தலையில் ஊற்றிக் கொள்ள பக்தர்கள் தவியாய்த் தவித்த போது, தனிக் குளியலறை மேடையில் இருபத்தியோரு வெள்ளிக் குடங்களை அலங்கரித்து வைத்துப் புரோகிதர்கள் அடக்க ஒடுக்கமாக மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருந்தனர்! (ஜபித்தல் என்ற வடமொழிச் சொல்லை சபித்தல் என்று தமிழாக்கம் செய்வதும் உண்டு.)

காவிரிப் பிரச்சினையில் கூட்டறிக்கை என்ற பெயரால் டெல்லியில் கோட்டை விட்டுவிட்டு, சென்னைக் கோட்டையை விட்டுக் குட்டி விமானத்தில் குடந்தைக்கு வந்தவர், குளத்தின் கரையில் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டார்!

குளத்தில் இறங்கி நேரடியாகக் குளிக்காதவர் குடந்தைக்கு வருவானேன் என்று எவரும் கேட்கவில்லை! கேட்க மாட்டார்கள்! பாவம் அவர்களுக்கு எத்தனையோ சங்கடங்கள்! பக்கம் பக்கமாகக் கிடைத்துக் கொண்டிருக்கும் பத்திரிகை விளம்பரங்களுக்கு ஆபத்து வந்து விடுமே! அதையும் மீறி மிக முக்கியமான காரணமும் ஒன்று இருக்கிறதே!

அதை நான் சொன்னால் பார் பார்! கருணாநிதி பழைய துருப்பிடித்த ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டார்! என்று சிலர் அங்கலாய்ப்பார்கள்!

இருபத்தியோரு குடங்களில் இருந்த குளத்து நீரை... புரோகிதர்கள் பயபக்தியுடன் முணுமுணுத்துக் கொண்டே, (மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே) எடுத்து எடுத்துக் கொடுக்க, அவற்றை வாங்கித் தோழிகள் இருவரும் மாறி மாறித் தலையில் ஊற்றிக் கொண்ட மகாத்மியமே, மகா மகாமகத் திருவிழாவின் சிறப்புக்குரிய அம்சமாகும்!

இதற்கு முன்பிருந்த ஆட்சிகளிலும் மகாமக விழா வந்ததுண்டு!

முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள், விழாவுக்கு முதல் நாள் சென்று மக்களுக்கான வசதிகளைப் பற்றி அறிந்து கொண்டு உடனடியாக சென்னை திரும்பினார் என்று செய்தி!

அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நான் சென்று குடந்தையைச் சுற்றிலும் சுற்றுச் சாலை அமைக்கும் ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு - குளத்தின் கொள்கால், வடிகால்களை சீர் செய்யச் சொல்லிவிட்டு விழாவுக்குச் சில நாட்களுக்கு முன்பே சென்னை திரும்பிவிட்டேன்.

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோதும், மூகாம்பிகை கோயிலுக்குக்கூட ஆடம்பரமின்றி சென்று வணங்கி வந்தாரே தவிர, அவர் காலத்தில் நடந்த மகாமக விழாவுக்குச் சென்று அந்தக் குளத்தைப் படுகளமாக்க அவர் நினைத்ததில்லை...

ஆனால் இன்று? இந்த இருபத்தியோரு குடங்களில் தண்ணீரைக் கொண்டுவந்து சென்னையிலேயே தலையில் ஊற்றிக் கொண்டிருக்கலாம் - அதற்கு பதிலாக நூறு குடும்பங்களில் குடம் உடைக்கும் நிகழ்ச்சிக்குக் காரணமாக அல்லவா முதலமைச்சரின் குடந்தை விஜயம் ஆகியிருக்கிறது!

இந்தப் பாபத்தை(?) போக்கிக் கொள்ள இன்னும் எத்தனை மகாமகம் வருவது? எத்தனை வெள்ளிக் குடத்திலோ, தங்கக் குடத்திலோ தண்ணீர் நிரப்பி தோழிகள் மாறி மாறிக் குளிப்பாட்டிக் கொள்வது?

சுவர் இடிந்து விழுந்து இத்தனை பேரும் மடிந்தார்கள் என்கிறார்கள் அதிகாரிகள்!

அது ஒன்றும் பெரிய சுவர் அல்ல! கைப்பிடிச் சுவர்தான்; அது விழுந்ததால் இந்த பயங்கரம் நிகழவில்லை! பாதுகாப்பு என்ற பெயரில் போலீசார் நடத்திய கெடுபிடியினால் ஏற்பட்ட நெரிசலே இதற்குக் காரணம் என்று விசுவ இந்து பரிட்சத் அலுவலகச் செயலாளர் கனகராஜன் கூறியதாக பி.டி.ஐ. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசும், அதிகாரிகளும் மகாமகத்தன்று ஏற்பட்ட சோக சம்பவத்தைத் திசை திருப்புகிறார்கள் என்றும் - இறந்தோர் எண்ணிக்கையைக் கூடக் குறைத்துக் குறிப்பிடுகிறார்கள் என்றும் - விழாவை முன்னிட்டு எந்த ஏற்பாடுகளும் விழாவுக்கு முன்னர் உரிய நேரத்தில் தொடங்கப் படவில்லை என்றும் - விழாவுக்கான பணிகள் அனைத்தும் விழா நாளன்றுகூட அறைகுறையாகவே இருந்தன என்றும் - குடந்தைப் பெருமக்களும், ஏன்? ஆத்திக அன்பர்களும், பெரியவர்களும் கூடக் கூறுகிறார்கள்!

விழா நடை பெற்றபோது, மகாமகக் குளத்தில் முதலமைச்சர் பாதுகாப்புக்காகத் தனிக் குளியலறையும் - அதைச் சுற்றி இரும்பு முள் வேலியும் - பூனை படைகளும் இருந்தும்கூட, அம்மன்னியில் அந்தக் குளத்தில் கால் பகுதியைப் போலீசார் வளையமிட்டுத் தடுத்துக் கொண்டு பொது மக்களை விரட்டியடித்த காட்சியை விழாவை நேரடியாக ஒளிபரப்புச் செய்த டி.வி.க்காரர்களாலும் மறைக்க முடியவில்லை!

அவற்றையெல்லாம் சாட்சியாகக் கொண்டு, நியாயமான விசாரணை நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்தி அறிக்கை விடுத்துள்ளேன்.

இந்தக் கொடுமையான சோகத்துக்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியது இந்த அரசுதான் என்கிற போது, இறந்தோர் குடும்பங்களுக்கு இருபத்தி ஐயாயிர ரூபாய் நிதி என்பது மிக மிகக் குறைவாகும்.

அதனால்தான் அரசாங்கம், உடனடி உதவியாக அந்தக் குடும்பங்களுக்கு, தலா ஒரு லட்ச ரூபாய் வீதம் நிதி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மகாமக விழா குறித்து, அதற்கான புராணக் கதைகள் குறித்து எனக்கென்று வேறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும், மனிதநேய உணர்வுகள் மதிக்கப்பட வேண்டுமென்ற பொதுக் கருத்தை எவரும் புறக்கணித்து விட முடியாது!

அந்த உணர்வுடன்தான், உண்மைக் காரணம் உலகிற்குத் தெரிந்திட, உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இதுபோன்ற மயான காண்டங்கள் இனியும் தொடராமல் இருக்க வேண்டுமென்பதற்காக!

அன்புடன்,

மு. க.

(20-02-1992)

1881. நீதி விசாரணை வலியுறுத்தி நடக்கட்டும் கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

கும்பகோணம் மகாமக விழாவில் ஏற்பட்ட கொடுமையான சாவுகள் குறித்து உண்மை நிலை அறியவும், இனி இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெறாதிருக்க வழிமுறைகள் வகுக்கப்படவும் உடனடியாக, உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று தி.மு. கழகம் மட்டுமல்ல, ஏறத்தாழ எல்லாக் கட்சிகளுமே அறிக்கைகள் விடுத்துள்ளன.

மகாமக விழாக்களின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு நடைபெற்றுள்ள இந்தச் சோக சம்பவம் குறித்து விசாரிக்க, மேஜிஸ்ட்டிரேட் விசாரணையே போதுமென்று ஜெயலலிதா அரசு முடிவுசெய்து, உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை தேவையில்லையென்று இந்த அரசின் அமைச்சர் ஒருவரைக் கொண்டே விதண்டாவாத அறிக்கையொன்றும் வெளியிடச் செய்திருக்கிறது. பத்து கோடியில் பாதிப் பணத்துக்கு மேல் திட்டமிட்டு சுருட்டிக் கொண்டவர்கள், பதவிக்காகப் பாத பூஜை செய்து கிடப்பவர்கள் விடுத்திடும் அறிக்கைகள் கிடக்கட்டும்! கும்பகோணத்தில் நடந்த இந்தக் கொடுமையைப் பற்றிய விபரங்களையும், உண்மைதான் என்ன என்பதையும் நாடு தெரிந்து கொள்ள வேண்டாமா?

மகாமகத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டனவா?

பொதுமக்கள் விழாவில் கலந்துகொண்டு பாதுகாப்பாகத் திரும்புவதற்கு செய்யப்பட்ட பந்தோபஸ்துகள் யாவை?

மகாமகக் குளம் முழுமையாக எல்லா பக்தர்களும் நீராடுவதற்கு அனுமதிக்கப்பட்டதா?

தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில், குளத்தில் கால்பகுதி போலீசாரால் வளைத்துக் கொள்ளப்பட்டு பொதுமக்கள் விரட்டியடிக்கப்பட்டது உண்டா இல்லையா?

மிதியுண்டவர்களைக் காப்பாற்ற உடனடி உதவிக்கு ஆம்புலன்ஸ் வண்டிகள் பயன்பட்டதா? வண்டிகள் போதுமானவைகளாக இருந்தனவா?

பொதுமக்களைப் பத்திரமாகப் பாதுகாக்க முடியாமல் காவல்துறையினருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் யாவை? எத்தகையக் குறுக்கீடுகளால் காவல் துறையினர் தமது கடமையைச் சரி வரச் செய்ய முடியாமல் போயிற்று?

சுவர் இடிந்து விழுந்ததால்தான் இத்தனைபேரும் செத்தார்களா?

இடிந்து விழுந்தது மதில் சுவரா? அல்லது கைப்பிடிச் சுவரா?

இவையும், இவை போன்ற பல ஐயப்பாடுகள் விளக்கப்படவும் மேஜிஸ்ட்டிரேட் விசாரணை நடத்துவது போதாது. உயர் நீதி மன்றத்தில் பதவியில் இப்போது இருக்கும் ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் கோரிக்கை வைத்திடும் போது, அமைச்சர் ஒருவரை ஏவிவிட்டு என்மீது விழுந்து பிராண்டிடச் செய்வதால் பிரச்சினை தீர்ந்து விடுமா?

இதோ நான் தொகுத்தளிக்கும் செய்திகள் எதிர்க்கட்சிகளின் ஆதரவு ஏடுகளில் வெளி வந்தவை அல்ல!

முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் தான் இவ்வளவு பெரிய (Tragedy) கொடிய நிகழ்ச்சி நடந்து விட்டது. மாவட்ட நிர்வாகம், ஓர் உயர்ந்த நிலை கூட்டுக்குழுவை அமைத்து அந்தக் குழுவில் நான்கு மகாமக விழாக்களில் தொடர்ந்து பங்கேற்று அனுபவம் பெற்ற ஆன்றோர்களை அங்கம் வகிக்கச் செய்து அவர்களைக் கொண்டு எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் - பொதுவான பணிகளுக்கானப் பொறுப்பேற்கவும் செய்ய வேண்டுமென்று அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு அரசாங்க ஒப்புதலுக்கு நான்கு மாதங்களுக்கு முன்பே அனுப்பியுள்ளது. ஆனால், சென்னைக் கோட்டையில் அந்த கோப்பு நாலு மாதங்களாகத் தூங்கி வழிந்து, மகாமக விழாவுக்கு

ஐந்து நாட்களுக்கு முன்னர்தான் ஒப்புதல் கையெழுத்திடப்பட்டு மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் செய்தி 20.2.92 இந்து ஏட்டில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

அதே இந்து ஏட்டில் 19.2.92 இதழில் வந்துள்ள தகவல்கள் பின்வருமாறு - இந்துவின் நிருபரே வழங்கியுள்ள தகவல்கள் இவை.

*முன்பு நடந்த மகாமக விழாக்களில் எல்லாம் பொதுமக்கள் மகாமகக் குளத்திற்குள் வடக்குக் கரை வழியாகவும், கிழக்குக் கரை வழியாகவும் விடப்பட்டு, தெற்குக் கரை வழியாகவும், மேற்குக் கரை வழியாகவும் வெளியே திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. இந்த ஆண்டு அதே மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும்கூட, முதலமைச்சர் வருகையை முன்னிட்டு அந்த ஏற்பாடு இரண்டொரு நாட்களுக்கு முன்பு கைவிடப்பட்டது

* நிலைமை மோசமானதற்குக் காரணமே குளத்துக்குள் வந்த மக்கள், வெளியே போவதற்கு வழியில்லாமல், முதலமைச்சரின் தனிக் குளியல் அறையும், அதைச் சுற்றி வளைத்த போலீஸ் வளையமும், முதல்வருடன் வந்த பல வாகனங்களும் குறுக்கே இருந்ததுதான்.

* நெருக்கடி மிகுந்த தாங்கமுடியாத கூட்டத்திலிருந்து வெளியேறி குளக்கரைக்குச் சென்றிட முயற்சித்த மக்கள்மீது போலீசார் தடியடி நடத்தினர்.

* குளத்துக்குள் இப்படி கொடுமையான சாவுகளும், அலறல்களும், மிதிபாடுகளும் ஏற்பட்டதை குளக்கரையில் இருந்த பெரிய அதிகாரிகள் அறியாமல்போனது தான் ஆச்சரியம்! அவர்களிடமிருந்த வாக்கிடாக்கிகளும் வயர்லஸ் செட்டுகளும் என்ன ஆயின?

* மகாமகத்துக்கு வந்த பக்தர்கள், குளக்கரை நெடுகிலும் வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதா கட்அவுட்களைப் பார்த்ததும், பல ஒலிபெருக்கிகளின் வாயிலாக ஜெயலலிதாவைப் போற்றியும், புகழ்ந்தும்

வர்ணனை செய்து கொண்டிருந்ததைக் கேட்டும், இது என்ன மகாமகமா? ஜெயாமகமா? என்று விமர்சனம் செய்தனர்.

* நிர்வாக இயந்திரம் முற்றிலும் கடந்த மூன்று நாட்களாக, ஜெயலலிதாவின் பந்தோபஸ்து பணிகளுக்காகவே, பெரும்பாலான நேரத்தை செலவிட்டன. விழாவுக்கு வந்த பெருங்கூட்டத்தினர் இது ஓர் அரசியல் விழாவாக இருக்கிறது என்றே கூறினர்.

* கும்பகோணத்துக்கு ஹெலிகெப்டரில் வந்த ஜெயலலிதா குறித்த இடத்தில் இறங்குவதற்கு முன்பு, ஹெலிகெப்டரில் அமர்ந்தவாறே அந்தக் குளத்தை ஐந்து தடவை ஆகாயத்தில் வலம் வந்தார்.

உடன்பிறப்பே, இவை இந்துவில் வெளிவந்த செய்தித் தொகுப்பில் சில! இதோ எக்ஸ்பிரஸ் 20.2.92 நாளிட்ட இதழ் என்ன கூறுகிறது?

* தடியடிப்பிரயோகமே நெரிசலுக்கும், சோகமான பயங்கர சம்பவத்துக்கும் காரணம்! என்பதே செய்திக்குத் தலைப்பாகும்!

* யாத்திரீகர்கள் மீது மகாமகக் குளத்திற்குள்ளேயே போலீசார் தடியடி நடத்தினர்.

* இவ்வளவும் ஜெயலலிதா 11.30 மணிக்கு மகாமகக் குளத்துக்கு வந்த பிறகே நடைபெற்றது.

* போலீசார் முதலமைச்சர் பாதுகாப்பிலேயே அக்கறையும், கவனமும் கொண்டிருந்ததால் காயம் பட்டுக் கிடந்த பக்தர்களை அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

*ஐ.ஜி. உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததுபோல் வடகரையில் உள்ள பால்கனி ஒன்று விழுந்ததால் தான் இவ்வளவு சாவு என்பதற்கு மாறாக, உண்மையில் நடந்தது என்னவென்றால் - ஒரு இரும்பு கைப்பிடி சுவர் பாங்கூர் தர்மசாலையிலிருந்து விழுந்து அதில் நாலு பேர் மட்டுமே இறந்ததுதான்!

*போதுமான அளவுக்கு ஆம்புலன்ஸ் வண்டிகள் இல்லாத காரணத்தால் சோழன் பேருந்துகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

*பெரும்பான்மையான பக்தர்கள் குளத்தில் குளித்தபிறகு கண் எரிச்சல் தாங்காமல் கஷ்டப்பட்டனர். தண்ணீரில் அதிகமான குளோரின் கலந்திருந்ததால் ஏற்பட்ட விளைவு இது!

* மருத்துவ உதவிகள் போதுமானவைகளாக இல்லை! பல மருந்துக் கடைகள், மூடப்பட்டே இருந்தன.

உடன்பிறப்பே! இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளில் வந்த செய்திகள் மட்டுமே இவை! இன்னும் ஏராளமான செய்திகள் கிடைக்கும். உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை நடைபெறுமேயானால்!

அத்தகைய விசாரணையைத்தான் பல கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன.

தி.மு.கழகமும் தொடகத்திலேயே வலியுறுத்தியது மட்டுமல்ல, உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடைபெற வேண்டுமென்பதற்கான அவசியத்தை விளக்கி தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தென்னாற்காடு தெற்கு மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பிப்ரவரி 25 முதல் 29 வரையில் கழக அமைப்புகள் பொதுக் கூட்டங்களை நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பவேண்டுமென கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிக்கையும் விடுத்துள்ளார்.

அதற்கேற்ப, ஆங்காங்கு கூட்டங்கள் நடைபெறட்டும்! கோரிக்கை வெற்றி பெறட்டும்! இந்தக் கொடுமைக்குக் காரணம் யார், எவர் என்பதை நாடு உணரட்டும்! இனியாவது இத்தகைய அலட்சியப் போக்கு, அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் ஏற்படாதிருக்க வழி வகுக்கப்படட்டும்!

அன்புடன்,

மு. க.

(21-02-1992)

1882. சல்லாத் துணிக்குள் ஊழல் சாம்ராஜ்யம்!

உடன்பிறப்பே,

கடந்த 8.2.92 அன்று இரவு 1.30 மணி அளவில், ஆரூர்-சேலம் நெடுஞ்சாலையில் பழனி முருகன் என்ற பெயர் பொறித்த லாரியை வன இலாக்கா அதிகாரி முத்து மாரப்பன் தலைமையில் வன இலாக்கா அலுவலர்கள் மடக்கிப் பிடித்தனர்.

இந்த லாரியின் பதிவு எண். டி.என். 28, 3033.

இந்த லாரியில் ஒன்றரை டன் சந்தன மரம் கடத்தப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ஏறத்தாழ ரூ. 3 லட்சம்.

இந்த கடத்தல் லாரியில் மஸ்தான் என்கிற முத்துசாமி உட்பட 10 பேர் வந்திருக்கின்றனர்.

லாரி மடக்கி பிடிக்கப்பட்டதும், நேராக அதிகாரிகளிடம் வந்தார் மஸ்தான் என்னும் முத்துசாமி. நான் நாமக்கல் நகர அ.தி.மு.க.வின் இணைச் செயலாளர். எனக்கு அமைச்சர்கள் முதல் சட்டமன்ற உறுப்பினர் வரை அனைவரும் பழக்கம். உங்களுக்கு ரூபாய் தேவையானால் தருகிறேன். எங்களை விட்டு விடுங்கள் - என்று கூறியுள்ளார். ஆனால் அந்த வன இலாகா அதிகாரிகள், அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. தப்பியோடிய இருவர் தவிர, 8 பேரையும் கைது செய்து அரூருக்குக் கொண்டு வந்து விசாரணை செய்தனர்.

இந்த கடத்தல் கோஷ்டி கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 60-க்கும் மேற்பட்ட லாரிகளில் ஐந்தரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகளைக் கடத்தியுள்ளதாக இவர்கள் வாக்குமூலம் தந்துள்ளனர்! இந்த சந்தனக் கட்டைகளைத் தனியாருக்கு விற்றதன் மூலம் சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் வரை இவர்கள் சம்பாதித்துள்ளதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இவர்களது கடத்தல் தொழிலின் பின்னணியில் சேலம் மாவட்ட அ.தி.மு.க. முன்னாள் செயலாளர் ஒருவர், சேந்தமங்கலம் தொகுதி முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், வட ஆற்காடு மாவட்ட முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் மற்றும் அ.தி.மு.க.வைச் சார்ந்த முன்னாள் டில்லி சிறப்புப் பிரதிநிதியின் மகன் ஒருவர் முதலானவர்கள் இருப்பதாகவும் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளனர்.

பாப்பிரெட்டிபட்டி ரேஞ்சர், பாரஸ்டர், வன இலாக போலீஸ், மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு, முறையே ரூ. 40 ஆயிரம், ரூ. 10 ஆயிரம், ரூ. 6 ஆயிரம் என மாமூல்கள் தந்து இந்தச் சந்தனக் கடத்தலைத் தொடர்ந்து செய்து வந்திருக்கின்றனர்.

இப்படி கடத்தப்படும் சந்தன மரங்கள் சென்னை, கேரளா, கல்கத்தா, புது டில்லி போன்ற இடங்களுக்கு சென்றுள்ளதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

பாப்பிரெட்டிப்பட்டி ரேஞ்சரை சென்னையிலுள்ள பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அறிமுகம் செய்து வைத்தது முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு என்பதை இவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாமக்கல் அ.தி.மு.க.வின் இணைச் செயலாளர் மஸ்தான் என்கிற முத்துசாமி உட்பட 8 பேரும், ஆரூர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிபதி இவர்களை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட சேலம் மாவட்ட அ.தி.மு.க. முன்னாள் செயலாளர் கே.பி. செல்வராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேந்தமங்கலம் சிவப்பிரகாசம், முன்னாள் அமைச்சர் முத்துசாமியின் மகன் பன்னீர்செல்வம் (மாவட்ட அ.தி.மு.க. துணைச் செயலாளர்) உட்பட சுமார் 20-க்கு மேற்பட்ட அ.தி.மு.க. புள்ளிகள், நாமக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் அரூருக்கு வந்தனர்! கைது செய்து காவலில் வைக்கப்பட்டவர்களைப் பொறுப்பில் விடுவிக்க பல முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அதிகாரம் - பணம் இவற்றைக் காட்டி மிரட்டல் வேலைகள் நடந்துள்ளன.

எந்த முயற்சியும் பலனளிக்காது போகவே, இந்தப் பிரமுகர்கள் சென்னை சென்று ஒரு அமைச்சரைச் சந்தித்ததாக கூறப்படுகிறது!' அமைச்சருடன் பேரம் நடத்தியதாகத் தெரிகிறது. அதன் விளைவாக, இந்த 8 குற்றவாளிகளும் 11.2.92 அன்று கைதான மூன்றாம் நாளே ஜாமீனில் வெளியே வந்துவிட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் நூற்றுக்கும் அதிகமான சந்தன மரக் கடத்தல் வழக்குகள் அரூர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. யாருக்கும் ஜாமீன் அனுமதிக்கப்பட்டதில்லை. உயர் நீதிமன்றம் சென்றுதான் பலர் ஜாமீன் பெற்றிருக்கின்றனர். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்த வரை, மூன்றே தினங்களில் கடத்தல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வெளியே வந்தது பலரை விழிகளை அகல விரிய வைத்துள்ளது.

வன இலாகா அதிகாரிகளிடம் உருட்டல் மிரட்டல், பண ஆசை இவைகளை எல்லாம் காட்டியும் - ஆளும் கட்சிப் பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம் என்றாலும் பயப்படாமல் கடமை ஆற்றிய வன இலாகா அதிகாரி முத்து மாரப்பனுக்கும், அவருடன் ஒத்துழைத்தவர்களுக்கும் எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து வரலாம் என வன இலாகா ஊழியர்களே பரபரப்பாகப் பேசிக் கொள்கின்றனர்!

இந்தச் செய்தி படங்களுடன், பல ஆதாரக் குறிப்புகளுடன் பத்திரிகையில் வெளிவந்தும் கூட, இதுவரையில் அரசின் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை!

திருமதி சுப்புலட்சுமிக்கும், அவரது கணவர் ஜெகதீசனுக்கும் இதுவரை ஜாமீனில் விடுதலை இல்லை. நெல்லை ரவிச்சந்திரனுக்கும் இதுவரை ஜாமீனில் விடுதலை கிடையாது. இதைப் போலவே தடா சட்டத்தில் பிடிக்கப்பட்டுள்ள இன்னும் பலருக்கு, ஜாமீனில் வெளிவர இந்த ஆட்சி தடையாக இருக்கிறது.

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு விசுவாசமிக்க ஊழியனாக இருந்து, ஜானகி அம்மையார் அவர்கள் அமைத்திட்ட எம்.ஜி.ஆர். நினைவகத்தின் நிர்வாகியாக வேலை பார்த்துக் கொண்டிருந்த முத்து என்பவரைப் பழி தீர்த்துக் கொள்ள, பதினைந்தாயிரம் ரூபாய் கஞ்சா வைத்திருந்தார் என்று பொய் வழக்குப் போட்டு ஜாமீனில் போக முடியாதபடி சட்டப் பிரிவுகள் சேர்த்து, சிறையில்

வைத்துள்ள இந்த ஆட்சியில் ஐந்தரை கோடி ரூபாய் வரையில் சந்தன மரம் கடத்தியவர்கள் மட்டும் மூன்றே நாட்களில் ஜாமீனில் வெளியே வந்தது எப்படி என்ற கேள்விக்கு அரசு அளிக்கப்போகும் பதில் என்ன?

சந்தனக் கட்டை கடத்தல் என்ன! தராசு அலுவலகத்தில் புகுந்து இரண்டு ஊழியர்களைக் கொலை செய்தவர்கள் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரின் அடியாட்கள் என்பதால் அந்த வழக்கு கிடப்பிலே போடப்படவில்லையா? அதுபோலத் தான் இதுவும் என்று அரசு, கேலிப் புன்னகை புரிவது நமக்குத் தெரிகிறது!

அமைச்சர்கள் இதற்கெல்லாம் வாய் திறக்க மாட்டார்கள்.

மகாமக விழாவில் ஏற்பட்ட சோக நிகழ்வுக்கு இருவேறு கருத்துகள் கூறப்படுவதால், உண்மை என்னவென்று அறிந்திட உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்துக என நான் கூறினால், என் மீது விழுந்து கடித்துக் குதறிடப் பாய்ந்தோடி வருவார்கள்!

எத்தனையோ கட்சித் தலைவர்கள் இதையே தான் என்னைவிடக் கடுமையான குரலில் சொல்லியிருக்கிறார்கள் - எத்தனையோ பத்திரிகைகள் குடந்தை மகாமகத்தில் நடந்த சோகத்துக்கு அரசும், முதல்வருமே பொறுப்பு என்று ஆதாரங்களை அள்ளிக் குவித்துள்ளன. இறந்தவர் எண்ணிக்கை 48 தான் என்பது பொய் என பல ஏடுகளின் நிருபர்கள் எழுதியுள்ளனர் - ஆனாலும் அமைச்சர் பெருமக்களுக்கு, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற பழமொழி போல, என் மீதுதான் பாய்ச்சல் நடத்திடத் தோன்றுகிறது!

உடன்பிறப்பே, அதன் காரணம் உனக்குத்தான் புரியுமே!

ஜெயலலிதாவின் சொந்தச் செலவில் பத்து லட்சம் பேருக்கு மகாமகத்தில் அன்னதானம் என அறிவிக்கப்பட்டதே! அதில் நடந்த மோசடி - அதிகார துஷ்பிரயோகம் - இவைகளைப் பற்றியும் ஆதாரங்களுடன் செய்தி வெளியிடப் பட்டுள்ளது....

மகாமகம் திருவிழாவில் உணவு வழங்குவதற்காக, கடந்த 16.2.92 அன்று கீழத் தஞ்சை மாவட்ட அ.தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் கொடவாசல் எம். ராஜேந்திரன் என்பவர், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் கிடங்கிலிருந்து 500

மூட்டை பச்சை அரிசி வாங்கியிருக்கிறார். அதற்கான உத்தரவு எண். 89995 ஆகும்.

இந்த 500 மூட்டை அரிசியும் முதலமைச்சரின் மகாமகம் உணவுப் பொட்டலம் வழங்கும் நிகழ்ச்சி (C.M. மகாமகம் Food Pocket Programme) லக்கிலி மாடர்ன் ரைஸ் மில்ஸ் சாக்கோட்டை என்ற பெயரில் பெறப்பட்டுள்ளது. இந்த 500 மூட்டை அரிசியும் டி.டி.ஓ. (T.D.O.) 9092 என்ற லாரியிலும், அதனோடு இணைக்கப்பட்ட 9093 என்ற டிரய்லரிலும் சென்றுள்ளது.

இப்படிப் பெறப்பட்ட மூட்டைகளில் 332 மூட்டைகளை மீண்டும் 19.2.92 அன்று அதாவது மகாமகம் முடிந்த மறுநாள், சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடம் திருப்பித் தந்துவிட்டார்கள். மீதமுள்ள 168 மூட்டைகள் மட்டுமே முதலமைச்சரின் சார்பிலான உணவுப் பொட்டலங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அரிசி கிலோ 5 ரூபாய் 12 காசு என்ற விலையில் விற்கப்பட்டுள்ளது.

இந்த 168 மூட்டையை அரிசியைப் அப்படியே பயன்படுத்தியிருந்தால் கூட, சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் பேருக்கே உணவுப் பொட்டலங்கள் தயாரித்திருக்க முடியும்!

10 லட்சம் பேருக்கு உணவுப் பொட்டலம் நிச்சயமாக வழங்கியிருக்க முடியாது.

இந்த அரிசியை சிவில் சப்ளை கார்ப்பரேஷன் எப்படி தனிப்பட்டவர்களுக்குத் தந்தது என்பதும் விந்தையாக உள்ளது!

அந்த கார்ப்பரேஷன் விதிப்படி அது ரேஷனுக்கு மட்டுமே அரிசி தரலாம். தனியாருக்கு விற்கக் கூடாது.

அப்படியிருக்க, தனியாருக்கு எப்படி சிவில் சப்ளை காப்பரேஷன் அரிசி விற்கப்பட்டது?

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அரசு பதில் அளிக்குமா? அல்லது அமைச்சர்கள் பதில் வழங்கிட வரிந்து கட்டிக்கொண்டு வருவார்களா?

பொய்யிலே பிறந்து, பொய்யிலே தவழ்ந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யையே வாழ்க்கையாக்கிக் கொண்டவர்கள் - ஆடம்பர விளம்பரங்களைச் செய்து புண்ணை மறைக்கப் புனுகு பூசிடும் வேலையை அதிக நாட்கள் தொடர்ந்திட இயலாது!

உடன்பிறப்பே! உன் போன்றோர் அவர்களுக்கேயுரிய திறனுடன் - ஆதாரப்பூர்வமான வாதங்களுடன் - மக்கள் மத்தியில் இதுபோன்ற நிலைமைகளை எடுத்து விளக்கிட வேண்டும்.

சல்லாத் துணிபோட்டு சதியாலோசனை மண்டபத்தை மூடிக்கொண்டு, சத்திய ஞானசபை போலக் காட்டிக் கொள்ளும் இவர்களது ஊழல்கள் ஒன்றா? இரண்டா?

- பேருந்து ஊழல்


- லெவி ஊழல்

- பீர் தொழிற்சாலை விற்பனை ஊழல் எனப் பல கோடி ரூபாய் ஊழல்கள் பெருகிக் கொண்டே போகும் இந்த ஊழல் சாம்ராஜ்யத்தின் உண்மை வடிவத்தை ஊரார் உணர்ந்து கொள்ள, நீ ஓடியாடி உழைத்து எல்லோர்க்கும் உரைத்திட வேண்டும்.

அன்புடன்,

மு. க.

(25-02-1992)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதல் பதிப்பு 2022